D
V211,31' P08
P08:55-1
228414.

**13–5–2008**

## உள்ளடக்கம்

பக்கங்கள்


| | |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-x |
| Governor and Council of Ministers | xi-xv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xvii-xx |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxi-xxxi |
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-38 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 8) | 39-104 |
| **2. ஆட்சியில் இரண்டாண்டுகள் நிறைவு செய்த முதல்வருக்குப் பாராட்டும் ஏற்புரையும்—** | 104-113 |
| திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் | 104-105 |
| திரு. ஜி.கே. மணி | 106-107 |
| திரு. சி. கோவிந்தசாமி | 107 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 107-109 |
| திரு. து. ரவிக்குமார் | 109-110 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 110-113 |
| **3. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 113 |

பக்கங்கள்

**4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** 113-122

(அ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 — 113-114

(ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 — 114-115

(இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 — 115

(ஈ) தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு, 2008 — 116

(உ) தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 — 117-118

(ஊ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 — 118-119

(எ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 — 119-120

(ஏ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 — 120-121

(ஐ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 — 121-122





பக்கங்கள்

**5. அறிவிப்புகள்—**

(அ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.) — 118

(ஆ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.) — 119

(இ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.) — 121

**6. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி — 122-314

(அ) கோரிக்கை எண் 38 – பொதுத் துறை

(ஆ) கோரிக்கை எண் 46 – தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

(இ) கோரிக்கை எண் 49 – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

(ஈ) கோரிக்கை எண் 15 – சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 122-123, 140, 205, 291-311

*மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான் — 157-158, 205-206, 216-217, 282-291

பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 2008-2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. என். செல்வராஜ் | 182,206, 229-230, 265-282 |
| *திரு. ஞா. செந்தமிழன் | 127,143,144, 162,186, 206-216 |
| திரு. கு. சின்னதுரை | 217-225 |
| திரு. ஆர்.எம். பழனிசாமி | 123,141, 158-159,183, 225-233 |
| திரு. கே.எல். இளவழகன் | 130, 145,166, 189, 232-239 |
| *திருமதி ரா. லீமா றோஸ் | 169,193, 239-243 |
| திரு. நா. இராமகிருஷ்ணன் | 137,168,191, 244-246 |
| *திரு. டி. இராமச்சந்திரன் | 131,148,181, 204, 247-251 |
| திரு. எல்.பி. தர்மலிங்கம் | 251-255 |
| *திரு. என்.ஆர். ரங்கராஜன் | 171, 255-259 |
| *திரு. கு. சீனிவாசன் | 259-265 |

7. அரசினர் தீர்மானம்—

| | |
|---|---|
| விதி 32-ஐத் தளர்த்துதல் | 314 |

| | |
|---|---|
| 8. பேரவையில் வைக்கப்பெற்ற ஏடுகள் | 315-316 |


தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
22/4/14
சென்னை-600 008
நகல்



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில்நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள், சிறப்பு முயற்சிகள் மற்றும் சமூக சீர்திருத்தம்.

D
V21,31 / 08
108.55.1

2. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

   நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

3. **மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

   மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.



**9. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**10. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**11. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**12. வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு

**13. சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

14. **செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

15. **உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

16. **குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

17. **பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்

18. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



19. **இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

20. **கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

21. **பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

22. **வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

23. **சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

24. **வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

25. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

26. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

29. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

30. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

31. கதர்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. Chief Minister – **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports, Special Initiatives and Social Reforms.

2. Minister for Finance – **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

3. Minister for Electricity – **The Hon. Thiru Arcot N. Veeraswami:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

4. Minister for Rural Development and Local Administration – **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. Minister for Co-operation – **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation, Statistics and welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Health** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Health, Medical Education and Family Welfare

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Housing** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits, Registration of Companies, Housing, Rural Housing and Housing Development

13. **Minister for Tourism and Registration** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism, Tourism Development Corporation, Registration and Stamp Act

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

16. **Minister for Slum Clearance and Accommodation Control** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees

**18. Minister for Labour** .. **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment

**19. Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

**20. Minister for Handlooms** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

- Handlooms and Textiles

**21. Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

**22. Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

**23. Minister for Environment** .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

**24. Minister for Forests** .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



**25. Minister for Highways** .. **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

**26. Minister for Social Welfare** .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

**27. Minister for Animal Husbandry** .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

**28. Minister for Adi Dravidar Welfare** .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

**29. Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

**30. Minister for Dairy Development** .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

**31. Minister for Khadi** .. **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. கு. பிச்சாண்டி

திரு. குத்தாலம் க. அன்பழகன்

திருமதி டி. யசோதா

திரு. கி. ஆறுமுகம்

திரு. என். நன்மாறன்

திருமதி பி. பத்மாவதி

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 26-3-2008 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. அ.மு.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சி. நிர்மலா, பி.காம். பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - குழு அலுவலர் |



| | |
|---|---|
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| செல்வி எஸ். பிலோமினா, எம்.எஸ்.டபிள்யூ., பி.எட்., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |

திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல்., .. சார்புச் செயலாளர்

திரு. எஸ். இராமன், பி.காம். .. சார்புச் செயலாளர்



**பேரவை உறுப்பினர்கள்**

**(அகர வரிசைப்படி)**

**பெயர்களும் தொகுதிகளும்**

1. அங்கையற்கண்ணி, செல்வி ஆ. .. சங்கராபுரம்
2. அப்துல் பாசித், திரு. எச். .. வாணியம்பாடி
3. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
4. அமரமூர்த்தி, திரு. து. .. அரியலூர்
5. அரி, திரு. கோ. .. திருத்தணி
6. அருண்மொழிதேவன், திரு. ஆ. .. சிதம்பரம்
7. அருள் அன்பரசு, திரு. .. சோளிங்கர்
8. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. .. திருச்செந்தூர்
9. அன்பரசன், திரு. தா.மோ. .. ஆலந்தூர்
10. அன்பழகன், திரு. எம். .. பழனி (செ.வ.)
11. அன்பழகன், திரு. கே.பி. .. பாலக்கோடு
12. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
13. அன்பில் பெரியசாமி, திரு. .. திருச்சிராப்பள்ளி–I
14. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
15. ஆறுமுகம், திரு. கி. .. செங்கல்பட்டு
16. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
17. இராசசேகரன், திரு. எஸ். .. ஆலங்குடி
18. இராணி, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
19. இராமகிருஷ்ணன், திரு. நா. .. கம்பம்
20. இராமசாமி, திரு. கரி. .. திருவாடானை

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்

64. குருசாமி, திரு. எஸ்.எஸ். - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ)
74. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். - மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. - விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்றாம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
105. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். - முசிறி
107. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

109. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்
110. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்
111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. - மதுரை மத்தி
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)
133. துரைமுருகன், திரு. - காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி—2
140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

| | | |
|---|---|---|
| 154. | பிரபாவதி, திருமதி பெ. | .. தாராபுரம் (செ.வ.) |
| 155. | பிரேமா, திருமதி ஆர். | .. அவினாசி (செ.வ.) |
| 156. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | .. கடையநல்லூர் |
| 157. | புஷ்பராஜ், திரு. செ. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 158. | பூங்கோதை, டாக்டர் (திருமதி) | .. ஆலங்குளம் |
| 159. | பெரியகருப்பன், திரு. கே.ஆர். | .. திருப்பத்தூர் |
| 160. | பெரியசாமி, திரு. இ. | .. ஆத்தூர் |
| 161. | பெரியசாமி, திரு. மு.க. | .. பூம்புகார் |
| 162. | பெரியண்ணன், திரு. பி.என். | .. பெண்ணாகரம் |
| 163. | பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | .. கோயம்புத்தூர் கிழக்கு |
| 164. | பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. | .. பொள்ளாச்சி |
| 165. | பொன்முடி, டாக்டர் க. | .. விழுப்புரம் |
| 166. | பொன்னுசாமி, திரு. கே. | .. சேந்தமங்கலம் (ஆவா.) |
| 167. | பொன்னுதுரை, திரு. செ. | .. பெருந்துறை |
| 168. | போளூர் ம. வரதன், திரு. | .. செங்கம் (செ.வ.) |
| 169. | போஸ், திரு. ஏ.கே. | .. திருப்பரங்குன்றம் |
| 170. | மகேந்திரன், திரு. இ. | .. உசிலம்பட்டி |
| 171. | மகேந்திரன், திரு. கே. | .. பெரம்பூர் (செ.வ.) |
| 172. | மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. | .. திருவோணம் |
| 173. | மணி, திரு. எஸ். | .. பொங்கலூர் |
| 174. | மணி, திரு. கோ.சி. | .. கும்பகோணம் |
| 175. | மணி, திரு. ஜி.கே. | .. மேட்டூர் |
| 176. | மதிவாணன், திரு. உ. | .. திருவாரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 177. | மலரவன், திரு. தா. | .. கோயம்புத்தூர் மேற்கு |
| 178. | மாணிக்கம், திரு. இரா. | .. குளித்தலை |
| 179. | மாரிமுத்து, திரு. வே. | .. நாகப்பட்டினம் |
| 180. | மாலைராஜா, திரு. என். | .. திருநெல்வேலி |
| 181. | முருகவேல், திரு. கே. | .. முதுகுளத்தூர் |
| 182. | முல்லைவேந்தன், திரு. வ. | .. மொரப்பூர் |
| 183. | மூர்த்தி, திரு. டி. | .. திருப்போரூர் (செ.வ.) |
| 184. | மூர்த்தி, திரு. பி. | .. சோழவந்தான் |
| 185. | மேகநாதன், திரு. த.அ. | .. காவேரிப்பட்டினம் |
| 186. | மோகன், திரு. பெ. | .. ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 187. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | .. பாளையங்கோட்டை |
| 188. | யசோதா, திருமதி டி. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 189. | ரங்கநாதன், திரு. ப. | .. வில்லிவாக்கம் |
| 190. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | .. பட்டுக்கோட்டை |
| 191. | ரவிக்குமார், திரு. து. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 192. | ரவிச்சந்திரன், திரு. எல். | .. சேலம்—I |
| 193. | ராணி வெங்கடேசன், திருமதி | .. சாத்தான்குளம் |
| 194. | ராதாகிருஷ்ணன், திரு. ல. | .. கோவில்பட்டி |
| 195. | ராமச்சந்திரன், திரு. கா. | .. கூடலூர் |
| 196. | ராமநாதன், திரு. கே.வீ. | .. பவானி |
| 197. | ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். | .. இளையான்குடி |
| 198. | ராஜகுமார், திரு. எஸ். | .. மயிலாடுதுறை |
| 199. | ராஜசேகரன், திரு. மா. | .. தொட்டியம் |

200. ராஜன், திரு. அ. - நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பி. - ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. - திருப்பத்தூர்
203. ராஜேந்திரன், திரு. கே.எஸ்.கே. - மதுரை மேற்கு
204. லட்சுமணன், திரு. ச. - போடிநாயக்கனூர்
205. லதா, திருமதி ஜி. - குடியாத்தம்
206. லீமா றோஸ், திருமதி ரா. - திருவட்டாறு
207. வசந்தகுமார், திரு. எச். - நாங்குநேரி
208. வரதராஜன், திரு. ரா. - விருதுநகர்
209. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
210. விடியல் எஸ். சேகர், திரு. - காங்கேயம்
211. விஜயகாந்த், திரு. - விருத்தாசலம்
212. விஜயகுமார், திரு. கே.எஸ். - கும்மிடிப்பூண்டி
213. விஜயகுமார், திரு. பெ.சு. - போளூர்
214. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. - செய்யாறு
215. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். - பேராவூரணி
216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. - சேலம்-2
217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
218. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
219. வேலுசாமி, திரு. இல. - தருமபுரி
220. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
221. வேலுமணி, திரு. சு.ப. - பேரூர்
222. வேல்துரை, திரு. பா. - சேரன்மகாதேவி



223. வேல்முருகன், திரு. தி. - பண்ருட்டி
224. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
225. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். - கிள்ளியூர்
226. ஜாண் ஜோசப், திரு. ஞா. - விளவங்கோடு
227. ஜெகன்மூர்த்தி, திரு. மு. - அரக்கோணம் (செ.வ.)
228. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
229. ஜெயக்குமார், முனைவர் கு. - நாமக்கல் (செ.வ.)
230. ஜெயபால், திரு. எஸ். - குளச்சல்
231. ஜெயராமன், திரு. எஸ்.பி. - வந்தவாசி (செ.வ.)
232. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
233. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
234. ஹசன் அலி, திரு. கு. - இராமநாதபுரம்
235. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் - நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஜி. மாசிலாமணி .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 31

## 2008 மே 13, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்*
*எண்ணுவ மென்ப திழுக்கு"*

நன்றாகச் சிந்தித்த பிறகே செயலில் இறங்க வேண்டும்; இறங்கிய பிறகு சிந்திக்கலாம் என்பது தவறு.

### 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 251, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**251—**

### தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம்

***45847—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு வங்கிகளில் தானியங்கி பணம் வழங்கும் இயந்திர வசதி செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2008 மே 13

தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டு இணைக்கப்பட்டால் மட்டுமே, தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்களை நிறுவ இயலும். மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும் அவற்றின் கிளைகளையும் கணினிமயமாக்கவும், அதற்கென மென்பொருள் தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் கணினிமயமாக்கப்பட்டவுடன், தேவைக்கேற்ப இவ்வங்கிகளில் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் நிறுவுவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பொது மக்கள், தொழிலதிபர்கள், அரசுப் பணியாளர்கள், ஓய்வு பெற்றவர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள், சிறு வணிகர்கள், வியாபாரிகள் என எல்லோரும் வங்கிகளில் கணக்கு வைத்துக் கொண்டு, பணம் வங்கிகளில் போடுவதும், வங்கிகளிலிருந்து அதிலும் குறிப்பாக, ATM என்று சொல்லக்கூடிய தானியங்கி வழியாக பணம் எடுக்கும் முறையை அதிகம் பின்பற்றி வருகிறார்கள். இன்றைக்கு நமது அரசு, அரசுப் பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்றவர்கள் எல்லோரும் ATM-லே பணம் எடுக்கக்கூடிய முறையைக் கடைப்பிடிக்க வழிவகை செய்துள்ளது. எனது தொகுதியிலே 40 கிலோ மீட்டர் தூரம் வரை இருக்கிறது கடைசி கிராமம். அதிலே இருக்கிறவர்கள் எல்லாம் ATM பயன்படுத்தவேண்டுமென்று சொன்னால், ஓமலூர் தலைமையிடத்திற்குத்தான் வர வேண்டி இருக்கிறது. அங்கு ஒரேயொரு State Bank-லே மட்டும்தான் ATM மூலம் பணம் எடுக்கக்கூடிய வழிமுறை இருக்கிறது. எனவே, மக்கள் எல்லோரும் சிரமப்படுகிறார்கள். தனி நபர் கணக்கு, சேமிப்புக் கணக்கு என்று இப்படியெல்லாம் பார்த்தால், கிட்டத்தட்ட 15,000 பேர் அந்த வங்கிகளிலே கணக்கு வைத்திருக்கிறார்கள். எனவே, இவர்கள் எல்லாம் ATM-ல் பணம் எடுக்கக்கூடிய வகையிலே நமது கூட்டுறவு வங்கி வழியாக விரைவாக—நம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கணினிமயமாக்கப்பட்டால்தான் எடுக்க முடியும் என்று சொல்[illegible] இருந்தாலும் இங்கு இப்பொழுது தமிழக [illegible] சிரமம் இருக்கிற [illegible]ரணத்தினாலே. . .

சென்னை-600 008



2008 மே 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தமிழரசு, கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. அ. தமிழரசு:** அதுதான் தலைவரே, கேள்வியைத்தான் கேட்கிறேன். தமிழக அளவிலே, இங்கு மட்டுமல்ல, இப்போது வங்கிகளிலே பணம் எடுக்க மிகவும் சிரமப்படுகிற காரணத்தினாலே விரைவிலே கூட்டுறவு வங்கி வழியாக ATM அமைத்து அவர்கள் எல்லாம் அந்த வங்கியிலிருந்து பணத்தை ATM வழியாக எடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வாரா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி அண்ணா நகர், மேற்கு முகப்பேர், கிழக்கு மற்றும் மேற்கு கொரட்டூர் மற்றும் சாஸ்திரி நகர் ஆகிய கிளைகளில் ஒவ்வொன்றும் 10 இலட்சம் செலவில் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டு, செயல்பாட்டில் உள்ளன. இருப்பினும் அவர் கேட்கின்ற முறைப்படிக்கு உள்ளவற்றை பரிசீலித்து நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுவரை எனது ஓமலூர் தொகுதியிலே காடையாம்பட்டி ஒன்றியத்திலே இருக்கிற இந்தியன் வங்கி அல்லது இந்தியன் ஓவர்சீஸ் வங்கிகளிலே ATM அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறையின் வழியாக ஏதாவது செய்வாரா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தனியார் மற்றும் இதர வங்கிகளுக்கு நாம் உத்தரவு போடுவதற்கு இயலாது. ஆகையினால் கூட்டுறவு வங்கி சம்பந்தப்பட்ட வகையில் நாங்கள் செய்வதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 252, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**252—**

## நீதிமன்றங்கள்

***12191—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரத்தில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரத்தில் ஒரு குற்றவியல் நடுவர் மன்றம் அமைக்க 18-2-2008-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த நடுவர் மன்றத்தினுடைய தொடர், தொடரா செலவுக்காக 6.8 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அந்த நீதிமன்றத்தை நானே சென்று துவக்கி வைத்துவிட்டு வந்துள்ளேன்

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கேட்கப்பட்ட கேள்வியாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பின்பு, ஒட்டன்சத்திரத்தில் இந்த நீதிமன்றத்தைத் திறப்பதற்கு அனுமதி வழங்கினார்கள். அதற்காக மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்கெனவே திறந்து வைத்திருக்கின்றார்கள். அது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அதற்கு வருங்காலத்தில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு, மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களைத் தொடங்குகின்றபோது அதற்கு infrastructure செலவுகளை ஒதுக்குகின்றபோது, தொடராச் செலவு மற்றும் தொடரும் செலவு என்ற வகையில் ஒதுக்கப்படுகின்றது. அதுமாதிரி இது தொடர்கின்ற கோரிக்கை. நீதிமன்றம் கொடுத்தவுடனே, அடுத்து கட்டடத்தைக் கேட்டிருக்கின்றார்கள். அடுத்த ஆண்டு நிதி நிலைமைக்கேற்ப அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையிலே ஒருங்கிணைந்த நீதிமன்றம் அமைப்பதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் 200 ஏக்கர் நிலம் காண்பிக்கப்பட்டது. ஆனால், நீதிமன்ற நீதிபதிகள் அந்த இடத்திலே அமைக்க முடியாது என்று சொல்லியிருக்கின்றார்கள். ஏற்கெனவே கோர்ட் அமைந்திருக்கின்ற இடத்திலேயே கட்டடம் கட்டுவதற்கு இடம் ஏதுவாக இருக்கின்றது. விரைவிலே அங்கே ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்தில் புதிய நீதிமன்றம் அமைவது என்பது பற்றியும், எந்த இடத்தில் நீதிமன்றக் கட்டடம் கட்ட வேண்டுமென்பது பற்றியும் உயர் நீதிமன்றம்தான் முடிவு செய்யவேண்டும். அரசு அதிலே தலையிட்டு அங்கே செய்யவேண்டும், இங்கே செய்யவேண்டும் என்று நாம் சொல்ல முடியாது. எனவே, உயர் நீதிமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் மீண்டும் முறையிட்டால், இருக்கின்ற நிலைமைகளை எடுத்துச் சொன்னால், மீண்டும் அவர்கள் பரிசீலிக்க வாய்ப்புண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு செங்கல்பட்டு நகரிலே மஹிலா நீதிமன்றம் தொடங்க

மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆணையிட்டார்கள். அது கடந்த மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்பு தொடங்கப்பட்டிருக்கின்றது. தமிழகத்திலே பல்வேறு இடங்களில் நீதிமன்றங்கள் தொடங்கும்போது அந்தப் பகுதிகளில் இருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை அழைப்பதில்லை என்ற குறை இருந்து கொண்டிருக்கின்றது. எனவே, இதையெல்லாம் சரிசெய்து வருகின்ற காலங்களில் மக்கள் பிரதிநிதிகளையும் அழைக்கவேண்டுமென்ற ஓர் அறிவிப்பை மாண்புமிகு அமைச்சரவர்கள் வெளியிடுவார்களா என்று கேட்டுக்கொள்கின்றேன். மேலும், என்னுடைய தொகுதியில் திருக்கழுக்குன்றத்தில் குற்றவியல் நீதிமன்றம் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. புதியதாக நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு நம்முடைய அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை, நாடாளுமன்ற உறுப்பினர்களை நீதிமன்ற விழாக்களுக்கு அழைக்கவேண்டுமென்பது குறித்து நான் இந்த அவையிலே மூன்று, நான்கு முறை சொல்லிவிட்டேன். மற்ற விழாக்களிலும் இதுபற்றிப் பேசியிருக்கின்றேன். நீதிபதிகளிடமும் தெரிவித்திருக்கின்றேன். இதற்கு முன்பு இருந்த தலைமை நீதிபதி அவர்கள், அழைக்கக் கூடாது என்று ஒரு ஆணையைப் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். எனவே புதிதாக வருகின்ற தலைமை நீதிபதியிடம், இது பரிசீலிக்கப்படலாம் என்று கூறி அரசு அணுகும்.

அவர் குறிப்பிட்டதைப்போல, கட்டடங்கள் கட்டுவது என்பது, திருக்கழுக்குன்றம் மட்டுமல்ல, எல்லா இடத்திற்கும் ஆண்டொன்றுக்கு 20, 25 இடங்களில் நீதிமன்றக் கட்டடங்களைக் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். சென்ற ஆண்டு மட்டும் 300 கோடி ரூபாயை தலைவர் அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள். அதில் 130 கோடி ரூபாயில் கட்டடங்கள் மட்டுமே கட்டியிருக்கின்றோம். 100 கோடி ரூபாய்க்கு கிட்டத்தட்ட 30, 40 குடியிருப்புகளைக் கட்டியிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபற்றி அடுத்த ஆண்டு நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 253, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**253—**

**பயோ டீசல்**

***32805—திரு. எஸ். இராசசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை பயோ டீசல்மூலம் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை பயோ டீசல்மூலம் இயக்குவது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பத்திரிகைகளைப் பார்க்கின்றபோது டீசல் விலை ஒரு பேரல் 200 டாலரைத் தாண்டப் போகின்றது என்று அறிகிறோம். குறிப்பாக, பயோ டீசல் என்பது சுற்றுச்சூழலை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசசேகரன், கேள்வியை மட்டும் கேளுங்கள், நீங்கள் எண்ணெய் விலை உயர்ந்துவிட்டது என்றெல்லாம் கூறுவது எதற்கு?

**திரு. எஸ். இராசசேகரன்:** கேள்விதான் கேட்கிறேன். பயோ டீசல் என்பது சுற்றுச்சூழலை பாதுகாக்கக் கூடியது. இந்த பயோ டீசலை சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகம் ஒரு முறை பயன்படுத்தி இருக்கின்றது. பயோ டீசலை உற்பத்தி செய்வதன்மூலமாக விவசாயிகள் காட்டாமணக்கு விவசாயம் செய்வதற்கான வாய்ப்புகள்

அதிகரிக்கின்றன. ஆகவே, அரசு விரைந்து இந்த பயோ டீசலைப் பயன்படுத்துவதற்கு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயோ டீசல் வெளிச் சந்தையில் விற்பனைக்கு இல்லாததால் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை பயோ டீசல்மூலம் உடனடியாக இயக்குவதற்கு சாத்தியக்கூறுகள் மிகக் குறைவு. சாலை மற்றும் போக்குவரத்துப் பொறியியல் கல்லூரியில் டீசல், எத்தனால் மற்றும் தாவர எண்ணெய் ஆகியவற்றின் கலவையைப் பயன்படுத்தி பேருந்துகளை இயக்குவதற்கான ஆராய்ச்சிப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேற்கூறிய ஆராய்ச்சிப் பணிக்கு மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையினரால் 20 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டிருக்கிறது. அந்த ஆராய்ச்சிப் பணி இரண்டு ஆண்டுகளில் முடிவடையும். பயோ டீசல்மூலம் பேருந்துகளை இயக்குவது குறித்தான மேற்படி ஆராய்ச்சிப் பணியின் ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், இந்த பயோ டீசல் என்பது இந்தியாவில் வேறு எங்குமே, எந்தப் போக்குவரத்துக் கழகத்தாலும் இதுவரை பயன்படுத்தப்படவில்லை. உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் காரணமாக, டெல்லியிலே இயற்கை எரிவாயு கிடைக்கின்ற காரணத்தால் அங்கே இருக்கின்ற போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் சி.என்.ஜி.மூலம் இயங்கிக்கொண்டிருக்கின்றன. குஜராத்தில் இருக்கின்ற போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் சி.என்.ஜி.மூலம் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

இங்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, சென்னை மாநகரில் மாசு ஏற்படாமல் இருப்பதற்காக, நகரை மாசிலிருந்து விடுவிப்பதற்காக இப்போது வாங்கப்படுகின்ற புதிய பேருந்துகள் எல்லாம் Pollution-free பேருந்துகளாகவே வாங்கப்படுகின்றன. ஓடிக்கொண்டிருக்கும் ஆட்டோக்களையும் டீசலிலிருந்து மாற்றி எல்.பி.ஜி. ஆட்டோக்களாக உருவாக்குவதற்கு அவர்களுக்கு உதவிகள் எல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. வெகு விரைவில் ஆட்டோக்கள் எல்லாம் எல்.பி.ஜி.-யிலே ஓடத் துவங்கும். ஆனால், பயோ டீசல் என்பது வெளிச் சந்தையிலே போதிய அளவுக்கு நமக்குக் கிடைக்காது. அதுதான் சிரமம்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயோ டீசலைப் பயன்படுத்துவதற்கு அரசு ஆவன செய்வதாகக் கூறியிருப்பதை வரவேற்கின்றேன். அதேநேரத்தில் சென்னை நகரில் ஓடுகின்ற ஆட்டோக்கள் கேஸ் அடிப்படையில் ஓடுகின்றபோது, சாலைகளில் செல்லும்போது அதனுடைய வாடை மக்களை பாதிக்கக்கூடிய அளவுக்கு, மயக்கம் வரக்கூடிய அளவுக்கு அந்த ஆட்டோக்களில் பயன்படுத்துகின்ற கேஸ் வாடை வருகின்றது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு முயற்சிக்குமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஆட்டோக்கள் முழுமையாக gas-க்கு மாற்றப்படவில்லை. இன்னும் டீசலில்தான் ஓடிக்கொண்டிருக்கின்றன. மாசுக் கட்டுப்பாடு வாரியத்திலிருந்து ஒரு ஆட்டோவை எல்.பி.ஜி.-க்கு மாற்றுவதற்கு இரண்டாயிரம் ரூபாய் மானியமாகத் தருவதாக ஏற்கெனவே உறுதி அளித்திருந்தார்கள். ஆட்டோ உரிமையாளர்களும், ஆட்டோ ஓட்டுநர்களும் அது தங்களுக்குப் போதாது என்று சொன்ன காரணத்தால் மீண்டும் அவர்களை அழைத்துப் பேசி மேற்கொண்டு ஆயிரம் ரூபாய், அதாவது மூவாயிரம் ரூபாய் தருவதாக இப்போது ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், எல்.பி.ஜி.-க்கு மாற்றுவதற்கு 11 ஆயிரம் ரூபாய் செலவு வருகின்ற காரணத்தால் படிப்படியாக, கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அதை நிறைவேற்ற முடியும். எனவே, மாசற்ற நகரமாக சென்னை நகரை உருவாக்குவதற்கு போக்குவரத்துத் துறை அனைத்து முயற்சிகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக வேகமாக வளர்ந்து கொண்டிருக்கின்ற சென்னை மாநகரம் ஐக்கிய நாடுகள் சபையில் இடம் பெற்றிருக்கின்ற 177 நாடுகளில் 96 நாடுகளைவிட மக்கள் தொகையிலே பெரிய மாநகரமாக இருந்து

கொண்டிருக்கிறது. ஆகவே, இங்கே போக்குவரத்து நெரிசல் காரணமாக வண்டிகள் கக்குகின்ற புகையின் நச்சுத்தன்மையினாலே உடல் நலம் பாதிக்கப்பட்டு நுரையீரல் கெட்டு, பல்வேறு நோய்கள் வருவதற்கு மிக முக்கியக் காரணமாக அது இருக்கிறது என்று மருத்துவ வல்லுநர்கள் எல்லாம் கூறுகின்ற நிலை தொடர்ந்துகொண்டிருக்கிறது. எனவே, எரி எண்ணெய் என்று சொல்லக்கூடிய பெட்ரோல், டீசலிலிருந்து வேறு திட்டத்திற்கு மாற்றுவது காலத்தினுடைய கட்டாயம். அந்த அடிப்படையிலே பயோ டீசல் பொருத்தமானது என்று சொன்னாலும்கூட, உற்பத்தி இல்லாத காரணத்தினாலே இப்போது எல்.பி.ஜி.-ஐப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் எல்லா தானியிலும், அதாவது ஆட்டோக்களிலும் எல்.பி.ஜி. எரிவாயுவை பொருத்துவதற்கு ஆவன செய்யப்படுமா? அதேநேரத்தில், டெல்லியைப் பொறுத்தவரையில் சி.என்.ஜி. எரிவாயு பொருத்தப்பட்டு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதனால் சுற்றுச்சூழல் கெடாமல் கட்டுப்படுத்தப்படுகிறது, மாசு இல்லாமல் பாதுகாக்கப்படுகிறது. அதைப்போல, அந்த சி.என்.ஜி. எரிவாயுவை சென்னை மாநகரத்திலே அரசுப் பேருந்துகளிலே பயன்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் C.N.G. இங்கே உபயோகப்படுத்தப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அது, குஜராத்தில் கிடைக்கின்ற காரணத்தால் மிக அருகிலே அவர்கள் pipeline போட்டு டெல்லிக்குக் கொண்டுவந்து விட்டார்கள். குஜராத்திலும் கொண்டுவந்து விட்டார்கள். மகாராஷ்டிரா மாநிலத்திலே அதை எடுத்துக்கொண்டு வருவதற்காக முயற்சி எடுத்தபோது மிகப் பெரிய தொகை செலவாகும் என்ற காரணத்தால் அதை அவர்கள் நிறுத்தியிருக்கிறார்கள். இப்போது C.N.G. அல்லது L.P.G. கொண்டுவர வேண்டுமென்று சொன்னால், பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவு செய்து pipeline அமைக்க வேண்டும். லாரிகளில் கொண்டுவந்து அதை நிரப்புவது என்பது இயலாத காரியம். அதற்கான அடிப்படை வசதிகள் இப்போது நம்மிடம் இல்லை. எனவேதான், இருக்கின்றதை நல்லதாகச்



செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பழைய பேருந்துகள் சென்னையிலே முழுமையாக மாற்றப்படவேண்டுமென்று ஆணையிட்டு, இதுவரை 1,000-க்கும் மேற்பட்ட புதிய பேருந்துகள் சென்னையிலே இயக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு இன்னும் ஆயிரம் பேருந்துகள் வாங்க அனுமதி அளித்திருக்கிறார்கள். எனவே, அடுத்த ஆண்டு மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் பழைய பேருந்துகளே இல்லை என்கிற அளவிற்கு ஒரு நிலையை நோக்கி, இந்த சென்னை மாநகரம் சென்று கொண்டிருக்கிறது. அதைவிட போக்குவரத்துத் துறை, Home (Transport)-ன்கீழ் புகைக் கட்டுப்பாடு நிறுவனங்கள் இருக்கின்றன. வாகனம் F.C.-க்கு வரும்போது அதையெல்லாம் கண்டறிந்துதான் F.C. கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, மேலும் கடுமையாக, சென்னை மாநகரத்தினை மாசற்ற நகரமாக மாற்றுவதற்கு இந்தத் துறை நிச்சயமாக பல நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்லாட்சி அமைந்து மூன்றாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கும் நாளிலே பேசுகின்ற வாய்ப்பு கிடைத்ததற்கு நான் மகிழ்ச்சியடைகின்றேன். என்னுடைய பாராட்டுதலையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தினுடைய வரலாற்றைத் தன் வரலாறாகக் கொண்டிருக்கும் முதல்வர் கலைஞர் அவர்கள், தன்னுடைய 'நெஞ்சுக்கு நீதி' ஐந்தாவது பாகத்தை, கடந்த மே 4 ஆம் தேதி ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களுடைய 'நெஞ்சுக்கு நீதி' ஆறாவது பாகத்தை நூறாவது வயதில் எழுதவேண்டுமென்று நான் மனதார வாழ்த்துகின்றேன். அதற்காக இயற்கையை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெட்ரோலிலே எத்தனால் கலப்பதனால் பல நன்மைகள் உள்ளன என்று இப்போது பதிவு செய்திருக்கின்றார்கள். சர்க்கரை ஆலைகளிலே உற்பத்தியாகக்கூடிய எத்தனால் பல்வேறு வகையிலே பெட்ரோலினுடைய திறனை அதிகரிக்கக்கூடிய ஒன்று என்று நிரூபித்திருக்கின்றார்கள். ஆகவே, எத்தனால் கலந்த பெட்ரோலைத்தான் விற்கவேண்டுமென்று அரசாங்கம் வலியுறுத்துமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2008 மே 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் purview-ல் வருகின்ற பணி இது. அவர்கள் ஏற்கெனவே எத்தனால் கலந்துகொள்ளலாம் என்று அமைச்சரவையிலேகூட அவர்கள் முடிவெடுத்திருக்கிறார்கள். எனவே, படிப்படியாகத்தான் அந்த technology improve ஆகும். அப்படி improve செய்கின்றபோதுதான் நாம் அதை உபயோகப்படுத்திக்கொள்ள முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 254, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**254—**

## அவசர சிகிச்சைப் பிரிவு

***9827—திரு. சி. துரைராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேடப்பட்டி தொகுதி, எழுமலை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்கப்பட்டு, தரம் உயர்த்தப்பட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்டம், சேடப்பட்டி தொகுதியில், எழுமலை ஆரம்ப சுகாதார நிலையம் முதன்மை மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு ஸ்கேன், எக்ஸ்-ரே முதலிய கருவிகள் செயல்பாட்டில் உள்ளன. 18 கிலோ மீட்டர் தொலைவில், உசிலம்பட்டி அரசு மருத்துவமனை இயங்கி வருகிறது. அவசர சிகிச்சையைப் பொறுத்தவரை முதலுதவி செய்யப்பட்டு, காயச் சான்றிதழ் வழங்கும் அளவில் மட்டுமே மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. எனவே, இங்கு அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2008 மே 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ்.

**திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேடப்பட்டி தொகுதி என்பது முழுக்கமுழுக்க கிராமங்கள் நிறைந்த பகுதியாகும். அந்தப் பகுதியிலே ஏற்படுகின்ற விபத்தின்மூலம் காயம்பட்டவர்கள், வெட்டுக்குத்து காயம் அடைந்தவர்கள் மற்றும் பிரேதப் பரிசோதனைக்கு உடலை எடுத்துச் செல்வோர் சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள உசிலம்பட்டி அல்லது திருமங்கலம் போன்ற நகரங்களுக்குத்தான் செல்லவேண்டிய ஒரு நிலையிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல எழுமலையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய 24 மணி நேரமும் செயல்படக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையமாகும். எனவே, கிராமப்புறங்களிலே விபத்தின்மூலம் காயமடைந்தவர்களை சுமார் 20 கிலோ மீட்டர், 30 கிலோ மீட்டர் தொலைவிற்கு எடுத்துச் செல்கின்ற ஒரு சூழ்நிலையில் உயிரிழப்புகூட ஏற்படுகின்ற நிலை ஏற்பட்டுவிடுகிறது. அப்படிப்பட்ட ஒரு நிலையை மாற்றுவதற்கு அனைத்து வசதிகளைக் கொண்ட அந்த எழுமலை ஆரம்ப சுகாதார நிலையத்தில், பிரேதப் பரிசோதனை மற்றும் அவசர சிகிச்சை, காவல் நிலையங்கள்மூலம் அனுப்பப்படுகின்ற காயம்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கின்ற வசதி போன்ற அனைத்து தகுதிகளையும் உருவாக்கித் தருவதற்கு இந்தத் துறை முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசர சிகிச்சையைப் பொறுத்தவரையில், ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதலுதவி சிகிச்சை மட்டும் செய்யப்படுகின்றது. பெரிய அளவிலான சிகிச்சைகள் ஆரம்ப சுகாதார நிலையத்தில் செய்யப்படுவதில்லை. முதலுதவி செய்யப்பட்டு அருகில் உள்ள வட்டார மற்றும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்யப்படுகிறது. அருகில் இருக்கின்ற உசிலம்பட்டி 18 கிலோ மீட்டரில் இருக்கின்றது. அதேபோன்று, பேரையூர் அரசு மருத்துவமனை 28 கிலோ மீட்டரில் இருக்கிறது. அருகில் மதுரை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும், தேனி மருத்துவக் கல்லூரி

மருத்துவமனையும் இருக்கின்றன. அதனால், இதுபோன்ற கருத்துரு எழுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ்.

**திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல என்னுடைய தொகுதியினுடைய தாலுகா தலைமையிடமான பேரையூர் என்பது ஒரு சிறிய மருந்தகத்தை உள்ளடக்கிச் செயல்பட்டு வருகிறது. அந்த மருந்தகத்திற்குக் கட்டட வசதிகூட இப்பொழுதுதான் அரசின்மூலம் செய்யப்பட்டு வருகின்றது. பேரையூர் தாலுகா அந்தஸ்து பெற்று சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. எனவே, ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒரு வட்ட மருத்துவமனை என்று வழங்கப்படுகின்ற இந்தக் காலகட்டத்தில் பேரையூர் மருத்துவமனை தாலுகா அந்தஸ்துள்ள மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில், கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைமையிடமாக இருக்கிற கலசப்பாக்கத்திலே அமைந்திருக்கிற ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வாய்ப்பில்லை. வருகிற ஆண்டு மத்திய அரசு அனுமதி அளித்தால் அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரியிலிருந்து சேலம் வழியாக கோவை செல்கின்ற மிகப் பெரிய நெடுஞ்சாலையில் சேலம், தருமபுரி மாவட்டங்களுடைய எல்லைப் பகுதியாக இருக்கிற தொப்பூர் மலைப் பகுதியானது மிக அபாயகரமான, தாழ்வான வளைவுப் பகுதியைக் கொண்ட இடம் என்பதால் கடந்த 2007 ஆம் ஆண்டு மட்டும் ஏறக்குறைய 88 விபத்துகளில் 40-க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். 185 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் கை, கால்களை இழந்து ஊனமடைந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் அங்கிருந்து மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால் 45 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கக்கூடிய சேலம் மருத்துவமனைக்கோ அல்லது 30 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கக்கூடிய தருமபுரி மருத்துவமனைக்கோ செல்ல வேண்டியிருப்பதால் அவர்கள் இடையிலேயே சிகிச்சை இல்லாமல் இறந்துவிடுகிற ஒரு அபாய நிலை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, விபத்திலே பாதிக்கப்படக்கூடியவர்களின் உயிரைக் காக்கக்கூடிய விதத்திலே தொப்பூரிலே இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தில் அவசர சிகிச்சைப் பிரிவை ஆரம்பித்தால் பல உயிர்களைக் காக்கக்கூடிய ஒரு நிலை ஏற்படும் என்பதால் மதிப்பிற்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் அவசர சிகிச்சைப் பிரிவை ஆரம்பிப்பாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொறுத்தவரையில் முதலுதவி மட்டும்தான் செய்யமுடியும். விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு வட்ட அளவிலுள்ள மருத்துவமனையில்தான் அமைக்கப்பெறும். நம்முடைய விழுப்புரம், பெரம்பலூர், ஓமலூர்,

நாமக்கல், தென்காசி, பத்மநாபபுரம், மேலூர், தாம்பரம், வாலாஜா, கடலூர் ஆகிய மருத்துவமனைகளில் இப்போது இந்த சிகிச்சைப் பிரிவு அரசால் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. வருங்காலத்தில் அமைக்க, காஞ்சிபுரம், சங்ககிரி, திருப்பத்தூர், அருப்புக்கோட்டை, மகாபலிபுரம், மரக்காணம், புதுக்கோட்டை ஆகியவற்றுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலையில் தினமும் ஏராளமான விபத்துகள் நடைபெறுகின்றன. இந்த விபத்துகள் நடக்கிற இடங்களிலிருந்து சுமார் 30-லிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் செங்கல்பட்டு மருத்துவமனை அமைந்திருக்கிறது. ஆகையால் மதுராந்தகம் தாலுகா மருத்துவமனையில்—அது ஆரம்ப சுகாதார நிலையம் அல்ல—தாலுகா மருத்துவனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு ஒன்றை அரசு துவங்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் படித்த பட்டியலில் உள்ள ஊர்களில்தான் மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்படும். ஆனால், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அந்த மருத்துவமனையினுடைய தரத்தை உயர்த்த, மேலும் அதற்குரிய வசதிகளை இந்த ஆண்டு செய்வதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்து மூன்றாம் ஆண்டிலே அடியெடுத்து வைக்கிற இந்த அரசுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என் மனப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



முற்பகல் 9-55

நம்முடைய ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரவு நேரங்களில், பிரசவத்திற்காகச் சேர்க்கப்படுகிற தாய்மார்கள், அந்தப் பிரசவம் சுகப் பிரசவமாக இல்லாத சூழ்நிலையில், பெரும்பாலும் Caesarean முறை மூலமாக அந்தப் பிரசவம் நடைபெற வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட இக்கட்டான ஒரு சூழ்நிலையில், அந்தத் தாயை, வட்ட மருத்துவமனைக்கோ அல்லது மாவட்ட மருத்துவமனைக்கோ அழைத்துச் செல்லவேண்டிய அவசியம் ஏற்படுகிறபோது, இரவு நேரங்களில் எந்தவகையான போக்குவரத்து வாய்ப்புகளும் இல்லாத காரணத்தினாலே பல உயிர்களைப் பாதுகாக்க முடியாத சூழல்கூட ஏற்படுகிறது. ஆகவே, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குப் படிப்படியாக, குறைந்தபட்சம் ஆம்புலன்ஸ் வசதி ஏற்படுத்திக் கொடுக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பொறுத்தவரையில், முதல் கட்டமாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த சில நாட்களுக்கு முன்பாக E.M.R.I. என்ற தனியார் நிறுவனத்தோடு ஒப்பந்தம் செய்து, 108 என்ற எண்ணுக்கு டயல் செய்தால், உடனடியாக அதற்குரிய மருத்துவ ஆம்புலன்ஸ் வந்து நோயாளிகளை எடுத்துச்செல்கிற ஒரு வாய்ப்பினை தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கியுள்ளார்கள். ஓரிரு மாதங்களில் இதனுடைய தொடக்க விழா நடைபெற இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலையில் பல்வேறு விபத்துகள், பல பகுதிகளிலே தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விபத்துகள் ஏற்படுகிறபோது, தனியார் ஆம்புலன்ஸ் வைத்து எடுத்துச்செல்ல வசதி இல்லாதவர்கள் பணம் செலுத்தமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அதைத் தவிர்க்கின்ற வகையில், எங்கெங்கே விபத்துகள்

ஏற்படுகின்றனவோ அதைக் கருத்தில் கொண்டு, அந்தக் குறிப்பிட்ட இடங்களில் ஆம்புலன்ஸ்மூலம் அனைத்து வசதிகளோடு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கின்ற அளவிற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் அந்தக் கேள்விக்குப் பதில் சொன்னேன். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வட்டத் தலைநகரங்களிலும் ஆம்புலன்ஸ் இருக்கும். அதாவது, பொதுவான 108 என்ற எண்ணுக்கு டயல் செய்தால், அதற்குரிய ஆம்புலன்ஸ், நோயாளிகளை அழைத்துச் சென்று அருகில் இருக்கின்ற மருத்துவமனையில் அவர்களுக்கு சிகிச்சை செய்யக்கூடிய அந்தத் திட்டத்தினை கலைஞர் அவர்கள் ஓரிரு மாதங்களில் தொடங்க இருக்கிறார்கள் என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 255, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு, மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**255—**

### கட்டடம்

***25859—திரு. த. தியோடர் ரெஜினால்டு:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மநாபபுரம் தொகுதி, கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2007-2008 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட பழுதடைந்த



கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தை மீண்டும் கட்டுவதற்கு, இறுதி நிலைத் தொடராச் செலவினமாக ரூ.137 இலட்சத்திற்கு நிருவாக அனுமதியும், இதில் 2007-2008 ஆம் ஆண்டுக்கான செலவினமாக ரூ.56 இலட்சம் நிதி ஒப்பளிப்பும் வழங்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகக் கேட்கப்பட்ட கேள்வி. கருணை உள்ளத்தோடு அனுமதி வழங்கிய தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சருக்கும், என்னுடைய மாவட்ட அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில், பணிகள் இன்னும் தொடங்காத நிலையில் உடனடியாகப் பணிகளைத் தொடங்கி கட்டடங்கள் கட்டிமுடிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், பத்மநாபபுரம் கோட்டம் கடைசிக் கோட்டம், கேரள மாநிலத்தின் எல்லையில் அமைந்திருக்கிற கோட்டம். அங்கு கோட்டாட்சியர் பணியிடம் காலியாக இருக்கிறது. விரைவாக நியமனம் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பழுதடைந்த கட்டடங்களுக்குப் பதிலாகப் புதிய வட்ட அலுவலகங்கள் கட்டுகின்ற பணி குறித்து நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சரிடத்திலே நான் தெரிவித்து, அவர்களும் உரிய நடவடிக்கையை எடுத்து இப்போது பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. ஆரம்பிக்கப்படாத இடங்களிலே அப்பணிகளை உடனே ஆரம்பிப்பதற்கும் வேண்டிய நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறது. அவர்கள் கோட்டாட்சியர் நியமிக்க வேண்டும் என்று கேட்டார்கள்; அதற்குரிய ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது.

[2008 மே 13

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 256, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**256—**

## படகுத் துறை

***28866—திரு. து. ரவிக்குமார்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, கொள்ளிடம் ஆற்றின் வடக்குக் கரையில் படகுத் துறை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, கொள்ளிடம் ஆற்றின் வடக்குக் கரையில் படகுத் துறை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கொள்ளிடம் ஆற்றின் வடக்குக் கரை பகுதியில் ஏற்கெனவே ஒரு சாலையோரப் பூங்கா பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. அந்த இடத்தில் ஒரு சுற்றுலா மையம் அமைக்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களிடத்தில் கோரினேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கருணை உள்ளத்தோடு அதற்கு அனுமதி அளித்து அந்தச் சுற்றுலா மையம் அமைப்பதற்கு ஆகிற செலவிலே 50 விழுக்காடு நிதியைச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்க வேண்டுமென்று கூறியிருக்கின்றார்கள். அந்தப் பணி இப்போது நடந்து கொண்டிருக்கிறது. மாவட்ட ஆட்சியர் அவர்களும் அந்த இடத்தைப்



2008 மே 13]

பார்வையிட்டு அதற்கு ஒப்புதல் அளித்திருக்கின்றார்கள். அந்த இடத்திலே ஒரு படகுக் குழாம் அமைத்தால் அந்தப் பகுதிக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் மேலும் பயனடைவார்கள். சிதம்பரத்திற்கு ஏராளமாகச் சுற்றுலாப் பயணிகள் வருகின்றார்கள். அங்கிருந்து அவர்கள் பூம்புகாருக்கோ அல்லது தஞ்சைக்கோ செல்லும் வழியிலே இந்தச் சுற்றுலா மையத்தில் தங்கி இளைப்பாறிச் செல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து அங்கே ஒரு படகுக் குழாம் அமைக்க முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடம் ஆற்றைப் பொறுத்தமட்டில் கோடை காலத்தில் நீர் வற்றியிருக்கும். அதுமட்டுமல்லாமல் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் 8 இடங்களில் படகுத் துறை சுற்றுலாத் துறையின் சார்பாக இயக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும், வருங்காலத்தில் இதனைப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலிப்பதாகச் சொல்லியிருப்பதே அந்தப் பகுதி மக்களின் கோரிக்கைக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதுகிறேன். அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, கொள்ளிடம் ஆற்றின் வட பகுதியிலும் அதேபோல வீராணம் ஏரியிலும், ஒருசில மாதங்களைத் தவிர, இப்போது நீர் நிரம்பியிருக்கிறது. அங்கு ஒரு படகுக் குழாமும் கடலூர் மாவட்டத்தினுடைய மிகப் பெரிய ஏரியாக இருக்கின்ற பெருமாள் ஏரியில் ஒரு படகுக் குழாமும் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

[2008 மே 13

கடலூர் மாவட்டத்தின் சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்ற வகையிலும் தெற்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய சதுப்பு நிலக் காடுகளைக் கொண்ட பிச்சாவரத்திற்கு என்று படகுக் குழாம் இருந்தும் அங்கு வருகின்ற பொதுமக்கள் சென்று வருவதற்கான வாய்ப்புகள் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, இந்தியாவிலேயே, தெற்கு ஆசியாவிலேயே தலைசிறந்த சதுப்பு நிலக் காடுகளைப் பார்ப்பதற்கும் அந்தக் கடலையொட்டியுள்ள இயற்கைச் சூழலைப் படகிலே சென்று இரசிப்பதற்கும் துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்படுமா? நான் ஏற்கெனவே சொன்ன பெருமாள் ஏரி, வீராணம் ஏரி போன்ற ஏரிகளில் படகுக் குழாம் அமைத்து சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா? அதேபோல் பக்கத்தில் இருக்கிற, பெங்களூரில் இருக்கிற பிருந்தாவன் தோட்டத்தில் Fishing Dance என்று சொல்கின்றார்களே அதுபோன்று Fishing Dance முறையைப் பிச்சாவரத்தில் கொண்டு வந்து நிறுவி, சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிச்சாவரத்தைப் பொறுத்தமட்டில் இந்தத் துறையின் சார்பாக ஏற்கெனவே படகுக் குழாம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கே சதுப்பு நிலக் காடுகளைப் பார்ப்பதற்கு அதிகமாக சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துகொண்டிருக்கிறார்கள். அடிப்படை வசதிகளும் இந்தத் துறையின் சார்பாகச் செய்யப்பட்டு வருகின்றன. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் பல ஆயிரக்கணக்கான ஏரிகள் இருக்கின்றன. அனைத்து ஏரிகளிலும் படகுகளை விட்டால் அது கவர்ச்சியாக இருக்காது. இருந்தாலும்கூடப் பயணிகளினுடைய தேவைகளைக் கருத்தில் கொண்டு, வருங்காலத்தில் தேவைகள் இருந்தால் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும். அதேபோன்று, இந்த நிதிநிலை அறிக்கையில்கூட, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருத்துப்படி, நம்முடைய பேராசிரியர் அவர்களும் அறிவித்திருக்கிறார்கள்; அந்த அக்வேரியத்தைப் பொறுத்தமட்டில் சென்னையை ஒட்டிய கிழக்குக் கடற்கரைச் சாலையில் அதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. வருங்காலத்தில் நிச்சயமாக அந்த அக்வேரியம் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2008 மே 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 257, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**257—**

## அறைகலன்

***57992—திரு. பெ.சு. விஜயகுமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியிலுள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் தேவையான நாற்காலிகள், நீள் இருக்கைகள், மேசைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதியில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், 4 பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டு நாற்காலிகள், நீள் இருக்கைகள், மேசைகள் நபார்டு வங்கி நிதியுதவியுடன் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அத்தொகுதியில் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் நபார்டு வங்கி நிதியுதவியுடன் பகுதி 9 திட்டம் மற்றும் அதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் திட்டங்களில் நாற்காலிகள், நீள் இருக்கைகள், மேசைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக் கண் திறந்த கடவுள் காமராஜர். அதுபோல், இப்போது கல்வித் துறையிலே மறுமலர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருப்பவர் தலைவர் அவர்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் இரவு 8 மணிக்குக்கூட அரசுப் பள்ளிகளிலே Tuition நடத்துகிறார்கள். அந்த ஆசிரியர்களும், மாணவர்களும்,

[2008 மே 13

பெற்றோர்களும் அதற்கெல்லாம் ஊக்கமாக இருக்கிறார்கள். மாம்பட்டு என்ற கிராமத்திலே உள்ள அந்தப் பள்ளியிலே தொடர்ந்து இப்போது 6-வது ஆண்டாக 100-க்கு 100 சதவிகிதம் மாணவர்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். எனவே, கிராம மாணவர்கள் கல்வியிலே கவனத்தைச் செலுத்தவேண்டுமானால், அவர்களுக்கு வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்ற நோக்கத்திலேதான் முழுக்க முழுக்க கிராமப் பகுதியாக இருக்கிற என்னுடைய தொகுதியிலே நீங்கள், இருக்கின்ற எல்லாப் பள்ளிகளுக்கும் மேசை, நீள் இருக்கை, நாற்காலி இவற்றையெல்லாம் வழங்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளுக்கு மேசை, நாற்காலி வழங்கக்கூடிய திட்டம் நான் ஏற்கெனவே பல முறை இந்த அவையிலே சுட்டிக்காட்டியதைப்போல, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரிய முயற்சியின் காரணமாக, முதல் முறையாக நபார்டு வங்கியினுடைய நிதி உதவியோடு தொடங்கப்பட்டது. அதிலே, இப்போது முதல்கட்டமாக ஏறத்தாழ 69,10,00,000/- ரூபாய் செலவில் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 1,530 பள்ளிகளுக்கு ஏறத்தாழ 15,845 வகுப்பறைகளுக்கு மேசை, நாற்காலிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து அவை வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. திருவண்ணாமலை மாவட்டத்திலே இருக்கக்கூடிய 37 அரசு உயர்நிலைப் பள்ளிகள், அதைப்போல 28 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு, ஏறத்தாழ 2,34,00,000/- ரூபாய் செலவிலே இந்த இருக்கைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய போளூர் தொகுதியிலே, அவரே குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, மாம்பட்டு உட்பட நான்கு பள்ளிகளுக்கு, அரசு மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளுக்கு, இந்த ஆண்டு ஏற்கெனவே அந்த 69 கோடி ரூபாய் ஒதுக்கீட்டிலே வழங்கியிருக்கிறோம். மீதியிருக்கக்கூடிய பள்ளிகளிலே நபார்டு வங்கி 8-வது பகுதித் திட்டத்தின்கீழே இரண்டு பள்ளிகளுக்கு இந்த ஆண்டு எடுத்துக்கொண்டிருக்கிறோம், போளூர் மற்றும் களம்பூர்



2008 மே 13]

பகுதிகளிலே. இதிலே மீதியிருக்கக்கூடிய 7 பள்ளிகளிலும் நான் சொல்லியதைப்போல வரக்கூடிய நபார்டு வங்கி 9-வது திட்டத்தின்கீழே நிச்சயமாக அந்தப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் வசூர், குருவிமலை, போளூர்—போளூரில் இருக்கக்கூடிய ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளி—மாம்பட்டு, சேளூர், சந்தவாசல், கல்பட்டு, கனியம்பாடி, கீழரசம்பட்டு, பாலம்பாக்கம், கம்மவான்பேட்டை, கம்மசமுத்திரம், பாலம்பாக்கம், காட்டுப்புத்தூர், நஞ்சுகொண்டாபுரம் என்று பல இடங்களில் அரசுப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றிலே அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது உயர்நிலைப் பள்ளியைப் பற்றியும் மேல்நிலைப் பள்ளியைப் பற்றியும்தான் கூறினார்கள். கிராமப் பள்ளிகளைப்பற்றிக் கூறவில்லை. அவற்றையும் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டு, அவையெல்லாம் கவனிக்கப்படுமா என்றும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவனிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தமிழ் பயிலும் சட்டம், 2006, பாகம் 1-ல் அனைவரும் தமிழ் மொழியைக் கட்டாயமாகக் கற்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. மொழிச் சிறுபான்மையினருடைய அச்சத்தைப் போக்கும் வகையில், 2006 சட்டம், விதி 5-ன்படி சிறுபான்மை மக்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டதை தமிழக அரசு பள்ளிக் கல்வித் துறை மூலமாகத் தெளிவு செய்து, பாகம் 1-ல் தங்கள் தாய் மொழியையும் பாகம். . .

[2008 மே 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஹசன் அலி, மேசை, நாற்காலி வாங்குவதுபற்றியதுதான் மூலக் கேள்வி.

**திரு. கு. ஹசன் அலி:** இல்லை, இது சிறுபான்மை மக்களுடைய பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் மொழிப் பிரச்சினைக்குப் போகிறீர்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

**திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட நரசிங்கநல்லூரில் இயங்கிவருகின்ற அரசு உயர்நிலைப் பள்ளிக்கு நாற்காலிகள், நீள் இருக்கைகள், மேசைகள் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதோடு எனது தொகுதிக்குட்பட்ட தச்சநல்லூரில் பாளை ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் நடைபெறுகின்ற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்க அரசு முன்வருமா என்பதையும் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, முதல்கட்டமாக ஏற்கெனவே நபார்டு வங்கியினுடைய உதவியால் 1 முதல் 8 ஆம் பகுதிவரை இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு இப்போது அந்த மேசை, நாற்காலிகளை வழங்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய நரசிங்கபுரம் பள்ளியைப் பொறுத்தமட்டில் வரக்கூடிய நபார்டு 9-வது திட்டத்தின்கீழ் அதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம். தரம் உயர்த்துவதைக் குறித்து, ஏற்கெனவே தச்சநல்லூர் பள்ளியைத் தரம் உயர்த்திட வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் திரு. மாலைராஜா அவர்கள் அரசுக்குக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அது குறித்தும் அரசுக்கு உரிய முன்மொழிவுகள் இந்த ஆண்டு வரப்பெற்றிருக்கின்றன. எனவே, அரசு நிச்சயமாக அதுகுறித்துக் கனிவோடு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 258, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.



2008 மே 13]

**258—**

## சாலை வசதி

**வினா எண் 2215—திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, கருங்குளம் முதல் மூலக்கரைப்பட்டி வரையுள்ள சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சாத்தான்குளம் தொகுதியில் கருங்குளத்திலிருந்து தாதங்குளம், தெற்கு காரைசேரி, வள்ளுவர் காலனி வழியாக திருநெல்வேலி மாவட்டம் மூலக்கரைப்பட்டிவரை செல்லக்கூடிய சாலை மாவட்ட முக்கியச் சாலையாகும். இந்தச் சாலை சுமார் 15.6 கிலோ மீட்டர் நீளம் கொண்டது. இந்தச் சாலையில் துவக்கத்திலிருந்து 6 கிலோ மீட்டர் வரை ஒரு வழித்தடமாக இருக்கிற சாலையை அதாவது 3.75 மீட்டர் அகலத்தில் இருக்கக்கூடிய அந்தச் சாலையை 5.5 மீட்டராக இடைவழித்தடமாக மாற்றுகிற செயற்குறிப்பு கடந்த நிதியாண்டிலேயே எடுக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, அந்தப் பணிகள் துவங்கும் தருவாயில் இருக்கின்றன. மீதம் உள்ள சாலைப் பகுதி படிப்படியாக முதலில் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் பராமரிக்கப்பட்டு, எதிர்காலத்தில் நிதிநிலைக்கேற்ப சாலையினுடைய அனைத்து நீளத்திற்கும் இடைவழித்தடமாக அகலப்படுத்தும் பணி அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தொகுதி, கருங்குளம் முதல் மூலக்கரைப்பட்டி சாலை சுமார் 15.7 கி.மீ. தூரம் உள்ளது. கருங்குளம் முதல் சேரகுளம் வரையுள்ள சாலையின் தூரம் 12 கி.மீ. இது

எங்கள் தொகுதிக்குட்பட்டது. 8.5 இலட்சம் ரூபாய் செலவில் 6 கி.மீ. தூரம் சாலை விரிவுபடுத்தப்படுகிறது. தூத்துக்குடி துறைமுகத்திற்கும், நாங்குனேரி தொழில் பூங்காவிற்குச் செல்வதற்கும் இந்தச் சாலை ஒரு short route. ஆகவே கருங்குளம், சேரகுளம் வழியாக மூலக்கரைப்பட்டிச் சாலை 15.5 கி.மீ. சாலையினை விரிவுபடுத்தினால்தான், இந்தப் பகுதியிலுள்ள 20,000-த்திற்கும் மேற்பட்ட மக்கள் பயனடைவார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இச்சாலையை அகலப்படுத்தும் பணியினைச் செய்ய முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அதேவேளையில், இந்தச் சாலையிலுள்ள தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கொங்கராயன்குறிச்சியில் பாலம் கட்ட நபார்டு வங்கியின் உதவியோடு 13 கோடி ரூபாயில் திட்டம் அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனே அமல்படுத்தித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு பதிலைத் தந்திருக்கிறேன். முதலில் அந்தச் சாலையினுடைய துவக்கத்திலிருந்து 6 கி.மீ. வரை இருக்கக்கூடிய சாலையை இடைவழித்தடமாக-அதாவது 5.5 மீட்டர் அகலமாக மாற்றுவதற்குரிய செயற்குறிப்பு எடுக்கப்பட்டு, ஏறத்தாழ 101 இலட்சம் மதிப்பில்—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட தொகையை தவறுதலாக இங்கே சொன்னார்கள்—101 இலட்சம் மதிப்பில் அந்தச் சாலை அகலப்படுத்துவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி துவங்கும் தறுவாயில் இருக்கிறது. எனவே, அந்தப் பணி விரைவில் துவங்கும். மீதம் இருக்கக்கூடிய சாலையினுடைய பராமரிப்பு குறைவாக இருக்கிறது. முதலில் அந்தச் சாலையைப் பராமரித்துவிட்டு, அந்த வழித்தடத்தை சரிசெய்துவிட்டு, பிறகு மீண்டும் நிதிநிலைக்கேற்ப படிப்படியாக அந்தச் சாலை அகலப்படுத்தப்படும் என்பதை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தாமிரபரணி ஆற்றின் குறுக்கே பாலம் வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.





ஏற்கெனவே, நபார்டு வங்கி பரிசீலனைக்கு பாலங்கள் அமைக்கும் திட்டம் அனுப்பப்பட்டிருக்கின்றது. கடந்த ஆண்டு எதிர்பார்த்த அளவிலே நபார்டு வங்கியினுடைய நிதி ஒத்துழைப்பு கிடைக்காத காரணத்தினால் பாலப் பணிகளை எடுத்துச் செய்வதில் தடங்கல் ஏற்பட்டுவிட்டது. இந்த நிதியாண்டில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் தொகுதியில், மணலூரிலிருந்து, வில்லியனூர் வரை பூம்புகார் செல்லும் சாலை 80/205 முதல் 89/600 வரை அகலப்படுத்தாமல் உள்ளது. 8 கி.மீ. தூரம் உள்ள இந்தச் சாலையை அகலப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற இந்த இரண்டாண்டு காலத்தில் பல்வேறு சாலைப் பணிகள்—அதுவும் குறிப்பாக நம்முடைய I.R.C. Code பிரகாரம், இந்திய சாலைக் கழக வழிகாட்டுதல் அடிப்படையில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை, ஒவ்வொரு சாலையையும் பராமரிக்கும் பணியும், அதேபோல், மாநில நெடுஞ்சாலைகள் எல்லாம் இந்த அரசு பொறுப்பேற்றவுடன் படிப்படியாக அனைத்துச் சாலைகளையும் இருவழிச் சாலைகளாக மாற்றுகின்ற திட்டம் மேற்கொள்ளப்பட்டு அதுவும் நல்ல முன்னேற்றத்தில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலைப் பணியை இந்த நிதியாண்டில் தொடங்குவதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

[2008 மே 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியத்தில் அமைந்திருக்கிற செந்துறை-கோட்டைக்காடு சாலையானது மாவட்டத் தலைநகரான அரியலூரையும், கடலூர் மாவட்டம் பெண்ணாடத்தையும் இணைக்கக்கூடிய சாலை. எங்களுடைய தொகுதியில் செந்துறை ஒன்றியத்திலே இரண்டு சிமென்ட் ஆலைகள் அமைந்திருக்கின்றன. அதைப்போல, பெண்ணாடத்தில் ஒரு சர்க்கரை ஆலை அமைந்திருக்கிற சூழ்நிலையில் இந்தச் சாலையிலே அதிகப் போக்குவரத்து இருக்கிறது. எனவே, செந்துறையிலிருந்து கோட்டைக்காடு வரையிலான 15 கி.மீ. சாலையை அகலப்படுத்தித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சாலையை அகலப்படுத்தவேண்டும் என்று சொன்னால், அந்தச் சாலையினுடைய போக்குவரத்துச் செறிவு கணக்கிடப்பட்டுதான் அந்தச் சாலை அகலப்படுத்தப்படுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய சாலையின் போக்குவரத்தைக் கணக்கிட்டு அதற்கேற்ப இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி இராணி.

முற்பகல் 10-15

**திருமதி இரா. இராணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உப்பிலியாபுரம் தொகுதியில் புறவழிச் சாலை அமைக்க வேண்டும் என்பது நீண்ட நாள் கோரிக்கை. நான் இரண்டு ஆண்டுக் காலமாக இந்தப் புறவழிச் சாலைக்கு மனு கொடுத்திருக்கிறேன். ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள். அதிக நிதி வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். அதிக நிதி ஒதுக்கி, அந்தப் புறவழிச் சாலையை ஏற்படுத்தித் தருமாறு கேட்டிருக்கிறேன். ஆனால், இதுவரைக்கும் எந்தப் பதிலும் இல்லை. இந்த ஆண்டிலே அமைச்சர் அதை நிறைவேற்றித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2008 மே 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூரில் புறவழிச் சாலை வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அடிக்கடி எங்களுக்குக் கடிதம் எழுதிக்கொண்டுதான் இருக்கிறார். அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. ஏற்கெனவே திட்டமிடப்பட்ட சாலையினுடைய நீளத்தைக் கொஞ்சம் குறைவாகக் கணக்கிட்டுவிட்டார்கள். எனவே, மீண்டும் அதை மறு மதிப்பீடு செய்யச் சொல்லி, கணக்கிடப்படுவதற்குத் திருப்பி வருவாய்த் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. வருவாய்த் துறையினுடைய அலுவலர்களும் அதை ஆய்வு செய்து, அந்த நீளம் கணக்கிடப்பட்டு Commissioner of Land Administration என்கிற வருவாய்த் துறையினுடைய நில நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அந்தத் தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்களிடத்திலே அது பரிசிலனையில் இருக்கிறது. கடந்த வாரம்கூட அதைப்பற்றி நம்முடைய துறையினுடைய செயலாளர் அவர்கள், வருவாய்த் துறை அலுவலர்களிடத்திலே பேசியிருக்கிறார்கள். நிச்சயமாக, விரைவில் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, அரசினுடைய அனுமதி வழங்கி, துறையூரிலே புறவழிச் சாலை இந்த ஆண்டு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருப்போரூர் தொகுதியானது சென்னைக்கு அருகிலுள்ள மிக முக்கியமான தொகுதி. அங்கு அதிக அளவு தொழிற்சாலைகள் நிறைந்துள்ளன. அங்கு முக்கியமான சாலையான திருப்போரூர்-செங்கல்பட்டு சாலை சுமார் 21 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. இச்சாலை குண்டும், குழியுமாக, அகலம் குறுகி உள்ளது. இதனால் அடிக்கடி விபத்து ஏற்படுகின்றது. எனவே, திருப்போரூர்-செங்கல்பட்டு சாலையை அகலப்படுத்தி, தரமான சாலையாக அமைத்துத் தரப்படுமா என தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, இதேபோன்று மாம்பாக்கம், காயார், இல்லலூர், திருப்போரூர் சாலையும் அகலப்படுத்தப்படுமா? இதே கோரிக்கையை இரண்டு ஆண்டுகளாக அமைச்சர் அவர்களிடம் வைத்தேன். இதற்கான மதிப்பீடு CMDA மூலம் தயார் செய்யப்பட்டு, பணி

தொடங்கப்படும் என அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், இதுவரை பணி தொடங்கப்படவில்லை. எனவே, மேற்படி சாலைக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணி எப்போது ஆரம்பிக்கப்படும் எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகர வளர்ச்சிப் பகுதியிலே நம்முடைய அரசு ஏராளமான திட்டங்களைத் தேர்வு செய்து, அவற்றை நடைமுறைப்படுத்துவதில்கூட கொஞ்சம் தொய்வு ஏற்பட்டிருந்தது. அந்தச் சூழ்நிலையில் தனியாக அதற்கென்று தலைமைப் பொறியாளரும் நியமிக்கப்படுவார் என்று சொல்லி கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு, அந்தத் தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்தப் பணிகளை விரைந்து முடிப்பதற்கு, அரசு இந்த நிதி ஆண்டிலே நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 259, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**259—**

### ஊட்டச்சத்து மையம்

***24217—திரு. கோ. எதிரொலி மணியன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, இமாபுரம் கிராமத்தில் ஊட்டச்சத்து மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்க விரும்புகின்றேன்.

பெரணமல்லூர் தொகுதி, இமாபுரம் கிராமத்தில், சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று 1-11-2007 அன்று குழந்தைகள்



மையம் தொடங்கப்பட்டுள்ளது என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரியப்படுத்த விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டிருந்தவாறு, அந்த இமாபுரம் கிராமத்திலே புதியதாக ஊட்டச்சத்து மையத்தைத் தொடங்கியிருப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேவேளையில் ஊட்டச்சத்துக் குறைபாடு இல்லாத மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மைய அரசின் நிதியையும் சரியாகப் பயன்படுத்தியதால் இன்றைக்குத் தமிழ்நாட்டிலே கர்ப்பிணி மற்றும் சிசு மரணம், இறப்புவீதம் குறைக்கப்பட்டிருக்கிறது. எனவே, அதைப் பாராட்டுகின்ற அதேவேளையில், அந்த ஊட்டச்சத்து மையங்களிலே, ஊட்டச்சத்து உணவோடு முன்பருவக் கல்வியும் கற்றுத் தரப்படுகிறது. எனவே, அந்தக் கல்வியைப் பயிலுகின்ற இளம் தளிர்கள் காலை 8-00 மணிக்கு வந்து மாலை 4-00 மணிக்குத்தான் போகவேண்டும். அதுவரையிலே மின்சார வசதி இல்லாமல், குறிப்பாக மின் விசிறி வசதி இல்லாமல் மிகவும் வாடிப் போகிறார்கள். இதனால் 4-00 மணிவரை இருக்கவேண்டிய குழந்தைகள் முன்கூட்டியே செல்லக்கூடிய சூழ்நிலை உள்ளது. இது தமிழ்நாடு முழுவதும் உள்ள நிலைமை. எனவே, தமிழ்நாட்டிலே உள்ள அனைத்து ஊட்டச்சத்து மையங்களுக்கும் மின் வசதி ஏற்படுத்தித் தருவதற்கு நமது அமைச்சர் ஆவன செய்வாரா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

அதேவேளையில், பள்ளிகளைப்போல் அவர்களுக்கும் கோடைக்கால விடுமுறை அளிக்க வேண்டுமென்று பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள். அது அளிக்கப்படுமா என்றும், அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு ஞாயிறு மட்டுமாவது ஒரு நாள் வார விடுமுறை அரசால் அளிக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது உறுப்பினரின் கோரிக்கைக்கு ஏற்ப— இன்று சத்துணவு மையம், முக்கியமாக குழந்தைகள் மையங்கள் தமிழ்நாட்டில் 50,344 உள்ளன—படிப்படியாக இந்த மையங்கள் இரண்டு மூன்று ஆண்டுகளில் நவீனப்படுத்தப்படும். மின்சார வசதி ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 10-20

அதேபோல அவர் கோடைக்கால விடுமுறையைப் பற்றிக் கூறினார். ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டமானது மைய அரசோடு இணைந்து செயல்படுத்தப்படுகிற திட்டம். அவர்கள் கொள்கையின்படி, பரிந்துரைகளின்படிதான் இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த முடியும் என்பதைக் கூறிக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்துகளை உள்வாங்கிக்கொண்டு இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டச்சத்து மையங்களில் பெரும்பாலான மையங்கள் வாடகைக் கட்டடத்திலேயே இயங்கி வருகின்றன. தமிழகத்தில் இருக்கின்ற ஊட்டச்சத்து மையங்களில் எவ்வளவு மையங்கள் அரசுக் கட்டடத்திலும், எவ்வளவு மையங்கள் வாடகைக் கட்டடத்திலும் இயங்கி வருகின்றன என்பதனை அறிய விரும்புகிறேன். அதேநேரத்தில் ஊட்டச்சத்து மையங்களில் குழந்தைகளுக்கு ஏற்றவாறு குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, நல்ல காற்றோட்ட வசதியோடு மையங்களை அமைக்கின்ற ஒரு சூழலை அரசு ஏற்படுத்தித் தருமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏறத்தாழ 85 சதவிகித குழந்தைகள் மையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. 9,299 மையங்கள்தான் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. நான் ஏற்கெனவே சென்ற





முறை கூறியதுபோல, முதல் முறையாக குழந்தைகள் மையங்கள் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 10 இலட்ச ரூபாயைக் கட்டாயமாக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள் என்பதை நான் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். அதேபோல, குடிநீர் வசதிக்காக முதல் முறையாக மீண்டும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கனிவோடு 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டச்சத்து மற்றும் சத்துணவுத் துறையில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பணிபுரிந்து வருகிறார்கள். பலர் 23 ஆண்டு காலமாக வேலை பார்த்ததன் காரணமாக ஓய்வு பெறுகிறபோது, அவர்களுக்கு ஓய்வூதியத் தொகை வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். ஆகவே, 23 ஆண்டு காலமாகப் பணிபுரிந்த அவர்களுக்கு எதிர்காலத்திலே ஓய்வு பெறுகிறபோது பென்ஷன் வழங்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைத் தனிக் கேள்வியாகக் கேட்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 260, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**260—**

### கால்நடை மருத்துவமனை

***23849—திரு. சபா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 மே 13

*(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, அக்கடவல்லி ஊராட்சியில் பகுதி நேர கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.

(அ) மற்றும் (ஆ) நெல்லிக்குப்பம் தொகுதி, அக்கடவல்லி ஊராட்சியில் பகுதி நேரமாக, பார்வை மையம் அமைத்து கால்நடைகளுக்கு சிகிச்சைப் பணியளிக்க அரசு ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன்.

**திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்து, மக்கள் தேவையை அறிந்து செயல்படுகின்ற தலைவர் கலைஞர் அரசில், அக்கடவல்லி கிராமத்திற்கு ஒரு பார்வை நிலையத்தை அமைத்துத்தர ஆவன செய்திருக்கின்ற அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதியில் பேரளத்தில் உள்ள கால்நடை மருத்துவமனையை சிறிது விரிவுபடுத்தி புதியக் கட்டடம் அமைத்துத்தர வேண்டுமென்று நீண்ட நாட்களாக நான் கோரிக்கை வைத்துள்ளேன். முழுவதும் கிராமங்களை உள்ளடக்கிய பகுதி. அந்தப் பகுதியில் கால்நடைகள் அதிகமாக இருக்கின்றன. எனவே மழைக் காலங்களில், கடுமையான வெயில் காலங்களில், பாதிப்பு அதிகமாகிறது. எனவே, அந்த வகையிலே அந்தக் கட்டடத்தைப் புதுப்பித்து, இன்னும் புதிய கட்டடங்களை உருவாக்கித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2008 மே 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பத்மாவதி அவர்கள் நன்னிலம் பகுதியில் உள்ள மருத்துவமனையைச் சீரமைக்க நிதியொதுக்கீடு செய்யப்படுமா என்று கேட்கிறார்கள். மருத்துவமனையைச் சீரமைக்க இந்தத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இந்த அரசு நிறைவேற்றும். ஆனால், புதியக் கட்டடம் அமைப்பதற்கு இந்த அரசு நபார்டு வங்கியின் நிதி ஒதுக்கீடு பெற நடவடிக்கை எடுத்து வருகிறது. உடனே அமைக்க வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நிதியொதுக்கீடு செய்யும்போது உடனடியாக கட்டடம் கட்ட இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. திருநாவுக்கரசு.

**திரு. கே. திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை தொகுதி, கடலூர் மாவட்டம், பூலாம்பாடி ஊராட்சியைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் சுமார் 5,000 கால்நடைகளுக்கு மேல் உள்ளன. இங்குள்ள கால்நடைகளுக்கு மருத்துவச் சிகிச்சைக்காக 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கால்நடை மருத்துவமனையை நாட வேண்டியுள்ளதால் பூலாம்பாடியிலே கால்நடை மருத்துவமனை அமைக்க நமது அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 மே 13

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டு புதிய மருத்துவமனை அமைப்பதற்குப் பதிலாக 444 கிளை மருத்துவ நிலையங்களில் தகுதியான கால்நடை மருத்துவப் பட்டதாரிகளை நியமித்து தரமான மருத்துவ சேவையை அளிக்க வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியில் வாடகையில்லாக் கட்டடத்திற்கு ஏற்பாடு செய்வாரெனில் பகுதிநேர மையம் அமைக்க இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் காளை இனங்களுக்குப் புகழ்பெற்ற ஊர். அந்தப் பாரம்பரியமும், மரபும் மிக்க காளை இனங்களைப் பராமரிப்பதற்கு சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு இனங்களை, அதாவது தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்க்கக்கூடிய, நம்முடைய தட்பவெப்ப சூழ்நிலைக்கேற்ற தகுதியுடைய உள்நாட்டு இனங்களை இத்துறை பராமரித்து வருகிறது. காங்கேயம் மரபினங்களைப் பொறுத்தவரையில், 256 கால்நடையினங்கள் கால்நடைப் பண்ணைகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதேபோல, 27 தகுதியற்ற பொலிக் காளைகள் கழிவு செய்யப்பட்டுள்ளன. புதிதாக 197 பொலிக் காளைகள் அரசுத் துறையில் வாங்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. மரபு கலப்பைத் தவிர்க்கவும், தூய்மையான மரபினங்களைப் பராமரிக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.



2008 மே 13]

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### பட்டியல் 8@

1—

### சர்க்கரை ஆலை

**வினா எண் 39335—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தியில் சர்க்கரை ஆலை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தியில் சர்க்கரை ஆலை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்சமயம் அரசிடம் இல்லை.

2—

### மின் உற்பத்தி

**வினா எண் 42648—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், ஆம்பூர், திருப்பத்தூர், வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் எத்தனால் தயாரிப்பு, மின் உற்பத்தித் திட்டங்களைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

வேலூர் மாவட்டத்திலுள்ள ஆம்பூர், திருப்பத்தூர் (ம) வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இணை மின் நிலைய உற்பத்தித் திட்டங்கள் அமைக்க அரசாணை (நிலை) எண் 24, தொழில் துறை,

@ இப்பட்டியலிலுள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2008 மே 13

நாள் 26-2-2008-ன்படி தமிழ்நாடு மின்சார வாரியத்தின் முனைப்புடன் (involvement) 80% முதல் 90% வரை நிதியுதவி ஊரக மின்மயமாக்கல் நிறுவனத்திடமிருந்து (Rural Electrification Corporation) கடனாகப் பெற்றும், கரும்பு விவசாயிகளிடமிருந்து 10% நிதியுதவி பங்கு மூலதனமாகப் பெற்றும், தேவைப்படின் இதர நிதியை அரசு அளித்தும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மேற்கண்ட ஆலைகளில் எத்தனால் தயாரிப்பது குறித்து தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**3—**

## கட்டட வசதி

**வினா எண் 7073—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினம் ஒன்றியம், சௌட்டப்பள்ளி கிராமம் மற்றும் தேவர்முக்குளம் இடங்களிலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், சௌட்டப்பள்ளி ஊராட்சிக்கு 2004-2005 ஆம் ஆண்டில் மற்றும் தேவர்முக்குளம் கிராமத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**4—**

## கட்டட வசதி

**வினா எண் 10392—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 மே 13]

(அ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, நங்காத்தூர், கக்கனூர் ஆகிய கிராமங்களில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், நங்காத்தூர், கக்கனூர் ஆகிய இரு ஊராட்சிகளிலும் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டித் தரப்பட்டுள்ளது.

**5—**

## நிதி ஒதுக்கீடு

**வினா எண் 10918—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் உள்ள அனைத்துக் குளங்களையும் தூர் எடுத்து குளக்கரையில் மரம் வளர்ப்பதற்குத் தேவையான நிதியை அரசு ஒதுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் செஞ்சி மற்றும் மேல்மலையனூர் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 35 குளங்களில், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 29 குளங்களும், அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 6 குளங்களும், மேலும், செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 34 குளங்களில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 24 குளங்களும், அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 10 குளங்களும், ஆகமொத்தம் மேல்மலையனூர்

[2008 மே 13

தொகுதியில் உள்ள 69 குளங்களிலும் தூர் வாரும் பணி 2007-08 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்றன. இக்குளக்கரைகளின்மீது மரக்கன்றுகள் நடவு செய்து பராமரிக்க அனைத்து ஊராட்சித் தலைவர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

6—

### குடிநீர் வசதி

**வினா எண் 12270—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, சிப்காட் கலைக்கூத்து நகருக்கு குடிநீர் வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியம், கல்குறிச்சி ஊராட்சியைச் சேர்ந்த சிப்காட் கலைக்கூத்து நகர் தனி குடியிருப்பாக இல்லை. கெங்கையம்மன் நகர் குடியிருப்பின் விரிவாக்கப் பகுதியாக உள்ளது. சுமார் 60 மக்கள்தொகை கொண்ட கலைக்கூத்து நகர் பகுதிக்கு கெங்கையம்மன் நகர் குடியிருப்பில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து இரண்டு பொதுக் குழாய்கள் அமைக்கப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆதலால், கலைக்கூத்து நகருக்கென்று தனியாகக் குடிநீர் வசதி செய்துதர சாத்தியக்கூறுகள் இல்லை.

7—

### குடிநீர் வசதி

**வினா எண் 12273—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 மே 13]

(அ) மானாமதுரை தொகுதி, மேலப்பிடாவூர் காமராஜர் நகருக்கு குடிநீர் வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியம், மேலப்பிடாவூர் ஊராட்சியைச் சேர்ந்த மேலப்பிடாவூர் குடியிருப்பின் ஒரு பகுதியாக காமராஜர் நகர் உள்ளது. காமராஜர் நகர் பகுதியின் மக்கள்தொகை சுமார் 100 ஆகும். இப்பகுதிக்கு மேலப்பிடாவூரில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து 4 பொதுக் குழாய்கள்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆதலால், காமராஜர் நகருக்கென்று தனியாகக் குடிநீர்த் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

8—

### கட்டட வசதி

**வினா எண் 13319—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, பிடாம்பட்டியில் செயல்பட்டுவரும் சுய உதவிக் குழுக்களுக்கு, சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு ஊராட்சியிலும் சுய உதவிக் குழுக்களின் பயன்பாட்டிற்காக, ஊராட்சிக்கு ஒன்று வீதம் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தில் மண்டையூர் ஊராட்சியில்,

மண்டையூர் கிராமத்தில் ஏற்கெனவே சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. ஒரே ஊராட்சியில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களில் அமைந்த சுய உதவிக் குழுக்களுக்கு தனித்தனியே கட்டடம் கட்டித் தருவது சாத்தியமற்றது. எனவே, பிடாம்பட்டியில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

**9—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 14143—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, மா. மோட்டூர் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், மாநந்தல் ஊராட்சியைச் சேர்ந்த மா. மோட்டூர் குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் தனி மின் விசைத் திட்டம் செயலாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் முடிவுற்று நடப்பாண்டிலேயே மக்களின் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

**10—**

## கட்டட வசதி

**வினா எண் 30133—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, அனுமந்தப்பட்டினம் கிராமத்தில் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதியில் இராவணாபுரம் ஊராட்சிக்குரியது அனுமந்தப்பட்டினம் கிராமம். இராவணாபுரத்தில், ஏற்கெனவே ஒரு சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டப்பட்டுள்ளதால், அனுமந்தப்பட்டினத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கட்டடம் கட்ட வாய்ப்பு இல்லை.

**11—**

## கட்டட வசதி

**வினா எண் 35443—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பெரியேரிப்பட்டி ஊராட்சி, ரெட்டிபட்டியில் கோல்காரன்வளவு பகுதி பெண்கள் சுய உதவிக் குழுவிற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், பெரியேரிப்பட்டி ஊராட்சியில் ஏற்கெனவே, மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டப்பட்டு, மேற்படி ஊராட்சியில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களால் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில், புதிய கட்டடம் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லை.

**12—**

## கழிவுநீர்க் கால்வாய் வசதி

**வினா எண் 36513—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 மே 13

(அ) வால்பாறை தொகுதி, ரமணமுதலிப்புதூர்/பெத்தநாயக்கனூர், சோமந்துரை, தென்சங்கம்பாளையம், அர்த்தநாரிப்பாளையம், ஜல்லிப்பட்டி, கம்பலாப்பட்டி, கரியஞ்செட்டிப்பாளையம், பிலிசின்னம்பாளையம் ஆகிய ஊராட்சிப் பகுதிகளுக்கு கழிவுநீர்க் கால்வாய் வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள ஊராட்சிகளில் 12-வது நிதிக் குழுத் திட்டம் 2006-2007-ன்கீழ் கழிவுநீர்க் கால்வாய்கள் சிறப்புப் பராமரிப்பு செய்யப்பட்டு கால்வாய் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**13—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 39928—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஒன்றியம், தெற்கு கள்ளிகுளம் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஒன்றியம், தெற்கு கள்ளிகுளம் ஊராட்சியைச் சார்ந்த தெற்கு கள்ளிகுளம் குடியிருப்பில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும், 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள இரு மேல்நிலை



2008 மே 13]

நீர்த்தேக்கத் தொட்டிகளும் பயனில் உள்ளன. மேலும், தனி மின் விசைத் திட்டத்தின்மூலம் ஆழ்துளைக் கிணற்று நீரும் பணகுடி பேரூராட்சி, வடக்கு வள்ளியூர் பேரூராட்சி மற்றும் 145 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து தாமிரபரணி ஆற்று நீரும் நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு 55 லிட்டர் வீதம் வழங்கப்படுகிறது. எனவே, இக்குடியிருப்புக்குப் புதிய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்ட அவசியம் இல்லை.

**14—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 39930—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், ஆனைக்குளம் ஊராட்சி, ஆச்சியூர் காலனி பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், ஆனைக்குளம் ஊராட்சியைச் சார்ந்த ஆச்சியூர் காலனி பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்மூலமாக ஆழ்துளைக் கிணற்று நீரும், நாங்குநேரி பேரூராட்சி, திசையன்விளை பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தாமிரபரணி ஆற்று நீரும் நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் வீதம் வழங்கப்படுகிறது.

**15—**

## காடு வளர்ப்பு

**வினா எண் 47039—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 மே 13

(அ) கபிலர்மலை தொகுதி, சிறுநல்லிகோவில் ஊராட்சி, வேட்டுவம்பாளையத்தில், 10.5 ஏக்கர் பனந்தோப்பில் ஊராட்சிமூலம் மரம் நட்டு சமுதாயக் காடு வளர்க்க அரசு அனுமதி வழங்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், சிறுநல்லிகோவில் ஊராட்சி, வேட்டுவம்பாளையத்தில் உள்ள 10.5 ஏக்கர் பனந்தோப்பு என்ற இடத்தில் தற்போது முட்புதர் காடாக உள்ளது. எனவே, மேற்கண்ட இடத்தில் சமுதாயக் காடுகள் வளர்க்க வாய்ப்பில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**16—**

**கட்டட வசதி**

**வினா எண் 3591—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், ஜாலிகொட்டாய் பகுதி மற்றும் மூங்கில்பாடி ஊராட்சியிலும் நியாயவிலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், ஜாலிகொட்டாய் பகுதியில் இராமமூர்த்தி நகர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும்



2008 மே 13]

ஜாலிகொட்டாய் என்ற பகுதிநேர நியாயவிலைக் கடை 202 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்டத் தேவையான நிலத்தினை அவ்வூர் பொது மக்கள் வழங்க முன்வந்துள்ளதால், இந்நிலத்தினை வங்கிக்கு ஒப்படைக்கும்போது ஜாலிகொட்டாய் நியாயவிலைக் கடைக்கு அரசு செலவில் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மூங்கில்பாடி ஊராட்சிப் பகுதியில், வெள்ளாளப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் மூங்கில்பாடி என்ற முழுநேர நியாயவிலைக் கடை 910 குடும்ப அட்டைகளுடன் ஓமலூர் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2000-01-ல் கட்டப்பட்ட அரசுக் கட்டடத்தில் வாடகையின்றி செயல்பட்டு வருவதால், இந்நியாயவிலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்டும் நிலை எழாது.

**17—**

**கூட்டுறவுச் சங்கம்**

**வினா எண் 12735—திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரத்தில் புதியதாக வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரத்தில், புதியதாக வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைப்பது தொடர்பாக, அப்பகுதி விவசாயிகளால், முதன்மை அமைப்பாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், புதிய சங்கம் அமைப்பது தொடர்பான கருத்துரு பெறப்பட்டதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2008 மே 13

18—

## தொழிற்சாலை

**வினா எண் 11993—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டத்தில் விவசாயம் சார்ந்த தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டத்தில் விவசாயம் சார்ந்த தொழிற்சாலை அமைப்பது தொடர்பாக் வேளாண்மைத் துறை சார்பாக நடவடிக்கை ஏதுமில்லை.

19—

## உலர் களங்கள்

**வினா எண் 13610—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* உடுமலைப்பேட்டை வட்டத்தில் கிராமங்களில் உலர் களங்கள் அமைக்க நடப்பு நிதி ஆண்டில் அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* உடுமலைப்பேட்டை வட்டத்தில், ஆத்துக்கிணத்துப்பட்டி கிராமத்தில் உலர் களம் கட்டும் பணி முடிவடைந்துள்ளது. பொட்டியநாயக்கனூர், அளிக்கடவு, பெரியவாளவாடி, பெரியபட்டி ஆகிய இடங்களில் உலர் களம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

*(ஆ)* 2008-2009-ல் முன்னுரிமை அளித்து உலர் களம் கட்டப்படும்.



2008 மே 13]

20—

## பாதுகாப்புப் பணி

**வினா எண் 13620—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* உடுமலைப்பேட்டை வட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகளை நடப்பு ஆண்டில் எடுத்துச் செய்ய அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* உடுமலைப்பேட்டை வட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையால் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

| வரிசை எண் | கிராமத்தின் பெயர் | பணிகள் முடிக்கப்பெற்றவை | எண்கள் | செலவினம் (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | வளைய பாளையம் | கிராமக் குட்டை | 2 | 3.600 |
| | | கட்டுமானத் தடுப்பணை | 4 | 2.000 |
| | | கம்பிவளை தடுப்பணை | 2 | 0.500 |
| | | பண்ணைக் குட்டை | 2 | 0.400 |
| | | நிலம் சமன் செய்தல் | 4.460 எக்டேர் | 0.335 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | தனி கிராமம் | கிராமக் குட்டை | 2 | 3.140 |
| | | கட்டுமானத் தடுப்பணை | 4 | 2.000 |
| | | கம்பிவலை தடுப்பணை | 3 | 0.750 |
| | | பண்ணைக் குட்டை | 2 | 0.370 |
| | | நிலம் சமன் செய்தல் | 3.540 எக்டேர் | 0.265 |

21—

## வேளாண் இயந்திரங்கள்

**வினா எண் 18552—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு விவசாயம் செய்ய மானியத்துடன்கூடிய விசைத் தெளிப்பான், டிராக்டர், பவர் டில்லர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் உள்ளிட்ட விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய வேளாண் இயந்திரங்கள் வழங்கும் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. அதனடிப்படையில் காஞ்சிபுரம் தொகுதியில் 2006-2007 ஆம் நிதியாண்டில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளன.



| | | பிற்படுத்தப் பட்டோர் | மிகவும் பிற்படுத்தப் பட்டோர் | அதிகபட்ச மானியம் (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1 | விசைத் தெளிப்பான் | 12 | 2 | 2,000 |
| 2 | கைத்தெளிப்பான் | 8 | 3 | 800 |
| 3 | உழுவைகள் (டிராக்டர்) | 0 | 1 | 30,000 (அல்லது) 25% இதில் எது குறைவோ அத்தொகை |
| | பவர்டில்லர் | 3 | 24 | |

22—

## தானிய களம்

**வினா எண் 38704—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி ஒன்றியம், உங்கரானஅள்ளி ஊராட்சி, எட்டிமரத்துப்பட்டியில் தானிய களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் செட்டிஅள்ளி, மந்தாரஅள்ளி மற்றும் புதூர் ஆகிய இடங்களுக்கு 2007-2008 ஆம் ஆண்டின் இலக்கீட்டின்படி இடம் தேர்வு செய்யப்பட்டு கட்டடப் பணி துவங்கப்பட உள்ளது. மேற்படி எட்டிமரத்துப்பட்டி கிராமத்தில் நெற்களம் அமைத்திட 2008-2009 ஆம் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, நெற்களம் அமைக்க ஆவன செய்யப்படும்.

**23—**

## கதிர் அடிக்கும் களம்

**வினா எண் 39982—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மாங்குளம் ஊராட்சி, மாங்குளம், மானாமதுரை ஒன்றியம், செய்யாலூர் ஆகிய பகுதிகளில் கதிர் அடிக்கும் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மாங்குளம் ஊராட்சி, மாங்குளம், மானாமதுரை ஒன்றியம், செய்யாலூர் ஆகிய பகுதிகளில் கதிர் அடிக்கும் களம் அமைக்க சம்பந்தப்பட்ட ஊராட்சிமூலம் இடம் தேர்வு செய்து பணியினைத் தொடங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**24—**

## உணவு பதப்படுத்தும் பயிற்சி மையம்

**வினா எண் 41908—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் உணவு பதப்படுத்தும் பயிற்சி மையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் உணவு பதப்படுத்தும் பயிற்சி மையம் ஏற்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.





சேலம் உத்தமசோழபுரத்தில், வேளாண்மை விற்பனைத் துறைமூலம் செயல்பட்டு வரும் பயிற்சி நிலையத்தின்மூலம் மதுரைப் பகுதி விவசாயிகளுக்கும் அறுவடை பின் செய் நேர்த்தி மற்றும் உணவு பதப்படுத்துதல் (Post Harvest Management & Food Processing) குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு வருவதால், மானாமதுரையில் உணவு பதப்படுத்தும் பயிற்சி மையம் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**25—**

## கதிரடிக்கும் களம்

**வினா எண் 44637—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஒன்றியம், கருவக்குடி எஸ். நாங்கூர் மற்றும் கல்விமடை ஆகிய பகுதிகளில் கதிரடிக்கும் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2007-2008 ஆம் ஆண்டின் இலக்கீட்டின்படி இராமநாதபுரம் விற்பனைக் குழுவின் கட்டுப்பாட்டிலுள்ள இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் 5 இடங்களில் உலர் களம் கட்டும் பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. நரிக்குடி ஒன்றியம், கருவக்குடி, எஸ். நாங்கூர் மற்றும் கல்விமடை ஆகிய பகுதிகளில் 2008-2009 ஆம் நிதி ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் கதிரடிக்கும் களம் அமைக்க ஆவன செய்யப்படும்.

**26—**

## இலவச சட்ட உதவி

**வினா எண் 37581—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

11-139—3c

[2008 மே 13

கோயம்புத்தூர் மாவட்டத்தில் இலவச சட்ட உதவி முகாம்கள் நடத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழு மாவட்ட நீதிபதியைத் தலைவராகக் கொண்டு அந்த மாவட்ட நீதிமன்ற வளாகத்திலேயே ஏற்கெனவே இயங்கிவருகிறது. மேலும், தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் இலவச சட்ட உதவி விழிப்புணர்வு முகாம்கள் நடத்த உத்தரவிடப்பட்டு, மீண்டும் சுழற்சி முறைப்படி மாதம் ஒரு முகாம் நடத்தப்பட்டு வருகின்றது. அவ்வாறு நடத்தப்படும் முகாம்களில் பெறப்படும் மனுக்கள்மீது உரிய முறையில் சிறப்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**27—**

## ஏரியைச் சீரமைத்தல்

**வினா எண் 37661—திரு. வி. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றம் ஒன்றியம், ஆனூர் ஊராட்சி ஏரியைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

ஆம்.

**28—**

## போக்குவரத்து மாற்று ஏற்பாடு

**வினா எண் 4789—திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 மே 13]

சென்னையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலுக்கும், வாகனம் நிறுத்துமிடங்களுக்கும் மாற்று ஏற்பாடு செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சென்னையில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், நெடுஞ்சாலைத் துறை மற்றும் சென்னை மாநகராட்சி போன்ற அரசுத் துறைகளும், காவல் போக்குவரத்துப் பிரிவும் சேர்ந்து செயலாற்றி வருகின்றன. போக்குவரத்துக் காவல் துறையைப் பொறுத்தமட்டில், போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதிகளைக் கண்டறிந்து அவ்விடங்களில் ஒரு வழிப் போக்குவரத்து மாற்றம் போன்ற குறுகிய கால நடவடிக்கைகள் மேற்கொண்டு, போக்குவரத்து நெரிசலைக் குறைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. உதாரணத்திற்கு சென்னை கிண்டி, சின்ன மலை, ஹால்டா, ஆளுநர் மாளிகைக்கு முன்பு உள்ள சாலைகளில் ஏற்பட்டு வந்த போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு, அங்கே ஒரு வழிப் பாதை முறை நடைமுறைப்படுத்தப்பட்டு, அதன் பலனாக அவ்விடத்தில் போக்குவரத்து நெரிசல் வெகுவாகக் குறைந்துள்ளது. மேலும், இதுபோன்ற நடவடிக்கைகளை சென்னை நகர போக்குவரத்துக் காவல் துறை தொடர்ந்து அதிக அளவில் எடுத்து, போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, நீண்டகாலத் திட்டங்களாகிய சாலைகளை அகலப்படுத்துதல், பாலங்களை அமைத்தல், புதிய சாலைகளை நிர்மாணித்தல் போன்ற பணிகளை மேற்சொன்ன இதர அரசுத் துறைகள் செய்து வருகின்றன.

மேலும், வாகனங்களை, சென்னை மாநகரில் நிறுத்துவது தொடர்பாக "வில்பர் ஸ்மித்" என்ற நிறுவனம் ஓர் ஆய்வு மேற்கொண்டுள்ளது. அந்த ஆய்வறிக்கையில் கண்ட திட்டங்களை சென்னை மாநகராட்சியும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமமும் அமல்படுத்தி வருகின்றன. மேலும், அடுக்குமாடி கார் பார்க்கிங் என்ற வசதியை சென்னையில் ஐந்து இடங்களில் நிர்மாணிப்பதற்காக, ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் ஆலோசனையில் உள்ளது. சென்னை நகரப் போக்குவரத்துக் காவல் துறையானது எந்தெந்த இடத்திலெல்லாம் வாகனங்களை நிறுத்தக்கூடாதோ, அந்தந்த இடங்களில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்வதோடு

மட்டுமல்லாமல், அவ்வாகனங்களை இழுவை வாகனம்மூலமாக
அப்புறப்படுத்தப்படுகிறது.

இத்தகையவகையில் போக்குவரத்துக் காவல் துறையானது
போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கச் செயலாற்றி வருகிறது.

**29—**

## சைக்கிள் ரிக்‌ஷா ஒழிப்பு

**வினா எண் 9200—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு
போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) சென்னை போன்ற நகரங்களில் சைக்கிள் ரிக்‌ஷாக்களையும்
சைக்கிள் வாடகை வண்டிகளையும் ஒழிப்பதற்கு அரசு நடவடிக்கை
எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரில் பதிவு செய்யப்பட்ட சைக்கிள்
ரிக்‌ஷாக்களின் எண்ணிக்கை கடந்த மூன்று ஆண்டுகளில்
படிப்படியாகக் குறைந்த வண்ணம் உள்ளது. பொதுவாக நிலவிவரும்
பொருளாதார மேம்பாடு மற்றும் இதர வாகனங்களின் பயன்பாடு
அதிகரித்து வருவதுதான் இந்த மாற்றத்திற்குக் காரணமாக
சொல்லப்படுகிறது. உதாரணமாக, கடந்த 2005 ஆம் ஆண்டு 4904
சைக்கிள் ரிக்‌ஷாக்களும், 2006 ஆம் ஆண்டு 4,205 சைக்கிள்
ரிக்‌ஷாக்களும் மற்றும் 2007 ஆம் ஆண்டு 4,056 சைக்கிள் ரிக்‌ஷாக்களும்
சென்னை மாநகரத்தில் பதிவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு
வந்துள்ளன. மேலும், சைக்கிள் ரிக்‌ஷாக்களின் பயன்பாடு
குழந்தைகளை பள்ளிக்கு ஏற்றிச் செல்லவும், வயதான முதியோர்களை
அருகில் உள்ள மருத்துவமனை, மார்க்கெட் போன்ற பகுதிகளுக்கு
அழைத்துச் செல்லவும், ஆட்டோ மற்றும் கார் போன்ற வாகனங்கள்
செல்லமுடியாத சிறு தெருக்களில் செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்டு
வருகின்றன.



மேலும், இந்த எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருவதால்
இதற்கென பிரத்யேகமான நடவடிக்கைகள் மேற்கொண்டு குறைக்க
வேண்டிய அவசியம் இல்லை. மேலும், சென்னை போன்ற
திட்டமிடப்படாத நகரத்தில் சைக்கிள் ரிக்‌ஷா, இரு சக்கர வாகனம்
மற்றும் மிதி வண்டி போன்ற வாகனங்கள் மட்டும் செல்லத்தக்க
வகையில் குறுகலான சாலைகள் இன்னும் இருப்பதனால் சைக்கிள்
ரிக்‌ஷா போன்ற வாகனங்களைத் தடை செய்யத் தேவையில்லை.
இவ்வாகனங்கள் அண்ணா சாலை போன்ற முக்கியச் சாலைகளில்
செல்லும்பொழுது தடங்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே, அதைத்
தவிர்க்க அதுபோன்ற முக்கியச் சாலைகளில் பகல் நேரங்களில்
மேற்படி சைக்கிள் ரிக்‌ஷாக்கள் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.
மேலும், இந்த நடைமுறை நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. ஆகவே,
சென்னை மாநகரில் சைக்கிள் ரிக்‌ஷா மற்றும் சைக்கிள் போன்ற
வாகனங்களை முற்றிலும் ஒழிக்கத் தேவையில்லை.

**30—**

## வேகத் தடை

**வினா எண் 13211—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு
போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதிக்குட்பட்ட நெய்க்காரன்பாளையத்தில்
உள்ள பள்ளி முன்பு வேகத் தடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதிக்குட்பட்ட
காங்கேயம்-சென்னிமலை ரோட்டில் உள்ள நெய்க்காரன்பாளையம்
பிரிவு, சகாயபுரம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள பள்ளிக்கு முன்பு
கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பே தகுந்த இடைவெளி விட்டு
3 வேகத் தடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

[2008 மே 13

31—

## பேருந்து வசதி

**வினா எண் 13630—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டையிலிருந்து சென்னை, திருப்பதி வரை செல்லும் விரைவுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) லிமிடெட் மூலமாக தடம் எண் 469 உடுமலைப்பேட்டையிலிருந்து-சென்னைக்கு தினசரி 2 அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகள் 2 நடைகள் வீதம் இயக்கப்பட்டு வருகின்றன. உடுமலைப்பேட்டையிலிருந்து திருப்பதி செல்லும் பயணிகள் அம்மாவட்ட கழகப் பேருந்தை பயன்படுத்தி கோயம்புத்தூர் வந்து அங்கிருந்து இயக்கப்படும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக தடம் எண் 962 கோயம்புத்தூர்-திருப்பதி பேருந்தை பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது. இந்நிலையில் உடுமலைப்பேட்டையிலிருந்து திருப்பதிக்கு அரசு விரைவுப் பேருந்து இயக்கத் திட்டம் ஏதும் இல்லை. ஏனெனில், இந்த வழித்தடத்தை அண்டை மாநில ஒப்பந்தம் ஏற்படும்பொழுதுதான், அதில் இணைத்து இயக்கமுடியும்.

32—

## வல்லுநர் குழு

**வினா எண் 13654—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகளைத் தவிர்க்க வல்லுநர் குழு அமைத்து அதன் ஆலோசனைப்படி வாகன விதிமுறைகள் திருத்தம் செய்யப்படுமா?



2008 மே 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகளைத் தவிர்க்க, சென்னை மாநகர காவல் போக்குவரத்துத் துறையானது சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், நெடுஞ்சாலைத் துறை மற்றும் சென்னை மாநகராட்சி போன்ற அரசுத் துறைகளுடன் இணைந்து பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகளைக் குறைக்க மாநில அளவில் போக்குவரத்து அமைச்சர் தலைமையில் மாநில சாலை பாதுகாப்புக் குழு செயல்பட்டு வருகிறது. அக்குழுவின் வழிக்காட்டுதலின் நிமித்தம் சென்னை மாநகர் உள்ளிட்ட தமிழகத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் விபத்து மற்றும் நெரிசலைக் குறைக்க பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இக்குழுவின் வழிக்காட்டுதலினால் தலைக் கவசம், சீட் பெல்ட் அணிவது போன்ற விதிகள் சீரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், மெட்ரோ இரயில் போன்ற நீண்ட காலத் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. மாநகரப் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துதல் மற்றும் நெரிசலைக் குறைக்கக்கூடிய (Mass Transport) என்ற திட்டங்களை அமல்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், அண்ணா பல்கலைக்கழகம் ஐ.ஐ.டி. போன்ற கல்வி நிறுவனங்களின் அறிவுரைகளின்படியும் சென்னை மாநகர போக்குவரத்துத் துறை திட்டப் பிரிவின் உதவியுடன் ஒருவழிப் போக்குவரத்து முறை பல பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு போக்குவரத்து நெரிசல் வெகுவாகக் குறைக்கப்பட்டு வருகிறது. மேலும், சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்தினைக் குறைக்க சென்னை மாநகர காவல் துறை தொடர்ந்து செம்மையாகச் செயலாற்றி வருகிறது.

33—

## விபத்துத் தடுப்பு

**வினா எண் 25076— திரு. வை. காவேரி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசிய நெடுஞ்சாலை 47-ல் மகுடஞ்சாவடி-வைகுந்தம் செல்லும் பகுதியில் விபத்து ஏற்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தேசிய நெடுஞ்சாலை எண் 47-ல் சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி-வைகுந்தம் செல்லும் பகுதியில் கடந்த மூன்று மாத காலமாக சாலை விபத்துகளில் உயிரிழப்புகள் ஏதும் இல்லை. இரண்டு சாலை விபத்து காய வழக்குகள் மட்டும் பதியப்பட்டுள்ளன. போக்குவரத்துக் காவலர்களுக்கு அறிவுரை வழங்கியும், நெடுஞ்சாலை ரோந்துப் பணியினர் முடுக்கிவிடப்பட்டும் சாலை விபத்துகளைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**34—**

## பேருந்து வசதி

**வினா எண் 29817—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மானாமதுரையிலிருந்து திருப்பாச்சேத்தி, திருப்புவனம், புல்வாய்கரை, முக்குளம், ஆயக்குளம், எழுவணி, சேந்தநதி, ஒடத்தூர் வழியாகப் பழையனூருக்குப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை-பழையனூர் வழித்தடத்தில் எழுவணி முதல் சேந்தநதி வரை 3.0 கி.மீ. தூரம் மண் ரோடு மிகவும் மோசமான நிலையிலும், தரைப்பாலம் மிகவும் மோசமான நிலையிலும் உள்ளது. எனவே, மேற்படி வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

**35—**

## விபத்துத் தடுப்பு

**வினா எண் 38402—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சேலம்-ஓமலூர் தேசிய நெடுஞ்சாலை எண் 7, முத்துநாயக்கன்பட்டி பிரிவு வட்ட வளைவில் நடக்கும் விபத்துகள் மற்றும் உயிரிழப்பைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், தேசிய நெடுஞ்சாலை எண் 7, முத்துநாயக்கன்பட்டி பிரிவு வட்ட வளைவில் கடந்த மூன்று மாத காலமாக சாலை விபத்துகளில் யாரும் உயிரிழக்கவில்லை. மூன்று சாலை விபத்துகள் மற்றும் இரண்டு சாலை சிறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஓமலூரில் போக்குவரத்துக் காவல் நிலையம் புதியதாக அமைக்கப்பட்டு போக்குவரத்தினைக் கட்டுப்படுத்தியும், விபத்து நடைபெறாமல் இருக்கவும் போக்குவரத்துக் காவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கி, தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்காலிக தடுப்பு அமைக்கப்பட்டு வாகனங்களின் வேகத்தைக் குறைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டும், நெடுஞ்சாலை ரோந்துப் பணியினர் போக்குவரத்துக் காவலர்கள் முடுக்கிவிடப்பட்டும், தக்க அறிவுரை வழங்கி வாகனத் தணிக்கை செய்து, மோட்டார் வாகன சிறு வழக்குகள் பதிவு செய்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் நான்கு புறவழிப் பாதைகள் ஏற்படுத்தியும் மேம்பாலம் அமைத்தும் ஓமலூர் காவல் நிலைய எல்லைக்குள் விபத்துகள் தவிர்க்கப்பட்டு வருகின்றன.

**36—**

## இயற்கை உரங்கள்

**வினா எண் 41256—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மானாமதுரை தொகுதியில் மண் புழு மற்றும் இயற்கை உரங்கள் தயாரிக்கும் தொழில்கள் துவக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* அம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் காதி கிராம தொழில் வாரியம்மூலம் 25 சதவிகித மானியத்துடன் மண் புழு மற்றும் இயற்கை உரங்கள் தயாரிக்கும் 21 நிறுவனங்கள் காதி கிராம தொழில் வாரியம்மூலம் நடப்பு ஆண்டில் கடன் பெற்று தொழில்கள் துவங்கி உள்ளன. மேலும், தனி நபர்கள் மானாமதுரை தொகுதியில் மண்புழு மற்றும் இயற்கை உரங்கள் தயாரிக்க முன்வருவார்களேயானால் அவர்களுக்கு வேண்டிய வசதிகள் (Facilitation services) செய்துதரப்படும் என்பதுடன், அரசு அறிவித்துள்ள "குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கை 2008"-ன்படி தொழில் நிறுவனத்திற்குரிய அனைத்து உதவிகளையும் மாவட்டத் தொழில் மையம் செய்யும்.

**37—**

## தொழிற்சாலை

**வினா எண் 42477—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி நகரில் தோல் பதனிடும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2. தனியார் தொழில் முதலீட்டாளர்கள் தோல் பதனிடும் தொழிற்சாலை அமைக்க முன்வந்தால், அரசு அறிவித்துள்ள புதிய தொழில் கொள்கையின்படி பின்தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு கீழ்க்கண்ட உதவிகள் அரசால் வழங்கப்படும்:—

1. மூலதன மானியம் இயந்திரம் மற்றும் தளவாடங்களின் மதிப்பில் 15 விழுக்காடு; அதிகபட்சம் ரூ. 30.00 இலட்சம்.



2. வேலைவாய்ப்பு பெருக மானியம் குறைந்தபட்சம் 25 வேலையாட்களைப் பணியில் ஈடுபடுத்தும் நிறுவனங்களுக்கு கூடுதலாக 5 விழுக்காடு; அதிகபட்சமாக ரூ. 5.00 இலட்சம்.

3. குறிப்பிட்ட வகை தொழில் முனைவோர்க்கான கூடுதல் மூலதன மானியம் மகளிர், ஆதி திராவிடர், பழங்குடியினர், உடல் ஊனமுற்றோர் மற்றும் அரவாணிகள் ஆகியோர் தொழில் முனைவோராக இருக்கும்பட்சத்தில் 5 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ. 2.00 இலட்சம்.

4. மாசற்ற மற்றும் சுற்றுச் சூழலுக்கு இயந்த தொழில் நுட்பத்திற்கான கூடுதல் மூலதன மானியம் சுற்றுபுறத் தூய்மையினைக் காக்கும் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன என தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சான்றளிப்பதன் அடிப்படையில், குறிப்பிட்ட இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 25 விழுக்காடு; அதிகபட்சமாக ரூ. 3.00 இலட்சம்.

5. குறைந்தழுத்த மின் மானியம்-36 மாதங்களுக்கு 20 விழுக்காடு என்ற விகிதத்தில் மானியம்.

**38—**

## வறட்சிப் பகுதியாக அறிவித்தல்

**வினா எண் 37295—டாக்டர். இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு, திருத்தணி வட்டங்களை வறட்சிப் பகுதியாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி மற்றும் பள்ளிப்பட்டு வட்டங்களில் வடகிழக்குப் பருவ மழை காரணமாக பரவலாகப் போதிய மழை பெய்து இருப்பதாலும், குளங்களில், ஏரிகளில் நீர்வரத்து அதிகமாக உள்ளதாலும், நிலத்தடி நீர் போதிய அளவு உள்ளதாலும், பயிர்கள் நல்ல நிலையில் இருப்பதாலும் இவ்வட்டங்களை வறட்சிப் பகுதியாக அறிவிக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

[2008 மே 13

39—

## நிலம் வழங்கல்

**வினா எண் 37987—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் விமான நிலையத்திற்கு நிலம் அளித்த விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காமலாபுரம் மற்றும் பொட்டியபுரம் கிராமங்களில் சேலம் விமான நிலையத்திற்கு நிலம் அளித்த விவசாயிகளுக்கு அரசின் 2 ஏக்கர் இலவச நிலம் வழங்கும் திட்டத்தில் 2 ஏக்கர் நிலம் வழங்க அரசு விதிகளில் இடமில்லை.

40—

## இலவசப் பட்டா

**வினா எண் 37997—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, வெள்ளக்கல்பட்டி டால்மியா பேருந்து நிறுத்தம் முதல் தொப்பூர் வரை நான்கு வழிப் பாதையால் பாதித்தவர்களுக்கு 2 ஏக்கர் இலவச நிலம் திட்டத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், சாமிநாயக்கன்பட்டி குரூப், டால்மியா போர்டு பேருந்து நிறுத்தம் முதல் செக்காரப்பட்டி வரை



2008 மே 13]

தேசிய நெடுஞ்சாலைக்கு ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தின் பட்டாதாரர்களுக்கு 2 ஏக்கர் திட்டத்தின்கீழ் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு விதிகளில் இடமில்லை.

41—

## கட்டட வசதி

**வினா எண் 38463—திரு. அ. ராஜன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் நகரில் அகஸ்தீஸ்வரம் வட்ட அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

வருவாய் அலுவலக புதிய/பழைய கட்டடங்கள் பகுதி 2 திட்டத்தின்கீழ் நிர்வாக முக்கியத்துவம் வாய்ந்த அலுவலகங்களுக்கு நிதிநிலைக்கேற்ப படிப்படியாக கட்டடங்கள் கட்டப்படுகின்றன. நாகர்கோவில் நகரில் அகஸ்தீஸ்வரம் வட்ட அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

42—

## கட்டட வசதி

**வினா எண் 38523—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மத்திய சிறைச்சாலையில் முட்புதர்கள் அகற்றி, கட்டடங்களைச் சீரமைத்து கூடுதல் கட்டடங்களையும், கழிப்பிடங்களையும் கட்டி, குளியல் மற்றும் குடிநீர் வசதிகளுடன் கூடுதலாக மின் விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 மே 13

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மத்திய சிறைவாசிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் போதுமான அளவில் செய்து தரப்பட்டுள்ளன. மைய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் திருச்சி மத்திய சிறைக்கு 2002-2003 முதல் 2006-2007 ஆம் ஆண்டுவரை தண்ணீர் மற்றும் சுகாதாரப் பணிகளுக்கு ரூ. 69.11 இலட்சமும், கட்டட மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ. 205.61 இலட்சமும் ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் முடிவுற்றுள்ளன.

2. மேலும், திருச்சி மத்திய சிறைக்கு சுமார் 75,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ. 20 இலட்சம் செலவில் கட்ட 2006-07 ஆம் ஆண்டு சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, பணியினை விரைவில் முடிக்க தலைமைப் பொறியாளர் (கட்டடம்) கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். மேலும், திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள முட்புதர்கள் அவ்வப்போது அகற்றப்பட்டு, சிறை வளாகம் சுத்தமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், சிறையில் தேவையான அளவு தண்ணீர் வசதி, குடிக்க மற்றும் குளிக்க வசதி மற்றும் கூடுதல் மின் விளக்குகள் பொருத்தப்பட்டு, போதுமான அளவு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**43—**

## ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா எண் 42361—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், எம். செட்டிப்பட்டி ஊராட்சியில் கல்லணைக்காடு ஆறு பகுதிகளில் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 மே 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம் எம். செட்டிப்பட்டி ஊராட்சியில் கல்லணைக்காடு ஆறு பகுதிகளில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை.

**44—**

## ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா எண் 42466—திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, சேவுகம்பட்டி பேரூராட்சி, முத்தாலபுரத்தில் சுடுகாட்டுச் சாலையில் தனியாரின் ஆக்கிரமிப்பை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், சேவுகம்பட்டி கிராமம், புல எண் 894-2 மொத்த விஸ்தீரணம் 1.12.5 எக்டேர் கிராமக் கணக்குகளின்படி வஞ்சி ஆறு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புலத்தில் சுமார் 60 சென்ட் அளவில் சேவுகம்பட்டி கிராமம் உட்கடை முத்துலாபுரத்தைச் சேர்ந்த கிராம மக்கள் மயானம் அமைத்து பயன்படுத்தி வருகின்றனர். மயானத்தில் ஆழ்துளைக் கிணறு, ஆஸ்பெஸ்டாஸ் ஷெட் அமைக்கப்பட்டு, மின் இணைப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி மயானத்திற்குச் செல்லும் பாதையில் இருந்த ஆக்கிரமிப்புகள் கடந்த 10 தினங்களுக்கு முன்பாக பேரூராட்சி நிர்வாகத்தினரால் அகற்றப்பட்டு 20 அடி அகல தார் ரோடு அமைக்கப்பட்டுள்ளது.

[2008 மே 13

45—

**சுற்றுலாத் தலம்**

**வினா எண் 6544—திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, திருமயத்தை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு எந்த ஒரு தலத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது இல்லை. தலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறைமூலம் செய்து வருகிறது.

திருமயம் மேம்பாடு குறித்த திட்டப் பிரேரணை எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

46—

**வரைபடம்**

**வினா எண் 34364—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் பேருந்து நிலையத்தில் திருக்கழுக்குன்றத்தில் உள்ள முக்கிய சுற்றுலா சார்ந்த இடங்களுக்குச் செல்ல ஏதுவாக வரைபடம் வைக்க அரசு ஆவன செய்யுமா?



2008 மே 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

திருக்கழுக்குன்றம் பேருந்து நிலையத்தில் சுற்றுலா தகவல் பலகை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும்.

47—

**சுற்றுலாத் தலம்**

**வினா எண் 48038—திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் தொகுதியில் அய்யனார் கோயிலை சுற்றுலாத் தலமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறைமூலம் செவ்வனே செய்து வருகிறது.

ராஜபாளையம் தொகுதியிலுள்ள அய்யனார் கோவிலை சுற்றுலாத் தலமாக்கும் திட்டப் பிரேரணை எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

48—

**திறந்தவெளித் திரையரங்கம்**

**வினா எண் 37601—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டு, மாமல்லபுரத்தில் திறந்தவெளித் திரையரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2008 மே 13

**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டு, மாமல்லபுரத்தில் திறந்தவெளித் திரையரங்கம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**49—**

**சுற்றுச் சுவர்**

**வினா எண் 41775—திரு இல. வேலுசாமி:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி-பெண்ணாகரம் சாலையில் இயங்கும் மண்ணெண்ணெய் விநியோக நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, தருமபுரி-பெண்ணாகரம் சாலையில் இயங்கும் மண்ணெண்ணெய் விநியோக நிலையத்திற்கு தற்போது கருங்கல்லுடன் கூடிய கம்பி முள்வேலி அமைக்கப்பட்டுள்ளதால் சுற்றுச்சுவர் அமைக்கும் உத்தேசம் இல்லை.

**50—**

**ஆசிரியர் நியமனம்**

**வினா எண் 5644—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், விக்கிரமங்கலம் அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளிக்கு ஆசிரியர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 மே 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், விக்கிரமங்கலம் அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளிக்கு அனுமதிக்கப்பட்ட முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டு ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**51—**

**சலவைப் பெட்டி**

**வினா எண் 6113—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, மேல்பெருமாள்பட்டி சலவைத் தொழிலாளர்களுக்கு சலவைப் பெட்டி வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

ஆண்டுதோறும் வரப்பெற்ற மனுக்களின் முதுநிலை மற்றும் தகுதியின் அடிப்படையில் இலவச சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் உசிலம்பட்டி தொகுதியில் 15 நபர்களுக்கு சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டன. இவற்றுள் மேலபெருமாள்பட்டியைச் சேர்ந்த ஒரு நபருக்கும் சலவைப்பெட்டி வழங்கப்பட்டுள்ளது.

**52—**

**தரமான அரிசி**

**வினா எண் 26833—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் உள்ள இலங்கைத் தமிழர் அகதிகள் முகாமிற்கு தரமான அரிசி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2008 மே 13

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், மூங்கில் ஊருணியில் உள்ள இலங்கைத் தமிழர் அகதிகள் முகாமில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நியாயவிலைக் கடைகள்மூலம் தரமான அரிசியே வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழாது.

53—

**சலவைப் பெட்டி வழங்குதல்**

**வினா எண் 32166—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகரப் பகுதியில் அனைத்து சலவையாளருக்கும் சலவைப் பெட்டி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

ஆண்டுதோறும் வரப்பெற்ற மனுக்களின் முதுநிலை மற்றும் தகுதியின் அடிப்படையில் இலவச சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2006-2007 மற்றும் 2007-2008 ஆகிய ஆண்டுகளில் செங்கல்பட்டு நகரப் பகுதியில் 10 நபர்களுக்கு சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

54—

**விடுதி வசதி**

**வினா எண் 34652—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 மே 13]

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், கொம்புக்காரனேந்தல் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், கொம்புக்காரனேந்தலில் புதிதாக மாணவர் விடுதி துவங்குவது, புதிய விடுதிகள் திறப்பதற்கான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாக இல்லையென்பதால், அங்கே புதிதாக பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்க சாத்தியமில்லை.

55—

**விடுதி வசதி**

**வினா எண் 41543—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, பாரூர் ஊராட்சி, பாரூர் கிராம அரசு மேல்நிலைப் பள்ளி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர், மாணவியர்களுக்கு தனித் தனியாக விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதி, பாரூர் ஊராட்சி, பாரூர் கிராம அரசு மேல்நிலைப் பள்ளி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர், மாணவியர்களுக்கு தனித் தனியாக விடுதி அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

[2008 மே 13

**56—**

**பராமரிப்பு**

**வினா எண் 27393—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமி கோயிலின் பிரகாரங்களைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராமேசுவரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலின் பிரகாரங்கள் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. பெருகிவரும் பக்தர்கள் கூட்டத்திற்கேற்ப பிரகாரங்களைப் பராமரிக்கும் பணியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**57—**

**தூர் வாருதல்**

**வினா எண் 34256—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், கீழப்பெரும்பள்ளம் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் குளத்தைத் தூர் வாரிப் பராமரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கீழப்பெரும்பள்ளம், அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், சட்டப் பிரிவு 46(2)-ன்கீழ்



2008 மே 13]

உள்ள திருக்கோயிலாகும். இதன் பசலி 1416-ன் உதவித்தொகை நிர்ணய வருமானம் ரூ. 9.92 இலட்சமாகும். இக்கோயில் சீர்காழி வட்டம், திருநகரி, அருள்மிகு கல்யாண ரெங்கநாதசுவாமி திருக்கோயில் தொகுப்பில் நிலை-3 செயல் அலுவலர் நிர்வாகத்தில் உள்ளது. தற்போது திருவெண்காடு செயல் அலுவலரின் கூடுதல் பொறுப்பில் நிர்வகிக்கப்படுகிறது. செம்பனார்கோயில் சரக ஆய்வர் தக்காராக உள்ளார். இத்திருக்கோயிலில் நவக்கிரகங்களில் ஒன்றான கேது பகவான் எழுந்தருளியுள்ளார். இது பிரார்த்தனைத் தலமாகவும் உள்ளது. மேற்படி, திருக்கோயிலில் நாக தீர்த்த குளம் ஒன்று உள்ளது. இது சர்வே எண் 99/1 ஏக்கர் 1.50 சென்ட் விஸ்தீரணத்தில் அமைந்துள்ளது. மேற்படி திருக்குளம் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு ரூ. 3.00 இலட்சம் மதிப்பீட்டில் மனித சக்தி கொண்டு தூர் வாரி சுத்தம் செய்யப்பட்டது. தற்போது நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. சேவார்த்திகள் மற்றும் பொதுமக்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**58—**

**தூர் வாருதல்**

**வினா எண் 34258—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, நாங்கூர் அருள்மிகு வைகுண்டநாத பெருமாள் கோயில், அருள்மிகு நாராயணப்பெருமாள் கோயில் குளத்தினைத் தூர் வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, நாங்கூர் அருள்மிகு வைகுண்டநாத பெருமாள் கோயில், அருள்மிகு நாராயணப்பெருமாள் கோயில் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் உள்ள திருக்கோயிலாகும். இக்கோயிலின் திருக்குளம் தேசிய ஊரக வேலை

[2008 மே 13

உறுதித் திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூ. 3.00 இலட்சம் மதிப்பீட்டில் மனித சக்தி கொண்டு தூர் வாரி சுத்தம் செய்யப்பட்டது. நான்கு பக்கக் கரைகளில் மண் அரிப்பு ஏற்பட்டு மழைக் காலங்களில் குளத்தில் மண் நிரம்பி விடுகிறது. ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் குளத்திற்குச் சுற்றுச் சுவர் அமைத்துத் தூர் வார ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

**59—**

### புதுப்பித்தல்

**வினா எண் 35653—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி லிங்காரெட்டிப் பாளையத்திலுள்ள அருள்மிகு கிருஷ்ணர் கோயிலைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், பண்ருட்டி நகரில் லிங்காரெட்டிப்பாளையத்தில் உள்ள அருள்மிகு கிருஷ்ணர் கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில் என்பதாலும், தனி நபர் வழிபாட்டிற்காக கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதாலும், இத்துறையின் சார்பில் நிதியுதவி வழங்க வழிவகை இல்லை.

**60—**

### தூர் வாருதல்

**வினா எண் 35809—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 மே 13]

(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம் கருவாழக்கரை காளியம்மன் கோயில் குளத்தைத் தூர் வாரி தடுப்புச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், கருவாழக்கரை அருள்மிகு சிங்கமகாகாளியம்மன் திருக்கோயில் இத்துறை ஆளுகையின்கீழ் கொண்டு வரப்படாத திருக்கோயிலாகும். மேற்படி திருக்கோயிலின் திருக்குளம், கருவாழக்கரை ஊராட்சி மன்றத்தின்மூலம் நடப்பு நிதியாண்டில் (2007-ல்) தமிழ்நாடு ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் தூர் வாரப்பட்டு நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**61—**

### தூர் வாருதல்

**வினா எண் 35821—திரு. வி.ஏ.டி. கலிவரதன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், காணை ஒன்றியம், பழைய கருவாட்சியிலுள்ள அருள்மிகு முருகன் கோயில் குளத்தைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், காணை ஒன்றியம், பழைய கருவாட்சி அருள்மிகு முருகன் (எ) சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

இந்து சமய மற்றும் அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் கொண்டு வரப்படாத சிறிய திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் கருவாட்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. வீரபத்திர கவுண்டர் என்பவரால் கட்ட ஆரம்பிக்கப்பட்டு இக்கிராம மக்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து நன்கொடை பெற்று திருப்பணிகள் நிறைவு செய்யப்பட்டு 30-8-2006-ல் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. கருவாட்சி கிராமம், சர்வே எண் 25-ல் 1.50.0 ஹெக்டேர் குளம் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்குளத்தின் கரையில்தான் மேற்காணும் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் தற்போது புதியதாகக் கட்டப்பட்டுள்ளது. இக்குளம் திருக்கோயிலுக்குச் சொந்தமானதல்ல. எனவே, இக்குளத்தினைத் தூர் வாரிச் சீரமைக்கும் பணியை இத்துறைமூலம் செய்ய வழிவகை இல்லை.

**62—**

### சுற்றுச் சுவர்

**வினா எண் 42324—திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, திருநயினார்குறிச்சி, கரகண்டேஸ்வரர் ஆலயத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், திருநயினார்குறிச்சி கரகண்டேஸ்வரம் அருள்மிகு கரகண்டேஸ்வரர் திருக்கோயில் சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களில் ஒன்றாகும். இத்திருக்கோயிலுக்கு மண்டபம் ஒழுக்கு மாற்றி தட்டோடு பதிக்கும் பணி ரூ.1.10 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. சுற்றுச் சுவர் கட்டும் பணி ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.



**63—**

### ஜவுளிப் பூங்கா

**வினா எண் 41201—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி பிரதான சாலையில் ஜவுளிப் பூங்கா மற்றும் ஏற்றுமதி வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி பிரதான சாலையில் அப்பகுதியில் உள்ள தொழில் முனைவோர்கள் முன்வருவார்களாயின் அப்பகுதியில் ஜவுளிப் பூங்கா மற்றும் ஏற்றுமதி வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யும்.

மத்திய அரசு ஜவுளித் தொழிலை ஊக்குவிக்கும்வண்ணம் ஜவுளிப் பூங்கா மற்றும் ஏற்றுமதி வளாகம் அமைக்க, ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டம் (Scheme for integrated Textile Park) செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்திற்கான வரைமுறைகளின்படி அரசு மற்றும் தொழில் முனைவோர் கூட்டாக இணைந்து (Public-Private Partnership) ஜவுளிப் பூங்கா மற்றும் ஏற்றுமதி வளாகம் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி பிரதான சாலையில், ஜவுளிப் பூங்கா மற்றும் ஏற்றுமதி வளாகம் அமைக்க, தொழில் முனைவோர்கள் முன்வருவார்களாயின் அந்தக் கோரிக்கையை அரசு பரிசீலித்து மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பும்.

**64—**

### வாகன வசதி

**வினா எண் 19364—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 மே 13

உயர்நிலை, மேல்நிலைப் பொதுத் தேர்வுப் பணிகளை மேற்பார்வையிடும் மண்டல அரசுத் தேர்வுத் துணை இயக்குநர்களுக்கு வாகனம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

சென்னை, திருநெல்வேலி, கோவை, திருச்சி மற்றும் கடலூர் ஆகிய ஐந்து மண்டலங்களில் உள்ள அரசுத் தேர்வுகள் மண்டல துணை இயக்குநர்களின் அலுவலகப் பயன்பாட்டிற்கு வாகனங்கள் வழங்கி பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**65—**

## ஆசிரியர்கள் நியமனம்

**வினா எண் 20670—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, அவலூர்ப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் கூடுதலாக ஆசிரியர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

மேல்மலையனூர் தொகுதி, அவலூர்ப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை உள்ள வகுப்புகளில் 713 மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். இப்பள்ளியில் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் குறித்து கீழ்க்கண்டவாறு தகவல் அளிக்கப்படுகிறது:

| | |
|---|---|
| தலைமையாசிரியர் | 1 |
| தமிழாசிரியர்கள் | 2 |
| பள்ளி உதவி ஆசிரியர்கள் | 7 |
| இடைநிலை ஆசிரியர்கள் | 7 |
| உடற்கல்வி ஆசிரியர் | 1 |
| மொத்தம் | **18** |



2008 மே 13]

எனவே, இப்பள்ளியில் ஆசிரியர்-மாணவர் நிர்ணயப்படி போதுமான ஆசிரியர் பணியிடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**66—**

## ஆசிரியர்கள் நியமனம்

**வினா எண் 41499—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதிக்குட்பட்ட திருக்கழுக்குன்றம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதிக்குட்பட்ட திருக்கழுக்குன்றம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் அரசால் ஒப்பளிக்கப்பட்ட அனைத்துப் பணியிடங்களிலும் கீழ்க்கண்டவாறு ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள் என்ற தகவல் அளிக்கப்படுகிறது.

| வ. எண் | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | பணியிடங்களின் எண்ணிக்கை | காலிப் பணியிடம் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் | 1 | - |
| 2 | முதுகலை ஆசிரியர் (தமிழ்) | 1 | - |
| 3 | முதுகலை ஆசிரியர் (ஆங்கிலம்) | 1 | - |
| 4 | முதுகலை ஆசிரியர் (கணிதம்) | 1 | - |
| 5 | முதுகலை ஆசிரியர் (இயற்பியல்) | 1 | - |
| 6 | முதுகலை ஆசிரியர் (வேதியியல்) | 1 | - |
| 7 | முதுகலை ஆசிரியர் (தாவரவியல்) | 1 | - |

[2008 மே 13

| வ. எண் | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | பணியிடங்களின் எண்ணிக்கை | காலிப் பணியிடம் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 8 | முதுகலை ஆசிரியர் (பொருளாதாரம்) | 1 | - |
| 9 | முதுகலை ஆசிரியர் (வணிகவியல்) | 1 | - |
| 10 | பள்ளி உதவியாசிரியர் (கணிதம்) | 2 | - |
| 11 | பள்ளி உதவியாசிரியர் (அறிவியல்) | 2 | - |
| 12 | பள்ளி உதவியாசிரியர் (வரலாறு) | 2 | - |
| 13 | தமிழாசிரியர்கள் | 4 | - |
| 14 | உடற்கல்வியாசிரியர் | 1 | - |
| 15 | ஓவிய ஆசிரியர் | 1 | - |
| 16 | சிறப்பாசிரியர்கள் | 2 | - |
| 17 | இளநிலை ஆசிரியர்கள் | 6 | - |

67—

## சூரிய மின் வேலி

**வினா எண் 20417—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் விவசாய விளை நிலங்களைக் காட்டு விலங்குகள் அழிப்பதைத் தடுக்க சூரிய மின் வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வால்பாறை தொகுதியில் விவசாய விளை நிலங்களைக் காட்டு விலங்குகள் அழிப்பதைத் தடுக்க 2006-2007 ஆம் ஆண்டில் 8 கி.மீ. தூரத்திற்கு சூரிய மின் வேலி அமைக்கப்பட்டுள்ளது.



2008 மே 13]

2007-2008 ஆம் ஆண்டில் மாநில அரசு திட்டம் II-ன்கீழ் ரூ.8.00 இலட்சம் செலவில் 5.00 கி.மீ. தூரத்திற்கு வால்பாறை தொகுதிக்குட்பட்ட மானாம்பள்ளி சரகம், ஷேக்கல்முடி பீட் பகுதியில் சூரிய மின் வேலி அமைக்கும் பணி நடைபெற்றுள்ளது.

68—

## சரணாலயம்

**வினா எண் 22194—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி அன்னை இந்திரா காந்தி வனச் சரணாலயத்தை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அன்னை இந்திரா காந்தி வன உயிரினச் சரணாலய மேம்பாட்டுப் பணிகளுக்காக 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.15.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு முழுவதுமாக செலவிடப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டுக்கு ரூ.20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு சரணாலயத்தின் மேம்பாட்டுப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

69—

## சூரிய மின் வேலி

**வினா எண் 30216—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, தளிஞ்சி குடியேற்றப் பகுதி, மஞ்சம்பட்டி குடியேற்றப் பகுதி விவசாய நிலப் பகுதிகளைச் சுற்றி சூரிய மின் வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

(ஆ) உடுமலைப்பேட்டை தொகுதிக்குட்பட்ட தளிஞ்சி குடியேற்றப் பகுதி மற்றும் மஞ்சம்பட்டி குடியேற்றப் பகுதிகளை ஒட்டிய வனப் பகுதிகளில் சூரிய மின் வேலி அமைக்க ஆய்வு செய்யப்பட்டு, சரணாலயப் பகுதிகளில் யானைகள் செல்லும் வழித் தடங்களில் சூரிய மின் வேலி அமைப்பது குறித்து எழுந்த ஆட்சேபணைகள் தொடர்பான விரிவான விசாரணைக்குப் பின்னர் 2007-2008 ஆம் ஆண்டில் தளிஞ்சி குடியிருப்பு விவசாய நிலப்பரப்பை ஒட்டிய வனப் பகுதியைச் சுற்றி ரூபாய் 8.00 இலட்சம் செலவில் 5.00 கி.மீ. தூரத்திற்கு சூரிய மின் வேலி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் மஞ்சம்பட்டி குடியேற்றப் பகுதி விவசாய நிலப்பரப்பை ஒட்டிய வனப் பகுதியைச் சுற்றி சூரிய மின் வேலி அமைக்கத் தேவையான நடவடிக்கை 2008-2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

**70—**

## நஷ்ட ஈட்டுத் தொகை

**வினா எண் 34286—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கலசப்பாக்கம் தொகுதியில் காட்டு யானைகளால் பாதிக்கப்பட்ட விவசாயப் பயிர்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

(ஆ) 2006-2007 ஆம் ஆண்டு கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட போளூர் மற்றும் ஜமுனாமரத்தூர் வனச் சரகப் பகுதியை ஒட்டிய



கிராமப் பகுதிகளில் ஏற்பட்ட பயிர் மற்றும் உடமைகளின் சேதங்களுக்காக 34 நபர்களுக்கு ரூ.55,150/- நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பயிர் மற்றும் உடமைகளின் சேதங்களுக்காக வரப்பெற்ற மனுக்கள் முறையாகப் பரிசீலிக்கப்பட்டு தற்போது 43 நபர்களுக்கு நிவாரணத் தொகை ரூ.1,02,000/- முழுவதுமாகப் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

**71—**

## இழப்பீடு வழங்கல்

**வினா எண் 43850—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*காட்டு யானைகளால் சேதப்படுத்தப்பட்ட மலையோர கிராம விவசாயிகளின் விளை நிலங்களுக்கு இழப்பீடு வழங்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

ஆம். காட்டு யானைகளால் சேதப்படுத்தப்பட்ட மலையோர கிராம விவசாயிகளின் விலை நிலங்களுக்கு உரிய இழப்பீடு அவ்வப்போது வழங்கப்பட்டு வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2008 வரை 495 விவசாயிகளுக்கு ரூ.29.54 இலட்சம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

**72—**

## சாலை வசதி

**வினா எண் 11944—திரு. க.ப. வேலுமணி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, பி.என்.புதூர் மற்றும் நெடுஞ்சாலைத் துறைச் சாலையில் வேகக் கட்டுப்பாட்டுப் பலகை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, பி.என். புதூர் சாலையானது மாநில நெடுஞ்சாலையான "வடகோவை-மருதமலை சாலை கி.மீ. 0/0-11/180" வரையுள்ள பகுதியாகும். இச்சாலையில் விவசாயக் கல்லூரி அமைந்துள்ள கி.மீ. 2/2 மற்றும் பாரதியார் பல்கலைக்கழகம் அமைந்துள்ள கி.மீ. 9/2 ஆகிய இரண்டு இடங்களிலே வேகத் தடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

**73—**

### சாலை வசதி

**வினா எண் 13494—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓசூரில் சிறப்புத் தொழில் பெருவழிச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

ஓசூரில் சிறப்புத் தொழில் பெருவழிச்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், சுற்றுச் சாலை அமைக்கும் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**74—**

### சமையல் கூடம்

**வினா எண் 5284—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, பாப்பம்பாடி ஊராட்சி, கரட்டூர், கொண்டக்காரனூர் துவக்கப் பள்ளிகளுக்கு சமையல் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி பாப்பம்பாடி ஊராட்சி, கரட்டூர், கொண்டக்காரனூர் துவக்கப் பள்ளிகளுக்கு சமையல் கூடம் சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 70,000/- மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**75—**

### சத்துணவுக் கூடம்

**வினா எண் 13249—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, சலங்கபாளையம் கிராமம், ஆலத்தூர் நெசவாளர் காலனி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி சலங்கபாளையம் கிராமம், நெசவாளர் காலனி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் புதியதாக சத்துணவு மையம் 30-4-2007-ல் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு புதிய சமையல் கூடம் கட்டத் தேவையான இட ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றவுடன் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி முன்னுரிமை வழங்கப்பட்டு, மேம்பாட்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

**76—**

### சத்துணவுக் கூடம்

**வினா எண் 32494—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 மே 13

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஆசாத் நகர் தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆசாத் நகர் சர்வ சிக்ஷ அபியான் (S.S.A.) ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு புதிய சத்துணவு மையம் கட்ட கீழ்க்கண்ட விவரப்படி செலவினம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (NP-NSPE) | ரூ. 60,000/- |
| ஊராட்சி ஒன்றியப் பொது நிதி | ரூ. 1,15,000/- |
| மொத்தம் | ரூ. 1,75,000/- |

இதற்கான ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

77—

## சத்துணவு மையம்

**வினா எண் 42728—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, பாப்பம்பாடி ஊராட்சி, கொண்டக்காரனூர் அரசுப் பள்ளியில் சத்துணவு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 மே 13]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பாப்பம்பாடி ஊராட்சி, கொண்டக்காரனூர் அரசுப் பள்ளியில் சமையல் மையம் சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.70,000 மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

78—

## சமையல் கூடம்

**வினா எண் 42733—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு சமையல் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், தாரமங்கலம் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியில் புதியதாக சத்துணவு சமையல் கூடம் ரூ.70,000/- மதிப்பீட்டில் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு வழங்கக் கோரப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு பெறப்பட்ட பின்னர் சமையல் கூடம் கட்டப்படும்.

79—

## மாட்டுப் பண்ணை

**வினா எண் 43611—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகள் வீடுகளில் மாட்டுப் பண்ணைகள் அமைத்துக்கொள்ள ஊக்குவிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[2008 மே 13

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்திற்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) விவசாயிகள் வீடுகளில் அரசு நிதியுதவியுடன் கூடிய மாட்டுப் பண்ணைகள் அமைத்துக்கொள்ள ஊக்குவிக்கும் திட்டம் அரசிடம் தற்போது ஏதுமில்லை.

(ஆ) எழவில்லை.

**80—**

**கட்டட வசதி**

**வினா எண் 3634—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், செல்லப்பிள்ளைக்குட்டை ஊராட்சி ஆதி திராவிடர் காலனி பகுதியில் இலவச திருமண மண்டபக் கட்டடம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில், எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், செல்லப்பிள்ளைக்குட்டை ஊராட்சி ஆதி திராவிடர் காலனி பகுதியில் இலவச திருமண மண்டபக் கட்டடம் கட்ட முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2008 மே 13]

**81—**

**தெரு விளக்கு**

**வினா எண் 4862—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, மலையாண்டிபட்டிணம் ஆதி திராவிடர் காலனி, வடபுறம் உள்ள மக்களுக்கு தெரு விளக்கு வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, மலையாண்டிபட்டிணம் ஆதி திராவிடர் காலனியில் ஏற்கெனவே 8 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இது தவிர, அக்காலனிக்கு குரல்குட்டை ஊராட்சி நிதியின்மூலம் ரூ.3,600/- மதிப்பீட்டில் இரண்டு தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

**82—**

**கட்டட வசதி**

**வினா எண் 11560—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, பயர்நத்தம் மற்றும் வேப்பிலைப்பட்டியில் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

மொரப்பூர் தொகுதி, பயர்நத்தம் மற்றும் வேப்பிலைப்பட்டியில் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**83—**

## கட்டட வசதி

**வினா எண் 12257—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கீழகாமராஜர்புரம், கமுகர்கடை, பெருமாள்புரம் மற்றும் சொக்கனா திருப்பு ஆகிய பகுதிகளில் ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக் கூடங்கள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கீழகாமராஜர்புரம், கமுகர்கடை, பெருமாள்புரம் மற்றும் சொக்கனாதிருப்பு ஆகிய பகுதிகளில் ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**84—**

## கட்டட வசதி

**வினா எண் 14178—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, நாராயணமங்கலம் கிராமத்தில் ஆதி திராவிடர் காலனிக்கு சமுதாயக் கூடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, நாராயணமங்கலம் கிராமத்தில் ஆதி திராவிடர் காலனிக்கு சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**85—**

## இலவச கால்நடைகள்

**வினா எண் 16401—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் மற்றும் கோட்டூர் பேரூராட்சிகளில் உள்ள ஆதி திராவிட மக்களுக்கு இலவசமாக கறவை மாடுகளும், ஆடுகளும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிட மக்களுக்கு இலவச கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லையாதலால், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் மற்றும் கோட்டூர் பேரூராட்சிகளில் உள்ள ஆதி திராவிட மக்களுக்கு இலவசமாக கறவை மாடுகளும், ஆடுகளும் வழங்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

86—

## சமுதாயக் கூடம்

**வினா எண் 30242—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், குமரலிங்கம் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், குமரலிங்கம் கிராமத்தில் ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

87—

## சமுதாயக் கூடம்

**வினா எண் 30243—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, இராவணாபுரத்தில் புதிய ஆதி திராவிடர் காலனி பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, இராவணாபுரத்தில் புதிய ஆதி திராவிடர் காலனி பகுதியில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



88—

## சமுதாயக் கூடம்

**வினா எண் 31160—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கண்ணமநாயக்கனூர் ஊராட்சி, மருள்பட்டி ஜெ.ஜெ. நகர் ஆதி திராவிடர் காலனி பகுதி, பாலப்பம்பட்டி ஜெ. ஜெ. நகர் ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, கண்ணமநாயக்கனூர் ஊராட்சி, மருள்பட்டி ஜெ.ஜெ. நகர் ஆதி திராவிடர் காலனி பகுதி, பாலப்பம்பட்டி ஜெ.ஜெ. நகர் ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

89—

## சமுதாயக் கூடம்

**வினா எண் 32347—திரு. க.ப. வேலுமணி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, குனியமுத்தூர் நகராட்சி, சுண்டக்காமுத்தூர் ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 மே 13

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரூர் தொகுதி, குனியமுத்தூர் நகராட்சி, சுண்டக்காமுத்தூர் ஆதி திராவிடர் குடியிருப்பு பகுதியில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**90—**

**சமுதாயக் கூடம்**

**வினா எண் 33479—திரு. வை. காவேரி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கன்னந்தேரியில் ஆதி திராவிட மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கன்னந்தேரியில் ஆதி திராவிடர் பகுதியில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**91—**

**சமுதாயக் கூடம்**

**வினா எண் 35783—திரு. கு.ப. வேலுமணி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, நாச்சிப்பாளையம் ஊராட்சி, பச்சாபாளையம் ஆதி திராவிடர் காலனிக்கு சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 மே 13]

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரூர் தொகுதி, நாச்சிப்பாளையம் ஊராட்சி, பச்சாபாளையம் ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**92—**

**சமுதாயக் கூடம்**

**வினா எண் 38934—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, பிரமனூர் ஊராட்சி, பிரமனூரில் ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, பிரமனூர் ஊராட்சி, பிரமனூரில் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**93—**

**சமுதாயக் கூடம்**

**வினா எண் 41601—திரு. கு. செல்வம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மங்களூர் ஒன்றியம், தொழுதூரில் ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2008 மே 13

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

மங்களூர் ஒன்றியம், தொழுதூரில் ஆதி திராவிடர் பகுதியில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**94—**

**நிவாரணம்**

**வினா எண் 18637—திரு. ஞா. ஜான் ஜோசப்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்நாட்டு மீனவர்களுக்கு பஞ்சகால சேமிப்பு நிவாரணத் திட்டம் அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன் வளத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள உள்நாட்டு மீனவர்களுக்கு மட்டுமின்றி, தமிழ்நாட்டிலுள்ள ஒட்டுமொத்த சுமார் 68,844 உள்நாட்டு மீனவர்களுக்கும் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ரூ. 6.20 கோடி நிதியுதவி கேட்டு மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்புதல் பெறப்பட்டவுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**95—**

**கான்கிரீட் தளம்**

**வினா எண் 19539—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, பூனாட்சி கிராமம், செம்படாபாளையம் மீனவர் காலனிக்கு கான்கிரீட் தளம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 மே 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பவானி தொகுதி, பூனாட்சி கிராமம், செம்படாபாளையம் மீனவர் காலனியைச் சார்ந்த மீனவர்களுக்கு மீனவர் இலவச வீடு கட்டும் திட்டத்தின்கீழ் வீடுகள் ஏதும் கட்டப்படவில்லை மற்றும் கான்கிரீட் தளம் அமைக்கப்படவில்லை. மேலும் பவானி தொகுதி, பூனாட்சி கிராமம், செம்படாபாளையம் மீனவர் காலனிக்கென தனியாக கான்கிரீட் தளம் அமைத்துத் தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**96—**

**மீன் உற்பத்தி**

**வினா எண் 36004—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சோலையாறு அணையில் மீன் உற்பத்தியை அதிகப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறையிலுள்ள சோலையாறு அணையில் பெருங்கெண்டை மீன்களான கட்லா, ரோகு மற்றும் மிர்கால் போன்ற மீன் குஞ்சுகள் மீன் வளத் துறையால் இருப்பு செய்யப்பட்டு வளர்க்கப்படுகின்றன. நடப்பு ஆண்டில் சோலையாறில் பெருங்கெண்டை மீன்களையும், இயற்கையில் உற்பத்தியாகும் மீன்களை அதிகமாக உற்பத்தி செய்து மக்களுக்குப் பயன்படும் வகையில் மீன்பிடிப்பினை மேம்படுத்த மீன் குஞ்சு இருப்பு மற்றும் மீன் பிடிப்பு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு மீன் வளப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
22414.
சென்னை-600 008

[2008 மே 13

97—

## மீன் வளர்ப்பு

**வினா எண் 41133—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் மீன் வளர்ப்புப் பண்ணை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது மானாமதுரையில் மீன் வளர்ப்புப் பண்ணை அமைக்க கருத்துரு ஏதுமில்லை.

98—

## மீன் பிடித்தல்

**வினா எண் 43847—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் அணையில் சுருக்குமடி வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதைத் தடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன் வளத் துறை அமைச்சர்:**

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் சுருக்குமடி வலை இயக்குவதை தமிழக அரசு தடை செய்து ஆணை வெளியிட்டுள்ளது. இவ்வாறான சுருக்குமடி வலை இயக்குவதைத் தடுத்திட அனைத்து உதவி இயக்குநர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் எவரேனும் சுருக்குமடி வலை இயக்கினால் அதனைத் தடுக்க துறை ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

99—

## கடற்பாசி வளர்ப்பு

**வினா எண் 44227—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 மே 13]

(அ) இராமேஸ்வரம், மண்டபம் பகுதி மீனவர்களைப் பாதுகாக்க கடற்பாசி வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடற்பாசி வளர்ப்புத் தொழில் குறித்த பயிற்சி மீன் துறையின்மூலம் கடலோர மாவட்டங்களில் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்பு சிறப்புத் திட்டத்தின் (SGSY) மூலம் அந்தந்த மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகம் மூலமாக அளிக்கப்படுகிறது. பயிற்சியில் பங்கு கொண்டவர்களின் தனிப்பட்ட ஆர்வத்தின் அடிப்படையில் தொழில் தொடங்க அரசுடைமை வங்கிமூலம் கடன் பெற வழிவகை செய்யப்பட்டு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

100—

## தொழிற்கூடம்

**வினா எண் 41237—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் மகளிருக்கு கூடை முடையும் தொழிற்கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) இந்தத் தொழில் துவங்குவதற்கு தற்போது வாரியத்தில் திட்டம் ஏதுமில்லை. இருப்பினும் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் பொருட்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுமூலம் கிராமிய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் விளிம்புத் தொகை, மானியம் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்மூலம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின்மூலம்

(116 குடிசைத் தொழில்களுக்கு) கடனுதவி வழங்கப்பட்டு 25% முதல் 30% வரை மானியமாக வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, எந்தத் தனி நபரும் மகளிருக்கு கூட்டுறவு முடையும் தொழில் துவங்க விரும்பினால் சம்பந்தப்பட்ட மாவட்ட உதவி இயக்குநர் (கதர் கிராமத் தொழில்கள்), விருதுநகர் அலுவலகத்தில் நேரில் தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

(ஆ) வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஆட்சியில் இரண்டாண்டுகள் நிறைவு செய்த முதல்வருக்குப் பாராட்டும் ஏற்புரையும் .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழக மக்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தையும் நிறைவேற்றும் வகையில் நலத் திட்டங்கள் பல வழங்கி, தமிழ்நாட்டின் பெருமை குறித்து இந்திய நாடே வியக்கும் வகையில் நல்லாட்சி புரிந்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) தலைமையிலான அரசு இரண்டு ஆண்டுகள் முடித்து இன்று மூன்றாம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் இந்நாளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பேரவை உறுப்பினர்களின் சார்பிலும், என் சார்பிலும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலான இந்த அரசு, இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்து மூன்றாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கிறது. ஆட்சி, அரசு நிர்வாகம் மாறி வருகின்ற காலச் சூழ்நிலையிலே, மிகப் பெரிய சவால்களையும், மிகப் பெரிய சிக்கல்களையும், பல முரண்பாடுகளையும் ஒரே நேரத்தில் சந்தித்து, கால மாற்றத்திற்கு ஏற்ப, காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப, சமூகம் போகின்ற நாடித் துடிப்பை உணர்ந்து பார்த்து எல்லாத் தரப்பினரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உருவாக்கிக் கொடுப்பதிலே ஒரு தலைவருக்கு இருக்கின்ற மிகப் பெரிய சிரமங்களை





அவர்கள் நாளும் சுமந்துகொண்டிருப்பதை நாம் எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். வரலாறு எழுதியவர்கள் உண்டு. வரலாறு உருவாகக் காரணமாக இருந்தவர்கள் உண்டு. ஆனால், வாழ்கின்றபோதே வரலாறாக இருக்கின்ற வாய்ப்பு சரித்திரத்திலே மிகச் சிலருக்குத்தான் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

பாதை போட்டவர்கள் உண்டு, பயணித்தவர்களும் உண்டு. ஆனால், பாதை போட்டுக்கொண்டே பயணிப்பது என்பது மிகப் பெரிய சிரமமான காரியம் என்பதை உலக வரலாற்றில் மிகப் பெரிய தலைவர்களுடைய வாழ்க்கையைப் படித்தவர்கள் உணர்ந்துகொள்வார்கள். அத்தகைய காலச் சூழ்நிலையிலே தானே பாதை போட்டுக்கொண்டு அந்தப் பாதையில் தான் பயணம் செய்வதோடு மட்டுமல்லாமல், தனக்குப் பின்னாலே வருகின்ற கோடிக்கணக்கான தமிழ் மக்களுக்கு தலைமை தந்து வழிநடத்திச் செல்லும் (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுக்கு இன்று இயற்கை மிகப் பெரிய வாய்ப்பினைத் தந்திருக்கிறது. 60 ஆண்டு காலம் தமிழகத்தின் அரசியல் சரித்திரத்தில் மையப் புள்ளியாக, ஈர்ப்பு சக்தியாக, உந்து விசையாக இருந்து வழிநடத்தக்கூடிய வாய்ப்பினை, அவர்கள் இயற்கை என்று சொல்வார்கள், நாங்கள் இறைவன் என்று சொல்வோம். அத்தகைய வாய்ப்பை இறைவன் அவருக்குத் தந்திருக்கிறார். நீண்ட, நெடிய ஆயுள்—அவர் நடந்து வருகின்றபோது சற்று சிரமப்பப்படுகின்றபோதுகூட எங்களைப் போன்றவர்கள் பார்த்து நெகிழ்ந்து போவோம். இருந்தாலும் எனக்கு ஒரு வரிதான் ஞாபகத்திற்கு வரும். "சிங்கத்தின் கால்கள் பழுது பட்டாலும் சீற்றம் குறைவதில்லை" என்று அற்புதமாகச் சொல்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, அவர்கள் கற்பனை வளத்தில், உணர்ச்சி வேகத்தில், உந்துதலில், இளமைத் துடிப்பில் யாருக்கும் சளைத்தவர் அல்ல என்கிற நல்ல செய்தியைச் சொல்லி, இன்று தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியத் திருநாட்டுக்கே ஆலோசனை சொல்கின்ற மூத்த அரசியல் தலைவராக, எங்கள் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுடைய நம்பிக்கையைப் பெற்ற (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல வழிகாட்டியாக இருக்கின்ற அவருக்கு காங்கிரஸ் கட்சியின் சார்பில், சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் எங்கள் அண்ணன் திரு. சுதர்சனம் அவர்கள் சார்பில் நிறைந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டு, அவர்கள் பணி தொடரவேண்டும், அதற்கு காங்கிரஸ் துணையிருக்கும் என்று சொல்லி அமைகின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*'செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்*
*செயற்கரிய செய்கலா தார்'*

என்று உலகப் பொது மறையை வகுத்தளித்த அய்யன் வள்ளுவப் பெருந்தகையின் வழியில் நின்று, இந்தியத் திருநாட்டின் மூத்த தலைவர்கள் வரிசையில் முதலிடத்தில் நின்று, தன்னுடைய பொது வாழ்க்கையில் முக்கால் நூற்றாண்டைச் செலவழித்து, தன்னுடைய சட்டமன்றப் பணியில் அரை நூற்றாண்டுக்கு மேலாக, 51 ஆண்டை எட்டிவைத்து, தன்னுடைய முதலமைச்சர் பதவியில் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இவர் போல் யாரும் இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு, இன்று இந்தியத் திருநாட்டினுடைய முதல்வர்கள் வரிசையில் தனக்கே உரிய தன்னிகரில்லாத ஒரு தலைசிறந்த நிருவாகி என்ற பெயருக்கு ஏற்றவகையில் (மேசையைத் தட்டும் ஒலி) சிறந்த முதலமைச்சராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றியிருப்பது தமிழ்நாட்டிற்குப் பெருமை; இந்தியத் திருநாட்டிற்கு வழிகாட்டி என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. இன்று நடுவண் அரசாகச் செயலாற்றி வருகிற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் வழிகாட்டியாக இருக்கிற அன்னை சோனியா காந்தி அவர்களின், அளவிட முடியாத பாசத்தோடு நேசிக்கிற தந்தையாக நின்று, (மேசையைத் தட்டும் ஒலி) நடுவண் அரசுக்கும் வழிகாட்டக்கூடிய மாபெரும் அரசியல் தலைவராக விளங்கி, இன்று தமிழ்நாட்டை நல்வழியில் நடத்திச் செல்லக்கூடிய அதே நேரத்தில், தன்னுடைய கடின உழைப்பால், தளராத மன உறுதியால், எதிலும் எடுக்கிற முடிவில் மிகப் பெரிய தீர்க்கதரிசியாக, அதிலும் குறிப்பாக தன்னுடைய அளவிட முடியாத ஞாபக சக்தியால், மிகச் சிறந்த நிருவாகத் திறனால், ஒரு தலைசிறந்த முதலமைச்சராக விளங்கிக்கொண்டு, ஐந்தாவது முறை முதலமைச்சர் பதவியில் இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்து மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிற இந்த நன்னாளில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பணி சிறக்க வேண்டும், தமிழ்நாடு தலைநிமிர்ந்து நிற்கவேண்டும், மொழி, இனம், நாடு என்று சொல்லக்கூடிய வகையில் அவருடைய



பணி இந்த மொழிக்கும், இந்த மண்ணுக்கும், இந்த நாட்டிற்கும் பெருமை சேர்க்கின்ற வகையிலே வரக்கூடிய காலம் அமைந்து, எல்லா நிலையிலும் சிறப்பாக உயர பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனமார்ந்த பாராட்டுதல்களையும் வாழ்த்துகளையும் சொல்லி, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பெருமதிப்பிற்குரிய தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகளை நிறைவுசெய்து, மூன்றாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிற இந்த நல்ல நேரத்தில், கலைஞர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து தமிழகத்தினுடைய சாதாரண ஏழை, எளிய மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட, சிறுபான்மை மக்கள் என்று அனைத்துத் தரப்பு மக்களினுடைய நலனுக்கான பல்வேறு சிறந்த பணிகளை—தொழிலாளர் பிரச்சினைகள் உள்ளிட்டவற்றில்—ஆற்றி வருகிற இந்த அரசுக்கு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய அரசியல் அரங்கில் மதிக்கத்தக்க மகத்தான தலைவர்களில் ஒருவராகவும், மிகச் சிறந்த நிருவாக அனுபவம் பெற்றவராகவும், முதிர்ந்த அரசியல் அனுபவம் பெற்று, அனைவரையும் அரவணைத்துச் செல்கிற அவருடைய அந்தச் சிறந்த செயல்பாடுகள், அடுத்து வருகிற ஆண்டிலேயும் தொடரும் என்ற பெரும் நம்பிக்கையோடு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அவர் தலைமையில் செயல்படுகிற அமைச்சர் பெருமக்களுக்கும், இந்த அரசுக்கும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்கள் மனப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்து, உங்களுடைய இந்தப் பயணம் தொடர மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி துணைநிற்கும் என்பதைத் தெரிவித்து, வாழ்த்தி அமர்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிற நமது முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்கு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலான மனப்பூர்வமான வாழ்த்துதலை முன்னதாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் ஆட்சிக்கு பல்வேறு சோதனைகள் வந்த காலங்கள், பல்வேறு பிரச்சினைகள் வந்த காலங்கள் எல்லாம் உண்டு. அவற்றையெல்லாம் மிகச் சாமர்த்தியமாக அணுகி, தீர்வு காணுவதற்குரிய அந்த முயற்சிகள் எடுப்பதற்குரிய மிகுந்த அனுபவம் படைத்த ஒப்பற்ற முதல்வர் நம்முடைய கலைஞர் அவர்கள். அவர்களுடைய அனுபவத்தின் காரணத்தினாலே, முதிர்ச்சியின் காரணத்தினாலே, தமிழகத்தை மிகச் சிறப்பாக வழிநடத்திச் செல்வதோடு மட்டுமல்லாமல், தேசிய அரசியலிலே மிக முக்கியப் பங்கை வகித்து, இந்தியத் திருநாட்டை வழிநடத்திச் செல்வதற்கான முக்கிய ஆக்கபூர்வமான உந்து சக்தியாக நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் விளங்குகிறார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. அந்தச் சேவை தொடர வேண்டுமென்பது எங்களுடைய விருப்பம். சட்டமன்ற வரலாற்றில் 50 ஆண்டைக் கடந்திருக்கிறார்கள்; அரசியல் வரலாற்றில் அவர்கள் 100 ஆண்டைக் கடக்க வேண்டுமென்பது நம் அனைவருடைய விருப்பமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

முற்பகல் 10-35

இரண்டு தினங்களுக்கு முன்பாக ஒரு செய்தி; உங்களுடைய அறையிலே மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபோது, பத்திரிகையிலே வந்த ஒரு செய்தியைக் குறிப்பிட்டுப் பேசினார்கள். அந்தச் செய்தியின் உள்ளே செல்ல விரும்பவில்லை. ஆனால், அந்தச் செய்தி ஒரு பத்திரிகையிலே மட்டும்தான் வந்தது. நான் தினசரி காலையிலே கிட்டத்தட்ட ஒன்பது பத்திரிகைகளைப் படிக்கிற வழக்கத்தைக் கொண்டிருக்கிறேன். ஆனால், அவர் சொன்ன செய்தியைப் படிப்பதற்குரிய அந்த வாய்ப்பு எனக்கு இல்லாமல் போய்விட்டது. அங்கே வந்திருந்த அமைச்சர்களையெல்லாம் பார்த்து, அந்தச் செய்தியைப் 'பார்த்தீர்களா? படித்தீர்களா?' என்று கேட்டார். அனைவருமே 'பார்க்கவில்லையே; அப்படி வராத செய்தியை நீங்கள் சொல்கிறீர்களே' என்று சொல்லி, நாங்கள் சாமர்த்தியமாக அவர்மீது குற்றம் சுமத்த முயற்சி எடுத்தோம். 'இல்லை' என்று அழுத்தமாகச் சொன்னார். திரும்பவும் ஒரு பத்திரிகையைக் குறிப்பிட்டு, எங்களுக்கு எடுத்துவந்து காண்பித்ததற்குப் பின்னால்தான், அப்பொழுதுதான் நாங்களே படிக்க முடிந்தது. ஆகவே, சின்ன செய்தி; ஒரு மூலையிலே



இருக்கிற ஒரு பெட்டிச் செய்தி; சாதாரணச் செய்தியைக்கூட அன்றாடம் படித்துவிட்டு, அதைச் சொல்வதற்குரிய அந்த முயற்சியை எடுக்கிறபோது உண்மையிலேயே அவருடைய மூளை பலம் புரியும். அவரை 'மூளை பலம் மிக்க முதலமைச்சர்' என்று நான் பலமுறை இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அதற்கும் மேலாக எங்களுடைய கட்சியின் சார்பில் ஏற்கெனவே இந்த அவையிலே பதிவு செய்திருக்கிறோம். அவர் மூளை பலம் மிக்கவர் மட்டுமல்ல; "7 O' Clock" Blade-ஐப் போன்று மிக sharp ஆன மூளைக்குச் சொந்தக்காரர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் என்பது மறுக்கமுடியாத உண்மை. அவர் என்றென்றைக்கும் வழிகாட்டுவார்; அவருடைய திறமைகளைத் தமிழகம் பயன்படுத்தவேண்டும்; உறுப்பினர்களும் பயன்படுத்தவேண்டும். அவர் நீண்டகாலம் வாழ வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வாழ்த்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாவது ஆண்டிலே நுழைகிற இந்த ஆட்சிக்குத் தலைமையேற்று நம்மையெல்லாம் வழிநடத்திக் கொண்டிருக்கின்ற முத்தமிழறிஞர் மாண்புமிகு முதல்வர் அவர்களை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே நான் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

இப்போது தமிழகம் கல்வியிலும், தொழிலிலும் மிகப் பெரிய புரட்சியைக் கண்டு கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், குறிப்பாக, ஆதி திராவிட மக்களுக்கு, அவர்களுடைய சமூக நிலையை எடுத்துக்கொண்டால், கீரிப்பட்டி, பாப்பாப்பட்டியிலிருந்து, இப்போது உத்தபுரம் வரை, அவர்களுடைய உரிமைகளை நிலை நாட்டுவதற்கு உறுதுணையாக இருப்பது மட்டுமல்லாமல், அந்தச் சமூகத்தைச் சார்ந்த பிள்ளைகளுக்கு, குறிப்பாகக் கல்விக்கு, இப்போது அளப்பரிய பணிகளைத் தமிழக முதல்வர் அவர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள். இப்போது இந்தச் சமூகத்தைச் சேர்ந்த ஒரு முதல்வர் தலைமையேற்று நடத்துகிற ஆட்சியிலேகூட இல்லாத பல நன்மைகள் நம்முடைய மாநிலத்திலே நடந்து கொண்டிருக்கின்றன.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால், இந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகையிலே ஓர் இடையூறு நேர்ந்தபோது, அதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய

கவனத்திற்குக் கொண்டு சென்றபோது, உடனடியாக அதுகுறித்துப் பேசி, அந்த நிலையை அவர்கள் மீட்டுத் தந்தார்கள். இதனால் இப்போது இந்தியா முழுவதும் இருக்கின்ற ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் பயனடைந்திருக்கின்றார்கள்.

அதுபோலவே, தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கான நிதியை இரு மடங்காக உயர்த்தித் தந்து, இந்தியா முழுவதும் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இப்போது அளப்பரிய நன்மையை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றியிருக்கின்றார்கள். ஆகவே, தமிழகத்திலே இருக்கின்ற ஆதி திராவிட மக்களுக்கு மட்டுமல்லாமல், இந்தியா முழுவதும் இருக்கின்ற ஆதி திராவிட, பழங்குடியின மக்களுக்கும் பாதுகாவலராக விளங்குகின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இந்த ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் பல ஆண்டுகள் தொடர்ந்து, இன்னும் பல நன்மைகளை ஒடுக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு ஆற்ற வேண்டுமென்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே வாழ்த்தி அமர்கிறேன், நன்றி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடு) திரு. ஓ. பன்னீர்செல்வம், நீங்களும் இதைத்தான் பேசப் போகிறீர்கள் என்று நினைத்தேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** திரு. ஓ. பன்னீர்செல்வம், நீங்கள் பேசப் போகிறீர்களா? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடு)

(மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேச இருக்கையிலிருந்து எழுந்து நின்றதும் உறுப்பினர்கள் அனைவரும் மேசையைத் தட்டி பலத்த ஒலி எழுப்பினர்.)

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கத்திலே இருக்கிற பேராசிரியர் அவர்கள் உட்கார்ந்தே உரையாற்றச் சொன்னார். நன்றி கூறும்போது, அது மரியாதை அல்ல என்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) எழுந்து நின்று நாகரிகமாகப் பேசுகிறேன். அதுமாத்திரமல்ல; எழுந்து நிற்கவும் முடியும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்துக் காட்டுவதற்காகவும் எழுந்து நின்று பேசுகின்றேன்.



முற்பகல் 10-40

இதே மாமன்றத்தில் என்னுடைய சட்டமன்ற வாழ்க்கையைப்பற்றி, எத்தனை ஆண்டு காலம் அந்தச் சட்டமன்ற வாழ்க்கை தொடர்ந்தது என்பதுபற்றி நீங்களும், தேசத் தலைவர்கள் பலரும், நாட்டுத் தலைவர்களும், புலவர் பெருமக்களும், அறிஞர் பெருமக்களும், ஆன்றோர்களும், சான்றோர்களும் இந்த அவையிலே என்னை வாழ்த்தியிருக்கின்றார்கள். ஆட்சியைச் சிலாகித்து, வாழ்த்திய உங்களுக்கும், 'இன்னும் நூறு ஆண்டுகள் வரையிலே வாழ வேண்டும்' என்று சாபம் கொடுத்த நண்பர்களுக்கும் (சிரிப்பு) நான் எப்படி நன்றி சொல்வதென்றே எனக்குப் புரியவில்லை.

இயற்கை எந்த அளவிற்கு இடம் தருகிறதோ, அந்த அளவிற்கு வாழ எல்லோரும் முயற்சிப்பார்கள். அப்படி முயற்சிக்கிற நேரத்தில், எந்த நிலையிலே தன்னுடைய உடலைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும், நலன் பேணவேண்டும் என்பதையெல்லாம் சிந்தித்து, அதற்கேற்ற வழிவகைகளையும் ஏற்றுக்கொண்டு வாழ்க்கை நடத்துவார்கள். என்னைப் பொறுத்தவரையில், ஒரு 50 ஆண்டு வயதிற்குப் பிறகு அல்லது 60 வயதிற்குப் பிறகு, நீண்டநாள் வாழவேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது. ஏனென்றால், எஞ்சியுள்ள நாட்கள் குறைவாக இருந்தால் மக்களுக்குத் தொண்டாற்றக்கூடிய நாட்கள் குறைந்துவிடுமே என்ற அந்தக் கவலையால், நான் நீண்டநாள் வாழ வேண்டுமென்று ஆசைப்பட்டதும், ஆசைப்படுவதும் உண்மை. அதற்கேற்ப என்னுடைய உடல்வளத்தைச் சரியாக வைத்துக்கொள்ள மேலும் மேலும் முயற்சிக்கிறேன். விடியற்காலை 5-00 மணிக்கெல்லாம் எழுகிறேன். இப்படிச் சொல்வதற்குக் காரணம்— 'இவன் எப்படி உழைக்கிறான், இவ்வளவு வயதிலே' என்று யாராவது வியப்புற்றால், அவர்கள் வாலிபர்களாக இருந்தால், நடுத்தர வயதுடையவர்களாக இருந்தால், அவர்களெல்லாம் இப்படிப் பழகிக்கொள்ளவேண்டும் என்று நான் அவர்களுக்கு வைக்கின்ற வேண்டுகோள்தான் இது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இன்றைக்குக் காலையிலே 4-00 மணிக்கு எழுந்து, நடைப்பயிற்சியை முடித்துவிட்டு, கடலூர் மகளிர் மாநாட்டிற்கான கவிதை ஒன்றை எழுதிவிட்டு, அதற்குப் பிறகுதான் அவைக்கு வருவதற்கான அலுவல்களைக் கவனித்து, இங்கே வந்திருக்கின்றேன். இதைச் சொல்வதற்குக் காரணம், என்னுடைய ஒரு நாள் வேலை இப்படி என்று ஜம்பம் அடித்துக்கொள்வதற்காக அல்ல. இப்படி வேலை செய்தால்தான் நீண்ட நாள் வாழ்வதற்கு வழி உண்டு என்பதை

உங்களுக்கும் எடுத்துச் சொல்லவேண்டும் என்ற பொது நல நோக்கத்தோடுதான் அதைக் குறிப்பிடுகிறேனேயல்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) எனக்காக அல்ல. மேலும் மேலும், தொடர்ந்து தொண்டாற்ற வேண்டுமென்கிற நேரத்தில், அப்படித் தொண்டாற்றுகின்ற காலகட்டத்தில், எல்லோரோடும் தோழமையோடு பழகினோம் என்ற திருப்தியோடுதான் மறையவேண்டும் என்பது இப்பொழுதெல்லாம் என்னுடைய நெஞ்சிலே மலர்ந்து வருகின்ற மகத்தான ஆசையாகும்.

நேற்றையதினம் நடைபெற்ற காவல் துறை மானியத்திலேகூட என்னுடைய பேச்சு அமைந்த விதத்தை எதிர்க்கட்சி உறுப்பினர்கள், தலைவர்கள், தோழமைக் கட்சி நண்பர்கள் அனைவரும் கவனித்திருப்பீர்கள். அது யாரையும் வசியப்படுத்திக்கொள்ளவேண்டும்; நம் பக்கம் இழுத்துக்கொள்ளவேண்டும் என்கின்ற முயற்சி அல்ல. எல்லோரும் இணைந்து இந்த நாட்டை, இந்தச் சமுதாயத்தை ஒற்றுமைப்படுத்தி வாழ வைக்க, வளம்பெறச் செய்ய நம் அத்தனைப் பேருடைய முயற்சியும் ஒருமித்த நிலையிலே இருந்திட வேண்டும். கொஞ்சம் பிசிறு தட்டினால்கூட எப்படி சங்கீதம் கெட்டுவிடுகிறதோ, கொஞ்சம் தாளம் தவறினால்கூட எப்படி நடனம் பாழாகிவிடுகிறதோ அதைப்போல நம்முடைய ஒற்றுமையில் நம்முடைய தோழமை உணர்வில்—தோழமை உணர்வு என்று கூட்டுச் சேர்ந்த தோழமைக் கட்சிகளை மாத்திரம் சொல்லவில்லை, கூட்டுச் சேராத காலத்தில் கூட்டாக இருந்த இன்றைய எதிர்க்கட்சிக்காரர்களையும் சேர்த்துத்தான் சொல்லுகின்றேன்—எல்லோரும் அதே உணர்வோடு பழகவும், பொது வாழ்க்கையிலே ஈடுபடவும், ஒருவரையொருவர் மதிக்கவும், ஒருவரையொருவர் நேசிக்கவும், மனிதாபிமானத்தோடு பழகவும், மனிதநேயத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்கவும் வேண்டும் என்பதுதான் நான் உங்களுக்கெல்லாம் வைக்கின்ற வேண்டுகோள். அந்த வேண்டுகோளை நீங்கள் காப்பாற்றுவீர்கள் என்று நம்புகின்றேன்.

முற்பகல் 10-45

ஒரு வேளை நான் நீங்கள். விரும்புகிற நாள் வரையிலே இல்லாமல், இடையில் உங்களிடமிருந்து பிரிந்துவிட்டாலும் இன்றைக்கு இந்த மன்றத்திலே இருந்து, மாபெரும் தலைவர்கள் எல்லாம் படங்களாக இருக்கின்ற இந்த மன்றத்திலே இருந்து சொல்லுகின்ற இந்த வாசகங்களை நீங்கள் மனதிலே பதிய வைத்து யாரோ ஒரு பெரியவன் சொன்ன கட்டளை என்று கருத வேண்டாம். ஒரு சிறியவன் விடுத்த கெஞ்சல் என்கின்ற முறையிலே அவைகளையெல்லாம்



ஏற்றுக்கொண்டு. அத்தகைய வாழ்க்கையை நீங்கள் வாழ்ந்துகாட்டி இந்தத் தமிழகத்தை, தமிழ் இனத்தை வாழவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அதுதான் நீங்கள் எனக்குக் காட்டுகின்ற—இத்தனை நாள் நான் ஆற்றிய தொண்டு, பணி என்று நீங்கள் நம்பினால், அதற்கு நீங்கள் காட்டுகின்ற நன்றி என்று கூறி, நன்றி தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

## 3. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). (குறுக்கீடுகள்)

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**•திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈராக் தமிழர் பிரச்சினை தொடர்பாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**திருமதி பதர் சயீத்:** பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொடுத்திருக்கிற அறிவிப்புகள் எல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன. உட்காருங்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**•மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2008 மே 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



2008 மே 13] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[2008 மே 13

முற்பகல் 10-50

**(ஈ.) தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு, 2008**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



2008 மே 13]

**(உ) தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம், என்ன? சொல்லுங்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

தொடர்ச்சி

### (ஊ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

தொடர்ச்சி

### (எ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. கே.என் நேரு] [2008 மே 13

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஏ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2008 மே 13] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஐ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) **கோரிக்கை எண் 38–பொதுத் துறை**

(ஆ) **கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)**

(இ) **கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை**

(ஈ) **கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை**

---

### (அ) கோரிக்கை எண் 38–பொதுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2008-2009* ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் *38*-பொதுத் துறை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5365, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் காரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6251, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6461, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9601, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9923, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11388, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11969, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12064, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14399, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14758, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15483, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16151, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10374, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15752, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12452, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14984, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1236, திரு. பெ. மோகன்.

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் மரக்கன்றுகள் புதிதாக நடுவதற்கும் மற்றும் ஏற்கெனவே



நடப்பட்டு சில இடங்களில் காய்ந்த மரக்கன்றுகளுக்குப் பதிலாக மீண்டும் அந்த இடங்களில் மரக்கன்றுகள் நடவேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1367, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கம்பம் தொகுதியில் இராயப்பன்பட்டி, ஆனைமலையன்பட்டி ஆகிய கிராமங்களில் விவசாய நிலங்களில் காட்டுப் பன்றிகள் நுழையாமல் இருக்க சோலார் மின் வேலி அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1472, டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1878, திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காட்டு யானைகளால் விவசாய நிலங்கள் பாழாவதைத் தடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2966, திரு. கு. செல்வம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3625, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் வனத் துறைப் பகுதிகளில் பல ஆண்டுகாலம் வீடுகட்டி வாழ்ந்துவரும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3988, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், சந்தவாசல் பகுதியில் உள்ள வனச்சரக அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4070, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டத்தில் உள்ள பீமகுளம், ரெட்டியூர், நாய்க்கனூர், மந்தாரக்குட்டைப் பகுதியில் யானைகள் கூட்டம் கூட்டமாக வந்து பயிர்களை நாசம் செய்வதால் அங்கு காட்டைச் சுற்றி சூரிய மின்வேலி அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4913, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு இரப்பர் கழகத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5083, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வனத் துறைமூலம் மூலிகைப் பண்ணைகள் அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5551, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் தொகுதியில் வனத் துறைக்குச் சொந்தமான இடங்களில் மரங்கள் வளர்த்து காடுகள் வளர்க்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6749, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சோளிங்கர் பகுதியில் கல் குவாரியினால் பொதுமக்களுக்கு ஏற்படும் சுற்றுச்சூழல் இடையூறுகளைத் தடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8852, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் மக்களிடம் சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9047, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வனம் நாட்டிற்கு வளம் சேர்க்கின்ற சொத்து என்பதால் வனம் அழிக்கப்படுவதைத் தடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9281, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவிடைமருதூர் வட்டம், கோட்டூர் அம்பிகா சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் பழவாற்றில் கலந்து சுற்றுச்சூழல் மாசு ஏற்படுவதைத் தடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9964, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் வனங்களின் சதவிகிதத்தை அதிகரிக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10127, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி நகரின் மையப் பகுதியில் உள்ள பேருந்து நிலையங்களில் சுற்றுச்சூழலைப் பாதிக்கும் வகையில் உள்ள கழிப்பிடங்களை அகற்றி நவீன கழிப்பிடங்கள் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10289, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதியில் வே. முத்தம்பட்டி ஆஞ்சநேயர் கோயில் சாலை, காளிகரம்புச் சாலை, நல்லம்பள்ளி ஒன்றியம், கம்பம்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள வனத் துறைக்குச் சொந்தமான சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதைச் சீர்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10450, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுற்றுச்சூழலைப் பாதுகாக்க சாலை ஓரங்கள் மற்றும் அரசு பயன்படுத்தாத காலியிடங்களில் மரக்கன்றுகளை நட்டு, பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10458, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் பொதுமக்களுக்குச் சாலை வசதி செய்துதர அனுமதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10758, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதியில், வடசென்னைப் பகுதியிலிருந்து வரும் தொழிற்சாலை மாசுகளால் சுற்றுச்சூழல் வெகுவாகப் பாதிப்பதால், அதனைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11275, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடம் தொகுதியில் கோடாங்கிபாளையம், வேலம்பாளையம் ஆகிய பகுதிகளில் கிரஷ்ஷர் (கல் உடைக்கும்) தொழிலால் வரக்கூடிய புகையிலிருந்து பொது மக்களுக்கும் விவசாய விளைபொருள்களுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11454, திரு. ந. கணபதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11746, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி தொகுதியின் அனைத்துப் பகுதிகளிலும்

சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி மாணவ. மாணவியர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களுக்கு ஊக்கம் தந்து, அவர்கள்மூலம் வனத் துறையுடன் கூட்டாகப் புதிய மரக்கன்றுகள் நட்டுப் பராமரித்து வளர்க்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11809, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வனத் துறையின்மூலம் சுற்றுப்புறச்சூழல் ஆர்வலர்களுக்கு நன்கு வளர்ந்த, ஆளுயர மரக் கன்றுகளை இலவசமாக வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12503, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடிநீர் ஆதாரங்களை மாசுபடுத்துவதைத் தடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12523, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 12717, திரு. தி. இராமசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12897, திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதியில் அரிமளம் சரக வனத் தோட்டக் கழகத்தின் செயல்பாடுகள் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13074, திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13153, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை, மக்களுக்கு அரசு தகவல் தொடர்பு அமைப்புகள்மூலம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13459, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், ஏற்காடு அடிவாரத்தில் உள்ள குருவம்பட்டி உயிரியல் பூங்காவை வனத் துறைமூலம் பராமரித்து, அங்கு அரசுமூலம் மானிய விலையில் மரக்கன்றுகள் விற்பனை செய்யும் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13482, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, சிற்றார் கோட்டத்தில் காட்டு யானைகளின் அட்டகாசத்தைத் தடுக்க அகழி மற்றும் கருங்கல் வேலி அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13722, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் உள்ள சிப்காட் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் சாயக் கழிவுநீரைச் சுத்திகரிப்பு செய்து கடலில் கலக்கும் திட்டத்திற்கு நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13873, திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 14122, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுத்திட பொதுமக்களிடம்



விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14877, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் சாரண, சாரணியர் இயக்கம் மற்றும் தன்னார்வலர் இயக்கம் போன்றவைமூலம் சுற்றுச்சூழல் விழிப்புணர்ச்சி பற்றி அனைத்துப் பகுதிகளிலும் செயல் விளக்கத்துடன் பிரச்சாரம் செய்யவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15244, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட வனப் பகுதிகளில் ஆதாயம் தரும் தேக்கு மரம் வளர்க்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15738, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூரில் உள்ள சாயப் பட்டறை பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு கவர்னர் உரையில் குறிப்பிட்டுள்ளதைப்போல மத்திய, மாநில அரசுகள் மானியங்கள் கொடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16452, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட குறிச்சி, குனியமுத்தூர் நகராட்சியிலிருந்து எடுக்கப்படும் குப்பைகளைத் தனியாக ஓரிடத்தில் கொட்டி, சுற்றுச்சூழல் பாதிக்காத வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16525, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராஜபாளையம் தொகுதியில், அயன்கொல்லங்கொண்டான் சாலையில் உள்ள செங்கல் சூளைகளின் புகைக் காற்றும், மொட்டமலை கல் குவாரியிலிருந்து வெளியேறும் தூசியும் கிராமப் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதைத் தடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16591, திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அவினாசி தொகுதியில் வனத் துறையில் பணியாற்றும் தற்காலிகப் பணியாளர்கள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்யவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16602, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதியில் தேக்குமரம் வளர்ப்புத் திட்டத்தில் ஆற்றங்கரையில் தேக்கு மரக்கன்றுகள் நடவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16645, திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டை தொகுதியில் உள்ள தரிசு நிலங்களில் வனத் துறையின்மூலம் மரங்கள் வளர்க்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16787, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வனத் துறை இடங்களில் எல்லா வகைகளிலும் மக்களுக்குப் பயன்தரும் மரங்களை வளர்ப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16857, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வன விலங்குகள் மற்றும் யானைகளால் விவசாயிகளின் பயிர்களுக்கு ஏற்படுகின்ற பயிர்ச் சேதத்திற்கு நஷ்ட ஈட்டுத் தொகை ஏக்கர் ஒன்றுக்கு ரூ.50,000/- ஆக வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17089, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டத்தில் உள்ள வனத் துறைக்குச் சொந்தமான மலைகளில் சந்தனம், தேக்கு போன்ற மரங்களை வளர்க்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,91,20,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-10

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண் 38-பொதுத் துறை மற்றும் கோரிக்கை எண் 46-தமிழ் வளர்ச்சி ஆகிய மானியக் கோரிக்கைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இம்மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. அதில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இம்மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப்

---

@ 317 முதல் 378 வரையிலான பக்கங்களில் இணைப்புகள்–I, II மற்றும் III ஆக அச்சிடப்பட்டுள்ளன.

@@ 379 முதல் 429 வரையிலான பக்கங்களில் இணைப்பு–IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. அதில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இம்மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம் தொடங்குகின்றது. இன்று 4 மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் 4 மானியக் கோரிக்கைகளின்மீதும் சேர்த்தே பேசலாம். இன்று மூன்று அமைச்சர்கள் தங்களது பதிலுரையை வழங்கவுள்ளதால், நேரத்தின் அருமை கருதி, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்திற்குள் தங்களது உரையை முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன். நீங்கள் பேசுவதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

***திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடரில் சுற்றுச்சூழல், வனத் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, பொதுத் துறை, தமிழ் வளர்ச்சி ஆகிய துறைகளின்மீதான மானியக் கோரிக்கை விவாதத்திலே எனது வாதங்களை எடுத்து வைக்க நல்வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த

@ 431 முதல் 497 வரையிலான பக்கங்களில் இணைப்பு-V ஆக அச்சிடப்பட்டுள்ளது.



எங்களின் இதயதெய்வம், உலக நாடுகள் எல்லாம் சென்னை மாநகரை திரும்பிப் பார்க்கின்ற வகையில் S.A.F. என்று சொல்லக்கூடிய தெற்காசிய நாடுகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளை நடத்திக்காட்டியவரும், நான்காம் தமிழாம் அறிவியல் தமிழ் கண்டவருமான மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என் நன்றிகளை காணிக்கையாக்கி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி எனது உரையைத் தொடங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறிவாற்றல் பொருந்திய தூய்மைமிக்க ஒரு நூறு இளைஞர்களே முன்வாருங்கள்; இந்த உலகையே மாற்றியமைக்கலாம்" என்றார் சுவாமி விவேகானந்தர். அவர் மேலும் சொன்னார், "வீர இளைஞர்களே, உத்தம குணம் வாய்ந்த நல்லோர்களே, தேச முன்னேற்றம் என்னும் தேர்ச் சக்கரத்தை உருட்ட உங்கள் தோள்களைக் கொடுங்கள். பெயருக்காகவோ, புகழுக்காகவோ அதுபோன்ற வேறு எந்த அற்ப விஷயத்திற்காகவோ, திரும்பிப் பார்க்க நில்லாதீர்கள். சுயநலம் என்பதை அறவே தூர எறிந்துவிட்டு, வேலையை செய்யப் புறப்படுங்கள்" என்றார். கீதையிலே சொல்லப்பட்டது, "கடமையைச் செய், பலனை எதிர்பாராதே" என்று.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எங்கள் அம்மா சொன்னார், இயக்கத்திற்கு உன் பணியைச் செய், பலன் பன்மடங்காக உன்னைத் தேடி வரும் என்று. உண்மை விசுவாசத்துடன் பணியாற்றிய எனக்கு சட்டமன்ற உறுப்பினர் என்ற வரலாற்றை உருவாக்கித் தந்தவர் எங்கள் அம்மா என்பதை நன்றியோடு பதிவு செய்து, விவாதத்திற்கு முன் எனது சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒரு சில பிரச்சினைகளைக் கோடிட்டுக் காட்டுகின்றேன்.

சென்ற இரண்டு வருடங்களாக நான் இந்த அவையிலே வலியுறுத்தி வருகின்ற 141-வது வட்ட மடுவங்கரை சக்கரபாணி தெரு மேம்பாலப் பணியை விரைந்து முடிக்கவேண்டும். ஜோன்ஸ் சாலை சுரங்கப்பாதைப் பணி வேகமாக நடைபெறவேண்டும். 132-வது வட்டத்திலே உள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். மழைக்காலங்களில் வெள்ளங்களில் இருந்து 132, 135, 136, 137, 138, 139

ஆகிய வட்டங்களில் வசிக்கும் மக்களைக் காப்பாற்றுகின்ற வகையிலே ஆற்றின் கரையோரம் தடுப்புச் சுவர் அமைக்கவேண்டும். மாம்பலம் கால்வாய், ரெட்டிக்குப்பம் கால்வாய் கரையோரம் தடுப்புச் சுவர் அமைக்கவேண்டும். அதேபோல 139-வது வட்டம் ஆற்றுமாநகர், 136-வது வட்டம் திடீர் நகர் ஆகிய பகுதிகளில் அடிக்கடி ஏற்படும் தீ விபத்துகளிலிருந்து அப்பகுதி மக்களைக் காப்பாற்ற அடுக்குமாடி வீடுகளைக் கட்டவேண்டும். சைதாப்பேட்டை தொகுதிக்குட்பட்ட 132-வது வட்டம் முதல் 141-வது வட்டம் வரை கழிவுநீர் இணைப்பு வசதி இல்லாத பகுதிகளைக் கணக்கெடுத்து உடனடியாக கழிவுநீர் இணைப்பு வசதி ஏற்படுத்தித் தரவேண்டும்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 137-வது வட்டத்தில் சி.ஐ.டி. நகர், கோ-கோ விளையாட்டு மற்றும் கூடைப்பந்து விளையாட்டு தளம் உடனடியாக அமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் மேம்பாட்டு நிதியைப் பொறுத்தவரை இப்போது சென்னையில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்தக்கூட நேரமில்லை என்று பத்திரிகையில் செய்திகள் வருகின்றன. ஆனால், விதிமுறைகள் என்ன சொல்கின்றன? எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்பதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள் மேம்பாட்டுப் பணியை இந்த அரசு செயல்படுத்தத் தடை விதிக்கின்றதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் 18-9-2006 அன்று 141-வது வட்டம் செங்கழனி அம்மன் கோயில் தெருவில் தார்ச் சாலை அமைப்பதற்காக பணி ஒதுக்கீடு செய்து, பணம் கொடுத்தும் இதுநாள் வரை அந்தப் பணி தொடங்கப்படவில்லை.

அதேபோல, 134-வது வட்டத்தில் சிறுவர் பூங்காவிற்கு விளக்கு வசதி அமைப்பதற்காக பண ஒதுக்கீடு செய்து, இதுநாள் வரை அந்தப் பணி தொடங்கப்படவில்லை. அதேபோல, சைதாப்பேட்டை மறைமலை அடிகளார் பாலம் அருகில் உள்ள பேருந்து நிலையத்தின் தரைப் பகுதியைச் சமன்படுத்தி பயணிகள் நிழற்குடையை விரிவுபடுத்த 11-4-2007 அன்று சுமார் 3.5 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து கடிதம் கொடுத்தும், இதுநாள் வரை அந்தப் பணிகள் தொடங்கப்படவில்லை.



அதுமட்டுமல்லாமல், இளம் குழந்தைகள் சுற்றுப்புற சுகாதாரத்தோடு வளரவேண்டுமென்பதற்காக, அங்கன்வாடி மையங்கள் 139-வது வட்டம், 136-வது வட்டங்களில் மைய எண் 920, 971, 952 ஆகியவற்றிற்காக 7-7-2007 அன்றும், 22-11-2007 அன்றும் பணிகள் தொடங்க எனது நிதியினை ஒதுக்கீடு செய்து கொடுத்தும், இதுநாள் வரை அந்தப் பணிகள் தொடங்கப்படவில்லை என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பக்கம் 70, பத்தி 155-ல், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து உடற்பயிற்சிக் கூடங்களைக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், எனது சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 138-வது வட்டம் ஏரிக்கரை சாலையில் புதியதாக ஒரு உடற்பயிற்சிக் கூடம் கட்டுவதற்கும், உபகரணங்கள் வாங்குவதற்கும் 7-7-2007 அன்று பரிந்துரை செய்து, சுமார் 21 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்தும், இதுநாள் வரை பணிகள் தொடங்கப்படவில்லை.

அப்பகுதியிலே வாழும், இளைஞர்கள் மற்றும் உடற்பயிற்சி ஆர்வலர்கள் தங்களுக்கு வசதியான இடத்தினைத் தேர்வு செய்தும், மாநகராட்சி உறுப்பினர் நிர்ப்பந்தத்தினால் அதிகாரிகள் வேறு இடத்தினைத் தேர்வு செய்கின்றனர். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து செய்யப்படும் பணிகள் சட்டமன்ற உறுப்பினர் தேர்வு செய்யும் இடத்தில், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தொடங்கப்படவேண்டும் என்பதை இங்கு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், உடற்பயிற்சிக் கூடங்களில் உடற்பயிற்சி உபகரணங்கள் வாங்குவதற்காக ரூ.2.34 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. ஆக மொத்தம், இந்த 2.34 கோடி ரூபாய் என்பது 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் பிரித்தால், ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு ஒரு இலட்சம் ரூபாய் என்ற அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஆனால், ஒரு உடற்பயிற்சிக் கூடத்திற்குத் தேவையான உபகரணங்கள் முழுமையான அளவில் வாங்க வேண்டுமானால், குறைந்தது நான்கு இலட்சம் ரூபாயை ஒதுக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டாயப் பணிகளுக்காக ஒதுக்கப்படும் ரூபாய் 60 இலட்சத்தில் சாலைகள் அமைத்தல், நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைக்க வேண்டும் என விதிமுறைகள் உள்ளன. சென்னையைப் பொறுத்தவரை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சாலைப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்தாலும், அந்தச் சாலைகள் எல்லாம் J.N.N.U.R.M. என்று சொல்லக்கூடிய Jawaharlal Nehru National Urban Renewal Mission என்ற திட்டத்தின் கீழும் B.S.U.P. என்று சொல்லக்கூடிய Basic Services for Urban Poor என்ற திட்டத்தின் கீழும் சாலைகள் போட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சாலைகள் போடுவதாகத் தெரிகின்றது. எனவே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சென்னையைப் பொறுத்தவரை, கட்டாயப் பணிகளில் சாலைகள் போடுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையினை அரசு உதவி பெறும் பள்ளிகள், சிறுபான்மையினர் நலப் பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கும், விளையாட்டு அரங்கங்கள் கட்டுவதற்கும் பயன்படுத்த வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கையை நாங்கள் வைத்தபோதுகூட, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு பரிசீலனையில் இருப்பதாகவும், இந்த ஆண்டு தீவிர பரிசீலனையில் உள்ளதாகவும் சொல்லியிருக்கிறார்கள். இந்த நிதி ஆண்டிலாவது அதைச் செயல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இளம் சிறார்களை, இளைஞர்களை, சிறு வயது முதலே உடல் வலிவு உள்ளவர்களாக, தைரியமானவர்களாக, எல்லாவற்றையும் வெல்பவர்களாக, எல்லா இன்னல்களையும், துன்பங்களையும் ஏற்பவர்களாக, தங்கள் காலிலே நிற்பவர்களாக உருவாக்குவதுதான் உடற்பயிற்சிகள். அதனை மேற்கொள்வதுதான் விளையாட்டுத் துறை. அதிலே மேம்படுவதுதான் இளைஞர் நலன். எனவே, விளையாட்டுப் பள்ளிகள், விளையாட்டு விடுதிகள், இந்த மாநிலத்திலே மூன்று, மூன்று இருப்பதை மாற்றி அனைத்து மாவட்டங்களிலும் தோற்றுவிக்கப்படவேண்டும். தரமான விளையாட்டுப் பயிற்றுனர்கள் நியமிக்கப்படவேண்டும். பள்ளிகளில் அந்தந்த வருடங்களில் காலியாகும் மற்றப் பிரிவு பாடங்களின் ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதைப்போல, உடற்பயிற்சி ஆசிரியர் பணியிடங்களையும் நிரப்பவேண்டும்.



குறிப்பாக, சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் காலியாக உள்ள உடற்பயிற்சி ஆசிரியர் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படவேண்டும். அப்பொழுதுதான் ஏழை வீட்டு மாணவ, மாணவியரும், உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்களாக உருவாகிடமுடியும். கல்லூரிகளில் உள்ள பிசிகல் இன்ஸ்ட்ரக்டர் பணியிடங்களை நிரப்பவேண்டும்.

*முற்பகல் 11-20*

பெரும்பாலும் இப்பொழுது பள்ளி, கல்லூரிகளில் விளையாட்டு நேரம் என்பது ஒதுக்கப்படுவதே இல்லை. அவ்வாறு விளையாட்டுக்கு என்று ஒதுக்குகின்ற நேரத்தைக்கூட மற்ற பாட ஆசிரியர்கள் அவர்களுடைய பாடங்களைப் பயிற்றுவிக்க எடுத்துக்கொள்வதால் மாணவ, மாணவியருக்கு உடற்பயிற்சி என்ற ஒன்று இல்லாது, சிறு வயது முதலே பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர்.

விளையாட்டுப் பள்ளிகளில் ஒரே ஒரு பயிற்றுனர் மட்டுமே உள்ளார். அவர் ஒருவரே அனைத்து விளையாட்டுகளையும் பயிற்றுவிக்க இயலாத நிலையில் உள்ளார். விளையாட்டுப் பள்ளிகளின் நோக்கமே தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்களை உருவாக்குவதுதான். ஆனால், பள்ளி குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளிலே அரசுப் பள்ளியான சென்னை ஒய்.எம்.சி.ஏ. பள்ளி செயின்ட் ஜோசப் தனியார் பள்ளியிடம் ஆரம்ப நிலையிலே தோல்வியடைந்துவிட்டது என்ற வருத்தமான செய்தியை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். விளையாட்டுப் பயிற்றுனர்களை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்து, விளையாட்டு நுணுக்கங்களைக் கற்கச் செய்து உலகத் தரம்வாய்ந்த வீரர்களை உருவாக்க வேண்டும் என்பதற்காகச் செய்தார்கள். ஆனால், இந்த இரண்டு ஆண்டு கால ஆட்சியிலே எந்த ஒரு விளையாட்டுப் பயிற்றுனரையும் வெளிநாட்டுப் பயிற்சிக்கு அனுப்பியதாகத் தெரியவில்லை என்பதையும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை தொகுதிக்குட்பட்ட வேளச்சேரி நீச்சல் குளத்திலே Water Recycling Plant அமைத்துத் தரவேண்டும். நீச்சல் குளத்தில் இதுநாள் வரை குடிநீர் இணைப்பு இல்லை. அதை ஏற்படுத்தித் தரவேண்டும்.

132-வது வட்டத்திலுள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானத்தில் பழுதடைந்துள்ள இறகுப் பந்து விளையாட்டரங்கத்தில் மரத்திலான விளையாட்டுத் தளம் அமைத்துத்தர வேண்டும். அதேபோல, 138-வது வட்டம் கோட்டூர் கார்டன்ஸ் பகுதியில் உள்ள விளையாட்டுக் கூடத்தில் பூப்பந்தாட்டம் விளையாட்டு விளையாடுவதற்கு மரத்தளத்தை உடனடியாக அமைத்துத்தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 20 x 20 என்ற கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியில் வீரர்களை உற்சாகப்படுத்துகிறோம் என்ற பெயரிலே இளம் பெண்கள் கண்டபடி கவர்ச்சி உடையில் நடனம் ஆடும் கலாச்சாரச் சீரழிவைத் தடுத்து நிறுத்தவேண்டும். இளைஞர்களைச் சீரழிக்கின்ற வீடியோ கேம்ஸ் சூதாட்டம் சென்னை மாநகரில் பெருகிவிட்டது. அதைக் கண்டிப்பாகத் தடுத்து நிறுத்தவேண்டும். NCC கண்டிப்பாக அனைத்துக் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

உடலிலும், மனதிலும் வலிமை தேவை. உடல் ஆரோக்கியமே பெரும் செல்வம். ஆரோக்கியமான உடலிலே மட்டுமே தூய உள்ளம் அமையும். அப்படிப்பட்ட தூய உள்ளம் படைத்தவர்களால் மட்டுமே நாட்டிற்கும், நாட்டு மக்களுக்காகவும் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் பணியாற்றமுடியும். அதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே விளையாட்டுத் துறையினை ஊக்குவிக்கின்ற வகையிலே காவல் துறை, தீயணைப்புத் துறை, வனத் துறை ஆகியவற்றில் 10 சதவிகிதம் தனி ஒதுக்கீடு அளித்தார்கள். G.O. Ms.No. 626, dated 23—07—2003, அதிலே கூறப்பட்டிருப்பது, "The Hon. Chief Minister has announced on the floor of the Legislative Assembly on 9-4-2003, that with a view to encourage and motivate sports persons to join the Police Department, a scheme would be launched during this year. For this purpose, a Special Selection Committee would be formed under the Chairmanship of the DGP, Chennai with the Chairman, Tamil Nadu Uniformed Services Recruitment Board, Member Secretary, Tamil Nadu Uniformed Services Recruitment Board and another nominee of the DGP as Members. This Committee will look after the selection of persons under the 10% sports quota". ஆனால் இன்றைய அரசு G.O.Ms. No.1795, dated 14-12-2007-ல் இந்த 10 சதவிகிதத்தை 5 சதவிகிதமாகக் குறைத்துவிட்டது. மீண்டும் அதை 10 சதவிகிதமாக உயர்த்த வேண்டும். தற்பொழுது காவல் துறைப் பணிகளுக்கு 14 விளையாட்டுகளுக்கு



முன்னுரிமை அளித்து வருகின்ற நிலையில், விதியினைத் தளர்த்தித் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுகளான Athletics, Veteran Athletics, Gymnastics, Aquatics, Tennis, Basket ball, Foot ball, Volley ball, Throw ball, Hockey, Women Hockey, Kabbadi, Kho-kho, Silambaattam, Boxing, Wrestling, Weight lifting, Shooting, Rowing, Fencing, Power lifting, Cycling, Body building, Judo, Karate, Taekwondo, Cycle Polo, Wushu, Cricket, Women's cricket, Squash, Badminton, Ball Badminton, Tennikoit, Yogasanam, Rugby, Carrom, Billiards & Snooker, Bridge, Golf, games under Sports Council of the Deaf போன்ற 45 விளையாட்டுகளுக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும் அல்லது காவல் துறையில் முன்னுரிமை அளிக்கப்பட்ட 14 விளையாட்டுகளில் 15 ஆவதாக கோ-கோ விளையாட்டினைச் சேர்க்கவேண்டும். ஏனெனில் இந்திய நாட்டிலுள்ள 44 விளையாட்டுகளில் 7 விளையாட்டுகளுக்கு மட்டும்தான் இந்திய ஒலிம்பிக் கழகம் முக்கியத்துவம் கொடுத்துள்ளது. அந்த 7 விளையாட்டுகளில் கோ-கோ, கபடி அடங்கும்.

அதுமட்டுமல்லாமல் கோ-கோ, கபடிக்கு மட்டும்தான் ஆண், பெண் இரு பாலரும் பங்கு பெறலாம் என்று கூறியுள்ளது. இந்தியா முழுவதும் பட்டி தொட்டியிலிருந்து மாநகரங்கள் வரை விளையாடக்கூடிய விளையாட்டு கோ-கோ, கபடி மட்டும்தான். ஆரம்பப் பள்ளி முதல் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்கள் வரை விளையாடக்கூடிய விளையாட்டு கோ-கோ, கபடி மட்டும்தான் என்பதைத் தங்களது கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் எல்லா விளையாட்டுகளுக்கும் மிகுந்த ஊக்கம் கொடுப்பதுமின்றி ஒப்பந்த அடிப்படையில் பயிற்றுநர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் கோ-கோ, கபடி விளையாட்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில்கூட நியமனம் செய்யாததுக் குறித்து மிகவும் வருந்துகிறோம். விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்ற விளையாட்டுகளுக்குக் கொடுக்கின்ற ஊக்கமும், ஆக்கமும் கோ-கோ, கபடி விளையாட்டுகளுக்குக் கொடுப்பதில்லை.

அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு விளையாட்டிற்கும் ஒவ்வொரு பயிற்றுநர் நியமித்துள்ள நிலையில், கோ-கோ, கபடி என்ற இரண்டு விளையாட்டிற்கும் ஒரே பயிற்றுநர்தான் நியமனம் செய்யவேண்டும் என்றுள்ளது. ஒரே பயிற்றுநரைக் கொண்டு இரண்டு விளையாட்டுகளில் பயிற்சிக் கொடுக்கும்படி NIS மூலம் இரண்டு

விளையாட்டுகளுக்கும் சேர்த்துச் சான்றிதழ் கொடுக்கப்படுகிறது. பயிற்றுநர்கள் பயிற்சி முடித்த 10 பேருக்கும் முதலாவது ஒப்பந்த அடிப்படையில் மற்ற விளையாட்டுகளுக்குக் கொடுப்பதுபோல பணி நியமனம் கொடுக்கவேண்டும்.

*முற்பகல் 11-25*

இன்றைய காலகட்டத்தில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில், இளைஞர்கள் தற்கொலை செய்வது உலகிலேயே இந்தியாவில்தான் அதிகம், அதிலும் தமிழகம் நான்காவது இடத்தில் உள்ளதாகத் தெரிய வருகிறது. அப்படி தற்கொலை செய்துகொள்பவர்களில் 43 சதவிகிதம் பேர் தேர்வு பயத்தால், 36 சதவிகிதம் பேர் பள்ளிகளில் பிரச்சினைகளால் தற்கொலை செய்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேர்வு பயத்தால் அல்லது தேர்வுத் தோல்வியால் யாரும் தற்கொலை செய்துகொள்ளக்கூடாது, அவர்களின் கால நேரமும் வீணாக்கப்படக்கூடாது என்பதற்காகத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடித் தேர்வு திட்டத்தைக் கொண்டு வந்தார் என்பதை இந்த நேரத்திலே நினைவு கூர்கின்றேன். இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே ஏற்படும் மன அழுத்தத்தை, விரக்தியை நீக்கிட பள்ளிகளில் கட்டாயமாக யோகா பயிற்றுநரை நியமிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சியைப் பற்றி இன்று பேசிக்கொண்டிருக்கிற அதேவேளையில், செம்மொழி ஆய்வு மையத்திற்காக மத்திய அரசிடம் இருந்து ரூ.76 கோடி பெற்றிருக்கின்ற இந்த நேரத்திலே, 10-7-1960 அன்று காட்டூரில் நடைபெற்ற கூட்டத்தில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்டுவது சாலப் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். தமிழ் இன உணர்ச்சியையும், தமிழ் மொழிமீது நமக்கு உள்ள பற்றையும், நம் தாய்மொழியை ஒழித்துக்கட்டவும், இந்தியைத் திணிக்கவும் அன்று மத்தியில் ஆட்சி செய்த காங்கிரஸ் அரசு முயற்சி எடுத்ததாகவும், அதில் ஒன்றுதான் மைல் கல்லில் இந்தியைப் புகுத்த முற்படுகிறார்கள், நம்மை அடிமைகள் என்று சொல்வதற்காகத்தான் மைல் கல்லில் இந்தியைப் புகுத்துகிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதை மறந்து—அண்ணாவை மறந்தவர்கள் அல்லவா—மறந்ததால்தானே எங்களின் புன்னகை மன்னன், பூவிழிக் கண்ணன், சத்துணவு தந்த சரித்திர நாயகர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அ.இ.அ.தி.மு.க.-வைத் தோற்றுவித்தார்! (மேசையைத் தட்டும் ஒலி)



இன்றைய மத்திய அமைச்சரவையில் கூட்டணியில் உள்ள திமுக-வைச் சேர்ந்த மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் தங்கள் ஆட்சிக்காக, அமைச்சர் பதவிக்காக, அடிமைகள் என்பதை நிரூபிக்கும் வகையில் தமிழக மைல் கல்லில் இந்தியைப் புகுத்த முற்பட்டார். சிங்க நிகர் தலைவி எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தும்கூட பதவிக்காகக் கண்டும், காணாமல் இல்லாமல் நாட்டுக்காக, மொழிக்காக, தமிழ் மொழி காக்க அதனை உடனே எதிர்த்தார்; மாண்புமிகு அம்மா அவர்களின் எதிர்ப்பைக் கண்டு மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை தமிழக மைல் கல்லில் இந்தியைப் புகுத்துவதை நிறுத்தியது என்பதை நினைவுகூர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று உலகில், இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில், தீவிரவாதக் குழுக்கள் நாளுக்கு நாள் வளர்ந்து வருவதாகச் செய்திகள் வருகின்றன. அதில் குறிப்பாக 17 வயது முதல் 25 வயதுக்குள்ளான இளைஞர்கள்தான் பெருமளவில் உள்ளதாகத் தெரியவருகின்றது. அப்படிப்பட்ட இளைஞர்களின் சக்தி எப்படிப்பட்டது என்பதை பேரறிஞர் அண்ணா அவர்கள் 3-6-1967 அன்று, கொடைக்கானலில் நடைபெற்ற மாணவ, மாணவிகளின் இந்தி எதிர்ப்பு மாநாட்டில் உரையாற்றும்போது ஒன்றைக் குறிப்பிட்டுள்ளார். 'மாணவர்களின் தீர்மானங்கள் பழுக்கக் காய்ச்சிய இரும்பாக இருக்கின்றன. அதைப் பொது மக்கள் வாளாக, வேலாக வடித்துத் தருகிறார்கள், என் வேலை அதைத் தண்ணீரில் போட்டு குளிர வைப்பது, மாணவர்களின் உணர்ச்சியை மதிக்கின்றேன். அதேநேரத்தில் அதைக் குளிர வைக்கின்றேன். அப்போதுதான் அறுவடை செய்யும் அரிவாள் கிடைக்கும், மரத்தைப் பிளக்கும் கோடரி கிடைக்கும், வண்டிக்கு உதவும் சாதனங்கள் கிடைக்கும்' என்று குறிப்பிட்டுள்ளார். இதை ஏன் இங்கே குறிப்பிடுகிறேன் என்றால், இன்றைய இளைய சமுதாயத்தை ஆற்றல் மிகுந்த, (மணியடிக்கப்பெற்றது) துடிப்பு மிகுந்த அந்த இளம் வயதினரை நல்வழிப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான், நாட்டுப்பற்று மிக்க, மொழிப்பற்று மிக்க அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இளைஞர் பாசறை, (மணியடிக்கப்பெற்றது) இளம் பெண்கள் பாசறை என்னும் அமைப்புகளை உருவாக்கி தாய் நாட்டிற்காகப் பணியாற்ற அவர்கள் பயிற்றுவிக்கப்படுகிறார்கள் என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

இப்போது தமிழகம் முழுவதும் கஞ்சா பெருகி வருவதாகச் செய்திகள் வருகின்றன. குறிப்பாக, மதுரையில் இளைஞர்களையும், கல்லூரி மாணவர்களையும் சீரழிக்கின்ற வகையிலே ஆப்பிள் கஞ்சா உலா வருவதாகத் தெரிய வருகிறது. இதைத் தடுக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். எதிர்காலம் இளைஞர்கள் கையில் உள்ளது என்று சொல்லி அவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்காமல் போதைமயமான எதிர்காலத்தை உருவாக்கிவிடக்கூடாது.

இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்பு முதலமைச்சராக இருந்தபோது மதுக் கடைகளைத் திறப்பதற்கு உத்தேசித்தபோது, அன்றைக்கு மூதறிஞர் இராஜாஜி தங்களை நேரில் சந்தித்து அன்றைய இளைஞர் சமுதாயம் பாழாக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக மதுக்கடைகளைத் திறக்க வேண்டாம் எனக் கேட்டதாகவும், நீங்கள் திறந்ததாகவும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செந்தமிழன். (குறுக்கீடு) இல்லை, உங்கள் குரல் ஒத்துழைக்கவில்லை. உங்கள் voice, active voice ஆக இல்லை.

**திரு. ஞா. செந்தமிழன்:** துரதிருஷ்ட வசமாக இன்று தமிழகத்தில் இலவசங்கள் என்ற பெயரில் மக்கள் வாழ்க்கை இருளடைந்த வாழ்க்கையாக மாறிவருகிறது. அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் அமைச்சரிடம் ஒரு கேள்வி. (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள், Chairperson ஒரு கேள்வி கேட்கவேண்டும். (குறுக்கீடு) Chairperson-க்கு ஒரு சந்தேகம்; கொஞ்ச நேரம் இருங்கள். மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரிடம் இருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புவது, காலையிலே 9-30 மணியில் இருந்து திரு. ஆசன ஆண்டியப்பன் இங்கே உட்கார்ந்து இருக்கிறார். ஏதாவது யோகாசனம் பற்றி special அறிவிப்பு இன்றைக்கு இருக்கிறதா என்று உங்களிடம் கேட்கிறேன்.

***மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் எதிர்பார்க்கிறபடி அறிவிப்புகள் இருக்கின்றன என்பது உண்மை. மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் இலவசமாகக்



கொடுப்பதெல்லாம் தவறு என்று சொல்கிறார். வேண்டாம் என்று சொல்கிறாரா? மக்களுக்குத் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. அவருக்கு குரல் ஒத்துழைக்கவில்லை, பாவம்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** இங்கே அவர் பேசும்போது, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஜிம்னாசியக் கட்டடம் கட்டப்பட வேண்டும் என்றும் ஒரு இலட்சம் ரூபாய்தான் ஒரு யூனிட்டுக்கு வருவதாகவும் சொல்லியிருக்கிறார். மேலும், 4 இலட்சம் வரை ஆகிறது என்றும் சொல்லியிருக்கிறார். ரூபாய் 4 இலட்சத்திலும் அமைக்கலாம், 40 இலட்சத்திலும் அமைக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு 4 இலட்சத்திலே அமைப்பது என்பது Treadmill போன்ற அமைப்புகளைச் சேர்ந்ததுதான். இப்போது இதுபற்றி இந்த அறிவிப்புகளிலும் வர இருக்கிறது. 1 இலட்சம் அல்ல, கிட்டத்தட்ட 234 தொகுதிகளிலே முதற்கட்டமாக 117 தொகுதிகளை மட்டும் எடுத்து, ஒரு தொகுதிக்கு 2 இலட்சம் ரூபாய் வீதம், அதற்கான உபகரணங்கள் வாங்கிக் கொடுப்பதற்காக அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னதுரை. (குறுக்கீடு) இல்லை, இல்லை. உங்களுக்கு குரல் ஒத்துழைப்புத் தரவில்லை. திரு. சின்னதுரை.

**திரு. கு. சின்னதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலக அரசியல் வரலாற்றில் தன்னிகரற்ற சமுதாயத்தின் தாயுமானவர், வனத் துறை மற்றும் சுற்றுப்புறச்சூழல், இளைஞர் நலன், விளையாட்டுத் துறையில் தமிழகத்தை முதல் இடத்திற்குக் கொண்டு வந்த முத்தமிழ் வித்தகர், தஞ்சை கண்ட தமிழ் முத்து, வறுமையை நீக்க வந்த பாரி வள்ளல், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழின் பெருமையை உலக அளவில் தரம் உயர்த்திட்ட செம்மொழிக் காவலர், குமரிமுனையில் பொய்யாமொழிப் புலவருக்கு வானுயர சிலையை வடிவமைத்த வாழும் வள்ளுவர்! உலகத்திற்கே வெளிச்சம் கொடுத்தது எடிசனின் மின் விளக்கு. உலகத்திற்கே தமிழ் செம்மொழியாக வேண்டுமென்பது உங்களின் இலக்கு. ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று இன்று மூன்றாவது சாதனை

ஆண்டில் அடியெடுத்து வைக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமர்ந்திருக்கும் திசையை நோக்கி வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அவை முன்னவரும், அரசியல் வரலாற்றில் அடக்கத்தின் அடித்தளமாக, நட்புக்கு இலக்கணமாக விளங்கும் அற்புத மனிதப் புனிதரும், தமிழக நிதித் துறை அமைச்சருமான எனது மதிப்பிற்கும், போற்றுதலுக்கும் உரிய மாண்புமிகு பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அருளாளர் ஆற்காட்டார் அவர்களுக்கும், திராவிடச் சிந்தனையில் எங்களையெல்லாம் அரவணைத்து வழிநடத்திச் செல்லும் ஒட்டுமொத்த தமிழர்களின் தன்னிகரற்ற தன்மானத் தளபதி, மகளிர் நலத்திற்கு மனநிறைவானத் திட்டங்களை கார்முகிலின் மாரியாய்ப் பொழிந்து மகிழ்ச்சியூட்டும் மாதர்குல மன்னவர், நல்லாட்சி நடத்தி வரும் உள்ளாட்சித் துறையின் உயிர்மூச்சு, எனது மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, (மேசையைத் தட்டும் ஒலி) நம்பிக்கை என்ற வார்த்தையின் நல் அகராதி, தலைவர் இட்ட கட்டளையைத் தடம் புரளாமல் உலகத்தரம் வாய்ந்த அதிநவீன சிறப்பு மருத்துவமனை மற்றும் சேலத்தில் இரயில்வே கோட்டம் அமைவதற்கு வியர்வை சிந்தி வித்திட்ட வீரத்தின் விளைநிலம், எங்களின் மாவட்டச் செயலாளர் எனது மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் நல்லாசியினைப் பெற்று, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், கொறடா அவர்களுக்கும், இந்த மாமன்றத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த எனது தலைவாசல் தொகுதி மக்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள காடுகள் உயர்ந்த தாவரம் மற்றும் உயிரினச் செல்வங்களின் களஞ்சியமாக விளங்குகின்றன. மதிப்பு வாய்ந்த வன உயிரின வகைகளையும், பலதரப்பட்ட காடுகளையும் கொண்டுள்ள நமது மாநிலம், இயற்கை வனப் பெருக்கம், நிலைத்த மேம்பாடு, மண் அரிமாணத்தைத் தடுத்து வேளாண்மையின் வளர்ப்புத் தாயாகவும் விளங்குகின்றன. கடலோர தொடர் தடுப்புத் தோட்டங்களும், சதுப்பு நிலக் காடுகளும், பேரலைகளிடமிருந்தும், புயல்களிடமிருந்தும் நம்மைக் காப்பதுடன், சுனாமி போன்ற இயற்கைப் பேரழிவுகளால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கவும், வனக் காடுகள் உதவுகின்றன. நிலைத்த மேம்பாடு குறித்த கலாச்சாரத்தில் முழுமையான அக்கறை கொண்டுள்ள நமது முத்தமிழ்



அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் பல்லுயிர் பரவல் வளத்தில் இந்தியாவிலேயே தமிழகம்தான் முதல் இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை இந்த அவைக்குப் பெருமையுடன் கூற விரும்புகிறேன்.

தரம் குன்றிய வனப் பகுதிகளை வளமாக்கும் நோக்குடன் தமிழகத்தில் முதன்முதலாக கூட்டு வன நிர்வாக முறையில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் (TAP) என்ற உயரிய உன்னதமானத் திட்டம் உயர்ந்த உள்ளமும், மனமும் கொண்ட நமது தலைவர் கலைஞர் அவர்களால் தமிழகத்தில் துவக்கப்பட்டது.

சர்வதேச ஜப்பான் கூட்டுறவு வங்கி உதவியுடன் 1997-98 ஆம் ஆண்டு முதல் சுமார் 500 கோடி ரூபாய் செலவில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்தின் பயனாக பல்வேறு மர வகைகளை உருவாக்குதல், தீவிர மண் வளப் பாதுகாப்பு மற்றும் நீர் வளத்தை அதிகரித்தல், வன உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், எரி மரம் போன்ற கிராம மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், இயற்கைச் சூழல் சமன்பாட்டை மீளச் செய்தல் ஆகியவை தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் தலையாய நோக்கமாகும் என்று நமது முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள்.

மேலும், இத்திட்டமானது, நீர்ப் பிரிமுகடு-Watershed அடிப்படையில் செயல்படுத்தப்படுவதால் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மேற்கொள்ளப்படும் மண் வளம் மற்றும் நீர் வளப் பணிகளினால் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து தங்குதடையற்ற நீர் வளம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த கிராமத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வழிவகை செய்யப்படுவதாலும், கிராம மக்களின் ஒத்துழைப்பு கிடைப்பதாலும் அருகிலுள்ள வனப் பகுதிகள் மேய்ச்சல் மற்றும் திருட்டு வெட்டுகளிலிருந்தும் பாதுகாக்கப்பட்டு இயற்கை வன உற்பத்தி பெருகி, சுற்றுப்புறச்சூழல் மேம்பாடு அடைந்ததோடு, 600 கிராமங்களில் வனத்தை நம்பி வாழ்க்கை நடத்தும் கிராம மக்களுக்கு மாற்று வேலைவாய்ப்புகளான கயிறு திரித்தல், செங்கல், ஊறுகாய், ஓயர்கூடை, தைலம், மெழுகுவர்த்தி, அகர்பத்தி, அப்பளம் தயாரித்தல், பாய்முடைதல், மீன், தேனீ, காளாண் வளர்த்தல், தையல் பயிற்சி, ஓட்டுநர் பயிற்சி போன்ற வருவாய் ஈட்டித்தரும் தொழில்கள் பற்றி நிதியுதவியுடன் கிராம மக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு நிரந்தர வருமானம் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது, இந்தியாவிலேயே தமிழகத்தில் நமது தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் மட்டும்தான் என்பதை இந்த அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-35

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத் துவக்கத்தின் முதலாம் ஆண்டான 1997-1998-ல் ரூபாய் 40.20 கோடி செலவில் 200 கிராமங்களைச் சுற்றி 61.014 ஹெக்டேர் பரப்பளவிலும், 198 கிலோ மீட்டர் நீளத்திலும், இரண்டாம் ஆண்டான 1998-1999-ல் 95.20 கோடி ரூபாய் செலவில் 200 கிராமங்களைச் சுற்றி 88.548 ஹெக்டேர் பரப்பளவிலும், 300 கிலோ மீட்டர் நீளத்திலும், மூன்றாம் ஆண்டான 1999-2000-ல் ரூபாய் 95.48 கோடி செலவில் 200 கிராமங்களைச் சுற்றி 75.407 ஹெக்டேர் பரப்பிலும், 400 கிலோ மீட்டர் நீளத்திலும், நான்காம் ஆண்டான 2000-2001-ல் 75.450 ஹெக்டேர் மற்றும் 300 கிலோ மீட்டர் பரப்பளவில் ரூபாய் 107.6 கோடி செலவில் தரம் குன்றியக் காடுகளைச் சுற்றியுள்ள 200 கிராமங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, திட்டம் முன்னேற்றம் கண்டதும் இந்தியாவிலேயே தமிழகத்தில் தலைவர் கலைஞர் ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் ரூபாய் 567 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் ரூபாய் 115 கோடி செலவில் இத்திட்டத்தின்கீழ் வனப் பகுதியை ஒட்டியுள்ள 230 கிராமங்களில் 1,27,260 ஏக்கர் பரப்புள்ள தரம் குன்றியக் காடுகள் மேம்படுத்தப்பட்டு, வனப் பகுதிகளுக்கு அருகிலுள்ள விவசாய நிலங்களிலுள்ள பயிர்களை வன விலங்குகள் சேதப்படுத்துவதைத் தடுக்கும்பொருட்டு 181 கிலோ மீட்டர் நீளத்திற்கு சூரிய மின் வேலி அமைக்க ரூபாய் 290 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது, நமது தலைவர் கலைஞர் ஆட்சியில்தான்.

தமிழகத்தில் மொத்த வனப் பரப்பில் 3,840 சதுர கிலோ மீட்டர், வன உயிரினங்கள் பாதுகாப்புப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 8 வன உயிரினச் சரணாலயங்களும், 5 தேசியப் பூங்காக்களும், 12 பறவைகள் சரணாலயங்களும் உள்ளன. நீலகிரி, மன்னார் வளைகுடா, அகத்திய மலை ஆகிய இடங்களில் உயிர்ச் சூழல் காப்பகங்கள் உள்ளன. பழங்குடியினர் பகுதிகளில் வனத் துறை 19 பள்ளிகளை நடத்தி வருகிறது. சுமார் 5,000 மாணவ மாணவியர்கள் பயில்கின்றனர். பள்ளிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. பள்ளிகளில் உள் கட்டமைப்பு மேம்பாட்டு நிதிமூலம் ரூபாய் 5.07 கோடி செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டு, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி உதவியுடன் 2007-2008 ஆம் ஆண்டு முதல் நிறைவேற்றப்படும் என அறிவிக்கப்பட்டது.



மகளிர் நலத்திற்காகப் பாடுபடும் நமது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், வனங்களைப் பாதுகாக்க மகளிர் பங்கேற்பு அவசியம் தேவைப்படுவதால், 2006-2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 1,707 கிராமங்களில் 5,067 மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இந்தக் குழுக்கள் பால் பண்ணைத் தொழில், சோப்புத் தயாரித்தல், உணவு பதப்படுத்துதல், காய்கறி வளர்ப்பு மற்றும் விற்பனை போன்ற பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இடைநிலை மேம்பாட்டுப் பணிகளுக்கான நிதியிலிருந்து ரூ.5,000/- வரை தனி நபர்களுக்கு நிதியுதவி, கிராமப்புற மேம்பாட்டு நிதியிலிருந்து சுழற்சி முறையில் கடனுதவி மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மகளிர் திட்டம்மூலமாகத் திறமைகளை வளர்த்துக்கொள்வதற்கானப் பயிற்சி போன்ற பல்வேறு உதவிகள் வனத் துறைமூலமாக சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்குச் செய்யப்படுகின்றன நமது கழக ஆட்சியில்.

உலக வங்கி உதவியுடன் அவசரகால சுனாமி மறு சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 2,850 ஹெக்டேர் பரப்பில் கடலோரத் தொடர் தடுப்புக் காடுகளும், 1,500 ஹெக்டேர் பரப்பில் சதுப்பு நிலக் காடுகளும், ரூபாய் 14.30 கோடி செலவில் உருவாக்கப்பட்டு, அதிகரித்துவரும் மனித வள உயிரின மோதலைத் தவிர்க்கவும், வன உயிரினப் பாதுகாப்பில் பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெறவும், வனங்களின் எல்லையோரம் 162.50 கிலோ மீட்டர் தூரம் சூரிய மின் வேலி அமைப்பதற்காக ரூபாய் 4.24 கோடி அனுமதிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. வன உயிரினங்களால் ஏற்படும் சேதாரத்திற்கான இழப்பீடு வழங்க மொத்தம் ரூ.99.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, இதில் மாநில அரசால் அளிக்கப்பட்ட ரூ.50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து வனத் துறையின் வரலாற்றிலேயே மிகவும் அதிகபட்சத் தொகையை ஒதுக்கியது இந்தியாவிலேயே தமிழகத்தில் நமது தலைவர் கலைஞர் ஆட்சியில்தான் என்பதை இந்த அவைக்குப் பெருமையுடன் கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மாவட்டத்திற்கொரு வன விரிவாக்க மையம், மாநில வன ஆணையம் உருவாக்கி இந்தியாவிலேயே தமிழகம் முதல் மாநிலமாகத் திகழ்வதற்குண்டான பெருமை நமது முத்தமிழறிஞர் மாண்புமிகு முதல்வர் அவர்களையே சாரும்.

சென்னைக்கு அருகேயுள்ள வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா அதன் அமைவிடச் சிறப்பினால் இரவுக் கானக உலா அமைப்பதற்குப் பொருத்தமான இடமாக உள்ளது. வண்டலூர்

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் இரவுக் கானக உலா அமைப்பை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டு, இதற்காக விரிவானத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, 2007-2008 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள்.

வானம் பொய்த்ததற்குக் காரணம் வன அழிவே. எனவே, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது ஒரு நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பாகும். பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் தேவைகளுக்கு இடையே இணக்கமான சமச்சீரான தன்மை சமுதாயத்தால் காக்கப்பட வேண்டும் என்ற சீரிய நோக்கத்தில், தோல் பதனிடும் தொழிற்சாலைகளால் ஏற்படும் மாசுக்கேட்டினைத் தடுத்திட—தோல் பதப்படுத்தல் மற்றும் தோல் பொருள் உற்பத்தி தமிழகத்தின் தொழில் துறையில் நீண்ட காலமாக ஒரு முக்கியப் பங்கு வகித்து வருகிறது. இத்துறையால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசினைச் சரிசெய்யும் வகையில்—ரூபாய் 115 கோடி மதிப்பீட்டில் 11 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் Reverse Osmosis சாதனங்களை அமைப்பதற்கு நிதியுதவி கோரி, மாண்புமிகு பாரதப் பிரதமரிடம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் நேரடியாக வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

முற்பகல் 11-40

சாயத் தொழிற்சாலைகளின் கழிவு நீரால் ஏற்படும் மாசுக் கேட்டை தடுத்திட 22 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுமதியளித்துச் செயல்பட்டு வருகின்றன. மேலும், ஜவ்வரிசி ஆலைகளால் ஏற்படும் மாசுக் கேட்டைத் தடுத்திட பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை உருவாக்கும் திட்டத்திற்கு உதவித் தொகை அளிக்கவேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டது நமது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில்தான்.

சென்னை உள்ளிட்ட ஒன்பது மாநகராட்சிகளிலும் ஈரோடு, குமாரபாளையம், பவானி, பள்ளிப்பாளையம் ஆகிய நகரங்களிலும் காற்று, நீர், ஒலி ஆகியவற்றால் ஏற்படும் மாசினைக் கட்டுப்படுத்திடவும், இந்த நகரங்களில் முக்கியச் சாலைகளின் இரு மருங்கிலும் பிற இடங்களிலும் சிறப்பு வகை மரங்களை நட்டுப் பராமரித்திடும் வகையில் மரம் வளர்த்து மாசினைக் குறைக்கும், சுற்றுச்சூழல் மேம்படுத்தத் திட்டம் அமைத்த பெருமை நம் காவியத் தலைவர் கலைஞர் அவர்களையே சாரும்.



சுற்றுச்சூழல் பணிகளில் சிறப்பாகப் பங்கேற்ற அரசுசாரா நிறுவனங்கள், வல்லுநர்கள் மற்றும் தனி நபர்கள் ஆகியோரை அங்கீகரித்து விருதுகள் வழங்கப்படுகின்றன. இவ்விருதுகள் 1999 ஆம் ஆண்டு முதல் துவக்கப்பட்டு உலகச் சுற்றுச்சூழல் தினமான ஜூன் 5 ஆம் தேதி அன்று ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருவது இந்தியாவிலேயே தமிழகத்தில் தலைவர் கலைஞர் ஆட்சியில் மட்டும்தான் என்பதைப் பெருமையுடன் கூற விரும்புகிறேன்.

ஒவ்வொரு ஆண்டும் தைத் திங்கள் முதல் நாளன்று தமிழ்ச் சமுதாயத்தின் மக்களையும், சூழல் மன்ற உறுப்பினர்களையும் ஈடுபடுத்தி கலை நிகழ்ச்சிகள், கிராம விளையாட்டுகள் மற்றும் பல்வேறு போட்டிகளை நடத்தி சமத்துவப் பொங்கலென சூழல் மன்றங்களால் கொண்டாடப்பட்டு வருவது, நமது சமத்துவப் பெரியார் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் மட்டும்தான்.

இளைஞர்களை ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்திடவும், சிதறிக் கிடக்கும் அவர்கள் ஆற்றலைத் திரட்டிடவும், அவர்களை மன உறுதி மற்றும் உடல் உறுதி படைத்தவர்களாகவும், எதிர்கால வாழ்வை நம்பிக்கையோடு எதிர்கொள்பவர்களாகவும் உருவாக்கும் பெரும் பொறுப்பை நிறைவேற்றிட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டிற்காகத் தனித் துறையை உருவாக்கியது நமது தலைவர் கலைஞர் ஆட்சியில்தான்.

இளைஞர்களிடையே அறிவியல் முனைப்பு, மத, சமூக, நல்லிணக்கம், நல்லொழுக்கம் மற்றும் சமுதாய விழிப்புணர்வை மேம்படுத்தவும் அவர்களுக்குக் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவும் அரிய பல திட்டங்கள் தோற்றுவித்தது நமது கழக ஆட்சியில்தான்.

தமிழகத்தில், நமது தலைவர் கலைஞர் ஆட்சியில், இந்தியாவிற்கே ஒரு முன்னுதாரணமாக, அனைத்து ஊராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் இளைஞர் நலன் மற்றும் பொழுதுபோக்கு மையங்கள், கலைஞர் இளைஞர் சுய வேலைவாய்ப்புத் திட்ட நிதி நிறுவனம் ஒன்று துவக்கப்பட்டு செயல்பட்டுக்கொண்டு வருகிறது. மேலும், தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் தமிழகத்தின் புகழை நிலைநாட்டும் விளையாட்டு வீரர்களுக்குத் தொடர்ந்து ஊக்கம் தந்து ஆதரவு அளிக்கக்கூடியது நமது தலைவர் கலைஞர் அரசு என்பதை இந்த அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கிராமப்புற இளைஞர்களின் உடல்நலம் பேணுவதோடு, அவர்களுடைய விளையாட்டுத் திறனையும் மேம்படுத்தும் வகையில் இளைஞர்கள் பெரிதும் விரும்பும் விளையாட்டுகளான கிரிக்கெட், கால்பந்து, கையுந்துப் பந்து போன்றவற்றிற்கான விளையாட்டு உபகரணங்கள் ரூ.5 கோடி செலவில் மாநிலத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து, அத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. (மணியடிக்கப்பெற்றது)

தொகுதியிலிருந்து சில கோரிக்கைகளை இந்த அவையில் நான் பதியவைக்க விரும்புகின்றேன்.

எனது தலைவாசல் தொகுதி மிகவும் பின்தங்கியுள்ளதால், ஒரு புதிய தொழிற்சாலை அமைத்துத்தர வேண்டும். அரசு பாலிடெக்னிக், அரசு பொறியியல் கல்லூரி மற்றும் மகளிர் கலைக் கல்லூரி அமைத்துத்தர வேண்டும். தலைவாசல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தித்தர வேண்டும். வீரகனூர் பேரூராட்சியில் ஒரு துணை சார்-பதிவாளர் அலுவலகம் அமைத்துத்தர வேண்டும். வீரகனூர் பொன்னாளி அம்மன் கோயில், தம்மம்பட்டி சேரடி, கடம்பூர் கழுங்குமலை-3 நீர்த்தேக்கப் பகுதியிலும் அணைக்கட்டுத் திட்டம் அமைத்துத்தர வேண்டும். தெடாவூர் பேரூராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் புதிதாக அமைத்துத்தர வேண்டும். எனது சொந்த ஊரான கூடமலையில் 110 K.V.A. அறிஞர் அண்ணா நூற்றாண்டு துணை மின் நிலையம் அமைத்துத்தர வேண்டும்.

கெங்கவல்லி வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் தலைமையிடமாக இருப்பதால், அந்தப் பேரூராட்சிக்குப் புதிய பேருந்து நிலையம், ஒரு சார்நிலைத் துணைக் கருவூலம், ஒரு தீயணைப்பு நிலையம், ஒரு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் புதியதாக அமைத்துத்தர வேண்டும். மேலும், அங்கு 2,000 முதல் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத்தர வேண்டும்.

தம்மம்பட்டியில் ஓர் உழவர் சந்தை அமைத்துத்தர வேண்டும். கவர்பனை மற்றும் வீரகனூர் தென்கரை சுவேத நதிப் பகுதியில் ஒரு உயர்மட்டப் பாலம் கட்டவேண்டும்.

எனது தலைவாசல் சட்டமன்றத் தொகுதியில் உள்ள பச்சமலையில் வன ஓய்வில்ல அலுவலகம் ஒன்று கட்டித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.



எனது சொந்த ஊர் கூடமலையிலிருந்து நரிப்பாடி, நினங்கரை வழியாக பச்சமலையில் உள்ள மாயம்பாடிக்கு ஒரு புதிய சாலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். தம்மம்பட்டியில் வனச் சரக அலுவலகத்தில் உள்ள ஓய்வில்லக் கட்டடத்தினைப் புதுப்பித்து சுற்றுச்சுவர் அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு, ஐந்தாவது முறையாக அரியணை ஏறி, 52 ஆண்டுகள் சட்டமன்றத்தில் பணியாற்றி பொன் விழா கண்ட ஒரே தமிழர், ஆட்சிப் பொறுப்பில் இருந்திட்டபோதிலும், எதிர்க்கட்சிப் பொறுப்பில் இருந்திட்டபோதிலும் சட்டமன்ற நடவடிக்கைகளுக்கு இலக்கணம் வகுத்து பொதுவாகவே தமிழகத்தில் தொழில் வளத்தை பெருக்கவேண்டும், நீர் வளத்தைக் காப்பாற்றவேண்டும் என்று, தமிழக மக்களுடைய வளத்தை எண்ணிப் பார்க்கக்கூடிய சிந்தைமிகு தாயுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள், வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலாரின் வாட்டத்தினைப் போக்கி, இன்று வளம் கொழிக்கும் வனமாகத் தமிழகத்தின் காடுகளை மாற்றியமைத்து சுற்றுச்சூழலைப் பாதுகாத்து,

*"நீரின் றமையா துலெகெனின் யார்யார்க்கும்*
*வானின் றமையா தொழுக்கு"*

என்ற அய்யன் திருவள்ளுவரின் குறளுக்கேற்ப ஆட்சி நடத்தும் தலைவர் கலைஞர் அவர்கள், இன்னும் 100 ஆண்டுகள் வாழ்ந்து தமிழகத்தை வழி நடத்திச் செல்லவேண்டுமெனக் கூறிக்கொண்டு, மீண்டும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

*முற்பகல் 11-45*

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சட்டப் பேரவையிலே சுற்றுச்சூழல், வனத் துறை, பொதுத் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு ஆகிய மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு வாய்ப்புத் தந்த தங்களுக்கும், சட்டப் பேரவையினுடைய காங்கிரஸ் தலைவர் அவர்களுக்கும், நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் ஐந்தாவது முறையாகப் பொறுப்பேற்று, இன்றைக்கு இரண்டு ஆண்டுகளைக் கடந்து,

மூன்றாவது ஆண்டிலே அடியெடுத்து வைத்திருக்கிற இந்த நன்னாளிலே நான் பேசுவதற்கு எனக்கு வாய்ப்புத் தந்த உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரியப்படுத்தி, என்னுடைய தொகுதியினுடைய மக்களுக்கும் என்னுடைய நன்றியினைச் சொல்லி, பல்வேறு கருத்துகளை இங்கே பதிய வைக்க விரும்புகிறேன்.

சுற்றுச்சூழல் என்பது வருங்காலச் சந்ததியினருக்கு நாம் விட்டுப் போகிற சொத்து. எதற்காக இதைச் சொல்கிறேன் எனில், இன்றைய சுற்றுச்சூழலால் உலகம் வெப்பமடைதல், Global warming என்கின்ற நிலை ஏற்படப் போகிறது என்று அனைவரும் எச்சரித்து வருகின்றனர். இது எவ்வாறெனில் காற்று, நீர், நிலம், வான்வெளி, அனைத்தும் இன்று மாசுபட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, 750 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட எனது தொகுதியிலே உள்ள காளிங்கராயன் வாய்க்காலில், ஈரோட்டிலே உள்ள தோல் தொழிற்சாலைகள், சாயப் பட்டறைக் கழிவுகள் ஆகியவை மொத்தமாகக் கலக்கிற காரணத்தினாலே, இதன் பாசனத்தை நம்பியுள்ள சுமார் 25,000 குடும்பங்கள், அதாவது கிட்டத்தட்ட 75,000 பேர் மாசுபட்ட நீரால் விவசாயம் பாதிக்கப்பட்டு, கால்நடைகள் பாதிக்கப்பட்டு, மனிதர்களும் பாதிக்கப்பட்டு, இந்த நீரால் பொதுமக்கள் பலர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு, மேலும், பலர் தோல் வியாதிகளாலும், விவரம் தெரியாத வியாதிகளாலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று சொன்னால், இதனடிப்படையில் நாங்கள் குறிப்பாக எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர்கள், எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள், கொடுத்த வேண்டுகோளை ஏற்று, நம்முடைய தமிழகத்தினுடைய உள்ளாட்சித் துறை அமைச்சர், மரியாதைக்குரிய அண்ணன் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களும், மரியாதைக்குரிய மாண்புமிகு முத்தமிழறிஞர் முதல்வர் அவர்களும், இப்போது திருப்பூரிலேயிருந்து சாயக் கழிவுகளை வெளியேற்றுவதற்கு, 700 கோடி ரூபாய்க்கான திட்டத்தை, கடலில் சேர்க்கிற திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பழனிசாமி, pollution-ல் emotional ஆகப் பேசவேண்டாம். (குறுக்கீடு) மெதுவாகவே பேசலாம்.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** எங்கள் பகுதி மக்கள் சார்பிலே நான் முதல்வர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் திட்டத்தை உடன் செயல்படுத்த எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, அதனால் விவசாயிகள் வாழ்வில் ஒரு எதிர்கால நம்பிக்கையை உருவாக்க வேண்டும் என்றும், அதேபோல ஜவுளித் தொழிலையும் காக்க இந்த நடவடிக்கை கை கொடுக்கும் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.



இந்த சாயக் கழிவுத் திட்டத்தில் திருப்பூர், ஈரோடு, பெருந்துறை, பவானி, குமாரபாளையம், கரூர் ஆகிய பகுதிகளையும் இணைத்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரத்துப்பாளையம் அணை நீரால் பாதிக்கப்பட்ட அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அரசு குறைந்தபட்ச நஷ்ட ஈட்டினை, அந்த பாதிக்கப்பட்ட நிலங்களுக்காகத் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மாசுக் கட்டுப்பாட்டிலே கவனம் செலுத்தவில்லையெனில், தமிழகம் முழுவதும் ஒரு நாள், இன்று எங்கள் பகுதி, வேலூர் பகுதியில் ஏற்பட்டிருக்கிற பாதிப்பு என்பது தமிழகத்தையே ஒரு நாள் ஆட்கொள்ளும் என்கின்ற சூழ்நிலை ஏற்படும் என்று, நான் எச்சரிக்க விரும்புகிறேன்.

இயற்கை வளம் செரிந்த நொய்யல் ஆறு, தூய சுவையான குடிநீரைக் கொண்டிருந்தது. விவசாயத்திற்கு நீரைக் கொடுத்து, கோவையிலிருந்து கொடுமுடி, நொய்யல் வரை சென்ற அந்த ஆறு இன்றைக்கு ஈஸ்ட்மேன் கலரில், அந்த திருப்பூர் சாயக் கழிவுகளைக் கொண்டு செல்கிறது என்று சொன்னால், நான் அரசைக் கேட்பதெல்லாம் நாம் ஒருவரை அடித்தால் அல்லது ஒருவருக்கு பாதகம் செய்தால், குற்றவியல் சட்டம்மூலம் தண்டனை கிடைக்கிறது. ஆனால், குடி தண்ணீர், விஷம் கலந்த சாயக் கழிவுகளைக் கலந்து, ஒன்றும் அறியாத விவசாய அப்பாவி மக்களைப் புற்றுநோயால், தோல் வியாதிகளால், மேலும் பல்வேறு வியாதிகளால் உயிரைப் பறிக்கிற இந்தச் சுற்றுச்சூழலை மாசுபடுத்துபவர்களுக்கு அரசு என்ன தண்டனை அளிக்கப்போகிறது என்றும் நிற்கதியாக நிற்கிற அந்த விவசாயக் குடும்பங்களுக்கு யார் ஆறுதல் கூறுவது, பழைய நிலையை அவர்களுக்கு யார் பெற்றுத் தருவார்கள் என்று இந்த மாமன்றத்திலே நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம், சாயக் கழிவுகளை நதிகளிலே, கால்வாய்களிலே கலப்பவர்களுக்கு வெறும் மின் துண்டிப்பு அல்ல, ஆலையை மூட உத்தரவு அல்ல, குற்றவியல் நடவடிக்கை எடுத்து

தண்டனையைப் பெற்றுத்தர இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வனத் துறை சார்பிலே பல விவரங்களை இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன். அதிலே முக்கியமான விவரம் வனத் துறை மக்களுக்காக, வனத்தைக் காப்பாற்ற ஏற்படுத்தப்பட்ட சட்ட திட்டங்கள் இன்று மக்களுக்குத் தேவையான சில பல திட்டங்களைச் செயல்படுத்த முழுமையாகத் தடையாக உள்ளன என்றால், அதற்குரிய சட்ட திட்டங்களை மாற்றினால் தவறில்லை என்பதுதான் எனது கோரிக்கை. இதில் உள்ள விவரங்களை இந்தச் சபையிலே பதிய வைக்க விரும்புகிறேன். உதாரணத்திற்கு ஒரு சாலை, வன கிராமத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் அல்லது நெடுஞ்சாலைத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால் அல்லது பொதுப் பணித் துறை ஒரு பணியைத் துவங்க வேண்டுமென்று சொன்னால், அதில் மக்களுக்குத் தேவையான திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்றால், ஒரே பதில் வனத் துறை அனுமதி மறுப்பு மட்டுமே, வேறு எதுவும் கிடையாது. ஆக, வனத்தில் தேவையானவற்றிற்கு அனுமதியளிக்க ஓர் சட்டம் இயற்ற மத்திய அரசும், நம்முடைய மாநில அரசும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏனெனில், அடிப்படை வசதிகூட செய்ய இயலாத நிலையில் உள்ளதால், எந்தக் கட்டமைப்புப் பணியும் வனப் பகுதிகளில் செய்யமுடியாத சூழ்நிலை உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-50*

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. கு. பிச்சாண்டி தலைமை)*

வனத் துறையில் குறிப்பாக, யானைகளுக்கு சத்தியமங்கலம் பகுதியில் குடிநீருக்குக் கட்டப்படுகிற தொட்டிகள், உள் பகுதியிலே அமைக்காமல் சாலையின் ஓரங்களிலே அமைத்துள்ளதில் என்ன உள் நோக்கம் எனத் தெரியவில்லை. அதன் காரணமாக யானைகள் அடிக்கடி ரோட்டிற்கு வருவது வாடிக்கையாகிவிட்டது. இதற்குக் காரணம் துறை சார்ந்தவர்களின் தவறானத் திட்டமிடல்தான் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏனெனில், இதையெல்லாம் குறிப்பிட்டு, வன விலங்குகள் பாதுகாப்பு எனக் கூறி, தற்சமயம் அந்தப் பகுதியிலே 75 ஆண்டுக் காலத் திட்டமான சத்தியமங்கலம்-சாம்ராஜ் நகர் இரயில் திட்டம் வனத் துறையின் சார்பில் ஏற்படுத்தப்பட்ட எதிர்ப்பால்—கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கு முன்பு அந்த இரயில் திட்டத்தின் மதிப்பு 636 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இப்பொழுது இந்த ஆண்டு மறு மதிப்பீடு செய்து, 1,386 கோடி ரூபாய் என்று அரசு அறிவித்திருக்கிறது என்று சொன்னால் இதிலே ஏற்பட்டிருக்கிற வித்தியாசம் சுமார் 700 கோடி ரூபாய். எதற்காக இதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்று சொன்னால், இதைப்போல வனத் துறையிலே ஏற்படுகிற தாமதம், தேவையானவற்றிற்கு அனுமதி மறுப்பது ஆகியவற்றால் மக்களுக்குக் கிடைக்கவேண்டிய திட்டங்களும், பணிகளும் கிடைப்பதில்லை. அதோடு அதனால் காலதாமதம் ஏற்பட்டு திட்ட மதிப்பீடு அதிகப்படுகின்றது. இந்தக் காலதாமதம், அனுமதி மறுப்பிற்கு மத்திய அரசிடம் மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பேசி என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதை எடுத்து தமிழக மக்களுக்கு வனப் பகுதிகளில் என்னென்ன நலத் திட்டங்கள் வந்து சேர வேண்டுமோ அவற்றைப் பெற்றுத்தர வேண்டும்; அவை மக்களைச் சென்றடைய நம்முடைய முதல்வர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே இந்த மாமன்றத்திலே வலியுறுத்தி, அதேபோல இந்தியாவினுடைய உச்ச நீதிமன்றத்தின் . . .



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் சத்தியமங்கலம்-சாம்ராஜ் நகர் இரயில்வே பாதை அமைப்பதிலே காலதாமதம்; வனத் துறையின் காரணமாகத்தான் கிட்டத்தட்ட 700 கோடி ரூபாய் அதிகமாகியிருக்கிறது என்று சொன்னார். தலைவர் கலைஞருடைய ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு அவரும், அவருடைய மாவட்டத்தைச் சார்ந்த மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், அதைப்போலவே சத்தியமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் அவர்களெல்லாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க உடனடியாக எங்களுடைய துறையின் சார்பாக, பல எதிர்ப்புகள் இருந்தாலும்கூட, மக்களுடைய நலன் கருதி, அந்தத் திட்டத்திற்கு நாங்கள் அந்த நில அளவை செய்யலாம் அல்லது சர்வே செய்யலாம் என்பதற்காக அதற்கு அனுமதி தந்திருக்கிறோம். ஆனால், அவர்கள்தான் இரயில்வே துறையின் சார்பாக உச்ச நீதிமன்றத்திடம் சென்று—ஏனென்றால் இயற்கையாக வளர்ந்த மரங்களை வெட்ட வேண்டும்; அங்கே அது

வனச் சரணாலயம், உயிரினங்களுடைய சரணாலயமாக இருக்கின்ற காரணத்தால், அந்த அனுமதியெல்லாம் பெறவேண்டும். அதனாலே இப்பொழுது ஏற்படுகின்ற காலதாமதம் எல்லாம் இரயில்வே துறையினால். எனவே, அவர் அவருடைய கட்சி மத்திய அமைச்சரிடம் சொல்லி விரைவாக நடவடிக்கை எடுக்க ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. உண்மையிலேயே அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் கோரிக்கையை ஏற்று பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார்கள். நான் எதற்காக இங்கே இதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்று சொன்னால், அந்த Empowered Committee என்கின்ற அந்த Committee-யானது அங்கே கொடுக்கப்பட்டிருக்கிற petition-களை, அதாவது வன விலங்குகள் பாதுகாப்புக் குழுவால் கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்த petition-ஆல் இன்றைக்கு அதை நிறுத்தி வைத்திருக்கிற சூழ்நிலை உள்ளது. அதைத்தான் இன்றைக்கு இதிலேகூட குறிப்பிட்டுச் சொல்ல இருக்கிறேன். இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தில் உயர் மட்டக் குழு, Empowered Committee என்பது வனத் துறைக்குத் தேவையான பரிந்துரைகளை, அதேபோல சுற்றுச்சூழல் துறைக்கும் பரிந்துரைகளை அளித்துக் கொண்டிருக்கிறது. அதன்பின்னர் மத்திய வனம், சுற்றுச்சூழல் துறை அனுமதி வழங்குகின்றது. காரணம் அந்த Empowered Committee-யினுடைய அனுமதி பெற்றுத்தான் செய்ய முடியும். தனி, individual body ஆக அது அங்கே இயங்கிக் கொண்டிருக்கிறது. இதிலே ஓர் முடிவெடுத்து, அனுமதி வழங்குகிற அதிகாரத்தை மத்திய அரசிற்குக் கொடுக்க வேண்டுமென்கின்ற கோரிக்கையையும் இங்கே வைக்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் மரியாதைக்குரிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இதிலே நடவடிக்கை எடுத்து, நம்முடைய நீர்நிலைகளையும், காற்றையும், நிலத்தையும் மாசுபடுத்துபவர்களுக்கு எதிராகக் குற்றவியல் நடைமுறைச் சட்டம் ஒன்றை இயற்றுவதற்கு மத்திய அரசாங்கத்திற்கும் பரிந்துரை செய்ய வேண்டுமென்கின்ற கோரிக்கையையும் இந்த நேரத்திலே இங்கே பதிவு செய்ய ஆசைப்படுகிறேன்.



அதேபோல பல ஆண்டுகளாக வனத் துறையிலே தினக் கூலிகளாகப் பணிபுரிகிற கிட்டத்தட்ட 49 ஓட்டுநர்களை, மற்ற துறைகளிலே செய்வதைப்போல, நீங்கள் பணி நிரந்தரம் செய்துதர வேண்டுமென்ற கோரிக்கையை இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய ஆசைப்படுகிறேன்.

தமிழக அரசிற்குச் சொந்தமான TANCEM நிறுவனத்திலே சுமார் 2,500 பேர் தொழிலாளர்கள், ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள். இவர்களில் மூன்றாம் நிலை ஊழியராக இருந்தவர் இன்றைக்கு மேலாளராகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். அப்படி இல்லாமல் மற்ற பொது நிறுவனங்களிலே இருப்பதைப்போல D.R.O. அந்தஸ்திலே உள்ள ஒருவரை நியமித்தால். . . (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11-55

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்திலே உரையை முடியுங்கள்.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** இல்லை, இல்லை. 15 நிமிடங்கள் தலைவர் அவர்களே.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** 11 நிமிடங்கள்தான் வழங்கப்பட்டுள்ளன.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** இல்லை, இல்லை. 11.45-க்குத்தான் நான் பேச ஆரம்பித்தேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** 11 நிமிடங்கள்தான் வழங்கப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடு) மானியங்களில் மூன்று அமைச்சர்கள் பதில் சொல்லவேண்டியிருப்பதால் நேரம் குறைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** இருங்கள். 2 நிமிடங்களிலே நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். நான் இன்னும் பேசவேயில்லை. இரண்டு நிமிடங்கள் கொடுங்கள்.

D.R.O. அந்தஸ்திலே கொடுக்க வேண்டுமென்று கேட்டு, (குறுக்கீடு) இரண்டு நிமிடங்கள் இருங்கள். தமிழ்நாடு இல்லத்தின் நிருவாகத்தைக் குறித்து இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். நான் 8-5-2008 அன்று சென்னையிலிருந்து டெல்லிக்குச் சென்றபோது, அங்கே நான் இரவு சென்று சேர்ந்தபோது, இங்கிருந்து தகவல் அனுப்பப்பட்டு, எனக்குக் கார் வேண்டும் எனக் கேட்டிருந்தேன்.

ஆனால், அந்தப் பகுதியிலே தமிழ்நாடு இல்லத்திலிருந்து கார் வரவில்லை. அதைக் கேட்கிறபோது, சரியான பதிலும் அங்கே இல்லை. ஏன் இந்த மாதிரியான குளறுபடிகள் என்று அங்கே கேட்டபோது, சரியான தகவல் தரவில்லையென்று சொன்னால், அங்கு இருக்கின்ற நிருவாகத்தை நம்முடைய அரசு கவனிக்க வேண்டும். அதில் பல்வேறு குளறுபடிகள் இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, என்னுடைய தொகுதியிலே கொடுமுடி காவிரியாற்றின் போக்கை மாற்ற முன்பு கட்டப்பட்ட கொம்பணைகளையெல்லாம் பழுதுநீக்கிப் புதுப்பிக்கவேண்டும். எனது தொகுதியிலுள்ள கொளநல்லி, தாமரைப்பாளையம், அரச்சலூர் ஆரம்ப சுகாதார நிலையங்களை 24 மணி நேர மருத்துவமனைகளாகத் தரமுயர்த்தவேண்டும். ஈரோடு வட்டம் என்பது சுமார் 8 இலட்சம் மக்கள் தொகைகொண்ட தாலுகாவாக உள்ளது. இதனைப் பிரித்து, கொடுமுடி, மொடக்குறிச்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய புதிய தாலுகா ஒன்றை உருவாக்கவேண்டும்.

மொடக்குறிச்சி தொகுதியில் அரசின் பொறியியல் கல்லூரியும், கலை—அறிவியல் கல்லூரியும் இல்லை. நம்முடைய கோவை அண்ணா பல்கலைக்கழகத்தின் சார்பிலே பொறியியல் கல்லூரி தொடங்க வேண்டும் என்று கேட்டு, சிவகிரி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்தி பொது மருத்துவமனையாக அறிவிக்க வேண்டும் எனக் கேட்டு, கொடுமுடி பொது மருத்துவமனைக்கு Ultra Sound Scan மற்றும் X-ray கருவிகள் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல், வனத் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, பொதுத் துறை . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆம்.எம். பழனிசாமி, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். நன்றி சொல்லி முடித்துவிடுங்கள். முடியுங்கள், கடைசிப் பக்கத்தை எடுங்கள்.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** தமிழகத்திலுள்ள அனைத்து விளையாட்டு அரங்கங்களிலும், யோகாவிற்கும் ஆண், பெண் பயிற்றுநர்களை



நியமிக்கவேண்டும். தமிழகத்திலே பட்டப் படிப்புப் பெற்றவர்களை யோகா ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும். அதேபோல என்னுடைய தொகுதியிலே பொதுப் பணித் துறை சார்பிலே நிறுவப்படுகிற அரசாங்கக் கட்டடங்களிலே, என்னுடைய தொகுதியிலே கட்டப்பட்ட R.T.O. அலுவலகத்திலே கல்வெட்டில் என்னுடைய பெயர் விடுபட்டிருக்கிறது. அரசாணை பிரகாரம் அதைச் செயல்படுத்த வேண்டும். ஏனென்று எனக்குத் தெரியவில்லை. அதையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். இந்த மாமன்றத்தில் . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல், வனத் துறை, இளைஞர் நலன், விளையாட்டுத் துறை, பொதுத் துறை மற்றும் தமிழ் வளர்ச்சி ஆகிய மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த எங்கள் குடும்பத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், பசுமைத் தலைவர் மாண்புமிகு மருத்துவர் சின்னய்யா அவர்களுக்கும், தியாகச் செம்மல் கோ.க. மணி அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலாவதாக, மதுரை மாவட்டம், எலியார்பத்தி, வளையங்குளம், பாறைப்பத்தி, நெடுமதுரை, சோளங்குரணி கிராமங்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்தும், உத்தபுரம் பிரச்சினை குறித்தும் பா.ம.க. சார்பில் மத நல்லிணக்கக் குழு, எங்கள் தலைவர் அண்ணன் கோ.க. மணி தலைமையில் ஐவர் குழு ஒன்று சென்று உண்மை நிலை அறிந்து வந்துள்ளது. காவல் துறையின் கடுமையான நடவடிக்கைகள் கண்டனத்துக்குரியவை.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள 174 பேர் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும். காவல் துறையின் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கவேண்டும். எலியார்பத்தி கிராமப் பகுதியிலும், உத்தபுரத்திலும் இரு தரப்பினரும் மத நல்லிணக்கத்தோடு, ஒற்றுமையுடன் வாழ சுமுகத் தீர்வை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ் வளர்ச்சி. நமது உயிருக்கு இணையான தமிழ் மொழி பழம்பெருமையும், தொன்மையும் வாய்ந்த இலக்கண, இலக்கியங்களைக்

கொண்டது. தமிழ் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் மாண்புமிகு முதல்வர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை வாழ்த்தி, அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். தனியார்ப் பள்ளிகளில் அனைத்திலும் தமிழ் கட்டாயப் பாடம் என்பதை நடைமுறைப்படுத்தவேண்டும்.

இரண்டு ஆண்டுகளுக்குள் பன்னிரண்டாம் வகுப்புவரை தமிழ்க் கட்டாயப் பாடத் திட்டத்தினைக் கொண்டுவரவேண்டும். தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும். அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் தமிழில் கையெழுத்திட வலியுறுத்தப்படவேண்டும். நிர்வாக மொழியாக, பயிற்றுமொழியாக, நீதிமன்ற நடைமுறைகளில் முழுமையாகத் தமிழ் இருக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். வணிக வளாகங்களில், விளம்பரப் பலகைகளும் பெயர்ப் பலகைகளும் தமிழில் இருக்கவேண்டும் என்கிற சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும். திரைப்படம், சின்னத்திரை, பெரிய திரை அனைத்திலும் கலப்பில்லாமல் தமிழ் முழுமையாக இடம்பெறவேண்டும். ஏடுகள், வெளியீடுகள் அனைத்திலும் தமிழ் முழுமை பெறவேண்டும். திருக்கோயில்களில் வழிபாட்டு மொழியாகவும், திருமணக் கூடங்களில் தமிழ் மொழியில் திருமணங்கள் நடத்திட வழிவகை செய்யப்படவேண்டும். தமிழில் படித்தவர்களுக்கும் வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும். உலகின் ஆதி இசையான தமிழிசை தமிழர்களிடத்திலிருந்து அகன்றுவிட்டது. வேற்று நாட்டு இசைக்கு ஆளாக்கப்பட்டிருப்பது மிகவும் வேதனையளிப்பதாக உள்ளது.

நண்பகல் *12-00*

கவிஞர் நா.ர. நாச்சியப்பன் எழுதிய *30* நூல்களையும் நாட்டுடைமையாக்கவேண்டும். இவரது துணைவியார் வறுமையில் வாடி, வாடகை வீட்டில் குடியிருக்கிறார். இவருக்கு அரசு உதவி செய்யவேண்டும். தமிழ் அறிஞர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஊக்குவிக்கவேண்டும். தாய்த் தமிழ், தமிழ்வழிப் பள்ளிகளுக்குத் தமிழ்நாடு அரசின் இலவசப் பாட நூல்கள் வழங்கப்படவேண்டும்; பணியிடைப் பயிற்சி வழங்கப்படவேண்டும்.

கர்நாடகப் பேருந்துகளில் பயணச் சீட்டு கன்னடத்தில் உள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் ஆங்கிலத்தில் உள்ளது. இதைப்போல, பல்வேறு



துறைகளிலும் இதே நிலைமை உள்ளது. இதை முற்றிலும் மாற்றி, 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்று எல்லா நிலையிலும் தமிழ் இருக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்; தமிழ் இசையை வளர்த்தெடுக்கவேண்டும். பள்ளிகளில், கல்லூரிகளில் தமிழ் இசையைப் பாடமாகக் கொண்டுவரவேண்டும். தமிழ் இசை படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கவேண்டும்.

சுற்றுச்சூழல், புவி வெப்பமடைவதன் காரணமாக, இயற்கைச் சீற்றங்கள் அதிகமாகி வருகின்றன. இதற்குக் காரணம், பெட்ரோல், டீசல், நிலக்கரி, எரிவாயு போன்றவற்றை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துவதுதான். புவி வெப்பமடைவதால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் தமிழ்நாடும் இடம் பெற்றுள்ளது. இதனால் புயல், வெள்ளம், தண்ணீர்ப் பற்றாக்குறை, வறட்சி, நோய்கள் போன்றவற்றால் தமிழகம் பாதிக்கப்படக்கூடும். மேலும், கடல் மட்டம் உயர்வதால், தமிழகம் பாதிக்கப்படக்கூடும். எனவே, புவி வெப்பமடைவதால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைச் சமாளிக்கும் வகையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். புவி வெப்பமடைதல் குறித்தும், அதனைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்தும், மக்களிடையேயும், மாணவர்களிடையேயும் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். புவி வெப்பமடைவதால் தமிழகம் பாதிக்கப்படுவது உறுதி என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். எனவே, இதனை எதிர்கொள்ள தமிழ்நாட்டிற்கெனத் தகவலமைப்புத் திட்டத்தினை அரசு உருவாக்கவேண்டும்.

தமிழகத்தில் தொழிற்சாலைகளால் சுற்றுச்சூழல் மாசுபடுவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக, கடலூர், இராணிப்பேட்டை, ஆம்பூர், வாணியம்பாடி, மேட்டூர், தூத்துக்குடி, ஈரோடு, திருப்பூர் உள்ளிட்ட பகுதிகள் தொழிற்சாலைகளால் மாசுபடும் நிலை அதிகரித்து வருகிறது. இப்பகுதிகளில் நிலம், நீர், காற்று அனைத்தும் மாசுபடுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, கடலூர் சிப்காட் பகுதியை 'மனிதர்கள் வாழத் தகுதியற்ற பகுதி' என மனித உரிமை ஆணையம் அறிவித்துள்ளது. மேலும், வேலூர் மாவட்டம் 'இந்தியாவினுடைய கறுப்பு மாவட்டம்' எனச் சுற்றுச்சூழல் அமைச்சகம் கூறியுள்ளது. அதிலும், இராணிப்பேட்டை உலகிலேயே அதிகளவில் மாசுபட்ட பகுதி எனத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகளின் மாசினைத் தடுக்க 'வருமுன் காத்தல்' மற்றும் 'மாசுபடுத்தியவரே பொறுப்பு' என இரு வழிமுறைகளை உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. 'வருமுன் காத்தல்' என்ற

அடிப்படையில், தமிழகத்தின் தொழிற்சாலைகள், குறிப்பாக, தோல், இரசாயனம், சாயம் உள்ளிட்ட தொழிற்சாலைகள் தூயத் தொழில்நுட்பம் (Clean Technology) முறைக்கு மாற அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். 'மாசுபடுத்தியவரே பொறுப்பேற்றல்' என்ற அடிப்படையில், தொழிற்சாலை மாசுபாடுகள் அனைத்திற்கும் தொழிற்சாலைகளே பொறுப்பேற்கவேண்டும். மாசுபட்ட பகுதிகளை மறுசீரமைக்கவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்கவும் அவர்களை அரசு கட்டாயப்படுத்தவேண்டும்.

வனத் துறை. தமிழகத்தின் மொத்த நிலப்பரப்பில் 33 விழுக்காடு வனப் பரப்பாகப் பராமரிக்கப்பட காடுகள் வளர்க்கும் திட்டத்தை ஊக்குவிக்கவேண்டும். ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிதி வங்கியின் உதவியோடு செயல்படுத்தப்பட்டுவரும், காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் தமிழகத்திலுள்ள தரம் குறைந்த காடுகள் தரம் உயர்த்தப்படவேண்டும். வனப் பகுதிகளிலே ஆறுகள் அருகே உள்ள விவசாய நிலங்களில் உள்ள பயிர்களை வன விலங்குகள் சேதப்படுத்துவதைத் தடுக்கும்பொருட்டு, சூரிய மின் வேலி அமைக்கும் திட்டத்தை விரிவுபடுத்தவேண்டும். வனப் பகுதி நிலங்களை அழித்து, டீ, காபி, வாசனைப் பொருள், இரப்பர், பனை எண்ணெய், எண்ணெய்த் தாவரங்கள், தோட்டப் பயிர்கள், மருத்துவத் தாவரங்கள் ஆகியவற்றைப் பயிரிடுவதைத் தடுக்கும் சட்டம் ஒன்றைக் கொண்டுவர வேண்டும்.

தமிழகத்தில் முதுமலை, ஆனைமலை, களக்காடு, முண்டந்துறை ஆகிய இடங்கள் புலிகள் திட்டத்தின்கீழ் (Project Tiger) பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக மாற்றப்பட்டுள்ளன. ஆனால், இப்பகுதிகளில் வாழ்ந்துவரும் பழங்குடியின மக்களுக்கு உரிய மறுவாழ்வுத் திட்டங்கள் இன்னும் வகுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே, புலிகள் பாதுகாப்புத் திட்டத்தால் பாதிக்கப்படும் மக்களுக்கு முழுமையான மறுவாழ்வுத் திட்டத்தினை உருவாக்கவேண்டும்.

தமிழகத்தில் காஞ்சமலை, கொல்லிமலை பகுதிகளில் வனப் பகுதியை அழித்து இரும்புத் தாது சுரங்கம் அமைக்கப்பட இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. தமிழகத்தின் அரிய வனப் பகுதி எதுவும் சுரங்கத்திற்காக அழிக்கப்படக்கூடாது; இத்திட்டம் கைவிடப்படவேண்டும்.

அலுமினியத் தாதுவிற்காக கொல்லிமலைப் பகுதியிலே பாக்சைட் சுரங்கம் செயல்பட்டு வருகிறது. இவற்றினுடைய ஒப்பந்தக் காலம்



முடிவுக்கு வரவிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. தமிழகத்தினுடைய அரிய வனப் பகுதியான கொல்லிமலை பகுதியைக் காக்கவேண்டும். எனவே, பாக்சைட் சுரங்கத்திற்கான மறு அனுமதியை நீட்டிப்புச் செய்யக்கூடாது.

வீரப்பன் தேடுதல் வேட்டையில் அதிரடிப் படையினருக்கு உதவியாளர்களாக இருந்தவர்களில் நான்கு பேருக்கு, ஈரோடு மண்டல வனத் துறையில் வனத் தோட்டக் காவலர்களாக வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படவேண்டும். கர்நாடக அதிரடிப் படை உதவியாளர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் அந்த அரசால் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் தமிழக அரசும், தமிழக அதிரடிப் படையில் உதவியாளர்களாக இருந்தவர்களுக்கு வழங்கவேண்டும்.

*பிற்பகல் 12-05*

வனத் துறையில் வனக் காவலர், வனத் தோட்டக் காவலர், வனவர், வனச் சரக அலுவலர் உள்ளிட்ட அனைவருக்கும் ஊதிய உயர்வு வழங்கவேண்டும். காலம் தாழ்த்தாமல் அனைவருக்கும் பதவி உயர்வு வழங்கப்படவேண்டும். வனத் துறையில் உள்ள தற்காலிகப் பணியிலுள்ள அனைவரையும் நிரந்தரப் பணியில் அமர்த்தவேண்டும். இளைஞர் சக்தி நாட்டின் விலை மதிக்கமுடியாத, அளவிடமுடியாத ஆற்றல் உடையது என்பதை உணர்ந்துதான் நாட்டின் மிகப் பெரிய சொத்து என்றும், நாட்டின் இலாபப் பங்கு இளைஞர்கள் என்றும் சொல்லப்படுகிறது. இளைஞர் சக்தியை முழுமையாகப் பயன்படுத்துகின்ற நாடுகள்தான் வளரும் நாடுகளாக, வளர்ந்த நாடுகளாக விளங்கிக் கொண்டிருக்கின்றன. நமது மாநிலத்தில் படித்துவிட்டு வேலையில்லாத் திண்டாட்டத்தில் உள்ள இளைஞர்கள் குடிப்பழக்கத்திற்கு ஆளாகி திசை மாறிச் செல்லும் நிலைமை அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

குறு, சிறு, நடுத்தரத் தொழிலுக்கு ஊக்கம் அளித்து, அதிக அளவில் வேலைவாய்ப்பை உருவாக்கியும், இளைஞர் சக்தியைப் பயன்படுத்தி, நெறிப்படுத்திட சிறப்புப் பெருந்திட்டத்தைத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். இதற்காகத் தனி ஆய்வை மேற்கொள்ள வேண்டுமென எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

விளையாட்டு மிகவும் முக்கியம் என்பதை உணர்ந்து, உடல் வலிமைக்கும், நோயற்ற ஆரோக்கிய வாழ்வுக்கும் விளையாட்டு வழிவகுக்கும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் ஒரு நிமிடத்தில் தங்கள் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கே.எல். இளவழகன்:** விளையாட்டு கட்டாயப் பாடமாக்கப்படவேண்டும். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, உயர் கல்வியிலே, வேலைவாய்ப்பிலே இடங்களை அதிகரித்து வழங்கவேண்டும். அதற்காக விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கவேண்டும். விளையாட்டு மைதானம் இல்லாத பள்ளிகளுக்கு அரசு அங்கீகாரம் வழங்கப்படக்கூடாது. நாட்டில் பொதுத் துறை வளர நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். நாளுக்கு நாள் பொதுத் துறையின் வளர்ச்சி குறைந்து வருவது கவலையளிக்கிறது. தனியார்மயம், தாராளமயம் என்கின்ற அளவிலே பொதுத் துறைக்கு இப்போது சோதனைக் காலம். மூடப்பட்ட பொதுத் துறை, கூட்டுறவுத் துறை, சர்க்கரை ஆலைகள், நூற்பாலைகள் திறக்கப்பட வேண்டும். பொதுத் துறையின் பங்கைத் தனியாருக்குக் கொடுக்கக்கூடாது. தனியார் பங்கைவிட அரசின் பங்கு அதிகமாக இருக்கவேண்டுமே தவிர, அரசின் பங்கு குறைக்கப்படக்கூடாது.

இன்னும் ஒரே ஒரு தொகுதிப் பிரச்சினை. என்னுடைய தொகுதியில் ஆற்காடு நகரத்திற்கு நகராட்சிமூலம் பாலாற்றுக் குடிநீர் வழங்கப்படுகிறது. அந்தக் குடிநீரேற்று நிலையம் என்பது பாலாற்றங் கரையில், தோல் தொழிற்சாலையினுடைய கழிவு நீர் கலக்கின்ற இடத்தில் அமைந்துள்ளதால், அந்த நீர் மாசுபட்டு உப்புத் தண்ணீராக உள்ள காரணத்தால் அந்த நீரேற்று நிலையத்தை மாற்றி, புதிய நீரேற்று நிலையம் அமைத்துத்தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக வாழைப்பந்தல்-கரூர் சாலையை, ஒரு வழிச் சாலையை இரு வழிச்சாலையாக மாற்றித்தர இந்த நேரத்தில் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல; தூத்துக்குடி-ஆற்காடு சாலையை அகலப்படுத்தும் திட்டத்தின்கீழ் பணிகள் நடைபெறுகின்றன. என் தொகுதிக்குட்பட்ட ஆற்காடு-தாமரைப்பாக்கம் வரை அந்தப் பணிகள் மெதுவாக நடைபெறுகின்றன. விரைவாக அந்தச் சாலையை அகலப்படுத்தி,



பொதுமக்களின் பயன்பாட்டுக்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக. . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ். (குறுக்கீடுகள்) உறுப்பினர், உங்கள் உரையை விரைந்து முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நேற்றையதினத்திலே, நம்முடைய முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்கள், என் தொகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, கலவையிலே புதிய தீயணைப்பு நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள். அதற்காக முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும் இந்த நேரத்திலே என் தொகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. கி. ஆறுமுகம் தலைமை)

***திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுத் துறை, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, தமிழ் வளர்ச்சித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்புத் தந்த தங்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பெருமுயற்சியால், தொடர்ந்த வலியுறுத்தலினால் மத்திய அரசால் நிறைவேற்றப்பட்ட வன உரிமைச் சட்டம், 2006 பல மாநிலங்களில் அமல்படுத்தப்படுகிறது. தமிழகத்திலும் ஆய்வு செய்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் இருக்கும் தடையாணையை இரத்து செய்து, அமல்படுத்த நடவடிக்கை எடுக்க மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி மலைப்பகுதி. மக்கள் வனச் சரணாலயம் இருப்பதால், அடிப்படை வசதிகள் எதுவுமில்லாமல் அவதிப்படும் இன்னல்களை இதே மாமன்றத்தில் கவன ஈர்ப்புத் தீர்மானம்மூலம் அரசின் கவனத்துக்குக் கொண்டு

வந்தபொழுது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்துக்குக் கொண்டுசென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்கள். தற்பொழுது 48 காணி செட்டில்மெண்ட் கிராமங்களுக்கும், ARC சாலைகளுக்கும் அடிப்படை வசதிகள் கொண்டு செல்லலாம் என்றும், வனச் சரணாலய விதிகளைத் தளர்வு செய்து அறிவித்தமைக்கும், 20 கிலோ மீட்டர் தூரம் சூரிய மின் வேலி அமைக்க நிதி ஒதுக்கி ஏற்பாடு செய்தமைக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும், தொகுதி மக்கள் சார்பிலும், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், திருவட்டாறு தொகுதியின் மலைப்பகுதிகளான தச்சமலை, தோட்டமலை, புறாவிளை மலை, வில்லுசாரி மலை, எட்டாங்குந்து மலை, முடவன் பொற்றை, கிழவியாறு உட்பட்ட மலைப் பகுதிகளில் 1975 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்ட மின் கம்பங்களில் இழுக்கப்பட்ட மின் கம்பிகளை maintenance செய்தாவது முதற்கட்டம் அந்தப் பகுதிகளில் மின்சாரம் கொண்டுசெல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுகிறேன்.

பிற்பகல் 12-10

தமிழகத்தின் பல பகுதிகளான ஜவ்வாது மலை, ஏலகிரி மலை, புதூர்நாடு மலை, கோயம்புத்தூர் மாவட்ட வனப் பகுதி என பல பகுதிகளில் சுதந்திரம் அடைந்து 61 ஆண்டுகள் கடந்தும் குடி தண்ணீர், மின்சாரம், சாலை வசதிகள், ரேஷன் கடைகள் மருத்துவ வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் வெறும் கனவாகவே இருந்து வருகின்றன. தமிழக அரசின் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியும் கிடைக்கப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் தோளில் பாடைகட்டி நோயாளிகளை, கர்ப்பிணிப் பெண்களை சுமந்து செல்லும் அவலநிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுகிறேன். மேற்படி மலைப் பகுதிகளின் அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்ய மத்திய அரசின் சிறப்பு உட்கூறுத் திட்ட நிதியை முழுமையாகச் செலவிட முழுக்கவனம் செலுத்த கேட்டுக்கொள்கிறேன்.

விருதுநகர் மாவட்டம், கோவை மாவட்டம், உடுமலை தாலுகாக்கள் தேனி மாவட்டம் இராயப்பன்பட்டி உட்பட 20, 30 ஆண்டுகளாக வனப் பகுதிகளில் மேயவிடப்பட்டுவந்த ஆடு, மாடுகளை, மலை மாடுகளை மேய்க்கக்கூடாது என்ற தடையை இரத்து செய்து,



விவசாயிகளைப் பாதுகாக்க பாதுகாப்பான இடம், வனப் பகுதியிலே ஒதுக்கிக் கொடுக்க வேண்டுகிறேன். வனக் குற்றங்கள் என்று போடப்பட்ட வழக்குகளைத் துரிதமாக நடத்தி முடிக்க சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டுகிறேன்.

ஆந்திர எல்லையில் இருக்கிற யானைகள் தேன்கனிக்கோட்டை, தளி, அஞ்சட்டி, குடியாத்தம், முக்குன்றம் வயல் பகுதிப் பயிர்களைச் சேதப்படுத்துகின்றன. விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டுகிறேன்.

வன விலங்குகளால் பயிர்ச் சேதத்தைத் தவிர்க்க தேவைப்படும் பகுதியில் கூடுதலாக சூரிய மின் வேலி மற்றும் கல்லால் ஆன சுவர் கட்டவும் நடவடிக்கை எடுக்கவும் வேண்டுகிறோம்.

குமரி மாவட்ட வலிய ஏலா பகுதியில் வருவாய்த் துறைக்குச் சொந்தமான நிலம் மற்றும் குடியாத்தம் பூசாரிவலசைப் பகுதி போன்ற மலைப் பகுதிகளில் இருக்கும் மக்களுக்கு பட்டா வழங்க வேண்டுகிறோம்.

தமிழகத்தில் கன்னியாகுமரி, வேலூர், திருவண்ணாமலை போன்ற மாவட்டங்களில் வனத் துறை நடத்தும் பள்ளிகளை, கல்வித் தரத்தைக் கணக்கிலெடுத்தேனும் பள்ளிக் கல்வித் துறைக்கு மாற்றம் செய்யப்பட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வலிறுத்துகிறேன். திருவட்டாறு தொகுதியில் 20 ஆண்டுகளாக, அரசு இரப்பர் கழக மயிலாறு துவக்கப் பள்ளி அங்கீகாரம் இல்லாமல் இருக்கிறது. பழங்குடியின மக்கள் அதிகமாகப் படிக்கக்கூடிய அந்தப் பள்ளிக்கூடத்தில் சத்துணவுகூடக் கிடைக்கப்பெறவில்லை என்ற அவல நிலை தொடர்கிறது என்ற வருத்தமான செய்தியை இந்த மாமன்றத்தில் பதியவைக்க விரும்புகிறேன்.

நாகர்கோவில் அரசு இரப்பர் கழகத் தொழிலாளர்கள் கோரிக்கைகள் குறித்துப் பேசி முடிக்க, எடுக்கும் முயற்சியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் ரூபாய் 150 கிடைக்கவும், நிர்ணயம் செய்யும் கிரேடுக்குமேல் வரும் latex கிலோ ஒன்றுக்கு ரூபாய் 7 கிடைக்கவும், scrap-ஒட்டுக்கறை கிலோ ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூபாய் 5 கிடைக்கவும், service weightage படிப்படியாக அதிகப்படுத்தவும், தொழிலாளி வாங்கும் ஒட்டுமொத்தச் சம்பளத்திற்கும் P.F. பிடித்தம் செய்யவும் ஆன அனைத்துத் தோட்டத்

தொழிலாளர் சங்க கோரிக்கைகளையும் நிறைவேற்றித்தர வலியுறுத்துகிறோம். அனைத்து பதிவு பெற்ற சங்கங்களின் பிரதிநிதித்துவத்தோடு கமிட்டி அமைத்து குறைபாடுகளைக் களைய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுகிறோம்.

நாகர்கோவிலில் Plantation Inspector-ஐ நிரந்தரமாக நியமனம் செய்து தோட்டத் தொழிலாளர்களுக்கு தோட்ட நலச் சட்டங்கள் அமல்படுத்தப்படுகின்றனவா எனக் கண்காணிக்க வேண்டுகிறேன்.

1979 ஆம் ஆண்டு மணலோடை தொழிலாளர் குடியிருப்புகளுக்கு மின்சாரம் கொடுக்க இழுக்கப்பட்ட கம்பி, மின் கம்பம், வீடுகளில் வேயப்பட்ட wiring அப்படியே உள்ளன. எப்பொழுது மணலோடை இருள்மாறி ஒளிரும் என்று எதிர்பார்க்கும் மக்களுக்கு மின்சாரம் கிடைக்க அரசு இரப்பர் கழகம் கட்டவேண்டிய பணத்தை மின்சாரத் துறைக்கு கட்டி துரித நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கி. ஆறுமுகம்):** மாண்புமிகு உறுப்பினர், விரைவாகப் பேசி முடியுங்கள்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** இன்னும் இரண்டு நிமிடங்கள் உள்ளன. சுற்றுப்புறச்சூழல் ரசனையுடன்கூடிய eco tourism பகுதியாகக் காட்சியளிக்கும் திருவட்டாறு தொகுதியின் முக்கியமான மலைப் பகுதிகளான பாலமோர், Upper கோதையாறு, முகழியடி மலை ஆகிய பகுதிகளைச் சீரமைக்க வேண்டுகிறேன். வனப் பாதையான பாலமோர், Upper கோதையாறு பகுதியைச் சீரமைக்க நிதி ஒதுக்க வேண்டுகிறேன். வனக் குழுக்களில் இருக்கும் மகளிருக்குப் பயிற்சி அளிக்கவேண்டும். நிதிப் பயன்பாட்டில் ஜனநாயக முறை நடைமுறைப்படுத்த வேண்டுகிறேன்.

சுற்றுச்சூழல் பாதிப்பால் இலட்சக்கணக்கான மக்கள், விவசாயிகள், சிறுதொழில் நடத்துபவர்கள், தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிப்புக்குள்ளாகின்றனர். தமிழகத்தில் கரூரில் குடி தண்ணீர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கி. ஆறுமுகம்):** மாண்புமிகு உறுப்பினர் திருமதி லீமா றோஸ், விரைவாகப் பேசி முடியுங்கள். ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** சுற்றுச்சூழலும், நிலத்தடி நீரும் பாதுகாக்கப்படவேண்டும். ஆகவே, சுற்றுச்சூழல் பாதிப்புகளை அகற்ற, சாயப் பட்டறைக்கு பொதுச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க மத்திய



அரசின் மானியத்தையும், மாநில அரசின் பங்குத் தொகையையும் வழங்க வேண்டுகிறேன்.

குமரி மாவட்டத்தின் நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்ற மத்திய அரசு குமரி மாவட்டத்திற்கு ஒதுக்கிய SAI sub-centre, விளையாட்டு துணை மையத்தை, மாவட்ட நிர்வாகத்தால் கண்டறியப்பட்ட ஆனையடி எஸ்டேட்டில் அமைத்து மாவட்ட மக்களின் கனவை நனவாக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

விளையாட்டு அமைப்புகளை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டுகிறேன். ஒன்றிய, மாவட்டத் தலைநகரங்களில் விளையாட்டுத் திடல்கள் கூடுதலாகக் கட்டப்படவேண்டும். நேரு விளையாட்டு அரங்கத்திற்கு வரும் விளையாட்டு வீரர்கள் தங்க விடுதி வசதி கூடுதலாக்கப்பட வேண்டும்.

இளைஞர் நலக் கொள்கையை—Youth policy—தமிழக அரசு வெளியிட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது. தமிழ் மொழிக் காவலர்களுக்கும், அவர்தம் வாரிசுதாரர்களுக்கும் நிறுத்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டுகிறேன். எல்லைப் போர் தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும். 60 வயதான அனைத்து வகை எழுத்தாளர்களுக்கும், குறிப்பாக மொழிபெயர்ப்பு எழுத்தாளர்களுக்கும் மாத ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும். அனைத்துப் பள்ளிக்கூடங்களிலும் காலியாக உள்ள தமிழாசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.

தொல்காப்பியம் அரங்கேற்றத்திற்குத் தலைமை தாங்கிய அதங்கோட்டாசானுக்கு, அவர் பிறந்த ஊரான குமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா, அதங்கோட்டில் மணி மண்டபம் அமைக்க வேண்டும்.

அரூர்-சிட்லிங்-காரப்பாடி பகுதிக்கு 60 வருடகாலமாக மின்சாரம், குடிநீர், பாதை வசதிகள், வனத் துறையினரால் தடை செய்யப்பட்டுள்ளது. அந்த மக்களுக்கு இந்த வசதிகள் வழங்கப்படவேண்டும்.

வனத் துறையால், காப்புக் காடு வெட்டுதல் என்ற பெயரில், பெரும்பாலான மரங்கள் வெட்டப்படுகின்றன. எதிர்காலத் தலைமுறைக்குப் பாதுகாப்பை வழங்கவேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கி. ஆறுமுகம்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கின்றேன். கம்பம் தொகுதி, கோம்பை பகுதியில், கோம்பை-இராமக்கல்மெட்டுச் சாலை, ஒரு முக்கியமான சாலை. அதைப்போல, தேவாரம்-சாக்கலூத்துமெட்டுச் சாலையும் முக்கியமான சாலை. இந்தச் சாலைகளை நீங்களே வந்து பார்த்திருக்கிறீர்கள். இந்தச் சாலைகளை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆண்டு நான் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொண்டு வந்த நேரத்தில், இதே அவையில் தாங்கள், காட்டுப் பன்றிகள் மூலமாகப் பயிர்கள் நாசமாவதைத் தடுக்கும்வகையில், ஆனைமலையன்பட்டியிலிருந்து இராயப்பன்பட்டி வரை சூரிய மின் வேலி அமைத்துத் தருவதாக உறுதியளித்திருந்தீர்கள். இன்னும் அந்தப் பணி நிறைவடையவில்லை என்பதனை இந்த நேரத்திலே தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதைப்போல கூடலூரிலிருந்து, சோழனாறு வரைக்கும் சூரிய மின் வேலியை அருள்கூர்ந்து அமைத்துத்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

Encyclopaedia Britannica, Encyclopaedia Americana போன்ற கலைக் களஞ்சியங்கள் உலகப் புகழ் வாய்ந்தவை. அந்தக் கலைக் களஞ்சியங்களெல்லாம் கிரேக்கம், இலத்தீன் போன்ற மொழிகளைத்தான் முதன்மையாக, செம்மொழியாக ஏற்றுக்கொண்டிருக்கின்றன. தமிழை உயர்தனிச் செம்மொழியாக ஏற்றுக்கொள்கின்ற வகையிலே, அது தனித் தலைப்பில் இடம்பெறுவதற்கான முயற்சியிலே இந்த அரசு ஈடுபட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

இலங்கையிலும், சிங்கப்பூரிலும் தமிழ் ஆட்சிமொழியாக இருக்கின்ற இந்த வேளையில், மலேசியாவிலும், தென்னாப்பிரிக்காவிலும் தமிழை அதிகமாகப் பேசக்கூடிய தமிழர்கள் இருக்கின்றார்கள். இந்த நிலையில் அங்கே தமிழை உயர்தனிச் செம்மொழியாக ஆக்குவதற்கு, அவர்கள் ஏற்றுக்கொள்வதற்கு உறுதியான நடவடிக்கை எடுப்பதன் மூலமாக, நமக்கு பல்கலைக்கழகங்களின் பன்னாட்டுக் கல்வி, அறிவியல் பண்பாட்டு மன்றம் (UNESCO) நம்மை அங்கீகரிக்கும் என்பதனையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.



அதேபோல, மனித வள மேம்பாட்டுத் துறையின்கீழ்தான் இப்பொழுது உயர்தனிச் செம்மொழிப் பிரிவு இயங்கி வருகின்றது. அதைக் கல்வித் துறைக்கு மாற்றுவதன்மூலமாக, பல்கலைக்கழகங்களின் நல்கைக் குழு உதவி மற்றும் இந்தியப் பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கைகள் கிடைப்பதற்கு நமக்கு வாய்ப்பு கிட்டும். அதைப்போல, சரஸ்வதி மஹால் நூல் நிலையம், கீழ்திசைச்சுவடி நூலகம் ஆகியவற்றில் அச்சேற்றப்படாத நூல்களை, அச்சேற்றுவதற்கான முயற்சியிலே இந்த அரசு ஈடுபட வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல, பொதுத் துறையைப் பொறுத்தவரை, அகதிகள் முகாமில் வாழ்கின்ற ஆண்களுக்கும், பெண்களுக்கும் இதுவரை மாதம் 400 ரூபாய் வழங்கப்பட்டிருக்கின்றது. இன்றைக்குள்ள விலைவாசி உயர்வைக் கருத்தில்கொண்டு, 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். அகதிகள் முகாமில் வாழ்கின்ற திருமணமாகாத பெண்கள் ஏழ்மை நிலையில் இருக்கின்ற காரணத்தினால், திருமண உதவித் திட்டத்தை அவர்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, இளைஞர் நலனைப் பொறுத்த அளவில், இளைஞர்களின் அழகைக் கெடுப்பது தொப்பை, நகரின் அழகைக் கெடுப்பது குப்பை என்ற வகையிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் இதிலே எச்சரிக்கையோடு இருந்து செயல்படவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களே, Pierre de Coubertin என்பவர் ஒரு கருத்தை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். கல்வி மனதைப் பண்படுத்துகின்றது; விளையாட்டு உடலைப் பண்படுத்துகின்றது. உலக நாடுகளையே ஒருங்கிணைக்கக்கூடிய ஆற்றல் விளையாட்டுத் துறைக்கு இருக்கின்றது. எனவே, கல்விக்கு முக்கியத்துவம் தருவதைப்போல, விளையாட்டிற்கும் முக்கியத்துவம் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-20

ஒலிம்பிக்கிலே நம்முடைய பங்கு என்பது மிகவும் குறைவாக இருக்கின்றது. பதக்கங்கள் குறைவாகப் பெறுகின்றோம். இன்னும் சொல்லப்போனால், 1980-க்குப் பின்பு, ஹாக்கிப் போட்டியிலே நாம் பதக்கமே பெறவில்லை. பளு தூக்கும் போட்டியிலே, மல்லேஸ்வரி என்ற ஒருவர் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றிருக்கின்றார். குறி பார்த்துத் துப்பாக்கிச் சுடும் போட்டியிலே, திரு. ரத்தோர் ஒரு

வெள்ளியைப் பெற்றிருக்கின்றார். அதிக பதக்கங்கள் பெற இரண்டு வழிகள்தான் இருக்கின்றன. சிறு வயது முதலே எந்தெந்த விளையாட்டில் ஆடவர், பெண்டிர் ஆர்வம் உடையவராக இருக்கின்றார்களோ, அவர்களை முறையாகத் தேர்வு செய்து, அவர்களுக்கு சர்வதேசத் தரத்திலான பயிற்றுவிப்பைத் தருவீர்களேயானால்; ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஒன்றியங்களில் விளையாட்டுத் திடல்கள் அமைத்து, அந்த விளையாட்டு வீரர்களை பயிற்றுநர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள், இயக்குநர்கள் மூலமாக ஊக்குவித்து, அந்த இயக்குநர்களுக்கும், பயிற்றுநர்களுக்கும் வருடம் ஒரு முறை முதலமைச்சர் விருது என்ற வகையிலே ஒரு இலட்சம் ரூபாய் வழங்குவீர்களேயானால், நிச்சயமாக நாமும் ஒலிம்பிக்கிலே அதிகமான பதக்கங்களைத் தட்டி வரலாம் என்ற நம்பிக்கையை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, நம்முடைய சேப்பாக்கம் கிரிக்கெட் கிரவுண்டு என்பது சர்வதேசத் தரத்திலானது. உலகத் தரத்திலான அந்த கிரவுண்டில், இப்பொழுது தேவையான விளையாட்டுகள் நடைபெறுகின்றன. இன்றைய சூழ்நிலையில், மகாபலிபுரம் சாலையிலே, கருங்குழிப்பள்ளம் என்ற இடத்தில் 50 ஏக்கர் நிலத்தை கிரிக்கெட் வாரியத்திற்கு 30 ஆண்டு குத்தகைக்கு, தமிழ்நாடு அரசு விட்டது ஏனென்று தெரியவில்லை. இதைப்போல, எல்லா மாவட்டங்களிலுமே விளையாட்டிற்காகக் குத்தகைக்கு விடுகின்ற உத்தேசம் அரசிற்கு உண்டா என்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

காடுகளைப் பொறுத்தவரையில், உலகில் 400 கோடி ஹெக்டேர் பரப்பில் காடுகள் இருக்கின்றன. அதில் 75 இலட்சம் ஹெக்டேர் காடுகள் அழிந்து வருகின்றன. இதைத் தடுப்பதற்கு, ஒவ்வொரு வீடு கட்டும்பொழுதும் நான்கில் ஒரு பகுதி மரம் வளர்க்க வேண்டும். தொழிற்சாலை கட்டுகின்றபொழுது, எவ்வளவு வெப்பம் வெளியாகின்றதோ, அந்த வெப்பத்தைச் சமன் செய்கின்றவகையிலே அங்கே மரங்களை வளர்க்க வேண்டும். எப்படி சென்னையில் பாண்டிபஜார் நமக்குப் பசுமையாக இருக்கின்றதோ, இந்தப் பாண்டிபஜாரையே முன்னுதாரணமாகக் கொண்டு தமிழகமெங்கும் மரம் நடுகின்ற பணிகளைத் தீவிரப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கி. ஆறுமுகம்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

***திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, பொதுத் துறை மற்றும் தமிழ் வளர்ச்சி ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்துகளை எடுத்துரைக்க வாய்ப்பளித்த மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1997 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் உதவியோடு செயல்படுத்தப்பட்ட காடு வளர்ப்புத் திட்டம், 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், 1968 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் என்று வனத் துறை வளர்ச்சிக்கான அனைத்துத் திட்டங்களும் தொலைநோக்குப் பார்வையோடு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டங்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வன நிலங்களிலே 50 ஆண்டுகளுக்கு மேலாக, 1980 வரை வீடுகட்டிக் குடியிருந்து சாகுபடி செய்துவரும், சுவாதீன அனுபோக நிலங்களுக்குப் பட்டா வழங்கலாம் என்ற உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம், திரிபுரா போன்ற மாநிலங்களில் பட்டா வழங்கியதைப்போல, நமது மாநிலத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம் உட்பட 13 மாவட்டங்களிலே வாழ்கின்ற மலைவாழ் மக்களையும், பழங்குடியின மக்களையும் வனத் துறையினர் நில வெளியேற்றம் செய்வதைத் தடுத்து, சுவாதீன அனுபோக நிலங்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

நாடு சுதந்திரம் பெற்று 50, 60 ஆண்டுகள் கடந்தும்கூட மலைவாழ் மக்களுடைய வாழ்க்கைத் தரம் என்பது வன விலங்குகளைவிட மோசமாக இருக்கின்றது. பல மலைக் கிராம மக்களுடைய குறைந்தபட்ச அடிப்படை வசதிகளைக்கூட சட்டமன்ற, நாடாளுமன்ற, ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து நிறைவேற்ற Forest Act, 1980—ஐக் காரணம் காட்டி அனுமதி மறுக்கப்படுகிறது. என்னுடைய தொகுதியிலே PMGSY திட்டம் 5-ல் மஞ்சுகாட்டுப்பள்ளி ஊராட்சி, பேல்பட்டிசாலை, தொட்டமஞ்சி ஊராட்சி, தொட்டமஞ்சி சாலைப் பணிக்கு ரூபாய் 9 கோடியே 50 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், வனத் துறை அனுமதி வழங்காத காரணத்தினால்,

இப்போது பணிகள் மேற்கொள்ளப்படாமல் உள்ளன. அந்த மக்கள் 20 கிலோ மீட்டர் தூரம் கர்நாடக எல்லையில் நடந்து வரவேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த இரண்டு சாலைகளுக்கும் அனுமதி வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, நாடு சுதந்திரம் பெற்று 60 ஆண்டுகள் முடிந்தும்கூட, இன்றைக்கு பல கிராமங்கள் மின்சாரம் இல்லாமல் இருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே கல்லுப்பள்ளி, தப்பகுலி போன்ற இரண்டு கிராமங்களுக்கு வனத் துறையால் மின் கம்பம் நடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அந்த இரண்டு கிராமங்களுக்கும் மின் கம்பங்கள் நடுவதற்கு வனத் துறை அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வீரப்பன் தேடுதல் வேட்டையின்போது, அதிரடிப்படையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சதாசிவம் கமிஷன் பரிந்துரையை ஏற்று ரூ.1 கோடியே 20 இலட்சத்து ஐம்பதாயிரம் உதவித்தொகை வழங்கிய நமது முதல்வருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விடுபட்டவர்கள் பட்டியல் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கொடுக்கப்பட்டுள்ளது. விசாரித்து, உரியவர்களுக்கு அந்த உதவித் தொகையை வழங்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

வனப் பகுதியில் அமைக்கப்படும் சோலார் மின் வேலி என்பது, தொடர்ந்து வனத் துறையால் பராமரிக்கப்படாத காரணத்தினாலும், பேட்டரியை அங்கே ஆடு, மாடு மேய்ப்பவர்கள் எடுத்துச் சென்றுவிடுவதாலும் சோலார் மின் வேலி என்பது பயனற்றுப் போய்விடுகிறது. அதற்கு மாற்றாக வனப் பகுதியிலே அகழி வெட்டி கருங்கல் சுவர் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே ஆண்டுதோறும், சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், வனவிலங்குகளால் பயிர்ச் சேதம் ஏற்படுகிறது. எனவே, என்னுடைய தளி தொகுதியில், அஞ்செட்டி, உரிகம், மற்றும் தேன்கனிக்கோட்டை, இராயக்கோட்டை வனச் சரகங்களில் சுமார் 100 கி.மீ. தூரத்திற்கு அகழி வெட்டி கருங்கல் சுவர் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வன ஊழியர்களின் கோரிக்கை என்ற முறையிலே, வனத் துறையிலே 5 முதல் 10 ஆண்டுகளாக தினக் கூலிகளாகப்



பணியாற்றிவரும் 49 ஓட்டுநர்களை, பல்வேறு துறைகளில் தினக் கூலிகளாகப் பணியாற்றுபவர்களை பணி நிரந்தரம் செய்ததைப்போல இந்த 49 ஓட்டுநர்களையும் பணி நிரந்தரம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வனத் துறையிலே 30 ஆண்டுகளுக்கு மேலாக, பதவி உயர்வே இல்லாமல் இருக்கும் நிரந்தர ஓட்டுநர்களுக்கும், காவல் துறையிலே பதவி உயர்வு வழங்கப்படுவதைப்போல, பதவி உயர்வு வழங்க வேண்டும்.

வனத் துறையிலே பல ஆண்டுகளாக, தினக் கூலியாகப் பணியாற்றி வருகின்ற சமூக வன ஊழியர்கள் மற்றும் வனத் தோட்டக் காவலர்கள் சுமார் 3,500 பேரில் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் சுமார் 150 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டதுபோல மீதம் உள்ளவர்களுக்கும் படிப்படியாக பணி நியமன ஆணை வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், வெள்ளாறு ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புப் பகுதித் திட்டத்திலே, 1993-94 ஆம் ஆண்டு மாதாந்திரக் கூலிகளாகப் பணியாற்றிய Forest Conservator-களை கடந்தகால ஆட்சியிலே பணி நீக்கம் செய்தார்கள். அவர்களுக்கு மீண்டும் பணி நியமனம் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

வனப் பகுதிகளில், காட்டுப் பன்றிகள் மற்றும் காட்டு யானைகளால் ஏற்படுகின்ற விவசாயப் பயிர்ச் சேதத்திற்கும் உயிர்ச் சேதத்திற்கும், கடந்தகால ஆட்சியில், என்னுடைய தொகுதியில் நான்கு ஆண்டுகளாக இழப்பீட்டுத் தொகை என்பது அந்த விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, கடந்த கால ஆட்சியிலே ஏற்பட்டதற்கு இழப்பீட்டுத் தொகை ரூ.28 இலட்சத்து 32 ஆயிரமும், இந்த ஆண்டிற்கான இழப்பீட்டுத் தொகை ரூ.13 இலட்சத்து 36 ஆயிரமும் வழங்கியதற்கு, என்னுடைய தொகுதி விவசாயிகளின் சார்பாகவும் என் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொண்டு, இந்த இழப்பீட்டுத் தொகை என்பது போதுமானதாக இல்லை. ஒரு ஏக்கருக்கு ஒரு இலட்சம் ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்பட்டால், வனத் துறையிலே 10 ஆயிரம் அல்லது 15 ஆயிரம் ரூபாய்தான் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, அதை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தித்தர வேண்டும்.

பழங்குடி மக்களுடைய மகசூல் தொகை என்பது, முழுவதும் பழங்குடி மக்களுடைய அடிப்படை பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்தவேண்டுமென்று இருந்தும் வனத் துறை அதிகாரிகள் இடைத்தரகர்களோடு கூட்டு சேர்ந்து கொள்ளையடிக்கிறார்கள். குறிப்பாக, என்னுடைய தளி தொகுதியிலே, அஞ்சட்டி வனச் சரகத்தில் கடந்த ஆண்டு மகசூல் தொகை என்பது 15 இலட்சம் ரூபாய் அளவிற்கு ஏலம் போனது. இந்த ஆண்டு, அங்குள்ள வனத் துறை அதிகாரிகளும், இடைத் தரகர்களும் கூட்டு சேர்ந்து பழங்குடி மக்களுடைய மகசூலை முறையாக ஏலத்தில் அனுமதிக்காமல் இரண்டு இலட்சம் ரூபாய் அளவிற்கு ஏலம் எடுத்து, பல இலட்சம் ரூபாய் அளவிற்கு முறைகேடு செய்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கையை மேற்கொண்டு, பழங்குடி மக்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வனப் பகுதியில் வாழுகின்ற மலைவாழ் மக்களின் ஜீவாதாரத் தொழிலாக கால்நடை வளர்ப்பு உள்ளது. ஆகவே, வனப் பகுதியிலே கால்நடை வளர்ப்புத் தடையை நீக்கி, அவர்கள் கால்நடைகளை வளர்க்க அனுமதி வழங்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தளி தொகுதியிலே தேன்கனிக்கோட்டை வட்டத்தில் 1989 ஆம் ஆண்டு, மலைப் பாதுகாப்புச் சட்டம், Hill Conservation Act-ஐத் தளர்த்தி 19 ஊராட்சிகளில் வாழுகின்ற மலைவாழ் மக்களுக்கு அரசு அறிவித்த இரண்டு ஏக்கர் நிலமும் சுவாதீன அனுபோக நிலங்களுக்கும் பட்டா வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

உலகத்திலே உள்ள அனைத்து கலை-இலக்கியப் படைப்புகளையும் தமிழிலே படிக்கும் வகையில், தமிழில் மொழியாக்கம் செய்ய அரசு மொழிபெயர்ப்பு மையம் ஒன்றை அரசு ஏற்படுத்தவேண்டும். தமிழ் நூல்களை அனைவரும் வாங்கிப் படிக்கும் வகையில் ஆண்டிற்கு ஒரு முறை அரசு புத்தகக் கண்காட்சியை அமைத்து சலுகை விலையிலே விற்க வழிவகை செய்யவேண்டும். அரசு அலுவலகங்களிலுள்ள பெயர்ப் பலகைகள் மற்றும் சுற்றறிக்கைகள் எல்லாம் இன்றைக்கு ஆங்கிலத்திலே உள்ளன. அவை தமிழிலே அமைய ஏற்பாடு செய்யவேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கி. ஆறுமுகம்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம்.



**திரு. டி. இராமச்சந்திரன்:** மாற்றுத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

***திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, Point of Order. . .

**திரு. டி. இராமச்சந்திரன்:** இன்றைக்கு இளைஞர்களுக்காக, இளைஞர் நல வாரியம் அமைத்திட வேண்டும். 12 ஆண்டுகளுக்குப் பிறகு, படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு வேலையில்லா நிவாரணம் வழங்கிய முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், கலைஞர் அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே தினந்தோறும் பல கோடிக்கணக்கான முதலீட்டிலே முதலீட்டாளர் வருகின்றனர்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கி. ஆறுமுகம்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம்.

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கி. ஆறுமுகம்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம், ஒரு நிமிடம் பொறுங்கள். திரு. டி. இராமச்சந்திரன், நன்றி சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** ஆகவே, தனியார் துறையில் வேலைக்கான இட ஒதுக்கீட்டு முறையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுவரவேண்டுமென்று கூறி, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையை நிறைவு செய்துகொள்கிறேன், நன்றி.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கி. ஆறுமுகம்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம்.

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, Point of Order. . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கி. ஆறுமுகம்):** திரு. எல்.பி. தர்மலிங்கம், நீங்கள் பேசுங்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் ஐந்து நிமிடங்கள்தான். விரைவாகப் பேசி முடிக்கவேண்டும்.

*பிற்பகல் 12-30*

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** மூன்றாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் பொன்னான நாளான இன்று இந்த மாமன்றத்தில்

பேசுகின்ற வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்த எங்கள் குடும்பத்தின் தலைவர் முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு முதல்வர் அய்யா அவர்களுக்கு எனது பணிவான வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு இனமான பேராசிரியர் அவர்களுக்கும், அருளாளர் மாண்புமிகு ஆற்காட்டார் அவர்களுக்கும், எங்களை வழிநடத்திச் செல்கின்ற மக்கள் தளபதி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எனது மாவட்டச் செயலாளர் மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா அவர்களுக்கும் எனது பணிவான வணக்கங்கள். வனம் மற்றும் சுற்றுச்சூழல் விவாதத்திலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கும் எனது வணக்கம்.

வனம், நமது இயற்கை அளித்த பொக்கிஷம். மாதம் மும்மாரி பெய்ய வேண்டுமெனில் அதற்கு வனத்தில் மரங்கள் அவசியம். ஆனால், வனத்திலுள்ள மரங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. வனம் நீங்கலான பகுதிகளிலும்கூட மரங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. ஆகையால், மழை சரியான பருவங்களில் பெய்வதில்லை. ஆகவே, மரம் வளர்ப்பது கட்டாயம் ஆக்கப்படவேண்டும். எனவேதான், நமது கலைஞர் அரசு, காடு செழிக்க-நாடு செழிக்கும்; அதனால், வீடு செழிக்கும் என்னும் உன்னத நோக்கினை உள்ளடக்கி வனத்திற்கு ஒதுக்குகின்ற நிதியும், முக்கியத்துவமும் பாராட்டத்தக்கது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி மக்களின் 75 ஆண்டுகாலக் கோரிக்கையை வலியுறுத்துகிறேன். பிற்படுத்தப்பட்ட ஒரு பகுதி முன்னேற வேண்டுமானால், அதன் உள்கட்டமைப்பு வசதிகள் வளரவேண்டும். அதில் மிக முக்கியமானது போக்குவரத்து வசதியாகும்.

சத்தியமங்கலம்-சாம்ராஜ் நகர இரயில் இணைப்புத் திட்டமானது சுமார் 75 வருடங்களாக சத்தியமங்கலம் பகுதி மக்களும், எல்லையோர கர்நாடக மக்களும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டுள்ள திட்டமாகும். மரியாதைக்குரிய மைசூர் மகாராஜா திரு. கிருஷ்ணராஜ் உடையார் அவர்கள் ஆகஸ்ட் 22, 1926 ஆம் ஆண்டு சாம்ராஜ் நகர் இரயில்வே ஸ்டேஷனை திறந்து வைத்துப் பேசுகிறபோது, மேட்டுப்பாளையத்தையும், சாம்ராஜ் நகரத்தையும் இரயில்மூலம்



இணைக்க வேண்டும் என்ற தனது விருப்பத்தை வெளியிட்டுப் பேசினார்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, 1948 ஆம் ஆண்டு அப்போதைய இரயில்வே அமைச்சர் ஹெ.சி. தாஸப்பா அவர்கள், சாம்ராஜ் நகரம், சத்தியமங்கலம், மேட்டுப்பாளையம் இரயில் இணைப்புக்கான பூர்வாங்க சர்வேயை அறிவித்தார். 1967 ஆம் ஆண்டு அப்போதைய மத்திய அரசின் உணவு அமைச்சர் மரியாதைக்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கோபிசெட்டிப்பாளையம் நாடாளுமன்றத்திற்குப் போட்டியிட்டபோது தனது தேர்தல் வாக்குறுதியாக சாம்ராஜ் நகரம்-சத்தியமங்கலம்-மேட்டுப்பாளையம் இரயில் திட்டத்தை அறிவித்தார்.

1996 ஆம் ஆண்டு நமது கழகம் பங்கு பெற்றிருந்த அப்போதைய மத்திய அரசு, சாம்ராஜ் நகரம்-சத்தியமங்கலம்-மேட்டுப்பாளையத்திற்கான அகல இரயில் பாதைத் திட்டத்தை அங்கீகரித்து உத்தரவிட்டது.

பெங்களுருக்கும், மேட்டுப்பாளையத்திற்கும் இடையே 328 கி.மீ. தூரத்திற்கு இந்த அகல இரயில் பாதைத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்குள் வனப் பகுதியாகச் சொல்லப்படுகிற 58 கிலோ மீட்டரில் மட்டும்தான் சர்வே செய்யும் பணி பாக்கி இருக்கிறது. மற்ற அனைத்துப் பகுதிகளுக்கும் சர்வே பணி முடிவடைந்துவிட்டது. இந்த 58 கி.மீ. தூரமானது தமிழ்நாட்டுக்குள் வனப் பகுதியாகச் சொல்லப்படுகிற கெட்டவாடி என்ற ஊருக்கும், பன்னாரி என்ற ஊருக்கும் இடைப்பட்ட தூரமாகும். இந்த 58 கி.மீ. தூரத்திலும் சர்வே செய்ய அனுமதி கேட்டபோது, அப்போதைய அ.தி.மு.க. அரசு, வனத் துறையினர் அங்கே சரணாலயம் அமைப்பதாகக் காரணம் கூறி, அனுமதி மறுத்துவிட்டது. இந்த 58 கிலோ மீட்டரில் அடர்ந்த வனப் பகுதி என்பது வெறும் 20 கி.மீ. தூரத்திற்குள்தான் இருக்கும்.

2004 பாராளுமன்றத் தேர்தலின்போது இப்போதைய மத்திய ஜவுளித் துறை இணை அமைச்சர் மாண்புமிகு திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள் நமது அணியின் சார்பாக கோபிசெட்டிப்பாளையம் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டபோது, இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவேன் என்றார். ஆனால், அப்போதைய. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். (குறுக்கீடு) சீக்கிரம், நேரமாகிவிட்டது.

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** முடித்துவிடுகிறேன். முக்கியமான சமாச்சாரம். அப்போதைய அ.தி.மு.க. அரசு மீண்டும் பழைய காரணத்தையே சொல்லி சர்வே செய்ய அனுமதி மறுத்துவிட்டது.

*22-1-2005*-ல் நடைபெற்ற மத்திய இரயில்வேயின் சாம்ராஜ் நகர்-சத்தியமங்கலம் ஆய்வுத் திட்ட தொடக்க விழாவில் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. இளங்கோவன், மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. வேலு, மாண்புமிகு மத்திய அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். நான், சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, வனத் துறை அமைச்சரையும், வனத் துறை அதிகாரிகளையும் பலமுறை சந்தித்து முறையிட்ட பிறகு, மத்திய ஜவுளித் துறை அமைச்சர், மத்திய இரயில் துறை அமைச்சர், மாநில கைத்தறி அமைச்சர், மாநில வனத் துறை அமைச்சர், வனத் துறை அதிகாரிகள், இரயில்வே துறை அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய கூட்டுக் கூட்டத்தை 1-9-2006 அன்று நடத்தி, விரிவாக விவாதித்தோம். (மணியடிக்கப்பெற்றது) தலைவர் அவர்களே, மிக முக்கியமான பிரச்சினை. அதன் பிறகு மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்களும், நானும். . .

பிற்பகல் *12-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன். (குறுக்கீடு) திரு. தர்மலிங்கம், உரையை முடியுங்கள்.

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** சீக்கிரம் பேசி முடித்துவிடுகின்றேன். நமது மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி அவர்களும், பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் நண்பர் திரு. சுப்பிரமணியம் அவர்களும் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களைச் சந்தித்து இத்திட்டத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொண்டோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சின்னசாமி, உங்கள் இடத்தில் போய் உட்காருங்கள்.

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** அதன்பிறகு இரயில்வே துறையினரை Central Empowered Committee-யிடம் ஒப்புதல் பெற்று வருமாறு வனத் துறையினர் அறிவுறுத்தினர். தமிழக அரசு Central Empowered Committee-யிடம் இந்தத் திட்டத்திற்கு ஆதரவாக affidavit தாக்கல் செய்தது. (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கலைராஜன், no clarification; No Point of Order. Sit down. மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன்.

***திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல், வனம், பொதுத் துறை, தமிழ் வளர்ச்சி மற்றும் இளைஞர் நலன் ஆகிய மானியக் கோரிக்கைகள் குறித்த விவாதத்திலே பங்கேற்க வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். முக்கியமாகச் சுற்றுச்சூழல் துறையிலே சில கருத்துகளைத் தங்கள்முன் வைக்க நான் விரும்புகின்றேன். பொதுவாகவே வளர்ச்சி என்பது இன்னொரு வகையில் எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் என்பது இயற்கையின் விதியாக உள்ளது. எந்தத் துறையிலும் ஏற்படும் வளர்ச்சி, சுற்றுச்சூழலை பாதிப்புக்கு உள்ளாக்கத் தவறுவது கிடையாது. அதற்கு அண்மைக்கால உதாரணமாக, மின்னணுக் கழிவுகளைப் பற்றிச் சொல்லலாம். இன்று உலகமெங்கும் ஐ.டி. வளர்ச்சி பிரமிக்கத்தக்கதாய் உள்ளது. இந்தியா போன்ற வளரும் நாடுகளில் அரசாங்கமே முன்னின்று இத்துறைகளை மேம்படுத்த சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது. எலக்ட்ரானிக் பொருட்கள் வீடு, பள்ளி, அலுவலகம் எனத் தொடங்கி, இன்று ஒவ்வொருவருடைய பாக்கெட்டிலும் Cell phone ஆக வந்து அமர்ந்துவிட்டது. ஒரு வீட்டில் மரம் இருக்கின்றதோ இல்லையோ, ஒவ்வொருவர் வீட்டிலும் ஏதோ ஒரு ரூபத்திலே எலக்ட்ரானிக் பொருள் இருக்கின்றது. மறு சுழற்சி என்ற பெயரிலே அவற்றிலுள்ள அபாயம் விளைவிக்கக்கூடிய Arsenic, Barium, Chromium, Lithium, காரீயம் போன்ற பல்வேறு பொருட்கள் மின்னணுக் கழிவுகளைப் பிரித்தெடுக்கும்போது ஏற்படுகின்றன. குறிப்பாகத் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, சென்னை, புது மூர் மார்க்கெட், புழல், ஊரப்பாக்கம் போன்ற பகுதிகளில் மின்னணுக் கழிவுகள் அதிகமாக உண்டாகின்றது என்று சொல்கின்றார்கள். இப்பகுதிகளிலுள்ள மின்னணுவைப் பிரித்தெடுக்கும் சிறு தொழிற்சாலைகளே இதற்குக் காரணமாக இருக்கின்றன என்று சொல்கின்றார்கள். எனவே, மின்னணுக் கழிவுகளைப் பற்றிய விழிப்புணர்வை நமது அரசு மக்களிடம் கொண்டு சென்று அதற்கான நல்ல சட்டதிட்டங்களையெல்லாம் உருவாக்கிக் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மரம் நடக்கூடிய பல்வேறு நலத் திட்டங்களையெல்லாம் இன்றைக்கு நமது அரசு செய்து வருகின்றது. சுற்றுச்சூழலை பாதுகாக்கக்கூடிய கடமையில் அரசு மட்டுமல்லாமல், அரசுசாரா அமைப்புகள், நாட்டு நலப் பணித் திட்டங்கள், தேசிய மாணவர் படை, நேரு யுவ கேந்திரா, அரிமா சங்கம் மற்றும் நூற்றுக்கணக்கான தொண்டு நிறுவனங்களும், சமூக நோக்கோடு ஈடுபட்டால்தான் எதிர்கால மக்களுக்கு இந்த உலகத்திலே மிச்சம்·வைக்கமுடியும் என்ற கருத்தை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். எனவே, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய Non-Governmental Organisations-ஐ எல்லாம் அரசோடு இணைத்து நல்ல திட்டங்களையெல்லாம், மரம் நடக்கூடிய, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கக்கூடிய திட்டங்களையெல்லாம் நிறைவேற்றவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

இப்போது, உலகத்தையே பயமுறுத்திக்கொண்டிருக்கின்ற விஷயம் என்னவென்று சொன்னால், plastic papers. இன்றைக்கு எதை எடுத்தாலும் polythene பை-களை நாம் உபயோகப்படுத்தக்கூடிய காரணத்தினால், சுற்றுச்சூழல் மிக மோசமாகக் கெட்டுக்கொண்டிருக்கின்றது. குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலே இருக்கக்கூடிய எங்களுடைய நிலங்களைப் பார்த்தீர்களானால், சில இடங்களில் பயிர்கள் வளருவதில்லை, சில இடங்களில் தென்னை போன்ற பயிர்களை வைக்கும்போது அவை ஏன் வளரவில்லை என்று அருகிலே சென்று பார்த்தோமானால், அங்கெல்லாம் polythene papers இருக்கின்றன. எனவே இந்த polythene paper-களுடைய உபயோகத்தை முழுவதுமாகத் தடைசெய்து அதற்குப் பதிலாக சணலின்மூலமாகச் செய்யக்கூடிய பைகளையும், காகிதப் பைகளையும் செய்யக்கூடிய தொழிற்சாலைகளை ஊக்குவித்து, அவற்றின் விற்பனையை அதிகரிக்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

இளைஞர்களைப் பொறுத்தவரை நமது கொள்கைக் குறிப்பேட்டிலே ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டத் தலைமையகத்திலே யோகா கற்றுக் கொடுப்பதாகவும், அதற்குப் பயிற்றுநர்களை உருவாக்கியிருப்பதாகவும் கொள்கைக் குறிப்பேட்டிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. வட்டார அளவிலே இருக்கக்கூடிய பல இடங்களுக்கெல்லாம் அவர்களையே மாதத்திற்கு ஒரு முறையோ, இரண்டு முறையோ ஒரு camp போன்று சிறப்பு முகாம் போன்று



அமைத்து, கிராமத்தில் இருக்கக்கூடிய மாணவர்களும் யோகாவைப் பயிலக்கூடிய ஒரு வாய்ப்பை நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். இளைஞர் நலன்களைப் பற்றி பேசக்கூடிய இந்த நேரத்திலே, அரசின் கவனத்திற்கு முக்கியமான விஷயத்தைக் கொண்டுவர விரும்புகின்றேன்.

*பிற்பகல் 12-40*

தமிழ்நாடு கூடைப் பந்தாட்ட அமைப்புக்கு ஒரு முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறார். ஆனால், இதுவரை 23 வருடங்களாக எந்தவொரு கணக்கு வழக்கையும் அரசாங்கத்திற்கோ, பதிவுத் துறைக்கோ தெரியப்படுத்தாமல் இருப்பதாகவும், ஒரு உள் விளையாட்டரங்கம் அமைத்து அந்த விளையாட்டிற்காக எந்தவொரு முன்னேற்றத்தையும் எட்டவில்லை என்றும், புகாராக என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். மாறாக, உள் விளையாட்டரங்கம் என்பது திருமணத்திற்கும், சினிமா படம் எடுப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. எனவே, அரசு கொடுத்த இடத்தை அவரிடமிருந்து எடுத்து விளையாட்டிற்காக யார் சிறந்த முறையில் பயன்படுத்துகிறார்களோ அவர்களிடம் ஒப்படைக்கவேண்டுமென்று என்னிடம் கோரிக்கையாக அவ்விளையாட்டு ஆர்வலர்கள் கொடுத்திருக்கின்றார்கள். ஏற்கெனவே, இதைப் பொறுத்தவரையிலே அந்த முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரிக்கு பதிவுத் துறை மூலமாக நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நடவடிக்கையை விரைவுபடுத்தி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த விளையாட்டு அரங்கம் தொடர்பாக இப்போது தலைவராக இருக்கக்கூடிய ஐ.ஏ.எஸ். அதிகாரிமீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. இந்த நடவடிக்கையை விரைவுபடுத்தி விரைவிலே விளையாட்டு அரங்கத்தை மீட்டுக் கொடுக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

எங்கள் பகுதியைப் பொறுத்த அளவில், தஞ்சை மாவட்டத்திற்கு அருகிலே இருக்கக்கூடிய காரணத்தினாலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அரியலூர் அரசு சிமெண்ட் ஆலையினுடைய புகை நகரைச் சுற்றியிருக்கக்கூடிய கிராமங்களில் பரவுவதால் பல்வேறு நோய்கள் பரவக் காரணமாக இருப்பதாகவும், ஐந்து கோடி ரூபாய் செலவு செய்தால் தடுத்துவிடலாம் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள் என்றும் சொல்கிறார்கள். ஆகவே, இதுபோன்ற தூசி பரவாமல் இருப்பதற்கு நிதியொதுக்கீடு செய்து அந்தப் புகையை தடுத்து அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு நோய் பரவாமல் காக்கவேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் அரசினுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய அரசு இரப்பர் கழகத்திலே 30 ஆண்டுகாலத்திற்கும் மேலாக தினக் கூலி அடிப்படையிலே பணியாற்றும் பால் வெட்டும் தொழிலாளர்களுக்கு ரூபாய் 80 சம்பளமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. அதை ரூபாய் 200 ஆக உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று அந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு அண்ணன் திரு. ஜெயபால் அவர்கள் தன்னுடைய கோரிக்கையாகத் தெரிவிக்கின்றார் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, காங்கேயம் பேரூராட்சிப் பகுதியிலே கழிவு நீர், காங்கேயம், அகிலாண்டபுரம், ஒரத்துப்பாளையம் பகுதிகளிலே பல ஏக்கர் விவசாய நிலங்களை மாசுபடுத்தி, மிகப் பெரிய கொசு உற்பத்திக் கேந்திரமாக அப்பகுதிகள் விளங்குகின்றன. எனவே, அகிலாண்டபுரம் குளத்தைத் தூர்வாரி வடிகால் அமைத்து காங்கேயம் மக்களைக் காத்திட வேண்டுமென்று அந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் கூறியிருக்கக்கூடிய கருத்துகளையும் தங்கள்முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அந்தப் பகுதிகளைப் பொறுத்தவரையிலே, சுற்றுப்புறச்சூழலைக் காக்கவேண்டிய கடமை அரசுக்கு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, பொதுத் துறையும் இன்றைய மானியக் கோரிக்கைகளில் வருவதால் இன்னும் ஒரு கோரிக்கையையும், நான் சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆன்மிகப் பெரியவர், மறைந்த திரு. கிருபானந்த வாரியார் சுவாமிகளுடைய சிலை, சென்னையில் ரூபாய் 10 இலட்சம் செலவிலே தயாராக இருக்கின்றது. அதை. நிறுவுவதற்கு இடம் கேட்டு



விண்ணப்பித்திருக்கிறார்கள். சென்னையிலே சிலையை நிறுவுவதற்கு தகுந்த இடத்தை அரசு ஒதுக்கித் தரவேண்டுமென்று ஆன்மிகப் பெருமக்களின் சார்பாக இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கை விவாதத்திலே கலந்துகொள்ள வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், ஒரு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். உள்ளாட்சித் துறையினுடைய மானியக் கோரிக்கையின்போதே தெரிவித்திருக்கவேண்டும். நேரம் கிடைக்காத காரணத்தாலே நன்றி தெரிவிக்க முடியவில்லை. பட்டுக்கோட்டையை பொறுத்தவரையில், பாதாள சாக்கடைத் திட்டத்தை நம்முடைய மரியாதைக்குரிய தளபதி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக பட்டுக்கோட்டை மக்களின் சார்பாக எங்கள் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேயராக இருந்த காலங்களிலே, சென்னையை சிங்காரச் சென்னையாக மாற்றுவேன் என்று கூறிச் சிறப்பாகச் செயல்பட்டீர்கள். இப்போது உள்ளாட்சித் துறை அமைச்சராக, தமிழகத்தை சிங்காரத் தமிழகமாக மாற்றவேண்டும் என்று நல்ல முடிவெடுத்துக்கொண்டு சிறப்பாகச் செயல்படக்கூடிய நீங்கள் பட்டுக்கோட்டைக்கு வந்திருந்து அடிக்கல் நாட்டி அந்தத் திட்டத்தை தொடங்கிவைத்து எங்களைப் பெருமைப்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சீனிவாசன்.

***திரு. கு. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பேரவையில் என்னை இடம்பெறச் செய்த, மக்கள் மனதில் என்றும் உள்ள முதல்வர், மாண்புமிகு அம்மா அவர்களை மகிழ்ச்சியுடன் பணிந்து வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) வனம் மற்றும் சுற்றுச்சூழல், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை குறித்த மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகின்ற வாய்ப்பை எனக்கு அளித்த தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு என் உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் உள்ள ஒரே ஒரு பிரச்சினையை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் 2005 ஆம் ஆண்டு,

12-வது நிதிக் குழு மானியத்தில் பல்லாயிரக்கணக்கான வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டு, அவற்றுள் சீர்கேடு அடைந்திருக்கும் எனது தொகுதியில் உள்ள கேசவப் பிள்ளை பூங்கா, குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகளை இடித்து, புதிதாகக் கட்டித் தருவதற்கு கருத்துரு பெறப்பட்டு, ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பின் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அதன் தொடர்ச்சியாகத் தற்போது 1,536 வீடுகளை இடிப்பதற்குப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக அறிகிறேன்.

பிற்பகல் 12-45

சுனாமி காலத்தில், தக்கை கல் பகுதியில், புதிய குடியிருப்புகளைக் கட்டித் தரும்போது, அப்பகுதி மக்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் அடிப்படை வாழ்வாதாரங்களை ஏற்படுத்தித் தந்தார்கள். அதைப்போலவே, கேசவப் பிள்ளை பூங்கா குடிசைமாற்று வாரியக் குடியிருப்பு வாசிகள், புதிதாக வீடுகள் கட்டப்படுவதற்கு இருப்பிடத்தைக் காலி செய்து வேறு இடங்களுக்குச் செல்லும்போது, அவர்களுக்கும் அடிப்படை வாழ்வாதாரத்தை ஏற்படுத்தித்தர வேண்டும் என அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அப்பகுதியில் 15 ஆயிரம் மக்கள் வசித்து வருகிறார்கள். 3 ஆயிரம் மாணவ, மாணவியர் அருகில் உள்ள பள்ளிகளில் படித்து வருகிறார்கள். மேலும், ஏழை மக்களாகிய அவர்கள் அப்பகுதிக்கு அருகிலேயே கூலி வேலை செய்பவர்கள். எனவே, அரசு இது குறித்து கவனத்துடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் 1960 ஆம் ஆண்டில் கட்டப்பட்டு ஒரு இறகுப் பந்து உள் விளையாட்டு அரங்கம் பயன்பாட்டில் இருந்து வருகின்றது. அந்த அரங்கத்தின் தரைப் பகுதி யாவும் மரத்தினால் ஆன பலகைகளால் செய்யப்பட்டது. 2005-ல் ஏற்பட்ட மழை வெள்ளத்தாலும் மற்றும் மாநகராட்சி நிருவாகத்தினர் அந்த அரங்கைத் தேர்தல் சமயங்களில் ஆவணங்கள் வைக்கப் பயன்படுத்துவதாலும் அந்தத் தரைப் பகுதி மிகவும் பாழ்பட்டுள்ளது. அதைச் சீர்செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்தித்து, 1994 ஆம் ஆண்டில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் என்ற மகத்தான



திட்டத்தைக் கொண்டுவந்து, ரூ.633.55 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தினார்கள். அந்த நிதி 2004-2005-லேயே முழுவதும் செலவு செய்யப்பட்டுவிட்டதால், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை-2 என்ற திட்டத்தைத் தொடங்கிட வங்கிக் கடன் கிடைப்பதற்குச் சற்று காலதாமதம் ஆகும் சூழ்நிலையில், இந்தத் திட்டம் தொடர்ந்து தொய்வில்லாமல் செயல்படுத்தப்படவேண்டும் என்ற நோக்கில், அரசு நிதியிலிருந்து ரூ.69 கோடி ஒதுக்கித் தந்து திட்டத்தைத் தொடர்ந்து நடத்தி சாதனை படைத்தவர்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்.

அதுமட்டுமல்லாமல், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களின்மூலம் தமிழகத்தின் வனப் பரப்பை அதிகப்படுத்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதன் காரணமாக, 2005 ஆம் ஆண்டு டேராடூனில் உள்ள இந்திய வன அளவை ஆராய்ச்சி மையம் தமிழகத்தின் வனப் பரப்பளவை ஆராய்ந்து வனப் பரப்பளவு அம்மாவின் ஆட்சிக் காலத்தில் 17 சதவிகிதத்திலிருந்து 21 சதவிகிதமாக உயர்ந்ததாகக் கூறியிருக்கிறது.

2001 முதல் 2006 வரை சந்தன மரங்கள் விற்றதில் அரசிற்கு வருவாய் 363 கோடி ரூபாய் கிடைத்துள்ளது. ஆனால், 2006-2007 ஆம் ஆண்டு சந்தன மரம் விற்றதில் 42 கோடி ரூபாயும், 2007-2008 ஆம் ஆண்டு 72 கோடி ரூபாயும் கிடைத்துள்ளது. ஆக, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் சந்தன மரம் விற்றதில் அரசிற்கு வருவாய் சராசரியாக ஆண்டிற்கு 72 கோடி ரூபாய் கிடைத்துள்ளது. இந்த இரண்டு வருடத்தில் சராசரி ஆண்டு வருமானம் 62 கோடி ரூபாய்தான் கிடைத்துள்ளது. இதற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும். சந்தனக் கிடங்குகள் ஏதாவது தீப்பற்றி எரிந்ததா? அல்லது திருடு போய்விட்டதா? என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும்.

சென்னை மக்களுக்கு வீராணம் திட்டம் தந்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் காட்டுக் கொள்ளையன் வீரப்பன் சுட்டு வீழ்த்தப்பட்டான். வீரப்பன் கொல்லப்பட்டதன்மூலம் ஏராளமான வனங்கள் மற்றும் வன விலங்குகளைப் பாதுகாத்து, சந்தன மரங்கள் வெட்டப்படுவதிலிருந்து தடுத்து சட்டம், ஒழுங்கை நிலைநிறுத்திய மாண்புமிகு அம்மா அவர்களின் நிருவாகத் திறமையை இந்த நாடே தெரிந்துகொண்டிருக்கின்றது.

மேலும், கர்நாடகாவில் தற்போது நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் வீரப்பன் கொல்லப்பட்டதற்குப் பிறகு நடைபெறும் முதல் தேர்தலாகும். ஹனூர், கொள்ளேகால், சாம்ராஜ் நகர் ஆகிய தொகுதிகளில், வீரப்பனால் கடத்தப்படுவோம் என்ற அச்சத்தினால் வேட்பாளர்கள் வாக்குகள் சேகரிக்கமுடியாத நிலை இருந்தது. ஆனால், தற்போது வீரப்பன் கொல்லப்பட்டதற்குப் பிறகு அத்தொகுதிகளில் வேட்பாளர்கள் கட்சிக்காரர்களுடன் வாக்கு சேகரிக்கச் செல்கிறார்கள். மக்களும் மகிழ்ச்சியாக வாக்களித்துத் தங்களுடைய ஜனநாயகக் கடமையை நிறைவேற்றுகிறார்கள். ஆகவே தமிழகத்திற்கு மட்டுமல்ல, தமிழக வனப் பகுதிகளுக்கு மட்டுமல்ல, கர்நாடகத்திற்குக்கூட வீரப்பன் ஒழிப்பு பயன்பாடாக இருந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இப்படி வனப் பரப்பினை அதிகரிக்கும் நோக்கத்தோடு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் செய்த சாதனைகளுக்கு நேர் எதிராக தமிழக அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை சார்பில் கடந்த ஆண்டு செப்டம்பர் 3 ஆம் தேதி வெளியிடப்பட்ட அரசாணையில் வெட்டப்பட்ட மரங்கள், விறகு மற்றும் மூங்கில் போன்ற மரங்களைக் கொண்டு செல்வதற்கு வனத் துறையிடம் அனுமதிச் சீட்டுப் பெறவேண்டியதில்லை என்று கூறப்பட்டுள்ளது. இந்த அரசாணையின்மூலம் சமூக விரோதிகள் வனப் பகுதிகளில் உள்ள பச்சை மரங்களை வெட்டி எடுத்துச் செல்லும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளதால் அரசு அதற்குத் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

வனத் துறை வெளியிட்டுள்ள மற்றொரு அரசாணை நாள் 18-2-2008-ல் வனச் சாலைகளைப் பயன்படுத்த அனுமதிச் சீட்டு வாங்க வேண்டியதில்லை என்று கூறப்பட்டுள்ளது. இத்தகைய அனுமதியைக் கொடுத்தால் விஷமிகள் இதைத் தவறாகப் பயன்படுத்திவிட மாட்டார்களா என்று அரசுதான் சிந்திக்கவேண்டும்.

பிற்பகல் 12-50

தற்போது தமிழகத்தில் தீவிரவாதக் குழுக்களும் நக்ஸல்களும் வனப் பகுதியில் மறைந்திருப்பதாகவும் அவர்களைக் காவல் துறை கைது செய்து ஆயுதங்களைக் கைப்பற்றி உள்ளதாகவும் செய்திகள் பத்திரிகைகளில் வந்தவண்ணம் உள்ளன. இத்தகைய அரசாணைகளால் மேற்சொன்ன விளைவுகள் அதிகமாகிவிடாதா என்பதை அரசு சிந்திக்கவேண்டும்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில், தமிழ்நாடு அரசு, ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. ராஜாராமன் அவர்கள் தலைமையில் மாநில வன ஆணையம் ஒன்றை அமைத்துள்ளதாக அறிகிறேன். வனக் கொள்கை மற்றும் சட்ட திட்டங்களைப் பரிசீலித்து அவற்றை மக்கள் நலன் கருதி மாற்றி அமைக்கப் பரிந்துரை செய்தல், வன அலுவலர்களின் பணி மேம்பாட்டுக்காகப் பரிந்துரைத்தல், தகவல் தொழில்நுட்பம்மூலம் வன மேலாண்மை அபிவிருத்திக்காக பரிந்துரை செய்தல் ஆகியவை மாநில வன ஆணையச் செயல்பாடுகளாக அமையும் என்று தெரிகிறது. எனவே, மாநில வன ஆணையம்மூலம் தகுந்த பரிந்துரைகளைப் பெற்று, உலக வெப்பமயமாதல் மற்றும் பிற சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கும் அரசு உரிய தீர்வு காணவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் சுற்றுச்சூழல் துறை புதிதாகத் துவக்கப்பட்டது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுனாமி தாக்குதலுக்குப் பிறகு, 2005-ல் கடலோரப் பகுதிகளில் மாங்குரோவ் சதுப்பு நிலக் காடுகளை உருவாக்கிடவும், பசுமை அரண் ஏற்படுத்திடவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். மேலும் 5 கடலோர மாவட்டங்களில் ஒரு கோடி ரூபாய் செலவில் சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பில் மாங்குரோவ் காடுகள் வளர்க்கும் திட்டத்தைச் செயல்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். 13 கடலோர மாவட்டங்களில் 7 கோடி ரூபாய் செலவில் சுமார் 5,000 ஏக்கர் பரப்பில் பசுமை அரண் உருவாக்கவும் ஆணை பிறப்பித்தார்கள் அம்மா அவர்கள்.

தற்போது உலகெங்கிலும் Global warming—அதாவது உலக வெப்பமயமாதல் பற்றிப் பேசப்படுகிறது. Tamil Nadu Environment Council என்ற அமைப்பு தன்னுடைய ஆய்வில் பின்வருமாறு கூறியுள்ளது:

"The United Nations panel report warns that glaciers across the Himalayas are melting at an alarming rate and may disappear altogether by 2035" என்றும், "The cities of Chennai, Mumbai are in the list of cities to be affected (immersed in the sea) by global warming" அதாவது, உலக வெப்பமயமாதல் காரணமாக சென்னை மற்றும் மும்பை நகரங்கள் கடலில் மூழ்கக்கூடிய அபாயம் இருப்பதாகவும், கடல் மட்டம் உயரும் அபாயம் இருப்பதாகவும் கூறியிருக்கிறது. இதனால் பூமி வெப்பமடைவதைக் கட்டுப்படுத்த மரங்கள் வெட்டுவதைத்

தடுக்கவேண்டும். Carbon-di-oxide வாயுவைக் கட்டுப்படுத்தவேண்டும். வாகனங்களின் பெருக்கத்தைக் குறைக்கவேண்டும். அபாயகரமான தொழிற்சாலைகளை மூடவேண்டும். நிலக்கரிப் பயன்பாட்டையும் பெருமளவு குறைக்கவேண்டும்.

மாசுக் கட்டுப்பாடு வாரியம், போகிப் பண்டிகையின்போது பிளாஸ்டிக், இரப்பர் போன்றவற்றை எரிக்கக் கூடாது என்று வருடத்திற்கு ஒரு முறை பிரச்சாரம் செய்கிறது. சென்னை மாநகராட்சியில் 10 மண்டலங்களுக்கும் தனித் தனியாக குப்பை கொட்டும் வளாகங்கள் உள்ளன. எனது தொகுதியில் மண்டலம் 3 மற்றும் (மணியடிக்கப்பெற்றது) மண்டலம் 5-க்கான குப்பை கொட்டும் வளாகம் அமைந்திருக்கின்றது. இந்த இடங்களில் வருடம் முழுவதும் குப்பைகள், கழிவுகள் எரிந்து கொண்டிருப்பதால் அருகிலுள்ள குடியிருப்புவாசிகளுக்கு பெரும் சுகாதாரச் சீர்கேட்டினை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. எனவே, குப்பைகள் எரிக்கப்படாமல் அகற்றப்படவேண்டியது குறித்து, மாசுக் கட்டுப்பாடு வாரியம் சென்னை மாநகராட்சிக்கு அறிவுறுத்தவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் எந்த ஒரு திட்டத்தைப் பின்பற்ற வேண்டுமென்றாலும் அரசுதான் அதற்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில், மழைநீர் சேகரிப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதை அனைத்து அரசுக் கட்டடங்களிலும் செய்திடவேண்டும் என்று ஆணையிட்டார்கள். அதன் காரணமாக மக்களும் தங்களுடைய வீடுகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்தினார்கள். அதன்மூலம் நிலத்தடி நீர் வெகுவாக உயர்ந்தது என்பதையும் நாம் கண்கூடாகக் கண்டோம்.

அதுபோலவே, உலக வெப்பமயமாதல் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டுமெனில் அரசு இதற்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும். இப்போது உலகெங்கிலும் குண்டு பல்புகளைப் பயன்படுத்துவதற்கு தடை செய்திருக்கிறார்கள்.

சட்டங்களை இயற்றும் இந்த சட்டமன்றத்திலேகூட அழகிய விளக்குகள் இருக்கின்றன.

அந்த விளக்குகளில் குண்டு பல்புகள்தான் பொருத்தப்பட்டிருக்கின்றன. அதை மாற்றி CFL என்கின்ற Compact Fluorescent Lamp-களைப் பொருத்தவேண்டும். அதனால் அரசுக்கு மின்சாரச் செலவும் மிச்சமாகும். அதிக வெளிச்சமும் தரும். வெப்பமும் குறைவாக வெளியிடப்படும்.



மரம் மழையைக் கொடுக்கும். மழை மண் வளத்தைப் பெருக்கும். சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியான ரூபாய் ஒரு கோடியே 20 இலட்சத்திலிருந்து, ஒரு சதவிகிதத்தை, அதாவது 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயை, வரையறுக்கப்பட்ட பணிகளில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், தங்கள் தொகுதியில் மரக் கன்றுகள் நடுவதற்கு ஒதுக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சீனிவாசன், 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டன.

**திரு. கு. சீனிவாசன்:** முடிந்துவிட்டது, முடிந்துவிட்டது சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், உரையை முடியுங்கள்.

**திரு. கு. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "Politics is almost as exciting as war, and quite as dangerous; In war, you can only be killed once, but in politics many times" என்று சர் வின்ஸ்டன் சர்ச்சில் தெரிவித்துள்ளதைப்போல மாண்புமிகு அம்மா அவர்களை அரசியல் போரில் எதிரிகளும், துரோகிகளும் எத்தனை முறை வீழ்த்த முயற்சித்தாலும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எந்தக் காலத்திலும் எந்த நிலையிலும் வீழ்ச்சியே கிடையாது எனக் கூறி, என் உரையை நிறைவு செய்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

பிற்பகல் 12-55

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டினுடைய வரலாற்றை எழுதுபவர்கள், காவிரிக் கரையில் இருந்துதான் தொடங்கவேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் குரல் கொடுத்தார்கள். இந்திய நாட்டினுடைய வரலாறு மட்டுமல்ல, இந்திய நாடே எப்படி ஆட்சி செய்ய வேண்டுமென்று சொல்லுகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கி இன்று தமிழகத்தைச் செம்மையாக வழிநடத்திச் சென்றுகொண்டிருக்கின்ற எங்களுடைய உயிரினும் மேலான தலைவர், தமிழ் நெஞ்சங்களில் எல்லாம் நிறைந்திருக்கின்ற தலைவர் என்னுடைய இதய தெய்வம் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் இருக்கும் திசை நோக்கி

என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கழகத்தின் பொதுச் செயலாளர், பண்பின் திருவுருவம், நடமாடும் தமிழ்ப் பூங்கா, வணக்கத்திற்குரிய பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கண்ணகிக்கு சிலை அமைக்க இமயம் வரை சென்று, வென்று வந்தான் சேரன் செங்குட்டுவன். அவனுடைய தளபதியாய், மாவீரனாய் அன்று வில்லவன்கோதை செயல்பட்டான். அதைப்போல இன்று தமிழினத்தின் தளபதியாய், தலைவர் கலைஞர் அவர்களின் தளபதியாய், தமிழர்களின் தாகம் தீர்க்க ஜப்பான் நாடு வரை சென்று நிதி பெற்று வந்த (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களின் நெஞ்சங்களில், இதய வானில் உதயசூரியனாய் மிளிர்கின்ற, இப்படைத் தோற்கின் எப்படி வெல்லும் என்று இந்த நாட்டுக்கு அறிவிக்க நெல்லைச் சீமையில், இளைஞர்களின் எழுச்சிப் படையை நடத்திக்காட்டிய எங்களுடைய எதிர்காலம், வணக்கத்திற்குரிய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தலைவருக்குத் தோழமையாக, கழகத்தின் பொருளாளராக, பகை அறியாப் பண்பாளராக இருக்கின்ற அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், எங்கள் மாவட்டக் கழகத்தின் செயலாளர், தமிழ்நாடு அரசினுடைய, போக்குவரத்துத் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. கே.என். நேரு அவர்களுக்கும், சக அமைச்சர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து என் உரையைத் துவக்குகின்றேன்.

இன்று இந்த மானியக் கோரிக்கையின்மீது 10 சட்டமன்ற உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். இன்று நான் பதிலளிக்கின்ற ஒரு நல்ல வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். இது ஒரு பொன்னான நாள். தமிழ்நாட்டில் இருக்கின்ற மக்களெல்லாம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தலைவர் கலைஞர் அவர்கள்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக வரவேண்டுமென்று வாக்களித்து, தலைவர் கலைஞர் அவர்கள், 2 ஆண்டுகளுக்கு முன்பு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நாள். பொறுப்பேற்ற அந்த நாளிலேதான் இந்தத் தமிழ்நாட்டு மக்களுக்கெல்லாம் ஏழையெளியவர்கள், அன்றாடம்காய்ச்சிகள் பயன்பெற வேண்டும் என்பதற்காக 1 கிலோ அரிசியை 2 ரூபாய்க்கு



வழங்கவேண்டுமென்று ஆணை பிறப்பித்த நாள். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய நாட்டினுடைய முதுகெலும்பாக வாழ்ந்து கொண்டிருக்கிற விவசாயிகள் காலமெல்லாம் கடனிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே, அவர்களுக்கு விடிவே இல்லையா என்று எண்ணிய நேரத்திலேதான் தலைவர் கலைஞர் அவர்கள் 7,000 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்படும் என்பதற்கு அடித்தளத்தை அமைத்து அதன்மேல் இன்று மத்திய அரசு கோபுரத்தைக் கட்டியிருக்கிறார்கள், 60,000 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்து.

இப்படி எதிலும் முன்னோடியாக இருக்கின்ற தலைவர் கலைஞர் அவர்கள் அன்று அந்தத் திட்டத்திற்கு அடிகோலினார்கள். இன்று தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் நாளொரு திட்டமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களே, அவர்கள் அந்தப் பலனைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்களே, அதற்கு வித்திட்ட நாள்தான் அந்த மே 13 ஆம் நாள். அந்த நாளிலே நான் இந்த மன்றத்தில் பணியாற்றுவதற்கு, பதிலளிப்பதற்கு வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்களுடைய இரண்டாண்டு சாதனைகளைப் பற்றியெல்லாம் இன்று பத்திரிகைகள் அனைத்தும் பாராட்டி எழுதியிருக்கின்றன. குறிப்பாக ஆங்கில நாளேடு இந்துவிலே எழுதியிருக்கிறார்கள். முதலிலே தலைவர் கலைஞர் அவர்களைப் பற்றி குறிப்பிடுகின்ற நேரத்திலே சொல்லியிருக்கின்றார்கள், "Driving bureaucrats, encouraging Ministers or pulling up Ministers, converting ideas into actionable plans after wide-ranging discussions, consultations. This is a normal day in the life of Hon. Chief Minister, Dr. Kalaignar". (Thumping of desks) "The hardworking octagenarian who follows a punishing schedule every day. . ." என்று அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். இந்த நாட்டினுடைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் 80 வயதைக் கடந்தவர், தன்னை வருத்திக்கொண்டு இந்த தமிழ்ச் சமுதாயம் வாழ வேண்டும் என்பதற்காக அன்றாடம் பாடுபடுகின்றவர். இந்த அமைச்சர்களை பாராட்டுகின்ற நேரத்திலே பாராட்டி, தங்களுடைய பணியிலே சுணக்கம் காட்டுகின்ற நேரத்திலே, அவர்களுக்கு அதைச் சுட்டிக்காட்டி அவர்களை கண்டிக்கின்ற, அதைப்போல இந்த நாடு வளம்பெற வேண்டும் என்பதற்காக திட்டங்களைத் தீட்டி, அப்படித் தீட்டுகின்ற திட்டங்களை மற்றவர்களோடு கலந்தாலோசித்து இந்த நாட்டுக்குத் தருகின்ற நல்ல முதலமைச்சராக இருக்கிறார் என்று 'இந்து' நாளேடு பாராட்டியிருக்கிறது.

பிற்பகல் 1-00

அந்த நாளிலே நான் இந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொன்னவற்றுக்கெல்லாம் நான் என்னுடைய பதிலுரையிலே விளக்கம் சொல்ல வேண்டுமென்று சொன்னாலும்கூட காலத்தின் அருமை கருதி நான் அவற்றையெல்லாம் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

பொதுவாக, இந்த உலகத்தை இயக்குவது சூரியன்தான். அந்தச் சூரியனுடைய ஒளிக் கதிராக இருந்து தலைவர் கலைஞர் அவர்கள் இந்த நாட்டை ஆட்சி செய்கின்றார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள், 'மரங்களை மக்கள் வளர்த்தால், மக்களை மரங்கள் வளர்க்கும்' என்று குறிப்பிட்டார்கள். மரங்கள்தான் மனித வாழ்வினுடைய வளத்திற்கும், அவர்களுடைய பாதுகாப்பிற்கும் உறுதுணையாக இருக்கின்றன என்பதை அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். எனவே, வனங்களைக் காக்கவேண்டியதும் மிகவும் அவசியமாகிறது.

இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமேயானால், வேளாண்மைக்கு வனங்கள்தான் முக்கியக் காரணமாக, வளர்ப்புத் தாயாக விளங்குகின்றன. எங்கெல்லாம் காடுகள் அதிகமாக இருக்கின்றனவோ—வேளாண்மைக்கு நீர் தேவை—எங்கெல்லாம் காடுகள் அதிகமாக இருக்கின்றனவோ, அந்த நாடெல்லாம் வளமாக இருக்கிறது, விவசாயம் கொழிக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம் தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில்கூட, அனைத்து நதிகளும் மலைப் பகுதிகளிலே, காடுகளிலேதான் உருவாகின்றன. நீர்த்தேக்கங்களெல்லாம் அந்த மலைகளின் அருகிலே அமைந்திருக்கின்றன. அதைப்போல, நம்முடைய நாட்டின் மின் திட்டத்திற்கான நீர்த்தேக்கங்களும் அங்கேதான் அமைந்திருக்கின்றன.

களக்காடு முண்டந்துறையைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், அடர்ந்த காடுகள் இருக்கின்ற காரணத்தாலே, அங்கே வற்றாத ஜீவ நதியாக தாமிரபரணி ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. ஏனென்று கேட்டால், மழை பெய்கின்றது. அந்த மழை நீரை, அந்த மரங்களினுடைய வேர்கள் பூமிக்குள் செலுத்தி, நிலத்தடியிலே ஒரு நீர்த்தேக்கத் தொட்டியாக இருந்து



அவற்றையெல்லாம் நாள் முழுவதும் அந்த நீர்களை அனுப்பிக் கொண்டிருக்கிறது. அதன் மூலமாக அரும் சுனைகளாக, சிற்றோடைகளாக, அகன்ற நதிகளாக இந்த நாட்டிலே நீர் ஓடிக்கொண்டிருக்கின்றது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னும் பல நாடுகளை நாம் ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால், உலகத்தின் மிகப் பெரிய நதியாக இருக்கின்ற அமேசான் நதி, அங்கே தென் அமெரிக்காவிலேயுள்ள பிரேசில் நாடு மட்டுமல்ல பெரு, சிலி, கொலம்பியா, ஈக்குவடார் போன்ற நாடுகள் வழியாகச் செல்கிறது. உலகத்தின் இரண்டாவது நதி என்று சொன்னதை, இப்போது மறுத்து, இல்லை, இல்லை 7,000 கிலோ மீட்டர் நீளம் என்று சொல்லியிருக்கிறார்கள். 7,000 கிலோ மீட்டர் நீளம் செல்கின்ற அந்த நதி, அங்கே எடுத்துச் செல்கின்ற நீர் எவ்வளவு என்று சொன்னால், 77,34,000 கன அடி நீரை ஒரு செகண்டுக்கு எடுத்துச் செல்கிறது என்று சொல்கிறார்கள். காவிரியினுடைய average, சராசரியாக எடுத்துச் செல்கின்ற நீர் 25,000 கன அடி. ஆனால் அந்த நதி எடுத்துச் செல்கின்ற நீரின் அளவு, 77,34,000 கன அடி. அந்த நதி மட்டும் ஒரு நாளிலே 7 மேட்டூர் நீர்த் தேக்கங்களை நிரப்பும் என்று சொல்கின்ற அளவுக்கு நீர் செல்கிறது. அதற்குக் காரணம், பிரேசில் நாட்டினுடைய 60 விழுக்காடு காடாக இருக்கிறது. 47,67,000 சதுர கிலோ மீட்டர் அங்கே காடு என்று சொல்கிறார்கள். இந்தியாவினுடைய மொத்தப் பரப்பே 32,87,263 சதுர கிலோ மீட்டர்தான். இப்படிக் காடுகள் அதிகமாக இருக்கின்ற எந்த நாடாக இருந்தாலும் சரி, அது ஜப்பான் நாடாக இருந்தாலும் சரி, அல்லது கீழ்த்திசை நாடுகளாக இருந்தாலும் சரி, அங்கே நீர்வளம் நிரம்பியிருக்கின்ற காரணத்தால் விவசாயம் பெருகியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே பேசியவர்களெல்லாம் குறிப்பிட்டார்கள், கடைசியாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள். உலக வெப்பமயமாதல் என்பதைப் பற்றிச் சொன்னார்கள். உலகமே இன்று உற்று நோக்குகிறது. இன்று அதைப்பற்றித்தான் எல்லோருமே பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்று கேட்டால், அன்று காடுகள் அதிகமாக இருந்த நேரத்திலே, மரங்கள் இருந்த நேரத்திலே அதைப்பற்றி யாரும் சிந்திக்கவில்லை. ஆனால், இப்போது காடுகள் அழிக்கப்பட்டதற்குப் பிறகு, காடுகள் உலகம் முழுவதுமே குறைந்துகொண்டிருக்கின்ற காரணத்தினால்—

அதுமட்டுமல்ல, 1750-லே அன்று வெளியிடப்பட்ட அறிக்கையின்படி 280 P.P.M. ஆக இருந்த அந்தக் காற்றின் மாசுத் தன்மை கரியமில வாயு இன்று 384 P.P.M. ஆக மாறியிருக்கிறது. என்ன காரணத்தினாலே என்றால், மனிதர்கள்; அதிமான மக்கள்தொகை ஒருபுறம், வளர்ச்சிக்காக தொழில் வளர்ச்சியின் காரணமாக ஏற்படுகின்ற மாசு. இப்போதுகூடச் சொன்னார்களே—நம்முடைய அரியலூரிலே இருக்கின்ற அந்த சிமெண்ட் ஆலையிலிருந்து வருகின்ற அந்தப் புகை அங்கே மாசை அதிகமாக ஆக்கிக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள்.

பிற்பகல் 1-05

ஒரேயொரு குறிப்பை நான் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய நாடு சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு, உலக அளவிலும், இந்திய அளவிலும், தமிழ்நாட்டு அளவிலும் பார்ப்போமேயானால், உலக அளவிலே அன்று 265 கோடியாக இருந்த மக்கள்தொகை, இன்று 668 கோடியாக மாறியிருக்கிறது, உலக அளவிலே. 2040-லே அது 800 கோடியாக உயரும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவைப் பொறுத்த அளவில், அன்று 36 கோடியாக இருந்தது, இன்று 110 கோடியாக உயர்ந்திருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த அளவில், 3 கோடியாக இருந்தது, இன்று 6½ கோடியாக உயர்ந்திருக்கிறது. இப்படி, மக்கள்தொகைப் பெருக்கம், அந்த மக்களுக்குத் தேவையான தொடர் வண்டிகள் அல்லது வாகனங்கள்—நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னும் 40,000 மெகாவாட் உற்பத்தித் திறனுள்ள மின் நிலையங்கள் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குள் நிறுவப்படும் என்று சொன்னார்கள். அப்படி நிறுவப்படுகின்றபோது, இந்தியாவினுடைய தேவை இன்று 1,10,000 மெகாவாட் என்று சொன்னால், இன்னும் ஐந்து ஆண்டுகளில், 2015 ஆம் ஆண்டில் 3,00,000 மெகாவாட் ஆகும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல, நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்ற ஆண்டு 95 இலட்சம் வாகனங்கள் என்று சொன்னார்கள். இந்த ஆண்டு கூடுதலாக 1 இலட்சத்து 5 ஆயிரம் வாகனங்கள் என்று சொன்னார்கள். இவ்வாறு வாகனப் பெருக்கம், தொடர் வண்டிப் பெருக்கம், மக்கள் பெருக்கம், அதனால் ஏற்படுகின்ற மாசுக்கள், இதன் காரணமாக இந்த அண்டம் வெப்பமாகிக்கொண்டிருக்கிறது.



எனவேதான், இப்போது யூ.கே.-யின் பொருளாதார நிபுணர் திரு. நிகோலஸ் ஸ்டெர்ன் என்பவர் சொல்லியிருக்கின்றார். 2 சதவிகிதம் வெப்பம் உயருமேயானால், அதனாலே பேரழிவு ஏற்பட்டு 15 சதவிகிதம் வன உயிரினங்கள் அல்லது வனங்கள் எல்லாம் மாறுபடுகின்ற சூழ்நிலை ஏற்படும். மூன்று முதல் நான்கு என்று சொன்னால், அவர்கள் சொன்னார்களே, பனிமலைகள் எல்லாம் உருகும் என்று சொல்கின்ற அந்தச் சூழ்நிலை ஏற்படும். அதனால், இயற்கையில் மாற்றங்கள், வெள்ளம், வறட்சி அதனாலே அழிவுகள், பேரழிவுகள் ஏற்படுகின்ற வாய்ப்பு உள்ளது. அதைப்போல ஐந்துக்கு மேல் அது உயருமேயானால் எண்ணிப்பார்க்க முடியாத ஒரு நிலை ஏற்படும். எனவேதான், அண்மைக்காலமாக உலக அளவிலேயேகூட இதைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று சொல்லி அமெரிக்காவில் இருக்கின்ற ஒக்ரிஸ் நிறுவனம் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறது. இதன் காரணமாக அங்கு 1997-லே ஜப்பான் நாட்டிலே உள்ள கியோட்டோ நகரிலே கூடிய ஐக்கிய நாடுகள் சபையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள். நாம் அந்த emission-ஐ, கரியமில வாயு வெளியேற்றத்தைக். கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். யார் சொல்கிறார்கள்? முன்னேறிய நாடான அமெரிக்கா சொல்கிறது. 5,610 கிலோவை ஒரு தனி நபருக்கு அங்கே வெளியேற்றிக்கொண்டிருக்கிற அமெரிக்கா சொல்கிறது. 4,471 கிலோவை வெளியேற்றிக்கொண்டிருக்கின்ற ஆஸ்திரேலியா சொல்கிறது. 5,470 கிலோவை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்ற கனடா நாடு அல்லது அது ஜெர்மனியாக இருந்தாலும் சரி, யூ.கே.-வாக இருந்தாலும் சரி, 2,670 கிலோ என்கிறார்கள். ஆனால், நாம் வெளியிடக்கூடிய அந்த தனி மனித கரியமில வாயு வெறும் 340 கிலோ. ஒரு நாளைக்கு ஒரு கிலோ. எவ்வளவு நம்மைவிட அவர்கள் உயர்ந்திருக்கிறார்கள். ஆனால், இப்போது கட்டுப்படுத்த நினைக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் எல்லாம் தொழில் வளர்ச்சி பெற்றுவிட்டார்கள், முன்னேறிவிட்டார்கள். தொழில் வளர்ச்சியிலே நாமும், சீனாவும் போட்டி போட்டுக்கொண்டு வளர்ந்துகொண்டிருக்கின்ற நேரத்திலே நம்மைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றிருக்கிறார்கள். சீனாகூட சொல்லவேண்டுமேயானால் 1,060 கிலோ ஒரு தனி மனிதனுக்கு ஒரு ஆண்டுக்கு கரியமில வாயுவை வெளியேற்றுகிறார்கள். நம்மைப்போல் மூன்று மடங்கு. நாம் இன்னும் வளர வேண்டும். எனவேதான், நாம் அந்த ஒப்பந்தத்திலே கையெழுத்திட்டாலும்கூட, இந்தியா சொன்னது, வளர்ந்த நாடுகள்தான், உங்களை நீங்கள் கட்டுப்படுத்திக்கொள்ளவேண்டும்.

நாங்கள் உங்களுடைய நிலை வருகின்ற நிலையில் நாங்கள் அந்தத் தொழில் வளர்ச்சியைப் பெற்றே தீருவோம் என்று அன்று சொல்லிவந்தார்கள்.

அதைத்தான் நம்முடைய மாண்புமிகு அண்ணன் மாறன் அவர்கள் கூட டோகா மாநாட்டிலே வலியுறுத்திப் பேசினார்கள். இப்படி நீங்கள் வளருகின்ற நாடுகளைக் கட்டுப்படுத்தமுடியாது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருந்தாலும், அண்மைக் காலமாக நாம் 47 விழுக்காடு உயர்வைப் பெற்றிருக்கிறோம். 47 விழுக்காடு என்பது, நமது தொழில் வளர்ச்சி; தலைவர் கலைஞர் அவர்களுடைய காலத்திலே இன்று எத்தனைத் தொழிற்சாலைகளைக் கொண்டுவந்து கொண்டிருக்கிறார்கள்? இப்படித் தொழில் வளர்ச்சியின் காரணமாக நமக்குத் தேவையான மின்சாரத்தைப் பயன்படுத்தவேண்டும் என்ற காரணத்தால் அல்லது இன்னும் வாகனங்களை உருவாக்கவேண்டும் என்கின்ற காரணத்தினாலே, பயன்படுத்தவேண்டும் என்கிற காரணத்தாலே, வேகமாக அந்த சதவிகித உயர்வு இருந்தாலும்கூட, சுற்றுச்சூழல் மாசைக் கட்டுப்படுத்துவதற்கு நாமும்--ஏனென்றால் ஏதோ ஒரு பகுதியில் உயர்ந்துவிட்டது, நம்முடைய பகுதியிலே குறைவு என்று நாம் சொல்லமுடியாது. இந்த அண்டவெளியிலே செல்கின்ற நேரத்திலே அவையெல்லாம் நம்மையும் பாதிக்கத்தான் செய்யும். எனவே, நாம் மரம் வளர்க்க வேண்டும் என்கின்ற கட்டாயத்திலே இருக்கிறோம். கார்பனுடைய அந்த content-ஐ கட்டுப்படுத்துகின்ற அந்தச் சூழ்நிலைக்காக மரங்களை வளர்க்க வேண்டும். அதனாலேதான், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறை முதலமைச்சராக இருந்த காலத்திலே, 1997-லே, ஜப்பான் நாட்டிடம் நிதியுதவி பெற்று ரூபாய் 483 கோடியை நிதியாகப் பெற்று 205 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசின் சார்பாக அதற்கு நிதி ஒதுக்கி, 1,367 கிராமங்களிலே 4,80,179 ஹெக்டேரிலே மரங்கள் வளர்த்து பாதுகாக்கப்பட்டன. அத்திட்டம் சிறப்பாக செயல்பட்ட காரணத்தால், அந்தக் காடு வளர்ப்புத் திட்டத்திலே மக்கள் எல்லாம் பயனடைந்த காரணத்தினாலே காடு வளர்ப்பு மட்டுமல்ல, அந்தக் கிராமத்தில் இருப்பவர்களுடைய அடிப்படைத் தேவைகளெல்லாம் நிறைவேற்றப்பட்ட காரணத்தினாலே மீண்டும் அந்த ஜப்பான் நாடு முன்வந்து அந்த ஆட்சியிலே இரண்டாவது கட்டப் பணிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. அதிலே 800 கிராமங்கள் எடுக்கப்பட்டு, இந்த ஆண்டோடு அந்த 800 கிராமங்களும்—அவர்கள் 135 கிராமங்களுக்கு அவற்றை எடுத்துச் சென்றார்கள். நாங்கள்



வந்ததற்குப்பிறகு 205 கிராமங்கள் 2006-2007-ல், சென்ற ஆண்டு 230 கிராமங்கள் எடுத்து, இந்த ஆண்டும் 230 கிராமங்கள் என்று இதுவரை 1,26,000 ஹெக்டேர் நிலங்கள்—1,77,500 ஹெக்டேர் நிலங்கள் அதிலே சீர்செய்யப்பட வேண்டும் என்று திட்டம் தீட்டி 1,26,000 ஹெக்டேர் நிலங்களிலே மரம் வளர்க்கப்பட்டுவிட்டது. இன்னும் 51 ஆயிரத்து 500 ஹெக்டேரில்தான் நாங்கள் இந்த ஆண்டு அதற்காக நடவு செய்ய இருக்கிறோம். இந்த ஆண்டு 230 கிராமங்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-10

சமுதாயத்திலே உள்ள அந்தப் பகுதி மக்களுக்கும் பயன்படுகின்ற அளவிற்கு சென்ற ஆண்டு ரூ.115.22 கோடியிலே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு இருந்தாலும்கூட—அதற்காக அங்கே தண்ணீர் தடுப்பணைகள் கட்டுகிறோம். கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கிறோம். அந்தப் பணிக்காக சென்ற ஆண்டு மட்டும் 23 கோடியே 83 இலட்சம் ரூபாயை நாங்கள் செலவு செய்திருக்கிறோம்.

அதைப்போல 189 சமுதாயப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன அந்தத் திட்டத்தாலே. அதற்கு மட்டும் 4 கோடியே 89 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவு செய்திருக்கிறோம். அதைப்போல தமிழ்நாடு வனத் துறைக்காக கட்டடங்கள் கட்டியிருக்கிறோம். கிட்டத்தட்ட நாங்கள் 150 கட்டடங்களைக் கட்டியிருக்கிறோம். 5 கோடியே 57 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாயிலே அதற்கான கட்டடங்கள் எல்லாம் கட்டியிருக்கிறோம். இன்னும் மற்ற துறைகளோடு இணைந்து கிட்டத்தட்ட 1,549 பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்தப் பணிகளுக்காகக்கூட 26 கோடியே 74 இலட்சம் ருபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஆண்டு 113 கோடி ரூபாய் அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதன்மூலம் 1,000 தடுப்பணைகளும், 300 கசிவுநீர்க் குட்டைகளும் அமைப்பதற்கும், அதற்காக 24 கோடியே 27 இலட்சம் ரூபாய் நிதி செலவிடப்படும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல பல்வேறு பணிகள் அதிலே நாங்கள் செய்வதற்கு இருக்கிறோம். வனத் துறைக்காக 193 கட்டடங்கள் கட்ட இருக்கிறோம்.

இன்னும் இந்தத் திட்டத்தின்மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைக்கிறோம். வனக் குழுக்களை அமைக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் அந்த வனக் குழுக்களும், சுய உதவிக் குழுக்களும் பயன்படுகிறவகையில் திட்டங்களைத் தீட்டி செயல்பட்டுக்

கொண்டிருக்கிறோம். இதுவரை பார்த்தால் நாங்கள் இந்த 11 ஆண்டு காலத்திலே கிட்டத்தட்ட 1,937 வனக் குழுக்களை ஏற்படுத்தி, அதிலே 6 இலட்சத்து 5 ஆயிரத்து 587 பேரை உறுப்பினர்களாகச் சேர்த்திருக்கிறோம். அதிலே 2 இலட்சத்து 88 ஆயிரத்து 998 பேர் பெண் உறுப்பினர்கள். இன்னும் வனக் குழுவினுடைய தலைவராகக்கூட இந்த ஆட்சியிலே பெண்களுக்கு முன்னுரிமை தந்து, 81 பேர் வனக் குழுத் தலைவராகக்கூட இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, மகளிர் சுய உதவிக் குழுக்கள் இதுவரை 6,026 அங்கே உருவாக்கப்பட்டு, 90 ஆயிரத்து 277 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே உங்களிடம் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல தேசிய காடு வளர்ப்புத் திட்டம். எல்லாவற்றையும் நான் குறைவாகவே சொல்லிக்கொண்டு போகிறேன், காலத்தின் அருமை கருதி. தேசிய காடு வளர்ப்புத் திட்டம் 10-வது 5 ஆண்டுத் திட்டத்தில் தொடங்கப்பட்டு, அதற்காக இதுவரை கிட்டத்தட்ட 50 ஆயிரத்து 867 ஹெக்டேர் நிலத்தில், 74 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவிலே செயல்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலே, 82 இலட்சத்து 70 ஆயிரம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. சமுதாயப் பணிகள் ரூபாய் 7 கோடியே 36 இலட்சத்திற்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே மலைப் பகுதி மேம்பாடு. மலை என்றாலே நீலகிரி மலைதான் எல்லோருக்கும் ஞாபகம் வரும். அந்த நீலகிரி மலையினுடைய மேம்பாட்டிற்காக திட்டம் தயார்படுத்தப்பட்டு, அந்த மரங்கள் அதிகமாவதற்கும், மண் அரிப்பைத் தடுப்பதற்கும், மின் வேலிகளை அமைப்பதற்குமான ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு, இந்த ஆண்டு அதற்காக 2 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறோம். வரும் ஆண்டிலே 2 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவு செய்ய இருக்கிறோம்.

அதைப்போல மேற்குத் தொடர்ச்சி மலை. மேற்குத் தொடர்ச்சி மலையினுடைய மேம்பாடுகள் பல துறைகளின் சார்பாக செயல்படுத்தப்பட்டாலும், அங்கு வனம் இருக்கின்ற காரணத்தாலே, எங்கள் துறை அதிக முன்னுரிமை பெற்றிருக்கின்ற காரணத்தால்— இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே சிறப்பு பெற்றது மேற்குத் தொடர்ச்சி மலை. உலகத்திலுள்ள கிட்டத்தட்ட 25 சிறப்புப் பகுதிகளில் ஒன்றாக மேற்குத் தொடர்ச்சி மலை கருதப்படுகிறது.



இந்தியாவில் இருக்கின்ற வனப் பகுதிகளில் மூன்றில் ஒன்றாக, அவ்வளவு வன உயிரினங்களும், மரங்களும், மூலிகைகளும் நிரம்ப இருக்கின்ற பகுதி என்கின்ற காரணத்தாலே அது பெருமைக்குரியதாக உள்ளது. குஜராத்திற்குத் தெற்கிலிருந்து கன்னியாகுமரி வரை இருக்கின்ற அந்த 1,600 கிலோ மீட்டர் நீளமுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையை ஒவ்வோர் ஆண்டும் பராமரிப்பதற்காக நிதி செலவிடுகிறோம். சென்ற ஆண்டு நாங்கள் அதிலே 5, 6 மாவட்டங்களை, நீலகிரி மாவட்டம், கோவை மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம், விருதுநகர் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், ஈரோடு மாவட்டத்தின் பகுதிகள் என்கின்ற வகையிலே ரூபாய் 2 கோடியே 22 இலட்சம் செலவு செய்திருக்கிறோம். இந்த ஆண்டு ரூபாய் 4 கோடியே 25 இலட்சம் செலவு செய்ய இருக்கிறோம். அதைப்போலவே நீலகிரி மலையையும், பழனி மலையையும் மேம்படுத்த செலவு செய்வதற்கு 12-வது நிதிக் குழு 30 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு இதற்காக ரூபாய் 5 கோடியே 17 இலட்சமும், வரும் ஆண்டிலே 5 கோடியே 31 இலட்சமும் செலவு செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-15

கடலோரத் தோட்டங்களைப் பற்றியெல்லாம்கூட பேசுகின்ற நேரத்திலே உறுப்பினர்கள் சொன்னார்கள். கடலோரத் தோட்டங்கள் இந்த நாட்டிற்குப் பாதுகாப்பாக உள்ளவை. 1,076 கிலோ மீட்டர் நீளம், இந்தியாவினுடைய கடற்கரையிலே 12 விழுக்காடாக அவை இருக்கின்றன. அதிலே அந்த தொடர் தடுப்புத் தோட்டங்களும், அலையாத்திக் காடுகளும் கடல் நீர் உள்ளே வராமல், கடல் நீர் அரிக்காமல் இருப்பதற்கும், அந்த அரிப்பைத் தடுப்பதற்கும், உப்பு நீர் உள்ளே புகுந்து விடாமல் தடுப்பதற்கும் அவை பெரும் பயனாக இருக்கின்றன.

ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டினுடைய வரலாற்றிலே மிக சோக நாள் 26-12-2004. சுமத்ரா தீவிற்கு அருகே பூமிக்கடியிலே ஏற்பட்ட நில அதிர்வு, சுனாமி என்ற ஆழிப் பேரலையாக மாறி, தமிழ்நாட்டினுடைய கடற்கரையைத் தாக்கியது. உடைமைகளையும், உயிர்களையும் காவுகொண்டு சென்ற அந்தப் பேரலையில் பல பகுதிகள் தப்பித்தன. அந்தப் பகுதிகள் தப்பித்ததன் காரணம் தொடர் தோட்டங்களும், அலையாத்திக் காடுகளும் அங்கிருந்தன. அதனால் அங்கே கடற்பகுதி பத்திரமாக இருந்த

காரணத்தினாலே, அக்காடுகளை வளர்க்கவேண்டுமென்று, அந்த ஆட்சியிலே திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தாலும்கூட, அவர்கள் சுனாமிப் பணிகளில் பொதுவாக மெத்தனம் காட்டியதைப்போல இதிலும் அதிகமாகச் செய்யவில்லை. அவர்களுக்கே தெரியும். 700 ஹெக்டேர் அலையாத்திக் காடுகளும் 2,000 ஹெக்டேர் தொடர் தடுப்புத் தோட்டங்களும் அவர்கள் போட்டிருந்தார்கள். அதன் பின்னாலே வந்த தலைவர் கலைஞருடைய ஆட்சியில் 1,462 ஹெக்டேர் அலையாத்திக் காடுகளும், 2,778 ஹெக்டேர் தொடர் தடுப்புத் தோட்டங்களும் போட்டு, அந்தத் திட்டம் 21 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவிலே நிறைவேற்றப்பட்டது. இந்த ஆண்டு 2 கோடியே 14 இலட்சம் செலவில் அவை பராமரிக்கப்பட்டிருக்கின்றன. வரும் ஆண்டிலே 1 கோடியே 42 இலட்சம் செலவிலே அவை பராமரிக்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல படுகைத் தோட்டங்கள், 1,900 படுகைத் தோட்டங்கள் உள்ளன. ஏனென்று கேட்டால் மரங்களைப் பாதுகாக்க வேண்டும்; ஆனால் மனிதனுடைய தேவைகளையும் நிறைவேற்ற வேண்டும். எங்கு சென்றாலும், எத்தனை அறிவியல் முன்னேற்றங்கள் ஏற்பட்டாலும் சரி, அங்கே மரங்கள்தான் வீட்டினுடைய அழகை அதிகப்படுத்துகிற காரணத்தால், ஜன்னல், கதவுகள் அல்லது எந்தப் பொருள் என்றாலும் மரங்களைத்தான் நாடுகிறார்கள், எனவே மரத் தேவைகளை நாம் குறைத்துக்கொள்ள முடியாது; அதற்காக வளர்க்க வேண்டும். அதனாலேதான் படுகைத் தோட்டங்கள் உருவாக்கப்பட்டன. தேக்கு மரங்கள் எல்லாம் அதிலே உருவாக்கப்பட்டு, கிட்டத்தட்ட 16,050 ஹெக்டேரிலே அவை உருவாக்கப்பட்டிருக்கின்றன, 21 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவிலே. சென்ற ஆண்டு மட்டும் 3,160 ஹெக்டேர் ரூபாய் 5 கோடியே 38 இலட்சம் செலவிலே உருவாக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுதும் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. 20,700 ஹெக்டேரில் 5 ஆண்டுகளிலே நிறைவேற்றுவதற்கு ரூபாய் 35 கோடியே 41 இலட்சத்திலே திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

இதுமட்டுமல்ல, இன்னும் சிறப்பாகச் செயல்படுத்த பல திட்டங்களைத் தீட்டியுள்ளோம். ஏனென்றால், மனிதனுடைய தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக எங்கள் துறை பல நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.



இந்தியாவினுடைய வனக் கொள்கை, மூன்றில் ஒரு பங்கு பசுமைப் பரப்பாக இருக்க வேண்டும் என்பது. நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் 22,877 சதுர கிலோமீட்டர்தான் காட்டின் அளவு இருக்கிறது. அது 17.59 சதவிகிதம்தான். பசுமைப் பரப்பையும் சேர்ப்போமேயானால்கூட 22.04 விழுக்காடுதான் இருக்கிறது. எனவே, 33 விழுக்காடாக வேண்டுமேயானால், அதற்காக அரசு வகுத்த அந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நாம் தனியார் நிலங்களிலே மரம் வளர்க்க வேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்கள் அதற்காக 10 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்து, சென்ற ஆண்டு 28 ஆயிரம் ஏக்கரிலே 15 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறுகின்ற அளவிற்கு அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அந்தத் திட்டங்களிலே பயன்பெற்றவர்கள் சிலரை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். திருவள்ளூர் மாவட்டத்திலே அம்மம்பாக்கம் கிராமத்திலே நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. இ.ஏ.பி. சிவாஜி அவர்கள் வந்திருந்தார்கள்; மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள் வந்திருந்தார்கள்; அங்கே அம்மம்பாக்கத்திலே விசாலம், பாக்கியம் என்பவர்கள் இரண்டு ஏக்கர் அரசு வழங்கிய புறம்போக்கு நிலத்திலே, அவர்களுக்கு தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்களே 2 ஏக்கர் நிலம், அதிலே மரங்கள் வளர்க்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் எல்லாம் ஆனந்தக் கூத்தாடினார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் வாழ வேண்டும்; எங்களுக்கு நிலம் தந்திருக்கிறார்கள்; மரம் நட்டுத் தந்திருக்கிறார்கள்; நாங்கள் கனவிலும் எதிர்பார்க்காதது; இது நிறைவேறியிருக்கிறது என்று தலைவர் கலைஞரை வாழ்த்தினார்கள்.

அதைப்போல அடியண்ணாமலை கிராமத்திலே நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் வந்தார்கள். திருமதி பானுரேகா, திருமதி சாந்தி என்பவர்கள் நிலங்களிலே மரங்கள் பயிரிடப்பட்டிருந்தன. அதைப்போல கிருஷ்ணகிரி மாவட்டத்திலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் தளி இராமச்சந்திரன், மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்குட்டுவன் அவர்கள் வந்திருந்தார்கள். அந்த இடத்திலே பார்த்தபோது, சுதாகர், முனியப்பா என்பவர்கள் இரண்டு பேர் அங்கே நிலத்திலே பயிரிட்டிருந்தார்கள். அதையெல்லாம் பார்க்கின்ற நேரத்திலே அவர்களெல்லாம் தலைவர் கலைஞர் அவர்களை 'இப்படி உன்னதமான இரண்டு ஏக்கர் திட்டத்தைத் தந்திருக்கிறார்களே, எங்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்திருக்கிறார்களே' என்று அவர்களைப் பாராட்டினார்கள்.

இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் நாங்கள் நிறைவேற்றி
வருகிறோம்.

அடுத்து, வன உயிரினம் என்பது மிக முக்கியமான ஒன்று.
அந்த வன உயிரினங்களைப் பற்றியெல்லாம் இங்கே பேசினார்கள்.
அதற்கு என்னிடம் விரிவாக பதில் இருந்தாலும்கூட காலத்தின்
அருமை கருதி சுருக்கமாகச் சொல்கிறேன். அந்த வன
உயிரினங்களையெல்லாம் பாதுகாப்பதற்கு 3,840 சதுர கிலோ
மீட்டரிலே சரணாலயம் வைத்திருக்கிறோம்.

*பிற்பகல் 1-20*

அந்தச் சரணாலயத்திலேயிருந்து அவையெல்லாம் சில
இடங்களிலே வெளியே வருகின்றபோது அவற்றைத் தடுப்பதற்காக
நாங்கள் மின் வேலி அமைத்திருக்கிறோம். நான் குறை
சொல்லவில்லை. அவர்களெல்லாம் 62½ கிலோ மீட்டர் ஒரு கோடி
ரூபாய் செலவிலே அந்த ஐந்தாண்டுகளிலே நிறைவேற்றியிருந்தார்கள்.
ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளிலே 2006-2007-லே 262½ கிலோ
மீட்டர் 4 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவிலும், (மேசையைத்
தட்டும் ஒலி) 2007-2008-லே 315.75 கிலோ மீட்டர் 5,05,20,000 ரூபாய்
செலவிலும், ஆக (மேசையைத் தட்டும் ஒலி) 9 கோடியே 29
இலட்சத்து 20 ஆயிரம் செலவிலே நாங்கள் அந்த வேலியை
அமைத்திருக்கிறோம். மற்றவர்களுக்கெல்லாம் அறிவுரைகள்
வழங்கியிருக்கிறோம். வாழை, கரும்புகளைப் பயிரிடாதீர்கள் என்று
அவர்களுக்கெல்லாம் சொல்லியிருக்கிறோம். அதைப்போல அப்படி
யாராவது பாதிக்கப்பட்டால், பாதிக்கப்பட்டவர்களுக்கு, யாருக்கும்
முன்பு அந்த நஷ்ட ஈடு தரவில்லையென்று அவர்களே
சொன்னார்கள். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் வந்ததற்குப்
பின்னாலே நஷ்ட ஈடு தரவேண்டுமென்று அதற்கு ஆணை வழங்கி,
50 இலட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்து, 2006-2007-லே 1,267 விவசாயிகளுக்கு
52,42,662 ரூபாய் உள்பட 85,94,000 ரூபாய் வழங்கப்பட்டது.
(மேசையைத் தட்டும் ஒலி)

சென்ற ஆண்டிலே 742 விவசாயிகளுக்கு அவர்களுக்கு 41,66,515
ரூபாய் உட்பட, நாங்கள் 71,93,000 ரூபாய் வழங்கியிருக்கிறோம், இந்த
இரண்டாண்டுகளில் மட்டும் அவர்கள் வழங்கியது ஐந்தாண்டுகளிலே
1 கோடியே 25 இலட்சம் ரூபாய். இந்த இரண்டாண்டுகளில் மட்டும்
1,57,88,000 ரூபாய் வழங்கியிருக்கிறோம் என்பதை நான் கூறிக்கொள்ள
விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அதைப்போல, வனச் சாலைகள். வனச் சாலைப் பணிகளை
ஏதோ இந்த வனத் துறை கட்டுப்படுத்துகிறது என்று எல்லோரும்
சொன்னார்கள். இல்லை. தலைவர் கலைஞர் அவர்கள்தான்
அடிப்படை வசதிகளை அமைக்கவேண்டும் என்று விரும்புவார்.
கிராமச் சாலைகளுக்கு ஒரு தனித் திட்டத்தைத் தீட்டி 1,500, 1,000,
500 என்று மக்கள்தொகை விளிம்பைக் குறைத்து, நகர்ப்புறத்திலே
அனைவரும் எப்படி வசதியாக இருக்கிறார்களோ, அதைப்போல
கிராமத்தில் இருக்கிற மக்களும் வசதியாக இருக்க வேண்டுமென்று
கிராமச் சாலைகள் திட்டத்தைத் துவங்கியவரே கலைஞர்
அவர்கள்தான். அவருடைய ஆட்சியிலே வனச் சாலைகள் எல்லாம்
பராமரிக்கப்படுகின்றன. எங்களிடம் இருப்பது 3,323 கிலோ மீட்டர்
சாலைகள். இன்னும் சொல்லப்போனால், நாங்கள் 676 கிலோ மீட்டர்
தார்ச் சாலையாகவும், 703 கிலோ மீட்டர் கப்பிச் சாலையாகவும்,
1,940 கிலோ மீட்டர் மண் சாலையாகவும் வைத்திருக்கிறோம். அவை
ஒவ்வொன்றையும் ஆண்டுதோறும் நாங்கள் பராமரித்து வருகிறோம்.
கடந்த ஆட்சியிலே நீங்கள் பார்த்தீர்களேயானால், 120 கிலோ
மீட்டருக்கு 14,65,34,000 ரூபாயை அவர்கள் செலவு செய்திருந்தார்கள்.
ஆனால், தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே, 267.75 கிலோ
மீட்டருக்கு (மேசையைத் தட்டும் ஒலி) 14,49,32,000 ரூபாயை நாங்கள்
செலவிட்டிருக்கிறோம்.

அதைப்போல வனச் சாலைகளுக்கெல்லாம் நாங்கள் அனுமதி
தருவதில்லை என்று சொன்னார்கள். இல்லை, இல்லை.
2006-2007-லே 10 இனங்களிலே 67 கிலோ மீட்டருக்கு நாங்கள் அனுமதி
தந்தோம். 2007-2008-லே 100 கிலோ மீட்டருக்கு 18 இனங்களிலே
அனுமதி தந்திருக்கிறோம். அவர்கள் ஆட்சியில் இருந்த நேரத்திலே
ஒருவேளை சூழ்நிலையின் காரணமோ, எனக்குத் தெரியாது; ஆனால்,
ஐந்து கருத்துருக்கள் பெறப்பட்டு, 14.43 கிலோ மீட்டருக்குத்தான்
அவர்கள் அனுமதி வழங்கியிருந்தார்கள் என்பதை நான் குறிப்பிட
விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, இன்னொரு முக்கியமான விஷயம்.
இதைமட்டும் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) இதைமட்டும்
சொல்லிவிடுகிறேன். நான் முழுவதையும் சொல்லவேண்டுமென்றால்,
இன்னும் அரை மணி நேரம் வேண்டும். ஏனென்றால் நிறைய
இருக்கின்றன. ஆனால், நான் இதைமட்டுமே சொல்லி
முடித்துவிடுகிறேன். ஏனென்றால், வனச் சாலைகள் மிக
முக்கியமானவை என்கின்ற காரணத்தினாலே.

அறிவிப்புகள், மற்றவை எல்லாமே நான் சொல்லிவிடமுடியும். இருந்தாலும்கூட சுருக்கமாகச் சொல்கிறேன். அதைப்போலவே, சாலைகளுக்காக அந்த ஆட்சியிலே அவர்கள் கொடுத்த permission—நான் குறையாகச் சொல்லவில்லை—அந்த நேரத்திலே அவ்வளவுதான் அவர்களாலே கொடுக்க முடிந்தது. அவர்கள் கொடுத்தது, ஐந்து இனங்களுக்கு 13.347 ஹெக்டேர் நாங்கள் 2006-2007-லே ஒரு இனத்திற்கு 2.5 ஹெக்டேர், (மேசையைத் தட்டும் ஒலி) 2007-2008-லே 9 இனங்களுக்கு 13.998 ஹெக்டேர், அந்த அளவிற்கு நாங்கள் கொடுத்திருக்கிறோம். இன்னும் வரும் ஆண்டுகளிலும்கூட 34 இனங்களுக்கு—மற்ற பணிகளுக்கெல்லாம் தருவதில்லையென்று சொன்னார்கள். இல்லை, இல்லை. அடிப்படைத் தேவைகளை அமைத்துத் தரவேண்டுமென்று தலைவர் கலைஞர் அரசு விரும்புகிறது. அதனாலே 34 இனங்களுக்கு 73.33 ஹெக்டேர் நிலங்களை நாங்கள் மாற்றித் தந்திருக்கிறோம். எனவே, இதையெல்லாம் இந்த வனச் சாலை முக்கியமானது என்கிற காரணத்தாலே குறிப்பிட்டேன்.

இன்னும் வனப் பாதுகாப்பு இருக்கிறது. அதன் பின்னாலே இன்னும் வன வருவாய், அதேபோல தோட்டக் கலை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி லீமா றோஸ் அவருடைய பகுதியிலே இருக்கின்ற அரசு இரப்பர் தோட்டக் கழகத்தைப்பற்றிச் சொன்னார். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள் நம்முடைய தமிழ்நாடு அரசினுடைய தேயிலைத் தோட்டக் கழகத்தைப்பற்றிப் பேச வேண்டுமென்று சொன்னார்கள். தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தைப்பற்றி அவர் சொன்னார். பலா மரம் வளர்க்க முடியுமா என்று கேட்டார். நிச்சயமாக அதையெல்லாம்பற்றி எங்கள் அதிகாரிகளிடம் கலந்தாலோசித்து செய்யப்படும். இப்படிப் பல்வேறு கோரிக்கைகளும் நாட்டிலே இருக்கின்றன.

பிற்பகல் 1-25

அந்தத் துறைகளைப்பற்றிச் சொல்லவேண்டுமேயானால், எனக்கு இன்னும் நேரம் போதாது. எனவே, நேரம் போதாத காரணத்தாலே, என்னுடைய அறிவிப்பைக்கூட@ நான் இந்த அவையிலே படித்ததாக நீங்கள் கருதிக் கொள்ளவேண்டும். அறிவிப்பையோ அல்லது நாங்கள் சென்ற ஆண்டு செய்ததையெல்லாம் சொல்ல நேரம் இல்லை (குறுக்கீடு) ஒன்றை மட்டும் நான் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

@ 499 முதல் 506 வரையிலான பக்கங்களில் இணைப்பு-VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.



காடுகளை வளர்க்க வேண்டியதனுடைய நோக்கத்தை நான் ஒரேயொரு கவிதையிலே சொல்ல விரும்புகிறேன்.

'தமிழன்னையின் மடியில் பசுஞ்சோலையாய்
அமுதம் வழங்கும் தேனீக்களுக்கு வாழ்விடமாய்,
அழும் குழந்தைகளுக்குத் தாலாட்டும் தொட்டிலாய்,
ஆறுகள் ஊற்றெடுக்கும் அமுதப் புனலாய்,
ஆழிப் பேரலையைத் தடுத்து நிற்கும் அலையாத்திக் காடுகளாய்,
உண்ணக் கனிகள் தரும் வண்ணத் தோப்பாய்,
உலகம் சுற்றும் பறவைகளுக்கு உறைவிடமாய்,
உலகம் வெப்பமாதலைத் தடுத்து நிற்கும் தருவாய்,
உயிர்மூச்சுக் காற்றாம் பிராண வாயுவினுடைய பிறப்பிடமாய்,
கண்ணுக்குக் குளிர்ச்சி தரும் பசுமைப் போர்வையாய்,
மண்ணைப் பாதுகாக்கும் வேர்களாய்,
விண்முட்ட உயரும் மரக் கிளைகளாய்,
வெண்மேகத்தைக் குளிர வைத்து மழை பொழிய வைக்கும்
மரகதமாய்,
புத்தனுக்கும் நிழல் தந்த போதி மரமாய்,
எத்தனை முறை வெட்டினாலும் துளிர்விடும் கற்பக விருட்சமாய்,
வெட்டுபவனுக்கும் நிழல் தரும் பெட்டகமாய்,
வெட்டும் கோடரிக் காம்புக்கும் உதவும் உத்தமனாய்,
நோய் தீர்க்கும், நோய்க்கு மருந்தாகும் மூலிகையாய்,
கல்விக்கு நாம் பயன்படுத்தும் காகிதத்திற்கு மூலப்பொருளாய்,
கூழ் மரமாய்

இருக்கின்ற அந்த வனத்தை நாம் பாதுகாக்கவேண்டும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

ஒன்றைச் சொல்கிறேன்; நாம் இந்த வனங்களை நம்முடைய முன்னோரிடமிருந்து பெற்ற நன்கொடை என்று கருதாமல், நாளைய சமுதாயத்திடம் நாம் பெற்ற கடன் என்று கருதி, வட்டியும், முதலுமாக நாளைய சமுதாயத்திற்கு அதை ஒப்படைக்க வேண்டுமென்ற உணர்வோடு, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் சொன்ன வார்த்தையின்படி, அந்த மரங்களை வளர்ப்போம்; வருங்காலச் சந்ததியினரின் பாதுகாப்பான வாழ்க்கைக்கு வழிவகுப்போம் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கின்ற வெட்டுத்

தீர்மானங்களுக்கு பதில் சொல்ல நேரம் இல்லையென்றாலும்கூட, நீங்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவற்றையெல்லாம் நாங்கள் உள்வாங்கிக் கொண்டிருக்கின்றோம். எங்களுடைய துறை அதிகாரிகள் இங்கே இருக்கிறார்கள். அவர்களும் அவற்றை உள்வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக, தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு அனைத்தையும் நிறைவேற்றித் தரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசியிலே கேட்டுக்கொள்ளலாம், உட்காருங்கள். *(குறுக்கீடு)* திருமதி பதர் சயீத், கடைசியிலே கேட்டுக்கொள்ளலாம், உட்காருங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுத் திருப்பு முனைகள் பலவற்றை உருவாக்கிய சிறப்பான நாள், இந்நாள்.

**HON. SPEAKER:** Tmt. Bader Sayeed, you can put question to Hon. Minister Thiru T.P.M. Mohideen Khan.

***மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** இப்பொன்னான நன்னாள்தான், சில மணி நேரத்திற்கு முன்னால், தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி இரண்டு ஆண்டுக் காலம் நிறைவு பெற்றதற்கு எல்லோரும் பாராட்டுத் தெரிவிக்கின்றபோது, உருக்கமாக நன்றி தெரிவித்திருக்கின்ற நாள். இன்று மட்டுமல்ல; 1996-லே பதவியேற்றதும் மே மாதம் இதே நாள்தான். இந்த ஆட்சி 2006-ல் பதவியேற்றதும் இதே மே மாதம் 13 ஆம் நாள்தான். இந்த நாளில் எனது துறையின் மானியக் கோரிக்கையைத் தாக்கல் செய்ய வாய்ப்பினை வழங்கியமைக்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

...தும் அறியார் தமிழர்;
தூய வாழ்வை எனக்குப்பின் சீர்படுத்தும் மறவன் நீ;
அவனியெல்லாம் போற்றும்வண்ணம் ஆள்க தம்பி'



என்று அன்றையதினம் 1968 ஆம் ஆண்டு செப்டம்பரிலேயே தீர்க்க தரிசனமாகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் அதைச் சொல்லி, கலைஞர் அவர்களைப் பாராட்டினார்கள்.

தலைவர் கலைஞர் அவர்கள் அடைக்கப்பட்டிருந்த தனிமைச் சிறையான பாளையங்கோட்டை சிறையின் முகப்பிலே, 'தன்னை வெல்வான் தரணி வெல்வான்' என்று தகுதியான புகழ் மொழி பொருத்தமாகப் பொறிக்கப்பட்டிருந்ததைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் கலைஞர் தரணியை வெல்வார் என்று அன்றே பொருணை நதிக் கரையில் தரணி அறியப் பரணி உணர்த்த தகுதி பெற்றவர்; அன்னை மனம் கொண்ட அஞ்சுகச் செல்வர்; நம் தாய் மொழியாம் தமிழ் மொழியைச் செம்மொழியாக்கிச் சிம்மாசனம் ஏற்றியிருக்கும் அன்புத் தலைவர்; மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு என் பணிவான நன்றியினைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

*'சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்*
*பேணிக்கொள் வேமென்னும் நோக்கு.'*

என்ற குறளுக்கு ஏற்ப, சிறு மதியாளர் ஏற்க மறுத்தாலும், பேராசிரியர்களுக்கெல்லாம் பேராசிரியர் தான் மட்டுமே என்பதை இந்த நிதிநிலை அறிக்கையின்மூலம் நிரூபித்த எங்களுடைய...

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** தலைவர் கலைஞர் அவர்களுடைய உற்ற தோழனாக, இனமான கழகத்தினுடைய பொதுச் செயலாளராக, தென்னவர் போற்றும் அவை முன்னவர், மாண்புமிகு நிதி அமைச்சர், பேராசிரியர் அவர்களே, நெருக்கடி நிலை காலத்திலே மிசா சிறைக் கொடுமைகளைத் தாங்கிக் கொண்டவர் என்பதால், தளபதி என்ற புகழுக்குத் தகுதி சேர்த்தவர்,

"போர்க்குறிக் காயமே புகழின் காயம்
புண்ணோ? அதுவும் புகழின் கண்ணோ
யார்க்குஅது வாய்க்கும்! ஆ ஆ . . . "

என்று மனோன்மணியம் சுந்தரனார், எந்தப் பொருணை நதிக் கரையில் புகழுக்கு இலக்கணம் வகுத்தாரோ, அந்தத் தாமிரபரணி

நதிக் கரையில், பாளையங்கோட்டைக்கு, மீண்டும் சரித்திர வாய்ப்பை வழங்கி, 2008-ல் இளைஞர் அணி மாநாட்டை நடத்தி, தமிழகமே திரும்பிப் பார்க்கும் எழுச்சியை இளைஞர்களின் உள்ளங்களிலே விதைத்த பெருமைக்குரியவர், யாருடைய தலைமைக்கு இலட்சோப இலட்சம் கழக இளைஞர்கள் பட்டாளம் தவம் இருக்கின்றதோ, அந்தத் தளபதி அவர்களுக்கு என் நன்றியைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தலைவர் கலைஞர் அவர்களுக்கு என்றும் உறுதுணையாக இருக்கும் கழகத்தினுடைய பொருளாளர், மாண்புமிகு ஆற்காட்டார் அவர்கள் உள்ளிட்ட, கண்ணைக் காத்திருக்கும் இமைகள்போல, கழக ஆட்சியினைக் காத்திருக்கும். திராவிட இயக்க அரிமாக்கள், அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையைத் தாக்கல் செய்வதற்கு வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்றைக்கும் சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு அரணாகவும், மத நல்லிணக்கத்தைப் பேணிக் காப்பவராகவும் திகழும் தலைவர் கலைஞர் அவர்கள், சிறுபான்மைச் சமுதாயத்தின் சமூக, பொருளாதார முன்னேற்றத்தை மேன்மையடையச் செய்யும்வகையில், இஸ்லாமியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் தலா 3.5% இட ஒதுக்கீடு வழங்கியும், சிறுபான்மைச் சமுதாயத்தைப் பெருமைப்படுத்தும் வகையில் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த இரண்டு பேருக்கு அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் கொடுத்தும், சிறுபான்மையினர் நலனுக்காக ஒரு தனி ஆணையத்தையும், இயக்ககத்தையும் உருவாக்கியும், எல்லா மாவட்டங்களிலும் முஸ்லிம் மாதர் உதவிச் சங்கங்களை ஏற்படுத்தியும், மீலாது நபி விழாவிற்கு மீண்டும் அரசு விடுமுறை அறிவித்தும், உருது மொழியை முதலாம் ஆண்டு, இரண்டாம் பாடமாக எடுத்துப் படிக்கும் மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கும் திட்டத்தை ஏற்படுத்தியும், வரலாறு படைத்துள்ள மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை சிறுபான்மையின மக்களின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தகையவர் தலைமையில், தளபதியின்கீழ் நானும் ஓர் அமைச்சர் என்று கூறுவது சரித்திர வரிகள் என்ற முன்னுரையோடு, என்னுடைய பதிலுரையை ஆரம்பம் செய்கிறேன்.



இன்று தமிழ்நாடு, விளையாட்டுத் துறையிலே சீரிய மேம்பாடு அடைந்து வருவதற்கு முக்கியக் காரணம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விளையாட்டு வீரர்களையும், அவர்களை உருவாக்கும் பயிற்றுநர்களையும் மற்றும் உடற்பயிற்சி ஆசிரியர்கள் ஆகிய அனைவரையும் அரவணைத்து அவர்களை ஊக்கப்படுத்துவதுதான் என்பதை மிகப் பெருமையாகவும், மனநெகிழ்ச்சியோடும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குச் சான்றாக ஒரு விவரத்தை இங்கு சொல்லியாக வேண்டும். முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது என்பது ஒவ்வொரு வருடமும் வழங்கப்படவேண்டிய விருது. இங்கேகூட அ.தி.மு.க. உறுப்பினர்கள் அதைப்பற்றிச் சொன்னார்கள். ஆனால், உண்மை நிலவரம் என்னவென்றால், 2001-2002 ஆம் ஆண்டிலிருந்து 2005-2006 ஆம் ஆண்டு வரை வழங்கவேண்டிய விருதுகள் அனைத்தும் கடந்த ஆட்சிக் காலத்திலே கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரணத்தால், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு அவற்றுக்கான முன்மொழிவுகளைப் பெற்று, பரிசீலனை செய்து, 16 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு, தலா ரூபாய் ஒரு இலட்சம் பரிசுத் தொகையாகவும், பாராட்டுப் பத்திரங்களையும் வழங்கியது.

அதேபோல, விளையாட்டு வீரர்களின் வெற்றிக்குக் காரணமாக அமைந்த பயிற்றுநர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் 7 பேருக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் பரிசுத் தொகையும், பாராட்டுப் பத்திரமும் வழங்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல், மாநில அரசு பிறப்பித்துள்ள ஆணைகளின்படி ஆசிய விளையாட்டுப் போட்டிகள், காமன்வெல்த் போட்டிகள், தெற்காசிய, தேசிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு வழங்கப்படவேண்டிய உயரிய தொகை, 148 பேர்களுக்கு ரூ.2.33 கோடி வழங்கப்பட்டது. இதில் மற்றுமொரு முக்கியமான விவரம் என்னவென்றால், மேற்சொன்ன அரசாணையில் சொல்லப்படாத (Non-Olympic Games) ஒலிம்பிக் போட்டியில் சேராத விளையாட்டுகளில் உலகளவில் பங்கேற்று வெற்றிவாகை சூடிய, தமிழ்நாட்டைச் சேர்ந்த சதுரங்க விளையாட்டு வீரர் திரு. விஸ்வநாதன் ஆனந்துக்கு அவருடைய வெற்றியைப் பாராட்டி, ஊக்கத் தொகையாக 25 இலட்சம் ரூபாயும், அதேநேரத்தில், கிரிக்கெட் போட்டியிலே கலந்துகொண்டு, வெற்றிவாகை சூடிவந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர், செல்வன் தினேஷ் கார்த்திக்குக்கு ரூபாய் 5 இலட்சமும், தமிழர்களுடைய பாரம்பரிய விளையாட்டான கபடிப் போட்டியிலே வெற்றி பெற்றுவந்த வீராங்கனை மதுரையைச் சேர்ந்த செல்வி கவிதாவுக்கு ரூபாய் 5 இலட்சமும் மற்றும் கேரம்

விளையாட்டிலே வெற்றி பெற்று வந்த வீராங்கனை செல்வி இளவழகிக்கு ரூபாய் 10 இலட்சமும் இந்த அரசு ஊக்கத் தொகையாக அறிவித்து மொத்தம் ரூ.3.01 கோடி வழங்கி முதலமைச்சர் அவர்கள், இந்த விளையாட்டுத் துறையை மட்டுமல்ல, வீரர்களையும் ஊக்கப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை பெருமிதத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-35

இவ்வாறு வீரர்கள், வீராங்கனைகளுக்கு ஊக்கத் தொகை வழங்கி கௌரவப்படுத்தியுள்ளார்கள். இதுபோன்று அனைத்து விளையாட்டுகளிலும் பங்கேற்ற வீரர்களை ஊக்குவித்து, கௌரவப்படுத்தி விருது அளித்து நம் தாய் நாட்டிற்கு இன்னும் பெருமை சேர்க்கும் அளவில் தங்களுடைய முழுத் திறனையும் வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை இந்த விளையாட்டு வீரர்களின் உள்ளங்களில் பதித்துள்ளது மட்டுமல்லாமல் ஏனைய விளையாட்டு வீரர்களின் உள்ளங்களிலும் இத்தகைய விருதுகளை நாமும் பெற வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவித்துள்ளது என்பதை இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய மாண்பினைப் போற்றிட அவர்களுடைய பிறந்தநாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்த தலைவர் கலைஞர் அவர்கள், அந்த விழா நடைபெற்ற நாளிலிருந்து பள்ளிக் குழந்தைகளுக்கு மூன்று முட்டைகள் வழங்கும் நிகழ்ச்சியையும் சேர்த்து ஒன்றாக நடத்தினார்கள். ஒரு தொலைநோக்கோடு உயரிய திட்டத்தைத் தொடங்கி அந்தக் கூட்டத்திலே பேசும்போது பேசியிருக்கிறார்கள். அதிலே உள்ள ஒரு சில வரிகளை மட்டும் நான் படிக்கிறேன். நிறைய விவரங்களைச் சொல்லியிருந்தாலும்கூட, இது துறைக்குச் சம்பந்தப்பட்டது என்று கருதி அதை மட்டும் உங்களுக்கு எடுத்துச் சொல்லலாம் என்று கருதுகிறேன். அதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், "கல்வி கற்றிட மூளை வளர்ச்சி மட்டும் போதாது, உடல் வளர்ச்சியும் தேவை. 'ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா' என்று மிக எளிய முறையில் பாரதி பாடினான். ஏன் குழந்தையைப் பார்த்து அப்படிப் பாடினான் என்றால், அப்படி ஓடி விளையாடினால்தான் அதன் இளம் எலும்புகள் வளரும். அதனுடைய உடல் கட்டுமஸ்தான நிலையில் இருக்கும். எதிர்காலத்திலே நல்ல



உடல் அமைப்போடு, உலகத்தோடு போட்டி போடுகின்ற பல விளையாட்டுப் போட்டிகளில் அவர்கள் ஈடுபடவேண்டும்" என்று மிக உயரிய தொலைநோக்கோடு அந்தக் கூட்டத்திலே பேசியிருக்கிறார்கள். அதை ஏன் சொல்கிறேன் என்றால் விளையாட்டுத் துறையிலே எப்படி இருக்க வேண்டுமென்று இங்கே பல பேர் பல பிரச்சினைகளைச் சொன்னார்கள். இருந்தாலும் கலைஞர் அவர்கள் எதை எடுத்தாலும் அந்தப் பிரச்சினையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு, கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் கழித்து வீரர், வீராங்கனைகள் எப்படி இருக்க வேண்டுமென்று கருதி, இப்பொழுதே குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து கொடுக்க வேண்டுமென்ற தொலைநோக்குத் திட்டத்தைச் சொல்லியுள்ளார்கள். அப்படியானால் அவர்களுடைய நோக்கம் எந்த அளவிற்கு அந்த விளையாட்டுத் துறையிலே இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லி அதற்கான பெருமையை தலைவர் கலைஞருக்கு இந்த அவை அளிக்கும் என்ற நம்பிக்கையோடு, இந்த வீரர்கள் தங்களை உலகளவில் சாதனை படைக்கும் வீரர்களாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்றால் உலகத் தரத்திற்கேற்ப விளையாட்டு மைதானங்களையும், வசதிகளையும் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று உணர்ந்த இந்த அரசு தமிழகத்தினுடைய அனைத்து மாவட்டங்களிலும் உலகத் தரம் வாய்ந்த ஒரு வசதியையாவது உருவாக்கித்தர வேண்டுமென்ற தொலைநோக்குச் சிந்தனையுடன் செயல்பட்டு வருகின்றது.

தற்சமயம் சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் 400 மீட்டர் செயற்கை இழை ஓடுகளமும் சென்னையில் 2 இடங்களில் மற்றும் நெல்லையில் வளைகோல் பந்து செயற்கை இழை மைதானங்களும் சென்னை, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம், கடலூர் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளங்களும் உருவாக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளன.

தமிழ்நாட்டில் மலைமேலிடப் பயிற்சி மையம் அமைக்க இன்றைக்கு மலைமேலிடப் பயிற்சிக்கு உறுதுணையாக நம்முடைய மலைப்பிரதேசங்களாக இருக்கிற ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி, ஜவ்வாது, பச்சைமலை ஆகிய இடங்களில் மலைமேலிடப் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட உள்ளன. இதற்காக உரிய இடங்கள் தெரிவு செய்யப்பட்டு, வருகின்ற 11-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் இந்த ஆறு இடங்களிலும் மலைமேலிடப் பயிற்சி

மையங்கள் மாநில விளையாட்டு அமைப்புகளுடன் இணைந்து அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாமக்கல் மாவட்டத்தில் கொல்லிமலையில் மலைப்பகுதி சாகசப் பயிற்சி நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் திட்டங்கள் மட்டுமல்லாமல் பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் பேசியதுபோல—இங்கேகூட நம்முடைய பா.ம.க.வினுடைய மாண்புமிகு மணி அண்ணன் அவர்கள் தற்சமயம் நடைபெற்றுக்கொண்டிருக்கிற யோகா பயிற்சியைப்பற்றிச் சொன்னார்கள். இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடியும்வரை அதை நீட்டிக்க வேண்டுமென்று கேட்டுகொண்டார். நம்முடைய பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களும் அதற்குக் குரல் கொடுத்தார்கள். அவர்களுடைய எண்ணங்களை எல்லாம் புரிந்து இந்த அரசு சட்டமன்றக் கூட்டம் எப்போதெல்லாம் நடைபெறுகிறதோ இப்பொழுது மட்டுமல்ல, எப்பொழுதெல்லாம் சட்டமன்றக் கூட்டம் நடைபெறுகிறதோ அப்பொழுதெல்லாம் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில், சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகத்திலேயே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒதுக்கித் தருகிற இடத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் மற்றும் யோகா சங்கமும் இணைந்து தேர்ச்சிபெற்ற ஆண், பெண் இரு பாலர் பயிற்றுநர்களைக் கொண்டு தினசரி காலையிலும் மாலையிலும் இலவசமாக யோகா பயிற்சி அளிக்கப்படும் என்ற செய்தியை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, மாநில அளவிலான சமத்துவப் பொங்கல் திருவிழா என்று தலைவர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அந்த பொங்கல் நாளை சமத்துவப் பொங்கல் திருநாளாகக் கொண்டாடுவது என்று இந்தத் துறை முடிவு செய்திருக்கிறது.

பிற்பகல் 1-40

கடந்த ஆண்டு சமத்துவப் பொங்கலின் முடிவாக, நம்முடைய பாரம்பரியமான விளையாட்டான கபடிப் போட்டியை எடுத்து நடத்தினோம். இனி ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளை சமத்துவப் பொங்கல் திருநாளாகக் கொண்டாடுகின்ற வகையில், கிட்டத்தட்ட 10 இலட்சம் ரூபாய் செலவிலே, கிராமங்களிலே ஆரம்பித்து, மாநில அளவுவரை அந்தப் போட்டியை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.



தமிழ்நாட்டிலுள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளிலும்—இங்கேகூட அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர், ஒரு தொகுதிக்கு ஒரு இலட்சம் ரூபாய்தான் வருகிறது என்று சொன்னார்—நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, ஒவ்வொரு தொகுதிக்கும் 2 இலட்சம் ரூபாய் பெறுமான உபகரணங்களோடு, முதற்கட்டமாக 117 தொகுதிகளை எடுத்துக்கொண்டு, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அரசு, கிராமப்புறங்களில் நல்ல திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் நல்லாட்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின்மூலமாகச் செயல்படுத்தப்படும், இந்தியத் திருநாட்டையே கவர்ந்திடும் திலகம் போன்ற திட்டமான அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில்—விளையாட்டு மைதானங்கள் அமைப்பது. ஒரு இலட்சம் ரூபாய் அல்லது 1.5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே, ஒவ்வொரு கிராமங்களிலும் விளையாட்டு மைதானங்கள் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்தத் திட்டத்தைப் போலவே, மைய அரசும் ஊரக விளையாட்டு வசதிகளை மேம்படுத்தவும், ஊரக விளையாட்டுகளை நடத்தவும், Panchayat Yuva Krida Aur Khel Abhiyan என்ற ஒரு திட்டத்தினைச் செயல்படுத்திட உள்ளதாக அறிகிறேன். இதன்மூலம் இந்தியத் திருநாட்டின் கிராமப்புற மறுமலர்ச்சிக்கு வழிவகுத்த தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுக்கும் அதற்குத் துணை நின்ற உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விரைவில் என்னுடைய உரையை முடித்துவிடுகிறேன்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை குறித்த என்னுடைய அறிவிப்புகளெல்லாம்@ அச்சிட்டு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றை மட்டும் சொல்லிவிடுகின்றேன். திருப்பூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இரண்டு இடங்களுக்கும் ஒரு கோடி ரூபாய் செலவில், இரண்டு பல்நோக்கு உள்விளையாட்டரங்கங்கள் கட்டிக் கொடுக்கப்படும். இதற்கு 50 சதவிகிதம் அரசுப் பணத்தையும், 50 சதவிகிதம் மக்களின் பங்களிப்புப் பணத்தையும் சேர்த்துக் கட்ட வேண்டும். திருவண்ணாமலையில்

@ 507 முதல் 512 வரையிலான பக்கங்களில் இணைப்பு–VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

ஆண்களுக்காகவும், கிருஷ்ணகிரியில் பெண்களுக்காகவும், மொத்தம் இரண்டு விளையாட்டரங்கங்கள், ஆண்கள்—பெண்கள் இரு பாலருக்கும், 310 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டிக் கொடுக்கப்பட இருக்கின்றன. தருமபுரி மாவட்டத்தில் அரூரிலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆரணியிலும் 30 இலட்சம் ரூபாய் செலவிலே, 50:50 விகிதத்திலே இரண்டு மினி ஸ்டேடியங்கள் கட்டிக்கொடுக்கப்பட இருக்கின்றன. *(மேசையைத் தட்டும் ஒலி)*

விழுப்புரம் மாவட்டத்தில் 70 இலட்சம் ரூபாய் செலவில் நீச்சல் குளம் உருவாக்கப்பட இருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இரண்டு, மூன்று நாட்களாகவே என்னுடன் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைவிட, அவர் கொஞ்சம் கடுமையாகத்தான் பேசிக்கொண்டிக்கிறார். என்ன காரணமென்றால், அவர் கேட்பதில் நியாயமும் இருக்கிறது, உரிமையும் இருக்கிறது. திருநெல்வேலியில் செயற்கை புல்வெளி ஹாக்கி மைதானம் ஒன்று இருக்கிறது. மதுரையிலே செயற்கை புல்வெளி ஓடுகளம் ஒன்று இருக்கிறது. சென்னையிலே ஓடுகளமும் இருக்கின்றது, ஹாக்கி மைதானமும் இருக்கின்றது. இடையிலே உள்ள திருச்சி மட்டும் எப்படி விட்டுப்போனது என்று தெரியவில்லை என்று கேட்டார். அவர் இப்படிக் கேட்டதில் அவருக்கு உரிமையும் இருக்கிறது, தார்மீகப் பொறுப்பும் இருக்கிறது என்ற அடிப்படையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் பேசி, அதைக் கேட்டிருக்கிறோம். வந்துவிடுமென்றும் கருதுகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, முன்னுரிமை அடிப்படையிலே திருச்சிக்கு ஹாக்கி மைதானம் அமைத்துக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமத்துவப் பொங்கல் விழா மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் மலைமேலிடப் பயிற்சி மையங்கள் அனைத்தையும் புதுமையாகச் செய்திட .இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுச்சூழலைப்பற்றி உறுப்பினர்கள் இங்கே மிக அருமையாகச் சொன்னார்கள். நம்முடைய உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்கள், அனைவருக்கும் உபயோகமான நல்ல கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவர் சொன்னதுபோல, சுற்றுச்சூழல் துறையின்மூலமாக 3 கோடி ரூபாயும், வனத் துறையின்மூலமாக ஒரு கோடி ரூபாயும் ஆகமொத்தம் 4 கோடி ரூபாய் செலவில்,



கிட்டத்தட்ட 1 இலட்சத்து 17 ஆயிரம் கன்றுகள், 6 மாநகராட்சிகளில் நடுவதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு அதேபோல, 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் அனைத்து மாவட்டங்களிலும், ஒரு மாவட்டத்திற்கு ஒரு கிராமம் வீதம் தேர்ந்தெடுத்து, அதைப் பசுமைப்போர்வை என்ற திட்டத்திலே எடுக்க உள்ளது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். சுற்றுச்சூழல் துறையின் சார்பான அறிவிப்புகள் அச்சிடப்பட்டு புத்தகங்களாக உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதனைப் பதிவு செய்துகொண்டு @@ மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, நான் கொடுத்துள்ள விளக்கங்கள் போதுமானதாக இல்லையென்றாலும்கூட, அவை அனைத்தையும் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் என்று சொல்லி, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டு, வாய்ப்பிற்கு நன்றிகூறி, விடைபெறுகிறேன். நன்றி. *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் பதிலுரை.*

*பிற்பகல் 1-45*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்ல நாளில், ஐந்தாவது முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற கலைஞர் அவர்கள், இந்த முறை பொறுப்பேற்று மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கின்ற இந்த நாளில், (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு கட்சித் தலைவர்களும் அதையொட்டித் தெரிவித்த நல்ல கருத்துகளையும், வாழ்த்துகளையும் வரவேற்று, அவர்களுடைய வாழ்த்துகளோடு என்னுடைய வாழ்த்தையும் இணைத்துக்கூறி என்னுடைய உரையை நான் தொடங்குகிறேன்.

அவர்களெல்லாம் பாராட்டினார்கள், வாழ்த்தினார்கள். அப்படி வாழ்த்துகிறபோது, பாராட்டுகிறபோது, அவர்களெல்லாம் இன்றைக்குப் பாராட்டக்கூடிய தகுதியுடைய ஒரு தலைவரை திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றிருக்கிற காரணத்தால் (மேசையைத் தட்டும் ஒலி) கழகம் எப்படிப்பட்ட பெருமையைப் பெறுகிறது என்பதை நான் எண்ணிப் பார்த்தேன். அதேநேரத்தில், அவரைத் தலைவராக

---

@@ 513 முதல் 515 வரையிலான பக்கங்களில் இணைப்பு–VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

நான் அன்றைக்கே ஒத்துக்கொண்ட அந்த நிலையையும் எண்ணிப் பார்த்து, நல்ல வேளை நான் புத்திசாலியாகத்தான் இருந்திருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்று நண்பர்களுக்கு சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

உண்மையாகவே, இன்றையதினம் நடைபெறுகின்ற இந்த மானியக் கோரிக்கைகளில் குறிப்பாக, பொதுத் துறையும், தமிழ் வளர்ச்சித் துறையும் கலைஞர் அவர்களுடைய நேரடிப் பொறுப்பிலே உள்ள துறைகள். பல்வேறு துறைகளை நிருவகிக்கின்ற அமைச்சர்கள் மானியக் கோரிக்கையிலே உரையாற்றினாலுங்கூட, இந்தத் துறைகளோ கலைஞர் பொறுப்பிலே உள்ள துறைகள். அவர்களுக்குப் பதிலாக, அவர்கள் சார்பில் இந்தத் துறைகளுக்கான மானியக் கோரிக்கையை நான் முன்மொழிந்து விடையளித்துக் கொண்டிருக்கிறேன்.

இதிலே குறிப்பாக, பொதுத் துறை என்று சொல்லுகிறபோது பலரும் ஒருவேளை இது பொதுவான துறைதானே என்று கருதியோ என்னவோ அவரவருடைய தொகுதிக் குறையையேதான் பேசினார்களே தவிர, இந்தப் பொதுத் துறையைப்பற்றி, அந்தத் துறையிலே நடைபெறக்கூடிய காரியங்களைப்பற்றி அதிகம் சிந்திக்க அல்லது எடுத்துச்சொல்ல அதிகம் பேர் முன்வரவில்லை என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், இந்தச் சட்டமன்றத்திலேயே உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளுடைய குறைகளையெல்லாம் எப்பொழுது வாய்ப்புக் கிடைத்தாலும் சொல்லலாம் என்ற ஒரு மரபு இங்கே உருவாகி, ஏறத்தாழ இந்த ஓராண்டு காலம் அல்லது இரண்டாண்டு காலமும்கூட மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளுக்கு ஆற்றவேண்டிய பணிகளை எந்த மானியக் கோரிக்கையாக இருந்தாலும், அதிலே இணைத்துப் பேசுவதை ஒரு மரபாகக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு அதையும்கூட வரவேற்று ஏற்றுக்கொண்டு, கூடுமானவரையில் அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற முயற்சிக்கும் என்றும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, பொதுவாக மானியக் கோரிக்கை என்று சொல்லுகிறபோது, ஒரு குறிப்பிட்ட தலைப்பில் மானியக் கோரிக்கை வந்தாலுங்கூட அந்தத் துறை வேறு பல துறைகளையும் சேர்த்து நிருவகிக்கின்ற ஒரு நிலையைப் பெற்றிருக்கிற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் குழப்பம் அடைகிறார்கள்.



இங்கேகூட தமிழ் வளர்ச்சி என்ற தலைப்பு. அது ஒரு துறை. ஆனால், அந்தத் துறை அறநிலையங்கள், செய்தித் துறை ஆகியவற்றோடு இணைந்திருக்கிறது. அந்த செயலருடைய பொறுப்பிலே இருக்கிறது. அதனாலே பல நண்பர்கள் வெட்டுத் தீர்மானத்திலே—நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தில் இது அறநிலையத் துறையோடு ஒட்டியது என்ற எண்ணத்தில் திருவண்ணாமலையைச் சுற்றியுள்ள சில கோயில்களிலேயெல்லாம் வேத பாடசாலை தொடங்கப்படுமா, தொடங்க வேண்டுமென்ற கருத்தை வெட்டுத் தீர்மானத்திலே குறிப்பிட்டுள்ளார். நல்லவேளை அது வெட்டுத் தீர்மானம். ஆகவே, அந்தத் தீர்மானத்திலே அந்தக் கருத்தை அவர் சொன்னதற்குக் காரணம், இந்தத் துறை தமிழ் வளர்ச்சித் துறை, இந்து அறநிலையத் துறையோடு சேர்த்து நிருவகிக்கிற ஒரு செயலாளர் பொறுப்பிலே இருக்கிற காரணத்தால், அப்படி வெளியிடுகிற முறையைக்கூட நான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலேகூட சொல்லி, இனி கோரிக்கைகளைப்பற்றித் தருகின்ற அந்த அறிவிப்புகளில், துறையிலே இருக்கின்ற மற்ற துறைகளையெல்லாம் இணைத்து குறிப்பிட வேண்டிய தேவையில்லை; குறிப்பிடுவதாக இருந்தால், அடியில் தமிழக அரசு என்று குறிப்பிடுகிற இடத்தில், அந்த 'அரசு' என்பதற்கு முன்னர் இன்ன துறை என்று சொல்லுகிறபோது இவற்றையெல்லாம் குறிப்பிடலாம். எது முதன்மையாகக் குறிப்பிட வேண்டுமோ அதை மட்டும்தான் அந்தக் கோரிக்கையிலே, மானியத்திலே மேலே இடம்பெறச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

குறிப்பாக, பொதுத் துறை என்பது ஒரு அரசாங்கத்தினுடைய செயல்பாடுகளில் வகுக்கப்பட்ட பல்வேறு துறைகளுடைய பணிகள் தனித்தனியாக நடைபெற்றாலும்கூட அவற்றையெல்லாம் ஒரு இணைக்கக்கூடிய துறையாகவும், அவற்றிலே விடுபட்ட வகையிலே பல கடமைகளை நிறைவேற்றுகிற ஒரு துறையாகவும் அமைந்திருக்கிறது. பொதுப் பணித் துறை ஒரு குறிப்பிட்ட வேளாண்மை தொடர்பான, விவசாயம் தொடர்பான அல்லது கட்டடங்கள் கட்டுவது தொடர்பான ஓரே குறிப்பிட்ட பணியை நிறைவேற்றுவது.

பிற்பகல் 1-50

அதேபோல பொது உறவுத் துறை என்று இருக்கிறது. Public Relations. அந்தத் துறை செய்தித் துறையாக இருந்து, செய்திகளைச்

சேகரிப்பது, செய்திகளை வழங்குவது என்ற அந்தப் பணிகளையாற்றுகிறது. இந்தப் பொதுத் துறை என்பது அந்த இரண்டுக்கும் அப்பாற்பட்டு, ஆனால், அதேநேரத்தில் மிக முக்கியமான பல பொறுப்புகளை நிறைவேற்றுகிறது.

நான் அதைப் பற்றி ஒரு எண்ணம் ஏற்படுவதற்காகச் சொல்ல விரும்புகிறேன். மேதகு ஆளுநர் அவர்களுடைய சார்பாகவும், அமைச்சரவையின் சார்பாகவும் ஆற்ற வேண்டிய பல பணிகளை, அமைச்சர்கள் அவைக்காக ஆற்ற வேண்டிய பல பணிகளையும் இந்தப் பொதுத் துறை நிறைவேற்றுகிறது. I.A.S. அலுவலர்கள், மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்கள் பற்றிய பணிகளையும் மேற்கொள்கிறது.

நாட்டிலே சட்டம்-ஒழுங்கு அவற்றைப் பற்றி மொத்தமாக நாட்டினுடைய பாதுகாப்பு அடிப்படையில், தேசியப் பாதுகாப்புச் சட்ட அடிப்படையில் நிறைவேற்றவேண்டிய சில கடமைகளை நிறைவேற்றுகிறது. அகில இந்திய அளவிலே தேசிய ஒருமைப்பாட்டுக் குழு, அதேபோல பன்மாநில குழு, Inter-State Council—அந்த அமைப்புகளோடு மாநில அரசு கொள்ளவேண்டிய தொடர்புகளுக்கு இடையிலே செயலர் என்ற அளவிலே, அரசாங்கத்தினுடைய செயல் பொறுப்பை ஏற்று, அவர்கள்தான் அந்தக் கடமைகளை ஆற்றுகிறார்கள்.

அதேபோல, Protocol—வெளிநாட்டிலேயிருந்து வருகிறவர்கள், பிற மாநிலங்களிலிருந்து வருகிறவர்கள், மைய அரசிலிருந்து வருகிறவர்கள், அந்த உயர் பெருமக்கள் எல்லாம் வருகிறபோது, அவர்களை வரவேற்க, அவர்களை அரசாங்கத்தின் சார்பாக விருந்தோம்ப இந்தத் துறைதான் பொறுப்பேற்று இருக்கிறது.

அதேபோல வெளியுறவு. வெளிநாட்டு உறவுப் பிரச்சினைகளில் மத்திய அரசினுடைய வெளியுறவுத் துறை அமைச்சகத்தோடு தொடர்புகொள்வதற்கும் அதேபோல, இங்கேயிருக்கின்ற வெளிநாட்டுத் தூதரகங்களோடு தொடர்புகொள்வதற்கும், இந்தப் பொதுத் துறைதான் பொறுப்பேற்று இருக்கிறது.

Ex-servicemen. இந்த நாட்டினுடைய சுதந்திரத்தைப் பாதுகாக்க, உரிமையைப் பாதுகாக்க அன்னிய ஆக்கிரமிப்பினைத் தடுக்க, அன்னிய ஆக்கிரமிப்பு என்பதைவிட, தீவிரவாதிகளுடைய ஆக்கிரமிப்பைத் தடுக்க மிகப் பெரிய அளவிலே பொறுப்பேற்று



செயல்பட்டு, தங்களுடைய வாழ்வையே இழந்த, ஒப்படைத்த அப்படிப்பட்ட வீரர்களுடைய குடும்பத்தினுடைய நலனைப் பாதுகாக்கின்ற அந்தக் கடமையும், இந்தப் பொதுத் துறையைச் சார்ந்த ஒரு குழுவினிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல, இந்திய தேசிய இராணுவ வீரர்கள், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் தலைமையிலே போராடியவர்கள், அவர்களுக்கு ஆதரவாக இருந்த சுதந்திரப் போராட்ட வீரர்கள் அவர்களுடைய நலன்களைப் பாதுகாக்கின்ற பணியும் இவர்களாலே நிறைவேற்றப்படுகிறது.

விருந்தினர் இல்லங்கள் இவர்களாலே பராமரிக்கப்படுகின்றன. இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சொல்கிறபோது, டெல்லியில் உள்ள தமிழக விருந்தினர் மாளிகையில் சரியான முறையில், தான் கேட்டதற்கு பதில் தரவில்லையென்கின்ற குறையை அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் குறைகள் எல்லாம் விரைவில் நீங்கும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஏனென்றால், அங்கே பொறுப்பிலேயுள்ளவர்கள் சில நேரங்களிலே மாற்றப்படுவதன் காரணமாக சில பொறுப்புகளை அவர்கள் முழுவதும் உணர்ந்து நிறைவேற்றக்கூடிய சூழ்நிலை இல்லை. இருந்தாலும், அங்கேயுள்ள அலுவலர்கள், சட்டமன்ற உறுப்பினர்களோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களோ அல்லது தமிழகத்தைச் சேர்ந்த அரசு அலுவலர்களோ, அங்கே வரும்போது, உரிய முறையில் அவர்களுக்கு உதவவேண்டும், சரியான விளக்கம் தரவேண்டுமென்ற இந்தக் கருத்தை அவர்களுக்குத் தெரிவித்து, அவர்கள் அப்படி முறையாகச் செயல்படுவார்கள் என்ற நம்பிக்கையை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தத் துறைதான் இலங்கை அகதிகளைப் பராமரிக்கிறது. ஏறத்தாழ, இரண்டரை முதல் மூன்று இலட்சம் பேர் அகதிகள் தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிறார்கள். ஈழத்திலே அமைதி மலர வேண்டுமென்று அதிகமாக ஆசைப்படுவதற்கு ஒரு காரணம் இந்த அகதிகள் வருவதை நிறுத்தவேண்டும் என்பது. அப்படி வந்த அகதிகளிலே மூன்றில் இரண்டு பங்கு, திரும்பிச் சென்றுவிட்டார்கள். இருந்தாலும்கூட, இன்னும் ஏறத்தாழ 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அகதிகள் நம்முடைய முகாம்களில் தங்கி நம்மால் பராமரிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கென்று, குடும்பத் தலைவனுக்கு மாதத் தொகை, அந்தக் குடும்பத்திலுள்ள குழந்தைகளுக்கு மாதத் தொகை என்று மாதந்தோறும் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

அவர்களுக்கு வழங்கப்படுகின்ற அரிசி ஒரு கிலோ 57 காசுக்கு என்பது மிகக் குறைந்த விலை என்றாலும் அகதிகள் என்ற ஒரேயொரு அடிப்படையில் அந்த அரிசி அவர்களுக்கு உணவிற்காக வழங்கப்படுகிறது. அவர்களுடைய பிள்ளைகள் படிப்பிற்கு—20,849 பேர் அந்த அகதிகள் குடும்பத்துப் பிள்ளைகள் தமிழ்நாட்டிலே பல்வேறு கல்வி நிலையங்களில் கல்வி பயிலுகிறவர்கள் அவர்களுக்கும் இலவசமாகப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்படுகிறது, மற்ற உதவிகள் எல்லாம் செய்யப்படுகின்றன. இந்த இலங்கை அகதிகளைப்போல, இலங்கையிலிருந்து திரும்பி வந்தவர்கள், அங்கே சென்று வாழ்க்கையை ஏதேனும் ஒரு வகையில் நடத்தி, அதற்குப் பின்னர் தொடர்ந்து நடத்தமுடியாத நிலையில் இங்கே மறுபடியும் தமிழகத்திலே வந்து வாழ்கிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினைகளும், இந்தப் பொதுத் துறையாலேதான் கவனிக்கப்படுகிறது.

பிற்பகல் 1-55

பர்மாவிலிருந்து அகதிகளாக வந்தவர்கள், 20, 25 ஆண்டுகளுக்கு முன்னாலே வந்தவர்கள், தமிழ்நாட்டிலே பல இடங்களிலே காலனிகளை அமைத்துக்கொண்டு வாழ்வது உங்களுக்குத் தெரியும். அந்த அகதிகளும், அவர்களுடைய பிரச்சினைகளும் இந்தத் துறையாலேதான் கவனிக்கப்படுகிறது.

அரசாங்கம் அமைக்கிற விசாரணை ஆணையங்கள், அதேபோல மாநில உரிமைகள் ஆணையப் பணி இவையெல்லாம், அதேபோல மனித உரிமைக் குழு, இந்தக் குழுக்கள் எல்லாம்கூட, இந்தப் பொதுத் துறையினுடைய தொடர்போடு அந்தத் துறைகள் எல்லாம் இயங்குகின்றன. இந்தப் பொதுத் துறை, தமிழ்நாட்டினுடைய தோற்றம் அகில இந்திய அளவிலே எல்லோராலும் மதிக்கப்படுவதற்குக் காரணமான பல கடமைகளைத் தொடர்ந்து நிறைவேற்றுகிறது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பொதுத் துறை, முன்னாள் படை வீரர் நலனைப் பாதுகாக்கின்ற அந்தக் குழுவினுடைய பணியிலே, கொடி நாள் என்ற நாளிலே அதற்காகச் சேர்க்கப்படுகிற கொடி நாள் நிதி, இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் தொடர்ந்து பல ஆண்டுகளாக அதிகம் சேர்க்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசினுடைய பாராட்டைத் தொடர்ந்து பெற்று வருகிறது. இந்த



முறை 7-12-2006 முதல் 6-12-2007 வரை ரூ.10.22 கோடி, கொடி நாள் நிதி வசூல் செய்யப்பட்டிருக்கிறது. இலக்கு வைக்கப்பட்டது, 7 கோடிக்குள்ளாக; அதாவது 6.93 கோடி ரூபாய். ஆனால், திரட்டப்பட்ட நிதி 10 கோடி ரூபாய்க்கு மேல்.

அதேபோல, இந்த Ex-servicemen என்று உள்ளவர்கள், அவர்களுடைய வாழ்க்கையிலே மறுபடியும் மறுவாழ்வை அவர்கள் பெறுவதைப்போல, மறுபடியும் வேறு வேலைகளிலே அவர்கள் ஈடுபடுத்தப்படுவதிலே TEXCO என்ற அமைப்புமூலமாக தமிழ்நாட்டிலே 9,871 பேர் இப்போது பல்வேறு அலுவலகங்களிலே பணியாற்றி வருகிறார்கள். அரசாங்கத்தினுடைய சில துறைகளில், இத்தனை விழுக்காடு Ex-servicemen, அவர்கள் விண்ணப்பத்தை ஏற்று அவர்களை வேலையிலே அமர்த்த வேண்டும் என்ற முறை வைக்கப்பட்டிருக்கிறது. மாநில அரசுப் பணிகளில் 'சி' தொகுப்புப் பணிகளில் 5 விழுக்காடும், 'டி' பிரிவில் 10 விழுக்காடும் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. வனத் துறையில் உள்ள பாதுகாப்புப் பணிகளில் 15 விழுக்காடு அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாநில அரசு சார்ந்த பல நிறுவனங்களில், 10 விழுக்காடு Ex-servicemen என்ற அந்த நிலையிலே உள்ளவர்களுக்காக ஒதுக்கப்பட்டு, அவர்களுக்கெல்லாம் மறுவாழ்வு வழங்கப்படுகிறது. இப்படி வேலை பெற்று மறுவாழ்வு பெறக்கூடிய வாய்ப்பு இல்லாதவர்களுக்கு அவர்களுடைய குடும்பத்தை நிம்மதியாக நடத்துவதற்காக ஏதேனும் தொழில் தொடங்க வேண்டுமென்றால், அதற்குக் கடனும் வழங்கப்படுகிறது, நிதியும் வழங்கப்படுகிறது, வட்டி இல்லாத சலுகையும் வழங்கப்படுகிறது. எனவே, அப்படி இந்த அமைப்பு பணியாற்றுகிறது.

இந்தத் துறையோடு தொடர்புடையது மாநில மனித உரிமை ஆணையம்; மனித உரிமை என்பது நாளுக்கு நாள்தான் தெளிவடைந்து வருகிறது. அரசியல் சட்டத்திலே அது இடம் பெற்றாலும்கூட, உயர்ந்த நீதிபதிகள் மனித உரிமையைக் காப்பாற்றுகிற கடமையிலே, அந்தப் பொறுப்பிலே அமர்த்தப்பட்டாலும்கூட, மக்கள் எந்த அளவுக்கு அந்த அடிப்படைகளை உணர்கிறார்களோ அதைப் பொறுத்துத்தான் மனித உரிமை காப்பாற்றப்படும். அந்த முறையில் 1997 ஆம் ஆண்டு இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டாலும்கூட, அப்போது வந்த புகார்கள் 2,162. இன்றைக்கு அந்த awareness அதிகமாகி, அதை உணர்ந்து தங்களுடைய உரிமையைக் காத்துக்கொள்ள இந்த அமைப்பிடம் முறையிடக்கூடியவர்களுடைய

எண்ணிக்கை 2007-ல், 10,306 ஆக உயர்ந்துள்ளது. 2000 எங்கே, 10,000 எங்கே? 5 மடங்கு உயர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, காலம் செல்லச் செல்ல மக்கள் தங்களுடைய உரிமைகளையும் உணர்ந்து அவற்றைக் காத்துக்கொள்கிற வழிமுறைகளையும் அறிந்து, அதன்மூலமாக இந்த மனித உரிமை அமைப்பைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2-00

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பெருமை, சிறப்பு இவற்றைப்பற்றியெல்லாம் நண்பர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள். அவர்கள் உறங்குவதில்லை என்பதையும் சொன்னார்கள், ஓயாமல் உழைக்கின்றார் என்றும் சொன்னார்கள். அவர்கள் ஓர் அறிக்கையைக்கூட இன்று வெளியிட்டுவிட்டார்கள். என்ன அறிக்கையென்றால், ஒரு வாரம் எனக்கு ஓய்வு தேவை, அதற்காக என்னுடைய பிறந்த நாளைக் கொண்டாடுவதைத் தயவுசெய்து நிறுத்திக்கொள்ளுங்கள்; அன்றைக்கு நண்பர்களெல்லாம் என்னைத் தேடி வரவேண்டாமென்று ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார்கள். நண்பர்களெல்லாம்கூட என்னிடத்திலே சொல்லி, கலைஞரிடத்திலே சொல்லி பிறந்த நாளை நிறுத்தவேண்டாமென்று சொல்லுங்கள்; பல பேர் வெளி மாவட்டங்களிலே உள்ள தோழர்களெல்லாம் அந்த நாளில்தானே அவரைப் பார்க்கமுடியும் என்று வருவார்கள்; அதையும் நிறுத்திவிட்டால் அந்த வாய்ப்பு தவறிவிட்டதே என்று வருத்தப்படுவார்கள் என்ற கருத்தை அவர்கள் சொன்னார்கள். இருந்தாலுங்கூட, உங்களுக்கு நான் சொல்ல விரும்புவது, அப்படி அவர் ஓய்வு எடுத்துக்கொள்ளச் சென்றாலும் அங்கே ஏதேனும் தொல்காப்பியப் பூங்கா தயாராகுமே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) ஓய்வு எடுத்துக்கொண்டாலும் அவருடைய அறிவு தொடர்ந்து செயல்படும், அதுவும் நாட்டுக்குப் பயன்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முதலமைச்சருடைய தனிப் பிரிவு ஒன்று இருக்கின்றது. அவருடைய தனிப் பிரிவு ஒன்று செயல்படுகின்றது. சாதாரணமாக நடைமுறையில் என்னென்ன நடைபெறுகின்றது என்பது எனக்கேகூட புரியாது. நான் கேட்டு அறிந்துகொண்டுதான் சொல்லவேண்டும். அப்படி நடைபெறுகின்ற பணிகளில், இந்த ஓராண்டுக் காலத்தில் பெறப்பட்ட மனுக்கள், முதலமைச்சருடைய தனிப் பிரிவுக்குக் கிடைத்த விண்ணப்பங்கள் 3,50,684. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு



அந்த மனுவை, அந்த நிலையிலே உள்ள அதிகாரிகள், அலுவலர்கள் யார் யாருக்கு அனுப்பி, அதற்குரிய விடையைப் பெறவேண்டுமோ, அப்படிப் பெற்றது 2,59,083. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி மக்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு, செயல்படுவதிலே இன்னின்ன வகையில் செயல்படுகின்றோம் என்றெல்லாம் எடுத்துக் காட்டுகின்ற முறையில், முதலமைச்சருடைய பொது நல நிதியிலிருந்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வது என்ற முறையில், சிகிச்சை பெறுபவர்களுக்கு, மிக அதிகமான அளவிற்கு கடுமையான சிகிச்சை பெறுபவர்களுக்கு நிதி வழங்கப்படுகின்றது. அப்படி 1,584 இருதய அறுவை சிகிச்சை பெற்றவர்களுக்கு நிதியுதவி; 75 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை பெற்றவர்களுக்கு நிதியுதவி. 22 புற்று நோய் அறுவை சிகிச்சை பெற்றவர்களுக்கு நிதியுதவி; 4 முதுகுத் தண்டு அறுவை சிகிச்சை பெற்றவர்களுக்கு நிதியுதவி. 10 மூளை-நரம்பு மண்டல நோய்க்கு ஆளானவர்களுக்கு நிதியுதவி; இவ்வாறு 4 கோடியே 24 இலட்சம் ரூபாய் மருத்துவ நிதியுதவியாக வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இது முதலமைச்சருடைய discretionary fund. அது இந்த அளவு முறைப்படுத்தப்பட்டு, இவர்களுக்கெல்லாம் மறுபடியும் வாழ்வு கிடைப்பதற்கு வழி செய்யக்கூடிய முறையில் இந்த நிதி வழங்கப்பட்டிருக்கின்றது. அதேபோல, கடந்த ஆண்டு 2007-2008-ல் முடிந்து போன அந்த ஆண்டில் 141 ஏழை, எளிய மாணவ, மாணவியருக்கு 35,25,000 கல்வி உதவிக்காக நிதி வழங்கப்பட்டது.

இவை தவிர, முதலமைச்சருடைய தனிப் பிரிவு செயல்படுவதிலே, மக்களுடைய வேண்டுகோளையெல்லாம் அவ்வப்போது ஆய்வு செய்து அவற்றிற்கு உரிய முறையிலே பரிகாரம் காண்பதற்கு தொடு மின்திரை 1,50,000 ரூபாய் செலவிலே அமைக்கப்படவிருக்கின்றது. பொது மக்களுடைய பயன் கருதி இந்தப் பிரிவுக்கு தனி இணைய தளம் அமைக்கப்பட்டிருக்கின்றது. மனுதாரர்கள் இணைய தளம் மூலமாக மனுவைப் பதிவு செய்யலாம். அந்த மனுவின் அவ்வப்போதைய நிலையையும் அவர்கள் அந்த இணைய தளம் மூலமாக அறிந்துகொள்ளலாம். அந்த அளவுக்கு பொதுமக்களோடு தொடர்புடைய ஓர் அமைப்பாக முதலமைச்சருடைய தனிப் பிரிவு செயல்படுவதை நான் பாராட்டி இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

பொதுத் துறையைச் சார்ந்த ஒரு பகுதிதான் தேர்தல் ஆணையத்தினுடைய பணிகள். மாநிலத்திலே தேர்தல் ஆணையத்தினுடைய ஒரு பிரிவு, மாநில ஆணையருடைய தலைமையிலே செயல்படுகின்றது. இந்தத் தேர்தல் ஆணையத்தினுடைய தற்போதைய

வழிகாட்டி நெறிமுறைகளின்படி ஏற்கெனவே உள்ள விதிமுறைகளிலே சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஒரு வாக்குச் சாவடிக்கு உச்ச அளவாக நகர்ப் பகுதிகளில் ஏற்கெனவே 1,400, 1,600 வாக்காளர்கள் என்று அந்த உச்ச அளவு இருந்தது. இப்போது நகர்ப் பகுதிகளில் 1,200 வாக்காளர்கள் மற்றும் ஊரகப் பகுதிகளில் (Rural area) 1,000 வாக்காளர்கள் என்ற வரையறையில் தனித் தனி வாக்குச் சாவடிகள் அமைக்கப்படவிருக்கின்றன. ஆகவே, வாக்குச் சாவடிகள் சற்றுத் தொலைவாக இருப்பவை சற்று நெருங்கி வருவதற்கான வாய்ப்பு இதனாலே உருவாகியிருக்கின்றது என்று நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

பிற்பகல் 2-05

மேலும், வாக்காளர்களுடைய எண்ணிக்கை 300 வரையில் இருந்தால் தனியாக வாக்குச் சாவடி அமைக்கப்படத் தேவையில்லை. அதைவிட அதிகம் இருந்தால்தான் வாக்குச் சாவடி அமைக்கவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வாக்காளர்கள் புகைப்படங்களை சான்றுகளாகக் கொண்டுதான் வாக்களிக்க வேண்டுமென்று ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டது. இருந்தாலும்கூட, வாக்காளர்களின் புகைப்படங்களை சேகரிக்கும் பணி ஏப்ரல் 2008 வரை 98.62 விழுக்காட்டினை எட்டியுள்ளது. ஏறத்தாழ, ஒன்றரை விழுக்காடுதான் இன்னும் நிறைவேற வேண்டியதாக இருக்கிறது என்று சொல்லக்கூடிய அளவிற்கு, 98.62 விழுக்காடு அளவிற்கு வாக்காளர்களு[illegible] அவர்களுடைய நிழற்படங்கள் வழங்கப்பட்டு, அதன் [illegible] தேர்தலிலே பங்குகொள்ளக்கூடிய வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், விடுபட்டவர்களுக்கு கட்டாயமாக வாக்குச் சீட்டு கிடைக்க வேண்டுமென்பதற்காக, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும், தலா ஒரு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை மையம் அமைக்கப்பட்டுள்ளது. அதன்மூலமாக, 234 வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை மையங்களையும், தமிழ்நாடு விரி பரப்பு இணைய வலை மையத்துடன் இணைக்கும் பணியினையும் செய்துதரும்படி தமிழ்நாடு மின்னணு நிறுவனம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அவர்கள் Tamil Nadu State-wide Area Network என்னும் முறையில் இணைய தளம் மூலமாக யாரும் தொடர்புகொள்ளக்கூடிய அந்த அமைப்பை ஏற்படுத்துவதிலேயும் மிகத் தீவிரமாக இருக்கிறார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



இந்தியத் தேர்தல் ஆணையம், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையினைக் கையடக்கமான சிறிய வடிவில் வழங்க ஆணையிட்டுள்ளது. ஏற்கெனவே, சற்று பெரிய அளவாக இருந்ததை ஒரு குறிப்பிட்ட அளவிலே, passport size என்ற அளவிலே இருந்தால்தான் அவர்கள் அதைப் பயன்படுத்துவதற்கு எளிதாக இருக்கும் என்று ஆணையம் தெரிவித்திருக்கின்றது என்ற கருத்தையும் இங்கே நம்முடைய தமிழக மாநில அளவிலே உள்ள, மத்திய தேர்தல் ஆணையத்தோடு இணைந்து செயல்படுகின்ற அந்த ஆணையம் தெரிவித்திருப்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரையில், அனைவரும் ஒட்டுமொத்தமாகத் தமிழ், தமிழ் என்றுதான் நாம் முழங்கிக் கொண்டிருக்கிறோம். அனைத்திலும் தமிழ் என்கிறோம், எல்லாம் தமிழில் என்கிறோம். தமிழ் தவிர வேறு மொழிக்கு இங்கு இடம் ஏன் என்றுகூடக் கேட்கக்கூடிய அளவிற்கு ஓர் உணர்வு இருக்கிறது. இந்த உணர்வை நான் பாராட்டி வரவேற்க விரும்புகிறேன். 30 ஆண்டுகளுக்கு முன்னர் சட்டமன்றத்தில் இந்த உணர்வை எதிர்பார்க்க முடியாது. இன்றைக்கு அந்தத் தமிழ் உணர்வு வளர்ந்திருக்கிறது. தமிழ் உணர்வு வளர்ந்த அளவிற்குத் தமிழ் அறிவு வளர்ந்ததா என்றால் என்னைப் பொறுத்தேகூட சந்தேகம்தான். உணர்வு என்பது இயல்பு. தாயினிடத்திலே குழந்தைக்கு ஏற்படுகின்ற பற்றை ஒத்தது. ஆனால், தமிழ் அறிவு என்பது அவரவர்களுக்கு இயல்பாக அமைகின்ற அறிவேகூட சிறந்த அறிவாக இருக்கக்கூடும். ஆனால், தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம், தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு, தமிழ் நாகரிகம், தமிழ் வரலாறு என்னும் முறையிலே நாம் பெறுகின்ற அறிவு சற்றுக் குறைவாகத்தான் இருக்கும். ஆனால், அந்தக் குறைவை நம்முடைய பற்று ஈடுசெய்யும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. உண்மையான தமிழ்ப் பற்று இருக்குமானால், தமிழ் அறிவு குறைந்தால்கூட, தமிழ் அறிவு இருக்கின்ற இடத்தை மதிக்கின்ற மனப்பான்மை இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, அந்தத் தமிழ்ப் பற்று, தாய் மொழிப் பற்று இப்போது பல வகையில் வளர்ந்திருப்பது வரவேற்கப்படவேண்டியது. ஒரு புலவர் 300 ஆண்டுகளுக்கு முன்னாலே சொன்னார்:

'இருந்தமிழே உன்னால் இருந்தேன், இமையோர் விருந்து அமிழ்தம் என்றாலும் வேண்டேன்' என்றார். அப்படி, தமிழைப் பற்றி அவர் எண்ணிப் பார்க்கின்றபோது தமிழுக்காகவே பிறந்தேன், தமிழுக்காகவே

வாழ்ந்தேன் என்று சொல்லக்கூடிய அளவிற்கு அந்தப் புலவர் அன்றைக்குப் பாடினார். தமிழ் ஆட்சி மொழி என்று 1956 ஆம் ஆண்டிலே அறிவிக்கப்பட்டு, அதற்குப் பின்னர் நடைமுறைப்படுத்துவதிலே பல ஆணைகள் பல கட்டத்திலே பிறப்பிக்கப்பட்டு, இன்றைக்கும் தமிழகத்தினுடைய தலைமைச் செயலகத்திலே உள்ள சில அலுவலர்கள் பழக்கத்தின் காரணமாகவும், சில குறிப்பிட்ட தேவையின் காரணமாகவும், ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதைத் தவிர, மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் வரையில் பெருமளவிற்கு ஏறத்தாழ நூற்றுக்கு 98 விழுக்காடு, 99 விழுக்காடு தமிழில்தான் நடைபெறுகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 2-10*

நான் மாணவனாக இருந்தபோதோ, நான் முதன்முதல் சட்டமன்றத்திற்கு வந்தபோதோ, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலேகூட ஆங்கிலத்திலே பேசினால்தான் மாவட்ட ஆட்சியாளரிடத்திலே செல்வாக்காகப் பேசி தங்களுடைய கருத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும் என்ற நிலைமை இருந்தது ஒரு காலம். ஆனால், இன்றைக்கு அப்படி அல்ல. இன்றைக்குத் தமிழ் தெரிந்த எவரிடத்திலேயும் தமிழில் நாம் பேசி நம்முடைய உரிமையை நிலைநாட்டிக்கொள்ள நல்ல வாய்ப்பு உருவாகியிருக்கிறது.

தமிழை ஆட்சி மொழியாக்குவதற்கு, ஆட்சிமொழிக் காவலர் என்றே பெயர் பெற்ற திரு. கி. இராமலிங்கனார் அவர்கள் 40, 45 ஆண்டுகளுக்கு முன்னாலே அந்தப் பொறுப்பிலே இருந்து தொடங்கிய அந்தப் பணி இன்றைக்குப் பல மடங்கு விரிவடைந்திருக்கிறது.

தமிழ் வளர்ச்சித் துறை—தமிழ் ஆட்சி மொழியை நிருவகிக்கிற அந்தத் துறை தமிழ்நாட்டிலே உள்ள எல்லா அலுவலகங்களிலேயும் தமிழைச் செம்மையாக நடைமுறைப்படுத்த, நல்ல முறையிலே தமிழைக் கையாள, தமிழிலே உள்ள ஆட்சிச் சொற்கள் தவறாமல் கையாளப்பட, தவறு ஏற்படாமல் இருக்க, அந்தக் கருத்துத் தெளிவு குன்றாமல் இருக்க மாவட்டந்தோறும் பயிற்சியும் தருகிறது; கருத்தரங்குகளையும் நடத்துகிறது. எனவே, அந்த முறையில் இன்றைக்குப் பணி வளர்ந்திருக்கிறது.



நீதிமன்றங்களிலேயும்கூட, மாவட்ட அளவிலே உள்ள பல நீதிமன்றங்களில் தமிழுக்கு இடமுண்டு. தமிழில் நடத்தலாம். ஆனால் அவர்களிலே சிலருக்கு அவரவருடைய பழக்கம் காரணமாக அல்லது தாங்கள் தமிழில் எழுதுகிறபோது தெளிவாக எழுதமுடியாது என்ற ஒரு நிலைமை இருப்பதன் காரணமாக ஆங்கிலத்திலே எழுதுவது உண்டு. நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், உலகம் போகிற வேகத்தை நாம் எண்ணிப் பார்க்கிறபோது வேகமாக ஓடுகிற வண்டியிலேயிருந்து இன்னொரு வண்டிக்குத் தாவ வேண்டுமானால், இரண்டு வண்டியும் ஒரே வேகமாக ஓடுகிறபோதுதான் தாவிப் பாய முடியுமேதவிர, ஒரு வண்டி வேகமாக ஓடி, ஒரு வண்டி மெதுவாக ஓடி வருமானால், ஒன்றிலிருந்து ஒன்றுக்குத் தாவக்கூடிய, பாயக்கூடிய ஒரு நிலை ஏற்படுகிறபோது விபத்துதான் ஏற்படும்.

அதைப்போல ஆங்கிலத்தினுடைய செல்வாக்கும், ஆதிக்கமும் தமிழ் மண்ணோடு கலந்து மிக நீண்ட காலமாக ஊன்றிவிட்டது. அது ஊன்றியதைக் குற்றம் என்றுகூட நான் நினைக்கவில்லை. அதுதான் தமிழினுடைய பெயரை வெளியே பரப்பி, தமிழுக்கு ஒரு புது வாழ்வைத் தேடித் தந்தது. தமிழ் மொழியினுடைய தனிப் பெருமையை நிலைநாட்டுவதற்குக் காரணமாக இருந்தது எல்லாம் ஆங்கில அறிவு. (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்குத் தெரிந்து என்னுடைய பேராசிரியர் பல்கலைப் புலவர் கா.சு. பிள்ளை அவர்களோ, ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களோ, மறைமலையடிகள் அவர்களோ, தமிழுக்குப் பெருமை சேர்த்த வ.உ. சிதம்பரனாரோ, தேசியக் கவி பாரதியாரோ அத்தனை பேருக்கும் ஆங்கிலத்தினுடைய பின்னணிதான் அவர்களுக்கு ஒரு புது ஆற்றலையும், எழுச்சியையும் கொடுத்து அதன் காரணமாக அதன் பயனை நாம் பெற்றிருக்கிறோம். நாம் அவர்கள் உருவாக்கிய அந்த உணர்வோடு இருந்த சூழ்நிலையில் பிறந்த பிள்ளைகள். ஆகவே அவர்களும் ஆங்கிலத்தால் பயன்பெற்று அந்த வழியிலே தமிழுக்கு ஒரு ஆக்கம் செய்தார்கள். அதைப்போல ஆங்கிலத்திலே மேதையாக, ஆற்றல் மிக்கவராக, மொழி அறிஞராக இருந்த சிலர்தான் டாக்டர் கால்டுவெல் போன்றவர்கள், ஜி.யு. போப் போன்றவர்கள்தான் தமிழினுடைய தனிப் பெருமையை உலகத்திற்கு உணர்த்தினார்கள். அதற்காக ஆங்கிலம்தான் வேண்டும் என்பது என்னுடைய வாதம் அல்ல. ஆங்கிலத்தினுடைய செல்வாக்கு அடியோடு நம்மைவிட்டு நீங்கிவிட்டதாக நாம் எண்ணிவிடக்கூடாது. அந்தக் கனவு நமக்குத் தேவையில்லை. ஆனால் தமிழ்தான் ஆட்சி மொழி. தமிழைத்தான்

பயன்படுத்தவேண்டும், பாரதியாரே பாடுகிறபோது சொன்னார், எழுதுகிறபோது எழுதினார், தமிழிலேயே நினை, தமிழையே பேசு, தமிழையே எழுது, தமிழே உன் மூச்சாக இருக்கட்டும் என்றார். எனவே, அப்படிப்பட்ட உணர்வோடு தமிழைப் போற்றுகிற முறையிலே தமிழ் வளர்ச்சித் துறை பல பணிகளை ஆற்றி வருகிறது. அப்படி ஆற்றுகிற பணிகளிலே ஒன்று ஏற்கெனவே திருவள்ளுவர் ஆண்டு அரசு நடவடிக்கைகளில் பயன்படுத்த கலைஞர் அவர்களாலே அறிவிக்கப்பட்டு. அந்தப் பிறந்த நாளை நாம் தொடர்ந்து நம்முடைய எண்ணத்திலே கலந்து கொண்டாடி வருகிறோம்.

அண்மையிலே தை முதல் நாள்தான் தமிழருடைய ஆண்டினுடைய துவக்க நாள் என்று அறிவிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) தை முதல் நாள்தான் தமிழோடு பிறந்த நாள். தமிழருடைய வாழ்வோடு பிறந்த நாள். தமிழ்ச் சிந்தனையோடு பிறந்த நாள். சித்திரை என்பதும், வைகாசி என்பதும் தமிழ்ச் சொல்லா என்பது கேள்விக்குரியது. தை அப்படி அல்ல. இரண்டாவது இயற்கையினுடைய அடிப்படையிலே தை முதல் நாள் என்றால் மலர்ச்சியினுடைய சின்னமாக அமைந்த நாள். மார்கழியின் உச்சியிலே பிறந்தது தைப் பொங்கல் என்று சொல்வார்களே அந்த மார்கழியின் உச்சியிலே ஏற்படுகிற மலர்ச்சி தை முதல் நாளாக இருக்கிறது. அந்த முதல் நாள் தமிழர்களுக்கு ஆண்டு முதல் நாள் என்று அறிவிக்கப்பட்ட அந்த முறையில், நான் இப்போதுகூட இந்த அவையிலே உள்ளவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், எதுவும் நாம் கைக்கொண்டால்தான் மக்களிடத்திலே போய்ச் சேரும். எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய நடைமுறையிலேகூட தை முதல் நாளுக்கு ஒரு முக்கியத்துவத்தை— வெறும் பொங்கலுக்காக அல்ல, வெறும் உணவுக்காக அல்ல, பண்டிகை என்ற முறையிலே அல்ல, தமிழருடைய புத்தாண்டு நாள் என்ற உணர்வோடு—அந்த நாளுக்கு ஒரு முக்கியத்துவத்தை ஏற்படுத்தவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 2-15*

அதேபோல, இந்த ஆண்டு ஒரு பக்கம் பரிதிமாற்கலைஞர் சொன்ன செம்மொழி என்று நாம் பெருமைகொள்கிறோமே, செம்மொழி என்று தமிழை நிலைநாட்டுவதற்குக் குரல் கொடுத்த முதல் தமிழன் அவர். மற்றவர்கள் செம்மொழி என்ற கருத்துப்பட எழுதியது உண்டு.



டாக்டர் கால்டுவெல் எழுதினார், பிற மொழியினுடைய தயவு இன்றி இயங்கக்கூடிய வல்லமையுள்ளது தமிழ் மொழி என்று. ஆனால், அதை உயர்தனிச் செம்மொழி என்ற கருத்திலே பல்கலைக்கழகத்திலே வாதாடியவர், பரிதிமாற்கலைஞர். அவர் எழுதிய தமிழ் மொழி வரலாற்றிலேதான் அதற்கு ஒரு தனிச் சிறப்பு. அந்தக் கட்டுரையேகூட உயர்தனிச் செம்மொழி என்ற தலைப்பிலே எழுதப்பட்ட கட்டுரை. அந்தப் பரிதிமாற்கலைஞருடைய இல்லம், அண்மையிலே புதுப்பிக்கப்பட்டு நினைவுச் சின்னமாக ஆக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல, தமிழ்நாட்டிலே மறைந்துவிடக்கூடிய நிலையில் இருந்த பழைய ஏடுகளையெல்லாம் புதுப்பித்து, சங்கத் தமிழ் என்று சொன்னால் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டுமாகும். அவற்றில் பெரும்பாலான ஏடுகளை—சில ஏடுகளுக்கு உரையும் எழுதி வழங்கியவர் டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் அவர்கள். எனவே, அந்த உ.வே. சாமிநாத அய்யர் அவர்களுடைய உத்தமதானபுரம் என்ற அவருடைய ஊரிலே அவருடைய வீடும் நினைவுச் சின்னமாகக் கட்டி முடிக்கப்பட்டு அண்மையிலே திறக்கப்பட்டது.

அதேபோல, தமிழை வளர்ப்பதற்காக அறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்த அந்த அடிப்படையிலே தோன்றியது உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம். அந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னையிலே பல ஆண்டுகளாகத் தொடர்ந்து பல பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கிறது. ஏராளமான நல்ல நூல்களையெல்லாம் வெளியிட்டுக் கொண்டிருக்கிறது. அதேபோல, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நடைபெற்ற மாநாட்டையொட்டி அவர் அறிவித்து உருவான உலகத் தமிழ்ச் சங்கம் என்று கருதுகிறேன். அந்த உலகத் தமிழ்ச் சங்கத்தினுடைய பணிகள்கூட, தஞ்சையில் உள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்திலே இப்போது மேற்கொள்ளப்பட்டு. அந்தப் பணியும் நடைபெற்று வருகிறது.

அண்மையிலே, மத்திய அரசு ஏறத்தாழ ரூ.77 கோடி செம்மொழித் திட்டத்திற்காக—தமிழகத்திலே செம்மொழித் தமிழ் ஆய்வு மத்திய நிறுவனம் உருவாக்கப்படுவதற்காக நிதி ஒதுக்கியது. அந்த நிறுவனத்தைத் துவக்கி வைக்கிற அந்தக் கடமையைக்கூட மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் அவர்கள் இங்கே வந்து நிறைவேற்றினார்கள். அதற்கான இடம் பெரும்பாக்கம் என்ற கிராமத்தில்—சோழிங்கநல்லூரை ஒட்டியது— அந்தக் கிராமத்தில் ஏறத்தாழ 17 ஏக்கர் நிலம்; அந்தப் புள்ளிவிவரம்

இருக்கிறது. நான் எடுத்துச்சொல்லிக்கொண்டிருக்க நேரம் இல்லை என்ற காரணத்தினால், சுருக்கமாகச் சொல்கிறேன். அந்த இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இங்கே பாலாற்றுக்காக அதிலே ஆற்றப்பட வேண்டிய பணிகளுக்காக பொதுப் பணித் துறையிலே அந்தப் பணி செய்கிறவர்களுக்காக இருந்த ஒரு மாளிகை, அந்தப் பாலாற்று மாளிகை இப்போது இந்தச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்காக, தொடக்க நிலையிலே அந்தக் கட்டடம், காமராஜர் சாலையிலே உள்ள கட்டடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, செம்மொழிக்காக அந்தப் பணிகள் நடைபெறும் என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களுடைய அறிவு, ஆற்றல் இவற்றையெல்லாம் பயன்படுத்தவேண்டும் என்று விரும்பி, அவருடைய தலைமையிலே அகரமுதலித் திட்டம் ஒன்றை கலைஞர் அறிவித்து, அதற்கான பணிகள் தொடங்கப்பட்டு பல பணிகள் பாவாணர் காலத்திலே நிறைவேறிவிட்டன. ஆனால், அவர் எடுத்துவைத்த அந்த முறைப்படி தொடர்ந்து அந்தப் பணி நிறைவேறி முழுவதும், நூற்றுக்கு நூறு விழுக்காடு, அந்தப் பணி முழு அளவிலே நிறைவேறுவதற்குக் கலைஞர் அவர்கள் அண்மையிலே அதற்கான ஆணை பிறப்பித்து விரைந்து செயல்படுத்துவதற்கான வழிவகுத்துக் கொடுத்து, இன்னும் ஓராண்டு காலத்தில் அந்த அகரமுதலித் திட்டப் பணி நிறைவேற இருக்கிறது. எனவே, அதன்மூலமாக, தமிழ் மொழியினுடைய மிகப் பெரிய சிறப்புகள், அதனுடைய அரிய கூறுபாடுகள், இலக்கண முறைப்படி அறிந்துகொள்ளவேண்டிய பல செய்திகளை அந்த அகரமுதலி மூலமாக உலகம் அறிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கும். அந்த அகரமுதலி என்பது தமிழ், ஆங்கிலம், தமிழிலேயே விளக்கம், அந்தச் சொல்லைப் பற்றிய வரலாறு இவ்வளவும் கொண்டதாக மேல் நாடுகளில் எல்லாம் தயாரிக்கப்படுகிற கலைக் களஞ்சியங்களைப்போல ஒரு பெரிய அளவிலே உருவாகியிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் *2-20*

இன்னும் வேறு பல செய்திகளை நான் சொல்வதைவிடக் குறிப்பாகத் திருக்குறள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். திருக்குறள் முழுவதையும் நினைவிலே கொண்டு முற்றோதல் நிகழ்த்துகிறவர்களுக்குப் பரிசு வழங்குவது என்று கலைஞர் அவர்கள் அறிவித்த அந்தத் திட்டத்தின்படி, இப்போதும் கடந்த ஆண்டிலேயும்



24 பேர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டும் தொடர்ந்து வழங்கப்படும். திருக்குறளை முழுவதும், எந்தப் பகுதியாக இருந்தாலும், சொல்லக்கூடிய அளவுக்கு அதிலே தெளிவும், தேர்ச்சியும் பெற்ற மாணவர்களுக்கு, மாணவிகளுக்கு இந்தத் தொகை ஒரு பேருதவியாக இருக்கிறது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ் இலக்கியத்திற்கே பெருமை சேர்த்த ஒரு புலவர் கணியன் பூங்குன்றனார். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற அந்தத் தொடர் அவர் மூலமாகத்தான் உலகத்திற்குக் கிடைத்தது. மறைந்த முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சோவியத் நாட்டுக்குச் சென்றபோது நம்முடைய நாட்டிலேயிருந்து அவர்களுக்குத் தெரிவிக்கிற ஒரு செய்தியாக, தமிழிலே எங்களுடைய புலவர் ஒருவர் "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்று அன்றே பாடினார் என்று பெருமையாக அவர்கள் குறிப்பிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கணியன் பூங்குன்றனாருடைய பெயரிலே ஒரு பரிசு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பரிசு குறிப்பாகக் கணினித் துறையில் புதிய மென்பொருள் தயாரிக்கிற முறையில், மிகச் சிறப்பான முறையிலே தயாரிக்கப்பட்ட மென்பொருளுக்கு *1* இலட்சம் ரூபாய் பரிசு வழங்குவது என்று அறிவிக்கப்பட்டு, அந்த முறையிலே கணியன் பூங்குன்றனார் பரிசு கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

எனவே, தமிழ் வளர்ச்சித் துறை கலைஞருடைய மேற்பார்வையில் அவருடைய அறிவுரையின்படி, பல நல்ல கடமைகளை நிறைவேற்றுகிறது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட பல கடமைகள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டிருப்பதை நான் இங்கே படித்துக்காட்டிக் கொண்டிருக்க நேரம் இல்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *2007-2008* ஆம் ஆண்டுக்கான அறிவிப்புகளின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுத் திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு நிதி வழங்கப்பட்டது. திராவிட மொழியியல் ஆராய்ச்சி நிறுவனம், D.L.A. - Dravidian Linguistic Association, திருவனந்தபுரம், அவர்கள் *30, 40* ஆண்டுகளாகச் சிறந்த ஆய்வுகளை நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கு நிதி வழங்கப்பட்டது. இவையெல்லாம், அந்தச் செய்திகள் எல்லாம் இந்த நிறைவேற்றப்பட்ட பணிகளிலே இடம் பெற்றிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் பார்த்துக்கொள்ளலாம் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இப்போது இந்த ஆண்டு அறிவிக்கவேண்டிய சில செய்திகள் இங்கே இடம் பெற்றிருக்கின்றன.

தமிழ் மொழியைச் செம்மொழி என ஏற்று மத்திய அரசு அறிவித்துள்ள நிலையில் தமிழ் மொழியின் சிறப்பைப் பிற மாநிலத்தவர் அறிந்துகொள்ள ஏதுவாகப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் சிறப்புமிக்க தமிழ் நூல்களும் ரூ.5 இலட்சம் செலவில் இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடப்படும்.

அரசு அலுவலகங்களில் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கம் பரவலாகவும், முழுமையாகவும் அமைந்திடத் துணைபுரியும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ரூ.30,000 வீதம் 30 மாவட்டங்களில் ரூ.9 இலட்சம் செலவில் ஆட்சிமொழித் திட்டப் பயிலரங்கு நடத்தப்பெறும். அரசு அலுவலர்களுக்கு ஆட்சி மொழித் திட்டம் பற்றிய பயிற்சி தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி மையத்திற்கு ரூ.1.45 இலட்சம் செலவில் சீர்வளி வசதி செய்யப்படும்.

தமிழ் வளர்ச்சி தொடர்பில் பல்வேறு திட்டப் பணிகளை முன்னிட்டு வருகை தரும் வல்லுநர்கள், தமிழறிஞர்கள், சான்றோர்கள், பொதுமக்கள், பயிற்சி பெற வரும் அலுவலர்கள் ஆகியோர்க்குத் தூய குடிநீர் வழங்கப்பட ஏதுவாக ரூ.25,000 செலவில் குடிநீர்த் தூய்மைக் கருவி வாங்கி அளிக்கப்படும்.

இலக்கியங்களில் கூறப்பட்டிருக்கும் விழுமிய கருத்துகளை அனைவரும், குறிப்பாக இளைய தலைமுறையினரும் அறிந்துகொள்வது எதிர்கால வாழ்விற்கும் தமிழ் வளர்ச்சிக்கும் துணைபுரியும் என்பதால் தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விழுமிய கருத்துகளைத் தொகுத்து ரூ.12 இலட்சம் செலவில் தமிழ் இலக்கியச் சிந்தனைக் களஞ்சியம் வெளியிடப்படும்.

தமிழ்மொழி, தமிழினம், கலை-பண்பாடு, நாகரிகச் சிறப்புகள் வெளிப்படும் வகையிலும், தமிழ்க் கல்வி, தமிழ் வளர்ச்சிக்குத் துணைபுரியும் வகையிலும் சிறப்பாகத் தொண்டாற்றி வரும் பிற மாநிலங்களில் மற்றும் அயல்நாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கங்கள், தமிழ் அமைப்புகளை ஊக்குவிக்கும் நோக்கில் ஆண்டுதோறும் 5 அமைப்புகளைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொன்றிற்கும் ரூ.1 இலட்சம் விருதுத் தொகை வழங்கப்படும். இவ்விருது பரிதிமாற்கலைஞர் பெயரில் வழங்கப்படும்.



பிற்பகல் 2-25

வெளிநாடுகளில் தமிழியல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டுவரும் பல்கலைக்கழகங்களின் வரலாறு, பின்னணி, தமிழாய்வில் காட்டிவரும் ஈடுபாடு ஆகியவற்றின் அடிப்படையில் அப்பல்கலைக்கழகங்களின் வேண்டுகோளுக்கேற்ப, தமிழ் நூல்களை அனுப்புதல், ஆய்வாளர்களை ஆய்வுப் பணி மேற்கொள்ள அழைத்தல், அனுப்பிவைத்தல், கருத்தரங்கில் கலந்துகொள்ளப் பேராசிரியர்களை அழைத்தல், அனுப்பிவைத்தல் ஆகியவற்றுக்காகவும் தமிழ் அமைப்புகள், சங்கங்களின் வேண்டுகோளைக் கருதிப்பார்த்துத் தமிழாசிரியர்களைத் தங்கியிருந்து தமிழ்ப் பணியாற்ற அனுப்பிவைத்தல் ஆகியவற்றுக்காகவும் ஆண்டுதோறும் ரூபாய் 50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

இவ்வாண்டு 10 மாவட்ட உதவி இயக்குநர்கள் ஒவ்வொருவருக்கும் ஊர்திகள் வழங்கப்படும்.

தற்போது ஆண்டொன்றுக்கு 8 மாவட்டங்களில் ஆட்சி மொழிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு முதல் அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டுதோறும் ஆட்சி மொழிக் கருத்தரங்குகள் நடத்தப்பெறும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காகும் கூடுதல் செலவினம் ரூபாய் 1.15 இலட்சமாகும்.

நாட்டு விடுதலை, சமுதாய விடுதலை என்னும் இருபெரும் நோக்கில் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் வளர்ச்சிக்குப் பங்களித்துள்ள மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், வை.மு. கோதைநாயகி அம்மையார், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி போன்ற பல்துறைப் பெண் சாதனையாளர்கள் பற்றிய முழுமையான ஆய்வுக் கருத்தரங்கம், மூன்று நாள் தேசியக் கருத்தரங்கம் நடத்துவதற்காக ரூபாய் 1.15 இலட்சம் வழங்கப்படும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வியல் நிறைஞர்— ஆய்வியல் நிறைஞர் என்றால் M.Phil.— மற்றும் தமிழ் முதுகலைப் பட்ட மாணவர்களுக்கு வகுப்பறைகள் கட்டுவதற்கு ரூபாய் 12.00 இலட்சம் வழங்கப்படும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் செயல்பட்டுவரும் தமிழ் இலக்கியம் மற்றும் சுவடிப் புலம், தமிழ் மொழி மற்றும் மொழியியல்

புலம், அயல்நாட்டுத் தமிழர் புலம், சமூகவியல் கலை மற்றும் பண்பாட்டுப் புலம் ஆகிய நான்கு புலங்களுக்கும் கணினி மற்றும் அச்சுப் பொறி வாங்குவதற்கு ரூபாய் 2.40 இலட்சம் வழங்கப்படும்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடங்கப்பெற்று 26 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், கட்டடங்களுக்கும், குடிநீர்-கழிவுநீர் அமைப்புகளுக்கும், மின் அமைப்புகளுக்கும் சிறப்புச் சீர்காப்புப் பணி மேற்கொள்வதற்காக ரூபாய் 20.00 இலட்சம் வழங்கப்படும்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பெருஞ்சொல்லகராதித் திட்டத்தின்கீழ் இதுவரை 'அ' முதல் 'ஔ' வரை நான்கு தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. இது தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தினுடைய அகராதி. தற்போது தொகுதி 5 முதல் 7 வரை மூன்று தொகுதிகள் வெளியிடுவதற்காக, அச்சிடுவதற்காக ரூபாய் 15.00 இலட்சம் வழங்கப்படும்.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் கடைசி மூன்று பகுதிகள் தொகுப்பு மற்றும் கணினியச்சுப் பணிக்காக 180 நாட்கள் பணிப் பட்டறை நடத்துவதற்காக ரூபாய் 4.10 இலட்சம் வழங்கப்படும்.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்கத்தில் பேரகரமுதலி தொகுக்கும் பணிக்காகவும், நிருவாகப் பயன்பாட்டிற்காகவும் ஒளி நகலிக் கருவி வாங்குவதற்காக ரூபாய் 1.00 இலட்சம் வழங்கப்படும்.

இவை தொகை குறைவாகத் தோன்றினாலும்கூட, நீண்ட நாட்களாக நடைபெற்று வருகிற பல பணிகளை முற்றுப்பெறச் செய்ய, நிறைவடையச் செய்ய, பயன்பாட்டுக்குக் கொண்டுவர, இந்தப் பணிகள் இந்த ஆண்டு மிகக் கவனத்தோடு நிறைவேற்றப்பட்டு, அந்த நல்ல முடிவுகள் நமக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பைத் தமிழ் வளர்ச்சித் துறை ஏற்படுத்தும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் வளர்ச்சி என்று சொல்கிறபோது நான் மறுபடியும் இந்த அவையிலே உள்ளவர்களுக்கு இந்த அரசின் சார்பாக, எங்களுடைய உணர்வைப் பிரதிபலிக்க வேண்டுமென்பதற்காக இதைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் அன்னைக்கே முடிசூட்டுவோம், எங்கெங்கும், எத்துறையிலும் தாய்மொழி தமிழைக் கொடிகட்டி ஆளச் செய்வோம். ஆனால், தமிழன்னை அமரும், அரியணை, சிம்மாசனம்



ஆங்கிலத்தினால் அமையட்டும். தமிழ் செம்மொழி என்பதை உலகம் ஒப்பச் செய்யத் துணையானதே ஆங்கிலம்தான். வேறு சில மொழிகள் தமிழை நீச மொழியாக்கி, இழிவுபடுத்தி, புறக்கணிக்கவே வழிசெய்தன என்ற வரலாற்றையும் மறவாது தமிழைக் காப்போம். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பொதுத் துறை மானியத்திலேயும், தமிழ் வளர்ச்சித் துறைக்கான மானியத்திலேயும் இந்த அவையில் வைக்கப்பட்ட இந்த வேண்டுகோளை, கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், இந்த மானியங்களின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை—ஏராளமான வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கின்றார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களை—நான் ஓரளவு பார்த்திருக்கிறேன். அந்த வெட்டுத் தீர்மானங்களினுடைய கருத்துகள், நோக்கங்கள் இந்த அரசால் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்து, அந்த வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

*பிற்பகல் 2-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 38–பொதுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 38- பொதுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.148,98,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.5,00,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

11-139—11c

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என் அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.24,76,76,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (இ) கோரிக்கை எண் 49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.



(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.47,55,67,000/-, மூலதனக் கணக்கில் ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.2,50,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஈ) கோரிக்கை எண் 15-சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 15-சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.208,22,62,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.123,91,20,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## 7. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை 14-5-2008 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 14-5-2008 (புதன்கிழமை) அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 14-5-2008 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (14-5-2008) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-[illegible] மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

66. 2006-2007 ஆம் ஆண்டிற்கான திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்ட ஊராட்சிகளின் ஆண்டறிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

237. மானியக் கோரிக்கை எண் 38-பொதுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

238. மானியக் கோரிக்கை எண் 38-தேர்தல்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

239. மானியக் கோரிக்கை எண் 46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

240. 2007-2008 ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) அறிவிப்புகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். (தமிழ்)

241. மானியக் கோரிக்கை எண் 49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

242. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய "மக்கள் சாசனம்" 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

243. மானியக் கோரிக்கை எண் 15-சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

244. சுற்றுச்சூழல் துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

245. வனத் துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

246. காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)

247. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

---



## இணைப்பு-I

*(205 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 38

## பொதுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

மாநிலத்தின் பொது நிர்வாகம் தொடர்புடைய முக்கியமான பணிகளைக் கவனித்து வரும் பொதுத் துறை தலைமைச் செயலரின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. இத்துறையில் கவனிக்கப்பட்டு வரும் சில முக்கியப் பணிகள் பின்வருமாறு:—

- மேதகு ஆளுநர் மற்றும் அமைச்சர்கள் தொடர்புடைய பணிகள்.
- இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் குறித்த பணிகள்.
- சட்டம் மற்றும் ஒழுங்கு குறித்த பணிகள்.
- தேசிய ஒருமைப்பாட்டுக் குழு மற்றும் பன்மாநிலக்குழு உட்பட, நடுவண் மற்றும் மாநில அரசுகளுக்கு இடையிலான பொதுவான விவரங்கள் குறித்துக் கவனித்தல்.
- மரபுப் பணி மற்றும் உயர் பெருமக்கள் வருகை.
- நடுவண் அரசின் வெளியுறவு அமைச்சகத்துடன் தொடர்பு கொள்ளல் மற்றும் அயல்நாட்டு தூதரகக் குழுக்களுடனான தொடர்புப் பணி.
- பொது விடுமுறை அறிவித்தல்.
- முன்னாள் படைவீரர்களின் நலன், அவர்களின் குடும்பத்தைச் சார்ந்தோர் நலன் மற்றும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் நிர்வாகம்.

[2008 மே 13

- இந்திய தேசிய இராணுவ வீரர்கள் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் நலப் பணிகள்.
- சென்னை, உதகமண்டலத்தில் உள்ள விருந்தினர் இல்லங்கள் மற்றும் புதுதில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லம், கூடுதல் தமிழ்நாடு இல்லம் ஆகியவற்றை நிர்வகித்தல்.
- இலங்கை அகதிகளுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருதல்.
- தாயகம் திரும்பியோரின் நலன் மற்றும் மறுவாழ்வு குறித்த பணிகள்.
- தமிழகத்திற்கு முறையான நுழைவிசைவுடன் (Visa) வருகைபுரியும் பாகிஸ்தான் மற்றும் வங்காள தேசம் நீங்கலாக ஏனைய அயல்நாட்டவரின் தங்கும் காலத்தை நீட்டித்து வழங்கல்.
- மாநிலங்களுக்கு இடையேயான மற்றும் தென் மாநில மண்டலக் குழுக்கள் குறித்த அலுவல்கள்.
- விசாரணை ஆணையங்கள் அமைத்தல் மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் பணியமைப்பு மற்றும் பொதுநிர்வாகம் குறித்த பணிகள்.
- முதலமைச்சரின் தனிப்பிரிவு

சில முக்கியப் பணிகள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:—

### 1. அரசு விருந்தினர் இல்லங்கள்

**சேப்பாக்கம் அரசு விருந்தினர் இல்லம் மற்றும் சிந்தாதிரிப்பேட்டை அரசு ஓய்வு இல்லம்**

2. தமிழகத்திற்கு வருகை தரும் உயர் பெருமக்களுக்கு தங்கும் வசதி, உணவு மற்றும் போக்குவரத்து வசதிகள் அரசு விருந்தினர் இல்லத்தால் செய்து கொடுக்கப்படுகிறது. மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர், நடுவண் அரசு அமைச்சர்கள், அயல்நாட்டு உயர் பெருமக்கள், மாண்புமிகு உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் மற்றும் உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதியரசர்கள், மாநில அமைச்சர்கள், இந்திய அரசின் செயலாளர்கள்



2008 மே 13]

மற்றும் நடுவண் அரசால் நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர்கள் / தலைவர்கள் ஆகியோர் அரசு விருந்தினர்களாகக் கருதப்படுவார்கள்.

3. 2007-2008 ஆம் ஆண்டு தமிழகத்திற்கு மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் மூன்று முறையும், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் ஒரு முறையும், மேதகு முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் ஒரு முறையும், பல்கேரிய நாட்டின் பிரதமர் ஒரு முறையும், அண்டை மாநில முதலமைச்சர்கள் மற்றும் ஆளுநர்கள் 25 முறையும், மத்திய அமைச்சர்கள் 398 முறையும், நடுவண் அரசால் நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர்கள் / தலைவர்கள் 225 முறையும், உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் மற்றும் அண்டை மாநில உயர் நீதிமன்ற நீதியரசர்கள் 140 முறையும், நடுவண் அரசின் செயலாளர்கள் மற்றும் ஏனைய மாநிலங்களின் அரசு அதிகாரிகள் 200 முறையும் வருகை புரிந்துள்ளனர். சென்னையில் அரசு விருந்தினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் தங்க ஏற்பாடு செய்யும் இந்த விருந்தினர் இல்லங்கள் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ள வரவேற்பு அலுவலர் மற்றும் இணை மாநில மரபு அலுவலரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

**தமிழ்நாடு இல்லம், புது தில்லி**

4. தலைநகர் புது தில்லியில் பழைய தமிழ்நாடு இல்லம் மற்றும் கூடுதல் தமிழ்நாடு இல்லம் ஆகியன தமிழ்நாட்டில் இருந்து புது தில்லி சென்று தங்குபவர்களுக்கு உணவு மற்றும் உறைவிட வசதி செய்து கொடுப்பதற்கென்று செயல்பட்டு வருகின்றன. இந்த இல்லத்தின் அறை ஒதுக்கீடு குறித்த ஆணைகள் இத்துறையால் வெளியிடப்படுகின்றன.

5. இவ்வில்லத்தின் நிர்வாகக் கட்டுப்பாடு மற்றும் அனைத்துப் பணிகளும் தமிழக அரசின் உள்ளுறை ஆணையர் பொறுப்பிலுள்ளது. இந்திய ஆட்சிப் பணி அலுவலரான இவருக்கு இணை உள்ளுறை ஆணையர் அனைத்துப் பணிகளிலும் உறுதுணையாக இருக்கின்றார். புது தில்லி, தமிழ்நாடு இல்லத்திலிருந்து செயல்படும் மாண்புமிகு தமிழக சிறப்புச் சார்பாளர் தமிழக அரசின் சார்பாகச் செயல்படுகிறார். பழைய தமிழ்நாடு இல்லத்தினைப் புதுப்பிக்கும் பணிகள் விரைவில் முடியும் என நம்பப்படுகிறது.

**"தமிழகம்" விருந்தினர் மாளிகை, உதகமண்டலம்**

6. உதகமண்டலத்தில் பனிபடர்ந்த மரச்செறிவான இயற்கைச் சூழலில் அழகிய தோட்டத்தின் நடுவில் "தமிழகம்" விருந்தினர்

மாளிகை 36 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. உதகமண்டலத்திற்கு வருகை தரும் உயர் பெருமக்களுக்கும், அரசுப் பணியாளர்களுக்கும் உணவு மற்றும் உறைவிட வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கத்துடன் இம்மாளிகை செயல்படுகிறது.

## II. தேசிய விழாக்கள், சிறப்பு நாட்கள் மற்றும் விருதுகள்

7. இந்திய தேசிய விழாக்களான சுதந்திரநாள் விழா மற்றும் குடியரசுநாள் விழாக் கொண்டாட்டங்கள் ஆகியவற்றையும், நடுவண் அரசால் சிறப்பு நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ள தியாகிகள் நாள், கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள், மத நல்லிணக்க நாள், தேசிய ஒருமைப்பாட்டு நாள் முதலிய நாட்களில் அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து உறுதிமொழி எடுத்தலுக்கான ஏற்பாட்டையும் இத்துறை செய்கிறது.

8. இத்துறை ஒவ்வொரு ஆண்டும் குடியரசுநாள் விழா அன்று, சென்னை கடற்கரையில், முப்படைகளின் அலங்கார அணிவகுப்போடு, ஆடல், பாடல் மற்றும் பல்வேறு கலைநிகழ்ச்சிகளுடன் மேதகு ஆளுநர் அவர்கள் கொடியேற்றி வைக்கும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்கிறது. மேலும், சுதந்திரநாள் விழாவின் போதும், சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள கோட்டை கொத்தளத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேசியக்கொடி ஏற்றிவைக்கும் நிகழ்ச்சிக்கான பணிகளையும் மேற்கொள்கிறது. நடுவண் அரசு அறிவித்துள்ள சிறப்பு நாட்களில் தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள் மற்றும் தலைமைச் செயலக அனைத்து அலுவலர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உறுதிமொழி செய்து வைக்கும் நிகழ்ச்சிகளும் இத்துறையால் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

9. இவை தவிர, அரசின் நலத் திட்டங்களை ஆய்வு செய்யும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளின் மாநாடு நடைபெற இத்துறையால் ஏற்பாடு செய்யப்படுகிறது. வீர தீரச் செயல்களுக்கான நடுவண் அரசின் விருதுகளான ஜீவன்ரக்ஷா பதக்கம், அசோக சக்ரா, கீர்த்தி சக்ரா, சௌர்ய சக்ரா போன்ற விருதுகளுக்கும், பொது நிருவாகத்தில் சிறப்பாகப் பணிபுரிந்தவர்களுக்காக அளிக்கப்படும் பிரதமர் விருது, பத்மஸ்ரீ, பத்மபூஷண், பத்மவிபூஷண், மத நல்லிணக்கத்திற்கான கபீர் விருது,





சமாதான விருதான காந்தியடிகள் அமைதி விருது போன்ற நடுவண் அரசின் படைத் துறை சாராதவர்களுக்கான விருதுகளுக்கும் இத்துறையின்மூலம் பரிந்துரைகள் அனுப்பப்படுகின்றன. மேலும், மாநில அரசின் விருதுகளான அண்ணா பதக்கம், கோட்டை அமீர் மதநல்லிணக்கப் பதக்கம், கல்பனா சாவ்லா விருது ஆகியவற்றுக்கான விருதாளர்களும் தேர்வு செய்யப்படுகின்றனர். பெருந்தலைவர் காமராசர், அண்ணல் அம்பேத்கர், பேரறிஞர் அண்ணா, மகாகவி பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், தமிழ்த்தென்றல் திரு.வி.க. மற்றும் தந்தை பெரியார் விருது முதலிய மாநில அரசு விருதுகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் துறைச் செயலாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, விருதாளர்களைத் தெரிவு செய்து விழா ஏற்பாடு செய்யப்பட்டு, விருதுகள் வழங்கப்படுகின்றன.

## III. அயல்நாட்டினர்

10. பாகிஸ்தான் மற்றும் வங்கதேச நாட்டினர் தவிர தமிழகத்திற்கு பல்வேறு காரணங்களுக்காக வருகை புரியும் ஏனைய அயல்நாட்டினருக்கு இந்தியாவில் தங்கும் காலத்தை நீட்டித்து தருதல், சிறிது காலம் தங்கள் நாட்டிற்கு சென்று மீண்டும் தமிழகம் திரும்ப விழைபவர்களுக்கு மீள நுழைவிசைவு மேற்குறிப்பு (Return Visa Endorsement) மற்றும் இந்தியாவை விட்டு வெளிச்செல்ல விழைபவருக்கு வெளிச்செல் அனுமதி (Exit Permit) ஆகியவை வழங்கப்படுகின்றன. இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரத்திற்குப் பின், இலங்கை நாட்டவர் அனைவருக்கும் நடுவண் அரசின் ஆணையைப் பெற்ற பின்பே இங்கே தங்க அனுமதி நீட்டித்து வழங்கப்படுகிறது.

11. தமிழ்நாட்டில் தங்கியிருக்கும் அயல்நாட்டினர் யாரேனும் சமூக விரோதச் செயலில் ஈடுபட்டாலோ, விதிகளை மீறிச் செயற்பட்டாலோ அல்லது அவர்கள்மீது எதிர்மறையான குறிப்புகள் எதுவும் பெறப்பட்டாலோ நடுவண் அரசின் உள் துறையிடம் இசைவு பெற்று அவர்களை இந்தியாவை விட்டு வெளியேற்ற இத்துறையால் ஆணை பிறப்பிக்கப்படுகிறது. மேலும், வேலை தேடியோ, மேல் படிப்பிற்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ வெளிநாடுகளுக்குச் செல்ல விழைபவர்களுக்கு தமிழகத்தில் உள்ள அரசுத் தேர்வுகள் இயக்ககம்/தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்/ மருத்துவக் கல்வி இயக்ககம், பல்கலைக்கழகங்கள், திருமணம், பிறப்பு மற்றும் இறப்புப் பதிவு அலுவலகங்களில் இருந்து வழங்கப்பட்ட

சான்றிதழ்கள் உரிய அலுவலகங்களில் அதன் உண்மைத்தன்மை சரிபார்க்கப்பட்ட பின்பு இத்துறையால் சான்றுறுதி செய்யப்படுகின்றன.

### IV. அரசு விமானம் மற்றும் ஹெலிகாப்டர்

12. தமிழ்நாடு அரசால் உயர் பெருமக்களின் உபயோகத்திற்கென ஒரு விமானம் மற்றும் ஹெலிகாப்டர் ஆகியவை பராமரிக்கப்படுகின்றன. இந்த வானூர்திகள் இந்திய விமானப்படையின் விமானிகளால் இயக்கப்படுகின்றன. ஹெலிகாப்டர் இயக்குவதற்காக இரண்டு விமானிகளும், விமானத்தை ஓட்டுவதற்கு ஒரு விமானியும் மற்றும் வானூர்திப் பயண இயக்குநர் ஒருவரும் இந்திய விமானப் படையிலிருந்து வேற்றுப்பணி மூலம் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மேற்காணும் இரண்டு வானூர்திகளும் சென்னை விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. உயர் பெருமக்களின் அவசரப் பணிகளுக்காக இவை பயன்படுத்தப்படுகின்றன.

### V. அகதிகள் நிவாரணம் மற்றும் தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு

#### அகதிகள் வருகை

13. இலங்கையில் நிகழ்ந்த இனக்கலவரம் காரணமாக பெருவாரியான இலங்கைத் தமிழ்மக்கள் 1983 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் அடைக்கலம் புகுந்தனர். அவர்கள் கீழ்க்கண்ட விவரங்களின்படி மூன்று கட்டங்களில் இந்தியாவிற்கு வந்துள்ளனர்.

| | வருகை | | திரும்பிச் சென்றோர் | |
|---|---|---|---|---|
| | ஆண்டு | நபர்கள் | ஆண்டு | நபர்கள் |
| முதல் கட்டம் | 1983-1987 | 1,34,053 | 1983-1989 | 45,281 |
| இரண்டாம் கட்டம் | 1989-1991 | 1,22,078 | 1989-1996 | 54,188 |
| மூன்றாம் கட்டம் | 1996-2003 | 22,418 | - | - |

14. 12-01-2006 முதல் துவங்கிய நான்காம் கட்ட வருகையில், 31-03-2008 முடிய 6,832 குடும்பங்களைச் சார்ந்த 21,020 அகதிகள் இந்தியா வந்துள்ளனர். 31-03-2008 நிலவரப்படி, 19,360 குடும்பங்களைச்





சார்ந்த 73,087 இலங்கைத் தமிழர்கள் 25 மாவட்டங்களில் இரு சிறப்பு முகாம்களை உள்ளடக்கிய, 117 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். முகாம்களில் உள்ள இலங்கை அகதிகளுக்கு பல்வேறு நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்றன. அதற்கான ஒட்டுமொத்தச் செலவினமும் மாநில அரசால் முதலில் மேற்கொள்ளப்படுகின்றது. பின்னர் மாநில தலைமை கணக்காயர் வழங்கும் தணிக்கைச் சான்றிதழின் பேரில் செலவு ஈடுசெய்ய முன்மொழிவுகள் நடுவண் அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

#### அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகள்

#### அ. அகதிகளின் குடும்பங்களுக்கு திங்கள்தோறும் பணக்கொடை வழங்குதல்

15. தமிழக அரசு 1-8-2006 முதல் தமிழகத்தின் பல்வேறு முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கான திங்கள்தோறும் வழங்கும் பணக்கொடையை இரட்டிப்பாக்கி கீழ்க்கண்ட வீதங்களில் வழங்கி வருகிறது:

1-8-2006 முதல் இரட்டிப்பாக்கப்பட்ட பணக்கொடை

| | | |
|---|---|---|
| 1 | குடும்பத் தலைவர் | ரூ.400/- |
| 2. | 12 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கும் | ரூ.288/- |
| 3. | 12 வயதிற்குட்பட்ட முதல் சிறியவர்க்கு மட்டும் | ரூ.180/- |
| 4. | கூடுதல் சிறியவர் ஒவ்வொருவருக்கும் | ரூ.90/- |

2006-07 ஆம் ஆண்டில் ரூ.18.09 கோடி செலவழிக்கப்பட்டது. 2007-08 ஆம் ஆண்டில் துணை மானிய ஒதுக்கீடு உட்பட ரூ.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மார்ச், 2008 முடிய ரூ.24.79 கோடி செலவாகியுள்ளது. நடுவண் அரசின் ஒப்புதல் வரப்பெறாத நிலையிலும் உயர்த்தப்பட்ட பணக்கொடையினை மாநில அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. தனது ஒப்புதலை விரைவில் வழங்கிட வேண்டும் என நடுவண் அரசை மாநில அரசு வலியுறுத்தியுள்ளது.

#### ஆ. மானிய விலையில் அரிசி விநியோகித்தல்

16. இத்திட்டத்தின்கீழ், முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு அரிசி கிலோவுக்கு 57 காசுகள் என்ற மானிய விலையில் கீழ்க்கண்ட அளவுப்படி விநியோகிக்கப்படுகிறது.

1. பெரியவர் ஒவ்வொருவருக்கும் - நாளொன்றுக்கு 400 கிராம்
2. ஒவ்வொரு குழந்தைக்கும் - நாளொன்றுக்கு 200 கிராம் (எட்டு வயதிற்கு உட்பட்டவர்)

பொது விநியோகத் திட்டத்தின்மூலம் அமைக்கப்பட்ட நியாயவிலைக் கடைகள்மூலம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அகதிகளுக்கு மானிய விலையில் அரிசி வழங்கி விலை வேறுபாட்டுத் தொகையினை மாநில அரசிடமிருந்து ஈடுசெய்து கொள்கிறது. 2006-07 ஆம் நிதியாண்டில் அரிசி வழங்குவதற்காக ரூ6.72 கோடி செலவழிக்கப்பட்டதுடன், 2007-08 ஆம் நிதியாண்டில் ரூ.8.34 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நடுவண் அரசு 31-3-2007 முடிய தனது இசைவினைத் தந்துள்ளது. அரிசிக்கான நடப்பு மானிய விலையான கிலோவிற்கு 57 காசுகள் என்ற விலையிலேயே இத்திட்டத்தினை தொடர நடுவண் அரசை இந்த அரசு வற்புறுத்தியுள்ளது. நடுவண் அரசின் இசைவு இன்னும் வரப்பெறாத நிலையிலும், அகதிகளின் நலன் கருதி, மாநில அரசு இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டு வருகிறது.

**இ. துணி வகைகள்**

17. நடுவண் அரசு நிர்ணயித்த அளவில் முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு ஆண்டிற்கு ஒருமுறை துணிவகைகளும், பாயும், இரண்டாண்டிற்கொருமுறை போர்வையும் இலவசமாக வழங்கப்படுகின்றன. 2006-2007 ஆம் நிதியாண்டில் இதற்கென ரூ.2.91 கோடி செலவாகியுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் திருத்திய நிதி ஒதுக்கீட்டின்படி ரூ.2.59 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டில் நடுவண் அரசால் இவ்வினங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் விலை போதுமானதாக இல்லாததால், இவற்றிற்கான விலை வீதங்களை நடப்புச்சந்தை விலைக்கேற்றபடி மாற்றியமைக்க நடுவண் அரசு கேட்டுக்கொள்ளப்பட்டது. இக்கோரிக்கையை ஏற்று நடுவண் அரசு துணி வகைகளுக்கான கொள்முதல் விலையை சுமார் 28 விழுக்காடு உயர்த்தி 2007-2008 முதல் 3 வருடங்களுக்கு தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.

**ஈ. சமையல் பாத்திரங்கள்**

18. அகதி முகாம்களில் தங்கியுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டாண்டிற்கு ஒருமுறை சமையல் பாத்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. தற்போது நடைமுறையில் உள்ள குடும்பம்



ஒன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகையான ரூ.150/- என்பதை ரூ.250/- என உயர்த்தித் தந்திட நடுவண் அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**மருத்துவ வசதிகள்**

19. முகாம்களின் அருகில் உள்ள ஆரம்பச் சுகாதார மையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகள்மூலம் இலவச மருத்துவ சேவைகளை அகதிகள் பெற்றிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பெரிய அளவிலான மருத்துவ சிகிச்சைக்கான பண உதவி ஒவ்வொரு நிகழ்வின் அடிப்படையில், மாவட்டாட்சியாளர்களின் பரிந்துரைக்கேற்றபடி இலங்கைத் தமிழர் சிறப்பு நிவாரண நிதியிலிருந்து அரசால் வழங்கப்படுகிறது. சமூக நலத் துறை மூலமாக செயல்படுத்தப்பட்டுவரும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், அகதிகள் முகாமில் தங்கியுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு 1-4-2007 முதல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவி திட்டத்தின்கீழ் மகப்பேறுக்கு முன்னரும் பின்னரும் தலா மூன்று மாதங்களுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவுக்காக மாதம் ரூ.1,000/- வீதம் வழங்கப்படும் பண உதவித் திட்டம் 1-4-2007 முதல் கருவுற்ற இலங்கை அகதிப் பெண்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் 2007-2008 ஆம் ஆண்டில் 905 இலங்கை அகதிப் பெண்கள் பயனடைந்துள்ளனர்.

**கல்வி வசதிகள்**

20. முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர் குழந்தைகளுக்கு மேல்நிலை வகுப்பு (+2) வரையில் இலவசக் கல்வி வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 20,849 குழந்தைகள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுகின்றனர். முகாம்களில் வாழும் குடும்பங்களில் உள்ள பள்ளி செல்லும் குழந்தைகளுக்குச் சீருடைகள், மதிய உணவு, பேருந்துச் சலுகை, புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள் மற்றும் மிதியுந்துகள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. முகாம்களுக்கு வெளியில் தங்கிக் கல்வி பயிலும் இலங்கை அகதி மாணவர்கள் தங்களுக்குரிய பணக்கொடை மற்றும் இதர சலுகைகளைப் பெற்றுக்கொண்டு படிப்பைத் தொடர அனுமதிக்கப்படுகின்றனர்.

**உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்**

21. அகதி முகாம்களில் உள்ள குடிசைகளைப் பழுதுபார்த்தல், குடிநீர் வழங்குதல், சுகாதாரம், சாலை அமைத்தல், தெருவிளக்கு அமைத்தல் போன்ற பணிகளை நிறைவேற்றுதல் இத்திட்டத்தின்

குறிக்கோள் ஆகும். இப்பணிகள் நடுவண் அரசின் முன் ஒப்புதலைப் பெற்ற பின்னர் செயல்படுத்தப்படுகின்றன. 1997-2000ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்ட குடியிருப்புகளைப் பழுதுபார்த்தல் மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகளுக்கு 2006-07 ஆம் ஆண்டில் ரூ.467 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செங்கல்பட்டு சிறப்பு முகாம் பழுதுபார்ப்பு பணிகளுக்காக ரூ.12.26 இலட்சமும், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள எம். மேட்டுப்பட்டி முகாமில் புதியதாக குடிசைகள் கட்ட ரூ.6 இலட்சமும் 2007-08 ஆம் ஆண்டில் அரசு அனுமதித்துள்ளது.

**அகதிகள் தங்கள் தாயகம் திரும்புதல்/பிறநாட்டிற்குக் குடிபெயர்தல்**

22. தமிழ்நாட்டில் உள்ள அகதிகள் முகாம்களிலிருந்து, தம் செலவில் தாய்நாட்டிற்கோ அல்லது பிற நாட்டிற்கோ செல்ல விரும்பும் அகதிகள் அவ்வாறே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். 2006-07 ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு 106 வெளிச்செல்லும் அனுமதியும் 2007-08 ஆம் ஆண்டில் 74 வெளிச் செல்லும் அனுமதியும் மாவட்ட ஆட்சியர்களால் வழங்கப்பட்டுள்ளன.

**செலவின விவரங்கள்**

23. 2006-07 ஆம் ஆண்டில் இலங்கை அகதிகளுக்கு நிவாரண உதவிகள் வழங்கிய வகையில் மாநில தலைமை கணக்காயரால் சான்றிடப்பட்டபடி ரூ.39.04 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் இப்பணிகளுக்கென துணைமானிய ஒதுக்கீடு உட்பட ரூ.51.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 31-03-2008 முடிய ரூ.40.08 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது.

**தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு**

24. இந்தியக் குடியுரிமை பெற்ற தமிழ் மரபுவழியினைச் சேர்ந்த 1,44,445 நபர்கள் 1963 முதல் 1989 முடிய உள்ள காலகட்டத்தில் பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியுள்ளனர். இதே போல் 1975 முதல் 1980 முடிய உள்ள காலகட்டத்தில் 2,055 வியட்நாம்வாழ் தமிழரும் தாயகம் திரும்பியுள்ளனர்.

25. 1965 ஆம் ஆண்டு தொடங்கி இலங்கையிலிருந்து 4,61,639 இலங்கைவாழ் தமிழர்கள் தாயகம் திரும்பியுள்ளனர். இவர்களுக்கு வணிக மற்றும் வீட்டுக் கடன்கள் வழங்கப்பட்டதோடு தேயிலை,



இரப்பர், சின்கோனா தோட்டங்களிலும், கூட்டுறவு நூற்பாலைகள், ரெப்கோ வங்கியின், தொழிற் திட்டம் மற்றும் விவசாயம் ஆகிய மறுவாழ்வுத் திட்டங்களின்கீழ் வேலைவாய்ப்பும் வழங்கப்பட்டது. இது தவிர, பால் பண்ணை, சைக்கிள் ரிக்ஷா மற்றும் தீப்பெட்டித் தொழில் ஆகிய சுயவேலைவாய்ப்புத் திட்டங்களிலும் இவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். நடுவண் அரசின் மேற்படி மறுவாழ்வு உதவிகள் அனைத்தும் 31-03-1999 அன்று முடிவிற்கு வந்தன.

## VI. முன்னாள் படைவீரர் நலம்

26. நமது நாட்டின் பாதுகாப்பு மற்றும் ஒருமைப்பாட்டினை நிலைநாட்டும் பொருட்டு, நம் முப்படை வீரர்கள் அளவற்ற தியாகங்களைப் புரிகின்றனர். போர்முனையில் உயிர்த்தியாகம் செய்த தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் குடும்பத்தார், உடல் ஊனமுற்ற படைவீரர், முன்னாள் படைவீரர்கள் மற்றும் படைவீரர் குடும்பத்தாரின் நலனைப் பேணி காப்பது இத்துறையின் முக்கிய பொறுப்பாகும். அனைத்து நலத் திட்டப் பணிகளும் 25 அலுவலகங்கள்மூலம் செவ்வனே நிறைவேற்றப்படுகின்றன. 31-03-2008 நிலவரப்படி 2,02,021 முன்னாள் படைவீரர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்களின் விதவையர்கள் மாவட்ட அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர்.

**துறையின் செயல்பாடுகள்**

1. மறுவேலைவாய்ப்பு அளித்தல்,
2. சுயவேலைவாய்ப்புத் திட்டங்கள்,
3. மறுவாழ்வு பயிற்சித் திட்டங்கள்,
4. நல நிதியிலிருந்து நிதியுதவிகள்,
5. அரசின் நலத் திட்ட உதவிகள்,
6. கொடிநாள் நிதி திரட்டுதல் மற்றும்
7. போரில் உயிர்நீத்த படைவீரர்களுக்கு இறுதி மரியாதை செலுத்துதல்.

**மறு வேலைவாய்ப்பு அளித்தல்**

27. முன்னாள் படைவீரர்களின் மறு வேலைவாய்ப்பிற்கு பரிந்துரைக்கும் பணியினை இத்துறை செய்து வருகிறது. மாநில அரசுப் பணிகளில் குரூப் 'சி' பிரிவில் 5 விழுக்காடும், அடிப்படைப்

பணிகளில் 10 விழுக்காடும், வனத் துறையில் காவலர் மற்றும் பாதுகாவலர் பணிக்கு 15 விழுக்காடும் முன்னாள் படைவீரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநில அரசு சார்ந்த நிறுவனங்களில், அடிப்படைப் பணிகளில் 10 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

28. மேலும், காவல் துறையில் தொழில்நுட்பப் பிரிவில் இரண்டாம் நிலைக் காவலர் பணிகளில் சேருவதற்கு, உடல் தகுதி மற்றும் மருத்துவப் பரிசோதனை தேர்விலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்யப்படும் பணிகளுக்கு முன்னாள் படைவீரர்கள் அல்லது அவர் தம் குடும்பத்தைச் சார்ந்த ஒருவருக்கு முன்னுரிமைச் சான்று வழங்கப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு பெறுவதற்கான முன்னுரிமைச் சான்று முன்னாள் படைவீரர்கள் அல்லது அவர்தம் குடும்பத்தைச் சார்ந்த 1,415 பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு நிறுவனங்களில் 158 முன்னாள் படைவீரர்கள் மறுவேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் 128 முன்னாள் படைவீரர்கள் கிராம நிர்வாக அலுவலர் பணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**சுயவேலைவாய்ப்புத் திட்டங்கள்**

29. முப்படையிலிருந்து ஓய்வு பெற்ற அனைத்துப் படைவீரர்களுக்கும் அரசுப் பணி கிடைத்திட இயலாது என்ற காரணத்தினால், நிதி உதவியுடன் கூடிய பல்வேறு திட்டங்களை வகுத்து அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகிலேயே முன்னாள் படைவீரர்கள் சுய தொழில் துவக்கிடவும், அதன்மூலம் அவர்களது வாழ்க்கைத்தரம் உயர்ந்திடவும் தமிழ்நாடு அரசு உதவி வருகிறது.

30. வங்கியிலிருந்து ரூ.2.5 இலட்சம் வரை அதிகபட்ச கடன் பெறும் முன்னாள் படைவீரர்களுக்கு 50 விழுக்காடு வட்டி மானியமாக தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 31-03-2008 வரை, 113 முன்னாள் படைவீரர்கள் / விதவையர்களுக்கு ரூ.1.67 கோடி வரை வங்கிக் கடன் பெற்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், 509 முன்னாள் படைவீரர்கள் / விதவைகளுக்கு ரூ.10.86 இலட்சம் வரை வட்டி மானியம் வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் படைவீரர்கள் / விதவைகளால் நடத்தப்படும் சுய உதவிக் குழுக்கள் பெறும் ரூ.7.5 இலட்சம்





வரையிலான அதிகபட்ச வங்கிக் கடனுக்கு தொகுப்பு நிதியிலிருந்து 100 விழுக்காடு வட்டி மானியம் வழங்கப்படுகிறது. தற்போது 20 மாவட்டங்களில் 96 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

31. முன்னாள் படைவீரரின் குடும்பத்தைச் சார்ந்த மகளிருக்கு இத்துறையால் நடத்தப்படும் தையல் அலகுகளில் தையற்பயிற்சி அளிக்கப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் இவ்வாறு பயிற்சிபெற்ற 89 முன்னாள் படைவீரர்களைச் சார்ந்தோர்களுக்கு பயிற்சி உதவித்தொகை வழங்கப்பட்டது. இலவச தையல் இயந்திரங்கள் மற்றும் மானிய விலையில் தையல் இயந்திரங்கள் வழங்கியது போன்றவற்றிற்கு ரூ.6.10 இலட்சம் செலவிடப்பட்டது.

**மறுவாழ்வுப் பயிற்சிகள்**

32. முன்னாள் படைவீரர்களின் மறு வேலைவாய்ப்பு மற்றும் சுயவேலை வாய்ப்பிற்கு ஏதுவாக, அவர்களின் விருப்பத்திற்கேற்ப பலவிதப் பயிற்சிகள் இத்துறையின் மூலம் அளிக்கப்படுகிறது. 31-03-2008 வரையில் ரூ.3.85 இலட்சம் செலவில், 77 முன்னாள் படைவீரர்களுக்கு இத்தகைய தொழிற்பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

33. படைப்பணியில் உடற்பயிற்சி கல்வி தகுதி பெற்றவர்கள் அரசுப் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியராக நியமனம் பெற்றிடும் வகையில், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் மூலமாக அவர்களுக்கு உடற்கல்வியியலில் நான்கு மாதகால சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி அளிக்கப்பட்ட 37 முன்னாள் படைவீரர்களில் 9 முன்னாள் படைவீரர்களுக்கு அரசு உயர்நிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியராக 2007-2008 ஆம் நிதியாண்டில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி மற்றும் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் நிதியுதவிகள்**

**தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி**

34. இந்நல நிதி மாண்புமிகு முன்னாள் படைவீரர் நல அமைச்சர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தமிழ்நாடு முப்படைவீரர் வாரியத்தின் குழுவினால் நிர்வகிக்கப்படுகிறது. இந்தக் குழுவின் தலைவர், முன்னாள் படைவீரர் நலத் துறையின் அலுவல்வழி இயக்குநராவார். கூடுதல் இயக்குநர் இக்குழுவின் செயலாளராக இருக்கிறார். இந்நிதியின் அடிப்படை ஆதாரம் பின்வருமாறு:-

[2008 மே 13

(அ) கொடி நாள் நிதி வசூல் மற்றும்

(ஆ) படைவீரர் மாளிகை வாடகை வசூல்.

2007-2008 ஆம் நிதியாண்டில் 13,888 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தைச் சார்ந்தோருக்கு இந்நிதியிலிருந்து ரூ.8.26 கோடி நிதியுதவி பல்வேறு திட்டங்கள் வாயிலாக வழங்கப்பட்டுள்ளது.

**தொகுப்பு நிதி**

35. நடுவண் அரசால் தேசிய பாதுகாப்பு நிதியிலிருந்து மாநில அரசிற்கு வழங்கப்பட்ட பங்குத் தொகையையும், அதற்கு ஈடான, மாநில அரசால் வழங்கப்பட்ட பங்குத் தொகை மற்றும் போருக்குப் பின்னர் சீரமைப்புப் பணிகளுக்கான நிதியின் மீதத் தொகையையும் இணைத்து இத்தொகுப்பு நிதி உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிதி, மேதகு ஆளுநரைத் தலைவராகக் கொண்ட மாநில மேலாண்மைக் குழுவினால் நிர்வகிக்கப்படுகிறது. 2007-2008 ஆம் நிதியாண்டில், தொகுப்பு நிதியிலிருந்து பல்வேறு நிதியுதவிகள் வழங்கியதன்மூலம் ரூ.41.17 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1,526 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தைச் சார்ந்தோர் இதன்மூலம் பயனடைந்துள்ளனர்.

**வீரதீரச் செயல்கள் / சிறப்பாகப் பணிபுரிந்தமை ஆகியவற்றிற்காக விருது மற்றும் பதக்கம் பெறுவோருக்கு பணமுடிப்பு மற்றும் பெற்றோருக்கு வழங்கப்படும் போர்ப்பணி ஊக்க மானியம்**

36. 2007-2008 ஆம் ஆண்டில், வீரதீரச் செயல் புரிந்தமைக்கு விருது பெற்ற/போற்றத்தக்க சேவைக்கான விருது பெற்ற 12 படைவீரர்களுக்கு தமிழக அரசால் ரூ.48,000/- பணமுடிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவர்களில், விதிகளின் அடிப்படையில், வீரதீரச் செயல் புரிந்தமைக்கு விருது பெற்ற 2 படைவீரர்களுக்கு மட்டும் நிலத்திற்குப் பதிலாக ரூ.1.15 இலட்சம் பணமுடிப்பும் வழங்கப்பட்டுள்ளது.

37. தமது ஒரே மகன்/மகள், மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட மகன்கள்/மகள்களை படைப்பணிக்கு அனுப்பும் பெற்றோர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு அரசு ஆண்டுதோறும் மானியம் வழங்கி கௌரவிக்கிறது. இந்த வகையில், 2007-2008 ஆம் ஆண்டில் 1,106 பெற்றோர்களுக்கு ரூ.9.87 இலட்சம் போர்ப்பணி ஊக்க மானியமாக தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.



2008 மே 13]

**கொடி நாள் நிதி**

38. படைவீரர் கொடிநாள் நிதியை அடிப்படை ஆதாரமாகக் கொண்டு பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. நாட்டில் கொடிநாள் நிதி வசூலில் தொடர்ந்து தமிழ்நாடு முன்னிலை வகித்துவருகிறது. மாவட்ட ஆட்சியர்களின் சீரிய முயற்சியினால், கொடி நாள் நிதியானது 2006 ஆம் ஆண்டின் (07-12-2006 முதல் 06-12-2007 வரை) இலக்கான ரூ.6.93 கோடியையும் விஞ்சி ரூ.10.22 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டிற்கான கொடிநாள் வசூல் இலக்கு ரூ.7.27 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 31-03-2008 வரையில் ரூ.1.47 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது

**போரில் உயிர்நீத்த படைவீரர்களுக்கு இறுதி மரியாதை செலுத்துதல்**

39. தாய்நாட்டினைப் பாதுகாத்திட தமது இன்னுயிரை ஈந்த படைவீரர்களின் தியாகங்களைப் போற்றும் வகையில், வீர மரணம் அடைந்த முப்படை வீரர்களின் இறுதிச் சடங்கு அரசு மரியாதையுடன், அமைச்சர், மாவட்ட ஆட்சியர்/காவல் கண்காணிப்பாளர் மற்றும் இத்துறை அலுவலர் ஆகியோர் முன்னிலையில் நடத்தப்படுகிறது.

**கார்கில் படைவீரர் நிவாரண நிதியுதவி**

40. கார்கில் நிவாரண நிதி இத்துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. பகைவர்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டு உயிரிழந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் குடும்பத்ினருக்கும், ஊனமுற்ற படைவீரர்களுக்கும் கீழ்க்கண்டவாறு நிவாரண நிதியுதவி வழங்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வீர மரணம் அடைந்த வீரரின் குடும்பத்திற்கு | | : | ரூபாய் ஐந்து இலட்சம் |
| 2. | ஊனமடைந்தவர்கள்:– | | | |
| | i) | முழுவதுமாக ஊனமடைந்தவர்கள்/இரு கால்களோ, கைகளோ அல்லது இரு கண்களையும் இழந்தவர்கள். | : | ரூபாய் மூன்று இலட்சம் |
| | ii) | ஒரு கால், கை அல்லது ஒரு கண்ணை இழந்தவர்கள். | : | ரூபாய் ஒரு இலட்சம் |

[2008 மே 13

2007-2008 ஆம் நிதியாண்டில், ஜம்மு காஷ்மீர் பகுதியில் தீவிரவாதிகளின் ஊடுருவலுக்கு எதிரான "ரக்சக் நடவடிக்கை"யில் வீரமரணம் எய்திய தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு படைவீரரின் வாரிசுக்கு ரூபாய் ஐந்து இலட்சம் கார்கில் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

**மாநில நிர்வாகத்திற்கு உதவுதல் – மாநில அரசின் கருணைத்தொகை**

41. மாநில நிர்வாகத்திற்கு உதவிடும் நடவடிக்கைகளின்போது உயிரிழந்த படைவீரர்/எல்லை பாதுகாப்புப் படைவீரர்களின் குடும்பத்திற்கு 2002 ஆம் ஆண்டிலிருந்து ரூ.1 இலட்சமும், ஊனமுற்ற படைவீரருக்கு ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூ.10,000/- முதல் ரூ.40,000/- வரையும், தமிழக அரசால் கருணைத் தொகையாக வழங்கப்பட்டு வந்தது. 1-4-2008 முதல் இத்தொகை உயிரிழந்த படைவீரரின் குடும்பத்தினருக்கு ரூ.5 இலட்சமாகவும், ஊனமுற்ற படைவீரரின் ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூ.50,000-ல் இருந்து ரூ.2 இலட்சம் வரையும் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. கடந்த 2007-2008 ஆம் நிதியாண்டில் 14 படைவீரர்களின் குடும்பத்தினருக்கு ரூ.8.34 இலட்சம் கருணைத் தொகையாக அரசு வழங்கியுள்ளது.

**அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திட்டங்கள்**

42. 29-11-2007 அன்று நடைபெற்ற மாநில மேலாண்மைக் குழு கூட்டத் தீர்மானத்தின்படி தொகுப்பு நிதியிலிருந்து போரில் ஊனமுற்ற படைவீரர்களுக்கு ரூ.30,000/- கருணைத் தொகையும், மறுமணம் புரிந்த போர் விதவையருக்கு ஆண்டுதோறும் பராமரிப்பு மானியமாக ஆண்டிற்கு ரூ.2,000/- வீதம் வழங்கும் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

43. அரசாணை நிலை எண் 459, வருவாய் (வ.நி-3) துறை, நாள் 17-08-2007-ல் தமிழ்நாட்டில் பணிபுரியும் படைவீரர்களின் சிறார்களுக்கு தொழிற்கல்வி/ தொழில்நுட்பம் / தொழில் சார்ந்த பயிற்சிகளில் சேரவும், பிற நலத் திட்ட சலுகைகள் பெறவும், குடியிருப்புரிமை தகுதி அளிக்க குறைந்தபட்ச தங்க வேண்டிய காலத்தை தமிழக அரசு தற்பொழுது நீக்கியுள்ளது.



2008 மே 13]

**இராணுவ ஆட்சேர்ப்புத் தேர்வுக்கான முன் பயிற்சி**

44. இராணுவ சேவை நமது இளைஞர்களுக்கான மிகச் சிறந்த வேலைவாய்ப்பாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள் இந்திய இராணுவத்தில் அதிக அளவில் சேருவதை ஊக்கப்படுத்தும் வகையில் எழுத்துத் தேர்வுக்கான ஆயத்தப் பயிற்சி இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் 2007-2008 ஆம் நிதியாண்டில், தமிழ்நாட்டைச் சேர்ந்த 346 கிராமப்புற இளைஞர்களுக்கு ரூ.1.72 இலட்சம் அரசு செலவில் முன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**துறையினை கணினிமயமாக்குதல்**

45. முன்னாள் படைவீரர் நல இயக்ககம் ஏற்கெனவே கணினி மயமாக்கப்பட்டுள்ளது. 25 மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களிலுள்ள கணினிகளை இயக்ககத்திலுள்ள கணினிகளுடன் இணைக்கும்பொருட்டு 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.2.50 இலட்சம் செலவில் 'சர்வர்' நிறுவப்பட்டுள்ளது.

**கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு**

46. தமிழ்நாட்டிலுள்ள பல்வகைப்பட்ட கல்வி நிறுவனங்களில் முன்னாள் இராணுவத்தினரின் சிறார்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொறியியல் பட்டப் படிப்பிற்கு அண்ணா பல்கலைக்கழகத்தில் நான்கு இடங்களும், இதர பொறியியல் கல்லூரிகளில் எழுபத்து ஏழு இடங்களும், மருத்துவ பட்டப் படிப்பிற்கு இரண்டு இடங்களும், பல்மருத்துவப் பட்டப் படிப்பிற்கு ஒரு இடமும், செவிலியர் பயிற்சிப் படிப்பிற்கு அறுபது இடங்களும், பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் பட்டயப் படிப்பிற்கு எண்பது இடங்களும், ஒவ்வொரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும் பட்டப் படிப்பிற்கு ஆறு இடங்களும், ஆசிரியர் பயிற்சிப் படிப்பில் நூற்று முப்பத்து இரண்டு இடங்களும், சட்டப் படிப்புப் பிரிவில் ஒரு விழுக்காடு இடமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதுமட்டுமன்றி, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒரத்தநாடு அரசு கல்வியியல் கல்லூரியில் தமிழாசிரியர் பயிற்சிப் படிப்பில் ஒரு

இடமும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை பட்டப் படிப்பில் இரண்டு பாடப் பிரிவுகள் வரையுள்ள கல்லூரிகளில் ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு இடங்களும், இரண்டுக்கும் மிகையாக பாடப் பிரிவுகள் உள்ள கல்லூரிகளில் ஒவ்வொரு பாடப் பிரிவிலும் மூன்று இடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்கு மருத்துவம் சார்ந்த பட்டப் படிப்புகளான மருந்தியல், செவிலியர் மற்றும் இயன்முறை மருத்துவப் படிப்பில் ஓர் இடம் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**படைவீரர் மாளிகை**

47. முன்னாள் படைவீரர்களின் நலனுக்காக நிதி ஆதாரத்தை அதிகரிக்கத் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதிமூலம் படைவீரர் மாளிகைகளில் வணிக/அலுவலக வளாகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் நாகர்கோவிலில் வணிக வளாகம் மற்றும் முன்னாள் படைவீரர் மையம் கட்டுவதற்கு ரூ.94 இலட்சம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து செலவிட அனுமதிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் முற்றுப்பெறும் நிலையில் உள்ளன.

**கோயில் பாதுகாப்புப் படை**

48. தமிழகக் கோயில்களிலுள்ள சிலைகள் மற்றும் விலைமதிப்பற்ற பொருட்களைப் பாதுகாக்கும் வகையில், 2,011 முன்னாள் படைவீரர்கள் கோயில் பாதுகாப்புப் படையில் பணியமர்த்தப்பட்டு, அவர்களுக்குத் தொகுப்பூதியமாக மாதம் ரூ.1,500/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

**அலுவலர் மற்றும் பணியாளர் நியமனம்**

49. கடந்த 2007-2008 ஆம் ஆண்டில், முன்னாள் படைவீரர் நலத் துறையில் காலியாக இருந்த பணியிடங்களில், உதவி இயக்குநர் பணியிடங்கள் நான்கும், நல அமைப்பாளர் பணியிடம் ஒன்றும், நேரடி நியமனம் மூலமாகவும் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடம் ஒன்றும், தட்டச்சர் பணியிடம் ஏழும், ஒரு காவலர் பணியிடமும் துறைமூலம் நிரப்பப்பட்டுள்ளன.



**தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ)**

50. தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ) நிறுமச் (கம்பெனிகள்) சட்டத்தின்படி 28-01-1986 அன்று பதிவு செய்யப்பட்டு நிறுவப்பட்டது. இது இலாபம் ஈட்டும் தற்சார்பு நிறுவனமாகும். இதன் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் முறையே ரூபாய் 50 இலட்சம் மற்றும் ரூ.22.91 இலட்சம் ஆகும்.

**தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் தலையாய செயல்பாடுகள்**

51. (அ) தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களின் நலன் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டுதல் மற்றும் செயல்படுத்துதல்.

(ஆ) வணிகச் செயல்முறைகளை அமல்படுத்துதல்.

(இ) மாநில மற்றும் நடுவண் அரசு அமைப்புகளில் பாதுகாப்புப் பணியாளர்கள், எழுத்தர்கள், ஓட்டுநர்கள், செவிலியர்கள், தீ அணைக்கும் பணியாளர்கள் மற்றும் தொலைத் தொடர்பாளர்கள் பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பதிவு செய்துள்ள தகுதிவாய்ந்த முன்னாள் படைவீரர்களை நியமித்தல். இக்கழகம் இதற்காக சேவைக்கட்டணமாக 12 விழுக்காடு பெறுகிறது.

(ஈ) சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட, நிர்ணயம் செய்யப்பட்ட முக்கிய இடங்களில், வாகனங்களை நிறுத்துவதற்கு பணம் வசூலிக்கும் பொறுப்பினை இக்கழகத்திற்கு சென்னை மாநகராட்சி ஒப்பந்த அடிப்படையில் அளித்துள்ளது. இப்பணியில் ஈட்டப்படும் நிகர லாபத்தில் 70 விழுக்காடு சென்னை மாநகராட்சிக்கு உரிமக் கட்டணமாக அளிக்கப்படுகிறது.

(உ) தமிழ்நாடு அரசின் "பெல் 412" ஹெலிகாப்டர் மற்றும் "செஸ்னா" விமானத்தையும் பராமரித்து நிர்வகிக்கும் பணியினை 'டெக்ஸ்கோ' செய்து வருகிறது. இவற்றைப் பராமரித்து நிர்வகித்து வரும் செலவை இக்கழகம் ஏற்று பின்னர் இத்தொகையை தமிழக அரசிடமிருந்து திரும்பப் பெற்றுக்கொள்கிறது. மேலும், அரசு இக்கழகத்திற்கு சேவைக் கட்டணமாக பராமரிப்புச் செலவின் மீதான 2 விழுக்காடு தொகையை வழங்குகிறது.

[2008 மே 13

52. 31-3-2008 நிலவரப்படி, இக்கழகத்தால் 9,871 முன்னாள் படைவீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். கடந்த ஐந்தாண்டுகளில் இக்கழகத்தின் செயல்பாட்டுத் திறன் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| வருடம் | விற்பனை வருவாய் | இலாபம் | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2002-2003 | 3990.41 | 211.75 | 7656 |
| 2003-2004 | 4293.27 | 399.94 | 7216 |
| 2004-2005 | 4403.85 | 411.41 | 7645 |
| 2005-2006 | 4868.61 | 403.82* | 8532 |
| 2006-2007 | 5388.48 | 478.41 | 9136 |
| 2007-2008 | 5447.32 | 526.25** | 9871 |

* முந்தைய கால செலவினங்களுக்கான ஒதுக்கீடு செய்ததால்

** தோராயமானது மற்றும் தணிக்கைக்கு உட்பட்டது

இக்கழகம் 2007-2008ஆம் நிதி ஆண்டில் தோராய நிகர லாபமாக ரூ.5.26 கோடி ஈட்டியுள்ளது.

## VII. மாநில மனித உரிமைகள் ஆணையம்

53. மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993-ன்படி நடுவண் அரசு புது தில்லியில் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தினை ஏற்படுத்தியது. இதன் தொடர்ச்சியாக தமிழகத்தில் 17-04-1997 முதல் மாநில மனித உரிமைகள் ஆணையம் செயல்பட்டு வருகிறது.

### அமைப்பு

54. மாநில மனித உரிமைகள் ஆணையம் கதவு எண்.143, பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை, சென்னை-28-ல் உள்ள "திருவரங்கம்" அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களைத் தலைவராகக் கொண்டு நான்கு



2008 மே 13]

உறுப்பினர்களுடன் ஆணையம் செயல்பட்டு வருகின்றது. அரசு ஆண்டுதோறும் ஆணையத்தின் செலவினங்களுக்கென பொதுத் துறையின் நிதி ஒதுக்கீட்டில் மானியமாக நிதி ஒதுக்கீடு செய்கிறது. ஆணையம், நிதி, நிருவாகம் மற்றும் அனைத்து நிகழ்வுகளிலும் தன்னாட்சி அதிகாரம் கொண்ட அமைப்பாகும். ஆணையம், சட்டம், புலனாய்வு மற்றும் நிருவாகம் ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டு திறம்படச் செயல்பட்டு வருகிறது. இதர மாநிலங்களுக்கு முன்னதாக, 1997 ஆம் ஆண்டு மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைத்திட்ட ஒரு சில மாநிலங்களில் தமிழகமும் ஒன்று என்பது பெருமைகொள்ளத்தக்க ஒன்றாகும். மேலும், நீண்ட காலம் நிரப்பப்படாமல் இருந்த இவ்வாணையத்தின் தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர் பதவிகளுக்கு, இந்த அரசு பொறுப்பேற்ற உடனே, 05-08-2006-ல் நியமனம் செய்து ஆணை பிறப்பித்தது.

### பணிகள்

55. மனித உரிமைகள் என்பது அரசியலமைப்புச் சட்டம் உறுதிப்படுத்தும் அல்லது அனைத்து நாடுகளின் ஒப்பந்தங்களில் உள்ளடக்கிய, இந்திய நீதிமன்றங்களின்மூலம் நடைமுறைப்படுத்தப்படக்கூடிய வாழ்வு, சுதந்திரம், சமத்துவம் மற்றும் கண்ணியம் ஆகியவை குறித்த உரிமைகள் எனப் பொருள்படும். மனித உரிமைகள் மீறல் குறித்த புகார் மனுக்களை எந்த மொழியிலும் எழுதி அனுப்பலாம். கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. பாதிக்கப்பட்டவரோ அல்லது அவருக்காக, அவரைச் சார்ந்தவர்களோ எழுத்து மூலமாகப் புகார் மனு அளிக்கலாம். பெறப்படும் புகார்கள்மீது விசாரணை மேற்கொள்வது மட்டுமின்றி, மனித உரிமைகள் மீறல் குறித்த நிகழ்வுகளில் ஆணையம் தன்னிச்சையாகவும் விசாரணை மேற்கொள்ளும் அதிகாரம் கொண்ட அமைப்பாகும்.

56. மனித உரிமைகள் மீறல் அல்லது அதற்குத் துணையாக இருத்தல், அத்தகைய உரிமை மீறல்களைத் தடுப்பதில் பொது ஊழியர்களின் கவனக்குறைவு ஆகியவை ஆணையத்தால் விசாரிக்கப்பட்டு, விசாரணை முடிவடைந்ததும், ஆணையம் அவசியமெனக் கருதும் நிகழ்வுகளில் பாதிக்கப்பட்டவருக்கு அல்லது அவர் தம் குடும்ப உறுப்பினர்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்கிட அரசுக்குப் பரிந்துரை செய்தல், மேலும், பரிந்துரையை சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளுக்கு அனுப்பி அதன்மீது ஒருமாத காலத்திற்குள் நடவடிக்கை எடுத்து அறிக்கை அனுப்பக் கோருதல்

ஆகியவை ஆணையத்தின் பணிகளாகும். பரிந்துரைகளை
நிறைவேற்றுவதற்கு கால நீட்டிப்புத் தேவைப்படின் அரசு அதிகாரிகள்
ஆணையத்திற்குக் கடிதம் எழுதி கால நீட்டிப்புப் பெற வேண்டும்.

57. அரசு அலுவலர்களுக்கு கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகள்
நடத்தி, மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வினை இவ்வாணையம்
ஏற்படுத்தி வருகின்றது. ஆணையம் துவங்கிய 1997 ஆம் ஆண்டு
பெறப்பட்ட 2,162 புகார் மனுக்கள் 2007 ஆம் ஆண்டு 10,326 ஆக
உயர்ந்துள்ளமை, இதுமனித உரிமைகள் பற்றிய மக்களின்
விழிப்புணர்வை விளம்புகின்றது.

58. ஆணையம் தனது பணிகளைச் செவ்வனே நிறைவேற்றத்
தேவையான புதிய பணியாளர் இடங்களையும், தொலைபேசி, சிருந்து
போன்ற உட்கட்டமைப்பு வசதிகளையும் தமிழக அரசு ஏற்படுத்தித்
தந்துள்ளது.

## VIII. முதலமைச்சரின் தனிப் பிரிவு

59. முதலமைச்சரின் தனிப் பிரிவு, பொது மக்களின் குறைகளுக்கு
உரிய தீர்வு காண்பதிலும், அவர்களின் இடர்பாடுகளைக்
களைவதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. இப்பிரிவு, தனி
அலுவலரின் தலைமையில் இயங்குகிறது. பொது மக்களின் குறைகளை
உடனடியாகக் களைவதற்கு ஏதுவாக அரசின் அனைத்து
நிலையிலுள்ள அலுவலர்களிடமும் நேரடியாகத் தொடர்பு கொண்டு
உடனடி நடவடிக்கை மேற்கொள்ள தக்க நிருவாக அமைப்பு
ஏற்படுத்தப்பட்டுள்ளது.

60. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமைச்
செயலகத்திலும், இல்லத்திலும் மற்றும் சுற்றுப்பயணம்
மேற்கொள்ளும்போதும், பொதுமக்களிடம் பெறும் மனுக்கள், மாவட்ட
வாரியாகவும், துறை வாரியாகவும் பிரிக்கப்பட்டு, மனுக்களில்
கண்டுள்ள அனைத்து விவரங்களும் கணினியில் பதிவு
செய்யப்படுகின்றன. உடனடி நடவடிக்கைக்காக தொடர்புடைய
அலுவலர்களுக்கு மனுக்கள் அனுப்பப்படுகின்றன. தொடர் ஆய்வு
கூட்டங்களின்மூலம் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் மனுக்கள்மீது
எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து ஆய்வு செய்யப்படுகிறது.

### நிர்வாக அமைப்பு

61. முதலமைச்சரின் தனிப் பிரிவின் நடைமுறைகளை நெறிமுறைப்படுத்தி
நடத்திச் செல்லும்பொருட்டு, இரண்டு மாவட்ட வருவாய்



அலுவலர்கள் : (1) தனி அலுவலர், முதலமைச்சரின் தனிப் பிரிவு
மற்றும் (2) தனி அலுவலர், முதலமைச்சரின் செயலகம் ஆகியோர்
நியமிக்கப்பட்டு நாள்தோறும் பெறப்படும் மனுவின்மீது எடுக்கப்படும்
நடவடிக்கைகளைக் கண்காணித்து வருகின்றனர். முதலமைச்சரின்
தனிப்பிரிவின் தனி அலுவலர், முதலமைச்சரின் தனிப்பிரிவின்
அனைத்து அலுவல்களையும் கவனித்து வருவதுடன், அனைத்து
வேலை நாட்களிலும் பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெறுகிறார்.
முதலமைச்சரின் செயலக தனி அலுவலர் மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களுடைய இல்லத்தில் வரப்பெறும் கோரிக்கை மனுக்களை
கவனிப்பதோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்
சுற்றுப்பயணங்களிலும் கலந்து கொண்டு பொதுமக்களின்
மனுக்களைப் பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்கிறார்.

62. முதலமைச்சரின் தனிப் பிரிவிற்கு மின்னஞ்சல், நிகரி, தனியார்
அஞ்சல் மற்றும் அஞ்சல் மூலமாக மனுக்கள் பெறப்படுகின்றன.
முதலமைச்சரின் தனிப் பிரிவில் பெறப்படும் அனைத்து மனுக்களும்
மாவட்டம் மற்றும் துறை வாரியாகப் பிரிக்கப்பட்டு தொடர்புடைய
அலுவலர்களுக்கு உடனடி நடவடிக்கை எடுக்கும்பொருட்டு
அனுப்பிவைக்கப்படுகின்றன. அவ்வாறு அனுப்பிவைக்கப்பட்ட
மனுக்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அனைத்து
மாவட்டங்களில் உள்ள தனித் துணை ஆட்சியர்களின் (சமூக
பாதுகாப்புத் திட்டம்) கூட்டம் நடத்தப்பட்டு, முதலமைச்சரின் தனிப்
பிரிவின் தனி அலுவலர் அவர்களால் மாதாந்திர ஆய்வு
செய்யப்படுகிறது. இதுமட்டுமின்றி தலைமைச்செயலக துறைகள்
மற்றும் துறைத் தலைமையகங்களில் உள்ள முதலமைச்சரின்
தனிப்பிரிவு மனுக்களுக்கான ஒருங்கிணைப்பு அதிகாரிகள் (Nodal
Officers) ஆகியோருடனும் மாதாந்திர ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.
இந்த ஆய்வுக் கூட்டங்களின்மூலம், பெறப்பட்ட மனுக்களின்மீது
உரிய நேரத்தில் பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா
என்பது குறித்து சீராய்வு மேற்கொள்ளப்படுகிறது.

63. இவ்வலுவலகத்தில் 01-04-2007 முதல் 31-03-2008 வரை 3,50,684
மனுக்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கும் பொருட்டு உரிய
அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இதே காலகட்டத்தில்
பதிலறிக்கைகள் வரப்பெற்ற மொத்தம் 2,59,083 மனுக்கள்
முற்றாக்கப்பட்டுள்ளன. மேலும், 01-04-2007 முதல் 31-03-2008 வரை
மாண்புமிகு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும்
சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களிடமிருந்து 3,920 மனுக்கள்

[2008 மே 13

வரப்பெற்று நடவடிக்கை எடுக்கும்பொருட்டு உரிய அலுவலகங்களுக்கு
அனுப்பப்பட்டு அவற்றில் 2,362 பதிலறிக்கைகள் பெறப்பட்டு மனுக்கள்
முற்றாக்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு முதலமைச்சரின் தனிப் பிரிவு மூலமாக அளிக்கப்படும் உதவிகள்**

64. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைகளின்பேரில்
முதலமைச்சரின் தனிப் பிரிவு மூலமாக வறிய குடும்பங்களிலிருந்து
மருத்துவம், கால்நடை மருத்துவம், செவிலியர் மற்றும் பொறியியல்
கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்
தொகையாக ரூபாய் 25,000/- மாவட்ட ஆட்சித்தலைவரின்
பரிந்துரையின்பேரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொது
நிவாரண நிதியிலிருந்து சிறப்பு நிதியுதவியாக வழங்கப்பட்டு வருகிறது.
இதுமட்டுமின்றி தகுதியுள்ள வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள
பொதுமக்களுக்கு உயிர்காக்கும் அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளும்
பொருட்டு ரூபாய் 25,000/- தமிழ்நாடு மாநில நோயாளர் நிதியுதவி
அமைப்பிலிருந்து மருத்துவ உதவித் தொகையாக வழங்கப்பட்டு
வருகிறது.

**01–04–2007 முதல் 31–03–2008 வரை வழங்கப்பட்ட மருத்துவ நிதியுதவி**

65. 1-4-2007-லிருந்து 31-3-2008 வரை தமிழ்நாடு மாநில நோயாளர்
நிதியுதவி அமைப்பிலிருந்து 1,701 நபர்களுக்கு 1,584 இருதய அறுவை
சிகிச்சைகள், 75 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள், 22 புற்றுநோய்
அறுவை சிகிச்சைகள், 4 முதுகுத் தண்டு வட அறுவை சிகிச்சைகள்,
10 மூளை மற்றும் நரம்பு மண்டல அறுவை சிகிச்சைகள்,
உபாதை நோய்களுக்கான அறுவை சிகிச்சைகள், 3 சிறுநீர்
நோய்க்கான சிகிச்சைகள் மேற்கொள்ள ரூ.4,24,65,000/- ஒப்பளிப்பு
செய்யப்பட்டது.

**01–04–2007 முதல் 31–03–2008 வரை வழங்கப்பட்ட கல்வி நிதியுதவி**

66. 01-04-2007 முதல் 31-03-2008 வரை பொறியியல், மருத்துவம்,
கால்நடை மருத்துவம் மற்றும் செவிலியர் கல்வி பயிலும் 141 ஏழை
எளிய மாணவ, மாணவியர்களுக்கு (117 பொறியியல் மற்றும்
24 மருத்துவம், கால்நடை மருத்துவம் மற்றும் செவிலியர் கல்வி
பயிலும் மாணவ, மாணவியர்கள்) ரூ.35,25,000/- முதலமைச்சரின் பொது
நிவாரண நிதியிலிருந்து கல்வி உதவித் தொகை வழங்கி ஆணைகள்
வெளியிடப்பட்டுள்ளன.



2008 மே 13]

**இணையம் மூலமாக கோரிக்கை (Online) பதிவு முறைமை**

67. முதலமைச்சரின் தனிப் பிரிவிலிருந்து தலைமைச் செயலகத்தின்
அனைத்துத் துறைகள், துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட
ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் பிற அலுவலகங்களுக்கு கணினியில்
பதிவு செய்யப்பட்டு அனுப்பப்படும் மனுக்கள்மீதான பதிலறிக்கைகள்
கடந்த 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கு முன்னர் தட்டச்சு
செய்யப்பட்ட அறிக்கைகளாக பெறப்பட்டு அவை கணினியில் பதிவு
செய்யப்பட்டு வந்துள்ளன. இதனால் காலதாமதம் ஏற்பட்டு வந்தது.
கடந்த 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தலைமைச்
செயலகத்தின் அனைத்துத் துறைகள், துறைத் தலைமை அலுவலகங்கள்
மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் ஆகியவற்றிற்கிடையே
ஒருங்கிணைந்த தகவல் தொடர்பு நடைமுறைப்படுத்தப்பட்டு,
இணையதள வசதி அடிப்படையில் முதலமைச்சரின் தனிப் பிரிவு
மனுக்களுக்கான பதில்கள் Online மூலம் அவரவர்
அலுவலகத்திலிருந்தே தற்போது அனுப்பப்பட்டு, அவை
முதலமைச்சரின் தனிப் பிரிவில் ஆய்வு செய்யப்பட்டு கணினியில்
பதிவு செய்யப்பட்டு வருகின்றன. இத்தகைய புதிய வசதி
நடைமுறைப்படுத்தப்பட்டதன் விளைவாக மனுக்களுக்கான
அறிக்கைகள் அனைத்தும் இணையதளம் வழி வரப்பெற்றுள்ளன.

**புதிய முயற்சிகள்**

**கணினிகள் மற்றும் அது தொடர்புடைய உபகரணங்களின் நிலையினை மேம்படுத்துதல்**

68. முதலமைச்சரின் தனிப் பிரிவில் தற்போது பயன்பாட்டில்
இருந்துவரும் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட சர்வர்கள் (Servers),
கணினிகள், அச்சு இயந்திரங்கள், அலகிடும் கருவிகள் (Scanners),
தடங்கலின்றி மின் அளிப்பு செய்யும் இயந்திரம் (UPS) மற்றும் பிற
மென் பொருட்கள் ஆகியவற்றிற்குப் பதிலாக நவீன தொழில்
நுட்பத்துடன்கூடிய புதிய கணினிகள் மற்றும் மென்பொருள்
உபகரணங்கள் ரூ.23,00,000/- செலவில் புதியதாக நிறுவப்படும்.

**முதலமைச்சரின் தனிப் பிரிவில் தொடு மின்திரை (KIOSK) அமைத்தல்**

69. முதலமைச்சரின் தனிப் பிரிவிற்கு வருகைதரும் பயனாளிகள்
தங்களின் மனுக்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை
உடனடியாக அறிந்துகொள்வதற்கு முதலமைச்சரின் தனிப் பிரிவில்
ஒரு தொடு மின்திரை சுமார் ரூ.1,50,000/- செலவில் அமைக்கப்படும்.

[2008 மே 13

**உயிர்காக்கும் அறுவை சிகிச்சை உதவிகள் கண்காணிப்பு முறைமை**

70. இருதயம், சிறுநீரகம், புற்றுநோய் மற்றும் சில கொடிய நோய்களுக்காக மேற்கொள்ளப்படும் உயிர்காக்கும் அறுவை சிகிச்சைக்காக ரூ.25,000/- வரை மாநில நோயாளர் நிதியுதவி அமைப்பிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றது. உயிர்காக்கும் அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ள நிதியுதவி கோரி பெறப்படும் மனுக்கள் மீது எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகள் தொடர்பான விவரங்களை அறிவதற்கு உயிர்காக்கும் அறுவை சிகிச்சை உதவிகள் கண்காணிப்பு முறைமையை (Life Saving Surgeries' Assistance Monitoring System) தேசிய தகவல் மையத்தின் (NIC) உதவியுடன் உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்முறைமையில் மனுதாரரின் விண்ணப்ப நிலவரம், வெளியிடப்பட்ட அரசாணைகள், சிகிச்சை விவரங்கள், அளிக்கப்பட்ட தொகை வருட வாரியாக, நோய் வாரியாக, மாவட்ட வாரியாக, மருத்துவமனை வாரியாக வழங்கப்பட்ட நிதியுதவி ஆகியவை அவ்வப்போது அறிந்துகொள்ள இயலும்.

**முதலமைச்சரின் தனிப் பிரிவிற்கென இணையதளம் அமைத்தல்**

71. முதலமைச்சரின் தனிப் பிரிவின் செயல்பாடுகளைப் பரவலாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக தனியொரு இணையதளத்தினை (Website) அமைக்க தேசிய தகவல் மையத்தின் (National Informatics Centre) உதவியுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த இணையதளம் அரசின் அனைத்து நலத்திட்ட உதவிகள் குறித்த விவரங்களையும், அவற்றைப் பெறுவதற்குரிய விண்ணப்பப் படிவங்களையும் கொண்டிருக்கும். பொதுமக்கள் தாங்கள் முதலமைச்சரின் தனிப் பிரிவில் கொடுத்துள்ள மனுக்களின் தற்போதைய நிலவரம் குறித்து அறிந்துகொள்வதற்கும், மேலும், இணையதளத்தின் மூலமாகத் தங்களது மனுக்களைப் பதிவு செய்துகொள்வதற்கும் வழிவகை செய்யப்பட்டிருக்கும்.

**பகுதி II – புதிய திட்டங்கள்**

- ரூபாய் 15 இலட்சம் செலவில் நான்கு அரசு விருந்தினர் இல்லங்களையும் தலைமைச் செயலகத்துடன் மென்பொருள்மூலம் இணைத்தல்.



2008 மே 13]

- ரூபாய் 4 இலட்சம் செலவில் புது தில்லியில் இருக்கும் கூடுதல் விருந்தினர் இல்லத்தின் வணிகப் பகுதியினைக் கணினி மயமாக்குதல் மற்றும் அலுவலக கணினிகளை மாற்றுதல்.
- புது தில்லியில் இருக்கும் தமிழ்நாடு இல்லத்திற்கு வருகை தரும் உயர்பெருமக்களின் பாதுகாப்புப் பணிக்காக ரூ.13.40 இலட்சம் செலவில் இரு மகேந்திரா பொலிரோ ஈப்புகள் வாங்குதல்.
- உதகமண்டலத்திலுள்ள "தமிழகம்" விருந்தினர் இல்லத்தின் முதன்மைக் கட்டடத்திற்கு அருகில் ரூ.3.20 இலட்சம் செலவில் மூடுமுகப்பு அமைத்தல்.
- உதகமண்டலத்திலுள்ள "தமிழகம்" விருந்தினர் இல்லத்தில் ரூ.3.70 இலட்சத்தில் முதன்மைக் கட்டடத்தில் உள்ள சில அறைகளின் குளியலறை மற்றும் கழிவறைகளைப் புதுப்பித்தல்.
- உதகமண்டலத்திலுள்ள "தமிழகம்" விருந்தினர் இல்லத்தின் முதன்மைக் கட்டடத்தில் முதன்மை மற்றும் துணை மின் கட்டுப்பாட்டுப் பெட்டகத்தை ரூ.12 இலட்சம் செலவில் விரிவுபடுத்துதல் மற்றும் இவற்றின் மின் இணைப்புகளுக்குரிய புதைவடக் கம்பிகளை விரிவுபடுத்தி சீர் செய்தல்.
- உதகமண்டலத்திலுள்ள "தமிழகம்" விருந்தினர் இல்லத்திலுள்ள தொலைபேசி இணைப்புகளை ரூ.1.70 இலட்சம் செலவில் மறு சீரமைத்தல்.
- சென்னையிலுள்ள சேப்பாக்கம் அரசு விருந்தினர் இல்லத்திற்கு வரும் உயர்பெருமக்களின் பயன்பாட்டிற்காக ரூ.39 இலட்சம் செலவில் இரண்டு ஹோண்டா சிட்டி மற்றும் இரண்டு டயோட்டா இன்னோவா சீருந்துகள் வாங்குதல்.
- சென்னையிலுள்ள சேப்பாக்கம் அரசு விருந்தினர் இல்லத்திற்கு 10 எண்ணிக்கையிலான 1.5 டன் இருகூறு குளிர் சாதன இயந்திரங்கள் ரூ.3 இலட்சம் செலவில் வாங்குதல்.
- சென்னை தலைமைச் செயலகத்தின் தலைமைச் செயலரின் கூட்ட அரங்கத்தை ரூ.7 இலட்சம் செலவில் மேம்படுத்துதல்.

**நிதி ஒதுக்கீட்டின் விவரங்கள்**

மானியக் கோரிக்கை எண் 38-ன்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

## இணைப்பு

கோரிக்கை எண் 38–ன்கீழ் 2008–2009 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டின் விவரங்கள்

| கணக்குத் தலைப்புகள் | (ரூபாய் ஆயிரத்தில்) | | | |
|---|---|---|---|---|
| | 2006–07 | 2007–08 | 2007–08 | 2008–09 |
| | கணக்குகள் | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | திருத்த மதிப்பீடு | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
| 2014 நீதி நிருவாகம் | 75 | 5,00 | 5,00 | 5,00 |
| 2015 தேர்தல்கள் | 75,82,96 | 38,83,96 | 53,15,12 | 43,33,67 |
| 2052 தலைமைச் செயலக பொதுவான பணிகள் | 16,71,47 | 21,46,79 | 25,86,81 | 22,99,98 |
| 2059 பொதுப் பணிகள் | 3,76,47 | 3,56,41 | 4,56,41 | 3,84,54 |
| 2070 ஏனைய நிருவாகப் பணிகள் | 13,57,95 | 18,52,49 | 18,66,82 | 18,87,82 |
| 2075 பல்வகைப் பொதுவான பணிகள் | 4,43,16 | 2,95,84 | 4,30,90 | 3,16,18 |
| 2216 வீட்டு வசதி | 4 | 3,00 | 25,19 | 17,77 |
| 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் | 44,81,41 | 48,81,74 | 52,54,83 | 56,02,90 |
| 2251 தலைமைச் செயலகம் சமூகப் பணிகள் | 42,29 | 23,03 | 84,19 | 57,69 |
| 4216 வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு | 2,00,00 | 5,00,00 | 5,42,00 | 5,00,00 |



## இணைப்பு-II

(205 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 38-பொதுத் துறை

## தேர்தல்கள்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

தேர்தல்களுக்கான நிதி ஒதுக்கீடு 2015 என்ற பெருந்தலைப்பின்கீழ் மானியக் கோரிக்கை எண் 38-ல் இடம்பெற்றுள்ளது. இதில் 01-01-2008-ஐத் தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்பட வாக்காளர் பட்டியல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டதற்கும், 01-01-2009-ஐத் தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் மேற்கொள்வதற்கும், தகுதிபெற்ற எஞ்சிய வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கும், புகைப்பட அடையாள அட்டை வழங்குவதற்கும், நாடாளுமன்றத் தேர்தலுக்குண்டான முன்னேற்பாடுகளைச் செய்வதற்கும் மற்றும் தேர்தல் பணியாளர்களின் சம்பளம் மற்றும் இதர படிகள் போன்ற பிற செலவினங்களுக்கும் இம்மானியக் கோரிக்கையின்கீழ் 2008-2009 ஆம் நிதியாண்டின் செலவுகளுக்காக ரூ.43,33,67,000/- நிதி தேவைப்படுகிறது. 14-வது பாராளுமன்ற பொதுத் தேர்தல்கள் 10-5-2004 அன்றும், தமிழ்நாட்டின் 13-வது சட்டமன்றப் பேரவையின் பொதுத் தேர்தல்கள் 8-5-2006 அன்றும் நடைபெற்றன. தற்சமயம் இம்மாநிலத்தில் தேர்தல் நடத்த எந்தத் தொகுதியும் காலியாக இல்லை.

தேர்தல்கள் என்பதன்கீழ் மானியக் கோரிக்கை எண் 38-ல் 2008-2009 ஆம் ஆண்டிற்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்குச் செலவிடத் தேவைப்படும் தொகை ரூ.43,33,67,000/- (அனுமதிக்கப்பட வேண்டியது) ஆகும்.

**2015. தேர்தல்கள் (ஐ. திட்டத்தில் சேராதது)**

**102. தேர்தல் அதிகாரிகள்**

எஎ. சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள் ரூ.8,44,00,000

[2008 மே 13

| | |
|---|---|
| **103. புகைப்பட வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்** | |
| எஎ. சட்டப் பேரவைத் தொகுதிகள் | ரூ.25,17,97,000/- |
| **104. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்** | |
| எஎ. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தல்கள் | ரூ.30,03,000/- |
| **105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்** | |
| எஎ. இடைத் தேர்தல்கள் | ரூ.19,000/- (அடையாள ஒதுக்கீடு) |
| எபி. மக்களவைக்குத் தேர்தல்கள் | ரூ.2,94,38,000 |
| **106. மாநிலச் சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்** | |
| எஎ. மாநில சட்டப்பேரவை | ரூ.48,35,000/- |
| **108. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குதல்** | |
| எஎ. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் | ரூ.5,98,75,000/- |
| **மொத்தம்** | **ரூ.43,33,67,000/-** |

மேற்சொன்ன இனங்களுக்கான மதிப்பீடுகள் கீழே விவரமாக விவரிக்கப்பட்டுள்ளன.

**102. தேர்தல் அதிகாரிகள்**

**எஎ. சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள் மதிப்பீடு ரூ.8,44,00,000/-**

1950 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 13எ-ன்கீழ் ஒவ்வொரு மாநிலத்திலும், தலைமைத் தேர்தல் அதிகாரி



2008 மே 13]

பதவியில் ஒருவர் அம்மாநிலத்தின் அனைத்துச் சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் தயாரித்தல்/இன்றைய நிலைக்கேற்ப இருத்தலை சரிபார்த்தல் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்கள் நடத்துவது மற்றும் அதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய பொறுப்புகளை கவனிப்பார். மாநிலத் தலைமையகத்தில், தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அலுவல் பணியில் உதவிபுரிய ஒரு இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி (கணினிமயமாக்குதல்) துணைச் செயலாளர் அந்தஸ்திலும், ஒரு இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி இணைச் செயலாளர் அந்தஸ்திலும், ஒரு துணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி துணைச் செயலாளர் அந்தஸ்திலும் உள்ளனர். சார்புச் செயலர் அந்தஸ்தில் ஒரு உதவித் தலைமைத் தேர்தல் அதிகாரியும் உள்ளார். பொதுத் (தேர்தல்கள்) துறையில் ஆறு நிரந்தரப் பிரிவுகள் உள்ளன.

தேர்தல் நிர்வாகப் பணிகளில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு உதவி புரிய 1950 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 13எஎ-ன்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் (சென்னையைத் தவிர) மாவட்டத் தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாவட்டத்திற்கு மாநகராட்சி ஆணையர், மாவட்டத் தேர்தல் அதிகாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார். ஊரகத் தொகுதிகளுக்கு வருவாய்க் கோட்ட அதிகாரிகள் தரத்தில் வாக்குப் பதிவு அதிகாரிகள் உள்ளனர். கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் ஆகிய மாநகராட்சித் தொகுதிகளுக்கு மாநகராட்சி ஆணையர்கள் வாக்குப் பதிவு அலுவலர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். வட்டாட்சியர்கள் மற்றும் நகராட்சி ஆணையர்கள் உதவி வாக்குப் பதிவு அலுவலர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை நகரைப் பொறுத்தவரை, சென்னை மாநகராட்சியில் உள்ள பத்து மண்டல அதிகாரிகளும் அந்தந்த மண்டலங்களுக்கு வாக்குப் பதிவு அதிகாரிகளாகவும் உதவி வருவாய் அதிகாரிகள் உதவி வாக்குப் பதிவு அதிகாரிகளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் 2002 எல்லை மறுவரையறை சட்டத்தை மாற்றி, எல்லை மறுவரையறை (திருத்தம்) அவசரச் சட்டத்தை 19-02-2008 ஆம் நாளிட்ட அறிவிக்கைமூலம் பிரகடனம் செய்துள்ளார். தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ள சட்டமன்றத் தொகுதிகளின் அடிப்படையில், வாக்காளர் பதிவு

அதிகாரிகள் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

தற்சமயம் தேர்தல் பணிகளைக் கவனிக்க, ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்க் கோட்ட அலுவலர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு ஒரு நிரந்தர உதவியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதேபோல், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் ஆகிய மாநகராட்சி ஆணையர்களின் அலுவலகங்களில் ஒரு நிரந்தர உதவியாளர் பணியிடமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில், சென்னை மாநகர ஆணையர் அலுவலகத்தில் மாவட்ட தேர்தல் அதிகாரி (சென்னை மாநகராட்சி ஆணையர்)-க்கு உதவும் பொருட்டு ஒரு மாவட்ட வருவாய் அதிகாரி (தேர்தல்கள்) என்ற பதவி தற்காலிகப் பணியிடமாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஒரு வட்டாட்சியர், மூன்று உதவியாளர்கள், ஒரு தட்டச்சர், ஒரு பதிவேடு எழுத்தர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் ஆகிய நிரந்தரப் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, சென்னை மாநகர ஆணையர் அலுவலகத்தில் தேர்தல் சம்பந்தப்பட்ட பணிகளைக் கவனித்து வருகின்றனர்.

தேர்தல் பணிக்காக தோற்றுவிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் அலுவலர்களின் ஊதியச் செலவுகள், பயணச் செலவுகள், அலுவலகச் செலவினம், இதர செலவினம், தொலைபேசிக் கட்டணங்கள், இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இச்செலவினங்களில், 50 விழுக்காட்டினை மத்திய அரசு ஏற்றுக் கொள்கின்றது.

**103. புகைப்பட வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்**

**எஎ. சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள்:**

**மதிப்பீடு ரூ.25,17,97,000/-**

இம்மாநிலத்திலுள்ள அனைத்து சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களின் தயாரிப்புப் பணி (திருத்துதல் உள்ளிட்ட) மற்றும் அச்சிடும் பணி ஆகியவற்றுக்கான செலவினங்கள் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும்.





இப்பணிக்காக தற்காலிகமாக நியமிக்கப்படும் பணியாளர்களின் சம்பளம் மற்றும் படித்தொகைகள், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் போன்றவையும் இத்துணைத் தலைப்பின்கீழ் அடங்கும். சென்னை ஆவணக் காப்பகத்தில் வாக்காளர் பட்டியல்களைப் பராமரிப்பதற்கான நிரந்தரப் பணியிடங்களான ஒரு உதவியாளர், ஒரு பதிவேடு எழுத்தர் ஆகியோரின் செலவினங்களுக்கும் இத்துணைத் தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

1950 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் விதித்துறைகளுக்கேற்ப, இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி ஒவ்வோராண்டும் ஜனவரி 1 ஆம் நாளைத் தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு, சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்கள் திருத்தப்படுகின்றன.

வாக்காளர் பட்டியல்கள், வாக்காளர் பதிவு அதிகாரிகளால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளின் உதவியுடன் தயாரித்து வெளியிடப்படுகின்றன. தலைமைத் தேர்தல் அதிகாரியின் மேற்பார்வை, அறிவுரைகள் மற்றும் கட்டுப்பாட்டின்கீழ், மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் சென்னை மாநகராட்சி ஆணையரும் மாவட்ட தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் திருத்துதல் பணிகளை ஒருங்கிணைத்து கண்காணித்து வருகின்றனர்.

இந்திய தொகுதி எல்லை மறுவரையறை ஆணையத்தால் அறிவிக்கை செய்யப்பட்ட தொகுதி எல்லை மறுவரையறை ஆணை 19-02-2008 முதல் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக இந்திய குடியரசுத் தலைவர் அவசரச் சட்டம் ஒன்றினைப் பிறப்பித்துள்ளார். எனவே, மறுவரையறை செய்யப்பட்ட சட்டமன்றத் தொகுதிகளுக்கேற்ப வாக்காளர் பட்டியல்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும். மிகப் பெரிய அளவிலான இப்பணி தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி 2008 ஆகஸ்ட் மாதத்தில் நிறைவடையலாம்.

01-01-2009 ஆம் நாளைத் தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தத்தினை இந்தியத் தேர்தல் ஆணையம் இவ்வாண்டு இறுதியில் அறிவிக்கக்கூடும்.

[2008 மே 13

சட்டமன்றத் தொகுதிகளின் மறுவரையறைக்கேற்ப வாக்காளர் பட்டியல்களை மாற்றியமைத்தல் மற்றும் வாக்காளர் பட்டியல் சுருக்கத் திருத்தம், 2009-க்காக இந்தத் துணைத் கணக்குத் தலைப்பின்கீழ் வாக்காளர் பட்டியல் அச்சிடுதல், கணினியில் விவரங்களைப் பதிவு செய்தல், பணியாளர் ஊதியம், பயணப்படிகள், வாக்குச் சாவடி களப்பணியாளர்களுக்கான ஊதியம் முதலியவற்றிற்கான செலவினங்களை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு தேவைப்படுகின்றது. இதற்கென 2008-09 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.25,17,97,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் செலவினத்தின் 50 விழுக்காட்டினை மத்திய அரசு பகிர்ந்துகொள்ளும்.

**104. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்.**

**எஎ. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தல்கள்.**

**மதிப்பீடு ரூ.30,03,000/–**

மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெறும்போது ஏற்படும் செலவினங்கள் அனைத்தும் இந்தத் துணை தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. தொடர் செலவினமான தேர்தல் பொருட்கள் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை வைப்பதற்கான கட்டடங்களின் வாடகை, வாக்குப் பெட்டிகளைப் பராமரிக்கும் செலவுகள், வாகன எரிபொருள் செலவினங்கள் மற்றும் பொதுத் (தேர்தல்கள்) துறையின் வாகனங்களின் பராமரிப்புச் செலவுகள் ஆகியவையும் இந்த துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும்.

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்குப் பதிவுக்குரிய உபகரணங்கள் ஆகியவை வேலூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலுள்ள தனியார் கிடங்குகளிலும், விழுப்புரம், மதுராந்தகம், விருத்தாசலம் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கழகக் கிடங்குகளிலும் வைக்கப்பட்டுள்ளன. தனியார் கிடங்குகள் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கழக நிறுவனத்திற்கு



2008 மே 13]

வாடகைக் கட்டணம் வழங்குதல் மற்றும் தேர்தல் பொருட்கள் வாங்குதல் ஆகியவை மேற்கண்ட துணைத் தலைப்பின்கீழ் செலவிடப்படும். இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

**எஎ. இடைத் தேர்தல்கள் – ரூ.19,000/– (அடையாள ஒதுக்கீடு)**

மக்களவைத் தொகுதிகளில் இடைத் தேர்தல்கள் நடைபெற்றால் அதற்காகும் அனைத்துச் செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். நாடாளுமன்றத்தில் தமிழகத்திலுள்ள மக்களவைத் தொகுதிகளில் காலியிடம் ஏதுமில்லை. இச்செலவினங்கள் அனைத்தையும் மைய அரசே ஏற்றுக்கொள்கிறது.

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

**எபி. மக்களவைத் தேர்தல் மதிப்பீடு ரூ.2,94,38,000/–**

மக்களவைக்கு மட்டும் பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் அனைத்தும் முதலில் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். பின்னர் இதற்காகும் அனைத்துச் செலவினங்களும் மத்திய அரசிடமிருந்து மீளப் பெறப்படும். 14-வது மக்களவைக்குப் பொதுத் தேர்தல்கள் 10-5-2004 அன்று நடைபெற்றது. மக்களவைக்கான அடுத்த பொதுத் தேர்தல் 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் நடைபெறவுள்ளதால், அழியாமை, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களுக்கான மின்கலன்கள் முதலானவற்றைக் கொள்முதல் செய்வது போன்ற ஆயத்தப் பணிகளுக்காக நிதி தேவைப்படுகிறது.

**106. மாநில சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

**எஎ. மாநில சட்டமன்றப் பேரவை**

**மதிப்பீடு ரூ.48,35,000/–**

மாநில சட்டமன்றப் பேரவைக்கு பொதுத் தேர்தலோ அல்லது இடைத் தேர்தலோ நடைபெற்றால் அது தொடர்பான செலவினங்கள்

இந்தத் துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். தற்பொழுது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் எந்தத் தொகுதியும் காலியாக இல்லை. இதற்குண்டான அனைத்துச் செலவினங்களையும் மாநில அரசே ஏற்றுக்கொள்ளும்.

**நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லை மறுவரையறை**

எல்லை மறுவரையறைச் சட்டம், 2002 பிரிவு 3-ன்படி அமைக்கப்பட்ட மறுவரையறை ஆணையம் தயார் செய்த தமிழ் நாட்டிலுள்ள மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகள் குறித்த வரைவு கருத்துருக்கள் இந்திய அரசிதழ் மற்றும் தமிழ்நாடு அரசிதழ் ஆகியவற்றில் 5-4-2007 அன்று வெளியிடப்பட்டன. வரைவுக் கருத்துருக்களின்மீது அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களின் மறுப்புரை மற்றும் கருத்துகள் பெறப்பட்டன. கருத்துகள் மற்றும் மறுப்புரைகளைப் பெறுவதற்குரிய இறுதி நாளுக்குப்பின் தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் சென்னை ஆகிய இடங்களில் மக்களின் கருத்துகளைக் கேட்டறிய ஆணையத்தின் கூட்டங்கள் (Public Sittings) நடத்தப்பட்டன. அவ்வாறு நடத்தப்பட்ட கூட்டங்களில் மக்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துகளை, ஒருங்கிணைப்பு உறுப்பினர்களோடு கலந்தாய்வு செய்து இறுதி ஆணை தயாரிக்கப்பட்டு, அவ்வாணை மறுவரையறை ஆணையத்தின் ஒப்புதல் பெற்று இந்திய அரசிதழ் மற்றும் மாநில அரசிதழ் ஆகியவற்றில் 13-8-2007 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டது. எல்லை மறுவரையறை ஆணையத்தின் இறுதி ஆணையின் பிரதிகள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைமுன் 18-10-2007 அன்று வைக்கப்பட்டன. எல்லை மறுவரையறை ஆணையத்தின் இறுதி ஆணை 19-02-2008 முதல் செயல்படுத்தப்படும் என்று இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

எல்லை மறுவரையறை தொடர்புடைய பணிகளுக்கான எழுதுபொருள், அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கான போக்குவரத்துச் செலவு, மாவட்ட/வட்ட வரைபடங்கள் தயாரிப்பிற்கான செலவினங்கள் அனைத்தையும் இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் மாநில அரசு மேற்கொள்ளும்.



**108. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்**

**எஎ. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம்.**

**மதிப்பீடு ரூ.5,98,75,000/–**

இந்தியத் தேர்தல் ஆணையம், சட்டமன்றப் பேரவை மற்றும் பாராளுமன்ற பொதுத் தேர்தல் மற்றும் இடைத் தேர்தல்களில் வாக்காளர்களை அடையாளம் காணும் பொருட்டு, வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் பணி 1996 ஆம் ஆண்டிலிருந்து மூன்று கட்டங்களாக நடைபெற்றுள்ளது. இப்பணியின் நான்காவது கட்டம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல்களுக்காக பிப்ரவரி 2006-ல் தொடங்கி, ஏப்பல் 2006 வரை நடைபெற்றது. இக்கால கட்டத்தில், புகைப்பட வாக்காளர் அடையாள அட்டைகள் உடனுக்குடன் நேரடியாக வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டன.

தற்போது நான்கு கட்டங்களில் மொத்த வாக்காளர்களில் 96.52 விழுக்காடு வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. புகைப்பட வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களின் புகைப்படங்களைச் சேகரிக்கும் பணி 31-3-2008 வரை 98.63 விழுக்காட்டினை எட்டியுள்ளது. விடுபட்ட மற்றும் புதிய வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகளைத் தயாரித்து அச்சடித்து வழங்குவதற்காக, முகவர்களை எதிர்பார்த்திருப்பதற்குப் பதிலாக, வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள திருத்தம் மற்றும் மாற்றம் செய்ய வசதியாக, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை மையம் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை மையத்திலும், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை மையப் பொறுப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். 234 வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை மையங்களுக்கும் தேவையான கணினி மென்பொருள், வன்பொருள, மற்ற அவசியப் பொருட்கள் வழங்கும் பணி விரைவில் முடியும் தருவாயில் உள்ளது. 234 புகைப்பட அடையாள அட்டை மையங்களும் விரைவில் செயல்படத் தொடங்கும்.

இந்தியத் தேர்தல் ஆணையம் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையினை திருத்தப்பட்ட சிறிய வடிவத்தில் வழங்க ஆணையிட்டுள்ளது. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையின் அளவு குறைக்கப்பட்டு, எளிதாக எடுத்துச் செல்ல வசதியாகவும், வருமான வரி செலுத்துவதற்கான நிரந்தரக் கணக்கு எண் அட்டை/ கடன் வசதி அட்டையின் அளவில், வாக்காளர் அடையாள அட்டையும் வழங்கப்படும். வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் வயதிற்குப் பதிலாக பிறந்த தேதி இடம் பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் துணைத் தலைப்பின்கீழ் ஒதுக்கப்படும் நிதி 234 சட்டமன்றத் தொகுதிகளில் புகைப்பட வாக்காளர் பட்டியலில் விடுபட்ட மற்றும் புதியதாகச் சேர்க்கப்படும் வாக்காளர்களுக்கான புகைப்படங்களைச் சேகரித்து, வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தயாரித்து அளிக்கும் பணிக்கு செலவிடப்படும். இச்செலவினத்தில் 50 விழுக்காட்டினை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்.





## இணைப்பு-III

*(205 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 46

## தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

*“தமிழுயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும்*
*அறிவுயரும் அறமும் ஓங்கும்”*

*- பாவேந்தர் பாரதிதாசன்*

மனிதகுலம் வளர்த்தெடுத்த மிகப்பெரும் செல்வம் மொழியாகும். மொழி மானுடத்தின் வளர்ச்சியிலும், வாழ்விலும் பெரும்பங்காற்றுகிறது. தனி ஒரு மனிதனைச் சமுதாயம் சார்ந்த மனிதனாக மொழிதான் மாற்றி வளர்க்கிறது. மனிதன் கண்டறிந்து பேசி வளர்த்த மொழியே உலக அரங்கில் அவனை அடையாளம் காட்டும் முதல் பண்புக்கூறாக உயர்ந்து நிற்கிறது.

ஓர் இனத்தின் பண்பாட்டு வளர்ச்சியும், நாகரிக மலர்ச்சியும், கலைகளின் பொலிவும், கடல் கடந்த வளமும் கொள்-கொடை உறவும் அந்த இனத்தின் மொழி வளர்ச்சியையே அடித்தளமாகக் கொண்டுள்ளன.

தமிழினம், உலக மொழிகளில் ஒப்புயர்வற்ற உயர் தனிச் செம்மொழியாம் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட இனம். வரலாற்றுக் காலம் தொடங்கி, செம்மொழித் தகுதி பெற்ற மொழியாகவும், பேச்சு மொழியாகவும் எல்லோராலும் விரும்பிக் கற்கத்தக்க எளிய, இனிய மொழியாகவும் தொடர்ந்து இலக்கிய, இலக்கண வளமுடைய மொழியாகவும் விளங்கி வருகிறது. பழமையில் காலூன்றிப் புதுமை உலகிற்குத் தமிழினத்தை வழி நடத்தும் ஆற்றல் கொண்ட மொழியாகவும் தமிழ் திகழ்கிறது. தொன்மைப் புகழ் பலபெற்ற மொழி எனினும்

[2008 மே 13

> "அத்தொல்புகழையே போற்றிக் கொண்டு ஓய்ந்திருக்கக் கூடாது. சிந்தனைகளை உணர்த்தவும், விஞ்ஞான வளம் மிக்க நவீனகாலத்தின் செய்திகளைத் தெரிவிப்பதற்கும் ஏற்ற கருவியாய், வாகனமாய்த் தமிழ் மாற வேண்டும் என்பதனை நாம் உணர வேண்டும். தொழில் நுணுக்கம், அறிவியல், மருத்துவம் முதலியவற்றைக் கற்பிப்பதற்கு ஏற்ற பயிற்று மொழியாய் வளர்த்தாக வேண்டும்"

என்பதைக் கருத்தில் கொண்டு இந்த அரசின் தமிழ் வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ் மொழியை ஆட்சிமொழியாக வளர்த்தெடுக்கத் தமிழ்க்கல்வியைப் பரப்புதல், தமிழறிஞர்களைப் போற்றுதல், ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல், கருத்தரங்கம் நடத்துதல், நூல்கள் வெளியிடுதல், பரிசும், பாராட்டும், விருதும் வழங்கி ஊக்கப்படுத்துதல், தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குதல், தமிழ்ச்சான்றோர் துயர் நீக்க நிதியுதவி அளித்தல் எனப் பன்முகப் பாங்கில் தமிழ் வளர்ச்சித் துறை பணியாற்றி வருகிறது.

## தமிழ் வளர்ச்சி இயக்ககம்

முத்தமிழாகப் போற்றப்பட்டுவரும் தமிழ் மொழி, காலத் தேவைக்கும் பயன்பாட்டிற்கும் ஏற்ப அறிவியல் தமிழ், ஆட்சித் தமிழ் என்றெல்லாம் வளர்ந்து வருகிறது. ஆட்சியில் தமிழின் பயன்பாடு பெருகவும் வளரவும் ஆட்சிமொழிச் செயலாக்கம், தமிழ் வளர்ச்சி எனும் இருபெரும் பணிகளைத் தமிழ் வளர்ச்சி இயக்ககம் மேற்கொண்டு வருகிறது.

### தமிழ்ப் புத்தாண்டு

திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத் திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்பது ஒட்டுமொத்தமாக அனைத்துத் தமிழ் அறிஞர்களும் ஒப்புக் கொண்டுள்ள உண்மை என்பதால், தைத் திங்கள் முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என அறிவித்து நடைமுறைப்படுத்திட இந்த அரசு முடிவெடுத்து, அதற்கான சட்டத்தைக் கடந்த 1-2-2008 அன்று சட்டப்பேரவையில் நிறைவேற்றியது. அதனையொட்டி, "பொங்கல் திருநாளைத் தமிழர் திருநாளாகக் கொண்டாடி வரும் தமிழ்நாட்டு



2008 மே 13]

மக்கள்; இனி - தமிழ்ப் புத்தாண்டு பிறக்கும் நாளாகவும் இணைத்து இந்நாளை இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில், வாழை, மா, பலா என முக்கனித் தருக்களை நாட்டி; வண்ண வண்ணக் கோலங்களிட்டு; வரிசை விளக்குகளால் ஒளியுமிழ் இல்லங்கள் புது எழில் காட்டிட; மழலையர், மாணவர், மங்கையர், மகிழ்ச்சியில் தோய்ந்து, புத்தாடை புனைந்து தமிழ்மானம், தன்மானம் போற்றிப் பாடியும் ஆடியும் சமத்துவ உணர்வு பரப்பியும்; தமிழ்ப் புத்தாண்டு இதுவெனத் துள்ளும் மகிழ்ச்சியால் அன்பை அள்ளிப் பொழிவர் எனும் அவ்வகை நிகழ்ச்சிகள் நினைவை விட்டு அகலா வண்ணம் நீக்கமற நிறைந்திடட்டும்! தமிழ்ப் புத்தாண்டு தினத்தைத் தமிழர்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் தாங்கள் வாழும் இடங்களில் எல்லாம் விழாவெடுத்துக் கொண்டாட வேண்டும் எனத் தமிழக அரசின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். இந்த நாளில், சென்னையில் கடந்த இரண்டாண்டுகளாக நடத்தப்பட்டு மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள சங்கமம் நிகழ்ச்சி போன்று, நமது தமிழ்க் கலாச்சாரத்தின் சிறப்புகளையும் பண்பாட்டின் மேன்மையையும் பறைசாற்றும் பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகளை மாநிலமெங்கும் உள்ள மாநகரங்கள், நகரங்கள், கிராமங்கள், பட்டிதொட்டிகள் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் அவரவர் வசதிக்கேற்பக் கொண்டாடி மகிழ அரசு நடவடிக்கைகளில் தமிழ்ப் புத்தாண்டு இடம்பெற ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

### ஆட்சிமொழிச் செயலாக்கம்

மக்கள் தம் எண்ணங்களைத் தடங்கலற்று வெளிப்படுத்தத் தாய்மொழியே தகுந்த மொழியாகும். மக்களின் நலனுக்காக ஆட்சிபுரியும் அரசு நிருவாகம், மக்கள் மொழியில் நடைபெறுவதே முறை என்று ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்டது. அரசு அலுவலகங்களில் தமிழ் மொழி ஆட்சிமொழியாகப் பயன்படுத்தப் படுவதற்குரிய நடவடிக்கைகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டு வருகிறது. இதன் முக்கியப் பணியாகத் தலைமைச் செயலகத் துறைகளிலும், துறைத் தலைமை அலுவலகங்களிலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் மண்டல / மாவட்ட நிலை அலுவலகங்களிலும் ஆய்வுகள் செய்யப்படுகின்றன.

*2007-08* ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கை அறிவிப்பிற்கிணங்க, தலைமைச் செயலகத்தின் 26 துறைகளில் ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிற துறைகளும் தொடர்ந்து ஆய்வுக்குட்படுத்தப்பட்டு வருகின்றன.

[2008 மே 13

தமிழ் மொழி ஆட்சிமொழியாய்த் துறைதோறும் பயன்பட வேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டு, ஆட்சிமொழிச் செயலாக்கப் பயிற்சி வகுப்புகள் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் நடத்தப்படுகின்றன. பல்வேறு துறைகளிலிருந்தும் அலுவலர்கள் அழைக்கப்பட்டு அவர்களுக்கு இரண்டு நாட்கள் ஆட்சிமொழிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், பவானிசாகரில் அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்படும் நிருவாக நடைமுறைப் பயிற்சியின்போதும், பல்வேறு துறைகள் தம் பணியாளர்களுக்கு அளிக்கும்' புத்தாக்கப் பயிற்சியின்போதும் தமிழ் வளர்ச்சித் துறை அலுவலர்கள் சென்று ஆட்சிமொழித் திட்டப் பயிற்சி அளிக்கின்றனர்.

*2007-08* ஆம் ஆண்டில் *5* பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதன் மூலம் *169* பணியாளர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**ஆட்சிமொழிக் கருத்தரங்குகள்**

மாவட்டங்களில் சுழற்சி முறையில் ஆண்டுதோறும் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்தப்பெறுகின்றன. இவ்வகையில் *2007-08* ஆம் ஆண்டில் *8* மாவட்டங்களில் ஆட்சி மொழிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. இக்கருத்தரங்குகளில் ஆட்சிமொழித் திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்படுகிறது. கருத்தரங்கின் ஒரு பகுதியாக அரசுப் பணியாளர்களுக்கு ஆட்சிமொழிப் பயிலரங்கமும் நடத்தப்படுகிறது. தொடர்புடைய மாவட்ட அரசுப் பணியாளர்கள் இப்பயிலரங்கில் கலந்து கொள்கின்றனர். ஆட்சிமொழிச் சட்டம், ஆட்சிமொழி வரலாறு, செயலாக்கம், மொழிபெயர்ப்பு, கலைச்சொல்லாக்கம் பற்றிய பல்வேறு பொருண்மைகள் இக்கருத்தரங்குகளிலும் பயிலரங்குகளிலும் தெளிவுறுத்தப்படுகின்றன.

**ஆட்சிச் சொல்லகராதி**

அரசு அலுவலகங்களின் நடைமுறை அதிக அளவில் தமிழில் அமைவதற்கு ஆட்சிச் சொல்லகராதியின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். அதனால்தான் அரசுப் பணியாளர்கள் எளிதில் பயன்படுத்திட ஏதுவாக ஆங்கிலத்தில் உள்ள ஆட்சிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கொண்ட ஆட்சிச் சொல்லகராதி நூல்கள் இத்துறையால் அச்சிடப்பட்டு அரசு அலுவலகங்களுக்கு வழங்கப்படுகின்றன.



2008 மே 13]

**மொழிபெயர்ப்பு**

அலுவலர்கள், பணியாளர்கள் அலுவலக நடைமுறைகளைத் தமிழில் அமைத்துக்கொள்ள விதிகள், விதித் தொகுப்புகள், நடைமுறை நூல்கள், படிவங்கள், பதிவேடுகள் ஆகியவை இத்துறைவாயிலாகத் தமிழில் மொழிபெயர்ப்பு செய்து வழங்கப்படுகின்றன.

**கேடயம், பரிசு**

தமிழைச் சிறப்பாகப் பயன்படுத்தும் அலுவலகங்களை ஊக்குவிக்கும் நோக்கில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் சிறந்து விளங்கும் துறைத் தலைமை அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகம், ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள மாவட்ட நிலை அலுவலகம் ஆகியவற்றுக்குக் கேடயங்கள் வழங்கப்பெறுகின்றன. தமிழில் சிறந்த குறிப்புகளையும் வரைவுகளையும் எழுதும் பணியாளர்களை ஆண்டுதோறும் தெரிவு செய்து அவர்களுக்குப் பரிசுத் தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெறுகின்றன. மாநில அளவில் தலைமைச் செயலகத் துறைகள், துறைத் தலைமை அலுவலகங்கள் மற்றும் தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகங்களில் உள்ள பணியாளர்களுக்கும் மாவட்ட அளவில் மாவட்ட நிலை அலுவலகங்கள், சார்நிலை அலுவலகங்கள், உள்ளாட்சித் துறையின் சார்நிலை அலுவலகங்கள் மற்றும் தன்னாட்சி நிறுவனச் சார்நிலை அலுவலகங்கள் ஆகிய அலுவலகங்களின் பணியாளர்களுக்கும் ஒவ்வொரு பிரிவிலும் மூன்று பரிசுகள் வழங்கப்படுகின்றன. ரூ.*500*/-, ரூ.*300*/-, ரூ.*200*/- என இருந்த பரிசுத் தொகைகள் *2007-08* ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பிற்கிணங்க, முதற்பரிசு ரூ.*3,000*/-, இரண்டாம் பரிசு ரூ.*2,000*/-, மூன்றாம் பரிசு ரூ.*1,000*/- என உயர்த்தப்பட்டுள்ளது.

**தமிழ் வளர்ச்சி**

மொழியும் சமுதாயமும் ஒன்றையொன்று சார்ந்தவை. மொழியால் சமுதாயமும், சமுதாயத்தால் மொழியும் வாழும்; வளரும். அதனால் சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு மொழியை வளர்த்தெடுக்க வேண்டியிருப்பதைக் கருத்தில் கொண்டு ஆட்சிமொழிச் செயலாக்கப் பணியுடன் தமிழ் வளர்ச்சிக்குரிய சீரிய பணிகளும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2008 மே 13

## செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

நமது இடையறாத முயற்சியால் தமிழ் மொழியின் செம்மொழித் தகுதியை ஏற்று மத்திய அரசு ஆணையிட்டது. இந்திய மொழிகளிலேயே மத்திய அரசால் முதன் முதல் செம்மொழி என அறிந்தேற்கப்பெற்ற சிறப்பினைத் தமிழ் மொழிதான் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இது வரலாற்றுச் சாதனையாகும். செம்மொழித் தொடர்பில் ஐம்பெருங் குழு, எண்பேராயம் ஆகிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதல்வர் ' அவர்களின் தலைமையில் மாண்புமிகு மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. அர்சுன் சிங் அவர்களால் சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 18-8-2007 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்திற்காகக் காஞ்சிபுரம் மாவட்டம் பெரும்பாக்கம் கிராமத்தில் 16.59 ஏக்கர் நிலம் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையில் சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ரூ.76.32 கோடி செலவில் நிறுவிட மத்திய அரசு தீர்மானித்துள்ளது.

## நூல் வெளியீட நிதியுதவி

மொழி வளர்ச்சியில் நூல்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள் தம் படைப்புகள் வாயிலாகத் தமிழ் மொழி வளர்ச்சிக்குத் துணை புரிகின்றனர். தமிழ் மொழியை வளப்படுத்தும் நோக்கிலும், படைப்பாளர்களுக்கு உதவும் நோக்கிலும் புதிய படைப்புகள் வெளிவர நிதியுதவிகள் வழங்கப்படுகின்றன. இவ்வகையில் ஒவ்வொரு நூலிற்கும் அச்சுச் செலவினடிப்படையில் ரூ. 25,000/- வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ.5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## நட்சத்திர உணவு விடுதிகளில் திருக்குறள் நூல்

சமுதாயத்தில் நல்லிணக்கம் நிலவ வழிகாட்டும் உலகப் பொது மறை எனப் போற்றத்தக்க திருக்குறள், அரசு விருந்தினர் இல்லங்கள் மற்றும் தனியார் நட்சத்திர விடுதிகளின் அறைகளில் ஆங்கில மொழியாக்கத்துடன் இடம் பெறும் வகையில் ஒரு இலட்சம் ரூபாய்க்கான நூல்கள் வாங்கப்பட்டு அறைகளில் வைக்கப்பட்டுள்ளன.



2008 மே 13]

## திருவள்ளுவர்/திருக்குறள் குறிப்புக் கையேடு

ஈரடியால் உலகளந்ததும், உலக மொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப்பட்ட சிறப்பிற்குரியதுமாகிய திருக்குறளைப் படைத்தளித்த திருவள்ளுவருக்கு உலகமே போற்றும் வகையில் கன்னியாகுமரி கடற்பகுதியில் 133 அடி உயரச் சிலை 2000 ஆம் ஆண்டில் தமிழக அரசால் நிறுவப்பட்டது. கன்னியாகுமரிக்குச் சுற்றுலா வரும் பயணிகள் இதனைக் கண்டு வியக்கின்றனர். இவர்கள் திருவள்ளுவரைப் பற்றியும், திருக்குறளைப் பற்றியும் அறிந்துகொள்ள ஏதுவாக இவர்களுக்குத் திருவள்ளுவர் பற்றிய விவரங்கள், திருக்குறளின் சிறப்புகள் கொண்ட கையேடும், திருக்குறள் மொழிபெயர்ப்பு நூலும் வழங்குவதற்காக அரசு 2007-08 ஆம் ஆண்டில் ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. ஆங்கிலம், இந்தி, வங்காள மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்பு நூல்கள் வழங்கப்படவும், தமிழ், ஆங்கிலம், இந்தி, வங்காள மொழிகளில் கையேடு வழங்கப்படவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## சிறந்த நூல்களுக்குப் பரிசு

நூலாசிரியர்களின் படைப்பாற்றலைப் பாராட்டி ஊக்குவிக்கும் வகையிலும் தமிழில் துறைதோறும் நூல்கள் வெளிவரவேண்டியதன் இன்றியமையாமையைக் கருதியும் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் வெளிவரும் நூல்கள் 31 வகைப்பாடுகளாகப் பகுக்கப்பட்டு ஒவ்வொரு வகைப்பாட்டிலும் ஒரு சிறந்த நூல் இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு அதனை எழுதிய நூலாசிரியர்க்கு ரூ.10,000/- பரிசும், அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு ரூ.2,000/- பரிசும் வழங்கப்பட்டுவந்தன. 16-1-2008 அன்று நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நூலாசிரியர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை ரூ.20,000/- ஆகவும் பதிப்பகத்தாருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை ரூ.5,000/- ஆகவும் உயர்த்தி வழங்க அறிவித்தார்கள். அவ்வறிவிப்பிற்கிணங்க 16-01-2008 அன்று பரிசு பெற்ற நூலாசிரியர்களுக்கும் பதிப்பகத்தாருக்கும் உயர்த்தப்பட்ட வீதத்தில் 18-01-2008 அன்றே பரிசுகள் வழங்கப்பட்டன.

## அகவை முதிர்ந்த தமிழறிஞர் நிதியுதவி

தமிழுக்குத் தொண்டு செய்தோரை மதித்துப் போற்றுவது தலையாய கடமையாகும். வாழ்நாளைத் தமிழ்ப் பணிக்குத் தந்த

தமிழறிஞர்கள் முதுமைக் காலத்தில் இன்னலுறக் கூடாது எனும் நோக்கில், 58 வயது நிறைந்தும், ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு மேற்படாமலும் உள்ள தமிழறிஞர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுவதும் வழங்கி வருவதோடு அவர்கள் மறைவிற்குப்பின் மரபுரிமையர்க்கும் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. திங்கள்தோறும் ரூ.500/- என வழங்கப்பட்டு வந்த இத்தொகை 1-9-2006 முதல் ரூ.1,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் 12 பேருக்குப் புதிதாக நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**தமிழார்வலர் நிதியுதவி**

தமிழ் மொழியை மற்றும் தமிழ்நாடு எல்லையைப் பேணிக் காத்திட, தொண்டும் தியாகமும் புரிந்தவர்களுக்கு அவர்களின் வாழ்நாள் முழுவதும் நிதியுதவி வழங்குவதோடு, மறைவுக்குப் பின் அவர்தம் மரபுரிமையருக்கும் நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வகையில் தமிழ் மொழியைப் பேணிக்காத்திடத் தொண்டாற்றியவர்களுக்குத் திங்கள்தோறும் ரூ. 3,000/-, மருத்துவப்படி ரூ.15/-, மரபுரிமையர் எனில் திங்கள்தோறும் ரூ. 1,500/-, மருத்துவப்படி ரூ.15/- வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு எல்லையைப் பேணிக் காத்திடத் தொண்டாற்றியவர்களுக்கு வாழ்நாள் முழுதும் திங்கள்தோறும் நிதியுதவியாக ரூ.4,000/- அவர்களின் மறைவிற்குப் பிறகு மரபுரிமையர்களுக்குத் திங்கள்தோறும் ரூ.2,000/- வழங்கப்படுகிறது. நிதியுதவியுடன் மருத்துவப்படி ரூ.15/- வழங்கப்படுகிறது. மேலும், தமிழகம் முழுவதும் அரசுப் பேருந்தில் பயணம் செய்திட இலவச அனுமதியும் வழங்கப்படுகிறது.

**விருதுகள்**

தமிழுக்கு வளமும் வனப்பும் சேர்க்கும் தமிழறிஞர் பெருமக்கள் போற்றிப் பாராட்டப்பட ஆண்டுதோறும் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு அய்யன் திருவள்ளுவர், தமிழ்த் தென்றல் திரு.வி.க., தேசியகவி பாரதியார், புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ., பெயர்களால் விருதுகள் வழங்கப்படுகின்றன. விருது ஒவ்வொன்றிற்கும் ஒரு இலட்சம் ரூபாயும், தங்கப் பதக்கமும், தகுதியுரையும் வழங்கப்படுகின்றன.

2007 ஆம் ஆண்டிற்கான 'திரு.வி.க.விருது' முனைவர் த. பெரியாண்டவன் அவர்களுக்கும், 'பாரதியார் விருது' கவிஞர்



திருமதி சௌந்தரா கைலாசம் அவர்களுக்கும், 'பாரதிதாசன் விருது' திரு. எம்.எஸ். வெங்கடாசலம் அவர்களுக்கும், முத்தமிழ்க் காவலர் 'கி.ஆ.பெ. விருது' கவிவேந்தர் கா. வேழவேந்தன் அவர்களுக்கும், 2008 ஆம் ஆண்டிற்கான 'திருவள்ளுவர் விருது' தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களுக்கும் 16-1-2008 அன்று நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் வழங்கப்பட்டன.

**நினைவில்லம்**

2006-07 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, பரிதிமாற்கலைஞர் அவர்களது இல்லம் சீரமைக்கப்பட்டு அரசு நினைவில்லமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் மதுரையில் 31-10-2007 அன்று திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்கள் வாழ்ந்த உத்தமதானபுரம் இல்லம் நினைவில்லமாக்கப்பட்டுக் கட்டுமானப் பணிகளை முடித்து உ.வே.சா. சிலை அமைத்து 27-4-2008 அன்று திறக்கப்பட்டுள்ளது.

**கல்வி நிறுவனங்களுக்கு நிதியுதவி**

தமிழ்ப் பல்கலைக்கழகமும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் பல்வேறு தமிழ் வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. இப்பணிகளுக்கு உறுதுணைபுரியும் வகையில் இந்நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு அரசு நல்கை வழங்கி வருகிறது. இவ்வகையில் 2007-2008 ஆம் ஆண்டில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு நல்கைத் தொகை ரூ.70.82 இலட்சமும், தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு நல்கைத் தொகை ரூ.381.19 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன. இந்நல்கைத் தொகையன்றி இந்நிறுவனங்கள் மேற்கொள்ளும் வேறு திட்டப் பணிகளுக்கும் தொகை வழங்கப்படுகிறது.

2007-2008 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பில் அறிவிக்கப்பட்டவாறு தமிழ்ப் பேரகராதியைச் சீரமைத்து வெளியிட, சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.10 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**பிற மாநிலங்களில் தமிழ்ப் பணிகளுக்கு நிதியுதவி**

தமிழ்க் கல்வி, ஆராய்ச்சியை ஊக்கப்படுத்தும் நோக்கிலும், தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றைப் பரப்பும் நோக்கிலும் பிற மாநிலங்களில் செயற்படும் நிறுவனங்களுக்கும் நிதியுதவி வழங்கப்பெறுகிறது. இவ்வகையில் திருவனந்தபுரம் பன்னாட்டுத்

[2008 மே 13

திராவிட மொழியியல் பள்ளியின் நிதி இடர்ப்பாட்டினைக் களைந்திட ரூ.10 இலட்சம் நிதியுதவியாக 2007-2008 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

பிற திராவிட மொழிகளுடனான ஒப்பாய்வுத் திட்டப் பணிகளுக்கும், தமிழ் மொழி இலக்கியங்களைப் பிற திராவிட மொழிகளிலும், பிற திராவிட மொழி இலக்கியங்களைத் தமிழ் மொழியிலும் மொழி பெயர்த்திடும் திட்டப் பணிகளுக்குமாகக் குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.10 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழ் முனைவர் பட்ட ஆய்வு மற்றும் முதுநிலை ஆய்வு மேற்கொள்ளும் பிற மொழி மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கிடவும், பிற மாநிலங்களில் தமிழை ஒரு பாடமொழியாகப் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் தமிழில் அதிக மதிப்பெண் பெறுபவர்களுக்குப் பரிசு வழங்கிடவும், குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி, இலக்கியம் கற்கும் மாணவர்களுக்கும், ஆய்வு செய்யும் மாணவர்களுக்கும் உதவித் தொகைகள் வழங்கிடவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**விழாக்கள்**

திருக்குறளால் தமிழுக்குத் தனிப்பெருமை சேர்த்த திருவள்ளுவப் பெருந்தகையை நன்றியோடு நினைத்துப் போற்றும் வகையில் ஒவ்வோராண்டும் தைத் திங்கள் இரண்டாம் நாளன்று திருவள்ளுவர் விழா கொண்டாடப்படுகிறது. நேர்வுக்கேற்பத் தமிழறிஞர்களின் நூற்றாண்டு விழாக்களும் அவ்வப்போது கொண்டாடப்படுகின்றன. ஆண்டுதோறும் பிப்ரவரி 19 ஆம் நாளன்று தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்களின் திருவுருவச் சிலைக்கும் உலக மகளிர் நாளான மார்ச்சு 8 ஆம் நாளன்று ஔவைப் பெருமாட்டியின் திருவுருவச் சிலைக்கும் மலர் தூவிப் போற்றல் நடத்தப்படுகிறது.

**நூல்கள் நாட்டுடைமை**

தமிழறிஞர்களின் உயரிய சிந்தனைகளை அனைவரும் அறிந்து கொள்வதற்குத் துணைபுரியும் வகையில் சிறந்த தமிழறிஞர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கிப் பரிவுத் தொகை



2008 மே 13]

வழங்கப்படுகிறது. 2007-08 ஆம் ஆண்டில் தமிழறிஞர்களான சிங்காரவேலர், மருதகாசி, குன்றக்குடி அடிகளார், கி.ஆ.பெ. விசுவநாதம், கி.வா.ஜகன்னாதன், அவ்வை துரைசாமிப் பிள்ளை, அ.ச. ஞானசம்பந்தனார், திருக்குறளார் முனிசாமி, உவமைக் கவிஞர் சுரதா, சாவி, மாவெண்கோ என்கிற வ.கோ. சண்முகம், தீபம் நா. பார்த்தசாரதி, எஸ்.எஸ். தென்னரசு, சி.பி. சிற்றரசு, ஏ.வி.பி. ஆசைத்தம்பி, டி.கே. சீனிவாசன், இராம. அரங்கண்ணல், கவிஞர் வாணிதாசன், கவிஞர் கருணானந்தம், ஜலகண்டபுரம் ப. கண்ணன் ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டன. இவர்களுள் சான்றாவணம் அளித்த 19 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகையாக ரூ.1.75 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2008-09 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கவிஞர் பெரியசாமித் தூரன், பேராசிரியர் க. வெள்ளைவாரணனார், பண்டிதர் க. அயோத்திதாசர், ஆபிரகாம் பண்டிதர், சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர், டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை, மகாவித்வான் ரா. ராகவையங்கார், உடுமலை நாராயணகவி, கு.மு. அண்ணல் தங்கோ, அவ்வை தி.க. சண்முகம், விந்தன், லா.ச. ராமாமிர்தம், வல்லிக்கண்ணன், நா. வானமாமலை, கவிஞர் புதுவைச் சிவம், அ. இராகவன், தொ.மு.சி. ரகுநாதன், சக்திதாசன் சுப்பிரமணியன், டாக்டர் ந. சஞ்சீவி, முல்லை முத்தையா, கவிஞர் எஸ்.டி.சுந்தரம், கவிஞர் மீரா, பேராசிரியர் ஆ.கார்மேகக் கோனார், புலவர் முகமது நயினார் மரைக்காயர், சு. சமுத்திரம், கோவை இளஞ்சேரன், பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் ஆகிய 27 தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்கள் உருவாக்கிய நூல்களின் எண்ணிக்கை, அவை சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கம், அவற்றின் பெருமை ஆகியவற்றின் அடிப்படையில் அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**நூலாக்கம்**

ஆட்சிமொழிச் செயலாக்கத்திற்கும் தமிழ் வளர்ச்சிக்கும் பயன்தரத்தக்க நூல்கள் இத்துறையால் அவ்வப்போது தயாரித்து வெளியிடப்பட்டு வருகின்றன. குறளமுதம், ஆட்சித் தமிழ், தமிழ் மொழி வரலாறு முதலியவற்றைத் தொடர்ந்து கலைச்சொற் களஞ்சியம், இலக்கியச் சொல்லடைவு முதலிய நூல்களும் தமிழ் நாட்டு வரலாற்று நூல் வரிசையில் எஞ்சியுள்ள நூல் தொகுதிகளும் வெளியிடப்படுவதற்குரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2008 மே 13

**நாட்டுடைமை நூல்களை அச்சிட்டு வெளியிடல் மற்றும் இணையதளத்தில் வெளியிடுதல்**

நாட்டுடைமையாக்கப்பட்ட தமிழறிஞர்களின் நூல்களில் உள்ள விழுமிய கருத்துகளை அனைவரும் அறிந்து பயன்கொள்ள ஏதுவாக, ஆண்டுதோறும் ஒவ்வொருவரின் படைப்புகளிலிருந்தும் ஒரு நூலைத் தெரிவு செய்து அச்சிட்டு வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாட்டுடைமையாக்கப்பட்டுள்ள நூல்களில் 519 நூல்களை இணையதளத்தில் சேர்க்கும் பணி தொடர்பாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாணவர் போட்டிகள்**

இன்றைய இளந்தலைமுறையினருக்குத் தமிழ்ப் பற்றினை வளர்க்கவும் எதிர்காலத் தமிழ் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கவும் ஆண்டுதோறும் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் பள்ளி/ கல்லூரி மாணவ மாணவியரிடையே கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசுகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

**கணியன் பூங்குன்றனார் பரிசு**

அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கம் நல்கும் வகையில் ஆண்டுதோறும் வெளிவரும் தமிழ் மென்பொருள்களுள் சிறந்த மென்பொருள் ஒன்றைத் தெரிவு செய்து அதனை உருவாக்கிய வருக்குக் 'கணியன் பூங்குன்றனார்' பெயரில் பரிசுத் தொகை ரூ. 1,00,000/- வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. அரசு ஆணைக் கேற்பத் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**திருக்குறள் முற்றோதல் பரிசு**

திருக்குறள் நெறி பரவிடவும், இளஞ்சிறார்களின் உள்ளங்களில் வள்ளுவம் விதைக்கப்படவும் திருக்குறள் முற்றோதல் செய்த 24 மாணவ மாணவியர்களின் திறமையைப் பாராட்டி நிதியுதவியாக ஒவ்வொருவருக்கும் ரூ.5,000/- வீதம் மொத்தம் ரூ.1.20 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.



2008 மே 13]

**"தமிழகம் ஊரும் சீரும்" குறுந்தகடுகள் தயாரித்தல்**

சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள ஊர்களின் சிறப்புகளை அறிந்துகொள்ளும் வண்ணம் குறுந்தகடுகள் தயாரித்து வெளியிடும் திட்டத்தின்கீழ், நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள 'பூம்புகார்' முதலிய ஊர்களின் விவரங்கள், சிறப்புகள் கொண்ட குறுந்தகடு தயாரிக்கப்பட்டுள்ளது.

**கணினியுகத்திற்கேற்பத் தமிழ் வளர்ச்சிப் பணிகள்**

அரசு அலுவலகங்களில் தமிழ் ஆட்சிமொழியாகப் பயன்பட உதவும் வகையில் மின் அகராதி, எழுத்துப் பிழைகளைக் களைந்து குறிப்புகளையும் வரைவுகளையும் செம்மையாய் அமைத்திடத் துணை புரியும் வகையில் கிளவியாக்கம், சந்திப் பிழை, தொடர் அமைப்புப் பிழை போன்றவற்றையும் கணினிவாயிலாகத் திருத்திக் கொள்ளக்கூடிய தமிழ் மொழித் திறம் (Grammar Check) போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சங்க இலக்கிய மொழிபெயர்ப்பு**

தமிழ் மொழி செம்மொழி என மத்திய அரசால் அறிந்தேற்கப்பட்டுள்ள நிலையில், சங்க இலக்கியச் சிறப்புகளைப் பிற மாநிலத்தவர்கள் அறிந்து கொள்ளத் துணைபுரியும் வகையில் அவற்றை இந்தியில் மொழிபெயர்க்கும் பணி நடைபெற்று வருகிறது. அச்சுப்பணியும் நடைபெற்று வருகிறது.

**எழுத்தாளர் நலம் காத்தல்**

இன்றைய தமிழை நாளைக்கு எடுத்துச் செல்லும் எழுத்தாளர்களின் நலன் பாதுகாக்கப்பட வேண்டியதைக் கருத்திற்கொண்டு எழுத்தாளர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்படி பயன்பெறத்தக்க எழுத்தாளர் ஒவ்வொருவரும் ரூ.1.00 இலட்சம் வரை மருத்துவ வசதி பெற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2007-2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப் பட்டவாறு வசதி குறைந்த நிலையில் வாழ்ந்து வரும் தமிழ் எழுத்தாளர்களுக்கும், தமிழ் ஆர்வலர்களுக்கும் பரிவுத் தொகை வழங்கும் திட்டம் தொடர்பாகவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2008 மே 13

### தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கும் சார்நிலை அலுவலகங்களுக்கும் வசதிகள்

தமிழ் வளர்ச்சித் துறையின் அனைத்து மண்டல/மாவட்ட நிலை அலுவலகங்களுக்கும் 2007-2008 ஆம் நிதியாண்டில் இணைய தள வசதி மற்றும் அகன்ற அலைவரிசை வசதி செய்து தரப்பட்டுள்ளது.

ஆட்சிமொழிச் செயலாக்க ஆய்வுப் பணி தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களில் விரைவாகவும் பரவலாகவும் நடைபெற வேண்டியதைக் கருத்திற்கொண்டு, தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநர், துணை இயக்குநர்கள், மாவட்ட உதவி இயக்குநர்கள் ஆகியோருக்கு முதற்கட்டமாக 13 ஊர்திகள் ரூ.57.00 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட கிருட்டிணகிரி மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்திற்குக் கணினி மற்றும் தொலைபேசி வசதி செய்து தரப்பட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கு 2007-2008 ஆம் ஆண்டில் நிகரி ஒன்றும் அஞ்சல்வில்லை அச்சு முத்திரைப் பொறி ஒன்றும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இயக்ககத்தின் பிரிவுகளுக்கு 4 கணினிகள் ரூ.1.80 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன. இயக்ககப் பயன்பாட்டிற்காக அறைகலன்கள் வழங்கிட ரூ.5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சி இயக்ககம் செயற்படும் தமிழ் வளர்ச்சி வளாகப் பாதுகாப்பிற்கென இரவுக் காவலர் பணியிடம் ஒன்று 2007-08 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

### உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

உலகளாவிய நிலையில் தமிழாய்வை மேம்படுத்துவது; தமிழ் மூதறிஞரின் துணையுடன் செம்மொழித் தமிழின் தனித்திறனை, மேன்மையைத் தகுந்த சான்றுகளுடன் வெளிப்படுத்துவது; தமிழறிஞர், தமிழார்வலரின் உயரிய தமிழ்த் தொண்டிற்கு உரியவாறு உதவுவது; தமிழாய்வாளருக்கு உறுதுணையாய் நிற்பது எனும் வகையில் பணி ஆற்றிக் கொண்டிருக்கிறது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். இது 1970 ஆம் ஆண்டில் தமிழக அரசால் சங்கங்களின் பதிவுச் சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பெற்றது. தமிழ்நாடு அரசின் முழுமையான



2008 மே 13]

அரவணைப்பில் அதன் நிதியுதவியில் தன்னாட்சிச் சிறப்புடன் செயற்பட்டு வருகிறது.

2007-2008 ஆம் ஆண்டு இந்நிறுவனத்திற்கு ரூ.70.92 இலட்சம் வாலாய நல்கையாக வழங்கப்பட்டுள்ளது. ஓய்வூதியப் பணப் பயன்களுக்காக ரூ.19.92 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியம் மற்றும் சுவடிப் புலம்; தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலம்; சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப் புலம்; அயல்நாட்டுத் தமிழர் புலம் என நான்கு புலங்கள் நிறுவனத்தில் தமிழாய்வில் ஈடுபட்டுள்ளன.

தமிழ் உயராய்வு நிறுவனமாகத் திகழும் இதில் தமிழியல் தொடர்பான பல துறைகளிலும் கல்விசார் அலுவலர்கள் திட்டப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். இலக்கியவியல், இலக்கணவியல், மொழியியல், சமூகவியல், பண்பாட்டியல், நாட்டுப்புறவியல், மொழிபெயர்ப்பியல் என அவை அமைகின்றன.

அயல் நாட்டவர்க்கு, அயல்மொழியினருக்குத் தமிழ் மொழி கற்பித்தல், சென்னைப் பல்கலைக்கழக இணைவுடன் முனைவர் பட்ட ஆய்வாளர்களை நெறிப்படுத்துதல்; தமிழ்ப் பல்கலைக்கழக இணைவுடன் முதுகலைத் தமிழியல் மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்ட மாணாக்கரை உருவாக்குதல் எனக் கற்பித்தல் வழித் தமிழ் பரப்பும், போற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பல்கலைக்கழக நல்கைக் குழுவின் உதவியுடன் ஆய்வுத் திட்டங்கள் மேற்கொள்ளுதல்; வாரக் கருத்தரங்குகள், தேசியக் கருத்தரங்குகள், சிறப்புக் கருத்தரங்குகள், பயிலரங்குகள் முதலான ஆய்வு அரங்குகள் வழித் தமிழாய்வினை வளர்த்தல்; நிறைவடைந்த திட்டப் பணிகள் மற்றும் ஆய்வு நூல்களை வெளியிடல்; இன்றியமையாத மறுபதிப்புகளை வெளிக்கொணர்தல்; உலகளாவிய தமிழாய்வாளரிடையே இணைப்புப் பாலமாக அமையும் இருமொழியிலான தமிழியல் ஆய்விதழைத் தடையின்றி வெளியிடல் என இதன் தமிழ்ப்பணி அமைகிறது. இதுவரை 71 தமிழியல் ஆய்விதழ்கள் வெளிவந்துள்ளன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ஆய்வு வெளியீடுகள் தமிழாய்விற்குத் தரவுகளாக அமைவதோடு தளம் அமைத்துக் கொடுப்பதாகவும் விளங்குகின்றன.

தமிழ் வளர்த்த சான்றோர், அரசியலார், புரவலர் ஆகியோர் பெயர்களில் முப்பத்தொரு அறக்கட்டளைகள் நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ளன. தமிழ் ஆய்வுப் பணிக்குத் தகுந்த வாய்ப்பாக

[2008 மே 13

இவ்வறக்கட்டளைப் பொழிவுகள் அமைகின்றன. பொழிவன்றே அதன் வரிவடிவமான நூலாக்கம் வெளியிடப் பெறுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் 3 அறக்கட்டளைப் பொழிவுகள் நிகழ்ந்துள்ளன. ஏறக்குறையப் பத்துப் பொழிவுகள் விரைவில் நிகழவுள்ளன.

இந்நிறுவனம் இதுவரையிலும் 589 நூல்களை வெளியிட்டுள்ளது. இவை இங்குள்ள கல்விசார் அலுவலர்களின் திட்டப் பணிகள், நிறுவனக் கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்புகள், அறக்கட்டளைப் பொழிவுகள், சுவடிப் பதிப்புகள், மொழிபெயர்ப்புகள், அரிய நூல் மறுபதிப்புகள், பிற தமிழறிஞர்களின் படைப்புகள் ஆகியனவாக அமைகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் மட்டும் 22 நூல்களை இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. அகரமுதலி இயக்ககத்திற்காக 'ம' மற்றும் 'ய' வரிசையில் ஆறு பகுதிகள் அச்சிட்டு வழங்கும் பணி மற்றும் அகரமுதலி வரலாறு என மொத்தம் ஏழு தொகுதிகள் முடிவுற்றுள்ளன.

நூலாக்கப் பணி நிறைவுற்றுக் கட்டமைப்பில் உள்ள எட்டு நூல்கள் மிக விரைவில் வெளிவர உள்ளன. அச்சுப்பணியில் உள்ள பிற இருபத்திரண்டு நூல்களும், அச்சிற்கு அணியமாக ஏறக்குறையப் பதினைந்து நூல்களும் உள்ளன. அவையும் விரைவில் வெளிவந்து நிறுவனத்திற்குப் பெருமை சேர்க்க உள்ளன.

நிறுவனக் கல்விப் பணியாளர், ஆய்வாளர், முதுகலை மாணாக்கர் மட்டுமன்றித் தமிழாய்வாளர் அனைவரும் பயன்படுத்தும் வகையில் நிறுவன நூலகம் செயல்பட்டு வருகிறது. அரிய நூல்கள், அண்மை வெளியீடுகள் என அனைத்தும் இணைந்த நிலையில் தற்போது 87,148 நூல்கள் உள்ளன. ஆய்வு வளர்ச்சிக்கும், ஆய்வாளருக்கும் தேவையான நூல்கள் உடனுக்குடன் வாங்கப்படுகின்றன. பிறர் அளிக்கும் நூல்களும் நன்கொடைகளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

இந்நிறுவனத்தில் தமிழ்நாடு அரசு அனுமதியுடன் கீழ்க்கண்ட வகுப்புகள் தொடங்கப் பெற்றுள்ளன:

1. தமிழ் ஆய்வியல் நிறைஞர்
2. தமிழ் முதுகலை (இலக்கியம்)
3. தமிழ் முதுகலை (பயன்பாட்டுத் தமிழ்)



2008 மே 13]

## தமிழ்ப் பல்கலைக்கழகம்

## தஞ்சாவூர்

### நோக்கம்

தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் எனும் உயரிய நோக்கத்துடன் தமிழ்ப் பல்கலைக்கழகம் 1981 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

தமிழ் மொழிக்கென அமைக்கப் பெற்ற இப்பல்கலைக்கழகம் 26 ஆண்டுகளைக் கடந்து தனது 27-வது ஆண்டில் தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழ்ப் பண்பாடு, தமிழ்க் கலைகள் வளர்ச்சி எனப் பன்முகப்பொலிவோடு வளர்ந்து வருகின்றது.

தமிழ்ப் பல்கலைக்கழகம் கலைப் புலம், சுவடிப் புலம், வளர்தமிழ்ப் புலம், மொழிப் புலம், அறிவியல் புலம் என 5 புலங்களாக 25 துறைகளை உள்ளடக்கித் தமிழ் வளர்ச்சிப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. இவற்றுடன் அச்சகம், பதிப்புத் துறை, நூலகம், தூய தமிழ்ச் சொல்லாக்க அகர முதலிகள் திட்டம், அருங்காட்சியகம், கலைக் களஞ்சியத் திட்டம், பெருஞ்சொல்லகராதித் திட்டம் போன்றவற்றை இப்பல்கலைக்கழகம் தன்னகத்தே கொண்டுள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 2007-2008 ஆம் ஆண்டு ஆற்றப்பட்ட பணிகளும் மற்றும் 2008-2009 ஆம் ஆண்டில் ஆற்றப்பட வேண்டிய பணிகளும் ஈண்டுத் தொகுத்தளிக்கப்படுகின்றன.

### கல்விப் பணி

2007-2008 ஆம் கல்வி ஆண்டு முதல் கல்வியியல் மற்றும் மேலாண்மையியல், சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் எனும் 2 புதிய துறைகள் செயல்படத் தொடங்கியுள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம், ஆய்வியல் நிறைஞர் பட்டம், முதுகலை மற்றும் முதுநிலை அறிவியல் பட்டம், யோகா, நடிப்புக்கலை மற்றும் இசை தொடர்பான பெருஞ்சான்றிதழ் மற்றும் சான்றிதழ் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இதன்

வழி 2007-2008-ல் 592 மாணவர்கள் பயின்று வருகின்றனர். 3-3-2006 அன்று நடைபெற்ற நான்காம் பொதுப் பட்டமளிப்பு விழாவிற்குப் பின்னர் முனைவர் பட்டம், ஆய்வியல் நிறைஞர், முதுகலைப் பட்டம் ஆகியவற்றில் 629 மாணவர்கள் தேர்ச்சி பெற்று வரவிருக்கும் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறவுள்ளனர். 5-11-2007 அன்று நடைபெற்ற பட்டயமளிப்பு விழாவில் 158 மாணவர்கள் பட்டயம் பெற்றனர். 2007-2008-ல் கல்வியியல் துறை வழியாக இளங்கலை கல்வியியல் பட்டப் படிப்பு தொடங்கப்பெற்று 100 மாணவர்கள் படித்து வருகின்றனர்.

2006-2007 ஆம் கல்வி ஆண்டு முதல் தொலைநிலைக் கல்வி இயக்ககம் தொடங்கப்பெற்றுத் தமிழ், வரலாறு, வணிகவியல் போன்ற பாடப் பிரிவுகளுக்கு இளங்கலை, முதுகலைப் பட்டப் படிப்புகள் நடைபெற்று வருகின்றன. தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின்கீழ் தமிழகத்தின் பல்வேறு நகரங்களிலும், வட்டங்களிலும் 122 மையங்கள் செயற்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் கல்வியாண்டில் கூடுதலாக இவ்வியக்ககத்தின்கீழ் இளங்கலைப் பாடப் பிரிவில் தமிழிசை, புவியியல் பாடங்களும், முதுகலைப் பட்ட வகுப்பில் தமிழிசை, புவியியல், யோகாவும் மனித மாண்பும், பட்டயத்தில் இசை ஆசிரியர் பயிற்சி போன்ற பாடப் பிரிவுகள் சேர்க்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மேலும் தொழில்முறைப் படிப்புகளுக்கான எம்.பி.ஏ., எம்.சி.ஏ., பி.பி.ஏ., பி.சி.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. போன்ற பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. 2007-2008-ல் தொலைநிலைக் கல்வி வழி 4,328 மாணவர்கள் பயின்று வருகின்றனர். 2008-2009-ல் இவ்வெண்ணிக்கை இன்னும் கூடுதலாக அதிகரிக்க வாய்ப்புள்ளது.

தொலைநிலைக் கல்விவழி இளங்கலைக் கல்வியியல் பட்டப் படிப்பு 2008-2009 ஆம் கல்வி ஆண்டு முதல் தொடங்கப்பட உள்ளது. புது தில்லி தொலைநிலைக் கல்விக் குழுமத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. பெங்களூர் தேசிய ஆசிரியக் கல்விக் குழுமத்தின் அனுமதி தற்போது பெறப்பட்டுள்ளது. 500 மாணவர்கள் சேர்க்கப்படவுள்ளனர்.

2007-2008-ல் பல்கலைக்கழகத்தில் பயின்று வரும் 749 மாணவர்களுக்குப் பின்வருமாறு கல்வி உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.



| வ. எண். | துறை | மாணவர்களின் எண்ணிக்கை | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | ஆதி திராவிடர் நலத் துறை | 499 | 32.76 |
| 2. | பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை | 225 | 12.63 |
| 3. | ஏ.டி.பன்னீர்செல்வம் மற்றும் பாரதியார் அறக்கட்டளை | 314 | 2.49 |
| 4. | இராஜிவ் காந்தி கல்வி உதவித் தொகை (மைய அரசு) | 25 | 45.00 |
| 5. | சிறப்புக் கல்வி உதவித் தொகை ஆதி திராவிடர் நலத் துறை | 186 | 13.02 |
| | கூடுதல் | | 105.90 |

### ஆய்வுப் பணிகள்

பல்கலைக்கழக ஆசிரியர்கள் பல்கலைக்கழக மானியக் குழு நிதி உதவியுடன் பல்வேறு ஆய்வுத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். தமிழக அரசின் நிதி நல்கையுடன் கலைச்சொற் களஞ்சியத் திட்டம் ரூ.70.00 இலட்சம் நல்கை ஒதுக்கீட்டுடன் நடைபெற்று வருகின்றது. களஞ்சியத் திட்டம் தொடர்பாக வல்லுநர் குழுக் கூட்டங்கள் நடத்தப்பெற்று வருகின்றன. 2007-2008-ல் 30 அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இக்கல்வியாண்டில் அகராதியியல் துறையில் பல்கலைக்கழக மானியக் குழு நிதி உதவியுடன் பல்கலைக்கழகக் கல்லூரி ஆசிரியர்களுக்கான புத்தொளிப் பயிற்சி வகுப்பு அளிக்கப்பெற்றது. இவை தவிரப் பிற நிதி வழங்கும் முகமையுடன் இணைந்து கல்வியாளர்கள் பயிலரங்குகள் மற்றும் கருத்தரங்குகள் ஆகியவற்றைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

### விரிவாக்கப் பணிகள்

தகுதிகாண் பருவ இந்தியக் காவல் பணி அலுவலர்கள் மற்றும் இந்திய வனப் பணி அலுவலர்களுக்கான தமிழ் மொழி கற்பித்தல் போன்ற பயிற்சி வகுப்புகள் தொடர்ந்து இவ்வாண்டிலும் நடைபெற்று வருகின்றன. 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் பல்கலைக்கழக நிதி

[2008 மே 13

நல்கைக் குழு ரூ.22.50 இலட்சம் அளித்துள்ளது. 11-வது ஐந்தாண்டுத் திட்ட வளர்ச்சி நல்கையாக ரூ.42.36 இலட்சமும், கணிப்பொறி அறிவியல் மேம்பாட்டு நிதிக்காக ரூ.14.40 இலட்சமும் வழங்கியுள்ளது. மகளிர்/ஆடவர் விடுதி கட்டுவதற்காக நடுவண் அரசு ரூ.73.35 இலட்சம் வீதம் ரூ.146.70 இலட்சம் வழங்கியுள்ளது. தமிழக அரசும் தனது பங்களிப்பாக மேற்கண்ட விடுதிகள் கட்டுவதற்கு ரூ.146.70 இலட்சம் வழங்கியுள்ளது. கட்டுமானப் பணிகள் பொதுப் பணித் துறை மூலம் நடைபெற்று வருகின்றன. 2008-2009-ல் இக்கட்டடங்கள் கட்டி முடிக்கப்பெறும்.

2007-2008-ல் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத் துறையால் 28 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. 2008-2009-ல் 35 நூல்கள் வெளியிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஆங்காங்கே நடத்தப்பெறும் நூல் கண்காட்சிகளில் பல்கலைக்கழக வெளியீடுகள் காட்சிக்கு வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இவ்வகையில் 2007-2008-ல் நூல்கள் விற்பனைமூலம் ரூ.23.56 இலட்சம் பெறப்பட்டுள்ளது. தமிழக அரசு, அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் பல்கலைக்கழகத்தின் அறிவியல் களஞ்சிய நூலினை ரூ.27.20 இலட்சத்திற்கு வாங்கியுள்ளது. மேலும் அரசிடமிருந்து ரூ.3 கோடி மதிப்புள்ள அறிவியல் களஞ்சிய நூல்களுக்கான ஆணை பெறப்பட்டுள்ளது.

இந்திய நடுவண் அரசு, நிதி நல்கைக் குழு, தமிழக அரசு மற்றும் பிற நல்கை நிறுவனங்களின் பேருதவியுடன் சிறப்பாக இயங்கி வரும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்குப் பெரும் துணையாகச் செயலாற்றி வரும் கல்வி நிலை மற்றும் அலுவல்நிலைப் பணியாளர்களின் பங்கும் பணியும் இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

**செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்**

ஒரு மொழியில் வெளிவந்துள்ள அகரமுதலிகளின் எண்ணிக்கை அடிப்படையில் அம்மொழியின் தொன்மையும், வளமையும் பொதுவாக மதிப்பிடப் பெறுகிறது. முதுபெரும் மொழியான தமிழில் சொற்பிறப்பியல் பேரகரமுதலியை 12 மடலங்களில் 31 பகுதிகளாகத் தொகுத்து வெளியிடும் நோக்கில், "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்" என்னும் இத்துறை, 1974 ஆம் ஆண்டில் அரசால் உருவாக்கப்பட்டது.



2008 மே 13]

இருமொழிப் பேரகரமுதலியான இந்நூல், பொதுவகைப் பயன்பாட்டு அகராதியாக மட்டுமல்லாது, மொழியியல் மற்றும் திராவிட மொழிகள் ஆராய்ச்சியாளருக்குப் பெரிதும் பயன் தரும் ஒரு சிறந்த கருவி நூலாகத் திகழ்வது தனிச் சிறப்பிற்குரியதாகும். தவிரவும், இந்திய மொழிகளில் இதுவரை வெளிவந்துள்ள சொற்பிறப்பு அகரமுதலிகளில் இதுவே மிகவும் விரிவானதும், செறிவானதும் ஆகும். அனைத்துச் சொற்களுக்கும் எழுத்துப் பெயர்ப்பு கொடுக்கப்படுவதுடன், இலக்கணக் குறிப்பு, தமிழ் மற்றும் ஆங்கிலப் பொருள்கள், காலந்தோறும் மாறிவந்த பொருள்கள், திராவிட மொழிகளில் சென்றுள்ள ஒலி வடிவங்கள், பழமொழிகள், பல்வேறு சொல் வழக்குகள் மற்றும் தேவையான இடங்களில் பட விளக்கங்கள் ஆகியனவும் கொடுக்கப்பட்டு ஒரு முழுமையான சொற்பிறப்பியல் பேரகரமுதலியாகத் தொகுத்து வெளியிடப்பெறுகிறது.

திட்டமிடப் பெற்ற மொத்தம் 31 பகுதிகளில், இதுவரையில் உயிரெழுத்துகள் வரிசையில் "அ" முதல் "ஔ" வரை 3 பகுதிகள், உயிர்மெய்யெழுத்துகள் வரிசையில் "க" முதல் "வெள" வரை, 21 பகுதிகள் மற்றும் தமிழ் அகரமுதலி வரலாறு ஒரு பகுதி என மொத்தம் 25 பகுதிகள் தொகுத்து முடித்து வெளியிடப்பட்டு விட்டன. இவற்றுள் கடைசி 7 பகுதிகள் கடந்த 16-1-2008 ஆம் நாளன்று நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பெற்றன. இத்துடன் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி தொகுத்து வெளியிடும் திட்டத்தின் தலையாய நோக்கம் எய்தப்பெற்றுவிட்டது. எனினும், திட்டத்தின் பகுதியான அயற்சொல் மடலம் - 3 பகுதிகள், இணைப்பு மடலம் - 2 பகுதிகள் மற்றும் சொற்பிறப்பியல் நெறிமுறைகள் ஒரு பகுதி என மொத்தம் 6 பகுதிகள் தொகுத்து வெளியிடப்பெற உள்ளன. இவற்றுள் முதற்கட்டமாக அயற்சொல் மடலம் 2 பகுதிகளை அச்சுக்கு அணியமாக்கும் பணி நடைபெற்று வருகிறது. 2008-2009 ஆம் நிதியாண்டில் அயற்சொல் மடலம் 3 பகுதியுடன் இணைப்பு மடலம் 2 பகுதிகள் மற்றும் சொற்பிறப்பு நெறிமுறைகள் 1 பகுதி ஆகிய எஞ்சிய நான்கு பகுதிகளைத் தொகுத்து முடித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

[2008 மே 13

## அறிவியல் தமிழ் மன்றம்

தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அரசு நிலையாணை எண் 270, நாள் 14-09-2006-ன்படி அறிவியல் தமிழ் மன்றம் எனும் அமைப்பு தொடங்கப்பட்டது.

இயல், இசை, நாடகம் என வளர்ந்து வளம் பெற்ற தமிழ், இன்றைய அறிவியல் வளர்ச்சிப் போக்கையும் தேவையையும் கருதி அறிவியல் தமிழாகவும் மணம் வீசத் தொடங்கியுள்ளது. அறிவியல் துறையிலும், தொழில்நுட்பத் துறையிலும் உறுதியாகக் கால் பதித்தால்தான், வளர்ந்துவரும் எதிர்காலத் தேவைகளை நிறைவு செய்திட முடியும். அறிவியல் தமிழை வளர்த்திடும் முயற்சிகள் பலரால் பல நிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதை ஒருங்கிணைக்கக் கருதியும், திட்டமிட்ட வளர்ச்சிக்கு வழிகாண வேண்டும் என்ற அடிப்படையிலும் அறிவியல் தமிழ் மன்றம் தோற்றுவிக்கப்பட்டது.

### 2007–2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

அறிவியல் தமிழ் தேசியக் கருத்தரங்கம் ஒன்றினை, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து தஞ்சாவூரில் அறிவியல் தமிழ்மன்றம் 2008 பிப்ரவரி 4-5 ஆகிய நாட்களில் மிகச் சிறப்பாக நடத்தியது. மூன்று அமர்வுகளில் இருநூற்றுக்கும் மேற்பட்ட அறிவியல் தமிழ் அறிஞர்கள் பேராளர்களாகக் கலந்து கொண்டு தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினர். கருத்தரங்க ஆய்வுச் சுருக்க மலர், முதல் நாளன்று வெளியிடப்பெற்றது.

அறிவியல் தமிழ் மாத இதழ் ஒன்றினை வெளிக்கொணர வகை செய்யப்பட்டது. இதழின் பெயர் "அறிவியல் தமிழ்" எனப் பதிவு செய்யப்பட்டு ஆணைகள் பெறப்பட்டுள்ளன. இதழ் வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2008–2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் பணிகள்

**அறிவியல் தமிழ்க் கண்காட்சி:** பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அறிவியல் தமிழ் தொடர்பான கண்காட்சி, பல்வேறு அறிவியல் கண்டுபிடிப்புகள், அறிவியல் சாதனங்கள், செய்முறைகள் ஆகியவற்றின் தமிழ் விளக்கங்களுடன் நடத்தப்படவுள்ளது.

அமர்வுக் கட்டண அடிப்படையில் அறிவியல் தமிழறிஞர்களை நியமித்துக் கலைச் சொல்லாக்கம், கலைச் சொல் வங்கி, சிறுவர் அறிவியல் கலைக் களஞ்சியம் ஆகியவற்றைத் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.



2008 மே 13]

## மொழிபெயர்ப்புப் பிரிவு

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறையின் பல பிரிவுகளில் ஒன்றான மொழிபெயர்ப்புப் பிரிவு, அரசின் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் சீரிய பணியாற்றி வருகிறது. இப்பிரிவில் வழக்கமாக தமிழ்நாடு அரசிதழ்களிலும், அனைத்து மாவட்ட அரசிதழ்களிலும் வெளியிடப்படும் அரசு அறிவிக்கைகள், சுற்றோட்டக் குறிப்புகள், சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படும் துறை வாரியான கொள்கை விளக்கக் குறிப்புகள், அரசுப் பொது நிறுவனங்கள் மற்றும் பொதுக் கணக்குக் குழுக்களின் அறிக்கைகள், காவல் துறை மற்றும் சிறைத் துறையின் சிறப்புப் பதக்கங்களுக்கான தகுதியுரைகள், விழிப்புப்பணி ஆணையத்தின் ஆண்டறிக்கை, "காஃபிபோசா சட்டத்தின்"கீழ் பிறப்பிக்கப்படும் தடுப்புக்காவல் ஆணைகள், அமைச்சரவைக் குறிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் உரைகள், அமைச்சர் பெருமக்களுக்குத் தேவைப்படும் குறிப்புகள், பத்திரிகைச் செய்திகள் முதலியவற்றுக்குத் தமிழாக்கம் அளிக்கப்படுகிறது. மேற்சொன்ன வாலாயமான பணிகளோடு, இந்த ஆண்டில் பொதுத் (தேர்தல்) துறை வெளியிட்ட கையேடுகள், மின்னணு இயந்திரம் மூலமான வாக்குப் பதிவு குறித்த வழிகாட்டி நூல், மகளிருக்கான உரிமைகளை விளக்கும் புத்தகம், குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு அறிக்கைகள், நதிநீர் இணைப்பு குறித்த சிற்றேடு, மனித உரிமைகள் ஆணைய அறிக்கைகள் ஆகியவை மொழிபெயர்க்கப்பட்டன.

மேலும், மத்திய அரசிடமிருந்து இந்தி மொழியில் வரப்பெறுகின்ற கடிதங்கள் முதலானவற்றிற்கும் மொழிபெயர்ப்புப் பிரிவானது ஆங்கில மொழியாக்கம் அளிக்கிறது.

இவை தவிர, ஒவ்வோராண்டும் நிதித் துறைக்கு உதவி இயக்குநர் ஒருவர் தலைமையில் பிரிவு அலுவலர் ஒருவர், உதவிப் பிரிவு அலுவலர்கள் மூவர் அடங்கிய மொழி பெயர்ப்புக் குழு ஒன்று முகமையில் அனுப்பப்படுகிறது. இக்குழு ஆளுநர் உரை, வரவு-செலவுத் திட்ட உரை, வரவு-செலவுத் திட்டம் தொடர்பான ஆவணங்கள் மற்றும் துணை மானியக் கோரிக்கைகள் ஆகியவற்றின் மொழி பெயர்ப்புப் பணியை மேற்கொள்கிறது. தவிரவும், ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத் தொடரின்போதும் உதவிப் பிரிவு அலுவலர் ஒருவர் சட்டமன்றப் பேரவைச் செயலகத்திற்கு அனுப்பப்பட்டு, அவர் சட்டமன்றக் கூட்டம் தொடர்பான மொழியாக்கப் பணிகளை

மேற்கொள்கிறார். அதுபோலவே, மாவட்ட ஆட்சியர், காவல் துறை அதிகாரிகளின் மாநாடு நடைபெறும்போது, அது தொடர்பான மொழியாக்கப் பணிகளை மேற்கொள்வதற்காக இப்பிரிவிலிருந்து ஒரு குழு பொதுத் (மரபு) துறைக்கு அனுப்பப்படுகிறது.

ஓய்வுபெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் திரு ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையிலான நிருவாகச் சீர்திருத்தக் குழு அளித்த முதல் அறிக்கை, குறைந்த பணியாளர்களைக் கொண்டு குறுகிய கால அளவில் மொழிபெயர்க்கப்பட்டது.

**இணைப்பு**

**2008–2009 ஆம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு**

**தமிழ் வளர்ச்சி**

| | (நிகரச் செலவு ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| | 2007–08 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 2007–08 திருத்த மதிப்பீடு | 2008–09 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
| 2059 பொதுப் பணிகள் | 9,35 | 9,35 | 9.00 |
| 2202 பொதுக் கல்வி | 19,90,89 | 22,58,26 | 20,30,99 |
| 2251 தலைமைச் செயலக சமூகப் பணிகள் | 4,58,19 | 5,38,26 | 4,36,83 |
| 4202 கல்வி, போட்டி விளையாட்டு, கலை—பண்பாடு குறித்த மூலதனச் செலவு | .. | .. | .. |
| 4220 செய்தி—விளம்பரம் குறித்த மூலதனச் செலவு | .. | .. | .. |
| மொத்தம் | .. | .. | 24,76,82 |





## இணைப்பு-IV

*(205 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 49—

## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

### முன்னுரை

மனிதவள மேம்பாட்டின் முக்கிய அங்கமாகத் திகழும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, இளைஞர்களிடையே சுகாதாரம், தோழமை, நட்புடன் கூடிய போட்டி மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்து, அவர்களது ஆளுமைத் திறனை மேம்படுத்த தெளிவான தாக்கத்தை உண்டாக்கும். அனைத்துத் தரப்பு இளைஞர்களிடையே நல்ல குடிமகனாக விளங்குவதற்கான தகுதிகள், சமுதாய பணிக்காக தங்களை அர்ப்பணித்தல் போன்ற பண்புகளை வளர்ப்பதே இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் குறிக்கோளாகும். தனிநபர் பண்புகளை வளர்த்தல் மற்றும் வளர்ச்சித் திட்டங்களின் குறிக்கோளுக்காக பொறுப்பேற்கும் எண்ணத்தை உருவாக்குதல் ஆகியவற்றிற்காக இளைஞர்களிடையே தொண்டு செய்யும் மனப்பான்மையை நிலைநிறுத்த மற்றும் வலுவூட்டுவதை இத்துறை வலியுறுத்துகிறது. விளையாட்டு மற்றும் போட்டிகள், தேசிய மாணவர் படை மற்றும் நாட்டு நலப் பணித் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகள் இளைஞர்களிடையே அடிப்படைப் பண்புகளை வளர்த்து அவர்களைப் பொறுப்புமிக்க குடிமகன்களாக மலரச் செய்கின்றன. நமது மாநிலம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளில் பெற்றிருக்கும் பெரும் உறுதியான உள்ளாற்றல் மற்றும் போட்டி மனப்பான்மைகளைக் கண்டறிந்து, தீவிரமாக வளர்க்க முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளிலுள்ள இளைஞர்களின் திறமைகளைக் கண்டறிய முயற்சித்து, அதன்மூலம் அவர்களின் திறமையை மேம்படுத்த சந்தர்ப்பம் அளிப்பதற்கும், போட்டியில் சிறந்து விளங்கும் நாட்டத்தினை மேம்படுத்துவதற்கும் தொடர்ந்து கவனம் செலுத்தப்படும்.

நாட்டு நலப் பணித் திட்டத்தில் இந்திய நாட்டிலேயே அதிகமான தொண்டர்களைக் கொண்டிருப்பது நமது மாநிலமே (3,37,537 நபர்கள்).

(NCC) தேசிய மாணவர் படையிலும் நமது மாநிலம் 2 ஆம் இடம் வகிக்கிறது.

விளையாட்டுகளில் இரண்டு உலக சாம்பியன்களை தமிழகம் உருவாக்கி உள்ளது (இளவழகி-கேரம்; விசுவநாதன் ஆனந்த் - சதுரங்கம்).

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கான 2008–2009 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு**

2008-2009-ம் ஆண்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கான மானியக் கோரிக்கை எண் 49-ன்கீழ் நிதி ஒதுக்கீடு ரூ.50.06 கோடி ஆகும். இதில் ரூ.13.81 கோடி திட்டப் பணிகளுக்கானதாகும்.

**படலம்–1**

**1.1 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்**

இளைஞர்களின் விளையாட்டு ஆர்வத்தினை ஒருமுகப்படுத்தும் நோக்கத்துடன் தமிழக அரசு, அரசாணை எண் 641, கல்வி (ஒய்1) துறை, நாள் 18-7-92-ல், அதற்கு முன்பு இயங்கி வந்த இளைஞர் மற்றும் விளையாட்டு பயிற்சித் துறை மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து "தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்" என்ற அமைப்பினை உருவாக்கியது. இவ்வமைப்பு இந்திய விளையாட்டுக் குழும அமைப்பிற்கு ஒப்பானதாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் இவ்வாணையத்தின் தலைவர் ஆவார். தலைமை அமைப்பான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழக அரசின் விளையாட்டு மற்றும் இளைஞர் நலப் பணிகள் குறித்த கொள்கை முடிவுகள் அனைத்தையும் செயல்படுத்தி வருகிறது.





**1.2 குறிக்கோள்களும், இலக்குகளும்**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் முக்கியக் குறிக்கோள்கள் பின்வருமாறு:

1. மாவட்டத் தலைநகரங்களிலும், பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் விளையாட்டிற்கான விளையாட்டு அரங்க மற்றும் ஆடுகள வசதிகளை உருவாக்குதல்.

2. திறமை மிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தக்க பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்து அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிவாகை பெறச் செய்தல்.

3. தலைசிறந்த விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதுடன் அவர்கள் உயர்ந்த அளவில் சாதனைகள் புரிந்திடும் வகையில் விருதுகளும், பல்வேறு ஊக்க உதவிச் சலுகைகளும் வழங்குதல்.

4. மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களிடையே சாகசச் செயல்கள் செய்யும் ஆர்வத்தையும், உடற்பயிற்சி செய்யும் ஆவலையும் ஊக்குவித்தல்.

5. மாணவர் மற்றும் மாணவரல்லாத சமுதாயத்தினரிடையே அறிவியல் முனைப்பு, சமுதாய நல்லிணக்கம் மற்றும் சேவை மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்திடல்.

6. விளையாட்டு மற்றும் இளைஞர்கள் நலன் வளர்ச்சியின் நோக்கத்தில் மைய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

7. பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், இளைஞர் விழாக்கள் மற்றும் கண்காட்சிகள் நடத்தி இளைஞர்களிடம் எழுச்சியையும், உத்வேகத்தையும் மலரச் செய்தல்.

**1.3** தமிழ்நாடு, கடந்த ஆண்டுகளில் தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் குழுப் போட்டிகளிலும், தனித்திறன் மற்றும் குழுப் போட்டிகளிலும், முன்னிலை வகித்து வருகிறது. இது தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட விளையாட்டுக் கட்டமைப்பு, பயிற்சி வசதிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்படுகின்ற ஊக்க உதவித் தொகை ஆகியவற்றால் ஏற்பட்டது.

[2008 மே 13

## 1.4 விளையாட்டில் தமிழ்நாடு உன்னத நிலையை அடைவதற்கான புதிய உத்திகள்

உலகத்தில் உள்ள வளரும் மற்றும் வளர்ச்சி பெற்ற நாடுகளில் விளையாட்டுத் துறையில் தொலைநோக்கு உத்தியினை மிகச் சரியாக கடைபிடிப்பதன்மூலம் வெற்றியினை வெளிக்கொணர்கிறார்கள். பிரமிடு முறையிலான அடித்தளத்தைக் கொண்டு கீழ்நிலையிலிருந்து உயர்ந்த நிலையை அடையும் வண்ணம் உத்தியைப் பலரும் கடைபிடித்து வருகிறார்கள். ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளும் பல நாடுகள் சிறியதாக இருப்பினும் வெற்றிகளைப் பெற்று அவர்களின் மாநிலத்திற்கும், நாட்டிற்கும் பெருமை தேடித் தருவதற்கு இந்த தொலைநோக்கு உத்தியினைக் கடைபிடிப்பதே காரணமாகும். தமிழ்நாட்டில் 5 பல்வேறு நிலையினைக் கொண்ட பிரமிடு முறையிலான தர வரிசையினை விளையாட்டுத் துறையில் செயல்படுத்திட இக்கொள்கை குறிப்பில் விளக்கப்படுகிறது. இவ்வாறான பிரமிடு வரிசையில் நிலை-1 அடித்தளத் திறன் கொண்ட அளவிலும் நிலை-5 அதிகபட்சத் திறன்கொண்ட அளவிலுமாக உள்ளது. இதனை விளக்கும் பொருட்டு பிரமிடு முறையிலான வரைபடம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது:




இந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் விளையாட்டுக் கலை வடிவமைக்கப்பட்டு வருகிறது.



2008 மே 13]

## 1.5 நிலை I பெருவாரி:

இரு விதமாக இக்கருத்தாக்கத்திற்குச் செயல்வடிவம் தரப்பட்டுள்ளது

1. மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 6,7,8 வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் உடல் திறனறி சோதனை தரப்படுகிறது. இதிலிருந்து நல்ல திறனுள்ளவர்கள் கண்டறியப்பட்டு அடுத்த நிலை பங்கேற்பிற்கு ஆயத்தப்படுத்தப்படுகின்றனர்.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலமாகச் செயல்படுத்தப்படும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அனைத்துப் பஞ்சாயத்துகளுக்கும் ரூ.1 இலட்சம் முதல் ரூ.1.5 இலட்சம் வழங்கப்பட்டு விளையாட்டு வசதிகள் செய்து தரப்படுகின்றன. வரும் ஆண்டுகளில் பஞ்சாயத்துகள், ஒன்றியங்கள் அளவில் போட்டிகள் நடத்தும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

## 1.6 நிலை 2 மாவட்ட அளவு:

ஏற்கெனவே அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 400 மீ. தடகளம் கொண்ட விளையாட்டு அரங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. 16 மாவட்டங்களில் நீச்சல் குளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இந்த வசதிகள் படிப்படியாக உலகத் தரத்திற்கு உயர்த்தப்படும்.

மாவட்ட அளவுப் போட்டிகள் அந்தந்த விளையாட்டு மாவட்டச் சங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. வருங்காலத்தில் 20 வகையான விளையாட்டுகளில் மாவட்ட அளவில் போட்டிகள் நடத்தத். தொலைநோக்குத் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

## 1.7. நிலை 3 மாநில அளவு:

மாநில அளவில் உலகத் தரத்திலான விளையாட்டு வசதிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே சென்னை, கோவை, மதுரை ஆகிய மாவட்டங்களில் 400 மீ. செயற்கை ஓடுதளமும், சென்னை மற்றும் நெல்லையில் செயற்கை இழை ஆக்கிப் புலமும், சென்னை, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம், கடலூர், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளமும் உருவாக்கப்பட்டுள்ளன.

[2008 மே 13

அனைத்து மாவட்டங்களிலும் உலகத்தரம் வாய்ந்த ஒரு வசதியையாவது உருவாக்கித் தரும் தொலைநோக்குத் திட்டம் உருவாகி வருகிறது.

மாவட்ட அளவில் முதல் நிலைப் போட்டிகளை நடத்தி, மாநில அளவில் இறுதிப் போட்டியை நடத்தும் மாநில ஆக்கி போட்டிகள் கடந்த மூன்று ஆண்டுகளாக விளையாட்டு ஆணையத்தால் நடத்தப்பட்டு வருகின்றன. இது தொடர் போட்டி (League Basis) முறையில் நடத்தப்படுகிறது. இது தவிர, Knock-out அடிப்படையில் தடகளம், நீச்சல் உட்பட்ட எட்டு விளையாட்டுகளுக்கு மாநிலப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதுபோன்று 20 விளையாட்டுகளுக்கான மாநில அளவிலான போட்டிகளை நடத்தும் திட்டம் வரும் ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.

இது தவிர, அந்தந்த விளையாட்டு மாநிலச் சங்கங்கள் ஆண்டாண்டு மாநிலப் போட்டிகள் நடத்த நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

மாவட்ட அளவில் கண்டறியப்படும் திறனாளர்களுக்கு மாநில அளவுப் பயிற்சிகளும், போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்புகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. உண்டுறை விளையாட்டு விடுதிகள் நடத்தப்படுகின்றன.

பொதுவாக எல்லா விளையாட்டுகளுக்கும் ஊக்கம் காட்டப்படுவதோடு தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் சிறப்புடைய விளையாட்டுகளாக சதுரங்கம், கேரம், வளைபந்து, பளுதூக்குதல் ஆகிய விளையாட்டுகள் குறித்தறியப்பட்டு கூரிய கவனம் செலுத்தப்படுகிறது.

**1.8 நிலை 4 & நிலை 5 நாட்டளவு; உலகளவு:**

எடுக்கும் முயற்சிகளின் பலன்கள் தேசிய/உலகளாவிய வெற்றிகளில்தான் முழுமை பெறும். ஏற்கெனவே தமிழ்நாட்டவர் இத்தகைய வெற்றிகளில் தம்மைப் பதிவு செய்துள்ளனர். கிரிக்கெட், வாலிபால், கூடைப்பந்து, டென்னிஸ், ஸ்குவாஷ், கபடி, வாள்வீச்சு ஆகிய விளையாட்டுகளில் தமிழ்நாட்டவர் தேசிய அணிகளில் பங்கேற்றுள்ளனர்.

இந்த முனைப்புகளைக் கூர்ப்படுத்தும் வகையில் உலகத் தரமுள்ள விளையாட்டு அரங்கங்கள் சென்னை, கோவை, மதுரை, நெல்லை



2008 மே 13]

ஆகிய இடங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே சிறப்பான சாதனை புரிந்தோரை வளர்த்தெடுக்கும் "செம்மாப்புச் சாலைகள்" நடத்தப்பட்டு வருகின்றன.

தேசிய உலகளவுப் போட்டிகளைத் தமிழ்நாட்டில் நடத்தவும், வெளி இடங்களில் நடைபெறும் இப்போட்டிகளில் தமிழக வீரர்கள் கலந்து கொள்ளவும் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

தேசிய, உலகளாவிய சாதனை புரிவோருக்கு பிற மாநிலங்கள் செய்வதைவிட, உயர்வான ஊக்கப் பரிசுகளைத் தமிழக அரசு வழங்குகிறது.

**படலம்–2**

**விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டெடுத்தல்**

இதற்கான கீழ்வரும் மூன்று செயல் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன:—

1. உலக அளவிலான திறமை மிக்கவர்களைக் கண்டறியும் திட்டம்
2. விளையாட்டுப் பள்ளி மற்றும் விளையாட்டு விடுதிகளுக்கான தேர்வு
3. சிறப்பு விளையாட்டு விடுதிக்கான தேர்வு

**2.1 உலக அளவிலான திறமை மிக்கவர்களைக் கண்டறியும் திட்டம் (4 அடுக்கு)**

**2.1.1 பள்ளிகளில் உடற்திறன் தேர்வுகளை நடத்தி அவர்களுக்கு விளையாட்டு அறிக்கை அட்டை வழங்குதல்**

தமிழ்நாட்டில் சர்வதேச விளையாட்டு வீரர்களின் திறமையைக் கண்டறியும் திட்டத்தின்கீழ் உடற்திறன் தேர்வுப் போட்டிகளை, மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் பயிலும் சிறுவர்/சிறுமியர்களுக்கு நடத்துவதன் அவசியத்தை உணர்ந்து தமிழ்நாட்டில் விளையாட்டினை வளர்ச்சியடையச் செய்ய அரசு இத்திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. மேலும், அரசு வழிகாட்டுதலின்படி, உடற்திறன் தேர்வு முடிவுகளின் அடிப்படையில் பள்ளி சிறுவர்/சிறுமியர்களுக்கு விளையாட்டு முன்னேற்ற அறிக்கை அட்டை வழங்கப்படுகின்றது.

[2008 மே 13

அந்த அறிக்கை அட்டையின் அடிப்படையில் சிறுவர்/சிறுமியர்கள் அவர்களுக்கு ஏதுவான குறிப்பிட்ட விளையாட்டில் கலந்து கொள்ளவும், அவர்களின் திறமைகளை மேம்படுத்திக் கொள்ளவும் முடிகிறது.

**2.1.2 கல்வி மாவட்ட அளவில் விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டெடுத்தல்**

அரசு வழிகாட்டுதலின்படி, தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும், 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளுக்கும் சிறுவர்/சிறுமியர்களின் உடற்திறனை கண்டறிய, வேகமாக ஓடுதல், (Speed) அதிகமாக தாக்குப்பிடிக்கும் திறனைக் கண்டறிதல் (Endurance), உடல்வலிமை கண்டறிதல் (Strength), உந்து திறன் மற்றும் சுறுசுறுப்புத் திறனைக் கண்டறிதல் (Explosive Power and Agility) ஆகிய உடற்திறன் ஆற்றல் போட்டிகள் நடத்தப்பட்டு அந்தத் தேர்வுகளில் ஒரு தேர்வில் 10-க்கு 10 என்ற மதிப்பெண் அல்லது 2 தேர்வுகளில் 10-க்கு 9 என்ற மதிப்பெண்கள் பெற்றவர்களின் பட்டியல் குறிப்பிட்ட படிவத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படுகிறது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 100 மீட்டர், 200 மீட்டர், 400 மீட்டர் ஓட்டம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல் மற்றும் குண்டு எறிதல் ஆகிய தடகள பிரிவுகளில் தமிழ்நாட்டில் உள்ள 64 கல்வி மாவட்டங்களில் விளையாட்டுத் திறமை உடையவர் கண்டறியப்படுகிறார்கள். இந்தப் போட்டியில் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 2500 முதல் 3000 வரை சிறுவர், சிறுமியர் கலந்து கொண்டு வருகிறார்கள். மாநில அளவில் ஒரு இலட்சம் பேர் கண்டறியப்படுகின்றனர்.

**2.1.3 மண்டல அளவில் விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டெடுத்தல்**

அதனைத் தொடர்ந்து, கல்வி மாவட்டங்கள் 9 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு விளையாட்டுத் திறனைக் கண்டறிய மண்டல அளவில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. அப்போட்டிகளில் பங்கேற்க, கல்வி மாவட்ட அளவில் முதல் 2 இடங்களில் வெற்றி பெற்ற சிறுவர்/சிறுமியர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. உள்ளூர் அளவில் அதிகத் திறமை வாய்ந்த சிறார்களைக் கண்டறியும் பொருட்டு இம்முயற்சி ஒவ்வோர் ஆண்டும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் போட்டியில் ஒவ்வொரு மண்டலத்திலும் 600 சிறுவர்/சிறுமியர் கலந்து கொண்டு வருகிறார்கள். மாநில அளவில் 5,400 பேர் கலந்து கொள்கின்றனர்.



2008 மே 13]

**2.1.4 மாநில அளவில் விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டெடுத்தல்**

மண்டல அளவில் நடத்தப்படும் போட்டிகளில் திறமை மிக்கவர்களைக் கண்டறிந்து கோடைக் காலத்தில் 15 நாட்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு இதில் திறன் மிக்கவர்களைக் கண்டறிந்து சிறப்பு அகாடமிகளில் சேர்க்கப்பட்டு சிறப்புப் பயிற்சி தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. இந்த அகாடமிகளில் 1200 மாணவ, மாணவிகள் சேர்க்கப்பட்டு பயனடைந்து வருகிறார்கள்.

**2.2 விளையாட்டுப் பள்ளி மற்றும் விளையாட்டு விடுதிகளுக்கான தேர்வு (2 அடுக்கு)**

விளையாட்டுப் பள்ளி மற்றும் விளையாட்டு விடுதிகளில் ஒவ்வோர் ஆண்டும் 7, 8, 9 மற்றும் 11-வது வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவிகள் புதிதாக சேர்க்கப்பட்டு வருகிறார்கள். இதற்குரிய தேர்வானது 2 அடுக்கு முறையில் நடத்தப்பட்டு வருகிறது.

**2.2.1 மாவட்ட அளவு தேர்வு**

மாவட்ட அளவில் நடத்தப்படும் உடற்கூறு திறன் தேர்வுப் போட்டிகளில் ஏறத்தாழ 3500 மாணவர்களும் 500 மாணவிகளும் ஆண்டு தோறும் கலந்து கொண்டு வருகின்றார்கள்.

**2.2.2 மாநில அளவு தேர்வு**

மாவட்ட அளவுப் போட்டிகளில், கண்டறியப்படும் 1200-1500 மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டு வருகிறார்கள். இவர்களில், திறமை மிக்கவர்களாக 300-350 வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, விளையாட்டுப் பள்ளி மற்றும் விளையாட்டு விடுதிகளில் சேர்க்கப்படுகிறார்கள்.

**2.3 சிறப்பு விளையாட்டு விடுதிக்கான தேர்வு**

தேசிய மற்றும் பன்னாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெறும் திறமை வாய்ந்தவர்களைக் கண்டறிந்து சிறப்பு விளையாட்டு விடுதியில் சேர்ப்பதற்கான தேர்வுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் 200 முதல் 300 மாணவர்கள் கலந்து கொள்வர். இதில் 20 - 30 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பு விளையாட்டு விடுதிகளில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

[2008 மே 13

## படலம்–3

### விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்துதல்

ஏழு நிலைகளில் செயல்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன. அவையாவன:

(1) சிறப்பு அகாடமிகள்

(2) விளையாட்டுப் பள்ளிகள்/விடுதிகள்.

(3) கல்லூரிகளில் இணை விளையாட்டு மையங்கள்

(4) திறன் மேம்பாட்டு மையங்கள்

(5) சிறப்பு மேம்பாட்டு மையங்கள்

(6) பயிலகங்கள்

(7) சாம்பியன்கள் மேம்பாட்டுத் திட்டம்

### 3.1 சிறப்பு அகாடமிகள்

கீழ்க்காணும் விளையாட்டுகளில் சிறப்பு விளையாட்டு அகாடமிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நிறுவப்பட்டுள்ளன:

| | | | |
|---|---|---|---|
| 1. | த.வி.மே.ஆ. | அதிவேக ஓட்டம் மற்றும் குதித்தல் அகாடமி | சென்னை |
| 2. | த.வி.மே.ஆ. | கிரிக்கெட் அகாடமி | சென்னை |
| 3. | த.வி.மே.ஆ. | பெண்கள் கையுந்துபந்து அகாடமி | சென்னை |
| 4. | த.வி.மே.ஆ. | டைவிங் அகாடமி | சென்னை |
| 5. | த.வி.மே.ஆ. | ஆண்கள் வளைகோல் அகாடமி | சென்னை |
| 6. | த.வி.மே.ஆ. | பெண்கள் வளைகோல் அகாடமி | சென்னை |
| 7. | த.வி.மே.ஆ. | சந்திரா மேசைப்பந்து அகாடமி | சென்னை |
| 8. | த.வி.மே.ஆ. | ஏ.கே.ஜி மேசைப்பந்து அகாடமி | சென்னை |
| 9. | த.வி.மே.ஆ. | டால்பின் நீச்சல் அகாடமி | சென்னை |



2008 மே 13]

| | | | |
|---|---|---|---|
| 10. | த.வி.மே.ஆ. | தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் அகாடமி | சென்னை |
| 11. | த.வி.மே.ஆ. | ஆண்கள் கால்பந்து அகாடமி | திருநெல்வேலி |
| 12. | த.வி.மே.ஆ. | எறிதல் அகாடமி | விருதுநகர் |
| 13. | த.வி.மே.ஆ. | குறுந்தூர ஓட்ட அகாடமி | திருவண்ணாமலை |
| 14. | த.வி.மே.ஆ. | நீள் தூர ஓட்ட அகாடமி | உதகமண்டலம் |
| 15. | த.வி.மே.ஆ. | சிறுமியர் கால்பந்து அகாடமி | திண்டுக்கல் |
| 16. | த.வி.மே.ஆ. | எல்லீஸ் நகர் மேசைப்பந்து அகாடமி | மதுரை |
| 17. | த.வி.மே.ஆ. | கூடைப்பந்து அகாடமி | அறந்தாங்கி |

* த.வி.மே.ஆ.—தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

இந்த அகாடமிகளைச் சார்ந்த 1200 விளையாட்டு வீரர்களுக்கு அடிக்கடி பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு, அவர்களுக்குத் தேவையான சத்துணவு, விளையாட்டுக் கருவிகள், காலணிகள் வழங்கப்பட்டு அகாடமிகள் சிறப்புற செயல்பட்டு வருகின்றன.

### 3.2.1 விளையாட்டுப் பள்ளி விடுதிகள்

கீழ் வரும் 11 விளையாட்டுப் பள்ளி விடுதிகள் (Sports School Hostels) அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன:

| வ. எண் | விளையாட்டுப் பள்ளி விடுதி பெயர் | பயிற்சி விளையாட்டுக்கள் |
|---|---|---|
| 1. | ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளி, நந்தனம், சென்னை | தடகளம், குத்துச்சண்டை, கால்பந்து, வளைகோல்பந்து |
| 2. | நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழக விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி | தடகளம், கூடைப்பந்து மற்றும் கால்பந்து |
| 3. | விளையாட்டு விடுதி, அண்ணா விளையாட்டரங்கம், திருச்சிராப்பள்ளி | தடகளம், கால்பந்து, கையுந்துபந்து மற்றும் வளைகோல்பந்து |

[2008 மே 13

| | | |
|---|---|---|
| 4. | விளையாட்டு விடுதி, ரேஸ் கோர்ஸ் விளையாட்டு அரங்கம், மதுரை | தடகளம், கால்பந்து, கூடைப்பந்து மற்றும் கையுந்துபந்து |
| 5. | விளையாட்டு விடுதி, அண்ணா விளையாட்டரங்கம், திருநெல்வேலி | தடகளம், வளைகோல்பந்து, கையுந்துபந்து |
| 6. | விளையாட்டு விடுதி, வ.உ.சி. விளையாட்டரங்கம், ஈரோடு (மாணவியருக்கு) | தடகளம், கையுந்துபந்து, கால்பந்து |
| 7. | பாரதிய வித்யாபவன், திண்டல், ஈரோடு (மாணவியருக்கு) | கூடைப்பந்து |
| 8. | செல்வம் உயர் நிலைப்பள்ளி, நாமக்கல் (மாணவியருக்கு) | தடகளம் மற்றும் வாள்சண்டை |
| 9. | கே.வி.ஆர் மேல்நிலைப் பள்ளி, திருச்செங்கோடு | கையுந்துபந்து |
| 10. | அரசு மேல்நிலைப் பள்ளி, புதூர், சென்னை | கிரிக்கெட் |
| 11. | டான் பாஸ்கோ இளைஞர் மையம், செங்குன்றம், சென்னை | கால்பந்து |

### 3.2.2 சிறப்பு விளையாட்டு விடுதி

தேசிய மற்றும் பன்னாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெறும் திறமைவாய்ந்த, கல்லூரி மாணவர்களுக்கென ஒரு சிறப்பு விளையாட்டு விடுதி சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் செயல்பட்டு வருகிறது. 52 விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெறும் இச்சிறப்பு விளையாட்டு விடுதியில் கீழ்க்கண்ட விளையாட்டுக்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. (1) தடகளம், (2) கூடைப்பந்து, (3) குத்துச்சண்டை, (4) நீச்சல் மற்றும் (5) கையுந்துபந்து. மேற்கண்ட விளையாட்டுகளில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்கள் தங்கள் கல்லூரிப் படிப்பினைத் தொடர்வதோடு அவர்களின் விளையாட்டுத் திறனை மேம்படச் செய்வதுமே இவ்விடுதியின் குறிக்கோளாகும். இந்த விடுதி, தேசிய பன்னாட்டு அளவில் 26 விளையாட்டு வீரர்களை உருவாக்கியுள்ளது.



2008 மே 13]

### 3.3 கல்லூரிகளில் இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்கள்

கல்லூரிகளில் பயிலும் விளையாட்டு வீரர்களின் திறன்களை மேம்படுத்தி அவர்கள் பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டுப் போட்டிகளில் வெற்றிவாகை சூடிப் பெருமை சேர்த்திடும் வகையில், வெவ்வேறு மாவட்டங்களில் அமைந்துள்ள கல்லூரிகளில் பல்வேறு விளையாட்டுகளில் உள்ள விளையாட்டுக் கட்டமைப்புகளைப் பயன்படுத்தி, இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் கல்லூரிகளில் சிறந்த விளையாட்டுத் திறன்படைத்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்கள் மூலம் பயன்பட்டு வருகிறார்கள்.

| வ. எண் | கல்லூரியின் பெயர் | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஆதித்தனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தூத்துக்குடி | 23 |
| 2 | லயோலா கல்லூரி, சென்னை | 24 |
| 3 | பச்சையப்பன் கல்லூரி, சென்னை | 12 |
| 4 | எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை | 26 |
| 5 | பி.எஸ்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை | 09 |
| 6 | ஸ்காட் கிறிஸ்டியன் கல்லூரி, நாகர்கோவில் | 06 |
| 7 | நிர்மலா மகளிர் கல்லூரி, கோவை | 10 |
| 8 | எம்.எஸ்.எஸ். வாஃக்பு போர்டு கல்லூரி, மதுரை | 16 |
| 9 | சாரா தக்கர் கல்லூரி, திருநெல்வேலி | 20 |
| 10 | ஜமால் முகமது கல்லூரி, திருச்சி | 32 |
| 11 | புனித வளனார் கல்லூரி, திருச்சி | 21 |
| | மொத்தம் | 199 |

[2008 மே 13

அந்தந்த கல்லூரி நிர்வாகமே, தனது சொந்தப் பயிற்சியாளர்களைக் கொண்டு மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். ஒவ்வொரு பயிலுநருக்கும் அரசு ரூ.600/- வழங்குகிறது.

**3.4 விளையாட்டுத் திறன் மேம்பாட்டு மையம்**

விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் அமைந்துள்ள தனியார் நிறுவனங்களுடன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இணைந்து விளையாட்டுத் திறன் மேம்பாட்டு மையங்களை நிறுவியுள்ளது. இம்மையங்களில் ஒவ்வொரு விளையாட்டிலும் திறன்படைத்த வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தற்பொழுது தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட 22 விளையாட்டுத் திறன் மேம்பாட்டு மையங்கள் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மொத்தம் ரூ.15 இலட்சம் செலவிடப்படுகிறது.



2008 மே 13]

| வ. எண் | மையத்தின் பெயர் |
|---|---|
| 1 | புனித வளனார் கல்லூரி, திருச்சி |
| 2 | ஊரீஸ் கல்லூரி, வேலூர் |
| 3 | யாதவா கல்லூரி, மதுரை |
| 4 | ஹாக்கி அகாடமி, அரசு உயர்நிலைப்பள்ளி, வாடிப்பட்டி |
| 5 | இ.எஸ்.அகாடமி, விழுப்புரம் |
| 6 | ஜி.எஸ். இந்து உயர் நிலைப்பள்ளி, திருவில்லிப்புத்தூர் |
| 7 | நிர்மலா மகளிர் கல்லூரி, கோவை |
| 8 | பிஷப் அப்பாசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை |
| 9 | ராஜம்மாள் ரங்கசாமி நிறைநிலை மேல்நிலைப் பள்ளி, திருச்செங்கோடு |
| 10 | லோட்டஸ் பெண்கள் கையுந்துபந்து சங்கம், தடாகம் |
| 11 | பயஸ் XI மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி |
| 12 | தடகள திறன் மேம்பாட்டு மையம், புனித பிரான்ஸிஸ் மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில் |
| 13 | மேசைப்பந்து திறன் மேம்பாட்டு மையம், அரசு மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில் |
| 14 | பளுதூக்குதல் திறன் மேம்பாட்டு மையம், சி.எஸ்.ஐ. மேல்நிலைப் பள்ளி, இரணியபுரம், நாகர்கோவில் |
| 15 | தமிழ்நாடு கூடைப்பந்து கழகம், சென்னை |
| 16 | டான் பாஸ்கோ இளைஞர் மையம், செங்குன்றம், சென்னை |
| 17 | டான் பாஸ்கோ இளைஞர் மையம், பேசின் பாலம், சென்னை |
| 18 | நெல்லை நண்பர்கள் சங்கம், சென்னை |
| 19 | தடகள அகாடமி, சென்னை கிருத்துவக் கல்லூரி, தாம்பரம் |
| 20 | டென்னிஸ் திறன் மேம்பாட்டு மையம், சிங்காரம் பிள்ளை மேல்நிலைப் பள்ளி, சென்னை |
| 21 | டென்னிஸ் திறன் மேம்பாட்டு மையம், மேயர் ராதாகிருஷ்ணன் விளையாட்டு அரங்கம், சென்னை |
| 22 | விளையாட்டுத் திறன் மேம்பாட்டு மையம், குடிசைப் பகுதி குழந்தைகள் மற்றும் கல்விச் சங்கம், வியாசர்பாடி, சென்னை |

**3.5.1 வேலூர் சத்துவாச்சாரியில் பளுதூக்கும் சிறப்பு மேம்பாட்டு மையம்**

வேலூருக்கு அருகிலுள்ள சத்துவாச்சாரியை இருப்பிடமாகக் கொண்ட பளுதூக்கும் விளையாட்டு வீரர்கள் நாட்டிற்காகவும், மாநிலத்திற்காகவும், பதக்கங்களையும், புகழினையும் பெற்றுத் தந்துள்ளனர். இக்காரணத்தினால் அங்கு பளுதூக்கும் மையம் ஏற்படுத்தப்பட்டது. தகுதி வாய்ந்த பயிற்சியாளர்கள்மூலம் 30 விளையாட்டு வீரர்களுக்கும் (மாணவர் மற்றும் மாணவரல்லாதோர்) 12 மாணவியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

[2008 மே 13

**3.5.2 கோவை கூடைப்பந்து சிறப்பு மேம்பாட்டு மையம்**

கோயம்புத்தூரில் கூடைப்பந்து பரவலாக விளையாடப்படுகிறது. கோவை நகரைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து 20 வயதுக்குட்பட்ட 25 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கூடைப்பந்து சிறப்பு மேம்பாட்டு மையம் ஆரம்பிக்கப்பட்டது.

**3.5.3 திருநெல்வேலி வளைகோல்பந்து சிறப்பு மேம்பாட்டு மையம்**

திருநெல்வேலி அதிக அளவில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் வளைகோல்பந்து விளையாட்டு வீரர்களை வழங்கியுள்ளதால், அங்கு வளைகோல்பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம் செயல்பட்டு வருகிறது. தகுதி வாய்ந்த NIS பயிற்றுநர்களால் 30 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்விளையாட்டு வீரர்கள் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள செயற்கை இழை புல் மைதானத்தில் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

**3.5.4 டென்னிஸ் சிறப்பு மேம்பாட்டு மையம்**

சென்னை நேரு பூங்கா விளையாட்டு மைதானத்தில் 2 செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றைச் சிறந்த முறையில் பயன்படுத்தும் வகையில் டென்னிஸ் சிறப்புப் பயிற்சி மையம் துவக்கப்பட்டு மாநகராட்சி மற்றும் அரசுப் பள்ளிகளைச் சார்ந்த 10 சிறுவர்களும் 10 சிறுமிகளும் நாள்தோறும் இலவசமாக டென்னிஸ் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**3.5.5 கழைக்கூத்தாடிகள் மற்றும் மீனவர்களுக்கான சிறப்பு அகாடமி**

தமிழ்நாட்டில் பாரம்பரியமிக்க கழைக்கூத்தாடிகள் மற்றும் மீனவர்களில் பொருளாதார ரீதியில் நலிவடைந்தவர்களுக்காக உடற்திறன் போட்டிகள் நடத்தப்பட்டு அதில் திறனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் நீர் விளையாட்டுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு எதிர்கால சேம்பியன்களாக அவர்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டது. அதன்படி கழைக்கூத்தாடிகளுக்கான ஜிம்னாஸ்டிக்ஸ் பயிற்சி மையம் ஈரோடு மாவட்டத்தில் கரட்டுப்பாளையம் என்ற இடத்தில் அமைக்கப்பட்டு 10 ஆண்கள் மற்றும் 10 பெண்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். நீர் விளையாட்டிற்காக நாகப்பட்டினம் மாவட்டத்தில் 10 ஆண்கள் மற்றும் 10 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி பெற்று வருகிறார்கள்.



2008 மே 13]

**3.6 பயிலகங்கள்**

**3.6.1 நீச்சல் பயிலகம்**

நீச்சல் கற்றுத் தருவதற்காக வேளச்சேரியில் அமைந்துள்ள நீச்சல் குள வளாகத்திலும், செனாய் நகர் நீச்சல் குளத்திலும் பல பிரிவுகளாக நீச்சல் பயிற்றுவித்தல் நடத்தப்பட்டு வருகின்றது. மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள நீச்சல் குளங்களிலும் 'நீந்தக் கற்றுக் கொள்' பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது.

**3.6.2 யோகா பயிலகம்**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட விளையாட்டு அரங்கங்களிலும் யோகா கற்றுக்கொடுப்பதற்கென யோகா பயிலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு யோகா பயிலகத்திலும் ஒரு ஆண் கற்பிப்பாளரும் மற்றும் ஒரு பெண் கற்பிப்பாளரும் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். இப்பயிலகங்களில் நாள்தோறும் காலை மற்றும் மாலை நேரங்களில் இலவசமாக யோகா பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு பயிலகத்திலும் ஏராளமானோர் பயிற்சி பெற்று புத்துணர்ச்சி அடைகின்றனர்.

**3.6.3**

**கிராமப் பயிலகம் (விளையாட்டு விளைநிலங்கள்)**

கிராமங்களில் பிரபலமாக விளங்கும் குறிப்பிட்ட விளையாட்டினை மேம்படுத்தும்வண்ணமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு கிராம விளையாட்டு வளர்ச்சி மையங்களைத் தோற்றுவித்து விளையாட்டு மைதான வசதி, விளையாட்டு உபகரணங்கள் வழங்கி தினமும் பயிற்சி மேற்கொள்வதற்கு ஏதுவாக கிராம விளையாட்டு வளர்ச்சி மையங்கள் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இதற்காக ரூ.2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. செயல்படும் இடங்கள் பின்வருமாறு:

### விளையாட்டு விளைநிலங்கள்

| வ.எண் | மாவட்டம் | கிராமம் | விளையாட்டு |
|---|---|---|---|
| 1 | விழுப்புரம் | சாலமேடு | மால்காம் |
| 2 | வேலூர் | ஆற்காடு | ஜிம்னாஸ்டிக்ஸ் |
| 3 | காஞ்சிபுரம் | மேல்வசலை | டேக்–வொண்–டோ |
| 4 | கடலூர் | சங்கொலிகுப்பம் | கையுந்துபந்து |
| 5 | திருவண்ணாமலை | கோலக்குடி | கோ–கோ |
| 6 | திருவள்ளூர் | நொச்சிக்குப்பம் | சிலம்பம் |
| 7 | பெரம்பலூர் | வரதராஜன்பேட்டை | தடகளம் |
| 8 | தஞ்சாவூர் | அவனியாபுரம் | கையுந்துபந்து |
| 9 | திருவாரூர் | எடமலையூர் | கையுந்துபந்து |
| 10 | நாகப்பட்டினம் | திட்டச்சேரி | கடற்கரை கையுந்துபந்து |
| 11 | திருச்சி | பெருங்குடி | கபாடி |
| 12 | மதுரை | உசிலம்பட்டி | கைப்பந்து |
| 13 | தேனி | கொண்டமநாயக்கன்பட்டி | கூடைப்பந்து |
| 14 | புதுக்கோட்டை | நாதம்பண்ணை | தடகளம் |
| 15 | திண்டுக்கல் | ஜம்புலிங்கம்பட்டி | கால்பந்து |
| 16 | கரூர் | குளித்தலை | ஜூடோ |
| 17 | நாகர்கோவில் | அலதக்கரை | கபாடி |
| 18 | திருநெல்வேலி | கோசல்நெல் நகர் | வளைகோல்பந்து |
| 19 | விருதுநகர் | சத்திரரெட்டிப்பட்டி | குத்துச்சண்டை |
| 20 | சிவகங்கை | கஞ்சிரங்கால் | கூடைப்பந்து |
| 21 | இராமநாதபுரம் | சக்கரைகோட்டை | தடகளம் |
| 22 | ஈரோடு | அந்தியூர் | வாள்சண்டை |
| 23 | நீலகிரி (ஊட்டி) | உபதலை | வளைகோல்பந்து |
| 24 | சேலம் | மாதையன் கோட்டை | டேக்–வொண்–டோ |
| 25 | தர்மபுரி | சோலை கோட்டை | பூப்பந்து |
| 26 | கிருஷ்ணகிரி | அனியாலம் | கைப்பந்து |
| 27 | கோவை | சூலூர் | பளுதூக்குதல் |
| 28 | தூத்துக்குடி | பிள்ளையான்மலை | வளைகோல்பந்து |
| 29 | நாமக்கல் | பாப்பநாயக்கன்பட்டி | தடகளம் |





### 3.7 சாம்பியன்கள் மேம்பாட்டுத் திட்டம்:

*20 வயதிற்கு உட்பட்டு ஏற்கனவே தேசிய அளவில் தங்கப் பதக்கம் வென்றவர்களை மேலும் உலக அரங்கிற்கு ஏற்றிச் செல்லும் வகையில் அவர்களுக்குச் சிறப்பு உதவி வழங்கப்படுகிறது. அவர்களுக்கு ஊட்டச்சத்து, உடை, விளையாட்டுக் கருவிகள் வாங்கவும், வெளிநாடு சென்று பயிற்சி பெறவும், வெளிநாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளவும், நிதி உதவி அளிக்கப்படுகிறது. உடல்வாகு, உளப்பக்குவம், சத்துணவு வரையறை ஆகியவற்றிற்கு ஆலோசனையும் வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் 77 பேருக்கு ரூ.6 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.*

## படலம்–4

## பயிற்சி அளித்தல்

### 4.1 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய பயிற்றுநர்கள்

*தரமான பயிற்சிகளை முறையான வகுப்புகள் நடத்தி வழங்குவதற்கென தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஒவ்வொரு மாவட்டத்திலும் பயிற்றுநர்களை அமர்த்தி உள்ளது. நிரந்தரப் பணியில் 63 பேரும், ஒப்பந்த அடிப்படையில் 77 பேரும் பணியாற்றுகின்றனர்.*

| வ. எண் | மாவட்டம் | மொத்தம் | | |
|---|---|---|---|---|
| | | நிரந்தரம் | ஒப்பந்தம் | மொத்தம் |
| 1 | தலைமை அலுவலகம் | 6 | 13 | 19 |
| 2 | சென்னை | 3 | 6 | 9 |
| 3 | காஞ்சிபுரம் | 1 | – | 1 |
| 4 | திருவள்ளூர் | 1 | 2 | 3 |
| 5 | சேலம் | 2 | 4 | 6 |
| 6 | வேலூர் | 3 | 2 | 5 |
| 7 | திருவண்ணாமலை | – | 1 | 1 |

[2008 மே 13

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | விழுப்புரம் | 1 | – | 1 |
| 9 | தருமபுரி | 4 | 2 | 6 |
| 10 | திருச்சி | 4 | 6 | 10 |
| 11 | கடலூர் | 1 | 1 | 2 |
| 12 | தஞ்சாவூர் | 3 | 2 | 5 |
| 13 | நாகப்பட்டினம் | – | 1 | 1 |
| 14 | புதுக்கோட்டை | 1 | 3 | 4 |
| 15 | அரியலூர் | 1 | 2 | 3 |
| 16 | திருவாரூர் | – | 1 | 1 |
| 17 | கோயம்புத்தூர் | 4 | 1 | 5 |
| 18 | நாமக்கல் | – | 1 | 1 |
| 19 | ஈரோடு | 2 | 4 | 6 |
| 20 | நீலகிரி | 1 | 2 | 3 |
| 21 | கரூர் | 1 | – | 1 |
| 22 | மதுரை | 4 | 9 | 13 |
| 23 | விருதுநகர் | 3 | 3 | 6 |
| 24 | சிவகங்கை | 1 | – | 1 |
| 25 | திண்டுக்கல் | 4 | 2 | 6 |
| 26 | தேனி | 3 | – | 3 |
| 27 | திருநெல்வேலி | 2 | 3 | 5 |
| 28 | நாகர்கோவில் | 3 | 2 | 5 |
| 29 | தூத்துக்குடி | 1 | 2 | 3 |
| 30 | இராமநாதபுரம் | 1 | 1 | 2 |
| 31 | கிருஷ்ணகிரி | 2 | 1 | 3 |
| | மொத்தம் | 63 | 77 | 140 |



2008 மே 13]

இவர்கள் வார இறுதி நாள் பயிற்சி, கோடைக்காலப் பயிற்சி, சிறப்புப் பயிற்சி முகாம் ஆகிய வகைகளில் பயிற்சிகள் அளித்து வருகின்றனர். பள்ளிகள், கல்லூரிகள், சங்கங்கள் ஆகிய இடங்களுக்கும் சென்று பயிற்சி அளித்து வருகின்றனர்.

**4.2 கோடைக்கால பயிற்சி முகாம்**

ஒவ்வொரு வருடமும் 16 வயதிற்குட்பட்ட மாணவர் மற்றும் மாணவரல்லாதவர்களுக்காக ஆண், பெண் இரு பாலருக்கும் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கையுந்துபந்து மற்றும் அந்தந்த மாவட்டங்களில் சிறந்து விளங்குகின்ற விளையாட்டுகளில் மாவட்டத் தலைநகரங்களில் கோடைக்காலப் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**4.3 கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்**

உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின்மூலம் கண்டறியப்பட்ட மாணவர் மற்றும் மாணவியர்களுக்கென கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்கள், மாநிலத்தில் 64 கல்வி மாவட்டங்களிலும் 5 நாட்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் தத்தம் திறமைக்கேற்ப பங்குகொள்ளச் செய்வதற்கென இந்த மாணவ, மாணவியர்களுக்கு விளையாட்டின் அடிப்படை திறமைகள் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன. 19000-20000 விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைகிறார்கள்.

**4.4 மாவட்ட அளவிலான இருப்பிடப் பயிற்சி முகாம் திட்டம்**

கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாமில் திறமையான 60 மாணவ, மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு, மாவட்ட அளவிலான இருப்பிடப் பயிற்சி முகாம்கள், அனைத்து மாவட்டங்களிலும் 15 நாட்கள் நடத்தப்பட்டு வருகின்றன. 3840 விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகள் இத்திட்டத்தின்மூலம் பயனடைகிறார்கள்.

**4.5 மாநில அளவிலான பயிற்சித் திட்டம்**

அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகள், தேசிய பெண்கள் விளையாட்டுப் போட்டிகள், பள்ளிகளுக்கு இடையேயான

[2008 மே 13

தேசியப் போட்டிகள் போன்ற தேசிய அளவில் நடத்தப்படும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அணி பங்கு பெறுவதற்கு முன்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட அணிகளுக்கு மாநில அளவிலான பயிற்சி முகாம் ஏழு முதல் பதினைந்து நாட்களுக்கு நடத்தப்பட்டு வருகிறது.

### 4.6 பயிற்றுநர்க்கான பயிற்சி

பயிற்றுநர்கள் தமது நுட்பத்தை காலத்திற்கேற்றவாறு புதுப்பித்துக் கொள்ளும்வண்ணம் ஆணைய பயிற்றுநர்களுக்கும், பள்ளி உடற்கல்வி ஆசிரியர்களுக்கும் ஆண்டாண்டு பட்டறைகள் நடத்தப்படுகின்றன. இது தவிர ஒரு சிலர் வெளியிடங்களிலுள்ள பயிற்சி நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றனர்.

## படலம்–5

## விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்

### 5.1 திங்கள் விளையாட்டுப் போட்டிகள்

கண்டறியப்பட்ட திறமை மற்றும் வளர்ந்து வரும் திறமைகளில் தொடர்ச்சியாகப் போட்டிகள் நடத்துவதன்மூலம், "போட்டிகளில் கலந்து கொள்ளும் மனப்பாங்கினை" வளர்க்க இயலும். சென்னையில், தடகளம் மற்றும் நீச்சல் விளையாட்டுகளில் போட்டிகள் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருவதால், சிறப்பாகப் பங்கேற்கும் ஆர்வம் அதிகமானதையும், போட்டியாளர்களின் முன்னேற்றத்தையும் அறிய முடிகிறது. அனைத்து வகை வயதினருக்கும் வெவ்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் அனைத்து மாவட்டங்களிலும் மாதம் ஒரு முறை விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தற்போது அனைத்து மாவட்டங்களிலும், தடகள விளையாட்டு மற்றும் அந்தந்த மாவட்டத்தில் ஓங்கி விளங்கும் விளையாட்டுகளில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பங்கேற்க வாய்ப்பளிக்கும்வண்ணம் மாதந்தோறும் மாவட்ட அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகள் முப்பது மாவட்டங்களில் கீழ்க்கண்ட விளையாட்டுகளில் சிறுவர், சிறுமிகளுக்காக நடத்தப்பட்டன:



2008 மே 13]

தடகளம், கூடைப்பந்து, கையுந்துபந்து, கால்பந்து, வளைகோல்பந்து, வாள்சண்டை, மேசைப் பந்து, டென்னிஸ், குத்துச்சண்டை, நீச்சல், டேக்வொண்டோ மற்றும் ஜிம்னாஸ்டிக்ஸ்.

### 5.2 அண்ணா சைக்கிள் போட்டி

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 15 ஆம் தேதி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 16 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியர்களுக்கு தனித்தனியாக மாவட்ட அளவிலான அண்ணா சைக்கிள் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாநில அளவிலான சைக்கிள் போட்டி ஒவ்வோர் ஆண்டும் சுழற்சி முறையில் ஒரு மாவட்டத்தில் நடத்தப்பட்டு வருகின்றது. நடப்பாண்டில் வேலூர் மாவட்டத்தில் மாநிலப் போட்டி நடத்தப்பட்டது.

### 5.3 அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விளையாட்டுகள்

2004-2005 முதல் புதியதாக ஸ்குவாஷ், ஜிம்னாஸ்டிக்ஸ், வாள்சண்டை, குத்துச் சண்டை, நீச்சல், டேக்வொண்டோ, கைப்பந்து, டென்னிஸ், ஜூடோ, ரோடு சைக்ளிங், கடற்கரை கையுந்துபந்து மற்றும் செஸ் ஆகிய 12 விளையாட்டுகள் பள்ளிகளுக்கிடையேயான குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளில் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன. உடற்கல்வி ஆசிரியர்கள் இவ்விளையாட்டுகள் நடத்துவதற்கான விதிமுறைகளை கற்றுக் கொள்ளும் வகையில் மாநிலம் முழுவதும் இவ்விளையாட்டு நுணுக்கங்கள் தெரிந்த வல்லுநர்களால் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. பள்ளிக்கல்வி இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் இணைந்து இப்புதிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றன. அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட இப்புதிய விளையாட்டுகளில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பல பதக்கங்களை தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள் வென்றுள்ளார்கள். இத்திட்டத்தின்மூலம் ஆண்டுதோறும் 1032 வீரர் மற்றும் வீராங்கனைகள் மாநில அளவில் பதக்கம் வெல்லும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளனர்.

### 5.4 பள்ளிகளில் விளையாட்டினை மேம்படுத்துதல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் இந்திய விளையாட்டுக் குழுமம் இணைந்து பள்ளிகளில் விளையாட்டினை மேம்படுத்தும் நோக்குடன் பள்ளிகளுக்கிடையேயான போட்டிகளை தடகளம், கையுந்துபந்து, கூடைப்பந்து, வளைகோல்பந்து, கால்பந்து, இறகுப்பந்து, மேசைப்பந்து மற்றும் பளுதூக்குதல் ஆகிய விளையாட்டுகளில் 16 வயதிற்குட்பட்ட மாணவ/மாணவியருக்கு நடத்தி வருகின்றன. இப்போட்டிகள் மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் நடத்தப்பட்டு வருகின்றன.

### 5.5 மாவட்ட அளவிலான ஊரக விளையாட்டுப் போட்டிகள்

இந்திய விளையாட்டுக் குழுமத்தின் ஆதரவுடன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மாவட்ட அளவிலான ஊரக விளையாட்டுப் போட்டிகளை அனைத்து மாவட்டங்களிலும் 16 வயதிற்குட்பட்ட மாணவ/மாணவியர் மற்றும் மாணவரல்லாதோருக்கு தடகளம், கையுந்துபந்து, வளைகோல்பந்து, கால்பந்து, கபாடி, பளுதூக்குதல், கயிறு இழுக்கும் போட்டி, கோ-கோ ஆகிய விளையாட்டுகளில் நடத்தி வருகிறது.

### 5.6 மாநில விளையாட்டுக் கழகங்கள் நடத்தும் மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகள்

மாநில விளையாட்டுக் கழகங்கள் மாவட்டங்களுக்கிடையேயான போட்டிகளையும் மாநில சேம்பியன்ஷிப் போட்டிகளையும் தேசியப் போட்டிகளையும் நடத்தி வருகின்றன. தேசியப் போட்டிகளை நடத்துவதற்கு உச்சமாக ரூ.2 இலட்சம் மானியமாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு வளைகோல்பந்து சங்கத்தால் நடத்தப்பட்ட ஆசியக் கோப்பை வளைகோல் போட்டிக்கு சிறப்பினமாக ரூ.25 இலட்சம் தமிழக அரசால் வழங்கப்பட்டது. இப்போட்டியில் இந்திய அணி கோப்பையை வென்றது.

தமிழ்நாடு கேரம் சங்கத்தால் நடத்தப்பட்ட தேசிய கேரம் போட்டிகளுக்கு சிறப்பினமாக ரூ.5 இலட்சம் மானியம் வழங்கப்பட்டது. இப்போட்டியில் தமிழ்நாட்டு வீராங்கனை இளவழகி முதற்பரிசை வென்று உலகப் போட்டிக்குச் சென்றார். அங்கும் முதற்பரிசை வென்று வந்தார்.



### 2007–2008 கொடை விவரம்

| வ. எண் | மாநில விளையாட்டுச் சங்கம் | வழங்கப்பட்ட தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு மாநில தடகள சங்கம் | 312922 |
| 2 | த.நா. மாநில மூத்தோர் தடகள சங்கம் | 241600 |
| 3 | தமிழ்நாடு மாநில குத்துச்சண்டை சங்கம் | 67060 |
| 4 | தமிழ்நாடு மாநில கூடைப்பந்து சங்கம் | 132024 |
| 5 | தமிழ்நாடு மாநில கேரம் சங்கம் | 130096 |
| 6 | தமிழ்நாடு மாநில செஸ் சங்கம் | 32115 |
| 7 | தமிழ்நாடு மாநில கால்பந்து சங்கம் | 171580 |
| 8 | தமிழ்நாடு மாநில ஹாக்கி சங்கம் | 61400 |
| 9 | த.நா. மாநில பெண்கள் ஹாக்கி சங்கம் | 96226 |
| 10 | தமிழ்நாடு மாநில ஜூடோ சங்கம் | 80259 |
| 11 | தமிழ்நாடு மாநில ஸ்குவாஷ் சங்கம் | 9334 |
| 12 | த.நா. மாநில டேக்-வொண்-டோ சங்கம் | 78656 |
| 13 | தமிழ்நாடு மாநில மேசைப் பந்து சங்கம் | 182732 |
| 14 | தமிழ்நாடு மாநில எறிபந்து சங்கம் | 141164 |
| 15 | தமிழ்நாடு மாநில டென்னிகாய்ட் சங்கம் | 79084 |
| 16 | தமிழ்நாடு மாநில கையுந்துபந்து சங்கம் | 34178 |
| 17 | தமிழ்நாடு மாநில யுஷூ சங்கம் | 103210 |
| 18 | தமிழ்நாடு மாநில யோகா சங்கம் | 30090 |
| 19 | தமிழ்நாடு மாநில பூப்பந்து சங்கம் | 8682 |
| 20 | தமிழ்நாடு மாநில வாள்சண்டை சங்கம் | 114714 |
| 21 | த.நா. மாநில நீர் விளையாட்டுச் சங்கம் | 142217 |
| 22 | த.நா. மாநில சைக்கிள் போலோ சங்கம் | 18296 |
| 23 | தமிழ்நாடு மாநில பளு தூக்கும் சங்கம் | 4000 |
| 24 | த.நா. மாநில காது கேளாதோர் விளையாட்டுச் சங்கம் | 78179 |
| | மொத்தம் | 23,49,818 |

[2008 மே 13

### 5.7 விளையாட்டுப் பள்ளிவிடுதிகள் இதர போட்டிகளில் பங்கேற்றல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டின்கீழ், பதினொரு விளையாட்டுப் பள்ளி விடுதிகள் இயங்கி வருகின்றன. அவ்விளையாட்டுப் பள்ளி விடுதி மாணவ / மாணவியரின் விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்தும் வகையில், போட்டிகளில் கலந்து கொள்வதை ஊக்குவிக்கவும், மாநில விளையாட்டுச் சங்கங்களால் நடத்தப்படும் போட்டிகளிலும் மற்றும் இதர போட்டிகளிலும் விளையாட்டுப் பள்ளி விடுதிகள் பங்கு பெறுகின்றன.

### 5.8 "மாநில விளையாட்டுப் போட்டிகள்" ஊராட்சி ஒன்றிய அளவு, மாவட்ட அளவு மற்றும் மாநில அளவில் நடத்துதல்

கிராமப்புற இளைஞர்களுக்கு விளையாட்டுகளில் பங்கேற்கும் வாய்ப்பினை அளிப்பது மற்றும் அவர்களிடையே போட்டி மனப்பான்மையை மேம்படுத்துவது மிகவும் அவசியமாகிறது. இந்நோக்கில் "மாநில விளையாட்டுப் போட்டிகள்" 2006-2007 ஆம் ஆண்டு முதல் ஊராட்சி ஒன்றிய அளவிலும், மாவட்ட அளவிலும் மாநில அளவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்காக தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கபாடி, நீச்சல் மற்றும் கையுந்துபந்து ஆகிய விளையாட்டுகளில் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

போட்டிகள் கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெறும்:-

| | | |
|---|---|---|
| 1. | ஊராட்சி ஒன்றிய அளவில் | அக்டோபர் |
| 2. | மாவட்ட அளவில் | நவம்பர் |
| 3. | மாநில அளவில் | ஜனவரி |

### 5.9 அகில இந்திய குடிமுறை அரசுப் பணியாளர் விளையாட்டுப் போட்டிகள்

அரசுத் துறைகளில் பணிபுரியும் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தேர்வுப் போட்டிகளை நடத்தி தமிழக அணியினைத் தேர்வு செய்கிறது. அகில இந்திய அளவில் சுழற்சி முறையில் பல்வேறு மாநிலங்களில் நடத்தப்படுகின்ற அகில இந்திய குடிமுறை அரசுப் பணியாளர் சில விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அணி பங்கேற்கிறது.



2008 மே 13]

### 5.10 அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பு

இந்திய விளையாட்டுக் குழுமம் ஒவ்வோர் ஆண்டும் அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளை ஒன்பது விளையாட்டுகளில், 16 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியருக்காக நடத்தி வருகிறது. தமிழக அணி இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது.

### 5.11 தேசிய மகளிர் விளையாட்டு விழா பங்கேற்பு

இந்திய விளையாட்டுக் குழுமம் மகளிர் பிரிவினரை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க ஊக்கம் அளிக்கும் வகையில், வயது வரம்பின்றி 13 விளையாட்டுப் பிரிவுகளில் தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறது. தமிழக அணி இப்போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது. 2007-2008-ல் தேசிய பெண்கள் விளையாட்டுப் போட்டியில் பிரிவு இரண்டு தடகளம், கையுந்துபந்து, கைப்பந்து மற்றும் கபாடி தேசிய அளவிலான போட்டிகள் மதுரையில் நடைபெற்றன. இப்போட்டிகளில் கபாடி, கையுந்துபந்து ஆகிய போட்டிகளில், தமிழக அணி தங்கப் பதக்கமும், கைப்பந்து போட்டியில் வெண்கலப் பதக்கமும், தடகளப் போட்டிகளில் 4 தங்கப் பதக்கம், 2 வெள்ளிப் பதக்கம், 3 வெண்கலப் பதக்ககங்களும் வென்றன.

### 5.12 சென்னை ஓப்பன்

டென்னிஸ் விளையாட்டில் இதுகாறும் சென்னையில் "டாடா ஓப்பன்" என்ற பெயரில் டென்னிஸ் போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன. தற்போது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் மற்றும் ஐ.எம்.சி. (International Merchandising Corporation) நிறுவனமும் இணைந்து இந்த டென்னிஸ் போட்டிகளை "சென்னை ஓபன்" (CHENNAI OPEN) என்ற பெயரில் ஒவ்வோர் ஆண்டும் நடத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு (2008) ஜனவரி 1 முதல் 7 வரை சென்னை ஓப்பன் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டி சர்வதேசத் தரத்தை ஒட்டிய மற்றும் சர்வதேச அளவில் மதிப்பு மிக்க விளையாட்டுப் போட்டியாகும். இந்த போட்டிகளில் டென்னிஸ் விளையாட்டில் புகழ்பெற்ற சேம்பியன் டென்னிஸ் விளையாட்டு வீரர்களும் மற்றும் அப்போட்டிகளில் வளர்ந்து வருகின்ற விளையாட்டு வீரர்களும் சர்வதேச அளவில் தங்களுக்கென ஒரு

நிலையை ஏற்படுத்திக் கொள்ள இயலும். நம் நாட்டின் தலைசிறந்த டென்னிஸ் விளையாட்டு வீரர்கள் பங்கேற்பார்கள். இப்போட்டிகள் சர்வதேச அளவிலான விளையாட்டு சானல் (channel) மூலம் உலகளாவ ஒளிபரப்பப்பட்டன. அதனால், சென்னை ஓப்பன் என்ற பெயரினைக்கொண்ட டென்னிஸ் போட்டிகளின் நிலை உயர்த்தப்பட்டுள்ளது. இப்போட்டிகளை நடத்த தமிழ்நாடு அரசு ரூ.1 கோடி மானியம் வழங்கி வருகிறது.

**5.13 சென்னை மராத்தான்**

சென்னை மராத்தான் போட்டிகள் ஆண்கள், பெண்கள், பள்ளி மாணவ-மாணவியர், முதியோர் மற்றும் மாறுபட்ட திறனாய்வு கொண்டவருக்காக முறையே 42.3 கி.மீ. 21.15 கி.மீ. 10 கி.மீ. 5 கி.மீ. மற்றும் 3 கி.மீ. போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. வெற்றி பெற்றவருக்கு ரொக்கப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

## படலம்—6

## உதவித் தொகைகள், விருதுகள், ஊக்கத் தொகைகள்

தமிழக அரசு தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள் வழங்கி வருகின்றது.

**6.1 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உதவித் தொகைத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ், 27 விளையாட்டுகளில் தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு (குறைந்தபட்சம் தேசிய அளவில் பதக்கம் பெற்றவர்) உதவித் தொகையாக (ஆண்டுக்கு ஒருமுறை மட்டும்) உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி மாணவராக இருந்தால் ரூ.5000/-மும், கல்லூரி/பல்கலைக்கழக மாணவராக இருந்தால் ரூ.6500/-ம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு உதவித் தொகையாக ரூ.6,80,500/- பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் 125 மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்டது.

**6.2 நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கான ஒய்வூதியத் திட்டம்**

நலிந்த நிலையிலுள்ள முன்னாள் தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகள் அவர்களுடைய மாத வருமானம் ரூ.2000/-க்கு



மிகாமலும், 58 வயதைக் கடந்தவராகவும் இருந்தால், அவர்களுக்கு ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.500/- வீதம் அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது. அந்த ஓய்வூதியர் இறந்த பிறகும் அவரது மனைவிக்கும் அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இந்நாள் வரை 64 பேர் இத்திட்டத்தில் பலனடைந்து வருகின்றனர். ஓய்வூதியத் தொகையை ரூ.500/-லிருந்து உயர்த்தவும் மற்றும் வருமான உச்சவரம்பை உயர்த்துவது குறித்தும் அரசு பரிசீலித்து வருகிறது.

**6.3 விளையாட்டு வீரர்கள் நல நிதி**

தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் விளையாட்டு வீரர்கள் காயமடைந்தால் அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் பொருட்டு விளையாட்டு வீரர்கள் நல நிதி ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 2 வீரர்களுக்கு ரூ.16,770/- வழங்கப்பட்டது.

**6.4 திறமையான விளையாட்டு வீரர்களுக்கென பணி ஒதுக்கீடு செய்து நியமனம் செய்தல்**

தற்போது காவல்துறையில் நடைமுறையில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான 5 சதவிகித இட ஒதுக்கீடு முறை, ஏனைய சீருடைப் பணித் துறைகளான சிறைத் துறை, வனத் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறைக்கும் நீட்டிக்கப்படும். பொறியியல் படிப்பிற்கான சேர்க்கையில் 42 இடங்கள் விளையாட்டுச் சாதனையாளர்களுக்கு ஒதுக்கப்பட்டு வந்தது. இத்துறையின் வேண்டுகோளை ஏற்று, உயர்கல்வித் துறை இவ்வொதுக்கீட்டினை 100 இடங்களாக அதிகரித்து வழங்கியுள்ளது.

**6.5 முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது**

முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருதிற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு வீரர் / வீராங்கனைகளுக்கு தலா ரூ.1 இலட்சம் பண முடிப்பும், பாராட்டுப் பத்திரம் மற்றும் சம்பந்தப்பட்ட விளையாட்டினை பிரதிபலிக்கும் பட்டயமும் பரிசாக அரசு வழங்கி வருகின்றது. 16 நபர்களுக்கு முதலமைச்சர் மாநில விளையாட்டு விருது கீழ்க்கண்டுள்ளவாறு வழங்கப்பட்டுள்ளது.

[2008 மே 13

| வ. எண் | பெயர் | விளையாட்டு |
|---|---|---|
| **2001–2002** | | |
| 1 | செல்வி வி. ஜெயலட்சுமி | தடகளம் |
| 2 | திரு. மயூர குமார் | நீச்சல் |
| 3 | திரு. லோகநாதன் | பவர் லிப்டிங் |
| 4 | திரு. பி. சிவபாலன் | கையுந்துபந்து |
| **2002–2003** | | |
| 5 | திரு. சி. திருஞானதுரை | தடகளம் |
| 6 | திரு. கே. சசிகிரண் | சதுரங்கம் |
| 7 | செல்வி ஆர்த்தி ராமசாமி | சதுரங்கம் |
| **2003–2004** | | |
| 8 | திரு. வி. அருண் | நீச்சல் |
| 9 | திரு. டி. நிக்ஸன் | கடற்கரை கையுந்துபந்து |
| 10 | திரு. சோழா சிங்கிராயர் | கூடைப்பந்து |
| **2004–2005** | | |
| 11 | திரு. சவுரவ் கோஷல் | ஸ்குவாஷ் |
| 12 | திரு. ஆடம் ஆண்டோனி சிங்க்லர் | வளைகோல் பந்து |
| 13 | செல்வி என். லதா | தடகளம் |
| **2005–2006** | | |
| 14 | திரு. அன்பு கதிரவன் | பளுதூக்குதல் |
| 15 | செல்வி ஜெ. சுவர்னா | மேசைப்பந்து |
| 16 | செல்வி எம். சங்கீதா | தடகளம் |



2008 மே 13]

**6.6 பயிற்றுனர்களுக்கும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும் முதலமைச்சர் விருது**

ஒவ்வோர் ஆண்டும் சிறந்த பணியாற்றி, தலைசிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கிடும் இரு பயிற்றுனர்கள் மற்றும் இரு உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கு முதலமைச்சர் விருது வழங்கப்படும். ஒவ்வொரு நபருக்கும் ரூ.1 இலட்சம் பரிசுத் தொகையும், பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படும். இதுவரை கீழ்கண்ட 7 பயிற்றுனர்கள் மற்றும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு முதலமைச்சர் விருது வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பெயர் திருவாளர்கள் | பள்ளி/நிறுவனம் பெயர் | விளையாட்டு |
|---|---|---|---|
| 1 | தட்சிணாமூர்த்தி | இந்திய விளையாட்டுக் குழுமம், சென்னை | கையுந்துபந்து |
| 2 | நாகராஜன் | சுங்கவரித் துறை | தடகளம் |
| 3 | எம். ஜானகிராமன் | SBOA நிறைநிலை மேல்நிலைப் பள்ளி | தடகளம் |
| 4 | ஏ. நாகராஜன் | எஸ்.டி.ஏ.டி. வேலூர் | பளுதூக்குதல் |
| 5 | வி. ஆறுமுகம் | விளையாட்டுப் பள்ளி, கோவை | கையுந்துபந்து |
| 6 | கே. லோகநாதன் | ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை மேல்நிலைப் பள்ளி, வேலூர் | கோ–கோ |
| 7 | அமலோற்பவம் | தூய மரிய மேல்நிலைப் பள்ளி, அரிசிப்பாளையம், சேலம் | கையுந்துபந்து |

**6.7 ஊக்கத் தொகை**

தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகளில் பதக்கம் பெறும்பட்சத்தில் வீட்டுமனை மற்றும் அடுக்குமாடி வீடு வழங்குவதற்கு பதிலாக உயரிய ஊக்கத் தொகை வழங்கவும், 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும்

[2008 மே 13

தெற்காசிய மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் பெறும்பட்சத்தில், அவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கவும், அரசு, அரசாணை (நிலை) எண்.5, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 24-1-2002-ல் கீழ்க்கண்டவாறு ஆணை வழங்கியுள்ளது:-

**போட்டிகள் மற்றும் வழங்கப்படும் ஊக்கத் தொகை**

| வ. எண் | வகை | உயரிய ஊக்கத் தொகையின் அளவு (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 1 | **ஒலிம்பிக்**<br>ஒற்றையர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 100 | 50 | 25 |
| 2. | **ஆசிய விளையாட்டுப் போட்டிகள்**<br>(4 ஆண்டுகளுக்கு ஒரு முறை) ஒற்றையர் போட்டி/குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 20 | 15 | 10 |
| 3. | **காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள்**<br>(4 ஆண்டுகளுக்கு ஒரு முறை) ஒற்றையர் போட்டி/குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 20 | 15 | 10 |

| வ. எண் | போட்டிகள் | ஒற்றையர் போட்டி | | | குழுப் போட்டி | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தங்கம் ரூ | வெள்ளி ரூ. | வெண் கலம் ரூ. | தங்கம் ரூ. | வெள்ளி ரூ. | வெண் கலம் ரூ. |
| 4 | தெற்காசிய/ தேசிய விளையாட்டுப் போட்டிகள் (2 ஆண்டுக்கு ஒரு முறை) | ரூ.1 இலட்சம் | 50,000 | 25,000 | 20,000 | 15,000 | 10,000 |
| | | | | | ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | | |



2008 மே 13]

2007-2008 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட ரொக்கப் பரிசு விவரம் பின்வருமாறு:

| வ. எண் | போட்டிகளின் விவரம் | பதக்கம் பெற்றவர்கள் மற்றும் பயிற்றுனர்களின் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | 18–வது காமன்வெல்த் போட்டிகள்–2006–மெல்போர்ன் | 9 | 1,03,50,000 |
| 2. | 10–வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்–2006 – ஸ்ரீலங்கா | 30 | 12,66,250 |
| 3. | 15–வது ஆசிய விளையாட்டுப் போட்டிகள்–2006–டோகா | 11 | 86,25,000 |
| 4. | 33–வது தேசிய விளையாட்டுப் போட்டிகள்–2007–அசாம் | 98 | 30,55,000 |
| | | 148 | 2,32,96,250 |

## 6.8 சிறப்பு விருது

2007-2008 ஆம் ஆண்டுக்கு சர்வதேச அளவில் பதக்கம் பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு சிறப்பு விருது முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட விவரம் பின்வருமாறு:-

| வ. எண். | பெயர் மற்றும் போட்டிகளின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திரு விஸ்வநாதன் ஆனந்த் (சதுரங்கப் போட்டியில் உலக அளவில் இரண்டாம் முறையாக கிராண்ட் மாஸ்டர் பட்டம்) | 25,00,000 |
| 2. | செல்வன் தினேஷ் கார்த்திக், சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு வீரர் T20–20 சீரீஸ் உலகக் கோப்பை கிரிக்கெட் –2007 | 5,00,000 |
| 3. | செல்வி கவிதா, ஆசிய மகளிர் கபாடி சேம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் | 5,00,000 |
| 4. | செல்வி ஐ. இளவழகி, (கேன்ஸ்) பிரான்ஸ் நாட்டில் 2008–ல் நடைபெற்ற உலக கேரம் சேம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் | 10,00,000 |
| | மொத்தம் | 45,00,000 |

## படலம் – 7

## இளைஞர் நலத் திட்டங்கள்

### 7.1 இளைஞர் விடுதிகள்

நமது நாட்டின் பாரம்பரியப் பண்பாட்டைப் பற்றித் தெரிந்துகொள்ளவும், இளைய சமுதாயம் மேற்கொள்ளும் பயணங்களை ஊக்குவிக்கும் பொருட்டும், இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன. இளைஞர்கள் மேற்கொள்ளும் கல்விச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, இன்பச் சுற்றுலா, சரித்திரப் புகழ்பெற்ற மற்றும் பாரம்பரிய கலாச்சார மையங்களுக்குச் செல்லும்போது அவர்களுக்கு குறைந்த செலவிலான தங்கும் வசதிகளை அளிக்கும் நோக்கத்தோடு இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன.

இது மைய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்படுத்தும் திட்டமாகும். மாநில அரசு இளைஞர் விடுதி கட்டுவதற்காக முழு அளவில் மேம்படுத்தப்பட்ட நிலத்தை இலவசமாகத் தருகிறது. மைய அரசு கட்டுமானப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்கிறது.

தற்சமயம், தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய 4 நகரங்களில் இளைஞர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. உதகமண்டலத்தில் இளைஞர் விடுதி கட்டி முடிக்கப்பட்டது. இளைஞர் விடுதிக்குத் தேவையான தளவாடப் பொருட்கள் வாங்கவும், இளைஞர் விடுதியைத் துவக்கிடவும் ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 7.2 இளைஞர் விழா

சுவாமி விவேகானந்தர் அவர்களின் பிறந்தநாளைச் சிறப்பிக்கும் வகையில் ஜனவரி 12 முதல் 16 முடிய தேசிய இளைஞர் விழா மத்திய அரசின் ஆதரவில் ஒவ்வோர் ஆண்டும் வெவ்வேறு மாநிலங்களில் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்விழாவானது தேசிய ஒருமைப்பாட்டினை வளர்க்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

இவ்வாண்டு தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின்மூலம் இவ்விளைஞர் விழாவினை சென்னையில் 12-12-2008 முதல் 16-12-2008 முடிய 5 நாட்கள் நடத்திட அரசு ஆணை எண். (2டி) எண் 5, நாள். 16-4-2007-ன்மூலம் ஆணை வெளியிடப்பட்டது. இவ்விழாவினை



நடத்திட செலவிற்காக மத்திய அரசின் பங்காக ரூ.75 இலட்சமும், மாநில அரசின் பங்காக ரூ.1 கோடியும் வழங்கி அரசாணை நிலை எண் 61, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 3-12-2007-ல் ஆணையிடப்பட்டது. அதன்படி நடத்தப்பட்ட தேசிய இளைஞர் விழாவில் இந்தியாவில் உள்ள 35 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்தும் ஏறத்தாழ 3500-க்கு மேல் இளைஞர்களும், கலைஞர்களும், கலை மற்றும் தொழிட்நுட்ப வல்லுநர்களும், மத்திய மற்றும் மாநில அரசு அமைச்சர்களும், பல்வேறு நிலை அலுவலர்களும் கலந்து கொண்டார்கள்.

**துவக்க விழா** - மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள், இந்த 13-வது தேசிய இளைஞர் விழாவினை 12-1-2008 அன்று வெகு சிறப்பாக துவக்கி வைத்தார்கள். மாண்புமிகு இந்திய இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. மணி சங்கர் ஐயர் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்களும், இந்திய அரசு மற்றும் மாநில அரசு விளையாட்டுத் துறைச் செயலர்களும் மற்றும் அலுவலர்களும் கலந்து கொண்டார்கள்.

**நிறைவு விழா** - இந்த 13-வது தேசிய இளைஞர் விழாவினை 16-1-2008 அன்று மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் நிறைவு செய்து விருதுகளையும், பரிசுப் பொருட்களையும், சான்றிதழ்களையும் வழங்கிச் சிறப்பித்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. டி.பி.எம் மைதீன்கான் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இந்த தேசிய இளைஞர் விழாவில் தமிழகத்தைச் சேர்ந்த செல்வி நிவேதிதா - குச்சிபுடி செல்வி கே. தாரணி- கர்நாடக இசை, செல்வன் ஆர். ஸ்ரீராம் - வீணை, ஆகிய 3 இளைஞர்களும், கிராமிய நடனத்தில் தமிழ்நாடு குழு (காவேரி கல்லூரி, திருச்சி) வெற்றி பெற்று தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்தனர்.

### 7.3 இளைஞர் முன்னேற்றத் திட்டங்கள் மற்றும் பயிற்சிக்கு நிதி உதவி அளித்தல்

இளைஞர்களிடையே தலைமைப் பண்புகளை வளர்த்திடவும், வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றிட சிறுதொழில் பயிற்சிகளை மேற்கொள்ளவும், இளைஞர்களின் திறமைகளை ஒருங்கிணைத்து தேசிய ஒருமைப்பாட்டைப் பேணிடவும்:-

[2008 மே 13

1. தொழிற்கல்வி திட்டம்
2. தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்
3. கண்காட்சித் திட்டம்

ஆகிய திட்டங்களில் பலவித பயிற்சிகளை மேற்கொள்ள மைய அரசு நிதி உதவி அளித்து வருகிறது. பல்வேறு வணிகங்கள் மற்றும் தொழிற்கல்வி பற்றிய குறுகிய கால அளவிலான பயிற்சிகளை மேற்கொள்ள நிதி உதவி வழங்கப்படுகிறது. 15-35 வயது வரம்பிலுள்ள அனைவரும் இத்திட்டத்தில் பங்கு பெறத் தகுதியுடையவராவர். அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள், தொழில்நுட்ப பயிலகங்கள், பல்கலைக்கழகங்கள், நேரு யுவ கேந்திர சங்கேதன், சங்கங்கள் பதிவுச் சட்டம் மற்றும் பொது பொறுப்பாட்சி நிறுவனங்களின்கீழ் பதிவு செய்யப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு மைய அரசு நிதி உதவி வழங்குகிறது. அவ்வாறான, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு மேற்படி நிதி உதவி பெற்றிட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உதவி புரிகிறது.

இளைஞர்களின் பயிற்சி மற்றும் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு மைய அரசின் நிதி உதவி பெறுவதற்கான மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் பெறப்படும் கருத்துருக்கள் மைய அரசுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்டு நேரு யுவ கேந்திரா மூலமாகவும் கருத்துருக்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

## படலம்-8

## நாட்டு நலப் பணித் திட்டம்

நாட்டு நலப் பணித் திட்டம், பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும், தொழில்நுட்பப் பயிலகங்களிலும், தொழிற்பயிற்சி நிறுவனங்களிலும், ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் மற்றும் மேல் நிலைப் பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மைய அரசும், மாநில அரசும், நாட்டு நலப் பணித் திட்டத்திற்கு 7:5 என்ற விகிதத்தில் மானியம் வழங்குகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தொழில்நுட்பப் பயிலகங்கள், மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் 3,05,800 தொண்டர்கள் இருந்தனர். 2007-2008 ஆம் ஆண்டில் இத்தொண்டர்களின் எண்ணிக்கை 3,36,380 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இவர்களில் 1,69,290 தொண்டர்கள் 2007-2008-ம் ஆண்டில் சிறப்பு முகாம்களில் பங்கேற்றார்கள்.



2008 மே 13]

2007-2008-ம் ஆண்டில் ரூ.766.57 இலட்சம் நாட்டு நலப் பணித் திட்ட மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையில், ரூ.447.17 இலட்சம் மைய அரசின் பங்கும் ரூ.319.40 இலட்சம் மாநில அரசின் பங்கும் ஆகும்.

**நாட்டு நலப் பணி செயல்படும் நிறுவனங்கள்:**

1. பல்கலைக்கழகங்கள்/இயக்கங்கள் எண்ணிக்கை : 38
2. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் : 612
3. பொறியியல் கல்லூரிகள் : 205
4. தொழில்நுட்பக் கல்லூரிகள் : 201
5. தொழிற்பயிற்சி நிலையங்கள் : 43
6. ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் : 31
7. பள்ளிகள் : 1,780
8. நாட்டு நலப் பணித் திட்டத் தொண்டர்களின் மொத்த எண்ணிக்கை:

| ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|
| 2,20,173 | 1,17,364 | 3,37,537 |

## படலம்-9

## தேசிய மாணவர் படை

### 1. தொடக்கம்

தேசிய மாணவர் படை, நாடாளுமன்றம் இயற்றிய 1948 ஆம் ஆண்டு தேசிய மாணவர் படைச் சட்டத்தின் (31/1948) கீழ் 16-7-1948 ஆம் நாளிலிருந்து செயல்படத் தொடங்கியது.

### 2. நோக்கங்கள்

தேசிய மாணவர் படையின் நோக்கங்கள் வருமாறு:

(அ) நாட்டிலுள்ள இளைஞர்களிடையே பண்பு, நலன், தோழமைப் பண்பு, ஒழுக்கம், தலைமைப் பண்பு, சமயச்

[2008 மே 13

சார்பற்ற கண்ணோட்டம், சாகசச் செயலாற்றல் மற்றும் தன்னலமற்ற சேவை மனப்பான்மை ஆகியவற்றை மேம்படுத்துதல்.

(ஆ) ஒழுங்கமைவான மனிதப் பண்புடைய பயிற்சி பெற்ற மற்றும் செயல்திறமிக்க இளைஞர்களை உருவாக்குதல் மற்றும் வாழ்க்கைத் தொழில் அனைத்திலும் தலைமையேற்கும் பண்பினை அவர்களிடையே செறிப்படுத்தி நாட்டுக்கு சேவை செய்ய எப்போதும் ஆயத்தமாக இருக்கச் செய்தல்.

(இ) ஆயுதப் படையில் சேர்ந்து பணியாற்றுவதற்கு இளைஞர்களை ஊக்குவிப்பதற்கு உகந்த சூழலை உருவாக்குதல்.

**3. நிர்வாகம்**

தேசிய மாணவர் படை பாதுகாப்பு அமைச்சகத்தினால் நிர்வகிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படையை சுமுகமான முறையிலும், செவ்விய முறையிலும் நிர்வகிப்பதற்காக, மாநில அரசு, தேசிய மாணவர் படையில் தலைமை துணை இயக்குநருக்கு துறைத் தலைவருக்கான அதிகாரங்களை வழங்கியுள்ளது.

**4. வரவு–செலவு திட்ட நிதியொதுக்கம்**

2007-2008 ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசு, தேசிய மாணவர் படைக்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 17,04,61,000/- ஒதுக்கீடு செய்துள்ளது.

**5. ஊக்கத் தொகைகள்**

நம் மாநிலத்தின் தேசிய மாணவர் படைக்குக் கீழ்க்காணும் ஊக்கத் தொகைகளை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது:

(அ) தேசிய மாணவர் படையைச் சேர்ந்த 80 கல்லூரி மாணவ மாணவிகளுக்கு நபர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு 1,200 ரூபாயும் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த 90 பள்ளி மாணவ மாணவியருக்கு நபர் ஒருவருக்கு, ஆண்டொன்றுக்கு 600 ரூபாயும் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

(ஆ) குடியரசு தின முகாம் மற்றும் குடியரசு தின விழாவை மையமாகக் கொண்ட முகாம்கள் ஆகியவற்றில் கலந்து



2008 மே 13]

கொள்கிற தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்களுக்கு ரொக்க ஊக்கத் தொகை வழங்க ஆண்டொன்றுக்கு ரூபாய் 3.17 இலட்சம் அளவுக்கு தொகை வழங்கப்படுகிறது.

(இ) தமிழ்நாட்டில் பட்டதாரி ஆசிரியர் மற்றும் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் நியமன வாய்மொழித் தேர்வுக்குரிய 12 மதிப்பெண்களில் தேசிய மாணவர் படையில் பங்கேற்று பணியாற்றியதற்காக 1/2 மதிப்பெண் வழங்கப்பட்டுள்ளது.

**6. தேசிய மாணவர் படை மாணவர்களின் எண்ணிக்கை**

தமிழ்நாடு தேசிய மாணவர் படை மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் வருமாறு:

| | |
|---|---|
| தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்கள் (இளநிலைப் பிரிவு பள்ளி மாணவர்கள்) | 66,230 |
| தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவிகள் (இளநிலைப் பிரிவு பள்ளி மாணவிகள்) | 5,430 |
| தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்கள் (முதுநிலைப் பிரிவு கல்லூரி மாணவர்கள்) | 21,923 |
| தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவிகள் (முதுநிலைப் பிரிவு கல்லூரி மாணவிகள்) | 5,155 |
| மொத்தம் | 98,790 |

## இணைப்பு – 1

### தமிழக விளையாட்டு வீரர்களின் 2007–2008 ஆம் ஆண்டிற்கான சாதனைகள்

| போட்டியின் பெயர் | நடைபெற்ற இடம் மற்றும் நாள் | விளையாட்டு | வெற்றி விவரம் | |
|---|---|---|---|---|
| அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகள் | கோவா 2007 நவம்பர் 26 முதல் | கையுந்துபந்து (ஆண்கள்) | தங்கம் | 1 |
| | | கையுந்துபந்து (பெண்கள்) | வெள்ளி | 1 |
| | | பளுதூக்குதல் (ஆண்கள்) | தங்கம் | 5 |
| | | | வெள்ளி | 1 |
| | | பளுதூக்குதல் (பெண்கள்) | வெள்ளி | 2 |
| | ஃபரிதாபாத் 2008 ஜனவரி 5 முதல் 8 வரை | தடகளம் (பெண்கள்) | தங்கம் | 1 |
| | | | வெண்கலம் | 2 |
| | | | | |
| | | தடகளம் (ஆண்கள்) | வெண்கலம் | 1 |
| தேசிய பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் | தானே 2007 டிசம்பர் 24 முதல் 27 வரை | மேஜைப்பந்து | தங்கம் | 1 |
| | | நீச்சல் | தங்கம் | 1 |
| | | | வெண்கலம் | 1 |
| | மதுரை 2007 நவம்பர் 20 முதல் 23 வரை | கபாடி | தங்கம் | 1 |
| | | கையுந்துபந்து | தங்கம் | 1 |
| | | கைப்பந்து | வெண்கலம் | 1 |
| | | தடகளம் | தங்கம் | 4 |
| | | | வெள்ளி | 2 |
| | | | வெண்கலம் | 3 |
| தேசிய பள்ளிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் | ரூர்கேலா 2008 ஜனவரி 17 முதல் 20 வரை | தடகளம் | தங்கம் | 7 |
| | | | வெள்ளி | 3 |
| | | | வெண்கலம் | 5 |
| | | கூடைப்பந்து (ஆண்கள்) | தங்கம் | 1 |
| | | கூடைப்பந்து (பெண்கள்) | வெள்ளி | 1 |
| | | சிறகுப்பந்து (ஆண்கள்) | வெள்ளி | 1 |
| | | சிறகுப்பந்து (பெண்கள்) | வெள்ளி | 1 |
| | | வளைகோள்பந்து | வெண்கலம் | 1 |
| | திருவனந்தபுரம் 2007 டிசம்பர் 24 முதல் 27 வரை | பளுதூக்குதல் (ஆண்கள்) | தங்கம் | 6 |
| | | | வெண்கலம் | 2 |
| | | பளுதூக்குதல் (பெண்கள்) | தங்கம் | 1 |
| | | | வெள்ளி | 2 |
| | | | வெண்கலம் | 2 |
| | | கையுந்துபந்து (ஆண்கள்) | தங்கம் | 1 |
| | | கையுந்துபந்து (பெண்கள்) | வெண்கலம் | 1 |



| | | | | |
|---|---|---|---|---|
| | | மேஜைப்பந்து (ஆண்கள்) | தங்கம் | 1 |
| | | மேஜைப்பந்து (பெண்கள்) | வெள்ளி | 1 |
| 19வது சர்வதேச / தேசிய தடகளப் போட்டிகள் | குண்டூர் 2007 அக்டோபர் 9 முதல் 11 வரை | தடகளம் (ஆண்கள்) | தங்கம் | 4 |
| | | | வெள்ளி | 5 |

| சிறப்பு விளையாட்டு விடுதி, சென்னை (தனித்திறன் ) சாதனைகள் | | | | |
|---|---|---|---|---|
| சர்வதேச அளவிலான போட்டிகள் | கொழும்பு 2007 | தடகளம் | வெள்ளி | 2 |
| தேசிய அளவிலான போட்டிகள் | நாக்பூர் 2008 | கையுந்துபந்து | வெள்ளி | 1 |
| | குண்டூர் / விஜயவாடா/ போபால்/ மதுரை/ புதுச்சேரி | தடகளம் | தங்கம் | 4 |
| | | | வெள்ளி | 1 |
| | | | வெண்கலம் | 5 |
| மாநில அளவிலான போட்டிகள் | கரூர் / சென்னை | தடகளம் | தங்கம் | 5 |
| | | | வெள்ளி | 2 |
| | சென்னை /ஈரோடு | நீச்சல் | தங்கம் | 3 |
| | | | வெள்ளி | 6 |
| | | | வெண்கலம் | 2 |

| சிறப்பு விளையாட்டு விடுதி, சென்னை (குழு ) சாதனைகள் | | | | |
|---|---|---|---|---|
| மாநில அளவிலான போட்டிகள் | தமிழ்நாடு மாநில சாம்பியன்சிப் 2007 | கையுந்துபந்து | வெள்ளி | 1 |
| | அழைப்புப் போட்டிகள் | கையுந்துபந்து | வெள்ளி | 2 |
| | | | வெண்கலம் | 2 |
| | அழைப்புப் போட்டிகள் | கூடைப்பந்து | வெண்கலம் | 2 |

| விளையாட்டு விடுதி, திருநெல்வேலி சாதனைகள் | | | | |
|---|---|---|---|---|
| விளையாட்டு | சர்வதேச அளவில் | தேசிய அளவில் | மாநில அளவில் | மொத்தம் |
| தடகளம் | 2 | 4 | 2 | 8 |
| வளைகோள்பந்து | -- | 10 | 27 | 37 |
| கையுந்துபந்து | -- | 7 | 9 | 16 |
| நீச்சல் | -- | -- | 1 | 1 |
| மொத்தம் | 2 | 21 | 39 | 62 |

[2008 மே 13

| விளையாட்டு விடுதி, திருச்சி சாதனைகள் | | | | |
|---|---|---|---|---|
| விளையாட்டு | சர்வதேச அளவில் | தேசிய அளவில் | மாநில அளவில் | மொத்தம் |
| தடகளம் | -- | 12 | 84 | 96 |
| குத்துச்சண்டை | -- | -- | 3 | 3 |
| கையுந்துபந்து | -- | 16 | 24 | 40 |
| வளைகோல்பந்து | -- | -- | 48 | 48 |
| மொத்தம் | -- | 28 | 159 | 187 |

| விளையாட்டு விடுதி, மதுரை சாதனைகள் | | | | |
|---|---|---|---|---|
| விளையாட்டு | சர்வதேச அளவில் | தேசிய அளவில் | மாநில அளவில் | மொத்தம் |
| கால்பந்து | -- | 7 | 16 | 23 |
| கூடைப்பந்து | -- | 1 | -- | 1 |
| கையுந்துபந்து | -- | 1 | -- | 1 |
| மொத்தம் | -- | 9 | 16 | 25 |

| விளையாட்டுப் விடுதி, ஈரோடு சாதனைகள் | | | | |
|---|---|---|---|---|
| விளையாட்டு | சர்வதேச அளவில் | தேசிய அளவில் | மாநில அளவில் | மொத்தம் |
| தடகளம் | 2 | 42 | 36 | 80 |
| கையுந்துபந்து | -- | -- | 3 | 3 |

| விளையாட்டு விடுதி, கோயம்புத்தூர் சாதனைகள் | | | | |
|---|---|---|---|---|
| விளையாட்டு | சர்வதேச அளவில் | தேசிய அளவில் | மாநில அளவில் | மொத்தம் |
| கூடைப்பந்து | 2 | -- | 4 | 6 |
| கையுந்துபந்து | -- | 7 | 12 | 19 |
| கால்பந்து | -- | -- | 1 | 1 |
| மொத்தம் | 2 | 7 | 17 | 26 |

| விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி சாதனைகள் | | | | |
|---|---|---|---|---|
| விளையாட்டு | சர்வதேச அளவில் | தேசிய அளவில் | மாநில அளவில் | மொத்தம் |
| கால்பந்து | -- | -- | 1 | 1 |



2008 மே 13]

| **இந்திய பள்ளி விளையாட்டு சம்மேளனம்** | | | | |
|---|---|---|---|---|
| விளையாட்டு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
| நீச்சல் | — | 10 | 10 | 20 |
| கையுந்துபந்து | — | 1 | — | 1 |
| சதுரங்கம் | 5 | 5 | — | 10 |
| வாள்சண்டை | 4 | 4 | 1 | 9 |
| சிறகுப்பந்து | — | — | 1 | 1 |
| டேக்வொண்டோ | 1 | — | — | 1 |
| குத்துச்சண்டை | — | — | 2 | 2 |
| பளுதூக்குதல் | 3 | — | 1 | 4 |
| டென்னிஸ் | — | — | 5 | 5 |
| தடகளம் | 1 | — | — | 1 |
| மொத்தம் | 14 | 20 | 20 | 54 |

| **அகில இந்திய பல்கலைகழகங்களுக்கிடையேயான போட்டிகளில் சென்னை பல்கலைகழக வீரர்களின் சாதனைகள்** | | | | |
|---|---|---|---|---|
| விளையாட்டு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
| டென்னிஸ் | 1 | — | — | 1 |
| ஹாக்கி | 1 | — | — | 1 |
| செஸ் | 1 | — | — | 1 |
| தடகளம் | 1 | — | — | 1 |
| கிரிக்கெட் | — | 1 | — | 1 |
| கால்பந்து | — | 1 | — | 1 |
| மேசைப்பந்து (பெண்கள்) | — | 1 | — | 1 |
| கையுந்துபந்து (பெண்கள்) | — | 1 | — | 1 |
| படகு ஓட்டுதல் | — | — | 1 | 1 |
| பூப்பந்து (பெண்கள்) | — | — | 1 | 1 |
| மொத்தம் | 4 | 4 | 2 | 10 |

**தமிழக விளையாட்டு வீரர்களின் 2007–2008 ஆம் ஆண்டிற்கான தேசிய சாதனைகள்**

| போட்டியின் பெயர் | நடைபெற்ற இடம் மற்றும் நாள் | விளையாட்டு | வெற்றி விவரம் |
|---|---|---|---|
| காது கேளாதவர்க்கான 15வது தேசிய தடகள சாம்பியன் போட்டிகள் | ஜாம்ஷெட்பூர், ஜார்கண்ட் மாநிலம் 21 – 25 ஜனவரி 2008 | தடகளம் | முதலிடம் – 10<br>இரண்டாமிடம் – 1<br>மூன்றாமிடம் – 4 |
| 14வது தேசிய எறிபந்து சப்ஜூனியர் சாம்பியன் போட்டி | சென்னை 25–27 ஏப்ரல் 2007 | சிறுவர் மற்றும் சிறுமிகள் அணி | தங்கம் |
| 22வது சப்ஜூனியர் தேசிய டென்னிகாய்ட் சாம்பியன் போட்டி | மகாராஷ்டிரா 19–23 நவம்பர் 2007 | சிறுவர் குழு<br>சிறுவர் –தனி<br>சிறுவர் – இரட்டையர்<br>சிறுமியர் குழு<br>சிறுமியர் – தனி<br>கலப்பு – இரட்டையர் | தங்கம்<br>தங்கம்–1, வெள்ளி–1<br>வெண்கலம்– 1<br>வெள்ளி<br>வெண்கலம்– 1<br>வெண்கலம்– 1 |
| 3வது சீனியர் தேசிய டென்னிகாய்ட் சாம்பியன் போட்டி | மகாராஷ்டிரா 19–23 நவம்பர் 2007 | ஆண்கள் குழு<br>கலப்பு – இரட்டையர் | வெள்ளி<br>வெண்கலம் |
| 26வது ஜூனியர் தேசிய டென்னிகாய்ட் சாம்பியன் போட்டி | அகமதாபாத் 25–29 டிசம்பர் 2007 | ஆண்கள் குழு<br>ஆண்கள்<br>கலப்பு இரட்டையர் | தங்கம்<br>வெண்கலம்<br>வெண்கலம் |
| தேசிய ஸ்குவாஷ் போட்டிகள் | சென்னை 17–21 ஜூலை 2007 | ஆண்கள்<br>பெண்கள் | தங்கம்<br>தங்கம் – 2 |
| தேசிய சப்ஜூனியர் மற்றும் ஜூனியர் ஸ்குவாஷ் போட்டிகள் | அஜ்மீர் 14 – 18 அக்டோபர் 2007 | 19 வயதுக்குக் கீழ் ஆண்கள்<br>15 வயதுக்குக் கீழ் பெண்கள்<br>17 வயதுக்குக் கீழ் பெண்கள்<br>19 வயதுக்குக் கீழ் பெண்கள் | தங்கம்<br>தங்கம்<br>தங்கம்<br>தங்கம் |
| தேசிய செஸ் போட்டிகள் | | சப்–ஜூனியர்–ஆண்கள்<br>சப்–ஜூனியர்–பெண்கள் | தங்கம் –2,<br>வெள்ளி –2<br>வெண்கலம் –2<br>வெண்கலம் – 2 |



| | | | |
|---|---|---|---|
| 48–வது தேசிய ஜிம்னாஸ்டிக் போட்டிகள் | ஜல்பாய்குரி | பெண்கள் | வெள்ளி – 1<br>வெண்கலம் – 1 |
| 34–வது தேசிய ஜூனியர் நீச்சல் சாம்பியன் போட்டி | போபால் 4 –8 ஜூலை 2007 | ஆண்கள்<br>பெண்கள் | தங்கம் – 5<br>வெள்ளி – 3<br>வெண்கலம் – 22<br>தங்கம் – 7<br>வெள்ளி – 4<br>வெண்கலம் – 18 |
| தேசிய சப்–ஜூனியர் நீச்சல் சாம்பியன் போட்டி | கோவா | ஆண்கள்<br>பெண்கள் | வெள்ளி – 7<br>வெண்கலம் – 2<br>வெள்ளி – 3<br>வெண்கலம் – 5 |
| தேசிய கேரம் சாம்பியன் போட்டி | சென்னை பிப்ரவரி 1–8. 2008 | பெண்கள் | தங்கம்–1 |

[2008 மே 13

## இணைப்பு–2

### 2007–2008 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகள்

| வ. எண் | விளையாட்டுப் போட்டிகளின் விவரம் |
|---|---|
| 1 | 14-வது தேசிய (Deaf) சதுரங்கப் போட்டி சென்னை - மார்ச் 2007 |
| 2 | 43-வது ஆடவர் மற்றும் 19-வது மகளிர் தேசிய ஜூனியர் பளுதூக்கும் போட்டி சென்னை - 1-3-2007 முதல் 4-3-2007 |
| 3 | 14-வது தேசிய சப்-ஜூனியர் எறிபந்து போட்டி சென்னை - ஏப்ரல் 2007 |
| 4. | தேசிய ஜூனியர் ஹாக்கி போட்டி சென்னை - 20-6-2007 முதல் 30-6-2007 |
| 5. | இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான சர்வதேச கையுந்துபந்து டெஸ்ட் போட்டி சென்னை - ஆகஸ்டு 2007. |
| 6. | ஆசிய ஹாக்கி கோப்பை (ஆடவர்) சென்னை - செப்டம்பர் 2007 இந்தியா–பெல்ஜியம் சர்வதேச ஹாக்கி டெஸ்ட் போட்டி சென்னை - டிசம்பர் 2008 |
| 7 | 33-வது தேசிய மகளிர் விளையாட்டு விழா குரூப்-2 மதுரை - 20-11-2007 முதல் 23-11-2007 |
| 8 | தேசிய ஜூனியர் மகளிர் கால்பந்துப் போட்டி திண்டுக்கல் - 21-11-2007 முதல் 7-12-2007 |
| 9 | 13-வது தேசிய சைக்கிளிங் போட்டி நாமக்கல் - 27-12-2007 முதல் 31-12-2007 |
| 10 | 69-வது தேசிய சப்-ஜூனியர் டேபிள் டென்னிஸ் போட்டி சென்னை - 22-12-2007 முதல் 29-12-2007 |
| 11 | 36-வது தேசிய ஜூனியர் மற்றும் இன்டர் ஸ்டேட் கேரம் போட்டி கோயம்புத்தூர் - 30-12-2007 முதல் 4-1-2008 முடிய |
| 12 | 13-வது தேசிய இளைஞர் விழா சென்னை - 12-1-2008 முதல் 17-1-2008 முடிய |
| 13 | 37-வது தேசிய சீனியர் மற்றும் இன்டர் ஸ்டேட் கேரம் போட்டி சென்னை - பிப்ரவரி 2008. |
| 14. | 21 வயதுக்குட்பட்ட தேசிய கால்பந்துப் போட்டி மதுரை - 1-2-2008 முதல் 17-2-2008 |



2008 மே 13]

## இணைப்பு–3

### தமிழ்நாடு நாட்டு நலப் பணித் திட்டத்தில் பங்குபெறும் நிறுவனங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | பல்கலைக்கழகங்கள்/இயக்கங்கள் எண்ணிக்கை | : | 38 |
| 2. | கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | : | 612 |
| 3. | பொறியியல் கல்லூரிகள் | : | 205 |
| 4. | தொழில்நுட்பக் கல்லூரிகள் | : | 201 |
| 5 | தொழிற்பயிற்சி நிலையங்கள் | : | 43 |
| 6. | ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் | : | 31 |
| 7. | பள்ளிகள் | : | 1,780 |

8. நாட்டு நலப் பணித் திட்ட தொண்டர்களின் எண்ணிக்கை:

| ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|
| 2,20,173 | 1,17,364 | 3,37,537 |

**நாட்டு நலப் பணித் திட்டத் தொண்டர்கள் பின்வரும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகாம்கள் நடத்தி வருகின்றனர் :–**

1. தலைமைப் பண்பு
2. அனைவருக்கும் கல்வி
3. குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு
4. தலைக் கவசம் அணிதல் பற்றிய விழிப்புணர்வு
5. சிக்குன்குனியா, சர்க்கரை நோய் பற்றிய விழிப்புணர்வு
6. சுற்றுச்சூழல் பாதுகாப்பு
7. நுகர்வோர் பாதுகாப்பு
8. மனித உரிமைகள்
9. சமூக நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு
10. இரத்த தான முகாம்

**தொண்டர்களால் நடத்தப்படும் கருத்தரங்குகள் மற்றும் கலந்தாய்வுகள்:–**

1. தொழில்நுட்பமும் கிராம வளர்ச்சியும்
2. தேசிய வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு
3. பேரிடர் மேலாண்மைப் பயிற்சி முகாம்
4. வேலைவாய்ப்பு வழிகாட்டல்
5. பெண்கள் மேம்பாடு
6. எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வு

[2008 மே 13

## இணைப்பு—4

### தேசிய மாணவர் படை எண்ணிக்கை விவரம்

| தேசிய மாணவர் படை தலைமையகம் | மாணவர்களின் எண்ணிக்கை | | | | ANOs எண்ணிக்கை | | Troops எண்ணிக்கை | Coys எண்ணிக்கை | பள்ளிகளின் எண்ணிக்கை | கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | முது நிலை பிரிவு | முதுநிலை பெண்கள் | இளநிலை பிரிவு | இளநிலை பெண்கள் | முதுநிலை பிரிவு/ முதுநிலை பெண்கள் | இளநிலை பிரிவு/ இளநிலை பெண்கள் | | | | |
| தமிழ்நாடு | 20535 | 5155 | 58684 | 5300 | 279 | 654 | 541 | 150.9 | 698 | 326 |
| புதுச்சேரி | 1824 | 250 | 7665 | 250 | 25 | 82 | 80 | 13 | 80 | 31 |
| அந்தமான் (ம) நிக்கோபர் | 155 | 0 | 819 | 0 | 3 | 12 | 0 | 1 | 16 | 2 |
| மொத்தம் | 22514 | 5405 | 67168 | 5550 | 307 | 748 | 621 | 164.9 | 794 | 359 |



2008 மே 13]

## இணைப்பு—5

### தேசிய இளைஞர் விருது பெற்றோர் விவரம் (தமிழ்நாடு)

| வ.எண் | வருடம் | பெயர் திருவாளர்கள் |
|---|---|---|
| 1. | 1985 | ஏழுமலை மணி |
| 2. | 1987-1988 | பி.நடராஜன் |
| 3. | 1987-1988 | ஸ்டான் தக்கச்சரா |
| 4. | 1988-1989 | ஆர்.வேலுச்சாமி |
| 5. | 1989-1990 | யு. கருணாநிதி |
| 6. | 1989-1990 | எஸ்.உமா |
| 7. | 1990-1991 | மாரியப்பன் |
| 8. | 1990-1991 | வி.பி.ரோஹிணி |
| 9. | 1990-1991 | எம்.ஐ.ஹபிபுல்லா |
| 10. | 1995-1996 | எஸ்.ஜாஹீர் |
| 11. | 1995-1996 | பி. டேனியல் அகஸ்டோஸ் பிரபாகர் |
| 12. | 1996-1997 | ஆர்.எல் நந்தகுமார் |
| 13. | 1996-1997 | செல்வகுமார் |
| 14. | 1996-1997 | எம்.கிரி |
| 15. | 1996-1997 | ஜி.கார்த்திகேயன் |
| 16. | 1997-1998 | ரதிகலா |
| 17. | 1998-1999 | பி.வில்பெரடு சவுந்தரம் |
| 18. | 1999-2000 | சி.தேவிகா |
| 19. | 1999-2000 | டி.சோமசுந்தரம் |
| 20. | 1999-2000 | கே.விஜயராகவன் |
| 21. | 2000-2001 | பி.சந்தானலட்சுமி |
| 22. | 2001-2002 | ஆர். ஞானசேகரன் |
| 23. | 2001-2002 | பி.என்.லட்சுமணன் |
| 24. | 2001-2002 | ஜி.எம்.எழில் ஏழுமலை |
| 25. | 2002-2003 | ஏ.வெள்ளியங்கிரி |
| 26. | 2003-2004 | ஏ.பி.என்.கதிர்வேலு |
| 27. | 2004-2005 | கே.மருதாச்சலம் |
| 28. | 2007 | மணிக்ஷா |
| 13—வது தேசிய இளைஞர் விழா 2008—ல் பரிசு பெற்றோர் | | |
| 29. | 2008 | நிவேதிதா |
| 30. | 2008 | கே.தாரணி |
| 31. | 2008 | ஆர்.ஸ்ரீராம் |

[2008 மே 13

## இணைப்பு–6

### தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒலிம்பிக் மற்றும் ஒலிம்பிக் சாராத விளையாட்டுகள்

| ஒலிம்பிக் விளையாட்டுப் பிரிவுகள் | | ஒலிம்பிக் சாராத விளையாட்டுப் பிரிவுகள் | |
|---|---|---|---|
| 1. | தடகளம் | 1. | பூப்பந்து |
| 2. | நீச்சல் | 2. | பில்லியர்ட்ஸ் & ஸ்நூக்கர்ஸ் |
| 3. | கூடைப்பந்து | 3. | உடல் கட்டமைப்பு |
| 4. | பூப்பந்து | 4. | பிரிட்ஜ் |
| 5. | குத்துச்சண்டை | 5. | கேரம் |
| 6. | சைக்கிளிங் | 6. | சதுரங்கம் |
| 7. | வாள்வீச்சு | 7. | கிரிக்கெட் |
| 8. | கால்பந்து | 8. | சைக்கிள் போலோ |
| 9. | ஜிம்னாஸ்டிக்ஸ் | 9. | கோல்ப் |
| 10. | ஹாக்கி | 10. | கபடி |
| 11. | ஜூடோ | 11. | கோ-கோ |
| 12. | கராத்தே-டோ | 12. | வலுதூக்கல் |
| 13. | படகுப் போட்டி | 13. | ஸ்குவாஷ் |
| 14. | துப்பாக்கி சுடுதல் | 14. | சிலம்பாட்டம் |
| 15. | மேசைப்பந்து | 15. | சூட்டிங் பால் |
| 16. | டென்னிஸ் | 16. | வளைப்பந்து |
| 17. | டேக்-வொண்-டோ | 17. | எறிபந்து |
| 18. | ட்ரையத்லான் | 18. | யோகாசனா |
| 19. | கையுந்துபந்து | 19. | யுஷூ |
| 20. | பளுதூக்கல் | 20. | ரக்பி கால்பந்து |
| 21. | மல்யுத்தம் | | |
| 22. | கைப்பந்து | | |



2008 மே 13]

## இணைப்பு–7

### தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட மாநில விளையாட்டுச் சங்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | தடகள சங்கம் | 25. | பில்லியர்ட்ஸ் & ஸ்நூக்கர்ஸ் சங்கம் |
| 2. | நீச்சல் சங்கம் | 26. | உடற்கட்டமைப்பு சங்கம் |
| 3. | கூடைப்பந்து சங்கம் | 27. | பிரிட்ஜ் சங்கம் |
| 4. | பூப்பந்து சங்கம் | 28. | கேரம் சங்கம் |
| 5. | குத்துச்சண்டை சங்கம் | 29. | சதுரங்க சங்கம் |
| 6. | சைக்கிளிங் சங்கம் | 30. | கிரிக்கெட் சங்கம் |
| 7. | வாள்வீச்சு சங்கம் | 31. | சைக்கிள் போலோ சங்கம் |
| 8. | கால்பந்து சங்கம் | 32. | கோல்ப் சங்கம் |
| 9. | ஜிம்னாஸ்டிக்ஸ் சங்கம் | 33. | கபடி சங்கம் |
| 10. | ஹாக்கி சங்கம் | 34. | கோ-கோ சங்கம் |
| 11. | ஜூடோ சங்கம் | 35. | பவர்லிப்டிங் சங்கம் |
| 12. | கராத்தே-டோ சங்கம் | 36. | ஸ்குவாஷ் சங்கம் |
| 13. | ரோயிங் சங்கம் | 37. | சிலம்பாட்டம் சங்கம் |
| 14. | துப்பாக்கி சுடுதல் சங்கம் | 38. | துப்பாக்கி சுடுதல் சங்கம் |
| 15. | ஸ்குவாஷ் சங்கம் | 39. | காது கேளாதோர் விளையாட்டு சங்கம் |
| 16. | மேசைப்பந்து சங்கம் | 40. | டென்னிகாய்ட் சங்கம் |
| 17. | டென்னிஸ் சங்கம் | 41. | எறிபந்து சங்கம் |
| 18. | டேக்-வொண்-டோ சங்கம் | 42. | தலைசிறந்த தடகள சங்கம் |
| 19. | ட்ரையத்லான் சங்கம் | 43. | யோகாசன சங்கம் |
| 20. | வாலிபால் சங்கம் | 44. | யுஷூ சங்கம் |
| 21. | பளுதூக்கும் சங்கம் | 45. | ரக்பி கால்பந்து சங்கம் |
| 22. | மல்யுத்த சங்கம் | 46. | பெண்கள் கிரிக்கெட் சங்கம் |
| 23. | ஒலிம்பிக் சங்கம் | 47. | கைப்பந்து சங்கம் |
| 24. | பால் பாட்மின்டன் சங்கம் | | |

## இணைப்பு-V

(206 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

# மானியக் கோரிக்கை எண் 15-சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

### முன்னுரை

இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் வனங்கள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. வனங்களின் பசுமைப் போர்வை, தட்பவெட்ப நிலையைச் சீராக வைப்பதுடன் மழை பெய்ய முக்கியக் காரணமாகவும் அமைகின்றது. ஆறுகளின் பிறப்பிடமாக, ஆயிரக்கணக்கான மக்களுக்கு வாழ்வாதாரமாக, ஆபத்திலிருந்து பாதுகாக்கும் அலையாத்திக் காடுகளாக வனங்கள் திகழ்கின்றன. பல்லுயிர்ப் பெருக்கத்தின் புகலிடமாக விளங்கும் காடுகள், வன விலங்குகளுக்கு உய்விடமாகவும், அரிய வகை மூலிகைகளின் உறைவிடமாகவும், மலைவாழ் மக்களின் வாழ்க்கைக்கு அரணாகவும் விளங்குகின்றன. மண் அரிமானத்தைத் தடுத்து, வேளாண்மையின் வளர்ப்புத் தாயாகவும் காடுகள் விளங்குகின்றன. நச்சு வாயுக்களின் தாக்கத்தினால் ஏற்படும் விளைவுகள், குறைந்து வரும் வேளாண்மை உற்பத்தித் திறன், தண்ணீர்ப் பற்றாக்குறை மற்றும் அதிகரித்து வரும் மாசுகள் போன்ற முக்கிய காரணங்களினால் வனங்களின் முக்கியத்துவம் முன்பைவிடத் தற்போது பெரிதும் உணரப்படுகின்றது.

### 2. வனப் பரப்பு மற்றும் பசுமைப் போர்வை

இந்தியாவில் உள்ள மொத்த நிலப் பரப்பில் 33% வனப் பரப்பாக ஏற்படுத்தவேண்டும் என்பது தேசிய அளவில் பின்பற்றப்படும் குறிக்கோளாகும். இஃது நகரமயமாக்கப்பட்ட பகுதிகளின் பரப்பளவு, தொழில் வளர்ச்சி போன்ற பல்வேறு காரணங்களினால் பல்வேறு மாநிலங்களிலும் வித்தியாசமாகக் காணப்படுகிறது. மொத்தமுள்ள நிலப் பரப்பில் ஒவ்வொரு மாநிலமும் வனப் பரப்பின் அளவைக் கூட்ட முற்படவேண்டும் என்பதே காலத்தின் கட்டாயமாக

விளங்குகிறது. வனப்பரப்பு மட்டுமல்லாமல், வனப் பகுதிகளின் வெளியே மரம் வளர்ப்பதை ஊக்குவிப்பதன்மூலமும் பசுமைப் போர்வையை அதிகரிக்கமுடியும்.

வனப் பரப்பை அதிகரிப்பதிலும், மரம் வளர்ப்பதை ஊக்குவிப்பதன்மூலம் பசுமைப் போர்வையை அதிகரிப்பதிலும் தமிழ்நாடு வெற்றியைக் கண்டுள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன்பு வெளியிடப்பட்டுள்ள இந்திய வன நில அளவை நிறுவனத்தின் அறிக்கையில் இந்தியாவில் உள்ள வனப் பரப்பு 728 ச.கி.மீ. குறைந்துள்ளதாகவும், தமிழ்நாட்டில் இஃது 41 ச.கி.மீ. அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் மரம் வளர்ப்பதை ஊக்குவிக்கும் முயற்சிகளிலும் தமிழகம் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. இந்தியாவில் வனங்களுக்கு வெளியே உள்ள பசுமைப் போர்வை 3.05%-லிருந்து 2.79% ஆகக் குறைந்துள்ளது. ஆனால், அதே சமயத்தில் இந்திய வன நில அளவை நிறுவனத்தின் அறிக்கையில் தமிழகத்தில் இஃது 3.66%-லிருந்து 4.26% ஆக உயர்ந்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கின்றது.

### 3. பல்லுயிர்ப் பெருக்கம்

தமிழகம் 5,640 வகை பூக்கும் தாவரங்களைத் கொண்டு இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது. இந்தியாவில் உள்ள மொத்த பூக்கும் தாவரங்களின் வகைகள் 17,672 மட்டுமே. தமிழ்நாட்டில் உள்ள 533 உள்ளூர் தாவர வகைகளும், 230 அரிய தாவரவகைகளும், 1,559 மூலிகை வகைகளும், 260 பயிரடப்பட்டு வரும் வனம் சார்ந்த தாவர வகைகளும் மாநிலத்திலுள்ள பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. இந்தியாவில் உள்ள 1,022 பூக்காத தாவர வகைகளில், தமிழ்நாட்டில் 184 வகைகள் காணப்படுகின்றன.

தமிழ்நாட்டின் விலங்கின வகைப்பாட்டில் 165 தெளிந்த நீரில் வாழும் மீன் இனங்கள், 76 நீர்நில வாழ் உயிரினங்கள், 177 ஊர்வன வகைகள், 454 பறவையினங்கள் மற்றும் 187 பாலூட்டி வகைகளும் காணப்படுகின்றன.

காப்பு வனப் பகுதிகளும் மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதிகளும் மாநிலத்தின் பல்லுயிர் வளங்களைத் தன்னகத்தே கொண்ட களஞ்சியங்களாகத் திகழ்கின்றன. தமிழ்நாட்டின் தாவர வளம்,



தட்பவெப்பம், கடல் மட்டத்திலிருந்து உயரம் மற்றும் நிலத் தன்மை போன்ற பல்வேறு காரணங்களினால் மாறுபட்டு காணப்படுகிறது. இதனை 1) கடற்கரையோரத் தாவர வளம் 2) தீவுகளில் உள்ள தாவர வளம் 3) உட்புறச் சமவெளிகளில் உள்ள தாவர வளம் 4) குன்றுகள் மற்றும் மலைப் பகுதிகளில் உள்ள தாவர வளம் என்று நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

கடற்கரையோர தாவர வளத்தில் முகத்துவாரக் காடுகள் மற்றும் கடற்கரையோர வெப்ப மண்டல, வறண்ட மற்றும் பசுமைமாறாக் காடுகள் அடங்கும். தீவுகளில் உள்ள தாவர வளத்தில் உவர் சதுப்பு நிலங்களும், சதுப்பு நிலக் காடுகளும் அடங்கும். சமவெளித் தாவர வளம் தெற்கு வெப்ப மண்டல முட்காடுகளை உள்ளடக்கியது. குன்றுகள் மற்றும் மலைகளில் உள்ள தாவர வளம் வறண்ட இலையுதிர் காடுகள், ஈரப்பதம் உள்ள இலையுதிர் காடுகள், சிறு பசுமைமாறாக் காடுகள் மற்றும் சோலைக் காடுகள் ஆகிய ஈரப்பதமான பசுமைமாறாக் காடுகளைக் உள்ளடக்கியது. முக்கியமான வன வகைகளில் புல்வெளிகளும், மூங்கில் மற்றும் நாணல் காடுகளும் அடங்கும்.

மேற்குத் தொடர்ச்சி மலை உலக அளவில் பல்லுயிர்ப் பெருக்கத்தில் முக்கியத்துவம் கொண்ட 25 இடங்களுள் ஒன்றாகும். இந்தியாவிற்கே உரித்தான உயிரினங்களைத் தன்னகத்தே கொண்ட 3 பெரும் பகுதிகளில் இது ஒன்றாகும். கன்னியாகுமரி, களக்காடு-முண்டந்துறை, கொடைக்கானல், நீலகிரி, ஆனைமலை, முதுமலை, முக்கூர்த்தி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள காடுகள் மேற்குத் தொடர்ச்சி மலைக்கே உரிய தாவர உயிரின வகைகளைக் கொண்டுள்ளவையாக அமைந்துள்ளன.

தமிழ்நாட்டின் .வன மேலாண்மை பாதுகாப்பினை மையமாகக் கொண்டுள்ளது. பல்லுயிரினப் பரவல் தன்மைக்கு பாதுகாப்பு வன மேலாண்மையில் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் அண்மையில் தயாரிக்கப்பட்ட அனைத்து வனச் செயல் திட்டங்களிலும் பல்லுயிர்ப் பரவல் தன்மை ஒரு அத்தியாயமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கான மேலாண்மைத் திட்டங்கள் உள்ளூரிலுள்ள பல்லுயிரினப் பரவல் தன்மையைக் கண்டறிந்து அவற்றைப் பாதுகாப்பதற்கான செயல்திட்டங்கள் மற்றும் வழிமுறைகள் குறித்த ஆலோசனைகளை வழங்கக் கூடியவையாக உள்ளன.

[2008 மே 13

மாநிலத்தின் பல்லுயிரினப் பரவல் தன்மை பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் பேணுதலில் வனத் துறையின் மேலாண்மைத் திட்டங்களும் செயல்திட்டங்களும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

### 4. தட்ப வெப்பநிலை மாறுபாட்டினால் ஏற்படும் தாக்கங்கள்

தொழில் வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சியின் விளைவாக உலகில் உள்ள இயற்கை வளங்களான நிலக்கரி, டீசல், பெட்ரோல் போன்ற இயற்கைச் செல்வங்கள் மிக அதிக அளவில் மனிதனால் பயன்படுத்தப்படுகின்றன. இதனால், அண்டவெளியில் கார்பன்-டை-ஆக்ஸைடு, ஹைட்ரோகார்பன், மீத்தேன் (Methane), நைட்ரஸ் ஆக்ஸைடு ($No_2$) மற்றும் கார்பன் மோனோ-ஆக்ஸைடு போன்ற பாதகமான வாயுக்களின் அளவு ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. சூரியனிலிருந்து பெறப்படும் வெப்பம், அண்டவெளியில் பரவி வெளியேற வாய்ப்பு இல்லாமல் புவியின் சுற்றுப்புறத்திலேயே தேக்கப்படுகிறது. எனவே, வெப்பம் மென்மேலும் அதிகரித்துக்கொண்டே போகிறது. ஊர்திகளின் பெருக்கம், தொழிற்சாலைகளின் பெருக்கம், நகர்ப்புற வளர்ச்சியால் அன்றாடம் வெளியேற்றப்படும் கழிவுகள் போன்ற பல்வேறு காரணங்களால் ஏற்படுகின்ற நச்சு வாயுக்கள் பூமியின் இயல்பான வெப்ப நிலையை மெல்ல உயர்த்திக்கொண்டே வருகின்றன. இதன் விளைவாக பனிக் கட்டிகள் உருகுதல், அதன்மூலம் கடல் மட்டம் உயருதல் போன்ற மிகப் பெரிய அபாய நிகழ்வுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது.

இத்தகைய வெப்ப மாற்றத்தினால் மனிதனுக்கு நோய், வன உயிரினங்கள் உயிரிழப்பு, நீர் பற்றாக்குறையினால் விவசாய பாதிப்பு மற்றும் தாவர வகைகள் அழியும் நிலை உருவாகும். 21 ஆம் நூற்றாண்டில் சராசரி வளிமண்டல வெப்பம் அதிக அளவு உயரும் எனவும், ஆண்டுக்காண்டு மழைப் பொழிவு அளவில் மிகுந்த வேறுபாடு இருக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. இவற்றைத் தடுத்து நிறுத்த தட்பவெப்ப நிலையினை சமச்சீராக வைப்பதற்கும், காற்றில் கலந்துள்ள கரியமில வாயுவின் அளவினைக் குறைப்பதற்கும் மரங்கள் மிக அவசியமாகும்.

### 5. காடுகள் தட்பவெப்ப நிலை மாறுதல்களைக் கட்டுப்படுத்தும்

காடுகளைப் பாதுகாத்தல் மற்றும் மரக் கன்றுகளை நடுதல், வளிமண்டலத்தில் உள்ள கார்பன்-டை-ஆக்ஸைடு வாயுவை உறிஞ்சி எடுத்து அவற்றைத் தாவரங்களிலும், நிலத்திலும் நிலை பெறச்செய்யும்.



2008 மே 13]

இவ்வாறு காடுகளின்மூலம், உலகளாவிய வெப்ப உயர்வினால் மக்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் ஏற்படும் இன்னல்களைக் கட்டுப்படுத்த இயலும்.

### 6. வனக் கொள்கை

தமிழகத்தின் வனக் கொள்கை மற்றும் வனத் துறையின் செயல்பாடுகள், தேசிய வனக் கொள்கையைச் சார்ந்து அமைந்துள்ளன. 1988-ல் வகுக்கப்பட்ட தேசிய வனக் கொள்கையில், காடுகள் பராமரிப்பு அவற்றின் மேலாண்மைக்கு பின்பற்றப்பட வேண்டிய கோட்பாடுகளைப்பற்றியும் மற்றும் அணுகு முறைகளைப்பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது. வனக் கொள்கையின் முதன்மையான குறிக்கோள் சூழலமைப்பை நிலைப்படுத்துதல், மனித இனம், விலங்கினம் மற்றும் தாவரங்கள் போன்ற அனைத்து உயிரினங்களின் வாழ்விற்கு முக்கியமான சூழல் சமநிலை மற்றும் வளிமண்டலச் சமன்பாட்டுடன் கூடிய சூழலமைப்பை நிலைநிறுத்திப் பராமரிப்பதாகும். வனங்களின் வளங்களைப் பொருளாதார வளர்ச்சிக்காக பயன்படுத்துதல் என்பதைக் குறைந்த முக்கியமுடையதாகவே கருதவேண்டும்.

இந்தப் பின்னணியில் தமிழகத்திலுள்ள காடுகள் பின்வரும் நோக்கங்களுடன் மேலாண்மை செய்யப்பட்டு வருகின்றன:

- மாநிலத்தின் சுற்றுச்சூழல் மற்றும் சூழலமைப்பின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துதல்
- பல்லுயிர்ப் பரவல் தன்மை, வன உயிரினம் மற்றும் மரபியல் வளங்களைப் பாதுகாத்தல்
- தரங்குன்றிய வனங்களை மீட்டு புனர்வாழ்வளித்தல்
- கடலோரச் சூழல் அமைப்பு பாதுகாப்பு மற்றும் மேலாண்மை
- வன மேலாண்மை மற்றும் பெருக்கத்திற்கான வனப் பாதுகாப்பு
- வாழ்வாதாரப் பாதுகாப்பிற்காக, வனங்களுக்கு வெளியே மரங்கள் அடர்ந்த பகுதிகளை விரிவுபடுத்துதல்
- வனப் பாதுகாப்பு மற்றும் நீர்ப்பிடிப்புப் பகுதி மேலாண்மைமூலம் நீர்வளத்தினைப் பெருக்குதல்

[2008 மே 13

- பொருளாதாரச் செழுமை மற்றும் சூழல் நிலைத்தன்மையினை உறுதிப்படுத்த பழங்குடியினர் மேம்பாடு
- விஞ்ஞான ரீதியான வன மேலாண்மைக்கான தொழில்நுட்ப உதவி, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி
- மரங்கள் அடர்ந்த பகுதிகளை அதிகரிக்க வன விரிவாக்கம், வன உயிரின மேலாண்மை சார்ந்த பாதுகாப்புக் கல்வி
- ஊரக எரிசக்திப் பாதுகாப்பிற்கான வனவியல்
- வனப் பகுதிகளை பாதுகாக்கும் நோக்கத்துடன் சுற்றுலா ஊக்குவிப்பு
- வனவியல் மேலாண்மைக்கான மனித வள மேம்பாடு
- தட்பவெப்ப நிலை மாறுபாட்டினைக் குறைத்தல்

சுற்றுச்சூழலை நிலைப்படுத்துதல், வனங்களைப் பாதுகாத்தல், வன உயிரினப் பாதுகாப்பு மற்றும் மரபியல் வளங்களைப் பாதுகாத்தல், வன உற்பத்தித் திறனை அதிகரிக்கும் அனைத்து இயற்கைக் காடுகளையும் பராமரித்தல், வனங்களின் நீர்வளங்களைச் செழிப்பாக்குதல் மற்றும் மாநிலத்தின் காடுகள்/மரங்கள் அடர்ந்த பகுதிகளை அதிகரித்தல் ஆகியவை மாநில வனக் கொள்கையின் முக்கிய அம்சங்களாக அமைந்துள்ளன.

## 7. சட்டங்கள்

வனக் கொள்கையை நடைமுறைப்படுத்த தமிழ்நாடு வனச் சட்டம், 1882, தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949, தமிழ்நாடு மலைப் பகுதி (மரங்கள் பாதுகாப்பு) சட்டம், 1955, வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம், 1972, தமிழ்நாடு வனப் பாதுகாப்புச் சட்டம், 1980, பல்லுயிரினப் பரவல் சட்டம், 2002 போன்ற பல சட்டங்கள் இயற்றப்பட்டு வனத் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 8. செயலாக்க விவரங்கள்

வனக் கொள்கையின் குறிக்கோள்களை நடைமுறைப் படுத்துவதற்காக பின்பற்றப்படும் பல்வேறு செயல்முறைகள் குறித்து கீழே விவரிக்கப்பட்டுள்ளன.



2008 மே 13]

### 8.1. வனங்களுக்கு வெளியே பசுமைப் போர்வையை அதிகரித்தல்

வனங்களுக்கு வெளியே பசுமைப் போர்வையை அதிகரிக்க தனியார் நிலங்களில் மரங்கள் வளர்த்தல், நகர்ப்புற வனவியல் திட்டம், படுகை நிலங்களில் தேக்கு மரங்கள் வளர்த்தல், மரக் கன்றுகளை நகர்ப்புறங்களில் இலவசமாக வழங்குதல் போன்ற பல்வேறு சிறப்பான திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

### 8.1.1 தனியார் நிலங்களில் மரம் வளர்த்தல்:

வனப் பகுதிகளுக்கு வெளியே மரம் வளர்ப்பை ஊக்குவிக்க ஒரு புதிய திட்டம் 2007-08 ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே முதல் முறையாகத் தமிழகத்தில் தொடங்கப்பட்டது. தனியார் தரிசு நிலங்களிலும், சிறு, குறு விவசாயிகளின் நிலங்களின் வரப்புகளிலும், வயல்களில் பயிர் நடுவே உள்ள காலி இடங்களிலும் மரம் வளர்ப்பை ஊக்குவிக்க இத்திட்டம் முற்படுகிறது. இதனால் விவசாயிகளின் வருமானம் அதிகரிப்பதுடன், தொழில் வளர்ச்சிக்குத் தேவையான கூழ்மரம் வருங்காலங்களில் கிடைக்கவும் இத்திட்டம் உதவுகின்றது. கிராமப்புறங்களில் மரங்களின் அடர்த்தி உயருவதால் சுற்றுச்சூழல் சீரடைவதற்கும் இஃது வழிவகை செய்கின்றது.

2007-08-ல் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட இத்திட்டத்தின்கீழ் சவுக்கு, தேக்கு, நெல்லி, மலைவேம்பு, பெருமரம் போன்ற முக்கிய வகைகளின் மரக் கன்றுகள் வனத் துறையால் வளர்க்கப்பட்டு இலவசமாக விவசாயிகளின் நிலங்களில் நடவு செய்து வழங்கப்பட்டன. தரிசு நில விவசாயிகளுக்கு அவர்களது நிலங்களில் ஏற்படுத்தப்பட்ட தொகுப்புத் தோட்டங்களின் பராமரிப்புக்காக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.3,750 மானியமாகவும், வரப்புகளிலும் பயிர்களின் இடையே உள்ள காலி இடங்களில் நடவு செய்யப்பட்ட மரக் கன்றுகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.2,500 மானியமாகவும் வழங்க இத்திட்டம் வகை செய்கின்றது. இவ்வாறு சுமார் 15000 விவசாயிகள் பயன்பெறும் வகையில் தனியார் நிலங்களில் ஒரு கோடி மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. 2008-09 ஆம் ஆண்டில் இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு சுமார் 10 கோடி மரக் கன்றுகள் தனியார் நிலங்களில் நடவு செய்து மானிய உதவியுடன் வழங்கப்படும்.

### 8.1.2. நகர்ப்புற வனவியல்

விரைவாகப் பெருகி வரும் மக்கள்தொகை மற்றும் நகர மயமாக்குதலின் விளைவாகத் தமிழ்நாட்டில் ஆறு மாநகராட்சிகளில்

மாசின் அளவு உயர்ந்துள்ளது. மரங்கள் மாசினைக் கட்டுப்படுத்துவது மட்டுமின்றி கார்பன்-டை-ஆக்ஸைடு மற்றும் மீத்தேன் போன்ற வாயுக்களைக் உறிஞ்சும் பெட்டகமாகவும் விளங்கும் ஆற்றல் படைத்தவை. எனவே, காற்று, நீர் மற்றும் ஒலி மாசுக்களின் எதிர்மறை விளைவுகளைக் கட்டுப்படுத்தி, நகரத்தின் அழகான தோற்றத்தினை மேம்படுத்தும் நோக்கங்களுடன் ஒரு நகர்புற வனவியல் திட்டம் 2007-08 ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், சாலை ஓரங்களிலும், முக்கியச் சாலை வளைவுகளிலும் வேம்பு, புங்கன், மகிழம், மஞ்சக்கொன்னை, சரக்கொன்றை போன்ற மர வகைகள் நடப்பட்டுள்ளன. சாலையின் அழகான தோற்றத்திற்கு உகந்த மர வகைகள் தேர்வு செய்யப்பட்டு நடப்பட்டுள்ளன. இம்மரக் கன்றுகளின் உரிய பாதுகாப்பிற்கென வேலிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் ரூ. 3 கோடி வழங்கியுள்ளது. 2007-08 ஆம் ஆண்டில் 1,17,647 மரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, சென்னை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சேலம் மற்றும் கோவை மாநகராட்சிகளிலும் அவற்றின் புறநகர்ப் பகுதிகளிலும் நடப்பட்டுள்ளன.

2008-09 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்பட்டு சிறப்பாகச் செயல்படுத்தப்படும்.

### 8.1.3. படுகை நிலங்களில் தேக்கு மரங்கள் வளர்த்தல்

இத்திட்டமானது மாநிலத்தின் தடிமரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கென, காப்பு வனங்களுக்கு வெளியே தேக்கு மரங்களை தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, ஈரோடு, சேலம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களின் கால்வாய் ஓரங்களில் நட்டு ஒருங்கிணைக்கும் நோக்கங்களுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2007-08 ஆம் ஆண்டில், 3,160 ஹெக்டேர் நிலப்பரப்பில் கால்வாய் ஓரங்களில், தரம் வாய்ந்த தேக்கு மரக்கன்றுகள் ரூ.5.38 கோடி செலவில் நடப்பட்டுள்ளன. இத்திட்டத்தினை செயல்படுத்துவதன்மூலம் மரங்களை அறுவடை செய்யும்போது கூடுதலான பொருளாதாரப் பலன்களையும், நடவு மற்றும் பராமரிப்புக் காலங்களில் ஊரக வேலை வாய்ப்பினையும் பெற இயலும் ஒவ்வொரு ஆண்டும் தேக்குத் தடிமர ஏலத்தினால் வனத் துறை சுமார் ரூ.10 கோடி ஈட்டுவது இத்திட்டத்தின் வெற்றியைப் பறைசாற்றும் வகையில் அமைந்துள்ளது.



### 8.1.4 அரசு நிறுவனங்களுக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் செடிகளை இலவசமாக வழங்குதல்

அதிகரித்து வரும் மக்கள்தொகை மற்றும் நகர்ப்புறங்களுக்கு குடிபெயர்தல் போன்றவற்றால் நகரங்களில் வியத்தகு அளவிற்கு மக்கள்தொகைப் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. மனிதத் தேவைகளை பூர்த்தி செய்ய இயற்கை வளங்களை வரையறையின்றிப் பயன்படுத்த முற்படுவதால் மாசு அளவு, ஏற்பு அளவைவிட அதிகமாகக் காணப்படுகிறது. முக்கியமாக வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிப்படும் மாசு, காற்றினை மாசுபடுத்தி நகர்ப்புற மக்களின் உடலுக்குக் கேடு விளைவிக்கிறது. இதற்காக 2007-08 ஆம் ஆண்டில் தமிழகம் முழுவதும் 1,08,330 மரக் கன்றுகள் ரூ.32.50 இலட்சம் மதிப்பீட்டில் வளர்க்கப்பட்டு பள்ளிகள், கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் மற்றும் பொதுச் சுகாதார நிலைய வளாகங்களில் நடுவதற்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2008-09 ஆம் ஆண்டில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு அனைத்து அரசு நிறுவனங்களுக்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மரக் கன்றுகளை இலவசமாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 8.1.5. வன விரிவாக்க மையங்கள்

மரங்கள் வளர்ப்பதற்குத் தேவையான தொழிற்நுட்பங்களை மக்களுக்கு வழங்குவதற்காக முப்பது மாவட்டங்களில் வன விரிவாக்க மையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. வன விரிவாக்க மையங்களின்மூலம் நல்ல வருமானம் தரும் மரங்களாகிய முள்ளில்லா மூங்கில், சவுக்கு, தேக்கு, வீரிய ஒட்டுப்புளி மற்றும் நெல்லி, பெருமரம், வேம்பு, மலைவேம்பு போன்ற மரக்கன்றுகளைத் தனியார் நிலங்களில் நட்டு செயல் விளக்கத் தோட்டங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. மரம் வளர்ப்பதில் ஆர்வமுள்ள நபர்களுக்கு மரம் வளர்ப்பதற்குத் தேவையான தொழிற்நுட்பப் பயிற்சியும், மரக்கன்றுகள் உற்பத்தி மற்றும் மண்புழு உரம் தயாரிப்பு பற்றிய பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

### 8.2 தரங்குன்றிய காடுகளை மக்கள் பங்கேற்புடன் மீட்டு மரங்கள் அடர்ந்த பகுதிகளின் பரப்பினை வனங்களுக்குள் அதிகரித்தல்

தரங்குன்றிய காடுகளில் மீண்டும் வனத் தாவரங்களை உருவாக்குதல், மரங்கள், புதர், மூலிகை மற்றும் பிற தாவர வகைகளின் அடர்த்தியினை அதிகரித்தல், பல்லுயிரினப் பரவலை முழுவதுமாக

மீட்டல், வனங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல் மற்றும் வனம் சார்ந்து வாழ்வோரின் வாழ்வாதாரத் தேவைகளை பூர்த்தி செய்தல் ஆகிய முக்கிய குறிக்கோள்களை கொண்டு வனத் துறை செயல்படுகின்றது. பல்வேறு வனம் சார்ந்து வாழ்வோர் மற்றும் ஏழை மக்களுக்கு வாழ்வாதாரமாக வனங்கள் திகழ்வதால், தமிழகத்திலுள்ள தரங்குன்றிய காடுகளை அவர்தம் பங்கேற்புடன் மேம்படுத்துவதும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதும் அவசியமாகிறது. இக்குறிக்கோளினை அடையும் பொருட்டு, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் மற்றும் தேசிய காடு வளர்ப்புத் திட்டம் முதலிய முக்கியத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

**8.2.1. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை–II**

ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதியுதவியுடன் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை-I 1997 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 2004-05 வரை செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ் 4.8 இலட்சம் ஹெக்டேர் தரங்குன்றிய வன நிலங்கள் 27 மாவட்டங்களில் ரூ.688 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக தற்பொழுது தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை-II செயல்படுத்தப்படுகின்றது. 2012-13 வரை செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டம் 1.775 இலட்சம் ஹெக்டேர் தரங்குன்றிய வன நிலங்களை மேம்படுத்த முற்படும். 30 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.567.42 கோடி ஆகும். கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்குத் தேவையான அடிப்படை உள்கட்டமைப்புப் பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இயற்கை வளமான சுற்றுச்சூழலை மீட்பதற்கான காடு வளர்ப்புப் பணிகளுடன், ஊரகப் பகுதி மக்களுக்கு மாற்று வேலைவாய்ப்பு வழங்கி, அவர்களின் வருமானத்தை உயர்த்துவது இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். இதற்கென காடுகளைச் சார்ந்துள்ளவர்களுக்கும், ஏழை மகளிருக்கும் கடனுதவியும் வழங்கப்படுகிறது. 2007-08 ஆம் ஆண்டில் 51,500 ஹெக்டேர் பரப்பிலுள்ள தரங்குன்றிய காடுகளிலும், 40 பழங்குடியினர் கிராமங்கள் உள்ளிட்ட வனங்களை ஒட்டி அமைந்துள்ள 230 கிராமங்களிலும், ரூ.115.22 கோடி செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

2008-09 ஆம் ஆண்டில் 0.4-க்கும் குறைவான முடிபரப்பு கொண்ட 37,500 ஹெக்டேர் காடுகளும், 0.4 முதல் 0.6 வரை முடிபரப்பு



கொண்ட 10,000 ஹெக்டேர் காடுகளும் மற்றும் பழங்குடியின மக்கள் வாழும் கிராமங்களைச் சுற்றியுள்ள தரங்குன்றிய 4,000 ஹெக்டேர் காடுகளும், ஆக மொத்தம் 51,500 ஹெக்டேர் தரங்குன்றிய வனப் பரப்பில் 96.50 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படும். இதனால் மர அடர்த்தி எண்ணிக்கையினை அதிகப்படுத்தும் வகையிலும், பொதுமக்களுக்கு தொடர்ந்து பயன்தந்து சிறுவன மகசூலைக் கொடுக்கக்கூடிய மற்றும் மருத்துவ குணம் கொண்ட மர இனங்களான நெல்லி, வேம்பு, புங்கன், இலந்தை, நாவல், வில்வம், விலா, நீர்மருது, இலுப்பை போன்ற மர வகைகள் பேணிப் பாதுகாக்கப்படும்.

**8.2.2 தேசிய காடு வளர்ப்புத் திட்டம்**

கிராமங்களில் வேலைவாய்ப்புக்கு வழிவகை செய்தல் மற்றும் வனங்களைப் பாதுகாத்தல் ஆகிய முக்கிய நோக்கங்களைக் கொண்டு இத்திட்டத்திற்கான களப் பணிகளில் வனத் துறை ஈடுபட்டுள்ளது. காடுகளின் அருகிலுள்ள 1140 கிராமங்களில் கூட்டு வன மேலாண்மைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு அந்தக் குழுக்களின்மூலம் இப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கென 32 வன மேலாண்மை முகமைகள், மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தில் ரூ.74.06 கோடி இதுவரை செலவிடப்பட்டுள்ளது. 2008-09 ஆம் ஆண்டில் ரூ.17 கோடி செலவில் காடு வளர்ப்புப் பணிகளை மேற்கொள்ள கருத்துருக்கள் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறும் நிலையில் உள்ளன.

**8.2.3. ஒருங்கிணைந்த வனப் பாதுகாப்புத் திட்டம்**

இத்திட்டம், வனத் தீயினைக் கட்டுப்படுத்தி, வனப் பாதுகாப்பினைப் பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆக்கிரமிப்புகள் ஏற்படாவண்ணம் தடுப்பதற்கென வன எல்லைகளை நிர்ணயித்து, நிலையான எல்லைக் கற்கள் நடுதல், வனத் தீத்தடுப்புப் பணிகளை மேற்கொள்ளுதல், சாலை மேம்பாடு, சிறப்பான தொலைத்தொடர்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தீவிர வனப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் காரணமாக தமிழகத்தின் வனப் பரப்பு மற்றும் அவற்றின் அடர்த்தி அதிகரித்ததுடன் பல்லுயிரினப் பரவலும் மேம்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென 2008-09 ஆம் ஆண்டு ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2008 மே 13

### 8.2.4. 12–வது நிதிக் குழு பரிந்துரையின்கீழ் வனப் பராமரிப்புப் பணிகள்

12-வது நிதிக் குழு பரிந்துரைகளின்படி, நீலகிரி மற்றும் பழனி மலைப் பகுதிகளில் அமைந்துள்ள தரங்குன்றிய காடுகளை மீட்டு அவற்றை பசுமைக் காடுகளாகத் தரம் உயர்த்தவும், வனப் பகுதிகளில் சாலைகளை மேம்படுத்தவும், வனத் துறை கட்டமைப்புகளைச் சீரமைக்கவும், புகலிட மேலாண்மைமூலம் பல்லுயிரினப் பரவலைப் பாதுகாக்கவும் திட்டமிடப்பட்டு, 2006-2007 ஆம் ஆண்டு தொடங்கி 2009-2010 ஆம் ஆண்டு வரை அப்பணிகளை மேற்கொள்ள ரூ.30.00 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுகளில், மாநில வனப் பகுதிகளில் முறையே ரூ.13.32 கோடி மற்றும் ரூ.5.37 கோடி மதிப்பீட்டில் வன மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2008-2009 ஆம் ஆண்டில், பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளை ரூ.5.31 கோடி செலவில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 8.3. மகளிர் மேம்பாடு

காடு வளர்ப்புப் பணிகளிலும், கூட்டு வன நிர்வாகத்திலும், பயன் பங்கீடு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்திலும் முடிவெடுக்கும் அதிகாரம் பெற்றவர்களாக பெண்கள் திகழும் வகையில் வனத் துறையின் செயல்பாடுகள் அமைந்துள்ளன. கிராம வனக் குழுக்களின் உறுப்பினர்களில் குறைந்தது 50% மகளிர் பங்கேற்க வழிவகை செய்யப்பட்டுள்ளதோடு அக்குழுக்களின் செயற்குழுக்களில் 1/3 உறுப்பினர்கள் மகளிராக இருக்கவேண்டும் என விதிமுறைகள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை உருவாக்கப்பட்டுள்ள 1,937 வனக் குழுக்களில் சேர்க்கப்பட்டுள்ள 5,05,587 மொத்த உறுப்பினர்களில் 2,88,998 உறுப்பினர்கள் பெண்களாவர். 81 வனக் குழுக்களைப் பெண்கள் தலைமையேற்று நடத்துகின்றனர். மகளிர் உதவிக் குழுக்கள் அமைப்பதன்மூலம் கிராமப்புறப் பெண்களுக்கு பொருளாதார சுதந்திரம் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சேமிப்பு மற்றும் சிறுகடன் பெற்று வருவாய் பெருக்கப் பணிகளை மேற்கொள்வதன்மூலம் குடும்ப நிதிகளைக் கையாள்வதிலும் பெண்கள் அதிகாரம் பெற்றவர்களாக விளங்குகின்றனர். வனத் துறையில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்ட நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டு



2008 மே 13]

ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. 1997-1998 ஆம் ஆண்டு முதல் 2007-2008 வரை 6026 மகளிர் உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு 90,227 மகளிர் உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன்பெற்று வருகின்றனர். நடப்பு 2008-2009 ஆம் ஆண்டில் இதே கொள்கை தீவிரமாக பின்பற்றப்பட்டு மேலும் 750 மகளிர் குழுக்கள் உருவாக்கப்படும். காடுகளுக்கு அருகில் உள்ள 230 கிராமங்களில் இந்தக் குழுக்கள் ஏற்படுத்தப்படும். இதில் 40 கிராமங்கள் பழங்குடியின மக்கள் வாழும் கிராமங்களாகும்.

### 8.4. பழங்குடியினர் மேம்பாடு

வனங்களின் நலன் காப்பதைத் தலைமைக் கடமையாகக் கொண்டுள்ள வனத் துறை, அந்த வனங்களில் வாழும் பழங்குடியின மற்றும் இதர மக்களின் நலனைக் காப்பதிலும் பங்கேற்கவேண்டிய கடமையினைக் கொண்டதாக விளங்குகிறது. இந்தக் கடமையினைச் செம்மையாக ஆற்றிடும் வகையில் பழங்குடியின மக்களுக்கு கல்வி வசதி, வேலைவாய்ப்பு வசதி போன்றவற்றை தமிழக வனத் துறை செய்து வருகிறது.

மாநிலத்தில் இலட்சக்கணக்கான பழங்குடியினர் வனங்களைச் சார்ந்து வாழ்கின்றனர். இவர்களுக்கு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் நோக்கத்துடன் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தில் ரூ.36.08 கோடி, பழங்குடியினர் வாழும் குடியிருப்புகளிலும், அவற்றைச் சுற்றி வன நிலங்களிலும் செலவிட குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பழங்குடியினர் பகுதிகளில் வனத் துறை 19 பள்ளிகளை நடத்தி வருகிறது. இவற்றில் சுமார் 5,000 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இப்பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு குடிநீர் வசதி, ஆய்வக உபகரணங்கள், பெண்களுக்கான தனி கழிவறை வசதி, விளையாட்டு உபகரணங்கள், வகுப்பறை அறைகலன்கள், கற்பிக்க உதவும் உபகரணங்கள் மற்றும் புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பழங்குடியினர் பகுதிகளில் வனத் துறையினரால் நிர்வகிக்கப்படும் பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (RIDF) மூலம் ரூ.5.07 கோடி மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.1.0142 கோடி செலவிடப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.2.0281 கோடி இதற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2008 மே 13

### 8.4.1. பழங்குடியினர் மற்றும் இதர மரபுவழி வனவாழ் மக்கள் (வன உரிமைகள்) சட்டம், 2006

பன்னெடுங்காலம் வனப் பகுதியில் தங்களின் உரிமைகள் பதிவு செய்யப்படாத நிலையில் வாழ்ந்து வரும் பழங்குடியினர் மற்றும் இதர மரபுவழி வனவாழ் மக்கள் வாழ்ந்து வரும் வன நிலங்கள்மீது அவர்களது உரிமைகளை அங்கீகரிக்கவும் மற்றும் வனங்களில் தொடர்ந்து வாழ்ந்து வருவதால் அவர்கள் வாழ்வாதாரத்திற்கான உரிமைகளைப் பாதுகாக்கவும் இச்சட்டம் 2006 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. பழங்குடியினர் நலன் கருதி இயற்றப்பட்டுள்ள இச்சட்டம் தொடர்பான செயலாக்கப் பணிகளை குறிப்பிட்ட காலவரையறைக்குள் செய்து முடிக்க வனத் துறை அனைத்து வகை ஒத்துழைப்பையும் வழங்கும்.

### 8.5. நீர்ப்பிடி பகுதி மேலாண்மை

நீர்ப்பிடி பகுதி மேலாண்மை என்பது அப்பகுதியில் இருக்கின்ற மண், நீர், தாவரம் போன்ற இயற்கை வள ஆதாரங்களையும், மனித வள ஆதாரத்தையும் பயன்படுத்தி அப்பகுதியில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு ஏற்ற வகையான, திட்டத்தைத் தயார் செய்து அதனை செயல்படுத்துவதாகும். அவ்வாறு செயல்படும்பொழுது அங்கிருக்கும் இயற்கை வள ஆதாரங்களுக்கு எவ்விதச் சேதமும் விளைவிக்காமல் வருங்கால சந்ததியினருக்கும் பாதுகாத்து வைக்கத்தக்க வகையில் திட்டம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படவேண்டும். இந்தக் கொள்கையின் அடிப்படையில் வனப் பகுதியிலும் அதனை ஒட்டியுள்ள நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் மேலாண்மைப் பணிகள் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 1997 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த 11 ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வரும் இந்தத் திட்டம், மக்களின் பேராதரவினையும் புங்கேற்பினையும் பெற்றுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் நீர்வள ஆதாரத்தை பெருக்கி நிலத்தடி நீரை உயரச் செய்ய தடுப்பணை மற்றும் கசிவு நீர்க் குட்டைகள் போன்ற மழை நீர் அறுவடைக் கட்டமைப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரை தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 26,615 தடுப்பணைகளும் 3,035 கசிவுநீர்க் குட்டைகளும் கட்டப்பட்டுள்ளன. இந்த கட்டமைப்புகளில் 1378.46 மில்லியன் கன அடி நீரைத் தேக்கி வைக்க இயலும். இத்தகைய பயன்மிக்க நீர்ப்பிடிப்புப் பகுதிகளின்



2008 மே 13]

மேலாண்மை நடவடிக்கைகள் நடப்பு 2008-09 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும். சுமார் 1000 தடுப்பணைகளும், 300 கசிவுநீர்க் குட்டைகளும் ரூ.24.27 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

### 8.5.1. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டமானது குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் சூழல் அமைப்பினை மேம்படுத்த நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. காடு வளர்ப்பு மட்டுமின்றி, மண்வளப் பாதுகாப்புப் பணிகள், சோலைக் காடுகளைச் சுற்றி வேலி அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சூழலமைப்பின் மீதான தாக்கத்தினைக் குறைக்கவும், நீலகிரி மாவட்டத்தில் தரங்குன்றிய சோலைக் காடுகள் மற்றும் வனப் பரப்பினை மேம்படுத்தவும் இத்திட்டம் உதவுகின்றது. இத்திட்டத்திற்கு 2007-08 ஆம் ஆண்டில் ரூ.2.07 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2008-09 ஆம் ஆண்டில், ரூ.2.99 கோடி மதிப்பீட்டில் இத்தகைய பணிகளைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 8.5.2. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் மேற்குத் தொடர்ச்சி மலை வனங்களின் சூழல் அமைப்பினை மேம்படுத்தி மக்களுக்கு வாழ்வாதாரத்தினை வழங்குவது மட்டுமின்றி மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் மரங்களடர்ந்த பகுதிகளை அதிகரிக்கவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் கோவை, திண்டுக்கல், மதுரை, தேனி, ஈரோடு, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. காடு வளர்ப்பு, மண்வளப் பாதுகாப்புப் பணிகள், வேட்டைத் தடுப்புப் பணிகள், தகவல் தொடர்பு மேம்பாடு, மருத்துவத் தாவரங்கள் பாதுகாப்பு போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2007-08 ஆம் ஆண்டில் ரூ.2.22 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2008-09 ஆம் ஆண்டில் ரூ.4.25 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### 8.6 வனச் சரணாலயங்கள் மற்றும் உயிரியல் பூங்காக்கள்

வனச் சரணாலயங்கள், 1972-ல் இயற்றப்பட்டுள்ள வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்படுகின்றன. வனப் பகுதிகளில்

[2008 மே 13

வாழும் விலங்கினங்களுக்கு வனப் பாதுகாப்புச் சட்டம் வழங்கும் பாதுகாப்பு அம்சங்களைவிட மேலும் கூடுதல் பாதுகாப்பு அளிக்கும்வண்ணம் சில பகுதிகள் சரணாலயங்களாக அறிவிக்கப்படுகின்றன.

தமிழகத்தில் 3,840 ச.கி.மீ. அளவுக்கான நிலப்பரப்பில் சரணாலயங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் 8 வன உயிரினச் சரணாலயங்களும், 5 தேசியப் பூங்காக்களும், 12 பறவைச் சரணாலயங்களும் அடங்கும். தமிழகத்தில் வனவிலங்குகளைப் பாதுகாப்பான அமைப்பில், பொதுமக்கள் கண்டு மகிழும்வண்ணம் ஒன்பது உயிரியல் பூங்காக்கள் செயல்படுகின்றன. விலங்கினங்களின் முக்கியத்துவம் கருதி நீலகிரி, மன்னார் வளைகுடா மற்றும் அகத்தியர் மலை உயிர்க்கோளக் காப்பகங்களும் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் திருப்படைமருதூரில் ஒரு பாதுகாப்புக் காப்பகமும் தமிழகத்தில் உள்ளன. விலங்கினப் பாதுகாப்புக்கென செயல்படுத்தப்படும் முக்கியத் திட்டங்கள் பின்வருமாறு:-

### 8.6.1. புலிகள் திட்டம்

புலிகளையும், அவற்றின் புகலிடங்களையும் பாதுகாக்க வனத் துறை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. களக்காடு-முண்டந்துறை புலிகள் காப்பகம் 1988 ஆம் ஆண்டில் புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டது. ஆனைமலை வன உயிரினச் சரணாலயம் மற்றும் முதுமலை வன உயிரினச் சரணாலயம் ஆகிய இரண்டையும் புதிய புலிகள் காப்பகங்களாக அரசு 2007 ஆம் ஆண்டில் அறிவித்துள்ளது. புலிகள் பாதுகாப்பின் முக்கியத்துவம் சூழல் அமைப்பின் செழிப்பினைக் குறியிட்டுக் காட்டுவதாகும். தற்போது புலிகள் வாழும் சரணாலயத்தின் மேலாண்மை மற்றும் பராமரிப்பிற்கென மைய அரசு 100 சதவிகித உதவியினை வழங்கி வருகிறது. சூழல் மேம்பாட்டுப் பணிகள், பாதுகாப்பு, வனத் தீத் தடுப்பு நடவடிக்கைகள், நீராதார மேம்பாடு, சுற்றுலா வளர்ச்சி, மனித—வன உயிரின மோதல் கட்டுப்பாடு, மனித வள மேம்பாடு மற்றும் உள்கட்டமைப்பு வசதி மேம்பாடு போன்ற பணிகள் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிதாக இரண்டு பகுதிகளைப் புலிகள் காப்பகமாக அறிவிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் வாயிலாகப் புலிகள் புகலிடப் பாதுகாப்பு மாநிலத்தில் முன்னுரிமை பெற்றுள்ளது.



2008 மே 13]

தேசிய விலங்கான புலிகளின் எண்ணிக்கை தமிழகத்தில் 25% உயர்ந்துள்ள விவரம் இந்திய வன உயிரியல் நிறுவனம் (Wildlife Institute of India) நடத்திய கணக்கெடுப்புமூலம் தெரியவந்துள்ளது. அதே சமயம் இந்தியாவில் 3,642 ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை 1,411 ஆகக் குறைந்துள்ளதாக 2008 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. வனப் பாதுகாப்புக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவமும், வன விலங்கினங்களுக்காக மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் தமிழகத்தின் சாதனைக்கு முக்கியக் காரணங்களாகும் என்று உறுதியாகக் கூறலாம்.

### 8.6.2. யானைகள் திட்டம்

தமிழகம் யானைகளின் எண்ணிக்கையில் இந்தியாவில் ஒரு முன்னோடி மாநிலமாக விளங்குகின்றது. இந்தியாவில் உள்ள சுமார் 24,000 யானைகளில் தமிழகத்தில் மட்டும் 4,015 யானைகள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

யானைகள் கூட்டங்கூட்டமாக இடம் பெயர்ந்து செல்லக்கூடிய பழக்கம் கொண்ட விலங்குகள் ஆகும். ஆகவே, யானைகள் செல்லும் வழித்தடங்களை எந்தவித ஆக்கிரமிப்பும் இல்லாமல் பாதுகாப்பது மிகவும் அவசியம். இந்தியாவில் உள்ள 88 யானை வழித்தடங்களில் தமிழ்நாட்டில் மட்டும் 12 வழித்தடங்கள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளன. இதில் இரண்டு முக்கிய வழித்தடங்கள் கண்டறியப்பட்டு அவற்றிற்கான நில ஆர்ஜிதப் பணிகள் நடைபெறுகின்றன. ஜக்கநாரி, கல்லார் மற்றும் மோயார் வழித்தடங்களை உருவாக்க, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் நில ஆர்ஜிதப் பணிகளுக்கென ஒரு சிறப்புக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

யானைகளின் பாதுகாப்புக்கென ஒரு சிறப்புத் திட்டம் - யானைகள் திட்டம் (Project Elephant) செயல்படுத்தப்படுகிறது. 2007-08 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.1.54 கோடி செலவில் வேட்டைத் தடுப்புக் காவலர்களை நியமித்தல், வேட்டைத்தடுப்பு முகாம்களை ஏற்படுத்துதல், யானைகளின் வழித்தடங்களில் நீராதாரங்களை ஏற்படுத்துதல் போன்ற முக்கியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டம் 2008-2009 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

[2008 மே 13

### 8.6.3. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா

சென்னைக்கு அருகே வண்டலூரில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா 602 ஹெக்டேர் பரப்பில் அமைந்துள்ளது. இப்பூங்காவில் 1,369 விலங்குகள் உள்ளன. அவற்றில் 51 வகை பாலூட்டிகள், 66 வகை பறவைகள் மற்றும் 30 வகை ஊர்வன, ஆகமொத்தம் 147 விலங்கினங்கள் உள்ளன. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு ஆண்டுதோறும் 12 இலட்சம் பார்வையாளர்கள் வருகின்றனர். வண்டலூர் உயிரியல் பூங்காவின் வளர்ச்சிக்கென ரூ.4.18 கோடி மத்திய அரசின் உதவியுடன் 2007-ல் சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கென அனுமதிக்கப்பட்டுள்ளது. இதைக் கொண்டு விலங்குகளின் இருப்பிடங்களை மேம்படுத்துதல், சாலைகளை மேம்படுத்துதல், பார்வையாளர்களுக்கான வசதிகளை மேம்படுத்துதல், பூங்காவைச் சுற்றிப்பார்க்க மின்கல ஊர்திகளை வாங்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### இரவு கானக உலா

விலங்குகளை அவற்றுக்குரிய சூழலிலேயே இரவு நேரங்களில் சந்திர ஒளியில் பார்வையாளர்கள் கண்டுகளிக்கும்வண்ணம் சென்னை வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் இரவு கானக உலா, ரூ.256.00 கோடி செலவில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதன் ஆரம்பக் கட்டப் பணிகளை மேற்கொள்ள ரூ.5.00 கோடி அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இரவு கானக உலா இருவேறு பகுதிகளாக, அதாவது ஒன்று உலாவிடப் பகுதி, மற்றொன்று பொழுதுபோக்குப் பகுதி எனப் பிரிக்கப்படுகின்றது. அனைத்து விலங்குகளும் இரவில் செயற்கை ஒளியினால் ஒளியூட்டப்பட்டு பார்வைக்கு உலா வரும். பொழுதுபோக்கு பகுதியில், வட்டரங்கம், விளக்கப் பகுதி, பிளாசா, பல்பொருள் அங்காடி, ஓய்விடம் மற்றும் பல்வேறு வகையான உணவுப் பொருட்கள் இடம் பெறும் வகையில் அமைக்கப்படும். வன விலங்குகளின் இரவு நேரச் செயல்பாடுகளை அறிய ஆவலுள்ள பொதுமக்களின் தேவையை நிறைவேற்றுவதை அடிப்படை நோக்கமாக கொண்டே இது தொடங்கப்படுகிறது. சிங்கப்பூர் இரவு விலங்குகள் பூங்காவே உலகின் முதல் 'இரவு கானக உலா' ஆகும். சிங்கப்பூரின் தட்பவெப்ப நிலையும் சென்னையின் தட்பவெப்ப நிலையும் பெரும்பாலும் ஒத்திருப்பதால் இந்தியாவில் முதன் முதலாக இத்திட்டம் இங்கு சென்னையில் தொடங்கப்பட்டு வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.



2008 மே 13]

#### வண்ணத்துப் பூச்சிப் பூங்கா

வண்ணத்துப் பூச்சிகள் வளர்வதற்கேற்ற தாவரங்கள் மற்றும் வண்ணத்துப் பூச்சிகள் அவற்றின் வாழ்விடங்களை உருவாக்கி, வண்ணத்துப் பூச்சிகள் அவற்றின் இயற்கையான சூழலில் காட்சிக்கு வைப்பதற்காக ஏற்படுத்தப்படும் இடமே வண்ணத்துப் பூச்சிப் பூங்காவாகும். சுற்றுலாப் பயணிகள் ஒரே இடத்தில் பல்வேறு வகையான வண்ணத்துப் பூச்சிகளைக் கண்டு களிப்பதற்காக வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் ரூ.4.87 கோடி செலவில் வண்ணத்துப் பூச்சிப் பூங்காவை உருவாக்க ஆணையிடப்பட்டுள்ளது.

### 8.8.4. சிறு உயிரியல் பூங்காக்கள்

தமிழ்நாட்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சிறு உயிரியல் பூங்காக்கள் இயங்கி வருகின்றன.

1. சென்னை பாம்புப் பண்ணை
2. கிண்டி சிறுவர் பூங்கா
3. குரும்பப்பட்டி உயிரியல் பூங்கா
4. வ.உ.சி. பூங்கா, கோயம்புத்தூர்
5. சென்னை முதலைப் பண்ணை
6. சிவகங்கை பூங்கா, தஞ்சாவூர்
7. அமிர்தி உயிரியல் பூங்கா
8. மான் பூங்கா, நீலகிரி.

இவற்றில் கருங்குரங்கு, கழுதைப்புலி, செந்நாய், மரநாய், கடமான், புள்ளிமான், நட்சத்திர ஆமை, செந்நிற கூழைக்கடா, பச்சைக்கிளி, முள்ளம்பன்றி போன்ற விலங்குகள் காணப்படுகின்றன. முறையான உரிமம் இல்லாமல் வன உயிரினங்களை வைத்திருப்பது வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் 1972-ன்படி குற்றமென்பதால் அப்படி வைத்திருப்போரின் வன உயிரினங்களையும் மற்றும் வேறு அரிய வகை விலங்குகளையும் திருச்சியில் புதிதாக அமைய இருக்கும் உயிரியல் பூங்காவில் வைத்து பராமரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

[2008 மே 13

**8.6.5 வனவிலங்குகள் மனித உறைவிடங்களில் வருவதைத் தடுத்தல் மற்றும் நஷ்ட ஈடு வழங்குதல்**

மக்கள்தொகையின் அதிகரிப்பாலும், தொழில் வளர்ச்சியாலும் வனவிலங்குகளுக்கான உறைவிடங்கள் கடந்த நூற்றாண்டில் குறைந்த காரணத்தினால் அவை காட்டைவிட்டு கிராமப்புறங்களை நோக்கி வரத்தொடங்கின. இதற்கென தீர்வு காண்பது மிகவும் அவசியம்.

வனப் பகுதிகளிலிருந்து வரும் வன உயிரினங்களைத் தடுப்பதற்கு சூரிய மின்வேலி திட்டம் மிகவும் பயனுள்ள முறையாகும். இந்த முறையின்கீழ் பிரச்சினைக்குட்பட்ட பகுதிகளில் 8 மீட்டர் இடைவெளியில் 5 வரிசைகளைக் கொண்ட மின்கம்பிகள் பலமிக்க தூண்களில் நிறுவப்படுகின்றன. மின் கலத்தில் பகல் நேரங்களில் சூரிய பேனல்மூலம் மின்சாரம் சேகரிக்கப்படும். மின் கம்பிகள் இந்த மின் கலத்துடன் இணைக்கப்பட்டிருக்கும். மின் கம்பியில் மின் சக்தி அலை அலையாக (Pulse) வெளிப்படுவதால், வன உயிரினங்கள் இதை தொடும்போது அதிர்வு காரணமாக மின் வேலியை விட்டு விலகிச் சென்றுவிடும். அதே நேரத்தில் இது வன உயிரினங்களுக்கு அபாயகரமானதாக இருக்காது.

2007-08 ஆம் ஆண்டில் 315.75 கி.மீ நீளத்துக்கு சூரிய மின் வேலிகளை அமைக்க ஆணையிடப்பட்டு ரூ.505.20 இலட்சம் செலவில் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இஃது ஒரு அரிய சாதனையாகும். சூரிய மின் வேலிகளை அமைக்கும் திட்டம் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளதால் 2008-09 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

வனவிலங்குகள் வயல்வெளியில் இரவு நேரங்களில் புகுந்து பயிர்களுக்கும், வீடுகளுக்கும், மக்களின் உடைமைகளுக்கும் சேதம் விளைவிக்கின்றன. சில சமயங்களில் மனித உயிர்ச்சேதமும் ஏற்படுகின்றது. இவ்வாறு எதிர்பாராத விதத்தில் ஏற்படும் நிகழ்வுகளால் பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வண்ணம் 2006-07 ஆம் ஆண்டில் முதல் முறையாக தமிழக அரசால் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதேபோல் 2007-08-லும் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.50 இலட்சம் முழுவதுமாக செலவிடப்பட்டது. வயலையே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள பாமர மக்களின் துயர்துடைக்கும் திட்டமாக அமைந்துள்ள இந்தத் திட்டம், 2008-09 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.



2008 மே 13]

**8.7 உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் பணியாளர் நலன்**

**8.7.1. பணியாளர் நலன்**

அரசின் திட்டங்கள் அதன் நோக்கத்தினை அடையும் வகையில் நிறைவேற்றப்படவேண்டுமெனில், திட்டத்தினை நிறைவேற்றும் பணியாளர்களுக்கு வேண்டிய அடிப்படை ஆதார வசதியினைச் செய்து கொடுக்கவேண்டியது மிக அவசியமானதாகும். இதைக் கருத்தில் கொண்டு, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழகத்தில், மாநில வன ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 87, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 14-8-2007-ன்படி மாநில வன ஆணையம், கீழ்கண்டவற்றை ஆய்வு செய்து பரிந்துரை செய்யும்:

1. தமிழ்நாட்டின் வனக் கொள்கை மற்றும் சட்டப்பூர்வமான வனவியல் கட்டமைப்பு, அதன் சுற்றுச்சூழல், பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டுத் தாக்கங்களை ஆய்வு செய்தல்

2. தேசிய வனக் கொள்கையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளபடி நிலப்பரப்பில் 1/3 பகுதியினை பசுமைமயமாக்கல் என்ற இலக்கை அடைவதற்கான கொள்கை மற்றும் செயலாக்க வழிமுறைகளைப் பரிந்துரை செய்தல்.

3. வன நிர்வாகத்தில் தற்போதுள்ள நிலையினை ஆராய்ந்து வன நிர்வாகத்திற்கும், உள்ளூர் சமுதாயத்திற்கும் இடையே ஒரு அர்த்தமுள்ள நட்புறவை வளர்க்க வழிமுறைகளைக் கண்டறிதல்.

4. தற்போது வளர்ந்து வரும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் உள்ளடக்கிய தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி வனங்களைப் பாதுகாக்கவும், வன ஆராய்ச்சியின்மூலம், வன உற்பத்தியைப் பெருக்கவும் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.

5. வனத் துறைப் பணியாளர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ளவும், வருங்காலங்களில் சந்திக்கக்கூடிய சவால்களை எதிர்கொள்ளவும் தேவைப்படும் பயிற்சி முறைகளைப் பரிந்துரைத்தல்.

[2008 மே 13

6. வனத் துறைக்கும் வனவாழ் மக்களுக்கும் இடையே ஒரு இணக்கமான உறவை ஏற்படுத்த, தேவையான பரிந்துரைகளை வழங்குதல்.

7. பொதுமக்களின் தேவைகளை முழுவதுமாக பூர்த்தி செய்யவும், அவர்களது குறைகளைக் களையவும் வனத் துறை பின்பற்ற வேண்டிய தேவையான செயலாக்க நடைமுறைகளைப் பரிந்துரைத்தல்.

8. வனத் துறைப் பணியாளர்களின் தற்போதைய பணி நிலைகளை (சம்பளக் குழுவின் பரிந்துரைக்குள் வரும் சம்பளம் மற்றும் படிகள் குறித்த இனங்கள் தவிர) ஆராய்ந்து, அவற்றை மேம்படுத்த வழிமுறைகளைப் பரிந்துரைத்தல்.

வனங்களைப் பாதுகாக்கும் கடமையினை நிறைவேற்றும் பணியாளர்கள், பின்தங்கிய பகுதிகளில் தங்கி தங்களது கடமையினையாற்றிட வேண்டியுள்ளது. இத்தகைய இடங்களில் வனக் காவலர் மற்றும் வனக் காப்பாளர் போன்ற பணியாளர்கள் தங்குவதற்கேற்ற வகையில் போதுமான குடியிருப்புகளை அமைத்துத் தருவது அரசின் கொள்கையாகும். எனவே, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் இதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, 380 பணியாளர் குடியிருப்புகள் இதுவரை கட்டப்பட்டுள்ளன. அதேபோன்று 58 அலுவலகக் கட்டடங்கள், 4 குடியிருப்புடன் இணைந்த அலுவலகக் கட்டடங்கள், 29 வன ஓய்வில்லங்கள் கட்டப்பட்டுள்ளன. நடப்பு 2008-09 ஆம் ஆண்டிலும் இந்த அடிப்படை ஆதார வசதியினைப் பெருக்கிடும் வகையில் 193 பணியாளர் இருப்பிடங்களும் மற்றும் 3 அலுவலகக் கட்டடங்களும் ரூ.5.41 கோடி செலவில் கட்டப்படும்.

நவீன தொலை உணர்வு மற்றும் புவித் தகவல் தரவு மையம் சென்னையில் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக வனப் பரப்பின் விவரங்கள் மின்னணுப்படுத்தப்பட்டுள்ளன.

### 8.7.2. மனித வள மேம்பாடு

வன அலுவலர்கள் மற்றும் வனப் பணியாளர்களின் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்தி அவர்கள் செம்மையாக வனப் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட ஏதுவாக 2008-09 ஆம் ஆண்டு ரூ.84.55 இலட்சத்தில் களப்பயிற்சிகள் உள் மற்றும் அயல் நாடுகளில் வழங்கப்படும்.



2008 மே 13]

வனப் பாதுகாப்புப் பணிகளுக்காக வனப் பணியாளர்களுக்கு துப்பாக்கி, கைத் துப்பாக்கி போன்ற ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆயுதங்களை வைத்திருப்பது மற்றும் உபயோகிப்பது குறித்த சட்ட விதிமுறைகளை வனப் பணியாளர்கள் அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். மேலும், ஆயுதங்களை உபயோகிக்க நேரிடும் தருணங்களில் அவற்றைத் திறமையுடன் உபயோகிக்க வனச் சரகர், வனவர், வனக்காப்பாளர் ஆகியோருக்கு கோவையில் அமைந்துள்ள தமிழ்நாடு வனவியல் பயிற்சிக் கழகத்திலும், தேனி மாவட்டம் வைகை அணையில் அமைந்துள்ள வனவியல் பயிற்சிக் கல்லூரியிலும், ஆண்டு தோறும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பு 2008-09 ஆம் ஆண்டிலும் இத்தகைய பயிற்சிகள் வழங்குவதற்கு ரூ.10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8.7.3. வன ஆராய்ச்சி

தனியார் நிலங்களில் மரங்கள் வளர்த்தல், விதை உயிரியல், மருத்துவச் செடிகள் பாதுகாப்பு, தடிமரம் அல்லாத வனப் பொருட்கள் மற்றும் அறுவடைக்குப் பின் நேர்த்தி செய்யும் தொழில்நுட்பம் ஆகிய வனப் பணிகளில் புதிய பரிமாணத்தை வன ஆராய்ச்சி வழங்கியுள்ளது. வனப் பாதுகாப்பினை அதிகரித்தல், உற்பத்தித் திறனைப் பெருக்கி மக்களின் பயன்பாட்டிற்காக மேலும் பல பொருட்களையும், சேவைகளையும் பரிசோதனைகளின்மூலம் உற்பத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பரிசோதனைகள் சிறந்த தாவர வகைகளைக் கண்டறிவதற்கும், பல்வேறு விதமான தட்பவெப்ப நிலை மற்றும் மண் நிலைக்கேற்ப சிறந்த மற்றும் உகந்த மறு உற்பத்தித் தொழில்நுட்பங்களை கண்டறிவதற்கும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கு எடுத்துக்காட்டாக பின்வரும் முக்கிய ஆராய்ச்சி முன்னேற்றங்களைக் குறிப்பிடலாம்:-

(அ) தேக்கு போன்ற விலை உயர்ந்த மரங்களை வளர்க்கத் தேவையான தரமான விதைகள் கொடுக்கும் உயர் குணம் கொண்ட மரங்கள் கண்டறியப்பட்டு, பராமரிக்கப்பட்டு, தரமான விதைகள் சேகரம் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு பயன்தரும் வனத் துறையின் திட்டங்களுக்காக வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) ஜ ‾ங்னியானா வகையினைச் சேர்ந்த சவுக்கு மரம் வறட்சியினையும் தாங்கி வேகமாக வளர்ந்து உயர் வருவாய் கொடுக்கும் மர இனமாகும். ஆனால், விதைமூலம் இதை பெருக்கமடையச் செய்வது சிரமமான காரியம். இந்தக் குறைப்பாட்டினை போக்கிடும் வகையில் இந்த மரக் கன்றுகளை விதையில்லா இனப் பெருக்கம்மூலம் பெரிய அளவில் உற்பத்தி செய்யும் தொழில்நுட்பத்தை வன ஆராய்ச்சிப் பிரிவு உருவாக்கியுள்ளது.

(இ) நமது மாநிலத்தின் தட்பவெட்ப நிலையில், நன்கு வளரக்கூடிய முள் இல்லா மூங்கில் இன வகையினை இனம் கண்டு அதனைப் பெருமளவில் வளர்க்கும் தொழில்நுட்பத்தினை வன ஆராய்ச்சிப் பிரிவு கண்டுபிடித்துள்ளது.

(ஈ) 20 மூலிகை இனத் தாவரங்களை விவசாய நிலத்தில் விளைவிக்கத் தேவையான தொழில்நுட்பத்தினை வன ஆராய்ச்சிப் பிரிவு உருவாக்கியுள்ளது.

கொளப்பாக்கம் மாநில வனவியல் ஆராய்ச்சி நிலையம் மற்றும் பிற ஆராய்ச்சி மையங்கள் தனியார் நிலங்களில் மரங்கள் வளர்க்கப் பல்வேறு புதிய அணுகுமுறைகளைக் கையாண்டு வருகின்றன. 2007-08 ஆம் ஆண்டில் ரூ.4.93 கோடி செலவில் வன ஆராய்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. 2008-09 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.5.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வனங்களுக்கு வெளியே காணப்படும் தடிமரங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல் மற்றும் காடுகளை வளமாக்க மேற்கொள்ளப்படும் திட்டங்களின் வெற்றிக்காக ஆராய்ச்சி பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளில் ஆராய்ச்சிப் பிரிவு, வன விரிவாக்கப் பிரிவுடன் நெருக்கமாக இணைந்து செயல்படுகிறது.

**8.8 வன நிலங்களை வளர்ச்சிப் பணிகளுக்கெனப் பயன்படுத்துதல்**

மத்திய அரசின் வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி அரசுக்குச் சொந்தமான வன நிலங்களையோ, தனியாருக்குச் சொந்தமான நிலம் வனமாக இருந்தாலோ உச்சநீதிமன்றத்தின் ஆணையின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட குழுவினால் வனங்களாக இனம் காணப்பட்ட நிலங்களையோ அல்லது அரசு ஆவணங்களில் வனம் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலங்களையோ வனமற்ற பிற



பணிகளுக்கு உபயோகப்படுத்த மத்திய அரசின் முன் அனுமதி தேவைப்படுகிறது.

தேசியப் பூங்கா மற்றும் சரணாலயப் பகுதிகளில், வனமற்ற பணிகளுக்கு (குடிநீர் வசதி, மின் வசதி, தொலைத்தொடர்பு வசதி முதலியவற்றிற்கு மேற்கொள்ளப்படும் பணிகள் நீங்கலாக) வன நிலங்களை ஒதுக்கீடு செய்யக்கோரும் கருத்துருக்களை உச்சநீதிமன்றத்தின் முன் அனுமதியின்றி சமர்ப்பித்தல் கூடாது. வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன் வழிகாட்டுதலின்படி, குறிப்பிட்டுள்ள அத்தியாவசியமான அரசுத் துறை மேம்பாட்டுப் பணிகளுக்கு 1 ஹெக்டேர் வரையிலான வன நிலத்தை, வனமற்ற பிற பணிகளுக்கு அனுமதி வழங்க மாநில அரசுக்கு 31-12-2008 வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வளர்ச்சிப் பணிகளுக்கென இதுவரை 281 நிகழ்வுகளில் 10,800 ஏக்கர் வன நிலங்கள் பிற துறைகளுக்கு மாற்றம் செய்து வழங்கப்பட்டுள்ளன. பழங்குடி மக்கள் மற்றும் வனவாழ் மக்களின் நலன் கருதி மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணிகளுக்கென முன்னுரிமை கொடுத்து வன நிலங்களை மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

**8.9 கடலோரப் பகுதி மேலாண்மை**

தமிழ்நாட்டில் 1,076 கி.மீ. நீளத்தில் அமைந்துள்ள கடலோரப் பகுதிகளை இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் அழிவிலிருந்து பாதுகாக்க, வனவியலின் செயல்பாடு அவசியமாகிறது. தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு பசுமைக் கேடயமாக விளங்கும் தொடர் தடுப்புத் தோட்டங்களை உருவாக்குதல் வனத் துறையின் ஒரு முக்கிய நடவடிக்கை ஆகும்.

26-12-2004 அன்று ஏற்பட்ட சுனாமியின்போது பெற்ற அனுபவம், கடலோரத் தொடர் தடுப்புத் தோட்டங்கள் மற்றும் சதுப்பு நிலத் தோட்டங்களின் பயன்பாட்டை உணரச் செய்தது. அவசரகால சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தின்கீழ் 4,778 ஹெக்டேர் கடலோரத் தொடர் தடுப்புத் தோட்டங்களும் மற்றும் 2,162 ஹெக்டேர் சதுப்பு நிலத் தோட்டங்களும், வனத் துறையால் ரூ.21.82 கோடி செலவில் எழுப்பப்பட்டுள்ளன. 2008-09 ஆம் ஆண்டில் கடலோரப் பகுதிகளில் மேலும் 1,000 ஹெக்டேர் கடலோரத் தொடர் தடுப்புத் தோட்டங்களை ரூ.4.15 கோடி செலவில் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2008 மே 13

## 9. 2007–2008 ஆம் ஆண்டின் சாதனைகள்

1. வன நிர்வாகத்தை மேம்படுத்தவும், வனவாழ் மக்களின் நலனைப் பாதுகாக்கவும், தொழில்நுட்பத்திறனை ஊக்குவிக்கவும், வனக் கொள்கையை முழுவதுமாகச் செயல்படுத்தவும் வழிமுறைகளை ஆராய்ந்து பரிந்துரைக்க ஏற்படுத்தப்பட்டுள்ள வன ஆணையம், இந்தியாவில் மாநில அளவில் அமையப்பெற்ற முதல் வன ஆணையமாகத் திகழ்கின்றது.

2. கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டை வட்டம் ஆகியவற்றில் உள்ள தேக்கு மரம் மற்றும் ஈட்டி மரத்திற்கு உரிமத் தொகை வசூலிப்பது இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

3. வனச் சாலைகளை பயன்படுத்துவதற்கு, 100 ஆண்டுகளுக்கு மேலாகவும் வசூல் செய்யப்பட்டு வந்த உரிமக் கட்டணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் விவசாயிகள், பழங்குடியினர், வனவாழ் மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பயன் அடைவார்கள்.

4. 2000-01 முதல் 2003-2004 வரையிலான நான்கு ஆண்டுகளுக்கு சமூக/பண்ணைக் காடுகள் ஏல வருவாயில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவேண்டிய பங்குத் தொகையான ரூ.15.16 கோடி உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வனவியல் மேம்பாட்டுப் பணிகளைத் திறம்படக் கண்காணிக்கவும், பாதுகாப்புப் பணிகளை பலப்படுத்தவும், இரண்டு புதிய வனக்கோட்டங்கள் பெரம்பலூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ளன.

6. உயிரின வகைப்பாட்டுச் சட்டம் 2002-ன்படி, ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு பல்லுயிரினப்பரவல் வாரியம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். பல்லுயிர் பரவலின் முக்கியத்துவம் கருதி, விஞ்ஞான வல்லுநர்களைக் கொண்ட பல்லுயிரினப் பரவல் வாரியம் தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.



2008 மே 13]

7. மாநகராட்சிகளிலும், அவற்றை சார்ந்த புறநகர்ப் பகுதிகளிலும் நகரமயமாக்கல் மற்றும் தொழிற்சாலைகளின் பெருக்கத்தினாலும் காற்றின் தன்மை மாசு அடைந்துள்ளதைப் போக்கவும், மரம் வளர்ப்பை ஊக்குவிக்கவும் இந்தியாவிலேயே முதன்முதலாக ரூ. 4 கோடி செலவில் திட்டம் தீட்டப்பட்டு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட வீரிய அரிய மர வகைகள் நடப்பட்டுள்ளன.

8. பசுமைப் போர்வையை அதிகப்படுத்த தனியார் விவசாய நிலங்களில் மரம் வளர்ப்பதை ஊக்குவிக்கும் வகையில் இந்தியாவிலேயே முதலாவதாக தமிழகம் ரூ.10 கோடி அளவுக்கு ஒரு திட்டம் தீட்டி 2007-08 ஆம் ஆண்டில் வெற்றிகரமாகச் செயல்படுத்தி உள்ளது. இதன்மூலம் மரக் கன்றுகளை உருவாக்கி, விவசாய நிலங்களில் வனத் துறையே நட்டுக் கொடுப்பதோடு, மானியத் தொகையையும் விவசாயிகளுக்கு வழங்குகின்றது. இதுமட்டுமல்லாமல் மரக்கன்றுகளை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஆக மொத்தம் 1 கோடிக்கு அதிகமான மரக்கன்றுகள் தனியார் நிலங்களில் 2007-08 ஆம் ஆண்டில், நடப்பட்டுள்ளன.

9. 2007-08 ஆம் ஆண்டில் 58,927 ஹெக்டேர் நிலப்பரப்பில் காடு வளர்ப்புத் திட்டங்களின்கீழ் 1.57 கோடி பல்வகை மரக் கன்றுகள் தமிழகத்தின் வனப் பகுதிகளில் நடப்பட்டுள்ளன.

10. மனித, வன உயிரின மோதலை தவிர்க்கும் நோக்கத்துடன் 2007-08 ஆம் ஆண்டில் 315 கி.மீ. நீளத்திற்கு சூரிய மின் வேலி அமைக்கப்பட்டுள்ளது.

11. 2007-2008 ஆம் ஆண்டில் வன உயிரினங்களால் நேரிட்ட இழப்புகளுக்கு ரூ.71.93 இலட்சம் இழப்பீடு வழங்கப்பட்டது. 2006-07 ஆம் ஆண்டு முதல் மாநில அரசால் சிறப்பு ஒதுக்கீடாக ஒப்பளிக்கப்பட்ட ரூ.50 இலட்சம்மூலம் முந்தைய ஆண்டுகளில் தேங்கி இருந்த அனைத்து இழப்பீட்டுக் கோரிக்கைகளுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு நஷ்ட ஈடு வழங்குவதற்காக மாநில அளவில் நிதி ஒதுக்கீடு செய்துதருவதில் இந்தியாவிலேயே முதலாவது

மாநிலமாக தமிழகம் விளங்குகின்றது. இதன்மூலம் வனங்களுக்கு அருகே வசிக்கும் பொதுமக்களுடன் வனத் துறைக்கு ஒரு இணக்கமான உறவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

12. சிறுவர்களிடையே வன உயிரினப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கத்துடன், கிண்டி சிறுவர் பூங்காவிற்கு வருகை தரும் அனைத்துச் சிறுவர்களுக்கும், நுழைவுக் கட்டணமின்றி அனுமதிக்க ஆணை வெளியிடப்பட்டு 2007-08 ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

13. சென்னைக்கு அருகேயுள்ள வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் இரவுக் கானக உலா, ரூ.2.56 கோடி திட்டச் செலவில் ஏற்படுத்த ஆணையிடப்பட்டு பணிகள் தொடங்கி உள்ளன. இது முடிவுறும்பொழுது பன்னாட்டு மற்றும் இன்னாட்டு சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவரும் வகையில் இந்தியாவிலேயே முதலாவது இரவுக் கானக உலாவாக அமையும்.

14. ஆக்கிரமிப்புகளிலிருந்து வனப் பகுதிகளைப் பாதுகாக்க பல்வேறு திட்டங்களின்கீழ் 23,590 எல்லைக் கற்கள் தமிழகத்தின் பல்வேறு வனப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

15. வனத் துறையிலுள்ள களப்பணியாளர்களுக்கு மாதமொன்றுக்கு வழங்கப்பட்டு வந்த சலவைப்படி ரூ.30/- லிருந்து, காவல் துறை அதிகாரிகளுக்கு இணையாக, ரூ.100/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

16. வன ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து சரகர், வனவர், வனக் காப்பாளர் மற்றும் வனக் காவலர் அனைவருக்கும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட காலணிகளை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

17. ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்த தேயிலைத் தோட்டக் கழகத்தின் தொழிலாளர்களுக்கான ஊதிய ஒப்பந்தம் 2007 ஆம் ஆண்டில், துரித நடவடிக்கைகளின் காரணமாக வெற்றிகரமாக முடிக்கப்பட்டு அவர்களுக்கு அதிக ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.



**10. வன வருவாய் மற்றும் செலவினம்**

**10.1. வன வருவாய்**

வனத் துறையின் பெரும்பான்மையான வருவாய் சந்தன மரம் மற்றும் தடிமர ஏலம் நடத்துவதன்மூலம் ஈட்டப்படுகின்றது. வருவாய் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

**(ரூபாய் இலட்சங்களில்)**

| வ. எண் | வருவாய் ஆதாரம் | 2007–2008 (திருத்திய மதிப்பீடு) | 2008–2009 (உத்தேசிக்கப் பட்ட மதிப்பீடு) |
|---|---|---|---|
| (அ) | சந்தன மரம் | 7810.66 | 7000.00 |
| (ஆ) | தடி மரம் | 1019.16 | 1119.79 |
| (இ) | தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருட்கள் வழங்குதல் | 479.05 | 484.34 |
| (ஈ) | பிற சிறுவனப் பொருட்கள் | 11.21 | 13.31 |
| (உ) | பண்ணைக் காடுகள் | 700.00 | 750.00 |
| (ஊ) | மூங்கில், முந்திரி, மென்மரம் முதலிய தோட்டங்கள் விற்பனை | 13.83 | 14.27 |
| (எ) | இதர வருவாய்கள் | 2183.52 | 2339.13 |
| | மொத்தம் | 12167.43 | 11720.84 |
| | மீள் அளிப்பு தொகையை கழிக்கவும் | 1628.99 | 665.22 |
| | நிகர மொத்தம் | 105388.44 | 11055.62 |

## 10.2. செலவினம் [2008 மே 13

வனத் துறையின் செலவின விவரங்கள் பின்வருமாறு:

(ரூ. இலட்சங்களில்)

| திட்டம் | வரவு-செலவு மதிப்பீடு 2007-2008 | திருத்திய மதிப்பீடு 2007-2008 | வரவு-செலவு மதிப்பீடு 2008-2009 |
|---|---|---|---|
| மாநிலத் திட்டங்கள் | 29334.95 | 28071.73 | 30643.47 |
| மத்திய அரசு பொறுப்பேற்பவை | 637.13 | 879.99 | 610.80 |
| மாநில, மத்திய அரசுகள் பொறுப்பேற்பவை | 660.14 | 667.08 | 590.37 |
| மொத்தம் | 30632.22 | 29618.80 | 31844.64 |

## 10.3. பகுதி-II திட்டங்கள்

2008-09 ஆம் ஆண்டில் ரூ.4.69 கோடி செலவில் கீழே குறிப்பிட்டுள்ள பகுதி-II திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன:

| வ. எண் | திட்டங்களின் பெயர் | தொகை (ரூ. இலட்சங்களில்) |
|---|---|---|
| 1 | பெரம்பலூரில் 3 ஓய்வு அறைகள் கொண்ட ஒரு வன ஓய்வு விடுதி கட்டுதல் | 20.00 |
| 2 | சேதம் விளைவிக்கும் யானை, காட்டுப் பன்றி, குரங்கு மற்றும் பிற வன உயிரினங்களை வனப் பகுதிக்குள் திருப்பி அனுப்புதல் | 20.00 |
| 3 | 1,67,000 உயரமான மரக் கன்றுகளை உற்பத்தி செய்து அரசு, மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்குதல் | 50.00 |
| 4 | வனப் பகுதிகளில் உள்ள சாலைகளை மேம்படுத்துதல் | 125.00 |
| 5 | தமிழகத்தில் முக்கிய வனப் பகுதிகளில் 115.625 கி.மீ. நீளத்திற்கு சூரிய மின் வேலி அமைத்தல் | 185.00 |



2008 மே 13]

| வ. எண் | திட்டங்களின் பெயர் | தொகை (ரூ. இலட்சங்களில்) |
|---|---|---|
| 6 | பனகல் மாளிகையில் உள்ள வனத் துறை அலுவலகத்தில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல் | 9.00 |
| 7 | 12 மருத்துவத் தாவரங்கள் பாதுகாப்புப் பகுதிகளையும், 8 மருத்துவத் தாவரங்கள் அபிவிருத்திப் பகுதிகளையும் பராமரித்து காத்தல் | 10.00 |
| 8 | நான்கு பறவைகள் புகலிடங்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல் | 8.00 |
| 9 | வனத் துறை அலுவலர்களுக்கு மனித வள மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் ஆயுதப் பயிற்சி அளித்தல் | 10.00 |
| 10 | குரும்பப்பட்டி உயிரியல் பூங்கா, ஏற்காடு மான் பூங்கா மற்றும் அமிர்தி உயிரியல் பூங்கா ஆகியவற்றின் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல் | 7.00 |
| 11 | பழங்குடியினர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுத்தல் | 25.00 |
| | மொத்தம் | 469.00 |

## 11. 2008-2009-ல் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள்

### 11.1. படுகை நிலங்களில் தேக்கு மரங்கள் வளர்த்தல்

மாநிலம் முழுவதும் படுகை நிலங்களில் குறிப்பாக ஆறு மற்றும் கால்வாய் ஓரங்களில் பெருமளவில் தேக்கு மரங்களை நடவும், தேக்கு மர இருப்பினை அதிகரிக்கவும், உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கவும், அவர்கள் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தவும், மாநிலத்தின் பொருளாதாரத்தினை மேம்படுத்தவும் 2008-09 முதல் 2012-13 முடிய ஐந்தாண்டு காலத்தில் 20,700 எக்டேர் பரப்பில் தேக்குமரக் கன்றுகளை சுமார் ரூ.35.41 கோடி மதிப்பீட்டில் வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 11.2. தனியார் நிலங்களில் கடலோரப் பகுதித் தோட்டங்கள்

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகள் கடல் மட்ட வேறுபாடு, கடலோர அரிப்பு, உப்புநீர் உட்புகுதல், சதுப்பு நிலக் காடுகள்

தரங்குன்றுதல் போன்ற பல்வேறு இடர்களை எதிர்நோக்கி வருகிறது. மேலும் இவ்விடர்களிலிருந்து கடலோரத்தில் வசித்து வரும் மக்களைப் பாதுகாக்கவும், மரங்களடர்ந்த பகுதிகளின் பரப்பினை அதிகரிக்கவும், கடலோரக் குடியிருப்போர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலைமையினை மேம்படுத்தவும், கடலோரப் பகுதிகளில் 1,000 ஹெக்டேர் பரப்பில் கடலோர தொடர் தடுப்புத் தோட்டங்களை ரூ.4.15 கோடி மதிப்பீட்டில் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**11.3. தமிழகத்தில் மருத்துவத் தாவரங்கள் வளங்களின் பாதுகாப்பு மற்றும் சேகரிப்பு**

தமிழகத்தில் உடனடிப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரக்கூடிய 600-க்கும் மேற்பட்ட மருத்துவத் தாவர வகைகளில், 90 விழுக்காட்டிற்கும் மேலாக வனப் பகுதிகளில் காணப்படுகின்றன. சமீப காலங்களில் மருத்துவத் தாவரப் பொருட்களின் தேவைகள் அதிகமாகி வருவதால், சில தாவரங்கள் நிரந்தரமாக அழியக்கூடிய நிலையிலுள்ளன. எனவே, தமிழ்நாட்டின் மருத்துவத் தாவர வளங்களைப் பாதுகாத்து சேகரிக்க தேசிய மருத்துவத் தாவர வாரியத்தின் உதவியுடன் 2008-09 ஆம் ஆண்டில் திட்டமொன்று ரூ.3.21 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

**11.4. வனப் பகுதிகளில் சுற்றுலா**

சூழல் சுற்றுலாவின் பலன்களைக் கருத்தில்கொண்டு, சூழல் சுற்றுலாவிற்காக ரூ.47.00 கோடி மதிப்பீட்டிலான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து முதுமலை-ஆனைமலை சுற்றுலாத் தலத்திற்கு ரூ.439.50 இலட்சம் ஒப்பளிப்பு பெறப்பட்டு அப்பணிகள் 2008-09 ஆம் ஆண்டில் தொடங்கப்படும். இதேபோல் மாநிலத்தின் பல்வேறு வனம் சார்ந்த பகுதிகளிலும் சூழல் சுற்றுலா ஊக்குவிக்கப்படும்.

**11.5. நீர் வள மேம்பாடு**

தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் வளம் அளவிற்கு அதிகமாக உறிஞ்சப்படுவதால் நிலத்தடி நீர் வளம் பெருமளவிற்குக் குறைந்துள்ளது. இந்நிலையை மாற்றும் நோக்கத்தோடு வைகை, கிருஷ்ணகிரி மற்றும் கொடகனாறு நீர்ப் பிடிப்பு பகுதிகளில் 2008-09 முதல் 2010-2011 வரை மூன்று ஆண்டு காலங்களில் வனத் துறையின்மூலம் தடுப்பணைகள், ஊருணிகள் ஆகியவற்றை அமைத்து நீரைச்



சேமிப்பதற்கு 2008-09 ஆம் ஆண்டில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

**12. வனக் கழகங்கள்**

**12.1 தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், குன்னூர்**

சாஸ்திரி-ஸ்ரீ மாவோ உடன்படிக்கையின்படி, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் மறுவாழ்விற்காக, சமூகப் பொருளாதார நோக்கத்துடன், தேயிலைத் தோட்டங்களை உருவாக்க 1968 ஆம் ஆண்டில், தமிழக அரசால் அரசு தேயிலைத் திட்டம் ஏற்படுத்தப்பட்டு, வனத் துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டது. பின்னர் டான்டீ என்று பலராலும் அழைக்கப்படும், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் ஒரு அரசு நிறுவனமாக 1956 ஆம் வருடத்திய நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் 1975 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டது.

இக்கழகம் 4,431.92 ஹெக்டேர் பரப்பில் தேயிலைத் தோட்டத்தினை உருவாக்கி ஆண்டொன்றிற்கு சுமார் 120 இலட்சம் கிலோகிராம் பதப்படுத்தப்பட்ட தேயிலையை உற்பத்தி செய்கின்றது. தேயிலையைப் பதப்படுத்தும் திறனுள்ள 8 நவீன தேயிலை தொழிற்சாலைகள் தமிழ் நாடு தேயிலை தோட்டக் கழகத்திடம் உள்ளன.

இக்கழகம் சுமார் 6,250 தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும், சுமார் 3,000 தொழிலாளர்களுக்குத் தற்காலிக வேலை வாய்ப்பும் வழங்குகிறது. வீட்டு வசதி மற்றும் இலவச குடிநீர் வழங்குதல், இலவச மருத்துவ வசதிகள் போன்ற பிற வசதிகளும் இக்கழகத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. இக்கழகம் மூன்று மருத்துவமனைகளையும், ஏழு பள்ளிகளையும் நடத்தி வருகின்றது. 2006-2007 ஆம் ஆண்டு முதல் இதன் மருத்துவனைகளில் தற்காலிகத் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

01-01-2002 முதல் 31-12-2007 வரையிலான ஆறு வருடங்களுக்கான தொழிலாளர்களுக்கான ஊதிய ஒப்பந்தம் பல ஆண்டுகளாக முடிவு பெறாமல் நிலவி வந்த இழுபறி நிலையைப் போக்கி இந்த அரசு ஒரு ஊதிய ஒப்பந்தத்தை அமலுக்குக் கொண்டு வந்துள்ளது. இதன்படி ஜூலை 2007 முதல் மாற்றியமைக்கப்பட்ட ஊதியம் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதுடன், முன்காலத்திற்கான ஊதிய நிலுவையும் தவணைகளில் வழங்கப்படுகிறது. 31-12-07 வரை

இக்கழகத்திலுள்ள தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட தினசரி ஊதியமான ரூ.86.15, நீலகிரி மற்றும் ஆனைமலை பகுதிகளில் உள்ள தனியார் தோட்டத் தொழிலாளர்களுக்கு முறையே வழங்கப்பட்ட தினசரி ஊதியத்தைவிட கணிசமான அளவு அதிகமானதாகும்.

அரசின் ,ஆணைப்படி 2006-2007 ஆம் வருடத்திற்கான 20 விழுக்காடு போனஸ் மற்றும் கருணைத் தொகையாக ரூ.318 இலட்சம் நவம்பர் 2007-ல் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்கான தற்போதைய ஊதிய ஒப்பந்தம் 31-12-2007-ல் முடிவுக்கு வந்துள்ளது. 01-01-2008-லிருந்து ஊதிய உயர்வு அளிக்க தொழிலாளர்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டுள்ளது.

2005-2006 ஆம் ஆண்டு இக்கழகத்திற்கு ரூ.8.47 கோடி நட்டம் ஏற்பட்டது. 2006-2007-ல் மேற்கொள்ளப்பட்ட சில மேம்பாட்டுத் திட்டங்களினால் நட்டம் ரூ. 1.10 கோடியாகக் குறைக்கப்பட்டது. 2007-2008 ஆம் ஆண்டில், அக்டோபர் 2007 முதல் மார்ச் 2008 வரையிலும் பதப்படுத்தப்பட்ட தேயிலையின் விலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த முன்னேற்றம் நீடித்தால் 2008-2009-ல் ரூ. 6.85 கோடி இலாபம் ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**12.2 தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், திருச்சிராப்பள்ளி**

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் 1974 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 13 ஆம் நாள் திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு நிறுவனங்களுக்கான சட்டம் 1956-ன்கீழ் நிறுவப்பட்டது. 74,963.23 ஹெக்டேர் பரப்புள்ள காப்புக் காடுகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனங்கள் தமிழ்நாடு வனத் துறையிடமிருந்து இந்நிறுவனத்துக்கு வழங்கப்பட்டன. புதுக்கோட்டை, அறந்தாங்கி, காரைக்குடி, விருத்தாசலம், விழுப்புரம், திருக்கோயிலூர் மற்றும் மேல்செங்கம் என 7 மண்டலங்களைக் கொண்டுள்ள தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்திடம் சந்தனமரப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றும் உள்ளது.

**12. 2.1 குறிக்கோள்:**

இக்கழகத்தின் முக்கியக் குறிக்கோள்

(i) மரக்கூழ் உற்பத்தி செய்யத் தேவையான கூழ் மரம் நிரந்தரமாகக் கிடைக்க தைல மரத் தோட்டங்களை உருவாக்குதல்.





(ii) பொது மக்களின் விறகுத் தேவையினைப் பூர்த்தி செய்ய விறகு மரத் தோட்டங்கள் மற்றும் முந்திரிக் கொட்டைகள் உற்பத்தி செய்ய முந்திரி மரத் தோட்டங்களை உருவாக்குதல்.

**12.2.2 தைல குளோனல் தோட்டங்கள்:**

உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக 1999 ஆம் ஆண்டிலிருந்து அதிக அளவில் தைலமரக் குளோனல் தோட்டங்கள் வளர்க்கப்பட்டன. 1999 ஆம் ஆண்டிலிருந்து எழுப்பப்பட்டுள்ள குளோனல் தோட்டங்களின் பரப்பளவு 15,458 ஹெக்டேர் ஆகும். விதைகளின்மூலம் உற்பத்தி செய்யப்பட்ட தோட்டங்களிலிருந்து ஹெக்டேர் ஒன்றுக்கு கிடைக்கும், சுமார் 19 மெட்ரிக் டன் மகசூலைவிட தைலகுளோனல் தோட்டங்களில் இருந்து ஒரு ஹெக்டேருக்கு சுமார் 34 மெட்ரிக் டன் மகசூல் சராசரியாகக் கிடைக்கின்றது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 2800 ஹெக்டேர் பரப்பில் தைலகுளோனல் தோட்டங்கள் வளர்க்கப்படுகின்றன.

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் அதிக மகசூல் தரக்கூடிய உயர்ரக தைலகுளோனல் செடிகளை உற்பத்தி செய்து தமிழ்நாடு காகித நிறுவனத்திற்கும் மற்றவர்களுக்கும் பெரிய அளவில் வழங்கி வருகிறது. 2007-08-ல் தமிழ்நாடு காகித நிறுவனத்திற்கு 22.85 இலட்சம் குளோனல் செடிகள் விநியோகிக்கப்பட்டன.

**12.2.3. மரக்கூழ் மரங்கள்:**

மரத்தினை மூலப்பொருளாகக் கொண்டு இயங்கும் தொழிற்சாலைகளான காகித நிறுவனங்களுக்கு தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் அதிக அளவில் கூழ்மர விற்பனை செய்து வருகிறது. 2008-09 ஆம் ஆண்டில் சுமார் 1,20,000 மெட்ரிக் டன் கூழ்மரம் இந்நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படும்.

**12.2.4. முந்திரி:**

முந்திரி உற்பத்தியினை அதிகரிக்க, உயர் ரக குளோனல் செடிகள் நடப்படுகின்றன. பொதுமக்கள் பங்கேற்கும் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல முறையின்மூலம் முந்திரித் தோட்டங்கள் குத்தகைக்கு விடப்பட்டு வருவாய் ஈட்டப்படுகிறது. முந்திரிமூலம் இக்கழகம் பெற்ற வருவாய் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

[2008 மே 13

| ஆண்டு | வருவாய் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 2006-2007 | 349.80 |
| 2007-2008 (மதிப்பீடு) | 805.12 |

**12.2.5. 2008–09–க்கான நடவு இலக்குகள்:**

2008-09 ஆம் ஆண்டில் தோட்டங்கள் பின்வருமாறு உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது:

| பணியினம் | திட்ட இலக்கு (பரப்பு ஹெக்டேரில்) |
|---|---|
| (அ) தைலத் தோட்டங்கள் வளர்த்தல் | 3,500 |
| (ஆ) முந்திரித் தோட்டங்கள் வளர்த்தல் | 1,000 |
| (இ) சவுக்குத் தோட்டங்கள் வளர்த்தல் | 10 |

**12.2.6 கழகத்தின் நிதி நிலைச் செயல்பாடுகள்:**

2006-07-ல் இக்கழகம் நிகர இலாபமாக ரூ.7.71 கோடியும் கடந்த ஆண்டுகளையும் சேர்த்து மொத்த இலாபமாக ரூ.41.91 கோடியும் ஈட்டியுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளின் விவரம் பின்வருமாறு:

(ரூ. இலட்சங்களில்)

| வருடம் | வருவாய் | செலவு | நிகர இலாபம் |
|---|---|---|---|
| 2004-05 | 3765.61 | 3082.59 | 683.02 |
| 2005-06 | 3594.79 | 2858.42 | 736.37 |
| 2006-07 | 4028.69 | 3257.68 | 771.01 |
| 2007-08 | கணக்குகள் முடிவு செய்யப்படும் நிலையில் உள்ளன. | | |



2008 மே 13]

**12.3. அரசு இரப்பர் கழகம், நாகர்கோயில்**

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு வனத் துறைக்கு சொந்தமான 4,279.78 ஹெக்டேர் வன நிலங்களிலுள்ள இரப்பர் தோட்டங்களை அரசு இரப்பர் கழகம் குத்தகைக்கு எடுத்துள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் பயிரிட ஏற்ற மண் வளம், தட்பவெப்ப நிலை மற்றும் இட அமைப்பு ஆகியவை உள்ளன. 1956 ஆம் ஆண்டின் நிறுவனங்களுக்கான சட்டத்தின்கீழ், அரசு இரப்பர் கழகம் 10-08-1984 அன்று பதிவு செய்யப்பட்டது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.10.00 கோடியாகும். இக்கழகத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.8.45 கோடியாகும். இக்கழகத்தின் மொத்தப் பங்கு முதலீடும், தமிழ்நாடு அரசைச் சேர்ந்ததாகும். இக்கழகத்தில் 398 இலங்கை அகதிகள் உட்பட 1,823 தொழிலாளர்கள் உள்ளனர்.

அரசு இரப்பர் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 70 சதவீதத்திற்கும் மேற்பட்ட இரப்பர் மரங்கள், 1960 மற்றும் 1970 ஆம் ஆண்டுகளில் நடப்பட்ட மரங்கள் ஆகும். 30 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வரும் மரங்கள், குறைந்த அளவு விளைச்சலையே வழங்குவதால், உற்பத்தி இழப்பை ஈடுகட்டவும், உற்பத்தியைப் பெருக்கவும், கழகம் சிறப்பாகச் செயலாற்றவும், தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பளிக்கவும், இரப்பர் வாரியத்தின் அறிவுரையின்படி, குறைந்த விளைச்சலை அளிக்கும் முதிர்ந்த இரப்பர் மரங்களை அகற்றி அப்பகுதிகளில் அதிக விளைச்சலைத் தரும் உயர்நுட்பவியல் ஒட்டு மரங்களை மறுநடவு செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதன்படி 2008-09 ஆம் ஆண்டில் 142.9 ஹெக்டேர் நிலப் பரப்பில் ஒட்டு மரங்கள் புதிதாக வரும் ஆண்டுகளில் நடுவதற்காக மரங்கள் அகற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**12.3.1. உற்பத்தி மற்றும் விற்பனை (வருவாய் மற்றும் செலவினம்)**

இக்கழகத்தின் 2004-05, 2005-06 மற்றும் 2006-07 ஆம் ஆண்டுகளுக்கான வருவாய் மற்றும் செலவினம் பின்வருமாறு:

**(ரூபாய் இலட்சங்களில்)**

| வருடம் | இரப்பர் உற்பத்தி (மெட்ரிக் டன்னில்) | இரப்பர் மற்றும் இதர பொருட்கள் விற்பனையில் பெறப்பட்ட வருவாய் | செலவு | நிகர இலாபம் (+) நட்டம் (–) |
|---|---|---|---|---|
| 2004–2005 | 2037.00 | 1491.36 | 1470.44 | (+) 20.92 |
| 2005–2006 | 2562.00 | 2015.57 | 1946.16 | (+) 69.41 |
| 2006–2007 | 2116.00 | 2190.49 | 1647.34 | (+) 543.15 |
| 2007–2008 | கணக்குகள் முடிவு செய்யப்படும் நிலையில் உள்ளன | | | |

2007-2008 மற்றும் 2008-2009 ஆம் ஆண்டுகளிலும் தொடர்ந்து இந்நிறுவனம் இலாபம் ஈட்டி வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### 13. தொடரும் பாதை

வனங்களைப் பாதுகாப்பதன்மூலம் (அ) மாநிலத்தின் அரிய பல்லுயிர்ப்பரவலை கட்டிக்காப்பதும், (ஆ) காட்டினுள்ளே வன விலங்கினங்களின் வளர்ச்சிக்கு அடிகோலுவதும், (இ) பழங்குடியினர் மற்றும் மலைவாழ் மக்களின் நலனைப் பேணிப் பாதுகாத்தலும், தனியார் நிலங்களில் மரங்களை வளர்ப்பதன்மூலம் (அ) பசுமைப் போர்வையை அதிகரிப்பதும், (ஆ) தொழிற்சாலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதும் மற்றும் (இ) மாசினைக் கட்டுப்படுத்துவதும் வனத் துறையின் முக்கியமான குறிக்கோள்களாகும். இவ்விரண்டு அணுகுமுறைகளும் தமிழ்நாட்டை, வனப் பாதுகாப்பிலும், மரம் வளர்ச்சியின்மூலம் விவசாயிகளின் பொருளாதார நிலைமை மேம்படச் செய்வதிலும், இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக இடம் பெறச் செய்யும்.





## 2. சுற்றுச்சூழல் துறை

சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது சமூக, பொருளாதார வளர்ச்சியுடன் ஒருங்கிணைந்த அம்சமாகும். பெருகி வரும் மக்கள் தொகைப் பெருக்கமும், அதிகரித்து வரும் தொழில் மயமாக்கலும் நிலம் மற்றும் நீர்வாழ் உயிரின அமைப்பின் பாதுகாப்பிற்கு பெரும் சவாலாக விளங்குகின்றன. தமிழ்நாட்டின் நிலம், நீர், வனம் மற்றும் உயிர்ப் பன்மயம் உள்ளிட்ட வாழ்க்கைச் சங்கிலித் தொடரைச் சிதைக்காமல் சூழலியல் பாதுகாப்பினை மேம்படுத்துதல் இன்றியமையாததாகும்.

சுற்றுச்சூழலின் பாதிப்பு ஏழை மற்றும் நலிவுற்ற மக்கள்மீது அதிகபட்ச தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எனவே, சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதன்மூலம் சமுதாயத்தில் ஏழைமக்களின் பொருளாதார நலன்கள் காக்கப்படுகின்றன. நீடித்து நிற்கும் வளர்ச்சியே இன்றைய முக்கியத் தேவையாகும். இதனை, சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதன் தேவை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதன் மூலமே அடைய இயலும். பள்ளி மாணாக்கர்கள் மற்றும் பொதுமக்களிடையே பரவலாகச் சுற்றுச்சூழல் சிந்தனைகளை வளர்ப்பதோடு ஆறுகள் மற்றும் ஏரிகள் மாசுபடுவதைத் தடுத்திட இவ்வரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### 2.1 சுற்றுச்சூழல் இயக்குநரகம்

இம்மாநிலத்தில் சுற்றுச்சூழல் சிந்தனைகளை ஊக்குவிக்கும் பொருட்டு முனைப்புடன் செயல்பட சுற்றுச்சூழல் இயக்குநரகம் இயங்கி வருகின்றது. இவ்வியக்குநரகம் காவிரி, வைகை மற்றும் தாமிரபரணி ஆகிய நதிகள் மற்றும் சென்னை நகரிலுள்ள நீர் வழிகள் மாசுபடுவதைத் தடுக்கும் பெரும் திட்டங்களை ஒருங்கிணைக்கும் பொறுப்பை நிறைவேற்றி வருகின்றது. அது மட்டுமல்லாமல் தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம், கடற்கரைப் பகுதி மேலாண்மை மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் கையாளப்படாத இதர சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் இவ்வியக்குநரகத்தின் பொறுப்பாகும்.

#### 2.1.1 துறையின் நிர்வாக அமைப்பு

சுற்றுச்சூழல் இயக்குநரகம், தலைமை வனப் பாதுகாவலர் நிலையில் ஒரு இயக்குநரையும், வனப் பாதுகாவலர் நிலையில் ஒரு கூடுதல் இயக்குநரையும் கொண்டு இயங்கி வருகிறது. இந்த

[2008 மே 13

இயக்குநரகத்தில் மொத்தம் 23 பேர் பணிபுரிகின்றனர். அதில் ஒரு துணை இயக்குநரும், உதவி செயற்பொறியாளரும் அடங்குவர். கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கையின் விதி மீறல்கள் குறித்து உதவி வனப் பாதுகாவலர் தலைமையில் இயங்கும் பசுமைப் படை மூலமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தேசிய நதி நீர்ப் பாதுகாப்பு திட்டம், தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றின்கீழ் நடைபெறும் பணிகளை மைய அரசு மற்றும் செயலாக்க முகமைகளுடன் ஒருங்கிணைத்து மேற்பார்வையிட தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை என்ற தன்னாட்சி அமைப்பு சுற்றுச்சூழல் இயக்குநரின்கீழ் இயங்குகிறது. இம்முகமையில் மேற்பார்வைப் பொறியாளர் நிலையிலுள்ள ஒரு திட்ட மேலாளரும், செயற்பொறியாளர்களும், உதவி செயற் பொறியாளர்களும் மற்றும் உதவிப் பொறியாளர்களும் பணிபுரிகின்றனர்.

## 2.2. கடற்கரைப் பகுதி மேலாண்மை

தமிழ்நாடு 1,076 கி.மீ. நீளமுள்ள கடலோரத்தைக் கொண்டுள்ளது. இது இந்தியாவின் கடலோரத்தின் 15 சதவீதத்தினை உள்ளடக்கியது. கடலோரச் சூழலினைப் பாதுகாப்பதற்கும், கடலோரத்திலுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்துவதற்கும் மைய அரசு 1991 ஆம் ஆண்டு ஒரு புதிய கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கையை சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் பிரகடனப்படுத்தியது. அதன்படி கடற்கரையோரப் பகுதிகளில் (அ) உயர்மட்ட அலைக் கோடு மற்றும் தாழ்மட்ட அலைக் கோடுகளுக்கும் இடையே உள்ள பகுதி (ஆ) உயர்மட்ட அலைக் கோட்டிலிருந்து 500 மீட்டர் வரை உள்ள பகுதி மற்றும் (இ) கடல் அலைகளின் பாதிப்புக்குள்ளாகும் நிலப் பகுதிகளில் . 100 மீட்டர் வரையும் கடற்கரையோர ஒழுங்குமுறைப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடலோரச் சூழலினைப் பாதுகாப்பதற்கும், கடலோரத்தின் தரத்தினை மேம்படுத்தவும், கடலோரப் பகுதி மாசு படுவதைத் தடுத்து கட்டுப்படுத்தவும், தேசிய கடற்கரை மேலாண்மைக் குழு மைய அரசால் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளின் சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தவும், மாசுபடுவதைத் தடுக்கவும், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறைச் செயலரை தலைவராகவும், சுற்றுச்சூழல் துறை இயக்குநரை உறுப்பினர்-செயலராகவும் கொண்டு பல பொறியியல் வல்லுநர்களும், விஞ்ஞானிகளும் அடங்கிய ஒரு மாநில அளவிலான மேலாண்மைக் குழுவும் அமையப் பெற்றுள்ளது.



2008 மே 13]

கடற்கரையோர ஒழுங்குமுறை அறிவிக்கையினை மாவட்ட அளவில் கண்காணிக்கவும், அமலாக்கவும், மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் மாவட்ட கடற்கரையோர மேலாண்மைக் குழுமத்தையும் தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. கடற்கரையோர ஒழுங்குமுறை அறிவிக்கையின்கீழ் பெறப்படும் கருத்துருக்கள் முதலில் மாவட்ட கடற்கரையோர மேலாண்மைக் குழுவினால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, மாநில கடற்கரையோர மேலாண்மைக் குழுமத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன. அவை பரிசீலிக்கப்பட்டு கருத்துருவின் தன்மையைப் பொறுத்து மாநில மேலாண்மைக் குழுவாலோ, தேசிய மேலாண்மைக் குழுவாலோ ஒப்புதல் வழங்கப்படுகின்றன.

## 2.3 நதி மற்றும் ஏரிகள் பாதுகாப்புப் பணிகள்

மைய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம் போன்ற திட்டங்களை கூர்ந்தாய்வு செய்து பல்வேறு முகமைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்த தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமையால் ஒருங்கிணைக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் திட்டங்கள் பின்வருவன:

### 2.3.1. காவிரியாற்றின் கரையில் மாசடைந்துள்ள ஐந்து பகுதிகளில் மாசு தடுப்புப் பணிகள்

இத்திட்டம் மைய அரசின் நிதி ஆதாரத்துடன், தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூ.36.28 கோடி மதிப்பீட்டில் 1996 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் ரூ.22.44 கோடி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள்மூலம் செலவிடப்பட்டுள்ளது. கழிவுநீரைத் தடுத்து வழிப்படுத்துதல், கழிவுநீரேற்று நிலையங்கள் மற்றும் கழிவுநீரைச் சுத்திகரிக்கும் திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவுதல் ஆகிய பணிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்துப் பணிகளும் திருச்சி, குமாரபாளையம் மற்றும் ஈரோடு ஆகிய நகரங்களில் முடிவுபெற்றுள்ளன. பவானி நகரத்தில் பணிகள் நடைபெற்று வருகின்றன. பள்ளிப்பாளையம் நகரில் வீட்டுக் கழிவு நீரை மட்டும் சுத்திகரிக்கும் வகையில் திருத்திய மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் தயாரிக்கப்பட்டு வருகிறது. சிறு பணிகளான குறைந்த செலவில் கழிப்பிடம் கட்டுதல், எரியூட்டு

மயானம், ஆற்றங்கரை பாதுகாப்புப் பணிகள் போன்றவை, உள்ளாட்சி அமைப்புகள்மூலம் நிறைவு பெற்றுள்ளன.

## 2.3.2 தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம் – கூடுதல் ஏழு நகரங்கள்

காவிரி, வைகை, தாமிரபரணி ஆகிய ஆறுகள் மாசுபடுவதைத் தவிர்க்கும் திட்டம் கரூர், திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய ஏழு நகரங்களில் ரூ.575.30 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் ரூ.282.15 கோடி மைய அரசு மானியமாகவும், மீதமுள்ள செலவுத் தொகை தமிழக அரசு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்பின்மூலம் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், பாதாளச் சாக்கடை அமைத்தல், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், கழிப்பிடங்கள் மற்றும் திடக் கழிவு மேலாண்மை வசதிகள் ஏற்படுத்தி ஆற்று நீரின் மாசினைக் களைந்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைக்கப்பட்ட இத்திட்டங்கள் ஆற்றில் கலக்கும் மாசுகளைக் களைவதோடு மட்டுமன்றி, மக்களின் மேம்பட்ட வாழ்வு மற்றும் சுகாதாரத்திற்கு வழிவகுக்கின்றன. சிறு பணிகளான திடக் கழிவு மேலாண்மை, ஆற்றங்கரை பாதுகாப்புப் பணிகள் மற்றும் கழிப்பிட வசதி ஆகியவை உள்ளாட்சி அமைப்புகள்மூலம் நிறைவேற்றப்படுகின்றன. இத்திட்டங்களின்மூலம் நாளொன்றுக்கு 249.55 மில்லியன் லிட்டர் கழிவு நீரைச் சுத்திகரிக்கலாம். மதுரை மற்றும் கும்பகோணம் நகரங்களின் பணிகள் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலமாகவும், கரூர், திருச்சி, தஞ்சாவூர், மயிலாடுதுறை மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகவும் நிறைவேற்றப்படுகின்றன. மேலும் மதுரையில் ஆற்றில் கலக்கும் கழிவு நீரைத் தடுத்து வழிப்படுத்தும் பணிகள் பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்படவுள்ளன. இதுவரை இத்திட்டப் பணிகளுக்காக ரூ.439.04 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## 2.3.3 சென்னைப் பெருநகர நதி நீர்ப் பாதுகாப்புத் திட்டம்

சென்னை நகரில் உள்ள முக்கிய ஆறு நீர்வழித் தடங்களான கூவம், பக்கிங்ஹாம் கால்வாய், அடையாறு, ஓட்டேரி ஓடை, கேப்டன் காட்டன் கால்வாய் மற்றும் மாம்பலம் கால்வாய் ஆகியவற்றில் மாசு தடுப்பு பணிகள் மைய அரசு உதவியுடன் ரூ.491 கோடி செலவில் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று



வாரியத்தால் செயல்படுத்தப்படுகின்றன. நீர்நிலைகளில் கலக்கும் கழிவுநீரைத் தடுத்தல், சுத்தகரிப்பு நிலையம் கொண்டு சென்று சுத்திகரித்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை ரூ.377.94 கோடி இத்திட்டத்தின்கீழ் செலவிடப்பட்டுள்ளது. இதில் பெருங்குடி (54 MLD), கோயம்பேடு (60 MLD), நெசப்பாக்கம் (40 MLD) மற்றும் கொடுங்கையூரில் (110 MLD) ஆக கூடுதலாக நாளொன்றுக்கு 264 மில்லியன் லிட்டர்கள் கழிவுநீர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட சுத்திகரிக்கும் நிலையங்கள் அமைககப்பட்டுள்ளன. சுத்திகரிக்கும் நிலையங்களில் இருந்து வெளிவரும் மீதேன் வாயுவை உபயோகித்து மின் உற்பத்தி செய்யப்பட்டு சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்கத்திற்காக உபயோகிக்கப்படுகிறது.

## 2.3.4 தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம்

ஊட்டி ஏரியைப் புதுப்பிக்கும் பணிகள் ரூ.1.72 கோடி செலவில் பொதுப் பணித் துறைமூலம் செயலாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், நீர்ப்பரப்பில் உள்ள தாவரங்கள் மற்றும் வண்டல் அகற்றுதல் (Deweeding and Desilting), நுண்ணுயிர்மூலம் தூய்மையாக்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

கொடைக்கானல் ஏரியின் சுற்றுச்சூழல் மேம்பாட்டுப் பணிகளுக்காக தேசிய நதி நீர் பாதுகாப்பகம் ரூ.10.43 கோடி மதிப்பில் விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. பொதுப் பணித் துறை, ஏரியை நுண்ணுயிர்மூலம் தூய்மைப்படுத்தும் பணியையும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கழிவுநீரை வடிகால் குழாய்கள்மூலம் சேகரித்து சுத்திகரிக்கும் பணியையும், கொடைக்கானல் நகராட்சி, சுகாதாரக் கழிப்பிட வசதிகளை அமைக்கும் பணியையும் செயல்படுத்துகின்றன.

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் உள்ள ஏரியைத் தூய்மைப்படுத்த மேற்கொள்ள வேண்டிய மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.4.37 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு தேசிய நதி நீர்ப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பணியை மேற்கொள்ள ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ.4.37 கோடியில் 30 சதவிகித செலவை தமிழக அரசே ஏற்க வேண்டும் என்று மைய அரசு

கேட்டுக்கொண்டதற்கிணங்க தமிழக அரசு 30 சதவிகித செலவுத் தொகையை ஏற்க சம்மதம் தெரிவித்துள்ளது. பாதுகாக்கப்பட்ட பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திற்கு ரூ.12.32 கோடி மதிப்பீட்டில் ஐந்து வருடங்களில் மேற்கொள்ளும் வகையில் சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் ஒன்று கோவையிலுள்ள சலீம் அலி பறவைகள் மையம் மற்றும் இயற்கை அமைப்பு (SACON) மூலமாக வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 2.4 சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

### 2.4.1 தேசிய பசுமைப் படை

சுற்றுச்சூழல் விழிப்புணர்வினைப் பள்ளி மாணாக்கர்களிடையே ஏற்படுத்த மைய அரசின் நிதியுதவியுடன் தமிழ்நாடு முழுவதும் 7.500 பள்ளிகளில் தேசிய பசுமைப் படை துவங்கப்பட்டுள்ளது. இவ்விழிப்புணர்வு இயக்கத்தில் மட்டும் மூன்று இலட்சம் மாணாக்கர்கள் பங்கேற்று வருகின்றனர். ஆண்டுதோறும் ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.2,500/- மானியம் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் தலைமைப் பயிற்றுனர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மாநில அளவில் வழிகாட்டுதல் குழு மற்றும் மாவட்ட அளவில் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு இத்திட்டத்தின் செயலாக்கம் கண்காணிக்கப்படுகிறது.

### 2.4.2 சூழல் மன்றங்கள்

மாநில அரசின் நிதியுதவியுடன் பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வினை [illegible] படுத்துவதற்கு மாநிலம் முழுவதும் சூழல் மன்றங்கள் [illegible]படுத்தப்பட்டுள்ளன. மைய அரசால் தேசியப் பசுமைப் படைத் திட்டத்திற்கு வழங்கப்படுவதற்கு சமமாக, ரூ.2,500/- ஒவ்வொரு சூழல் மன்றப் பள்ளிக்கும், மாநில அரசு வருடந்தோறும் விடுவிக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களைக் கொண்டு 50,000 மாணாக்கர்களைக்கொண்ட 1,200 சூழல் மன்றங்கள் தமிழ்நாடு முழுவதும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இ[illegible]ங்களின் மூலமாகப் பல்வேறு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



### 2.4.3 இரப்பர், பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பதனால் ஏற்படும் விபரீதங்கள் பற்றிய விழிப்புணர்வு

போகித் திருவிழாவின்போது டயர்கள், பிளாஸ்டிக் மற்றும் இதரப் பொருட்களை எரிப்பதைத் தடுக்கும் நோக்கத்துடன் சென்னை மாநகரம் முழுவதும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தும், டயர்கள் எரிப்பதை ஒலிபெருக்கிமூலம் கைவிடக்கோரியும், விழிப்புணர்வு பிரச்சாரமொன்று சுற்றுச்சூழல் துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும் உள்ள 8,700 சூழல் மன்றங்கள் மூலமும் ஒவ்வொரு ஆண்டும் இப்பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் டயர்கள், பிளாஸ்டிக் முதலியவற்றை எரிக்கும் வழக்கம் நகர்ப்புறங்களில் பெரிதும் குறைந்துள்ளது.

### 2.4.4 சமத்துவப் பொங்கல்

ஒவ்வோர் ஆண்டும் தைத் திங்கள் முதல் நாளன்று தமிழ்ச் சமுதாயத்தின் தனிப்பெரும் பண்பாட்டைத் தரணிக்கு வெளிப்படுத்தும் வகையில், பொதுமக்களையும் சூழல் மன்ற உறுப்பினர்களையும் ஈடுபடுத்தி, கலை நிகழ்ச்சிகள், கிராம விளையாட்டுகள் மற்றும் பல்வேறு போட்டிகளை நடத்தி, சமத்துவப் பொங்கலென சூழல் மன்றங்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

### 2.4.5 சுற்றுச்சூழல் தகவல் மையம்

சுற்றுச்சூழல் தகவல் மையம் [Environment Information System (ENVIS)] ஒன்று மைய அரசின் நிதியுதவியுடன் சுற்றுச்சூழல் இயக்குநரகத்தில் இயங்கி வருகிறது. இத்தகவல் மையம், வலைதளம் வாயிலாக தமிழக சுற்றுச்சூழல் பற்றிய பொதுவான தகவல்களைச் சேகரித்து, பிரித்து, சேமித்து, வழங்குகிறது. செய்திமடல், இணையதளம் வாயிலாக வினாடிவினா, உரையாடல், அடிப்படைத் தகவல்களை உருவாக்குதல், சுற்றுச்சூழல் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளித்தல் மற்றும் பயிற்சிகள் ஆகியவை சுற்றுச்சூழல் தகவல் மையம் மேற்கொண்டுள்ள சில நடவடிக்கைகளாகும்.

### 2.4.6 சுற்றுச்சூழல் நிலை அறிக்கை

மாநிலத்தின் சுற்றுச்சூழல் நிலை குறித்த அறிக்கை தயாரிக்கும் பணி ரூ.12.50 இலட்சம் செலவில் மைய அரசின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. சுற்றுச்சூழல் வரைபடம், தமிழ்நாடு மாநில

சுற்றுச்சூழல் புகைப்படத் தொகுப்பு, சுற்றுச்சூழல் நிலை குறித்த
குறுந்தகடு, வலைதளம் முதலியவை இதன்கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.4.7 சுற்றுச்சூழல் விருதுகள்

சுற்றுச்சூழல் மேலாண்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுற்றுச்சூழல்
கல்வி மற்றும் விழிப்புணர்வு ஆகிய பிரிவுகளில் சிறப்பாகச்
செயல்படும் அரசுசாரா நிறுவனங்கள், வல்லுனர்கள் மற்றும் தனி
நபர்கள் ஆகியோரை ஊக்குவிக்கும் பொருட்டு சுற்றுச்சூழல் விருதுகள்
1999 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன. சுற்றுச்சூழல்
தொடர்பான சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்கும் விருது வழங்கப்பட்டு
வருகிறது. இவ்விருதுகள் ஆண்டுதோறும் உலக சுற்றுச்சூழல் தினமான
ஜூன் 5 ஆம் தேதியன்று வழங்கப்படுகின்றன.

## 2.5 பகுதி–II திட்டங்கள்

### 2.5.1. சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் போட்டிகளை நடத்துதல்

தேசியப் பசுமைப் படை மற்றும் சுற்றுச்சூழல் மன்றங்கள் மூலமாக
விழிப்புணர்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது
மாநிலம் முழுவதும் 3.5 இலட்சம் மாணாக்கர்கள் இவ்வியக்கத்தில்
சேர்ந்துள்ளனர். மாணவர்கள் தங்களைச் சுற்றியுள்ள சுற்றுச்சூழலை
உடனடியாகத் தெரிந்து கொள்வதற்கும், சுற்றுச்சூழல் பாதிப்பிற்கான
காரணங்களை அறிந்துகொள்வதற்கும், சுற்றுச்சூழல் தொடர்பான
பல்வேறு பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு காண்பதற்கும் தேசியப்
பசுமைப் படை மற்றும் சுற்றுச்சூழல் மன்ற உறுப்பினர்களிடையே
சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.
2008-2009 ஆம் ஆண்டில் ரூ.5.00 இலட்சம் செலவில் அனைத்து
மாவட்டங்களிலும் இப்போட்டிகள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
இத்தொகை சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஒருங்கிணைப்பாளர்கள்
வழியாகப் பகிர்ந்தளிக்கப்படும்.

### 2.5.2 சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல்

மக்களுக்கும், இயற்கைக்கும் இடையே உள்ள முக்கியத்துவம்
வாய்ந்த தொடர்பினை பாடப் புத்தகங்களின் வாயிலாக
வகுப்பறையின் நான்கு சுவர்களுக்குள் கற்பிப்பதும், கற்றுக்
கொள்வதும் இயலாது. 2006-2007 ஆம் ஆண்டிலிருந்து சுற்றுச்சூழல்
துறை, சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் போட்டிகளில் பங்கேற்ற
மாணாக்கர்களுக்கும், ஆசிரிய ஒருங்கிணைப்பாளர்களுக்கும்



மூன்றுநாள் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம்களை நடத்தி
வருகிறது. இச்சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம்கள்மூலம்
மாணவர்கள் பல்வேறு சுற்றுச்சூழல் பிரச்சினைகள் குறித்து
வெளிப்படையாக அறிந்துகொள்ள இயலும். சூழல்
மன்றங்களிலும், தேசிய பசுமைப்படையிலும் சுமார் 3.5 இலட்சம்
மாணாக்கர்கள் விழிப்புணர்வு இயக்கத்தில் ஈடுபட்டுள்ளனர்.
2008-2009 ஆம் ஆண்டில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும்
ரூ.5.00 இலட்சம் செலவில் சூழல் முகாம்கள், சுற்றுச்சூழல்
விழிப்புணர்வு ஒருங்கிணைப்பாளர்கள் மூலமாக நடத்த
உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தொகை சுற்றுச்சூழல் விழிப்புணர்வு
ஒருங்கிணைப்பாளர்கள்மூலம் பகிர்ந்தளிக்கப்படும். இயற்கை அழகு
மிக்க வன விலங்குப் பகுதிகளுக்கும், மாசு காரணமாகப்
பாதிப்புக்குள்ளான பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று முதல்தர
அனுபவத்தைப் பெறுவது இம்முகாம் நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

### 2.5.3 சுற்றுச்சூழல் மன்றங்கள்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களிடையே சுற்றுச்சூழல்
விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக, மாநில அரசின் நிதியுதவியுடன்
அனைத்து மாவட்டங்களிலும் சூழல் மன்றங்களை உருவாக்கிய
பெருமை தமிழ்நாட்டிற்குரியது. தேர்ந்தெடுக்கப்பட்ட கல்வி
நிறுவனங்கள் மற்றும் அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் மூலமாக
1,200 சூழல் மன்றங்கள் அனைத்து மாவட்டங்களிலும்
ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டமும், 40 சுற்றுச்சூழல்
மன்றப் பள்ளிகளைக் கொண்டுள்ளது. சுற்றுச்சூழல் மன்றங்களின்
செயல்பாட்டினை மேம்படுத்த பகுதி-II திட்டத்தில் ரூ.15.50 இலட்சம்
மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட தொடக்கக் கல்வி
அலுவலர் மூலமாகப் பகிர்ந்தளிக்கப்படும்.

### 2.5.4 தமிழகத்தில் தட்பவெப்ப நிலை மாற்றம் குறித்த ஆய்வு மேற்கொள்ளல்

தட்பவெப்ப நிலை மாறுதல் உலகம் முழுவதும் ஒரு சூழல்
பிரச்சினையாகவும், மிகப் பெரியதும், இந்தியா போன்ற வளர்ந்து
வரும் நாட்டிற்கு தீர்க்கப்பட வேண்டியதுமான பிரச்சினையாகவும்
உள்ளது. புவியின் தட்பவெப்ப நிலை, தொழில் வளர்ச்சி
சகாப்தத்திற்கு பிறகே குறிப்பிடத்தக்க வகையில் மாறுபட்டுள்ளது.
உணவுப் பாதுகாப்பு, இயற்கை வளம், சுற்றுச்சூழல், பொருளாதார
நடவடிக்கைகள், மனித ஆரோக்கியம் மற்றும் பௌதிக கட்டமைப்பு
வசதிகள் ஆகியவற்றில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

[2008 மே 13

இந்தியாவின் மக்கட்தொகையில் பெரும் பகுதி மக்கள் விவசாயம் மற்றும் வனப் பகுதிகளைத் தங்களின் வாழ்க்கைத் தேவைக்கு ஆதாரமாகக் கொண்டுள்ளதால், இப்பருவகால மாறுதல் குறித்து இந்தியா கவலைப்படுவதில் காரணம் உள்ளது. கிடைக்கும் நீரின் மீது தாக்கம் ஏற்படும்பொழுது, தட்பவெப்ப நிலை மாறுதலால் ஏற்படும் பாதிப்புகள், உணவுப் பாதுகாப்பு மற்றும் இயற்கைச் சூழலுக்கு அழிவுகள் ஏற்படும். மேலும் கடல்மட்ட உயர்வால் கடலோர இயற்கைச் சூழல் உள்ளிட்ட கிராம ஜீவாதாரங்களுக்கும், உயிரினங்களுக்கும் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தும்.

எனவே, இது சம்பந்தமாக தீர ஆராய்ந்து தீர்க்கமான வழிமுறைகளை உருவாக்கவேண்டிய அவசியம் எழுகிறது.

உலக சமாதானத்திற்காக 2007-ல் நோபல் பரிசு வழங்கப்பட்ட பொழுது, பரிசுக் குழுவானது விருதுக்குரிய குறிப்பில், மனிதனால் ஏற்படுத்தப்படும் தட்பவெப்ப நிலை மாற்றம் குறித்த பொது அறிவை வளர்த்தலும் மற்றும் தட்பவெப்ப நிலை மாற்றத்தினை எதிர்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளைக் கண்டறிந்து கையாள்வதும் அவசியமானதாகும் என்று அறிவுறுத்தியுள்ளது.

எனவே, தமிழ்நாட்டில் பருவநிலை மாறுதலால் ஏற்படும் பிரச்சினைகளைத் தடுக்கவும், அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆய்வு செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வு, அண்ணா பல்கலைக்கழகம், இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜி, தி எனர்ஜி ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் போன்ற புகழ் பெற்ற ஏதாவது ஒரு நிறுவனம்மூலம் ரூ.10.00 இலட்சம் செலவில் 2008-2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

**2.6 உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

**2.6.1 நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இரண்டு இடங்களில், இரண்டு திட்ட ஒருங்கிணைப்பு அலகுகள் மற்றும் சென்னையில் ஒரு தொழில்நுட்ப அலகு தொடங்குதல்**

சென்னையில் உள்ள தொழில்நுட்ப அலகு, நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடியில் உள்ள திட்ட ஒருங்கிணைப்பு அலகுகளின் உதவியுடன், உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் சுனாமி மறுசீரமைப்புப் பணிகளைச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் நடவடிக்கைகள் பின்வருமாறு:



2008 மே 13]

**2.6.2 தமிழகக் கடலோரத்தின் பாலாறு முகத்துவாரம் முதல் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேங்காபட்டினம் வரை உலக வங்கி நிதி உதவியுடன் சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தில் உயர் அலை மட்டம் குறியிடுதல்**

பழவேற்காடு ஏரி முதல் பாலாறு வரை உயர் அலை மட்டக் குறியீட்டுப் பணிகள் சுற்றுச்சூழல் துறையினால் ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள கடற்கரைப் பகுதி மற்றும் அலைநீர் தாக்கத்திற்கு உட்படும் நீர்நிலைகளின் உயர் அலை மட்டத்தினைக் குறியீடு செய்து, இதனை சர்வே எண்களுடன் கூடிய கிராம வரைபடங்களில் 1:5000 என்ற அளவீட்டில் குறியீடு செய்யும் பணிகள் ரூ.2.21 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணி அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலையுணர்வு மையம்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2.6.3 உயர் அலை மட்டக் குறியீடு செய்யப்பட்ட இடங்களில் கல்தூண் நடுதல்**

கடலோரத்தில் வசிக்கும் மக்கள் அறிந்து கொள்ள ஏதுவாக உயர் அலை மட்டக் குறியீடு செய்யப்பட்டு, 250 மீட்டர் இடைவெளியில் கடலோரத்தில் கல்தூண்கள் நடும்பணி ரூ.1 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**2.6.4 ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம் மற்றும் அதிக அளவில் பாதிப்பிற்குள்ளாகும் கடற்கரையோரப் பகுதிகளின் வரைபடம் தயாரித்தல்**

தமிழகக் கடலோரப் பகுதி, தொழிற்சாலைகள், சுற்றுலா, மீன் பிடித்தல் போன்ற பொருளாதார நடவடிக்கைகளை உள்ளடக்கியது. பல்வேறு மாறுபட்ட, போட்டி மனப்பான்மையைக் குறைப்பதற்காகவும், அனைத்துப் பயனாளிகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காகவும், ஒரு மேலாண்மை திட்டம் அவசியமானதாகும். தமிழகக் கடற்கரையோரப் பகுதிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பினைப் பாதிக்காத வகையில், பொருளாதார மேம்பாட்டினை அடைவதற்கு, ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இயற்கை மற்றும் மனித நடவடிக்கைகளால் பெருமளவில் பாதிப்புக்குள்ளாகும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு, கடற்கரைப் பகுதிகளில் பாதிப்படையும் பகுதிகளின் வரைபடம் தயாரிக்கப்பட உள்ளது. பாதிப்பிற்குள்ளாகும் கடலோரப் பகுதிகளை வரைபடத்தில் குறியீடு செய்வதற்கு கடல் மட்ட ஏற்றத் தாழ்வுகள், புவியியல், புவி மாற்றம், கடல் மட்ட மாறுபாடுகள், கடலோர

[2008 மே 13

படுக்கைக் கோடு மாறுபடுதல் (கடல் அரிப்பு, மணல் குவிதல்), அலை வரம்புகள் மற்றும் அலை மட்டப்போக்கு ஆகிய ஏழு அளவீடுகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம் மற்றும் அதிக அளவில் பாதிப்பிற்குள்ளாகும் கடற்கரையோரப் பகுதிகளின் வரைபடம் தயாரிக்கும் பணி ரூ.4.92 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2.6.5 தகுதி மேம்பாடு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**

ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம் மற்றும் பாதிப்பிற்குள்ளாகக் கூடிய கடற்கரையோரப் பகுதிகளின் வரைபடம் தயாரித்தல் ஆகியவை முற்றிலும் புதியதான நடைமுறைகளாகும். இவற்றின் முக்கியத்துவம் குறித்து, கடலோர மக்களுக்கும் மற்றவர்களுக்கும் உரிய பயிற்சி வடிவமைப்பின்மூலம், உரிய விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியமாகும். இதற்கான வடிவமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள்மூலமாக பொதுமக்களுக்கும் மற்றும் கடலோரம் வாழ்கின்ற மக்களுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படும். உள்ளூர் கல்வியாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் கருத்துப்பட்டறைகள், கருத்தரங்கங்கள், தெருமுனை நாடகங்கள், கண்காட்சிகள் ஆகியவை நடத்தப்படும். இதற்கென ரூ.1.00 கோடி செலவிடப்படும்.

## 3. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்

**1.0 முன்னுரை**

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியமானது நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் (1974), நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரிச் சட்டம் (1977) காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் (1981) மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் (1986) ஆகிய முக்கிய சட்டங்களையும், அவற்றின்கீழ் அடங்கியுள்ள விதிகளையும் செயல்படுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ளது. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள இந்த வாரியத்திற்கு மாநிலம் முழுவதும் பல்வேறு கிளை அலுவலகங்கள் உள்ளன.

**2.0 வாரிய அமைப்பு**

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய செயல்பாடுகளை மேற்பார்வையிடவும், கொள்கை ரீதியான முடிவுகளை எடுத்து வாரியத்தின் நடவடிக்கைகளில் வழிகாட்டவும் ஓர் இயக்குநர் குழு அமைந்துள்ளது. இக்குழுவின் முழுநேர தலைவர் மாநில அரசால்



2008 மே 13]

நியமிக்கப்படுகிறார். அவரோடு, அரசின் உயர் அதிகாரிகள் ஐவரும், உள்ளாட்சி நிறுவனங்களின் பிரதிநிதிகளாக ஐவரும், விவசாயம், தொழில் மற்றும் மீன்வளம் ஆகிய முக்கியப் பிரிவுகளைச் சார்ந்த மூன்று நிபுணர்களும், பொதுத் துறை நிறுவனங்களின் பிரதிநிதிகளாக இருவரும் மற்றும் ஓர் உறுப்பினர்-செயலாளரும் இக்குழுவில் உறுப்பினர்கள் ஆவர்.

இவ்வாரியத்திற்கு மாவட்ட அலுவலகங்கள் 25 இடங்களில் அமைந்துள்ளன. மாவட்ட அலுவலகங்கள் அமைந்துள்ள இடம் மற்றும் அதன் ஆளுமைக்குட்பட்ட எல்லைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

| வ. எண் | இடம் | ஆளுமைப் பகுதி |
|---|---|---|
| 1 | இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர், மதுரை | சிவகங்கை மற்றும் மதுரை |
| 2 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், சேலம் | சேலம் |
| 3 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், சென்னை | சென்னை |
| 4 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருவள்ளூர் (அம்பத்தூர்) | திருவள்ளூர் மாவட்டம் |
| 5 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், காஞ்சிபுரம் (தாம்பரம்) | காஞ்சிபுரம் மாவட்டம் |
| 6 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் | விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் |
| 7 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், கரூர் | கரூர் |
| 8 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், நாமக்கல் | நாமக்கல் |
| 9 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி மற்றும் பெரம்பலூர் |
| 10 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 11 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருப்பூர் | கோயம்புத்தூர் (அவினாசி, பல்லடம், திருப்பூர் வட்டம்) |

[2008 மே 13

| | | |
|---|---|---|
| 12 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 13 | இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர், வாணியம்பாடி | வேலூர் (வாணியம்பாடி, திருப்பத்தூர், காட்பாடி வட்டம்) |
| 14 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், வேலூர் | வேலூர் (ஆற்காடு, வாலாஜா, அரக்கோணம் வட்டம்), திருவண்ணாமலை |
| 15 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் (மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, வால்பாறை வட்டம்) |
| 16 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், கடலூர் | கடலூர் |
| 17 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திண்டுக்கல் | திண்டுக்கல் மற்றும் தேனி |
| 18 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், ஈரோடு | ஈரோடு |
| 19 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், ஒசூர் | கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி |
| 20 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், புதுக்கோட்டை | புதுக்கோட்டை |
| 21 | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், உதகமண்டலம் | நீலகிரி |
| 22 | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 23 | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், விழுப்புரம் | விழுப்புரம் |
| 24 | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 25 | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், நாகர்கோவில் | கன்னியாகுமரி |



2008 மே 13]

இந்த வாரியத்தில் மொத்தம் 735 பேர் பணிபுரிகின்றனர். அதில் தலைமைச் சுற்றுச்சூழல் பொறியாளர்கள், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் மற்றும் உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்கள், விஞ்ஞானிகள், சட்ட நிபுணர்கள் முதலியோர் அடங்குவர்.

**3.0 தொழிற்சாலை கண்காணிப்பு மற்றும் இசைவாணை வழங்குதல்**

தமிழ்நாட்டில் வேகமாகப் பெருகிவரும் தொழில்மயமாக்கல் காரணமாக தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் மாசினைத் தொடர்ந்து கண்காணிப்பது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. வாரியத்தின் கள அலுவலர்கள் தங்களின் பகுதிக்குட்பட்ட ஒவ்வொரு தொழிற்சாலையையும் குறித்த கால இடைவெளிகளில் ஆய்வு செய்து, கழிவுநீர் மற்றும் வாயுக்கழிவுகளைச் சுத்திகரிக்க அமைக்கப்பட்டுள்ள மாசு கட்டுப்பாடு சாதனங்களின் செயல்திறனைத் தொடர்ந்து கண்காணிக்கின்றனர். 31-03-2008 வரை வாரியம் 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்கீழ் தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்க இசைவாணைகளை வழங்கியுள்ளது.

தொழிற்சாலைகளால் வெளியிடப்படும் மாசு அளவினைப் பொறுத்து அவை சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை என மூன்று வகைப்படுத்தப்பட்டன. மிக அதிகளவு மாசுபடுத்தக்கூடிய தொழிற்சாலைகள் சிவப்பு வகையிலும், குறைந்த அளவு மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் பச்சை வகையிலும் அடங்கும். சிவப்பு வகை தொழிற்சாலைகள் அதிகளவு மாசுபடுத்தக் கூடிய தொழிற்சாலைகளைக் குறிப்பதால் அவற்றை கவனமாகக் கண்காணிக்க 2007 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் இவ்வகைத் தொழிற்சாலைகள் அடர் சிவப்பு மற்றும் சாதாரணச் சிவப்பு என்று இருவகைப்படுத்தப்பட்டுள்ளன.

**3.1 ஆய்வு மற்றும் மாதிரிகளை எடுப்பதற்கான காலவரையறை**

மாவட்ட அலுவலகத்தில் உள்ள களப்பொறியாளர்கள் பெரிய முதலீட்டில் இயங்கும் அடர் சிவப்பு வகைத் தொழிற்சாலைகளை மாதம் ஒரு முறையும், சாதாரண சிவப்பு வகைத் தொழிற்சாலைகளை மூன்று மாதத்திற்கு ஒரு முறையும், நடுத்தர முதலீட்டில் இயங்கும்

சிவப்பு வகைத் தொழிற்சாலைகளை நான்கு மாதத்திற்கு ஒரு முறையும், சிறிய முதலீட்டில் இயங்கும் சிவப்பு வகைத் தொழிற்சாலைகளை வருடத்திற்கு ஒரு முறையும் ஆய்வு செய்கின்றனர். இதைப் போன்றே பெரிய மற்றும் நடுத்தர முதலீட்டில் இயங்கும் ஆரஞ்சு வகைத் தொழிற்சாலைகளை ஆறு மாதத்திற்கு ஒரு முறையும், சிறு முதலீட்டில் இயங்கும் ஆரஞ்சு வகை தொழிற்சாலைகளை இரண்டு வருடத்திற்கு ஒரு முறையும் ஆய்வு செய்கின்றனர். குறைந்த அளவு மாசு ஏற்படுத்தும் பச்சை வகை தொழிற்சாலைகள் அனைத்தும் இரண்டு வருடத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரை சோதனை செய்வதன்மூலம் அத்தொழிற்சாலைகள் மாசுக் கட்டுப்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனவா என்பது புலனாகிறது. பெரிய முதலீட்டில் இயங்கும் அடர் மற்றும் சாதாரண சிவப்பு வகைத் தொழிற்சாலைகளிலிருந்து மாதம் ஒரு முறை கழிவுநீர் மாதிரிகள் சோதனைக்காக சேகரிக்கப்படுகின்றன. நடுத்தர முதலீட்டில் இயங்கும் சிவப்பு வகைத் தொழிற்சாலைகளிலிருந்து மூன்று மாதத்திற்கு ஒரு முறையும், சிறு முதலீட்டில் இயங்கும் சிவப்பு வகைத் தொழிற்சாலைகளிலிருந்து மூன்று முதல் ஆறு மாதத்திற்கு ஒரு முறையும் கழிவுநீர் மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன. பெரிய முதலீட்டில் இயங்கும் ஆரஞ்சு வகைத் தொழிற்சாலைகளிலிருந்து நான்கு மாதத்திற்கு ஒரு முறையும், நடுத்தர மற்றும் சிறு முதலீட்டில் இயங்கும் ஆரஞ்சு வகை தொழிற்சாலைகளிலிருந்து ஆறு மாதத்திற்கு ஒரு முறையும் கழிவுநீர் மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன. வாரியம் நிர்ணயித்த தர அளவிற்கு உட்பட்டு கழிவுநீரின் தன்மை இல்லாத தொழிற்சாலைகளுக்கு, திருத்த நடவடிக்கைகள் எடுக்க பரிந்துரைப்பதோடு தொடர்ந்து கழிவுநீரினை சுத்திகரிப்புச் செய்யாத தொழிற்சாலைகள்மீது நீர் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.



தொழிற்சாலைகள் மாசு தடுப்பு நடவடிக்கைகளை முறையாக செயல்படுத்துமாறு தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகின்றன. மாசுத் தடுப்பு சாதனங்களின் செயல்பாடுகளைச் சீரிய முறையில் கண்காணித்து மாசுத் தடுப்பு முறைகளை முழுமையாக நிறைவேற்றும் தொழிற்சாலைகளுக்குக் குறித்த நேரத்தில் இசைவாணை புதுப்பிக்கப்படுகிறது. உரிய நேரத்தில் இசைவாணை புதுப்பித்து வழங்குவதன்மூலம் தொழிற்சாலைகள் இசைவாணையில் குறிப்பிட்டுள்ள மாசுத் தடுப்பு நிபந்தனைகளைக் கடைபிடிப்பதை வாரியம் ஊக்குவிக்கிறது.

### 3.2 மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் அதிகம் அமைந்துள்ள பகுதிகளைக் கண்காணித்தல்

அதிகளவில் மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் அமைந்துள்ள பகுதிகளில் வெளிவரும் கழிவுகளின் நச்சுத் தன்மை மற்றும் மாசுபடுத்தும் அளவு முதலியவற்றை கருத்தில்கொண்டு வாரியம், தமிழ்நாட்டில் 10 முக்கிய இடங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளைத் தொடர்ந்து கண்காணிக்கவும், அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்களை நேரடியாகத் தொடர்புகொள்ளவும் ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியாக ஓர் உதவி சுற்றுச்சூழல் பொறியாளரை நியமித்துள்ளது. இந்தப் பத்து இடங்கள் பின்வருவன ஆகும்:—

1. மணலி
2. கடலூர்
3. தூத்துக்குடி
4. மேட்டூர்
5. இராணிப்பேட்டை
6. ஸ்ரீபெரும்புதூர்
7. பெருங்குடி தகவல் தொழில்நுட்பப் பூங்கா பகுதி
8. பெருந்துறை
9. கும்மிடிப்பூண்டி
10. திருப்பூர்

இப்பகுதியில் உள்ள தொழிற்சாலைகளினால் சுற்றுச்சூழல் மாசு சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படின், அதனை உடனுக்குடன் பொதுமக்கள் அப்பகுதியில் நியமிக்கப்பட்டுள்ள வாரியப் பொறியாளர்களிடம் எளிதில் நேரடியாகத் தெரிவித்து, தீர்வு காண இந்த ஏற்பாடு வழிவகை செய்கின்றது.

### 4.0 குறிப்பிட்ட தொழிற்சாலைகள் தொடர்புடைய சுற்றுச்சூழல் பற்றிய திட்ட அறிக்கை

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 23 வகைகளான தொழிற்பிரிவுகளுக்கு தொழில்நுட்ப அறிக்கை தயாரித்து வருகின்றது. இவ்வறிக்கையை தயாரிக்கும் பணி 6 மாத காலத்திற்குள் முடிவடையும். இத்திட்ட அறிக்கையில் தூய உற்பத்திக்கு வழிவகுக்கும் புதிய தொழில்நுட்பங்களைப் பற்றியும், மாசினைக் கட்டுப்படுத்தக்கூடிய தேசிய மற்றும் சர்வதேச அளவிலான புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் மாசுப் பொருட்களின் வெளியேற்றத்திற்கான தரக் குறியீடுகள் பற்றியும் முழு விவரங்கள் அடங்கியிருக்கும்.

### 5.0 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் தொகுப்பாக அமைந்திருக்கும் சிறு தொழிற்சாலைகளுக்காக பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதில் வாரியம் முக்கியமாக முழுக்கவனம் செலுத்துகின்றது. சிறு தொழிற்சாலைகளுக்குப் போதிய இடவசதி மற்றும் நிதி வசதி இல்லாத காரணங்களால் தனி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க சாத்தியமில்லை. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் சிறு தொழிற்சாலைகளுக்குப் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதிலும், திட்டக் கருத்துருக்களைத் தொழில்நுட்ப நுண்ணாய்வு செய்வதிலும் உதவி செய்கிறது.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் நிலை:

பல்வகை தொழிற்சாலைகளுக்கென திட்டமிடப்பட்ட பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் விவரங்கள் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1. | தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 26 திட்டங்கள் |
| 2. | சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் | 42 திட்டங்கள் |
| 3. | உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் | 1 திட்டம் |



இந்த 69 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத் திட்டங்களில், 14 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்காகவும், 18 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் சாயப் பட்டறைகளுக்காகவும், 1 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், உணவகம் மற்றும் தங்கும் விடுதிகளுக்காகவும் செயல்பட்டு வருகின்றன. மேலும், 12 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்காகவும், 24 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் சாயப்பட்டறைகளுக்காகவும் அமைக்கப்படுவதில் பல்வேறு கட்டங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழக அரசு, பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூபாய் 28.29 கோடியினை மானியமாக வழங்கியுள்ளது.

### 6.0 கழிவுப் பொருட்கள் மேலாண்மை

### 6.1 தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்கள் மேலாண்மை

தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருட்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களைச் சுற்றுப்புறச் சூழலுக்கு எந்தவித பாதிப்பும் இன்றி பாதுகாப்பாக கையாளுவதற்குத் தகுந்த மேலாண்மை நடவடிக்கையினை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் எடுத்து வருகிறது. 1989 ஆம் ஆண்டு அறிவிக்கை செய்யப்பட்டு 2000 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்ட தீங்கு விளைவிக்கும் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளின்படி இதுவரை 2480 தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்கள் உற்பத்தியாகும் தொழிற்சாலைகள் கண்டறிந்து பட்டியலிடப்பட்டுள்ளன. இத்தொழிற்சாலைகள் தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளன. கும்மிடிப்பூண்டியில் அமைந்துள்ள சிப்காட் வளாகத்தில் அபாயகரமான கழிவுப்பொருட்களை, சுத்திகரித்து பாதுகாப்பாக அகற்றுவதற்காக பொது வசதி செயல்படத் துவங்கியுள்ளது. இது தவிர, திருப்பூரில் அமைந்துள்ள பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கூட்டமைப்பு, கரூரில் அமைந்துள்ள பொதுக் கழிவு மற்றும் தனியார் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களின் கூட்டமைப்பு, அபாயகரமான கழிவுப்பொருட்களை சுத்திகரித்து பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான வசதிகளை ஏற்படுத்த திருப்பூர் வட்டம், நல்லூார் கிராமம் கருப்பக்கவுண்டர்பாளையம் என்ற இடத்தையும், கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், மத்தகிரி என்ற கிராமத்தையும் தேர்வு செய்துள்ளன. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு

செய்யப்பட்டு பொதுமக்கள் கேட்புரை நடத்தப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளின் அனுமதி பெற்றவுடன் மேற்கூறிய இரண்டு இடங்களிலும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. மறுசுழற்சி மற்றும் மறுஉபயோகக் கொள்கையை மேற்கொள்வதற்காக பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கழிவுகளை மூலப்பொருளாகப் பயன்படுத்துவதற்கு சிமெண்ட் தொழிற்சாலைகள் ஊக்குவிக்கப்பட்டு, புலியூர் செட்டிநாடு சிமெண்ட் ஆலையில் சோதனை ஓட்டம் நடைபெற்று வருகின்றது. மேலும், ஏ.சி.சி., மதுக்கரை மற்றும் கிராசிம் சிமெண்ட் தொழிற்சாலைகளில் பெயின்ட், தார், சுத்திகரிப்பு நிலையங்களின் கழிவுகளை எரிபொருளாகப் பயன்படுத்த சோதனை ஓட்டம் நடைபெற்றுவருகிறது. இதன் தொடர்பாக வாரியம் ஒப்புதல் ஆணையை வழங்கியுள்ளது. பெருந்துறை சிப்காட் வளாகத்தில் அபாயகரமான கழிவுப் பொருட்களை சுத்திகரித்து பாதுகாப்பாக அகற்றுவதற்கான வசதியை ஏற்படுத்த, மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 6.2 மருத்துவக் கழிவுகள் மேலாண்மை

இந்திய அரசு, சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986-ன்கீழ் மருத்துவக் கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள், 1998 (2000 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது) அறிவிக்கை செய்துள்ளது. இவ்வறிவிக்கையின்படி, மருத்துவக் கழிவுகளை அங்கீகரிக்கப்பட்ட முறையில் வகைப்படுத்தி, சுத்திகரித்து முடிவு செய்யவேண்டும். இதற்கென வாரியம் இதுவரை 2,479 தனியார் மருத்துவமனைகளையும், 317 அரசு மருத்துவமனைகளையும் பட்டியலிட்டுள்ளது. மாநிலத்தில் உள்ள தனியார் சுகாதார பராமரிப்பு நிலையங்களுக்காக மருத்துவக் கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் பொது அமைப்புகளை ஏற்படுத்த 11 இடங்கள் கண்டறியப்பட்டு, 10 பொது அமைப்புகள் இயக்கத்தில் உள்ளன. கோயம்புத்தூரில் உள்ள ஓரிடத்தில், பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. பொது மருத்துவக் கழிவு சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றும் வசதியினைக் பகுப்பாய்வு செய்வதற்கும், கண்காணிப்பதற்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, அரசாணை(4டி) எண் 10, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஈஏபி1/1) துறை, நாள் 28-09-2007-ன்படி, மருத்துவக்



கழிவு மேலாண்மையை நடைமுறைப்படுத்த 29 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், 241 துணை மாவட்ட மருத்துவமனைகள், 41 மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவமனைகள், 130 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 8 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளை உள்ளடக்கி ஆணை வழங்கியுள்ளது.

### 6.3 நகர திடக்கழிவுகள் மேலாண்மை

நகரமயமாதல் அதிகமாவதாலும், நகர திடக்கழிவுகளின் அளவு அதிகரிப்பதாலும், அறிவியல் ரீதியாக திடக்கழிவுகளை மேலாண்மை செய்வது அவசரத் தேவையாகிறது. திடக்கழிவுகளை ஆதாரத்திலே பிரித்து கையாளுதல், குறைத்தல், மறுசுழற்சி செய்தல் மற்றும் மறுஉபயோகம் செய்தல் போன்றவற்றை வாரியம் பரிந்துரைக்கிறது. வாரியம், உயிரகக் கழிவுகளை உரமாக்குவதற்காக 104 நகராட்சிகளுக்கும் மற்றும் ஒரு மாநகராட்சிக்கும் தடையில்லாச் சான்றிதழை வழங்கியுள்ளது. 63 நகராட்சிகளின் தடையில்லாச் சான்றிதழ்கள் உரிமங்களாக மாற்றப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு நகராட்சி அல்லது ஒரு சிறப்பு சிற்றூராட்சியினை திடக்கழிவு மேலாண்மையின் முன் மாதிரியாக்க நகராட்சிக்கு ரூபாய் 2 இலட்சமும் அல்லது சிறப்பு ஊராட்சிக்கு ரூபாய் ஒரு இலட்சமும் ஆரம்பக்கால உதவியாக மாவட்ட ஆட்சியர்கள்மூலமாக வாரியம் வழங்கியுள்ளது. மேலும், தாராபுரம், குன்னூர் மற்றும் நாமக்கல் நகராட்சிகளுக்குக் கூடுதலாக தலா ரூபாய் 5 இலட்சங்கள் திடக்கழிவு மேலாண்மைக்காக வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளது. 2007-08-இல் எட்டு நகராட்சிகளுக்கு மொத்தம் ரூ.1 கோடி வாரியத்தால் திடக்கழிவு மேலாண்மைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது. 2000 ஆம் ஆண்டின் நகர திடக்கழிவு விதிகளை செயல்படுத்துவதன் தற்போதைய நிலைமையைக் குறித்து ஆய்வு செய்ய சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு தற்போதைய நிலவரம் குறித்த அறிக்கையினை தனது பரிந்துரையுடன் சமர்ப்பிக்கும்.

### 6.4 பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை

பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகம் பெருகுவதால் சுற்றுச்சூழல் சீர்கேடு ஏற்படுகின்றது என்பது அனைவரும் அறிந்ததே. பொதுமக்களிடையே ஒரு முறை பயன்பாட்டிற்குப் பிறகு தூக்கி

எறியும் பிளாஸ்டிக் பொருட்கள் பெருகிவிட்டன. இதனால் நகரத்திடக் கழிவுகளின் அளவு பெருகியதோடு மக்காத தன்மைக் கொண்ட பிளாஸ்டிக் பொருட்கள் சுற்றுச்சூழலுக்கு பெரும் கேட்டினை விளைவித்து வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்தவும், முறைப்படுத்தவும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் பிளாஸ்டிக் (உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாடு) விதிகளை செயல்படுத்தி வருகின்றது. இவ்விதிகளின்படி 20 மைக்ரான் தடிமனுக்குக் கூடுதலான தடிமன் கொண்ட பிளாஸ்டிக் பைகள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட வேண்டும்.

மேலும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், வரும் நிதி ஆண்டில் பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்பவர்களைக் கண்டறிதல் மற்றும் பிளாஸ்டிக் உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாடு விதிகளை செம்மையாக நடைமுறைபடுத்துவதற்கான வழிமுறைகளைக் கண்டறிய ஓர் அறிக்கையினைத் தயாரித்து நடவடிக்கை மேற்கொள்ளும்.

## 6.5 மின்னணுக் கழிவுகளின் மேலாண்மை

மின்னணுக் கழிவுகளின் மேலாண்மைக் குறித்து தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் பல்வேறு முயற்சிகளை எடுத்துவருகிறது. இதன் தொடர்பாக அண்ணா பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், தேசிய உலோகப் பொறியியல் ஆய்வு நிறுவனத்தின் வல்லுநர் (NML) மற்றும் அரசுசாரா அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு மின்னணுக் கழிவு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது. மின்னணுக் கழிவுகளைப் பிரித்து மறுசுழற்சி செய்யும் எட்டு தொழிற்சாலைகளுக்கு மின்னணுக் கழிவுகளை முறையாகப் பிரித்து அவற்றில் உள்ள அச்சுச் சுற்றுத்தகடு, ஒருங்கிணைக்கப்பட்ட சுற்று, இரும்பு, செம்பு, இரப்பர், கண்ணாடி முதலியவற்றை பிரித்தெடுப்பதற்கு இசைவாணை வழங்கியுள்ளது.

இவற்றில் அச்சுச் சுற்றுத்தகடு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட சுற்று முதலியவை அமெரிக்க ஐக்கிய நாடுகள், சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற மேலை நாடுகளுக்கு அனுப்பப்பட்டு அவற்றில் உள்ள கன உலோகங்கள் பிரித்தெடுக்கப்படுகின்றன. மற்ற கழிவுகள் அங்கீகாரம் பெற்ற உள்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளுக்கு மறுசுழற்சிக்காக அனுப்பப்படுகின்றன.



## 7.0 காற்று மற்றும் நீரின் தன்மையை கண்காணிக்க வாரியத்தின் நடவடிக்கைகள்:–

### 7.1 காற்றின் தன்மை

நகர்ப்புறங்களில் பெருகிவரும் தொழிற்சாலைகளிலிருந்தும், வாகனங்களிலிருந்தும் வெளியேறும் வாயுக்கழிவுகளினாலும், புகையினாலும் சுற்றுப்புறக்காற்றின் தன்மை மாசடைகிறது. காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981-ன்படி தமிழ்நாடு மாநிலம் முழுவதும் காற்று மாசுக் கட்டுப்பாட்டுப் பகுதியாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய சுற்றுப்புற காற்று மண்டல கண்காணிப்புத் திட்டங்களின்கீழ் சென்னை (3 இடங்கள்), கோவை (3 இடங்கள்), தூத்துக்குடி (3 இடங்கள்), மதுரை (3 இடங்கள்), சேலம் (1 இடம்) ஆகிய இடங்களில் காற்று மண்டல கண்காணிப்பு நிலையங்கள் இயக்கத்தில் உள்ளன. இத்திட்டமானது மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் நிதி உதவியுடன் செயல்பட்டு வருகின்றது. சென்னை மாநகரில் வாரியம் 5 சுற்றுப்புறக் காற்று தரக்கண்காணிப்பு நிலையங்களையும், திருச்சிராப்பள்ளியில் 5 நிலையங்களையும் அமைத்துள்ளது. இத்திட்டங்களின்மூலம் சுற்றுப்புறக் காற்றின் தன்மை, அதிக ஜனத்தொகை கொண்ட குடியிருப்பு மற்றும் வர்த்தகப் பகுதிகளில் கண்காணிக்கப்படுகின்றது.

சுற்றுச்சூழல் காற்றின் தன்மையை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம், கிண்டியில் உள்ள வாரிய தலைமை அலுவலகத்தில் மின்னணு தகவல் பலகை அமைக்கப்பட்டுள்ளது. இதில் சென்னை மாநகரின் சுற்றுச்சூழல் காற்றின் தன்மையின் அளவீடுகள் வெளியிடப்படுகின்றன. இதுதவிர, கத்திவாக்கம், மணலி, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களிலும் ரூ. 30 இலட்சம் செலவில் மேற்படியான மின்னணு தகவல் பலகைகள் அமைக்க வாரியம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. பெட்ரோலிய இரசாயனத் தொழிற்சாலைகள், பூச்சிக்கொல்லி, பி.வி.சி. மற்றும் மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைப் பகுதியிலிருந்து ஆவியாகக்கூடிய கரிம பொருட்கள் காற்றில் கலந்து சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்துகின்றன. இவற்றின் அளவைக் கண்காணிக்கும் வண்ணம் வாரியம் ரூ.25 இலட்சம் செலவில் ஆறு வி.ஓ.சி. சோதனைக் கருவிகளை வாங்க உள்ளது. மேலும், மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் சென்னையில் உள்ள நகரக் காற்று தரத்தன்மையினையும், மாசின் மூலத்தினையும் ஆராய்வதற்காக ரூ.1.75 கோடி வழங்கியுள்ளது. சென்னை ஐ.ஐ.டி. நிறுவனத்தால் இத்திட்டம் நடைமுறைபடுத்தப்படுகிறது.

### 7.2 வாகனப் புகை கண்காணிப்பு

[2008 மே 13

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஆலந்தூர், மாதவரம் மற்றும் அம்பத்தூர் ஆகிய 3 இடங்களில் வாகனப் புகை கண்காணிப்பு நிலையங்களை அமைத்து சரக்கு போக்குவரத்து வாகனங்களுக்கு வாகனப் புகை கண்காணிப்பினைச் செய்து வருகிறது. வாகனங்கள் வெளியேற்றும் புகை, தரக் கட்டுப்பாட்டினை மீறும்பட்சத்தில் அதனை சரிசெய்து வாகனப் புகையினை தரக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த பிறகு வாகனங்களுக்கு தரச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

சென்னை மாநகரில், வாகனப் புகையினால் ஏற்படும் மாசினைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன், பெட்ரோலை எரிபொருளாகக் கொண்டு இயங்கிவரும் ஆட்டோரிக்ஷாக்களை எல்.பி.ஜி. எரிபொருளுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆட்டோ ரிக்ஷாக்கள் எல்.பி.ஜி. எரிபொருளுக்கு மாறுவதற்கு ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஆட்டோரிக்ஷாக்களுக்கு கணிசமான அளவு மானியம் வழங்கத் தீர்மானித்துள்ளது. மேற்படி எல்.பி.ஜி. எரிபொருளுக்கு மாறும் ஆட்டோரிக்ஷாக்களில் பொருத்தப்படும் கருவிகளுக்கு போக்குவரத்து அலுவலர்/வட்டாரப் போக்குவரத்து அலுவலர் அங்கீகாரம் பெற்றிருந்தால் மட்டுமே வாரியத்தின் உதவித்தொகை வழங்கப்படும்.

போக்குவரத்துத் துறையில் 20,286 எல்.பி.ஜி. எரிபொருள் மாற்றக் கோரும் விண்ணப்பப் படிவங்கள் பெறப்பட்டுள்ளன. மேலும், 33,731 பெட்ரோல் உபயோகப்படுத்தும் ஆட்டோரிக்ஷாக்களில் 4,941 வாகனங்கள் எல்.பி.ஜி. எரிபொருளை உபயோகப்படுத்தும் முறைக்கு மாற்றப்பட்டுள்ளன. எல்.பி.ஜி. எரிபொருளின் தேவையைக் கருத்தில்கொண்டு, சென்னை மாநகரில் 26 எல்.பி.ஜி. எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் (ALDS) அமைக்கப்பட்டுள்ளன.

### 7.3 நீரின் தன்மை

1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் முக்கிய நோக்கமானது, நீரின் முழுத்தன்மையை பேணுதல் மற்றும் சீரமைத்தல் ஆகும். இந்த நோக்கத்தை நிறைவேற்ற நீரின் தன்மையை ஒழுங்காகக் கண்காணிப்பது அவசியமாகிறது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், காவிரி ஆற்று நீரின் தன்மையை இந்திய



2008 மே 13]

தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்புத் (மினார்ஸ்) திட்டத்தின் கீழ் 16 இடங்களிலும் மற்றும் புவி சுற்றுப்புறச்சூழல் கண்காணிப்பு (ஜெம்ஸ்) திட்டத்தின்கீழ் 4 இடங்களிலும் கண்காணித்து வருகின்றது. இதைத்தவிர தாமிரபரணி, பாலாறு மற்றும் வைகை ஆறுகளின் தன்மையையும், உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு ஏரிகளின் நீரின் தன்மையையும் இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்பு (மினார்ஸ்) திட்டத்தின்கீழ் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. கூடுதலாக, காவிரி, தாமிரபரணி, பாலாறு மற்றும் வைகை நதிநீர்ப் படுகையில் உள்ள மாசு குறித்த ஆய்வினை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், பல்கலைக்கழகம் மற்றும் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்திவருகிறது.

#### 7.3.1 காவிரி ஆற்றில் மாசின் அளவு

உள்ளாட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளின் கழிவுநீர் ஆற்றில் கலப்பதால் ஈரோடு, பவானிசாகர் மற்றும் பவானி நீர்நிலைப் பகுதிகள் மிகவும் மாசடைந்துள்ளதாகவும் சிறுமுகை, ஆர்.என்.புதூர், பள்ளிப்பாளையம், மோகனூர், முசிறி படகுத்துறை, கல்லணை, திருச்சி ஆகிய நீர்நிலைப் பகுதிகள் மிதமாக மாசடைந்துள்ளதாகவும், பத்ரகாளியம்மன் கோவில், பரமத்தி வேலூர், முசிறி, ஆழ்கிணறு, மடத்துக்குளம், கருத்தட்டாங்குடி ஆகிய நீர்நிலைப் பகுதிகள் சற்று குறைந்த அளவில் மாசடைந்துள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

எனினும், சேகரிக்கப்பட்ட மாதிரிகளின் சோதனை முடிவுகளின்படி காவிரி நீரின்தன்மை முந்தைய ஆண்டுகளை விட மேம்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

#### 7.3.2 தாமிரபரணி ஆற்றில் மாசின் அளவு (தரம்)

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தாமிரபரணி ஆற்றின் நீரின் தன்மையை சேரன்மகாதேவி, கொக்கிரகுளம், பாபநாசம், மொரப்பநாடு, அம்பாசமுத்திரம், திருவிடைமருதூர், ஆத்தூர் ஆகிய ஏழு இடங்களில் கண்காணித்து வருகின்றது. உள்ளாட்சி மற்றும் நகராட்சிகளின் அன்றாடக் கழிவுநீர் ஆற்றில் கலப்பதால் ஆத்தூர், கொக்கிரகுளம் ஆகிய நீர்நிலைப் பகுதிகள் சற்று மாசடைந்துள்ளதாகக் காணப்படுகிறது. எனினும், தாமிரபரணி நீரின் தன்மை பொதுவாகக் குளிப்பதற்கு உகந்ததாகவும் மற்றும் கிருமிநாசினிமூலம் சுத்திகரித்து குடிப்பதற்கு உகந்ததாகவும் காணப்படுகிறது.

### 7.3.3 பாலாறு

[2008 மே 13

வாணியம்பாடி நகராட்சி குடிநீர் நீரேற்று நிலையத்தில் உள்ள நீர்சேகரிப்பு கிணற்றிலிருந்து நீர்மாதிரிகள் ஒவ்வொரு மாதமும் சேகரிக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. ஆய்வறிக்கையின் புள்ளியியல்படி பாலாறு ஆற்றுப்படுகையில் உள்ள கிணறுகளிலிருந்து வெளியேற்றப்படும் நீரின் தரம், கிருமிநாசினிமூலம் சுத்திகரிக்கப்பட்ட பின்னர் குடிநீராகப் பயன்படுத்துவதற்கு உகந்ததாகக் காணப்படுகிறது.

### 7.3.4 வைகை ஆறு

வைகை ஆற்று நீரின் தன்மை, திருப்புவனம் நீரேற்று நிலையத்தின் நீர்சேகரிப்பு கிணற்றிலிருந்து ஆறு மாதத்திற்கு ஒரு முறை நீர்மாதிரி சேகரித்துக் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. வைகை ஆற்றுப்படுகையில் உள்ள கிணறுகளிலிருந்து வெளியேற்றப்படும் நீரின் தன்மை, சுத்திகரிப்பு ஏதுமில்லாமல் கிருமிநாசினி மட்டும் பயன்படுத்தி குடிப்பதற்கு உகந்ததாகக் காணப்படுகிறது.

### 7.3.5 ஏரிகள்

இந்திய தேசிய நதிநீர் ஆதாரங்களைக் கண்காணிக்கும் திட்டத்தின் கீழ் உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஏரிகளில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நீர் மாதிரிகள் சேகரித்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது. மூன்று ஏரிகளை ஒப்பிடும்போது உதகமண்டலம் ஏரியில் கழிவுநீர் மாசு அதிக அளவிலும், கொடைக்கானல் ஏரியானது சற்று தூய்மையானதாகவும் உள்ளது. கொடைக்கானல் ஏரியில் உள்ள நீரின் தன்மை குளிப்பதற்கு உகந்த 'பி' பிரிவின் தரத்திற்கு உட்பட்டு காணப்படுகிறது. ஆனால், உதகமண்டலம் மற்றும் ஏற்காடு ஏரியின் நீரின்தன்மை முறையான சுத்திகரிப்பும், கிருமிநாசினிமூலம் சுத்திகரிப்புசெய்த பிறகு பயன்பாட்டிற்குகந்த 'சி' பிரிவுத் தரத்திற்கு உட்பட்டு காணப்படுகிறது.

## 8.0 வாரியத்தின் இதர முக்கிய பணிகள்

### 8.1 சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம்

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஒரு பகுதியான சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம் 1994 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. சுற்றுச்சூழல் பயிற்சி நிலையத்தின் முக்கிய குறிக்கோள் மாசுக்



2008 மே 13]

கட்டுப்பாடு வாரியத்தில் பணிபுரிவோர், தொழிற்சாலைப் பிரதிநிதிகள் மற்றும் அரசுசாரா அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு பயிற்சி அளித்தல் ஆகும். இந்தப் பயிற்சி நிலையம் 2007-08 ஆம் ஆண்டில் 37 பயிற்சி வகுப்புகள் நடத்தி 946 நபர்களுக்குப் பயிற்சியளித்துள்ளது.

### 8.2 சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பொதுமக்கள் பங்கேற்பு

சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வளர்க்க, சென்னையில் உள்ள வாரிய தலைமை அலுவலகத்தில் மாசு விழிப்புணர்வு மற்றும் சேவை மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பண்டிகைக் காலங்களின்போது பட்டாசு வெடிப்பதால் ஏற்படும் ஒலி மற்றும் காற்று மாசு, போகிப் பண்டிகையின்போது பழைய பொருட்களை எரிப்பதால் ஏற்படும் காற்று மாசு, வாகனப்புகையினால் ஏற்படும் மாசு, ஓசோன் படலம் பாதுகாப்பு, திடக்கழிவு மேலாண்மை, சாலைப் பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு போன்ற விழிப்புணர்வு இயக்கங்கள், பயிலகங்கள் மற்றும் பேரணிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு இந்த மையம் 2007-08 ஆம் ஆண்டில் 46 விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

### 8.3 சுற்றுச்சூழல் வரைபடம்

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரிய உதவியுடன் சுற்றுச்சூழல் வரைபடம் தயாரிக்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகின்றது. இதுவரை வாரியம், திருவள்ளூர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர், வேலூர், தூத்துக்குடி, கடலூர், விழுப்புரம், ஈரோடு, சேலம், கரூர் ஆகிய 10 மாவட்டங்களுக்கான சுற்றுச்சூழல் வரைபடங்களைத் தயாரித்துள்ளது. சென்னை மாநகருக்கான சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போது மதுரை, திருச்சி, நாமக்கல் ஆகிய 3 மாவட்டங்களுக்கான சுற்றுச்சூழல் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது.

### 8.4 பசுமைப் போர்வைத் திட்டம்

மாசினைத் தடுக்கும் வழிமுறையாக, தொழிற்சாலைகள் தங்களது வளாகத்தில் 25 சதவீதம் நிலப்பரப்பில் அடர்த்தியான மரங்களை வளர்க்க வலியுறுத்தப்பட்டுள்ளன. அதன்படி, தொழிற்சாலைகள்

போதிய அளவு மரங்களைத் தங்களது வளாகத்திலும் மற்றும் தொழிற்சாலையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வளர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்கின்றன. தமிழ்நாட்டில் உள்ள 6 மாநகராட்சிகளில் காற்று மாசினைத் தடுக்க மரம் வளர்ப்புத் திட்டத்தினை ஊக்குவிக்க வனத் துறையினருக்கு ரூபாய் 3 கோடி தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் வழங்கியுள்ளது. இதன்மூலம் சுமார் 12 இலட்சம் மரக்கன்றுகள் இம்மாநகராட்சிகளிலும், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நடப்பட்டுள்ளன.

**8.5 தூய்மையான தொழில்நுட்பங்கள்**

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், தொழிற்சாலைகள் கழிவுநீரைச் சுத்திகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளச் செய்வது மட்டுமன்றி சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்த தூய்மையான தொழில்நுட்பத் திறனை வளர்ப்பதில் ஈடுபட்டுள்ளது. வாரியத்தின் முனைப்பான ஆதரவு மற்றும் ஊக்குவிப்புடன் தொழிற்சாலைகள், எரிசோடா உற்பத்தியில் பாதரச கலத்திற்குப் பதிலாக சவ்வூடு கலம் பயன்படுத்துதல், சிமெண்ட் தொழிற்சாலைகளில் காற்று மாசினைக் குறைக்க ஈர செய்முறைக்கு பதிலாக உலர் செய்முறையினைப் பின்பற்றுதல், பி.பி.சி. சிமெண்ட் உற்பத்தியில் 25 முதல் 30 சதவிகிதம் வரை எரிசாம்பலைப் பயன்படுத்துதல், கந்தக அமிலம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இருமுறை மாற்றம் மற்றும் உட்கிரகிக்கும் தொழில்நுட்பத்தைச் செயல்படுத்துதல், சயனைடு அற்ற முலாம் பூசுதல் மற்றும் சயனைடு உப்புக்குப் பதிலாக வாயு கார்புரைசிங் முறையை வெப்பக்கடினப்படுத்துதலுக்குப் பின்பற்றுதல் ஆகிய தூய்மையான தொழில்நுட்பங்களுக்கு மாறியுள்ளன. மரக்கூழ் மற்றும் காகிதத் தொழிற்சாலைகள், டையாக்ஸின் உள்ளிட்ட ஆர்கேனோ - குளோரைட்ஸ் உருவாவதைக் குறைக்கும் வகையில் குளோரின் மூலக்கூறு இல்லாத சலவை முறையினை பின்பற்ற ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றன. ஓசோனைச் சிதைக்கும் பொருட்களை உபயோகிக்கும் தொழிற்சாலைகள் முறையாக சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை உபயோகப்படுத்தி வருகின்றன.

**8.6 நூலகம்**

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய நூலகம் 1989 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தற்போது இந்நூலகம் 10,000 புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளைக் கொண்டுள்ளது. இந்த நூலகத்திற்குச் சுற்றுச்சூழல்



சம்பந்தப்பட்ட 70 இதழ்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்), 9 செய்தி மடல்கள், 13 மாத இதழ்கள் தருவிக்கப்படுகின்றன. சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குறித்து ஈடுபடும் அனைவரும் இதில் உறுப்பினராகலாம்.

**8.7 செய்தி மடல்**

வாரியத்தின் செயல்பாடுகள், ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றிய சுற்றுச்சூழல் சம்பந்தமான செய்திகள், சுற்றுச்சூழல் சம்பந்தமான கவிதைகள் மற்றும் கட்டுரைகள் அடங்கிய செய்திமடல் ஒன்றை வாரியம் ஒவ்வொரு காலாண்டிற்கும் வெளியிட்டுவருகின்றது. இந்த செய்தி மடல் அரசுத் துறை அலுவலகங்களுக்கும், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மற்றும் அனைத்து மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றது.

**9.0 நிறுவனத்தை வலுப்படுத்துதல் மற்றும் திறனை மேம்படுத்துதல்**

வாரியத்தின் உள்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்தும்பொருட்டு வாரியத்திற்குச் சொந்தமாக தலைமை அலுவலகக் கட்டடம் கிண்டியில் கட்டப்பட்டதுடன், மாவட்ட அலுவலகங்களுக்கு அம்பத்தூர், ஓசூர், மதுரை, திருச்சி, திருநெல்வேலி, வேலூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் கட்டடம் கட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றது. மேலும் மறைமலைநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் கட்டடம் கட்டும் பணி துவங்கப்பட்டுள்ளன. வாரியத்தில் பணிபுரியும் பொறியாளர்கள் மற்றும் சுற்றுச்சூழல் விஞ்ஞானிகளின் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்தும் பொருட்டு ஐ.ஐ.டி. சென்னைமூலம் பயிற்சி அளிக்கப்பட்டது. இதன்மூலம் 90 பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் பயனடைந்துள்ளனர். பல ஆண்டுகளாகப் பதவி உயர்வு வழங்கப்படாத தேக்க நிலையினால் வாரியத்தின் பொறியாளர்களிடையே சோர்வு காணப்பட்டது. இதனைக் களையும்வண்ணம் 2007-08 ஆம் ஆண்டில், 65 வாரியப் பொறியாளர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. மேலும், காலி இடங்களை நிரப்ப வேண்டிய அவசியம் கருதி 25 பொறியாளர் பதவிகளை நிரப்ப முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வாரியத்தின் செயல்பாடுகள் மேலும் சீர்பெற்று சிறப்பாக விளங்கும்.

## இணைப்பு-VI

*(280 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 15-சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

## அறிவிப்புகள், 2008-2009

### வனத் துறை

### 1. வனப் பாதுகாப்பு மற்றும் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்

1. சந்தன மரம் வளர்ப்பை ஊக்குவிக்கவும், காடுகளில் உள்ள
சந்தன மரங்களைக் கண்டறிந்து பாதுகாக்கவும், 2008-2009 ஆம்
ஆண்டில் வன அதிகாரிகளைக் கொண்ட ஒரு சிறப்புப் பிரிவு
வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு அமைக்கப்படும். இந்தச்
சிறப்புப் பிரிவு ஒரு தலைமை வனப் பாதுகாவலரின்கீழ் செயல்படும்.

2. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டப்
பணிகள், சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியின் நிதி
உதவியுடன் ரூ.567.42 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு
வருகின்றன. வனப் பகுதிகளை ஒட்டி வாழும் கிராம மக்களின்
வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்குத் தேவையான அடிப்படை
உள்கட்டமைப்பு வசதிகள் இந்தத் திட்டத்தின்கீழ் செய்து
தரப்படுகின்றன. இயற்கை வளமான சுற்றுச்சூழல் மீட்பதற்கான காடு
வளர்ப்புப் பணிகளுடன், ஊரகப் பகுதி மக்களுக்கு மாற்று வேலை
வாய்ப்பு வழங்கி, அவர்களின் வருமானத்தை உயர்த்தவும் நடவடிக்கை
மேற்கொள்ளப்படுகின்றது. 2008-2009 ஆம் ஆண்டில், பழங்குடியினர்
கிராமங்கள் உள்ளிட்ட 230 வன எல்லையோர கிராமங்களில்
51,500 ஹெக்டேர் பரப்பில், ரூ.113 கோடி செலவில் இத்திட்டம்
செயல்படுத்தப்படும்.

3. காடுகளின் அருகிலுள்ள 1,140 கிராமங்களில் கூட்டு வன
மேலாண்மைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு அந்தக் குழுக்களின்
மூலம் தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் பணிகள்
மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கென 32 வன மேலாண்மை

முகமைகள், மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. [2008 மே 13
ஆண்டில் இந்தத் திட்டத்தின்கீழ் ரூ.17 கோடி செலவில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். 2008-2009 ஆம்

4. 2007-2008 ஆம் ஆண்டில் இரண்டு புதிய மாவட்ட வன அலுவலகங்கள் திருவாரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களுக்கெனத் தோற்றுவிக்கப்பட்டன. மாவட்ட அளவில் வனத்துறையின் நடவடிக்கைகள் மேலும் சீர்பெற 2008-2009 ஆம் ஆண்டில் கடலூரில் மாவட்ட வன அலுவலகம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

5. 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.4.69 கோடி மதிப்பீட்டில் II பகுதி II திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

6. வன நிலங்களை ஆக்கிரமிப்புகளிலிருந்து பாதுகாக்க இந்த நிதி ஆண்டில் ரூ.1.20 கோடி செலவில் 10,000 எல்லைக் கற்கள் நடப்படும்.

7. பெருகி வரும் காகிதத் தேவையைக் கருத்தில்கொண்டு தமிழ்நாட்டிலுள்ள காகிதத் தொழிற்சாலைகள் தம்முடைய உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுத்து வருகின்றன. இந்தத் தொழிற்சாலைகளின் தேவைகளை பெரிதும் பூர்த்தி செய்யும் வண்ணம் 2008-2009 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம், 1,20,000 டன் அளவுக்கு கூழ்மரத்தை விற்பனை செய்யும். இதனால் வனங்கள் பாதுகாக்கப்படும்.

8. அரசு இரப்பர் கழகத்தில் உள்ள இரப்பர் தோட்டங்களைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் கருதி 1,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் புதிய இரப்பர் மரக் கன்றுகள் நடுவதற்கான திட்டம் வகுக்கப்பட்டு 2008-2009 ஆம் ஆண்டில் 143.5 ஹெக்டேர் நிலப்பரப்பில் புதிய இரப்பர் தோட்டங்கள் ஏற்படுத்தப்படும்.

## II. வனப் பகுதிகளில் சாலை வசதிகளை மேம்படுத்துதல்

9. வனத் துறையின்கீழ் 3,320 கி.மீ. நீளம் வனச் சாலைகள் உள்ளன. இவற்றின் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுக்கென 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுகளில் ரூ.14.49 கோடி செலவிடப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் வனச் சாலைகளைப் பராமரிக்கவும், மேம்படுத்தவும் ரூ.12 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.



2008 மே 13]

10. வனச் சாலைகளை அகலப்படுத்தவும், வழித் தடங்களில் புதிய சாலைகளை அமைக்கவும் பல கோரிக்கைகள் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களால் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை நிறைவேற்ற வன நிலங்களை, வனச் சாலைகள் அமைக்க, வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி மாற்றம் செய்து தருவது அவசியம். 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுகளில் 41.20 ஏக்கர் வன நிலம் வனச் சாலைகள் அமைக்க மாற்றம் செய்து தரப்பட்டுள்ளது. இஃது இதற்கு முன் உள்ள 5 ஆண்டுகளில் மாற்றம் செய்யப்பட்ட 33.35 ஏக்கரை விட 25% அதிகமானதாகும். 2008-2009 ஆம் ஆண்டிலும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எழுப்பியுள்ள கோரிக்கைகளைப் பூர்த்தி செய்யும்வண்ணம் வன நிலங்களில் சாலைகள் அமைக்க, வனத் துறை, சட்டங்களுக்கும், நீதிமன்ற ஆணைகளுக்கும் உட்பட்டு, கனிவுடன் பரிசீலித்து நில மாற்றம் செய்து தரும்.

## III. பசுமைப் போர்வையை அதிகரித்தல்

11. தமிழகத்தில் பசுமைப்போர்வையை அதிகரிக்கவும் சுற்றுச்சூழலைப் பேணிப் பாதுகாக்கவும், மரங்கள் நடும் பணிகள் ஒரு மக்கள் இயக்கமாக அரசுசாரா நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் 2008-2009 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும்.

12. மாநகராட்சிகளிலும் அவற்றைச் சார்ந்த புறநகர்ப் பகுதிகளிலும் நகரமயமாக்கல் மற்றும் தொழிற்சாலைகளின் பெருக்கத்தினாலும் காற்றின் தன்மை மாசு அடைந்துள்ளதாகக் காணப்படுகின்றது. மரங்கள் கார்பன்-டை ஆக்ஸைடு போன்ற கரியமில வாயுக்களை உறிஞ்சுவதால் மாசுக் கட்டுப்பாட்டில் பெரிதும் உதவுகின்றன. எனவே, மாநகராட்சிகளிலும் அவற்றைச் சார்ந்த புறநகர்ப் பகுதிகளிலும் ரூ. 4 கோடி செலவில் நகர்ப்புற வனவியல் திட்டம் 2008-2009 ஆண்டில் செயல்படுத்தப்படும்.

13. வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிப்படும் மாசு நகர்ப்புற மக்களின் உடலுக்குக் கேடு விளைவிக்கிறது. மரங்கள் காற்றில் கலந்துள்ள மாசினை உறிஞ்சும் தன்மை கொண்டதால், 2008-2009 ஆம் ஆண்டில், வனத் துறை ரூபாய் ஐம்பது இலட்சம் செலவில் 1,67,000 செடிகள் உற்பத்தி செய்து அரசு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இலவசமாக வழங்கும்.

## IV. வனச் சரணாலயங்கள் மற்றும் உயிரியல் பூங்காக்கள்

[2008 மே 13

14. வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் இரவுக் கானக உலாவினை நிறுவ திட்ட ஆய்வறிக்கை தயார் செய்யப்பட்டு ரூ.2.56 கோடி செலவில் பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே முதல் இரவுக் கானக உலாவாக இஃது உருவெடுக்க 2008-2009 ஆம் ஆண்டில், முழு வீச்சில் பணிகள் நடைபெறும்.

15. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் மான்களுக்கான ஒரு சிறப்பு உலாவிடப் பூங்கா 2008-2009 ஆம் ஆண்டில் துவக்கப்படும். இந்த உலாவிடத்தில், வனங்களில் உள்ளதுபோல் மரங்களுக்கும் புதர்களுக்கும் இடையே பல இன மான்கள் துள்ளி விளையாடுவதைக் கண்டுகளிக்க முடியும். மேலும் இப்பூங்காவில் படகு சவாரி மற்றும் யானை சவாரி ஆகியன துவக்கப்படும். இஃது இவ்வுயிரியல் பூங்காவிற்கு வருகை தரும் பார்வையாளர்களுக்கு மேலும் களிப்பூட்டுவதாக அமையும்.

16. திருச்சி மாவட்டத்தில் ஓர் உயிரியல் பூங்காவை ரூ.28.90 கோடி செலவில் ஏற்படுத்த 140 ஹெக்டேர் வன நிலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் 2008-2009 ஆம் ஆண்டில், தொடங்கப்படும்.

### 17. புலிகள் திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள மூன்று புலிகள் காப்பகங்களில் இரண்டு காப்பகங்கள் 2006-2007-ல் ஏற்படுத்தப்பட்டன. இந்திய வன உயிரின நிறுவனம் இரண்டு மாதங்களுக்கு முன்பு வெளியிட்ட புலிகள் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டிலுள்ள புலிகளின் எண்ணிக்கை 62 லிருந்து 76 ஆக உயர்ந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே சமயம் இந்தியாவில் உள்ள புலிகளின் எண்ணிக்கை 3,642-லிருந்து 1,411 ஆக குறைந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. புலிகளின் எண்ணிக்கை ஒரு மாநிலத்தின் பல்லுயிர்ப் பரவல் தன்மையையும், வனவர்களின் வளத்தையும் இயற்கையின் செழிப்பையும் கோடிட்டுக் காட்டக்கூடிய ஓர் அறிகுறியாகும்.

இந்தியாவின் தேசிய விலங்கான புலியைக் காக்க, 2008-2009 ஆம் ஆண்டில் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், முதுமலை புலிகள் காப்பகம், ஆனைமலை புலிகள் காப்பகம் ஆகிய பகுதிகளில் ரூ.9 கோடி செலவில், இந்த அரசு சீரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.



2008 மே 13]

### 18. சூழல் சுற்றுலா

சூழல் சுற்றுலாவினை மேம்படுத்த ரூபாய் 47 கோடி மதிப்பீட்டில், வனத் துறையால் ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அதன்படி 2007-2008 ஆம் ஆண்டில் முதுமலை - உதகை - ஆனைமலை ஆகிய இடங்களில் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்த ரூ.4.39 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. வனம் மற்றும் வனம் சார்ந்த பகுதிகளுக்கு மக்கள் சுற்றுலா சென்று வருவதை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் 2008-2009 ஆம் ஆண்டிலும், புதிய உள்கட்டமைப்பு வசதிகளையும் பயணிகளுக்கான வசதிகளையும் ஏற்படுத்த திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

## V. வன விலங்குகளால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்த்தல்

19. வன உயிரினங்களால் ஏற்படும் சேதங்களுக்கு உடனடியாக இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் முதன்முறையாக மாநில அரசு, 2006-2007 ஆம் ஆண்டில் வன விலங்குகளால் மனித உயிர்கள், உடைமைகள் மற்றும் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கு இழப்பீடு வழங்க ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. 2007-2008 ஆம் ஆண்டிலும் இந்த நிதி ஒதுக்கீடு தொடர்ந்தது. 2008-2009 ஆம் ஆண்டிலும் வன விலங்குகளினால் பாதிப்பு அடைபவர்களுக்கு இழப்பீடு வழங்க ரூ.50 இலட்சம் அனுமதிக்கப்படும்.

20. 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுகளில் சூரிய மின் வேலி அமைத்ததன் காரணமாக வன விலங்குகள் வனங்களின் அருகே உள்ள கிராமங்களில் புகுந்து சேதம் விளைவித்தது பெரிதும் குறைக்கப்பட்டது. வனங்களை ஒட்டியுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் சூரிய மின் வேலி அமைப்பதைப் பெரிதும் வரவேற்றுள்ளனர். ஆகவே, 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.640 இலட்சம் செலவில் 400 கி.மீ. நீளத்திற்கு சூரிய மின் வேலி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

21. வன உயிரினங்கள் தங்களது இயற்கையான வாழ்விடங்களான வனங்களை விட்டு மக்கள் வாழும் குடியிருப்புகளுக்குள் வரும்பொழுது உயிர்ச்சேதமும், பொருள்சேதமும் ஏற்படுகின்றது. இதனைத் தவிர்க்க, வனத் துறை உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து விலங்குகளை வனத்திற்குள் பாதுகாப்பாக திருப்பியனுப்பும் பொருட்டு 2008-2009 ஆம் ஆண்டில் ரூபாய் 20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11-139—18a

## VI. விவசாயிகள் நலன்

[2008 மே 13

22. செம்மறியாடுகளுக்கு வனப் பகுதிகளில் மேய்ச்சலுக்காக வசூலிக்கப்பட்டு வந்த அனுமதிக் கட்டணம் 03-03-2000 தேதியிட்ட அரசாணையின்படி இரத்து செய்யப்பட்டது. 2008-2009 ஆம் ஆண்டு முதல் மாடுகளுக்கும் வனப் பகுதிகளில் மேய்ச்சலுக்காக வசூல் செய்யப்படும் அனுமதிக் கட்டணம் முழுவதுமாக இரத்து செய்யப்படும்.

23. இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழகத்தில், 2007-2008 ஆம் ஆண்டில், தனியார் நிலங்களில் மரங்களை வளர்க்க ரூ.10 கோடி செலவில் திட்டம் தீட்டப்பட்டு, சவுக்கு, தேக்கு, நெல்லி, மலைவேம்பு, பெருமரம் போன்ற முக்கிய வகைகளின் மரக்கன்றுகள் வனத் துறையால் ஏற்படுத்தப்பட்டு விவசாயிகளின் நிலங்களில் இலவசமாக நடவு செய்யப்பட்டதுடன், அம்மரக்கன்றுகளைப் பராமரிக்க மானிய உதவியும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இந்தத் திட்டம் விவசாயிகளின் பேராதரவைப் பெற்றுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்திற்கென ரூபாய் 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் தனியார் விவசாய நிலங்களில், சுமார் 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், ஒரு கோடி மரக்கன்றுகள் நடப்பட்டு பேணிப் பாதுகாக்கப்படும்..

## VII. பழங்குடியினர் நலன்

24. பழங்குடியினர் பகுதிகளில் வனத் துறை 19 பள்ளிகளை நடத்தி வருகிறது. இவற்றில் சுமார் 5,000 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இப்பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட, ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதிமூலம் ரூ.5.07 கோடி மதிப்பீட்டில் 2007-2008 ஆம் ஆண்டில், மூன்றாண்டுத் திட்டம் ஏற்பளிக்கப்பட்டது. 2008-2009 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.2.0281 கோடி செலவிடப்படும்.

25. வனத் துறையால் நிருவகிக்கப்படும் பழங்குடியினர் பள்ளிகளில் தற்போது காலியாக உள்ள அனைத்து ஆசிரியர் பணியிடங்களையும் உடனடியாக நிரப்ப நடவடிக்கை மேற்கொள்வதுடன் திருவண்ணாமலை மாவட்டம் ஜம்னாமரத்தூர் மேல்நிலைப் பள்ளி மற்றும் வேலூர் மாவட்டம் புதூர்நாடு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி பாடத் திட்டமும் கணிதப் பிரிவும் தொடங்கப்படும்.

26. மலைப் பகுதிகளில் வாழும் பழங்குடியினர் நமது அன்றாடத் தேவைகளுக்கான குடிநீரைத் தேடி, நீண்ட தூரம் செல்லவேண்டியுள்ளதைத் தவிர்க்கும் பொருட்டு, 2008-2009 ஆம்



2008 மே 13]

ஆண்டில் அரூர், தருமபுரி, ஓசூர், வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, நாமக்கல் மற்றும் ஈரோடு வனக் கோட்டங்களுக்குட்பட்ட பழங்குடியினர் குடியிருப்புகளில் ரூபாய் 25 இலட்சம் செலவில் குடிநீர் வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

## VIII. மகளிர் மேம்பாடு

27. வனத் துறையின் மேற்பார்வையில் வனம் சார்ந்த பகுதிகளில் 6,026 மகளிர் குழுக்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு 750 புதிய மகளிர் குழுக்கள் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்ட கிராமங்களில் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரூ.5,000 வரை சிறுகடன் வழங்கப்படும். இத்திட்டத்தினால் சுமார் 12,000 மகளிர் பயனடைவர்.

## IX. பணியாளர் நலன்

28. அரசு இரப்பர் கழகத்தில் ஏற்கெனவே அமலிலிருந்த ஊதிய உடன்படிக்கை முடிவுக்கு வந்துள்ளது. எவ்வித காலதாமதமுமின்றி, ஒரு புதிய ஊதிய உடன்படிக்கையை அமலுக்குக் கொண்டுவர அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

29. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் 2007 ஆம் ஆண்டில் தொழிலாளர்களுடன் ஏற்படுத்திய ஊதிய ஒப்பந்தம் தனியார் தோட்டங்களில் வழங்கப்பட்ட ஊதியத்தை விட அதிகமாக அமைந்து, தொழிலாளர்களின் வாழ்வில் விளக்கேற்றி வைக்கும் வகையில் இருந்தது. 2008 ஆம் ஆண்டில் தொழிலாளர்களின் ஊதியத்தை மேலும் உயர்த்த ஓர் ஊதிய ஒப்பந்தம் கையெழுத்திடப்படும்.

30. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 2008-2009 ஆம் ஆண்டு 193 குடியிருப்புக் கட்டடங்கள் ரூ.508.96 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

31. புதிய பணி நியமனங்களுக்கு அரசு தடை விதித்திருந்ததால் கடந்த இரு ஆண்டுகளில் கருணை அடிப்படையிலான நியமனங்கள் முடங்கிக் கிடந்தன. அவை வழங்கப்பட்டு வருகின்றன. ஆயினும் 2001 ஆம் வருடத்திலிருந்து பெறப்பட்ட மனுக்கள் நிலுவையிலுள்ளன. கருணை அடிப்படையில் பணி கோரும் வாரிசுதாரர்களுக்கு, 2008-2009 ஆம் ஆண்டில், தகுதிக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணியமர்த்தி ஆணைகள் வழங்க சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### X. கடலோரப் பகுதித் தோட்டங்கள்

32. தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகள் கடல் மட்ட வேறுபாடு, கடலோர அரிப்பு, உப்புநீர் உட்புகுதல் மற்றும் சதுப்பு நிலக்காடுகள் தரங்குன்றுதல் போன்ற பல்வேறு இடர்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளன. இவ்விடர்களிலிருந்து கடலோரத்தில் வசித்து வரும் மக்களைப் பாதுகாக்கவும், மரங்களடர்ந்த பகுதிகளின் பரப்பினை அதிகரிக்கவும், கடலோரப் பகுதிகளில் 2008-2009 ஆம் ஆண்டில் 1,000 ஹெக்டேர் பரப்பில் கடலோர தொடர் தடுப்புத் தோட்டங்கள் ரூ.4.15 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

### XI. சதுப்பு நில மேலாண்மை

33. 2008-2009 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் முக்கிய சதுப்பு நிலப் பகுதிகளான பள்ளிக்கரணை, கழுவேலி, முத்துப்பேட்டை மற்றும் கோடிலக்கரை பகுதிகளை மேம்படுத்த ரூ.3 கோடி செலவிடப்படும்.

### XII. பல்லுயிர்ப் பரவல் மற்றும் மருத்துவத் தாவர வளங்களைப் பாதுகாத்தல்

34. 2002-ல் பல்லுயிர்ப் பரவல் சட்டம் மத்திய அரசால் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மாநில பல்லுயிர்ப் பரவல் வாரியம் அமைக்கப்படவேண்டும். இந்த அரசு துரித நடவடிக்கை மேற்கொண்டு வல்லுநர்கள் நிரம்பிய பல்லுயிர்ப் பரவல் வாரியத்தை தமிழகத்தில் ஏற்படுத்தியுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் இந்த வாரியத்தை முழு செயலாக்கத்திற்குக் கொண்டு வந்து பல்லுயிர்ப் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

35. சமீபகாலங்களில் மருத்துவத் தாவரப் பொருட்களின் தேவைகள் அதிகமாகி வருவதால், தமிழ்நாட்டில் மருத்துவத் தாவர வளங்களைப் பாதுகாத்து சேகரிக்க, தேசிய மருத்துவத் தாவர வாரியத்தின் உதவியுடன் 2008-2009 ஆம் ஆண்டில் திட்டமொன்று ரூ.3.21 கோடி செலவில் செயல்படுத்தப்படும். மேலும், ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்ட 12 மருத்துவ தாவரப் பாதுகாப்புப் பகுதிகளையும் 8 மருத்துவ அபிவிருத்திப் பகுதிகளையும் பராமரித்து மேம்படுத்த ரூ.10 இலட்சம் செலவிடப்படும்.



## இணைப்பு-VII

*(289 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## அறிவிப்புகள், 2008-2009

### 1. தலா ரூ.1.00 கோடி செலவில் (50:50) திருப்பூரிலும், திருநெல்வேலியிலும் பல்நோக்கு உள் விளையாட்டரங்கம் கட்டுதல்

2,000 பேர் அமரும்வண்ணம் கையுந்துபந்து, கூடைப்பந்து, இறகுப்பந்து, மேசைப்பந்து, சதுரங்கம் போன்ற பல்வேறு விளையாட்டுகள் நடத்தப்படும் வகையில் இரண்டு பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கங்கள் திருப்பூரிலும், திருநெல்வேலியிலும் அமைக்கப்படும். ஒவ்வொன்றுக்கும் ஆகும் செலவினமான ரூ.1 கோடியில் ரூ.50.00 இலட்சத்தை அரசு வழங்கும். மீதித் தொகை மாவட்ட நிருவாகத்தால் செலவிடப்படும்.

### 2. பொருளாதாரத்தில் நலிவடைந்த விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு விடுதி அமைத்தல்

பொருளாதாரத்தில் நலிவடைந்த விளையாட்டு வீரர்கள்/மாணவர்களுக்காக ரூ.310 இலட்சம் செலவில் இரண்டு விளையாட்டு விடுதிகள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நல்ல தங்குமிடம், உணவு, சீருடை, விளையாட்டுப் பயிற்சி அளிக்கப்படுவதுடன் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளவும் இவர்கள் தயார் செய்யப்படுவார்கள். திருவண்ணாமலையில் ஆண்களுக்காகவும், கிருட்டிணகிரியில் பெண்களுக்காகவும் இவை அமைக்கப்படும்.

### 3. விளையாட்டுச் சிற்றரங்கம் (Mini Stadium)

தமிழக அரசின் விளையாட்டுக் கொள்கையின்படி ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் விளையாட்டு அரங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. பெரும்பான்மையான மாவட்ட விளையாட்டு வளாகங்கள் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்ட நிலையில், அடுத்து வட்ட அளவில் விளையாட்டு சிற்றரங்கங்கள் (Mini-Stadia) தமிழகத்தில் 15 வட்டங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவ்விளையாட்டு சிற்றரங்கங்கள் கட்டப்பட்டு 5 பயன்பாட்டில் உள்ளன. 2008-2009 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டம் அரூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் ரூ.30 இலட்சம் செலவில் (50:50) விளையாட்டு சிற்றரங்கங்கள் அமைக்கப்படும்.

**4. ரூ. 70.00 இலட்ச மதிப்பீட்டில் (50:50) விழுப்புரம் மாவட்டத்தில் நீச்சல் குளம் ஏற்படுத்துதல்**

இதுவரை 11 மாவட்ட விளையாட்டரங்கங்களில் நீச்சல் குளங்கள் உருவாக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. அனைத்து மாவட்டங்களிலும் நீச்சல் குளம் உருவாக்கப்படவேண்டும் என்ற கொள்கையின்படி 2008-2009 ஆம் ஆண்டு விழுப்புரம் மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ.70.00 இலட்சம் செலவில் ஒரு நீச்சல் குளம் அமைக்கப்படும். இதற்கு ரூ.35 இலட்சம் அரசு வழங்கும். மீதத் தொகை ரூ.35 இலட்சம் மாவட்ட நிருவாகத்தால் செலவிடப்படும்.

**5. கோயம்புத்தூர் நேரு விளையாட்டரங்கத்தில் புதிதாக நிறுவப்பட்ட செயற்கை இழை ஓடுதளப் பாதையின் மறு பக்கத்தில் "D" அமைத்தல்**

கோயம்புத்தூர் நேரு விளையாட்டரங்கில் 400 மீ. செயற்கை இழை ஓடுதளப் பாதை 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.250 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது. ஒரு பக்கத்தில் விடுபட்டுப்போன "D" க்கும் செயற்கை இழை அமைத்து முழுமையடையச் செய்ய 2008-2009 ஆம் ஆண்டு ரூ.25 இலட்சம் வழங்கப்படும்.

**6. யோகா பயிற்சி அளித்தல்**

பெரும்பான்மையான உறுப்பினர்களின் எதிர்பார்ப்பிற்கு இணங்க, சட்டமன்றக் கூட்டம் நடைபெறும்போதெல்லாம் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில், சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒதுக்கித்தரும் இடத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் யோகா சங்கமும் இணைந்து தேர்ச்சி பெற்ற பயிற்றுனர்களைக் கொண்டு தினசரி காலையிலும், மாலையிலும் இலவசமாக யோகா பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்படும்.

**7. ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பயிற்றுனர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் மதிப்பூதியத்தை ரூ.5,000/–லிருந்து ரூ.6,000/– ஆக உயர்த்துதல்**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி மூன்று ஆண்டுகள் பணி முடித்த



பயிற்றுனர்களின் மாத மதிப்பூதியம் ரூ.5,000/-லிருந்து ரூ.6,000/- ஆக உயர்த்தப்படும். இதற்கான செலவினம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நிதியிலிருந்து வழங்கப்படும்.

**8. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்களின் அலுவலக உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களின் எரிபொருளுக்குரிய தொகை வழங்குதல்**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் மாவட்ட விளையாட்டு அலுவலர் முதல் பொது மேலாளர் வரையிலான அலுவலர்களின் வாகன எரிபொருளுக்கு உரிய தொகை மாதந்தோறும் வழங்கப்பட உள்ளது. இதற்கு ஒரு வருடத்திற்குத் தோராயமாக ரூ.6.50 இலட்சம் செலவினம் ஆகும். இத்தொகை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நிதியிலிருந்து வழங்கப்படும்.

**9. விளையாட்டுப் போட்டிகள் நடத்த நன்கொடை வழங்கும் நன்கொடையாளர்கள், நிருவாகிகள் மற்றும் நடுவர்களுக்கு முதலமைச்சர் விருது வழங்குதல்**

விளையாட்டுப் போட்டிகள் நடத்த நன்கொடை வழங்கும் நன்கொடையாளர்கள், போட்டிகளை நடத்தும் நிருவாகிகள் மற்றும் நடுவர்களை கௌரவப்படுத்தும் வகையில் முதலமைச்சர் விருது வழங்கப்படும். இவர்களில் ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு பிரிவிலும் ஒரு நபர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு முதலமைச்சர் விருதாகக் கேடயமும், சான்றிதழும் வழங்கப்படும்.

**10. நலிவுற்ற சிறந்த முன்னாள் விளையாட்டு வீரர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியமான ரூ.500/-ஐ உயர்த்துதல்**

நலிவுற்ற சிறந்த முன்னாள் விளையாட்டு வீரர்களுக்குத் தற்பொழுது வழங்கப்படும் ரூ.500/- ஓய்வூதியம் உயர்த்தப்படும்.

**11. மாநில அளவிலான சமத்துவப் பொங்கல் திருவிழாவாக கபாடிப் போட்டியை நடத்துதல்**

கபாடிப் போட்டி தமிழகத்தின் ஓர் எழுச்சியான விளையாட்டாகும். சடுகுடு எனப்படும் கபாடிக்குத் தமிழகத்தில் பெரும் வரவேற்பு இருக்கிறது. பல இடங்களில் தனியார் முயற்சியில் போட்டிகள் நடத்தப்பட்டு பெரிய அளவில் பொன்முடிப்புகளும் வழங்கப்படுகின்றன. சடுகுடு போட்டிக்குத் தமிழகத்தில் ஒரு தனி இடம் அளிக்கும் வகையில், மாநில அளவிலான சமத்துவப் பொங்கல்

திருவிழாவாக கபாடிப் போட்டி ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படும். பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் இப்போட்டிகள் மின்னொளியிலும் நடத்தப்படும். இப்போட்டிகளை நடத்தி பரிசுத் தொகை வழங்கிட ரூ.10 இலட்சம் செலவு ஆகும்.

### 12. தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டசபைத் தொகுதிகளுக்கும் உடற்பயிற்சிக் கருவிகள் வழங்குதல்

தமிழ்நாட்டு மக்களிடையே உடல்நலம் பேணுதல் குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையிலும், உடற்தகுதியை மேம்படுத்தும் வகையிலும் தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டசபைத் தொகுதிகளிலும் உடற்பயிற்சி நிலையங்களுக்கான கட்டடங்கள் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டு, முதற்கட்டமாக இவ்வாண்டு 117 தொகுதிகளுக்கு தொகுதி ஒன்றுக்கு ரூ.2 இலட்சம் வீதம் உடற்பயிற்சிக் கருவிகள் ரூ.2.34 கோடி செலவில் வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 13. தமிழ்நாட்டில் மலை மேலிடப் பயிற்சி மையம் (High Altitude Training Centre) அமைத்தல்

உலகத் தரத்திற்கு உயர்வதற்கு மலையிடப் பயிற்சி உறுதுணை செய்கிறது. ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டு மலைத்தலங்களான ஊட்டி, கொடைக்கானல், டாப் செங்காட்டுப்பட்டி, ஏலகிரி, ஹை வேவிஸ் (தேனி மாவட்டம்), கல்குளம் (கன்னியாகுமரி) ஆகிய இடங்களில் மலைமேலிடப் பயிற்சி மையங்கள் மாநில விளையாட்டுக் கழகங்களின் ஒத்துழைப்போடு அமைக்கப்படும். இதற்காக உரிய இடங்கள் தெரிவு செய்யப்பட்டு வருகின்றன. 11-வது ஐந்தாண்டு திட்டக் காலத்திற்குள் இந்த ஆறு இடங்களிலும் மலைமேலிடப் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும்.

### 14. மலைப்பகுதியில் சாகசப் பயிற்சி நிலையம் (Adventure Sports Academy)

நாமக்கல் மாவட்டத்தில் கொல்லிமலையில் மலைப்பகுதி சாகசப் பயிற்சி நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அங்கு மலையேறுதல் (Mountaineering), மலைச்சுற்றி ஏறுதல் (Trekking), செங்குத்து மலையேறுதல் (Rock Climbing), ஆகாயத்தில் மிதத்தல் (Sky Diving), ஆகாயத்தில் சறுக்குதல் (Sky Gliding), மிதவை மிதத்தல் (Para Sailing), மிதவை குதித்தல் (Para Jumping), மிதவை சறுக்குதல் (Para Diving) போன்ற சாகச விளையாட்டுகளில் பயிற்சி அளிக்கப்படும்.



### 15. தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கட்டமைப்பு வசதிக் கையேடு வெளியிடுதல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் வசம் உள்ள விளையாட்டுக் கட்டுமான வசதிகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் தனியார் நிறுவனங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் அமைந்துள்ள விளையாட்டு வசதிகள் குறித்த கையேடு ஒன்று வெளியிடப்பட உள்ளது.

### 16. குடியரசு தின மற்றும் பாரதியார் தினப் போட்டிகளில் கேரம், வளைபந்து மற்றும் சிலம்பம் போட்டிகளைச் சேர்த்தல்

குடியரசு தின மற்றும் பாரதியார் தினப் போட்டிகள் கல்வித் துறையினரால் மாவட்டம், கோட்டம் மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தப் போட்டிகளில் இனி கேரம், வளைபந்து மற்றும் சிலம்பப் போட்டிகளும் சேர்க்கப்படும்.

### 17. மாற்றுத் திறனுடையோர் மாநில விளையாட்டுக் கழகத்திற்குக் கூடுதல் மானியம் வழங்குதல்

மாற்றுத் திறனுடைய வீரர்களின் மாநில விளையாட்டுக் கழகங்கள், மாநில மற்றும் தேசியப் போட்டிகள் நடத்துவதற்கும், தமிழ்நாடு அணி சார்பாகத் தேசியப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கும் பொதுவான சங்கங்களுக்கு வழங்கப்படும் மானியத்தை விட 50% கூடுதலாக மானியம் வழங்கப்படும்.

### 18. தொழிற்கல்வி பயில விளையாட்டு வீரர்களுக்கு உயர் ஒதுக்கீடு

இப்பொழுது தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலுவதற்கு விளையாட்டு வீரர்களுக்கென 42 இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. இத்துறையின் கோரிக்கையினை ஏற்று, 2008-2009 ஆம் ஆண்டு இவ்வொதுக்கீடு 100 ஆக உயர் கல்வித் துறையால் உயர்த்தப்பட்டுள்ளது.

### 19. மராத்தான் போட்டிகள் நடத்துதல்

தற்போது மாநில அளவில் சென்னையில் மட்டும் நடத்தப்பட்டு வரும் மராத்தான் போட்டியை தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

20. தேசிய மாணவர் படையின் துணைத் தலைமை இயக்குநரின் பழைய ஊர்திக்குப் பதிலாக புதிய ஊர்தி ரூ.4.50 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

21. தேசிய மாணவர் படை இயக்ககத்திற்கு ஒரு ஜீப்பிற்குப் பதிலாக புதிய ஊர்தி ரூ.4.50 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

22. தேசிய மாணவர் படை இயக்ககத்தின் தலைமை அலுவலகம் மற்றும் அதன் மற்ற அலுவலகங்களுக்கு 15 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு சாதனம் ரூ.12.54 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

23. தேசிய மாணவர் படை இயக்ககத்தின் தொகுதி அலுவலகம் மற்றும் அதன் பிற அலுவலகங்களுக்கு நிகரி இயந்திரங்கள் ரூ.5.70 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

24. தேசிய மாணவர் படை இயக்ககத்தின் 20 அலுவலகங்களுக்கு நகல் இயந்திரம் ரூ.10 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

25. தேசிய மாணவர் படை இயக்ககத்தின் துணைத் தலைமை இயக்குநர், இயக்குநர் மற்றும் 5 தொகுதி கமாண்டர்களுக்கு லேப்டாப் ரூ.3.50 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

26. தேசிய மாணவர் படை இயக்ககத்தின் தலைமை அலுவலகத்திற்கு 5 கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் பிற துணைப் பாகங்கள் ரூ.3.15 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

27. தேசிய மாணவர் படை இயக்ககத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ள கணினி அறையில் உள்ள பழைய சர்வரின் சாதனத்துக்குப் பதிலாக ரூ.44,000/- செலவில் புதியது வழங்கப்படும்.

28. தேசிய இளைஞர் விருது பெற்றோருக்கு வங்கித் திட்டத்தின் கீழ் சுய தொழில் தொடங்குவதற்கு அரசு விளிம்புத் தொகை (Margin Money) ரூ.2 இலட்சம் வழங்குதல்

தேசிய இளைஞர் விருதினைப் பெற்ற இளைஞர்கள் அரசிடம் சில கோரிக்கைகள் வைத்துள்ளனர். இவர்களின் கோரிக்கைகளை அரசு கவனத்துடன் பரிசீலித்தது. அவர்களுக்கு வங்கித் திட்டத்தின்கீழ் சுய தொழில் தொடங்குவதற்குக் கடன் தொகையில் 25% (ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல்) விளிம்புத் தொகை (Margin Money) மானியமாக வழங்கப்படும்.



## இணைப்பு-VIII

*(291 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 15-சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

## அறிவிப்புகள், 2008-2009

### சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு

1. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 1974 ஆம் ஆண்டின் நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டின் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் ஆகிய இரண்டு முக்கியமான சட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது. தொழிற்சாலையின் உரிமையாளர்கள் இவ்விரு சட்டங்களின்கீழ் வாரிய இசைவாணை வேண்டி விண்ணப்பிக்க வேண்டும். தொழிற்சாலைகள் இசைவாணை பெறுவதை எளிதாக்க இணையதளம் மூலம் நேரடியாக விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முறை நடப்பாண்டில் அறிமுகப்படுத்தப்படும்.

2. அதிகளவில் மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் அமைந்துள்ள பகுதிகளில் வெளிவரும் கழிவுகளின் நச்சுத்தன்மை மற்றும் மாசுபடுத்தும் அளவு முதலியவற்றைக் கருத்தில் கொண்டு வாரியம், தமிழ்நாட்டில் மணலி, கடலூர், தூத்துக்குடி, மேட்டூர், இராணிப்பேட்டை, ஸ்ரீபெரும்பதூர், பெருங்குடி தகவல் தொழில்நுட்பப் பூங்கா பகுதி, பெருந்துறை, கும்மிடிப்பூண்டி, திருப்பூர் ஆகிய 10 முக்கிய இடங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளைத் தொடர்ந்து கண்காணிக்கவும், அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் தொடர்பு கொள்ளவும் ஒவ்வொரு பகுதிக்கும் நேரடியாகத் தனித்தனியாக ஒரு உதவி சுற்றுச்சூழல் பொறியாளரை நியமித்துள்ளது. இப்பகுதிகளில் நச்சுத்தன்மை கொண்ட வாயுக்கள் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறினால் அவற்றை உடனடியாகக் கண்டறிந்து தொழிற்சாலையின்மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.85 இலட்சம் செலவில் அதிநவீன கருவிகளை வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும். இதனால் வாரியத்தின் கண்காணிப்புத் திறன் மேம்படுவதுடன் பொதுமக்களின் உடல் நலமும் பாதுகாக்கப்படும்.

[2008 மே 13

3. சுற்றுச்சூழலை பெரிதும் பாதிக்கக்கூடிய சில பழக்கங்களும், பொருள்களின் பயன்பாடும் பெருகி வருவது வேதனையை அளிக்கிறது. இதனைக் கட்டுப்படுத்த கையாளவேண்டிய செயல்முறைகளைப் பற்றியும், விதிக்கக்கூடிய கட்டணங்களைப் பற்றியும் பரிந்துரைக்க அண்ணா பல்கலைக்கழகம்மூலம் ஓர் ஆய்வு செய்து அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4. மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் மற்றும் மாநில அளவிலான நிபுணர்கள் குழு 2008-2009 ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கும். இதனால் சுற்றுச்சூழல் அனுமதிக்கென மத்திய அரசை விண்ணப்பித்து வந்த பல்வேறு தொழிற்சாலைகள் தமிழகத்திலேயே அந்த அனுமதியைப் பெறலாம். இஃது 2006 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க அறிவிக்கையின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு செயல்படுத்தப்படும்.

5. மாசு தடுப்பு முறைகளில் சுற்றுச்சூழலுக்கு உகந்த சிறந்த தொழில்நுட்பத்தினைத் தொழிற்சாலைகள் தேர்ந்தெடுப்பதற்காக, ஒரு சுற்றுச்சூழல் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு ஏற்படுத்தப்படும். இந்தக் குழு தூய தொழில்நுட்பங்களின் சாதக, பாதக பொருளாதார மற்றும் நடைமுறைக்குகந்த சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்ந்து தொழிற்சாலைகள் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு தொழில்நுட்பங்களை சரியான மற்றும் சிக்கனமான முறையில் தேர்ந்தெடுக்க உதவும்.

6. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் நிர்வாகத் திறனை மேம்படுத்தவும். தொழிற்சாலைகள் இசைவாணைகள் பெறுவதைத் துரிதப்படுத்தவும் மூன்று புதிய மாவட்ட அலுவலகங்கள் 2008-2009 ஆம் ஆண்டில் திருவள்ளூர், பெருந்துறை மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் தொடங்கப்படும்.

7. 2008-2009 ஆம் நிதி ஆண்டில் தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் தலா ரூபாய் 100 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

8. கிராமங்களில், நீர்நிலைப் புறம்போக்கு நிலங்கள், தரிசாகக் கிடக்கும் மலைப்பகுதிகள் போன்ற பொது இடங்களில், மரங்களை வளர்த்து மாவட்டத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு என்ற வகையில் பசுமைப் போர்வையை அதிகரிக்க ரூ.75 இலட்சம் செலவில் ஒரு புதிய திட்டம் இந்த ஆண்டு தொடங்கப்படும். இதன்கீழ் அனைத்து



2008 மே 13]

மாவட்டங்களிலும் ஒரு கிராமப்பகுதி தெரிந்தெடுக்கப்பட்டு பசுமையாக்கப்படும்.

9. பள்ளி மாணவர்களிடையே சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்வண்ணம் தமிழகத்தில் 10,000 மாணவர்களைத் தெரிந்தெடுத்து அவர்களை வனப் பகுதிகளுக்கு அழைத்துச் சென்று முகாம்கள் நடத்த ரூ.1 கோடி செலவிடப்படும்.

10. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மாநில அரசின் நிதியுதவியுடன் அனைத்து மாவட்டங்களிலும் சூழல் மன்றங்களை 1999-ல் உருவாக்கிய பெருமை தமிழகத்திற்கே உரியது. தேசிய பசுமைப்படை அமைப்புகளுக்கு மத்திய அரசு வழங்கும் நிதி உதவிக்குச் சமமாக, இச்சூழல் மன்றங்களுக்கு தமிழக அரசு கூடுதல் நிதியுதவி வழங்க ரூ.15.50 இலட்சம் செலவிடப்படும்.

11. தமிழகத்தில் உள்ள சுற்றுச்சூழல் மன்றங்கள் மற்றும் தேசிய பசுமைப்படை முதலியவற்றில் 3.5 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுகின்றனர். சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை மாநிலம் முழுவதும் ஏற்படுத்தும் வகையில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கங்கள் அமைக்கப்படும்.

12. சுற்றுச்சூழல் பாதுகாப்பினைப் பாதிக்காத வகையில் பொருளாதார மேம்பாட்டினை அடைவதற்கு ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம் 2008-2009-ல் தயாரிக்கப்படும். அதேபோல் சுனாமி போன்ற நிகழ்வுகளால் பாதிப்படையக்கூடிய கடலோரப் பகுதிகளின் வரைபடமும் தயாரிக்கப்படும். இவ்விரு பணிகளும் இந்த நிதியாண்டிலேயே ரூ.4.30 கோடி செலவில் செய்து முடிக்கப்படும்.

13. பருவநிலை மாறுதலால் உணவுப் பாதுகாப்பு, உடல் ஆரோக்கியம், இயற்கை சீர்நிலை முதலியவற்றிற்கு பெரும் பாதிப்பு ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது. தமிழ்நாட்டில் பருவநிலை மாறுதலால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தடுக்கவும், அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறியவும் 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் செலவில் ஆய்[illegible]

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Principal Secretary to Government and
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.